Yall. 51 N79
[illegible]. 22.
[illegible] 1[illegible]7

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத்தொடர்.

1979, பிப்ரவரி 17, 19, 20 மற்றும் 21ஆம் நாட்கள்

(தொகுதி 22—எண்கள் 1 முதல் 4 வரை)

©
தமிழ்நாடு அரசு
1980

சட்டமன்றப் பேரவைத் துறை
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை—600009

லை ரூ. 1]

V211,31 N79
N80-22
122137

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கை அட்டவணை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான
ஆறாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடர்.

(1979 பிப்ரவரி 17, 19, 20 மற்றும் 21 ஆம் நாட்கள்)

(தொகுதி 22—எண்கள் 1 முதல் 4 வரை.)

உள்ளடக்கம்.

	பக்கங்கள்
தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் அமைச்சர்களின் பேரவைச் செயலர்களும்	
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்	
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற) பெயர்ப் பட்டியல் (தொகுதி உட்பட)	
அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள்.	186—234, 288—333, 334—348 354—463, 465—470.
அழகர்சாமி, திரு. சோ.	375—391
ஆறுமுகம், திரு. சி.	427—435
இராகவானந்தம், மாண்புமிகு திரு. எஸ்.	286—288, 293—340, 366, 402, 407, 408, 411
இராதா, திரு. எஸ். ஆர்.	453—460, 467—470.

D-II A 294—i

பக்கங்கள்

இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம். ஜி. 311—312, 328, 426, 449, 450.

இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. 202, 217, 329—330, 326, 327, 329, 336, 338, 346 347, 362 391, 423 443, 461.

பக்கங்கள்.

இராஜா முகமது, மாண்புமிகு திரு. கே. 322—323

உமாநாத், திரு. ரா. 283—30(

குழந்தைவேலு, மாண்புமிகு திரு. ப. 196—197 214, 313 371

கோவிந்தராசன், திரு. சி. 404—41

சமரசம் டாக்டர் கே. 435—451

சாதிக்பாட்சா, திரு. எஸ். ஜே. 187—214

சௌந்தரபாண்டியன், மாண்புமிகு திரு. பெ. 338—339, 385

துரை முத்துசாமி, திரு. 331—34

நாராயணசாமி, மாண்புமிகு திரு. கே. 462—46

பண்ணை சேதுராம், திரு. கே. 367—37

பொன்னையன், மாண்புமிகு திரு. சி. 451—45

மனோகரன், மாண்புமிகு திரு. இ. 431—44 449, 46(466, 46

மார்க்கபந்து, திரு. ரா. 417—427

மாரிமுத்து, திரு. எ. ஆர். 354—367

லத்தீப், திரு. எம். எ. 306—321, 323—331.

விஜயராகவன், திரு. பொ. 395—404

வீரப்பன், மாண்புமிகு திரு. ஆர். எம். 343, 344, 393—394

ஜேம்ஸ், திரு. ஜே. 215—234

உறுப்பினர் சட்ட முன்வடிவுகள்—

நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும் முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்ட முன்வடிவு, 1979. 185

பக்கங்கள்.

பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979. 183—184

புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979. 184

அரசினர் தனித் தீர்மானம்—

அரசியல் அமைப்பு 45-வது திருத்தச் சட்டத்திற்கு ஏற்பளிப்பது குறித்து. 18—118

அழகர்சாமி, திரு. சோ. 84—86

உமாநாத், திரு. ரா. 70—78

சப்பு, திரு. க. 103—115

நாராயணசாமி, மாண்புமிகு திரு. கே. 56, 115 117

மார்க்கபந்து, திரு. ரா. 98—102

(அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற) பெயர் பட்டியல்

	பக்கங்கள்.
மாரிமுத்து, திரு. எ. ஆர்.	66—69
ரகுமான்கான், திரு. அ.	56—70
லத்தீப், திரு. எம். எ.	89—97
விஜயராகவன், திரு. பொ.	78—84
வேலுச்சாமி, திரு. ஓ. சோ.	64—76
அரசினர் தீர்மானங்கள்—	
பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து நடவடிக்கை.	464
விதி 22ஐத் தளர்த்தல்	348
விதி 41 (3)-ஐத் தளர்த்தல்	178
அறிவிப்புகள்—	
பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப்பெற்றது குறித்து.	463—464
பேரவை அலுவல் குறித்து.	333—336
ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—	
கல்லூரி ஆசிரியர்களின் போராட்டம் காரணமாக கல்லூரிகள் மூடப்பெற்றிருப்பது குறித்து.	277—282
மாணவர்களுக்கும் போலீசாருக்கும் சென்னையில் ஏற்பட்டுள்ள மோதல் குறித்து.	39—49
ஒழுங்குப் பிரச்சனைகள்—	
ஆங்கிலத்தில் வினாப்பட்டியல் வைக்கப்பெறுவது குறித்து.	37—38
உலக அமைதிக்கு பங்கம் ஏற்படுவது குறித்து.	276
உறுப்பினர்களுக்கு தொலைபேசி வசதி செய்து கொடுப்பது குறித்து.	38, 39

	பக்கங்கள்
சேப்பாக்கம் தொகுதியில் பொதுக்கூட்டம் நடத்த அனுமதி அளிப்பது குறித்து	276
தந்தை பெரியாருடைய இதயம் குறித்து	35—36, 93.
அணைக் கேள்விகள் கேட்க அனுமதி அளிப்பது குறித்து	274—275
கவன ஈர்ப்புத் தீர்மானங்கள்—	
கல்லூரி ஆசிரியர்களது பணியல் குறித்து	162—175
மின் உற்பத்தித் துறையினரால் மின்வெட்டு கொண்டுவரப் பெறுவது குறித்து	50—53
விவசாயிகளுக்கு கூட்டுறவுச் சங்கக் கடன்களைத் தள்ளி வைக்க வேண்டிய அவசியம் குறித்து	53—56
தகவல் கோரல்—	
உண்மைப் பிரச்சினை அறிவிக்கை குறித்து	132—133
கல்லூரி ஆசிரியர்களது பணியல் குறித்து	157—162
சாதி இந்துக்களின் கொடுமைகளைக் கண்டித்து அரிசனங்கள் பாதயாத்திரை மேற்கொண்டுள்ளது குறித்து	178—182
திருச்சி பெல்கோ [illegible] சம்பந்தமான ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து	351—354
வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி மற்றும் யாதவர் கல்லூரி மாணவர்கள் மோதல் குறித்து	175—178
பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்	118—119, 234, 349, 471
வினாக்கள்—விடைகள்.	
உடுக்குறியிட்ட வினாக்கள்	1—34, 121—157, 236—274.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையை (Index) பயன்படுத்தும் முறை.

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது; முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன; துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின்கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப்பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, (தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க.ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தீ.) என்று போடுவது ஒத்திவைப்புத் தீர்மானத்தையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும். எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும் "சட்ட முன்வடிவு" என்ற முக்கியத் தலைப்பின்கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப்பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், உள்ளாட்சிகள் போன்ற அமைப்புகள் அனைத்தும், 'குழு(க்கள்)', 'மன்றம்(கள்)', 'உள்ளாட்சி (கள்)', ஆகிய முக்கியத் தலைப்புகளின்கீழ் தொகுக்கப்பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப்படுகின்றன.

பேரவை முன் வைக்கப்பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத் தலைப்பின் கீழ் கொடுக்கப்பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் "தலைவர்" என்ற தலைப்பின் கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப்பெற்றுள்ளது:

அ.	அறிக்கை
அறிவி.	அறிவிப்பு
அ.வி.	அரைமணி விவாதம்
கு. வி.	குறுகிய கால விவாதம்

பொ. வி.	பொது விவாதம்
ஆ. உ.	ஆளுநர் உரை
உ. பி.	உரிமைப் பிரச்சினை
ஒ. பி.	ஒழுங்குப் பிரச்சினை
க.ஈ.அ.	கவன ஈர்ப்பு
க.ஈ.அ.	கவன ஈர்ப்பு அறிக்கை
ச. அ. நி.	சட்ட முன்வடிவின் ஆய்வு நிலை—
ச. ஆ. நி	சட்ட முன்வடிவின் ஆய்வு நிலை—இந்நிலையில். (1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசிலனைக்கு அனுப்பப் பெறும் நிர்மானம். (2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசிலனைக்கு அனுப்பவேண்டுமென்ற திருத்தம். (3) சுற்றுக்கு அனுப்பப் பெறுவதற்கான திருத்தம். (4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கான நிர்மானம். (5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன.
ச.பிரி.ஆ.	சட்ட முன்வடிவு—பிரிவு வாரியாக ஆய்தல்.
ச.பே.	சட்டமன்றப் பேரவை.
ச.மே.	சட்டமன்ற மேலவை.
த. கோ.	தகவல் கோரல்
த.வி.	தன்னிலை விளக்கம்.
தீ.	தீர்மானம்.
உ.தீ.	உரிமைத் தீர்மானம்.
ஒ.தீ.	ஒத்திவைப்புத் தீர்மானம்.
த.தீ.	தனித் தீர்மானம்.
து.மா.கோ.	துணை மானியக் கோரிக்கை.
மி. மா. கோ.	மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை.
பே.அ.	பேரவையின் அலுவல்

(i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

தமிழ்நாடு ஆளுநர்

திரு. பிரபுதாஸ் பட்வாரி.

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1.	திரு. எம். ஜி. இராமச்சந்திரன், முதலமைச்சர்.	பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், பயண இசைவுச் சீட்டு, மதுவிலக்கு, இலஞ்ச ஒழிப்பு, பெருந் தொழில்கள், சுரங்கம், கனிவளம்.
2.	திரு கி. மனோகரன், நிதி அமைச்சர்.	நிதி, திட்டம், சட்ட மன்றம், பொதுப் பணி (கட்டிடங்கள்) மற்றும் பொதுப் பணித் துறை (நிறுவனம்) சம்பந்தப்பட்ட அலுவல்கள்.
3.	திரு. ச. இராமச்சந்திரன், மின் துறை அமைச்சர்.	மின்சாரம், இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.
4.	திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்.	கூட்டுறவும் ஆவணப் பதிவுத் துறையும்.
5.	திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்.	வருவாய், வணிக வரிகள், ஆயத் துறை.
6.	திரு. க. உ(ரா. எட்மண்ட், உணவுத் துறை அமைச்சர்.	உணவு, மீன்வளம், இளைஞர் அணி, பிற்பட்ட வகுப்பினர், தேர்தல்கள், முன்னாள் இராணுவத்தினர், விலைவாசிக் கட்டுப்பாடு.

7.	திரு. இராம. வீரப்பன், செய்தி, அறநிலையத் துறை அமைச்சர்.	செய்தி, விளம்பரம், திரைப் படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, சிங்கோனா உள்பட வனங்கள்.
8.	திரு. க. நாராயணசாமி, சட்ட அமைச்சர்.	சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் பற்றி சட்டம் இயற்றல், சீட்டு நிதிபற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு.
9.	திரு. செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்.	தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி, வேலைவாய்ப்பும் பயிற்சியும்.
10.	திரு. கா. காளிமுத்து, உள்ளாட்சித் துறை அமைச்சர்.	நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப் புற கடன் நிவாரணம், பூமி தானம், கிராமதானம்.
11.	திரு. எஸ். இராகவானந்தம், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.	தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளிவிவரங்கள், தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இடவசதிக் கட்டுப்பாடு.
12.	திரு. பெ. சௌந்தர பாண்டியன், அரிசன நலத் துறை அமைச்சர்.	அரிசன நலம், எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.
13.	திரு. சி. பொன்னையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்.	போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

14.	திரு. ப. குழந்தைவேலு, வேளாண்மை, நீர்ப் பாசனத் துறை அமைச் சர்).	வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, அக்ரோ பொறியியல் பிரிவு, வேளாண்மை பணிக் கூட்டுறவு சங்கங்கள், பாசனத் திட்டங்கள் (சிறு பாசனம் உள்ளிட்டது), வேளாண்மை பொறியியல்.
15.	திரு. கே. இராஜா முகமது. ஊரகத் தொழில் துறை அமைச்சர்.	கிராம, குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், வஃபு.
16.	திரு. திருச்சி.ஆர். சௌந்திரராஜன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.	மக்கள் நல்வாழ்வுத் துறை.
17.	செல்வி பி. டி. சரஸ்வதி, சமூக நலத் துறை அமைச்சர்.	மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக் காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.
18.	திருமதி சுப்புலட்சுமி செகதீசன், கைத்தறி நெசவுத் துறை அமைச்சர்.	கைத்தறி, கதர், நெசவாலைகள், நூல்.

அமைச்சர்களின் பேரவைச் செயலர்கள்.

1.	திரு. எம். வின்செண்ட்:	நிதி அமைச்சரின் பேரவைச் செயலர்.
2.	திரு. ஆனூர் ஜெகதீசன்:	கூட்டுறவுத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.
3.	திரு. பி. முசிறிபுத்தன்:	வருவாய்த் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.
4.	திரு. ஐசரி வேலன்:	செய்தி, அறநிலையத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

5. திரு. எம். ஏ. ஜெயவேலு: சட்ட அமைச்சரின் பேரவைச் செயலர்.

6 திரு. ஆ. வெள்ளைச்சாமி: கல்வி அமைச்சரின் பேரவைச் செயலர்.

7. திரு. ப. கோ. கிட்டு: போக்குவரத்துத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

8. திரு. இரா. அருணாசலம்: மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

GOVERNOR OF TAMIL NADU
THIRU PRABHUDAS PATWARI

Members of the Council of Ministers.

1. The Hon. Thiru M.G. RAMACHANDRAN, Chief Minister – Public, General Administration, Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Passport, Prohibition, Prevention of Corruption, Large Scale Industries, Mines and Minerals.

2. The Hon. Thiru K. MANOHARAN, Minister for Finance—Finance, Planning, Legislature and Public Works (Buildings).

3. The Hon. Thiru S. RAMACHANDRAN, Minister for Electricity—Electricity, Iron and Steel Control.

4. The Hon. Thiru K. A. KRISHNASWAMY, Minister for Co-operation—Co-operation, Registration.

5. The Hon. Thiru S. D. SOMASUNDARAM, Minister for Revenue—Revenue, Commercial Taxes and Excise.

6. The Hon. Thiru G. R. EDMUND, Minister for Food—Food, Fisheries, Youth Service Corps, Backward Classes, Elections, Ex-Servicemen, and Price Control.

7. The Hon. Thiru R. M. VEERAPPAN, Minister for Information and Hindu Religious Endowments—Information and Publicity, Film Technology, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests and Cinchona.

8. The Hon. Thiru K. NARAYANASWAMI, Minister for Law—Law, Courts, Prisons, Legislation on weights and Measures, Legislation on Chits and Registration of Companies.

9. The Hon. Thiru C. ARANGANAYAGAM, Minister for Education—Education including Technical Education, Official Language and Employment and Training.

10. The Hon. Thiru K. KALIMUTHU, Minister for Local Administration—Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions, Rural Indebtedness and Bhoodan and Gramdan.

11. The Hon. Thiru S. RAGHAVANANDAM, Minister for Labour—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning, Accommodation Control.

12. The Hon. Thiru P. SOUNDARAPANDIAN, Minister for Harijan Welfare—Harijan Welfare, Stationery and Printing, Government Press, News-Print Control, Hill Tribes and Bonded Labour.

13. The Hon. Thiru C. PONNAIYAN, Minister for Transport —Transport, Motor Vehicles Acts, Highways and Ports

14. The Hon. Thiru P. KOLANDAIVELU, Minister for Agriculture and Irregation—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Agro-Engineering.

15. The Hon. Thiru K. RAJA MOHAMMED, Minister for Rural Industries—Rural Industries including Village, Cottage and Small, Industries Milk and Dairy Development and Waqfs.

16. The Hon. Thiru Thiruchi R. SOUNDARARAJAN, Minister for Health.—Health.

17. The Hon. Selvi P. T. SARASWATHI, Minister for Social Welfare—Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggar· Homes, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees, Correctional Administration.

18. The Hon. Thirumathi SUBBULAKSHMI JAGADEESAN, Minister for Handlooms—Handlooms, Khadi, Textiles and Yarn.

Parliamentary Secretaries to the Cabinet Ministers.

1. Thiru M. VINCENT—Parliamentary Secretary to Minister for Finance.

2. Thiru ANNOOR JAGADEESAN—Parliamentary Secretary to Minister for Co-operation.

3. Thiru P. MUSIRIPUTHAN—Parliamentary Secretar to Minister for Revenue.

4. Thiru ISARI VELAN—Parliamentary Secretary to Minister for Information and Hindu Religious Endowments.

5. Thiru M. A. JAYAVELU—Parliamentary Secretary to Minister for Law.

6. Thiru A. VELLAISAMY—Parliamentary Secretary to Minister for Education.

7. Thiru P. G. KITTU—Parliamentory Secretary to Minister for Transport.

8. Thiru R. ARUNACHALAM—Parliamentary Secretary to Minister for Health.

(ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்.
மாண்புமிகு திரு. முனு ஆதி.

பேரவைத் துணைத் தலைவர்.
மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு, பி.ஏ., பி.எல்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல். *
1. திரு. எஸ். ஜே. இராமசாமி.
2. திரு. பி. எச். பாண்டியன்.
3. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
4. திரு. சோ. பாலகிருஷ்ணன்.
5. திரு. ரா. உமாநாத்.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.
திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்கள்.
திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. கே. பாலகுரு, பி.ஏ.

குழு அலுவலர்.
திரு. ச. பாஷ்யம், பி.ஏ. (ஆனர்ஸ்.)

சார்புச் செயலாளர்கள்.
திரு. வி. சீதாராமன், பி.காம்.
திரு. பி. எம். பத்மனாபன் நம்பியார், பி.ஏ.
திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்.
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.
திரு. பெ. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ. (எஸ்டேட் அலுவலர்).

தலைமை நிருபர்.
திரு. மா. சந்திரசேகரன்

விவாதப் பதிப்பாளர்.
திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.

12–2–1979 அன்று அறிவிக்கப்பெற்றது.

(iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற) பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உட்பட).

தொடர் எண்ணும் உறுப்பினர்கள் பெயரும். (1)	தொகுதி. (2)
1 அண்ணாமலை, திரு. எம்.	அரூர் (செ.வ.).
2 அப்துல் ரசாக், திரு. கே. எம்.	ஆலந்தூர்.
3 அப்துல் லத்தீப், திரு. கி.	கடலூர்.
4 அப்புனு கவுண்டர், திரு. கா.	பென்னகரம்.
5 அம்பிகாபதி, திரு. மு.	மன்னார்குடி.
6 அமிர்தராஜ், திரு. இரா.	திருச்செந்தூர்.
7 அய்யாச்சாமி, திரு. ரா.	தாராபுரம் (செ.வ.).
8 அர்சுனன், திரு. வீ.	ஆரணி.
9 அரங்கசாமி, திரு. க.	குன்னூர் (செ.வ.).
10 அரங்கநாதன், திரு. அ. க.	வேலூர்.
11 அரங்கநாதன், திரு. மு.	திருவல்லிக்கேணி-சென்னை.
12 அரங்கநாயகம், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்).	கோயம்புத்தூர்-மேற்கு.
13 அருணாசலம், திரு. இரா. (அமைச்சரின் பேரவைச் செயலர்.)	நாமக்கல் (செ.வ.).
14 அழகர்சாமி, திரு. சோ.	கோவில்பட்டி.
15 அன்பழகன், திரு. க.	புரசைவாக்கம்-சென்னை.
16 அன்பழகன், திரு. தி.	நாட்றாம்பள்ளி.
17 ஆண்டி அம்பலம், திரு. மெ.	நத்தம்.
18 ஆதிசுவாமி, திரு. இரா.	குளச்சல்.
19 ஆறுமுகம், திரு. இல.	திருநாவலூர்.
20 ஆறுமுகம், திரு. எச். ஜி.	பர்கூர்.
21 ஆறுமுகம், திரு. சி.	மதுராந்தகம்.
22 ஆறுமுகம், திரு. த.	அரியலூர்.
23 ஆறுமுகம், திரு. சேலம் மு.	சேலம்-2.
24 இராசமாணிக்கம், திரு. இரெ.	குத்தாலம்.
25 இராசரத்தினம், திரு. து.	பூந்தமல்லி.
26 இராதா, திரு. எஸ். ஆர்.	கும்பகோணம்.
27 இராமச்சந்திர ரெட்டி, திரு. என்.	ஹோசூர்.
28 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம். ஜி. (முதலமைச்சர்.)	அருப்புக்கோட்டை.
29 இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். ஆர்.	சாத்தூர்.
30 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்).	பண்ருட்டி.
31 இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந.	செஞ்சி.
32 இராமசாமி, திரு. எஸ். வி.	பெரம்பலூர் (செ.வ.).
33 இராமசாமி, திரு. எஸ்.ஜே.	சோளிங்கர்.
34 இராமசாமி, திரு. கே. என்.கே.	கோபிசெட்டிப்பாளையம்.
35 இராமசாமி, திரு. கொ.	சிவகாசி.
36 இராமசாமி, திரு. த.	இராமநாதபுரம்.
37 இராமசாமி, திரு. து.	வெள்ளக்கோவில்.
38 இராமலிங்கம், திரு. செ.	திருவிடைமருதூர்.
39 இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா.	தல்லி.
40 இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர்.	திண்டிவனம்.
41 இளங்கோவன், திரு. கோ.	திருவையாறு.
42 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.	அம்பாசமுத்திரம்.
43 உக்கிரபாண்டியன், திரு. க.	பரமக்குடி.
44 உச்சி, திரு. கே.	கூடலூர்.
45 உத்திராபதி, திரு. பொ.	திருத்துறைப்பூண்டி (செ.வ.).
46 உமாநாத், திரு. ரா.	நாகப்பட்டினம்.
47 உய்யக்கொண்டான், திரு. கே. ஜே.	ஆற்காடு.
48 எட்மண்ட், மாண்புமிகு திரு. க. உரொ. (அமைச்சர்).	திருநெல்வேலி.
49 எத்ராஜ், திரு. கி.	அச்சரபாக்கம் (செ.வ.).
50 ஏகாம்பர ரெட்டி, திரு.	பள்ளிப்பட்டு.
51 ஐசரி வேலன், திரு. (அமைச்சரின் பேரவைச் செயலர்.)	டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், சென்னை.
52 கண்ணன், திரு. ம.	கண்டமங்கலம் (செ.வ.).

தொடர் எண்	உறுப்பினர்கள் பெயரும். (1)	தொகுதி. (2)
53	கணேசன், திரு. இ. ..	எடப்பாடி.
54	கணேசன், திரு. எஸ். ..	பூம்புகார்.
55	கந்தசாமி, திரு. கா. வே. ..	கிணத்துக்கடவு.
56	கந்தசாமி, திரு. கே. ..	ஆண்டிப்பட்டி.
57	கபாலி, திரு. டி. கே. ..	மயிலாப்பூர்-சென்னை.
58	கரியமாணிக்கம் அம்பலம், திரு. கரு. ராம.	திருவாடானை.
59	கருணாநிதி, திரு. மு. ..	அண்ணாநகர், சென்னை.
60	கருணாநிதி, திரு. தாழை மு.	திருவாரூர் (செ. வ.)
61	கருணாமூர்த்தி, திரு. வெ. ..	ஜெயங்கொண்டான்.
62	கருப்பசாமி பாண்டியன் திரு. வீ.	ஆலங்குளம்.
63	கலியமூர்த்தி திரு. துரை. ..	சிதம்பரம்.
64	காத்தமுத்து, திரு. சி. பெ.	தொட்டியம்.
65	காளிமுத்து, மாண்புமிகு திரு கா. (அமைச்சர்)	திருப்பரங்குன்றம்.
66	காளியப்பன், திரு. இரா.	ஏற்காடு (ஆ. வா.)
67	காளியப்பன், திரு, பொ. ..	காரைக்குடி.
68	கிட்டப்பா, திரு. என். ..	மாயூரம்.
69	கிட்டு, திரு. ப. கோ. (அமைச்சரின் பேரவைச் செயலர்)	பல்லடம்.
70	கிருஷ்ணன், திரு. செ. ..	கன்னியாகுமரி.
71	கிருஷ்ணன், திரு. நா. ..	ஸ்ரீபெரும்புதூர் (செ. வ.)
72	கிருஷ்ணன், திரு. பி. ..	விழுப்புரம்.
73	கிருஷ்ணன், திரு. பி. எம். ..	பாலக்கோடு.
74	கிருஷ்ணன், திரு. ரா ..	வாசுதேவநல்லூர் (செ.வ.
75	குப்புசாமி, திரு. என். ..	மொரப்பூர்.
76	குருசாமி, திரு. ப.	ஆண்டிபூர் (செ. வ.)
77	குழந்தைவேலு, மாண்புமிகு திரு. ப. (அமைச்சர்).	உடுமலைப்பேட்டை.
78	கோதண்டராமன் திரு. வி. கே.	குடியாத்தம்.
79	கோபாலன், திரு. போ. ..	உதகமண்டலம்.
80	கோவிந்தராசன், திரு. சி.	நெல்லிக்குப்பம்.
81	கோவிந்தன், புலவர் கா. ..	செய்யாறு.

தொடர் எண்	உறுப்பினர்கள் பெயரும். (1)	தொகுதி. (2)
82	கோவேந்தன், திரு. எம். ஆர்.	பேராவூரணி.
83	சங்கரய்யா, திரு. என். ..	மதுரை கிழக்கு.
84	சண்முகம், திரு. ஆர். ..	திருத்தணி
85	சண்முகம், திரு. கா. ந. ..	லால்குடி.
86	சண்முகம், திரு. கூத்தகுடி ச.	திருப்பத்தூர்.
87	சண்முகம், திரு. ப. உ. ..	திருவண்ணாமலை.
88	சதாசிவம், திரு. செ. ..	அரவக்குறிச்சி.
89	சந்திரசேகரன், திரு. ஆ. ..	கம்பம்.
90	சந்திரன், திரு. ப. ..	பெரணமல்லூர்.
91	சந்திரன் ஜெயபால், திரு. இரா. எ.	தியாகராய நகர், சென்னை.
92	சமரசம், டாக்டர். கே. ..	காவேரிப்பட்டினம்.
93	சரஸ்வதி, மாண்புமிகு செல்வி பி. டி. (அமைச்சர்)	திருமங்கலம்.
94	சவுந்திரராஜன், திரு. ரெ. வீ.	பாபனாசம்.
95	சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே.	ஆயிரம் விளக்கு, சென்னை.
96	சாது செல்வராஜ், திரு. கோ.	ஸ்ரீவைகுண்டம்.
97	சாமிக்கண்ணு, திரு. தா. ..	செங்கம் (செ. வ.)
98	சிகாமணி, திரு. பொ. ..	திருவொற்றியூர்.
99	சிவசாமி, திரு. செ... ..	இளையாங்குடி.
100	சிவபெருமாள், திரு. மு. ..	ஓமலூர்.
101	சின்னசாமி, திரு. வ. ..	சேந்தமங்கலம், (ஆ.வா.)
102	சின்னசாமி, திரு. வி. கொ.	பவானிசாகர்.
103	சின்னையா, திரு. வீ. ..	குளத்தூர் (செ.வ.)
104	சின்னராசு, திரு. க. இரா.	கிருஷ்ணகிரி.
105	சீனிவாச ரெட்டியார், திரு. போ. எ.	குளித்தலை.
106	சுந்தரம், திரு. ப. ..	திருப்பத்தூர்.
107	சுந்தரம், திரு. மு.	ரிஷிவந்தியம்.
108	சுந்தரராஜ், திரு. நா. ..	திருமயம்.
109	சுந்தரராஜன், திரு. மு. ..	விருதுநகர்.
110	சுப்பராயன், திரு. என். ..	பனைமரத்துப்பட்டி.
111	சுப்பிரமணியம், திரு. ஆ. சி.	கடலாடி.
112	சுப்பிரமணியம், திரு. கே. ஜே.	போளூர்.

தொடர் எண்ணும்	உறுப்பினர்கள் பெயரும். (1)	தொகுதி. (2)
113	சுப்பிரமணியன், திரு. டி. ..	ஆண்டிமடம்.
114	சுப்பிரமணியம், திரு. பாக்கூர் சு.	உத்திரமேரூர்.
115	சுப்பிரமணியன், திரு. ஓ.	சிவகங்கை.
116	சுப்பிரமணியன், திரு. சின்னசேலம மா.	சின்னசேலம்.
117	சுப்பிரமணியன், திரு. வ. மு.	மானாமதுரை (செ.வ.)
118	சுப்ரவேலு, திரு. கா. ...	சீர்காழி (செ. வ.)
119	சுப்பு, திரு. க.	வில்லிவாக்கம்.
120	சுப்புலெட்சுமி ஜெகதீசன், மாண்புமிகு திருமதி (அமைச்சர்.)	மொடக்குறிச்சி.
121	சுப்பையா, திரு. ச. ..	சங்கரநயினார்கோவில் (செ. வ.)
122	சுவாமிதாஸ், திரு. அ. ..	பத்மநாபபுரம்.
123	செங்கோட்டையன், திரு. கு. அ.	சத்தியமங்கலம்.
124	செங்கோடன், திரு. கா. ..	கபிலமலை.
125	செல்லப்பா, திரு. அ. ...	வலங்கைமான் (செ. வ.)
126	செல்வராசன், திரு. அ. ..	துறைமுகம், சென்னை.
127	செல்வராஜ், திரு. சினி. ..	சமயநல்லூர் (செ. வ.)
128	செல்வராஜ், திரு. மு. ..	குறிஞ்சிப்பாடி.
129	சொக்கலிங்கம், திரு. கெ. ..	திருப்போரூர் (செ. வ.)
130	சோமசுந்தரம், திரு. ஓ. ப.	பொள்ளாச்சி.
131	சௌந்தரபாண்டியன், மாண்புமிகு திரு. பெ. (அமைச்சர்).	கிருஷ்ணராயபுரம் (செ. வ.)
132	சௌந்திரராஜன், திரு. கே.	திருச்சிராப்பள்ளி-2.
133	சௌந்திரராஜன், மாண்புமிகு திரு. திருச்சி ஆர். (அமைச்சர்).	ஸ்ரீரங்கம்.
134	சௌந்திரராஜன், திரு. மு. ரா	பவானி.
135	ஞானசிகாமணி, திரு. தே. ..	விளவங்கோடு.
136	தங்கவேல், திரு. ர. ச. ..	வால்பறை (செ. வ.)
137	தங்கவேலு கவுண்டர், திரு. பொ.	மேலமலையனூர்.

தொடர் எண்ணும்	உறுப்பினர்கள் பெயரும். (1)	தொகுதி. (2)
138	தண்டபாணி, திரு. ரா. கா. சு.	காங்கேயம்.
139	தமிழரசன், திரு. இ. ..	பேரணாம்பட்டு (செ.வ.)
140	**தனசேகரன், திரு. ந. ..**	**தூத்துக்குடி.**
141	தனபால், திரு. ப.	சங்கரி (செ. வ.)
142	தனுஷ்கோடி, திரு. கோ. ..	ராஜபாளையம், (செ.வ.)
143	தாமரைக்கனி, திரு. இரா ..	ஸ்ரீவில்லிபுத்தூர்.
144	திருநாவுக்கரசு, மாண்புமிகு திரு. எஸ். (பேரவைத் துணைத் தலைவர்).	அறந்தாங்கி.
145	திருவேங்கடம், திரு. பெ. சு.	கலசப்பாக்கம்.
146	துரை கோவிந்தராசன், திரு. (அரசாங்க தலைமைக் கொரடா).	திருவோணம்.
147	துரைசாமி, திரு. ப.	ராசிபுரம்.
148	துரை முத்துசாமி, திரு. ..	சங்கரபுரம்.
149	துரை முருகன், திரு. ..	இராணிப்பேட்டை.
150	துரைராஜ், திரு. சு. ம. ..	பொன்னேரி (செ.வ.)
151	துலுக்காணம், திரு. வ. ..	உளுந்தூர்பேட்டை (செ. வ.)
152	தைலப்பன், திரு. டி. எம். ..	ஒரத்தநாடு.
153	நடராசன், திரு. ஆர். ..	பேரூர்.
154	நடராசன், திரு. எஸ். ..	தஞ்சாவூர்.
155	நல்லதம்பி, திரு. தீ. சு. ..	பார்க்டவுன், சென்னை.
156	நாச்சிமுத்து, திரு. க. ..	பொங்கலூர்.
157	நாச்சிமுத்து கவுண்டர், திரு. கே. பி.	மேட்டூர்.
158	நாராயணன், திரு. ரா. ..	தாரமங்கலம்.
159	பட்டாபிராமன், திரு. செ.	திருவள்ளூர்.
160	பண்ணை சேதுராம், திரு. கே.	பெரியகுளம்.
161	பரமசிவம், திரு. மொ. ..	வானூர் (செ.வ.)
162	பரமசிவன், திரு. ஏ. எம். ..	மேலூர்.
163	பழனிசாமி, திரு. சு. ..	மேட்டுப்பாளையம்.
164	பழனிசாமி, திரு. சொ. நா	அவினாசி.
165	பழனிமுத்து, திரு. சி. ..	ஆத்தூர்.
166	பழனியப்பன், திரு. அ. ப.	ஒட்டன்சத்திரம்.

தொடர் எண்ணும் உறுப்பினர்கள் பெயரும். (1)		தொகுதி. (2)
167	பழனிவேல், திரு. என்.	பழனி (செ.வ.)
168	பாண்டியன், திரு. பி. எச்.	சேரன்மாதேவி.
169	பாலகிருஷ்ணன், திரு. சோ.	முதுகுளத்தூர்.
170	பாலகுரு, திரு. வெ.	சோழவந்தான்,
171	பாலன், திரு. சு.	பெரம்பூர்—சென்னை.
172	பாலாஜி, திரு. க. ..	காஞ்சிபுரம்.
173	பானுச்சாமி, திரு. அ. ..	நிலக்கோட்டை (செ.வ.)
174	புருஷோத்தமன், திரு. து. ..	சைதாப்பேட்டை சென்னை.
175	புஷ்பராஜு, திரு. த.	ஆலங்குடி.
176	பெரியசாமி, திரு. டி. பி. எம்.	மதுரை மேற்கு.
177	பெரியசாமி, திரு. மொ. ..	மங்களூர் (செ. வ.)
178	பெரியசாமி, திரு. ரா. ..	உப்பிலியாபுரம்.
179	பெருமாள், திரு. என்.	வரகூர் (செ. வ.)
180	பெருமாள், திரு. ரா. கு. ..	விளாத்திகுளம்.
181	பொன்னுசாமி, டாக்டர் ஏ.	பெருந்துறை
182	பொன்னுரங்கம், திரு. ப.	இராயபுரம்-சென்னை.
183	பொன்னையன், மாண்புமிகு திரு. சி. (அமைச்சர்)	திருச்செங்கோடு.
184	மணிமாறன், திரு. ஆர். ..	திருப்பூர்.
185	மணிமாறன், திரு. மா. ..	நன்னிலம் (செ.வ.)
186	மணிமுடி, திரு. எஸ். ..	எழும்பூர்-சென்னை. (செ. வ.)
187	மருதாசலம், திரு. க. ..	தொண்டாமுத்தூர்.
188	மனோகரன், மாண்புமிகு திரு. கி. (அமைச்சர்)	பாளையங்கோட்டை.
189	மாணிக்கம், திரு. சி... ..	திருச்சிராப்பள்ளி-1.
190	மார்க்கபந்து, திரு. ரா. ..	அணைக்கட்டு
191	மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ்	(நியமன உறுப்பினர்).
192	மாரிமுத்து, திரு. ஏ. ஆர்.	பட்டுக்கோட்டை
193	மீனாட்சிசுந்தரம், திரு. மா.	வேதாரண்யம்.
194	முசிரிபுத்தன், திரு. பி. (அமைச்சரின் பேரவைச் செயலர்).	முசிரி.

தொடர் எண்ணும் உறுப்பினர்கள் பெயரும். (1)		தொகுதி. (2)
195	முத்துசாமி, திரு. பா. கா. சி.	தர்மபுரி.
196	முத்துசாமி, திரு. சு. ..	ஈரோடு.
197	முத்துசாமி கரையாளர், திரு.சு.	தென்காசி.
198	முத்தையா, திரு. இரா.	சேடப்பட்டி.
199	முத்தையா, திரு. கே. கே.	மருங்காபுரி.
200	முருகேசன், திரு. கூ. ச.	திருவரம்பூர்.
201	முனிரத்தினம், திரு. இரா. ச.	கும்மிடிபூண்டி.
202	முனுஆதி, திரு. மாண்புமிகு (பேரவைத் தலைவர்)	தாம்பரம்.
203	முனுசாமி, திரு. பொ.	வந்தவாசி (செ.வ.)
204	மூக்கையா தேவர், திரு. பி. கே.	உசிலம்பட்டி.
205	யூசுப், திரு. யா. சை. மு.	ராதாபுரம்.
206	ரகுமான்கான், திரு. அ.	சேப்பாக்கம்-சென்னை.
207	ரகுராமன், திரு. வி.	புவனகிரி.
208	ரகோத்தமன், திரு. கோ.	முகையூர்.
209	ரசாக், திரு. எம். எம். ஏ.	கடையநல்லூர்.
210	ரமணி, திரு. கு.	கோயம்புத்தூர் கிழக்கு.
211	ராமதாஸ், திரு. பி. ..	போடிநாயக்கனூர்.
212	ராமநாதன், திரு. சி. ..	விருத்தாசலம்.
213	ராமலிங்கம், திரு. ஏ. ..	காட்டுமன்னார்கோவில் (செ. வ.)
214	ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு.	புதுக்கோட்டை.
215	ராஜு, திரு. செ. ம. ..	தலைவாசல் (செ. வ.)
216	ராஜு, திரு. வி. கே. ..	அரக்கோணம் (செ.வ.)
217	லட்சுமிநாராயணன், திரு. என்.	மதுரை மத்திய தொகுதி
218	லத்தீப், திரு. எம், ஏ. ..	வாணியம்பாடி.
219	வடிவேல், திரு. கு. ..	கரூர்.
220	வரதராஜன், திரு. என். ..	திண்டுக்கல்.
221	வரதராஜன், திரு. சௌ. வே.	சேலம்-1.
222	வாசன், திரு. சீ. மு. ..	வேடசந்தூர்.
223	வின்சென்ட், திரு. எம். .. (அமைச்சரின் பேரவைச் செயலர்).	நாகர்கோவில்.

தொடர் எண்ணும் உறுப்பினர்கள் பெயரும்.		தொகுதி.
(1)		(2)
224	விஜயராகவன், திரு. பொ.	கிள்ளியூர்.
225	வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா.	சிங்காநல்லூர்.
226	வெள்ளைச்சாமி, திரு. ஆ. (அமைச்சரின் பேரவைச் செயலர்)	ஆத்தூர்.
227	வேங்கா கவுண்டர், திரு. பி...	வீரபாண்டி.
228	வேணுகோபால், திரு. த. ..	தண்டராம்பட்டு.
229	வேலுச்சாமி, திரு. ஓ. சோ.	ஓட்டப்பிடாரம் (தா.வ.)
230	ஜகதீசன், திரு. ஆனூர் பு. கோ. (அமைச்சரின் பேரவைச் செயலர்)	செங்கல்பட்டு.
231	ஜான் வின்சென்ட், திரு. மு.	நாங்குனேரி.
232	ஜெபமணி, திரு. ர. ..	சாத்தான்குளம்.
233	ஜெயராமன், திரு. வே. இரா.	தேனி.
234	ஜெயவேலு, திரு. எம். ஏ. (அமைச்சரின் பேரவைச் செயலர்)	காட்பாடி.
235	ஜேம்ஸ், திரு. ஜே. ..	திருவட்டாறு.

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

மாண்புமிகு அமைச்சர்கள்:—

1. திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி.
2. திரு. எஸ். டி. சோமசுந்தரம்.
3. திரு. ஆர். எம். வீரப்பன்.
4. திரு. கே. நாராயணசாமி.
5. திரு. எஸ். இராகவானந்தம்.
6. திரு. கே. இராஜா முகமது.

தலைமை வழக்கறிஞர்:—

திரு. வி. பி. இராமன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடர்.

1979, பிப்ரவரி 17, 19, 20 மற்றும் 21 ஆம் நாட்கள்

(தொகுதி 22—எண்கள் 1 முதல் 4 வரை)

அ

பக்கங்கள்

அண்ணாமலை, திரு. எம்.—

அரிசனங்கள் பாதயாத்திரை, நடுப்பட்டி, சேலம் மாவட்டம் (க.ஈ.) .. 178, 180—181

ஸ்டேன்கோ ஸ்டீல் பாக்டரி, அரூர் வட்டம், டிரான்ஸ்பார்மர் பழுதடைதல் 237—239

வாணியாறு, அரூரில் தடுப்புச் சுவர் 262

அப்துல் ரசாக், திரு. கே. எம்.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள் 401

அம்பிகாபதி, திரு. மு.—

உலக அமைதிக்கு பங்கம் ஏற்பட்டிருப்பது குறித்து (ஒ.பி.) 276

பக்கங்கள்

அ—தொடர்ச்சி.

அம்பிகாபதி, திரு. மு.—தொடர்ச்சி.

கல்லூரி ஆசிரியர்கள், மறியல், (த.கோ.) 157

கல்லூரி ஆசிரியர்கள், வேலைநிறுத்தம் (க.ச.) 162, 166

சிம்கோ மீட்டர் தொழிற்சாலை ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து (த. கோ.) 352

மாணவர்களுக்கும், போலீசாருக்கும் இடையே சென்னையில் ஏற்பட்ட மோதல் குறித்து (ஒ. தி.) 47

விரிவுரையாளர்கள், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி 156

விவசாயிளுக்கு கூட்டுறவு சங்கக் கடனை தள்ளி வைப்பது குறித்து (ஒ.தி.) 56

அரங்கநாயகம், திரு. செ.—

ஆசிரியர் (கல்லூரி) போராட்டம், கல்லூரிகள் மூடப் பட்டிருப்பது குறித்து (ஒ.தி.) 280—281

கல்லூரி ஆசிரியர்கள், வேலைநிறுத்தம், (க.ச.அ.) 163—166, 166—167, 167—168, 169, 170, 171, 172, 173, 174—175

வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, மதுரை நாகமலை புதுக் கோட்டை, மற்றும் யாதவா கல்லூரி, மதுரை, மாணவர்கள் மோதல் (க.ச.அ.) 175—176,

மதுரை (க.ச.அ.) 175, 176, 177—178

அரிசன நலம்—

அரிசனங்கள் பாத யாத்திரை, நடுப்பட்டி, சேலம் மாவட்டம் (க.ச.) 178—182

அருந்ததியார் அல்லது சக்கிலியர், சலுகைகளில் முன்னுரிமை 136—139

பக்கங்கள்

அ—தொடர்ச்சி.

அரிசன நலம்—தொடர்ச்சி.

வேடர் சமூகத்தினர், தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல் 134—136

அருங்காட்சியகம்—

புதுக்கோட்டை, இடமாற்றம் 24

அலுவலகங்கள்—

தலைமைச் செயலகம், 11 மாடி கட்டட மதிப்பு 1—2

பல்லவன் போக்குவரத்துக் கழகம், விவரங்கள் 27—29

அழகர்சாமி, திரு. சோ.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள். 375—391, 393

அரசியல் அமைப்புச்சட்டம், 45-வது திருத்தம் (க.தி.) 84—86

அன்பழகன், திரு. க.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள் 312, 421—422, 457, 458, 459, 460, 461, 465

கல்லூரி ஆசிரியர்கள், வேலை நிறுத்தம் (க.ச.) 172

துணைக் கேள்விகளுக்கு அனுமதி வழங்குவது குறித்து (ஒ.பி.) 275

பக்கங்கள்

ஆ

ஆசிரியர்கள்—

கல்லூரி, வேலை நிறுத்தம் (க.ஈ.) 162—175

பட்டதாரி ஆசிரியர்கள், நீலகிரி மாவட்டத்தில் உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு நியமித்தல் 251

ஆலைகள்—

பஞ்சாலைகள் (மூடப்பட்டவை), மீண்டும் இயங்குதல் 273—274

ஆறுமுகம், திரு. சி.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள். 427—435

கல்லூரி ஆசிரியர்கள், மறியல், (த.கோ.) 159

இ.

இரயில்வே—

சமயநல்லூர் மின் நிலைய இருப்புப்பாதை பிரிவு. 1—3

இராகவானந்தம், திரு. எஸ்.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள். 286, 287, 291, 293

இராணுவத்தினர்—

இராணுவ மருத்துவர்கள், நியமனத்தில் முன்னுரிமை. 156—157

இராதா, திரு. எஸ். ஆர்.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளை கண்டிக்கும் தீர்மானங்கள். 345, 453—460, 468—470

இராமச்சந்திரன், திரு. எம். ஜி.—

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள். 211, 311, 312, 328

பக்கங்கள்

இ—தொடர்ச்சி.

இராமச்சந்திரன், திரு. எம். ஜி.—தொடர்ச்சி.

உரசியல் அமைப்புச் சட்டம், 45-வது திருத்தம் (த.தீ.) 106, 107, 108, 109, 110, 111, 112, 113 115

இராமச்சந்திரன், திரு. ச.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள். 202, 217, 226, 229, 230, 326, 327, 329, 336, 338 344, 346, 347,

உரிமைப் பிரச்சினை அறிவிக்கை குறித்து (த.கோ.) 182—183

கல்லூரி ஆசிரியர்கள், மறியல் (த.கோ.) 159

சிம்கோ மீட்டர் தொழிற்சாலை ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து (த.கோ.) 353, 354

தந்தை பெரியார் இதயம் குறித்து (ஒ.பி.). 35—36

அனைக் கேள்விகளுக்கு அனுமதி வழங்குவது குறித்து (ஒ.பி.). 275

மாணவர்களுக்கும், போலிசாருக்கும் இடையே சென்னையில் ஏற்பட்ட மோதல் குறித்து (ஒ.தீ.). 47—49

மின் உற்பத்திக் குறைவால் மின்வெட்டு வருவது குறித்து (க.ஈ.அ.) 50—53

விதி 23-ஐத் தளர்த்தல் (தி.) 348

விதி 41 (3)-ஐத் தளர்த்தல் (தி.) 178

இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந.—

காவல் நிலையங்கள், வல்லம், சத்தியமங்கலம், செஞ்சி வட்டம். 235

பக்கங்கள்

இ—தொடர்ச்சி.

இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந.—தொடர்ச்சி.

தொழிற்பயிற்சி நிலையங்கள், பயிற்சி பெற்றோர் விவரம். 22—24

பணியாளர்கள், பல்லவன் போக்குவரத்துக்கழகம். 27—29

இராமசாமி, திரு. எஸ். ஜே.—

கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கம், வடாற்காடு. 33—34

தலைமைச் செயலகம், 11 மாடி கட்டட மதிப்பீடு 1—2

பால் விநியோகம், சென்னை நகர், செலவு விவரங்கள். 265

இராமசாமி, திரு. து.—

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள். 220, 221, 228—229

அவைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்பொழுது கொள்கைத் திட்டங்களை வெளியில் அறிவிப்பது குறித்து (ஒ.பி.) 175

தொலைபேசி வசதி, உறுப்பினர்களுக்கு செய்வது குறித்து (ஒ.பி.) 38—39

இராமலிங்கம், திரு. செ.—

கல்லூரி ஆசிரியர்கள், வேலைநிறுத்தம். (க.ஈ.) 174

இராஜா முகமது, திரு. கே.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள். 322—323

இளங்கோவன், திரு. கோ.—

ஆசிரியர்கள் (கல்லூரி) போராட்டம், கல்லூரிகள் மூடியிருப்பது குறித்து (ஒ.நி.) 277—278

கல்லூரி ஆசிரியர்கள், வேலைநிறுத்தம் (க.ஈ.) 162, 169—170,

பக்கங்கள்

ஈ.

ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.—

அரிசனங்கள் பாத யாத்திரை, தடுப்பட்டி, சேலம் மாவட்டம் (க.ஈ.) 178

கல்லூரி ஆசிரியர்கள், வேலைநிறுத்தம் (க.ஈ.) 162

மின்உற்பத்திக் குறைவால் மின்வெட்டு வருவது குறித்து (க.ஈ.). 50

உ.

உச்சி, திரு. கே.—

பட்டதாரி ஆசிரியர்கள், உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு நியமித்தல், நீலகிரி மாவட்டம். 251

உணவகங்கள்—

உணவு விடுதி, தலைமைச் செயலகம். 122—125

உத்திராபதி, திரு. பொ.—

பாலம், மரைக்கா கோரையாற்றின் குறுக்கே திருத்துறைப்பூண்டி தாலுக்கா. 260—262

உமாநாத், திரு. ரா.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள். 186, 283—306

அரசியல் அமைப்புச் சட்டம், 45-வது திருத்தம் (த.தி.) 70—79

அரிசனங்கள் பாத யாத்திரை, தடுப்பட்டி, சேலம் மாவட்டம் (க.ஈ). 178, 181—182

ஊராட்சி ஒன்றியங்கள், வளர்ச்சித் திட்டங்கள். 131—132

கல்லூரி ஆசிரியர்கள், வேலைநிறுத்தம் (க.ஈ.) 162, 168

தொலைபேசி வசதி, உறுப்பினர்களுக்கு செய்வது குறித்து (ஒ.பி.) 38—39

உள்ளாட்சிகள்—

ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து அமைத்தல், தென்னாற்காடு மாவட்டம். 252—257

பக்கங்கள்

உ—தொடர்ச்சி

உள்ளாட்சிகள்—தொடர்ச்சி.

நகராட்சி ஒன்றியங்கள், வளர்ச்சித் திட்டங்கள். 131—132

போரூர் பேரூராட்சி, நகராட்சியாக்கத் திட்டம். 133—134

ஏ

ஏடுகள்.—

பேரவை முன் வைக்கப்பெற்றவை 118—119, 234

ஒ.

ஒழுங்குப் பிரச்னைகள்—

பார்க்க—தலைவர்.

க.

கடன்களும், முன்பணங்களும்—

விவசாயிகளுக்கு கடன், போத்தக்கல் (வ.ஆ மாவட்டம்) 146—150

கணேசன், திரு. எஸ்.—

உயர்நிலைப் பள்ளிகள், ஒழுக்கக் கல்வி கற்பித்தல். 249—251

கழகங்கள், கட்டிடக் கழகம் அமைத்தல். 239—241

டாக்டர்கள், இராணுவ பணியிலிருந்து திரும்புவோர், முன்னுரிமைகள். 156—157

நியாய விலைக் கடைகள், வேலையில்லாதோருக்கு ஒதுக்குதல். 5—3

வாரியம், அறநிலையத் துறை. 125—128

கருணாநிதி, திரு. தாழை மு.—

மருத்துவ மனைகள், கொரடாச்சேரி ஒன்றியம். 29—30

பக்கங்கள்

க—தொடர்ச்சி.

கருணாநிதி, திரு. மு.—

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள். 327, 447—449, 459

கல்லூரி ஆசிரியர்கள், மறியல் (த.கோ.) 158

சிம்கோ மீட்டர் தொழிற்சாலை ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து (த.கோ.). 351, 353, 354

கல்லூரிகள்—

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, விரிவுரையாளர்கள் 156

வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, மற்றும் யாதவா கல்லூரி மதுரை மாணவர்கள் மோதல், (க.ஈ.) 175—176

கல்வி—

உயர்நிலைப் பள்ளிகள், ஒழுக்கக் கல்வி கற்பித்தல் 249—251

தொழில் கல்வி, தொழில்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றோர் விவரம் 22—24

முறைசாராக் கல்வி, ஏழைக் குழந்தைகள், மாலை உணவு 130—131

கவன ஈர்ப்புகள்—

அரிசனங்கள் பாத யாத்திரை, நடுப்பட்டி, சேலம் மாவட்டம் 178—182

கல்லூரி ஆசிரியர்கள், வேலைநிறுத்தம் 162—175

மின் உற்பத்திக் குறைவால் மின்வெட்டு வருவது குறித்து 50—55

விவசாயிகளுக்கு கூட்டுறவு சங்கக் கடனை தள்ளிவைப்பது குறித்து 53—56

வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, மற்றும் யாதவா கல்லூரி, மதுரை, மாணவர்கள் மோதல் 175—176

கழகங்கள்—

கட்டிடக் கழகம், தமிழ்நாட்டில் அமைத்தல் 239—241

சேரன் போக்குவரத்துக் கழகம், மூலதன முதலீடு, விவரம் 25—26

க—தொடர்ச்சி.

காய்கறிகள்—

விற்பனை, காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி — 247

காவல் நிலையங்கள்—

வல்லம், சத்தியமங்கலம், செஞ்சி வட்டம் — 235

கிட்டப்பா, திரு. என்.—

காமராஜர் நினைவு இல்லம், சென்னை — 19—22

சமயபுரம் மாரியம்மன் கோவில், தங்கத்தேர் — 14—18

தாழ்த்தப்பட்டோர் பட்டியல், வேடர் சமூகத்தினர் — 134—136

பால்வள தொழிலாளர்கள் (சென்னை), கோரிக்கை — 266—271

வாரியம், அறநிலையத் துறை — 126—128

விவசாயம், பம்பு செட்டுகளுக்கு மின்விசை வழங்குவதில் புதிய நடைமுறை — 241—247

கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ.—

விவசாயிகளுக்கு கூட்டுறவுச் சங்கக் கடனை தள்ளிவைப்பது குறித்து (க. ஈ. அ.) — 53—56

கிருஷ்ணன், திரு. ரா.—

அரிசனங்கள் பாத யாத்திரை, நடுப்பட்டி, சேலம் மாவட்டம் (க.ஈ.) — 178

கல்லூரி ஆசிரியர்கள், வேலைநிறுத்தம் (க.ஈ.) — 162

மாணவர்களுக்கும், போலீசாருக்கும் இடையே சென்னையில் ஏற்பட்ட மோதல் குறித்து (ஒ.தி.) — 44

மின் உற்பத்திக் குறைவால் மின்வெட்டு வருவது குறித்து (க.ஈ.) — 83

குழந்தைவேலு, திரு. ப.—

அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள். — 196—197, 314, 313

க—தொடர்ச்சி.

கூட்டுறவுகள்—

உதகமண்டலம் கூட்டுறவு விற்பனைச் சங்கம், காய்கறி விற்பனை நிலையங்கள் அமைத்தல் — 8—10

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி, காய்கறி விற்பனை — 247

தாவிப்பாடி கிராம கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம், காரியதரிசி தலைமறைவு — 248

வடார்க்காடு கைத்தறி நெசவாளர் சங்கம், பணம் கையாடல் — 33—34

கைத்தறி—

துணி விற்பனையில் தள்ளுபடி — 34

கோதண்டராமன், திரு. வி. கே.—

ஆசிரியர்கள் (கல்லூரி) போராட்டம், கல்லூரிகள் மூடியிருப்பது குறித்து (ஒ.தி.) — 279

யானைக்கால் வியாதி, வட ஆர்க்காடு மாவட்டம் — 155—156

கோபாலன், திரு. போ.—

உதகமண்டலம் கூட்டுறவு விற்பனைச் சங்கம், காய்கறி விற்பனை நிலையங்கள் அமைத்தல் — 8—10

கோயில்கள்—

சமயபுரம் மாரியம்மன் கோயில், தங்கத் தேர் — 14—18

கோவிந்தராசன், திரு. பி.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள் — 404—417

சமயநல்லூர் மின் நிலைய இருப்புப்பாதை பிரிவு — 1—3

பக்கங்கள்

சட்டம்-ஒழுங்கு—

மாணவர்களுக்கும் போலீசாருக்கும் இடையே சென்னையில் ஏற்பட்ட மோதல் குறித்து (ஒ.தீ.) 47—49

சட்ட முன்வடிவுகள்—

நகர்ப்புற நிலம் (உச்ச வரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்த சட்ட முன்வடிவு, 1979 (ச.அ.நி.) 185

பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1979 (ச.அ.நி.) 183—184

புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 (ச.அ.நி.) 184

சண்முகம், திரு. கூத்தகுடி, ச.—

ஆங்கிலத்தில் வினாப்பட்டியல் வைப்பது குறித்து (ஒ.பி.) 37—38

கல்லூரி ஆசிரியர்கள், மறியல் (த.கோ.) 159; 160

சிம்கோ மீட்டர் தொழிற்சாலை ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து (த.கோ.) 353

சுபாசம், டாக்டர் கே.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள் 435—447, 450—451

சமூக நலம்—

பணிபுரியும் பெண்களின் குழந்தைகள், காப்பகங்கள் அமைத்தல் [illegible]—33

சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள் 186, 187—214

கல்லூரி ஆசிரியர்கள், மறியல், (த.கோ.) 157

கல்லூரி ஆசிரியர்கள், வேலைநிறுத்தம், (க.ஈ.) 162, 172

காமதேனு கூட்டுறவு அங்காடி, காய்கறி விற்பனை [illegible]

பக்கங்கள்

ச - தொடர்ச்சி.

சாலைகள்—

கணபதி—உருமண்டம் பாளையம் சாலை 26—27

பாபனாசம் சாலை-தாம்பரபரணி பாலம் யூனியன் ரோடு, பராமரிப்பு 139—140

சிவசாமி, திரு. செ.—

ஆசிரியர்கள் (கல்லூரி) போராட்டம்—கல்லூரிகள் மூடப்பட்டிருப்பது குறித்து (ஒ. தீ.) 279—280

கேள்வியை வரிசைக் கிரமமாக எடுத்துக் கொள்ளாதது குறித்து (ஒ.பி.) 100

வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, மற்றும் யாதவா கல்லூரி, மாணவர்கள் மோதல், மதுரை 175, 176—177

சுந்தரம், திரு. ப.—

திருப்பத்தூர் அரசினர் உயர்நிலைப்பள்ளி, நிர்வாகத்தை நகராட்சிக்கு மாற்றுதல் 251

சுந்தரராஜ், திரு. நா.—

அருங்காட்சியகம், புதுக்கோட்டை 24

நீர்ப்பாசன சீரமைப்பு, புதுக்கோட்டை மாவட்டம், மாநில திட்டக்குழு அறிக்கை 262

பம்புசெட்டுக்களுக்கு மின் இணைப்பு, அரிமழம் ஒன்றியம் 247

சுப்பிரமணியம், திரு. கே. ஜே.—

போளூர் பேரூராட்சி, நகராட்சியாக்கத் திட்டம் 133—134

விவசாயிகளுக்கு கடன், மோத்தக்கல் (வ. ஆ. மாவட்டம்) 146—150

சுப்பிரமணியன், திரு. சின்னசேலம், மா.—

ஈட்டுத்தொகை, தழுதாழை ஏரி நிலச் சொந்தக்காரர்கள், பெரம்பலூர் வட்டம் 263

ஊராட்சி ஒன்றியங்களை பிரித்து அமைத்தல், தென்னாற்காடு மாவட்டம் 252—257

ச—தொடர்ச்சி.

சுப்பிரமணியன், திரு. சின்னசேலம், மா.—தொடர்ச்சி.

—பாலம், மணிமுத்தாறு, கூத்தக்குடி—தின்னியூர் சாலையில் ... 135

சுப்பிரமணியன், திரு. வ. மு.—

உணவு விடுதி, தலைமைச் செயலகம் ... 122—125

சுப்பு, திரு. க.—

அரசியல் அமைப்புச் சட்டம், 45-வது திருத்தம் (த.தீ.) ... 103—115

கல்லூரி ஆசிரியர்கள், மறியல் (த.கோ.) ... 160

கல்லூரி ஆசிரியர்கள், வேலை நிறுத்தம் (க.ஈ.) ... 162, 171

நகர்ப்புற நிலம் (உச்ச வரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்த சட்ட முன்வடிவு, 1979 (ச.அ.நி.) ... 185

பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1979 (ச.அ.நி.) ... 183

புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 (ச.அ.நி.) ... 184

பேரவை அலுவல் குறித்து (அ). ... 334

சுப்ரவேலு, திரு. கா.—

உயர்நிலைப்பள்ளிகள், முறைசாராக் கல்வித் திட்டம் ... 131

சுற்றுலா—

சுற்றுலா மையம், கொல்லி மலைப் பகுதி ... 128—129

சோமசுந்தரம், திரு. எஸ். டி.—

நகர்ப்புற நிலம் (உச்ச வரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்த சட்ட முன்வடிவு, 1979 (ச.அ.நி.) ... 185

பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1979 (ச.அ.நி.) ... 183, 184

புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 (ச.அ.நி.) ... 183

ச—தொடர்ச்சி.

சௌந்தரபாண்டியன், திரு. பெ.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள் ... 338—339

அரிசனங்கள் பாத யாத்திரை, நடுப்பட்டி, சேலம் மாவட்டம். (க.ஈ.அ.). ... 178—180, 181,182

சௌந்திரராசன், திரு. கே.—

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளை கண்டிக்கும் தீர்மானங்கள் ... 223

சுற்றுலா மையம், கொல்லிமலைப் பகுதி ... 128—129

ஞ

ஞானசிகாமணி, திரு. தே.—

கல்லூரி ஆசிரியர்கள், வேலை நிறுத்தம் (க.ஈ.). ... 162

த

தகவல் கோரல்—

உரிமைப் பிரச்சினை, அறிவிக்கை குறித்து ... 182—183

கல்லூரி ஆசிரியர்கள், மறியல் ... 157—162

சிம்கோ மீட்டர் தொழிற்சாலை, ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து. ... 351—354

தலைவர்—

அறிவிப்புகள்—

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து. ... 464

பேரவை அலுவல் குறித்து ... 333—334

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—(தொடர்ச்சி).

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—

அவையில் பயன்படுத்தப்பெறும் சொற்கள்—

" நண்பர்களே " என்று பேரவை உறுப்பினர்களைப் பார்த்து அழைக்கக் கூடாது. (ந.இ.தி) 423

"பொய்" என்ற வார்த்தையை உபயோகிப்பதற்குப் பதிலாக 'உண்மைக்குப் புறம்பான' என்று சொல்லிப் பழகிக் கொண்டால் நல்லது. (ந.இ.தி) 416

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

"சென்னை, மதுரை, திருச்சி மற்றும் பிற பகுதிகளில் ஏறத்தாழ 122 கல்லூரி ஆசிரியர்கள் கைதாகி இருக்கிறார்கள், அது தொடர்பாக மாணவர்கள் வெளிநடப்புச் செய்து இருக்கிறார்கள். இந்த மூன்று நகரங்களிலும் ஏறத்தாழ எல்லாக் கல்லூரிகளும் இழுத்து மூடப்பட்டிருக்கின்றன. இதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை இன்னும் நீடிக்காமல் இருக்க அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க"

கல்வி அமைச்சரின் விளக்கத்திற்குப்பின் இசைவு மறுக்கப் பெற்றது 277

"சென்னை மாநிலக் கல்லூரி மாணவர்களுக்கும் போலீசாருக்கும் இடையே 16—2—1970 அன்று மோதல் ஏற்பட்டு மாணவர்கள் படுகாயம் அடைந்து, உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால் உருவாகியுள்ள பதட்ட நிலை குறித்து"

மின்சாரத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப்பின் இசைவு மறுக்கப்பெற்றது. 39—49

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்குப் பிரச்சினை—

அவை நிகழ்ச்சி நிரல் ஆங்கிலத்தில் இருப்பது குறித்து ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பிய போது தலைவர் அளித்த குறிப்புரையாவது—

" இங்கே ஆங்கிலம் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் தரப்படுகின்றது. இனிமேல் தமிழில் தரவேண்டும். விரும்புகிறவர்களுக்கு ஆங்கிலத்தில் தரவேண்டும் என்கிற வகையில் ஏற்பாடு செய்கிறேன். அவையில் உறுப்பினர்களுக்காக மேசை மீது வைப்பதும் தமிழிலே இருக்க வேண்டும் என்றும் சொல்கிறேன் ". 37—38

ஒழுங்கு முறை—

உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளுதல் கூடாது (ந.இ.தி.). 322

கேள்வி கேட்க வாய்ப்பு அளிக்கவேண்டும் என்று தலைவரை யாரும் கட்டாயப்படுத்த முடியாது (வி.வி.) 128

குற்றச்சாட்டுகள்—

இந்தப் பேரவையில் இல்லாதவர்கள் மீது குற்றஞ்சாட்டிப் பேசாமல் இருப்பது நல்லது (த.தி.) 218

எழுத்து மூலமாகக் கொடுத்து அனுமதி பெற்ற பிறகு, பேரவையில் எழுப்புதல் வேண்டும் (ந.இ.தி.). 323

"குற்றஞ்சாட்டுவதற்கு உறுப்பினர்களுக்கு எப்படி உரிமை இருக்கிறதோ, அதே போன்று அமைச்சர்களுக்கு அவற்றை மறுப்பதற்கும் உரிமை இருக்கிறது". (ந.இ.தி.). 452

கேள்வி நேரத்தில், கேள்வியில் மட்டுமின்றி பதில்களிலும் குற்றச்சாட்டுகள் இருக்கக்கூடாது (வி.வி.). 148

முன்னதாகவே எழுதிக் கொடுக்காமல், ஓர் உறுப்பினர் திடீரென்று ஒரு குற்றத்தைச் சாட்டினால், உடனே சம்பந்தப்பட்டவர் அதை மறுத்து தன்னிலை விளக்கம் அளித்து விட்டால் மேற்கொண்டு அதைப்பற்றி எழுத்து மூலமாகக் கொடுக்காது, பேசுவது சரியாக இராது. (ந.இ.தி.). 453

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

குற்றச்சாட்டுக்கள்—தொடர்ச்சி.

வெளியில் நடந்த நிகழ்ச்சி பற்றி, 'நான் இருந்தேன், கேள்விப்பட்டேன்' என்றெல்லாம் ஆதாரம் கொடுக்காமல் பேசுவது கூடாது (த்.தி.). 110

குறுக்கீடுகள்—

எப்போது வேண்டுமானாலும் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்திருந்து குறுக்கிடுதல் கூடாது (ந.இ.தி.). 445—446

"எனக்கு கடிதம் வந்திருக்கிறது ; தந்தி வந்திருக்கிறது" எனத் திடீரென்று, பேரவையில் ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கையில் வேறு ஓர் உறுப்பினர் எழுந்து குறுக்கிட்டுப் பேச முயற்சிப்பது சரியல்ல (ந.இ.தி.). 444

தீர்ப்பு—

தலைவர் ஒரு முடிவு சொல்லிவிட்டால், அதை ஏற்றுக் கொள்வதுதான் மரபு. 127

நடைமுறைகள்—

"42-வது விதியின் கீழ் கொண்டு வரப்படும் தீர்மானத்தின் மீது அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு கேள்விகள் கேட்க முடியாது." (ஒ.தி.) 282

ஓர் உறுப்பினர் தமக்குத் தொடர்பு இருந்தாலும் இல்லாவிட்டாலும் எல்லாவற்றிலும் பேச வேண்டுமென்று வற்புறுத்தல் கூடாது (ந.இ.தி.). 424

கவன ஈர்ப்பு கொடுத்தவர்கள், அமைச்சரின் அறிக்கைக்குப் பின் ஒன்றிரண்டு கேள்விகளை மட்டும் கேட்கலாம். நீண்ட பேச்சு கூடாது (க.ச.). 171, 172

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நடைமுறைகள்—தொடர்ச்சி.

கேள்வி நேரத்தில் ஒழுங்குப் பிரச்சினை இல்லை (வி.வி.) 228

பத்திரிகையில் வந்துள்ளதை அவை முன் கொண்டு வர அது பற்றிக் குறிப்பாக எழுதிக் கொடுத்து, அனுமதி பெற வேண்டும் (க.ச.). 175

பேரவையில், 'அமைச்சரவையின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம்' விவாதிக்கப்பெறும் நாட்களில் ஒத்திவைப்புத் தீர்மானங்களும், கவன ஈர்ப்புகளும் கூட எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும் என உறுப்பினர்கள் வற்புறுத்திய போது, தலைவர் அளித்த தீர்ப்புரையாவது—

"நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகிறபோதோ, நிதிநிலை அறிக்கை பொது விவாதத்தின்போதோ, ஆளுநர் உரை மீதான பொது விவாதத்தின்போதோ, ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்பு உட்பட எடுத்துக் கொள்வதில்லை. இந்த விவாதங்களின்போது, பல கருத்துக்களைப் பேச வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்தாலே, ஒத்திவைப்புத் தீர்மானங்களைத் தள்ளிவிடுவது மரபாக இருக்கிறது".

ஆனால் உறுப்பினர்கள் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும், அதன் மீது விவாதித்து, அரசு தரப்பிலேயிருந்து ஏதாவது செய்திகள் பெற வேண்டுமென்று கேட்ட காரணத்தாலேதான் இதை ஏற்றுக் கொள்கிறேன். இந்தப் பொருள்கள் பற்றிப் பேச நம்பிக்கையில்லா தீர்மானத்திலே வாய்ப்பிருக்கும்போது, இன்றைக்கும் நாளைக்கும் நாளை மறுதினத்திலும் ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ள வாய்ப்பே கிடையாது, இருந்தாலும் அவை இன்னுடைய கவனத்திற்கு வரவேண்டும் என்பதற்காகவும், தேவைப்படுகிற செய்திகள் உடனடியாக கிடைக்கும் என்பதாலும் அனுமதிக்கிறேனே தவிர, இன்றிருக்கிற

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும் (தொடர்ச்சி)—

நடைமுறைகள்—தொடர்ச்சி.

நிகழ்ச்சிகளின்படி நான் அனுமதிக்க முடியாது, இருந்தாலும் பொதுமுக்கியத்துவம் வாய்ந்ததாலே அனுமதிக்கிறேன் (த.கோ.) 161

நீக்கம்—

உலக அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் செயல் என்பதாக வேறு நாட்டில் நடந்த சம்பவம் குறித்து பேரவையில் எழுப்ப முயன்றபோது,

"இது இந்தப் பேரவையில் எழுப்பப்பெற வேண்டிய பிரச்சினை அல்ல" என நிராகரிக்கப்பெற்று நீக்கப் பெற்றது (ஒ.பி.) 276

துணை வினா ஒன்றுக்கு அளித்த பதிலில் அடங்கிய குற்றச் சாட்டு நீக்கப்பெற்றது (வி.வி.). 147—148

நீதிபதியைக் குறித்து குறிப்பிட்டது நீக்கப்பெற்றது. (த.நீ.) 107

வெளியில் உள்ளவர்களைப் பற்றி ஆட்சேபகரமாகக் குறிப்பிட்டது நீக்கப்பெற்றது (ந.இ.நி.) 220, 227

பார்வையாளர் மாடம்—

பேரவையில் வீசப்பெற்ற துண்டு அறிக்கையில் என்ன இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பினால் பேரவைத் தலைவரின் அறைக்குச் சென்று கேட்க வேண்டும். 464

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

பார்வையாளர் மாடம் (தொடர்ச்சி)—

"மாடத்திலிருந்து பார்வையாளர்கள் துண்டு அறிக்கைகளை பேரவையில் (21—2—1979) வீசிய செயல் பேரவை உரிமையை மீறிய செயலாகும்" எனத் தீர்ப்பளிக்கப் பெற்றது. 463—464

பேசும் முறை—

பேசும் உறுப்பினர்கள் தலைவரைப் பார்த்துப் பேச வேண்டும். (ந.இ.நி.) 429

பேரவைத் தலைவர் அனுமதியின்றி, உறுப்பினர்கள் யாரும் பேசுதல் கூடாது. (ந.இ.நி.) 423

"வெளியில் இருக்கிற ஒருவரைப்பற்றி, இந்தச் சட்ட மன்றத்திலே வந்து பதில் சொல்லக்கூடிய நிலையிலே இல்லாத ஒருவரைப் பற்றிப் பேசக் கூடாது." (ந.இ.நி.) 321

பேரவையில் காட்டப்பெறும் பொருட்கள்—

"உறுப்பினர் ஒரு பொருளை பேரவையில் காட்டுவதாக இருந்தால் அதை தலைவரிடம் காட்டி முன் அனுமதி பெற்ற பிறகுதான் காண்பிக்க வேண்டும், தலைவரின் அனுமதி பெறாமல் அவைக்குள் எந்தப் பொருளையும் கொண்டு வருதல் கூடாது." 42

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர் (தொடர்ச்சி)—

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும் (தொடர்ச்சி)—

விசாரணையிலுள்ள பொருள் குறித்து—

"இன்னின்ன வகையில் விசாரணை நடந்திருக்க வேண்டும், இப்படி, இப்படி விசாரணை செய்வது தவறு என்ன, என்னே போய் பேசுவது தவறு. சாதாரணமாக, முறையாக விசாரிக்கப்படவில்லை என்றெல்லாம் பேசுவதில் எவ்வித தவறும் இல்லை." (ந.இ.தி.) 465

வினாக்கள்—

கேள்வியைச் சுருக்கமாகக் கேட்கவேண்டும் (அ.வி.) 245, 257, 261, 273

மூலக் கேள்வியை ஒட்டியதாகக் கேட்கவேண்டும். (அ.வி.). 268

தீர்மானங்கள்—

அரசியல் அமைப்புச் சட்டம், 45-வது திருத்தம். (த.தி.) 56—118

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள். 186—234, 283—333, 354—470

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

பார்க்க—தலைவர்.

விதி 22-ஐத் தளர்த்தல். 348

விதி 41 (3)-ஐத் தளர்த்தல். 178

துரை கலியமூர்த்தி, திரு.—

விடுதிகள், சென்னை நகரில் பணியாற்றுவோர். 31—32

வெள்ளாற்றின் பாலம் சீர்திருத்தம், சேத்தியாதோப்பு. 151—153

துரை முத்துசாமி, திரு.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள். 216, 223, 224, 225, 227, 331—346

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

துரை முத்துசாமி, திரு.—தொடர்ச்சி.

வீட்டு வசதி, கைத்தறி நெசவாளர்கள். 271—273

வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி மற்றும் யாதவா கல்லூரி மாணவர்கள் மோதல், மதுரை (க.ஈ.) 171

துரை முருகன், திரு.—

கல்லூரி ஆசிரியர்கள், மறியல், (த.கோ.). 158, 159

கல்லூரி ஆசிரியர்கள், வேலை நிறுத்தம் (க.ஈ.). 162, 170—171

தந்தை பெரியார் இயக்கம் குறித்து (ஒ.பி.). 35—36

மாணவர்களுக்கும் போலீசுக்கும் இடையே சென்னையில் ஏற்பட்டுள்ள மோதல் குறித்து (ஒ.தி.). 41

தெய்வசிகாமணி, திரு. வ.—

அரிசன மக்கள், தடுப்பட்டு கிராமம், செங்கல்பட்டு மாவட்டம், பாத யாத்திரை (க.ஈ.). 178

தொழிலாளர்கள்—

கைத்தறி நெசவாளர்கள், வீட்டு வசதி. 271—273

பால் வளம் (சென்னை), கோரிக்கைகள் மீதான நடவடிக்கை. 266—271

தொழிற்சாலைகள்—

[illegible] பார்த்தல். 237—239

ந.

நடராசன், திரு. ஆ.—

ஆரம்ப சுகாதார நிலையம், அந்தேகவுண்டன்சாவடி. 30

நாராயணசாமி, திரு. கே.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள். 462, 463

அரசியல் அமைப்புச் சட்டம், 45-வது திருத்தம் (த.தீ.) 56

115—117

நியாயவிலைக் கடைகள்—

வேலையில்லாதோர்க்கு ஒதுக்குதல். 5—8

நிலங்கள்—

ஒப்படைப்பு, தண்டையார்பேட்டை பகுதி. 10—11

நினைவுச் சின்னங்கள்—

காமராசர் இல்லம், சென்னை. 19—22

தபால் தலை—பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர். 235—237

நீக்கம். 41, 42, 106, 107, 108, 109, 110, 113, 114, 115, 117

நீர்ப்பாசனம்—

அணைகள்—

நொய்யல் ஆறு, கரூர் தாலுக்கா. 153—1[illegible]

பக்கங்கள்

ந—தொடர்ச்சி.

நீர்ப்பாசனம்—தொடர்ச்சி.

ஆறுகள்—

வாணியாறு; அருகில் தடுப்புச் சுவர் 262—263

வரி—

இராதாபுரம் கால்வாய்ப் பகுதி. 12—14

சீரமைப்பு, புதுக்கோட்டை மாவட்டம், மாநிலத் திட்டக் குழு அறிக்கை. 262

நோய்கள்—

யானைக்கால் வியாதி, வ.ஆ. மாவட்டம். 155—156

ப

பன்னை சேதுராம், திரு. கே.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள். 367—375

அரசு மருத்துவமனை, பெரியகுளம். 31

பழனிமுத்து, திரு. சி.—

அரிசனங்கள் பாத யாத்திரை, நடுப்பட்டி, சேலம் மாவட்டம் (க.ஈ.) 178

பழனிவேல், திரு. என்.—

அரிசனங்கள் பாத யாத்திரை, நடுப்பட்டி, சேலம் மாவட்டம். 178

முறைசாராக் கல்வி, ஏழைக் குழந்தைகள், மாலை உணவு. 130—131

பள்ளிகள்—

உயர்நிலைப் பள்ளிகள், முறைசாராக் கல்வித் திட்டம். 131

பக்கம்

ப—தொடர்ச்சி.

பள்ளிகள்—தொடர்ச்சி.

திருப்பத்தூர் அரசினர் உயர்நிலைப் பள்ளி, நிர்வாகத்தை நகராட்சிக்கு மாற்றுதல். 251

பால்வளம்—

சென்னை நகருக்கு பால் விநியோகம்—செலவு விவரங்கள். 265

தொழிலாளர்கள் (சென்னை), கோரிக்கைகள். 266—271

பாலங்கள்—

மணிமுத்தா ஆறு, கூத்தக்குடி—நன்னியூர் சாலை. 139

மரக்கா கோரையாறு, திருத்துறைப்பூண்டி தாலுக்கா. 260—262

வெள்ளாறு சீர்திருத்தம், சேத்தியாதோப்பு 151—153

பாலன், திரு. சு.

நில ஒப்படை, தண்டையார்பேட்டை பகுதி. 10—11

புஷ்பராஜ், திரு. த.—

கைத்தறித் துணிகள், விற்பனையில் தள்ளுபடி. 34

பெரியசாமி, திரு. டி. பி. எம்.—

தபால்தலை—பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், வெளியிடுதல். 235—237

பொன்னையன், திரு. இ.—

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள். 451—452

453

பக்கங்கள்.

ப—தொடர்ச்சி.

போக்குவரத்து—

ஆட்டோ ரிக்ஷாக்கள், கோவை, மீட்டர்கள் பொருத்துதல். 140—146

பேருந்துகள் (விரைவு), கோவை—கன்னனூர். 258

பேருந்து (விரைவு), கோவை—திருவனந்தபுரம். 258—260

ம.

மணிமாறன், திரு. ஆர்.—

பஞ்சாலைகள் (மூடப்பட்டவை), இயங்குதல். 273—274

மணிமாறன், திரு. மா.—

நெய்வேலியில் இரண்டாவது மின் நிலையம். 3—5

விவசாயிகளுக்கு கூட்டுறவுச் சங்கக் கடனை தள்ளிவைப்பது குறித்து (க.ஈ.) 53

மருத்துவ மனைகள்—

ஆரம்பச் சுகாதார நிலையம், சுந்தேகவுண்டன்சாவடி. 30

சொரடாச்சேரி ஒன்றியம், அரசு நிர்வகித்தல். 29—30

பெரியகுளம், கட்டிடம். 31

மனோகரன், திரு. இ.—

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள். 449, 460

466—467

சிம்கோ மீட்டர் தொழிற்சாலை—ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து (த.கோ.). 352, 353

மார்க்கபந்து, திரு. ரா.—

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள். 417—437

அரசியல் அமைப்புச் சட்டம், 45-வது திருத்தம் (த.தீ.) 98—103

பக்கங்கள்

ம—தொடர்ச்சி.

மாரிமுத்து, திரு. ஏ. ஆர்.—

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானங்கள். 354—367

அரசியல் அமைப்புச் சட்டம், 45-வது திருத்தம் (த.தி.) 86—89

மாணவர்களுக்கும் போலீசாருக்கும் இடையே சென்னையில் ஏற்பட்ட மோதல் குறித்து (ஒ.தி.) 44—45

மின்சாரம்—

உற்பத்திக் குறைவால் மின்வெட்டு வருவது குறித்து (க.ஈ.). 50—53

நெய்வேலியில் இரண்டாவது நிலையம். 3—5

பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு, அரிமழம் ஒன்றியம். 247

பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு, புதிய நடைமுறை. 241—247

முத்துசாமி கரையாளர், திரு. சு.—

பாபநாசம் சாலை—தாம்பரபரணிபாலம் யூனியன் ரோடு, அரசு நிர்வகித்தல். 139—140

ய.

யூசுப் திரு. யா. சை. மு.—

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள். 210

இராதாபுரம் கால்வாய், பாசனத்திற்கு வரி விதிப்பு. 12—14

ர.

ரகுமான்கான், திரு. அ.—

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள். 322—333

பக்கங்கள்

ர—தொடர்ச்சி.

ரகுமான்கான் திரு. அ.—தொடர்ச்சி.

அரசியல் அமைப்புச் சட்டம், 45-வது திருத்தம் (த.தி.) 56—64

கல்லூரி ஆசிரியர்கள், மறியல் (த.கோ.) 158

கல்லூரி ஆசிரியர்கள், வேலை நிறுத்தம் (க.ஈ.) 162, 172, 173

சேப்பாக்கம் தொகுதியில் பொதுக்கூட்டம் நடத்துவது குறித்து (ஒ.பி.). 276

மாணவர்களுக்கும், போலீசாருக்கும் இடையே சென்னையில் ஏற்பட்ட மோதல் குறித்து (ஒ.தி.). 41—42

ரமணி, திரு. கு.—

ஆட்டோ ரிக்ஷாக்கள், கோவை, மீட்டர்கள் பொருத்துதல். 140—146

கல்லூரி ஆசிரியர்கள், வேலை நிறுத்தம் (க.ஈ.) 162, 167

பிம்கோ மீட்டர் தொழிற்சாலை, ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து (த.கோ.). 352

சேரன் போக்குவரத்துக் கழகம், மூலதன முதலீடு விவரம் 25—26

ல

லத்தீப், திரு. எம். ஏ.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள் 186, 306—321, 323—331

அரசியல் அமைப்புச் சட்டம், 45-வது திருத்தம் (த.தி.) 89—97

மாணவர்களுக்கும், போலீசாருக்கும் இடையே சென்னையில் ஏற்பட்ட மோதல் குறித்து (ஒ.தி.). 45

பக்கம்

வ

வடிவேல், திரு. கு.—

நொய்யல் ஆற்றில் அணை, கரூர் தாலுக்கா. 153—155

வாசன், திரு. சி. மு.—

குழந்தை காப்பகங்கள், நிதி உதவி. 32—33

வாரியம்—

அறநிலையத் துறை. 126—128

விடுதிகள்—

பணியாற்றுவோர், சென்னை. 31—32

வின்சென்ட், திரு. எம்.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள். 332

விஜயராகவன், திரு. பொ.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள். 395—404

அரசியல் அமைப்புச் சட்டம், 45-வது திருத்தம் (த.தி.) 78—84

உணவு விடுதி, தலைமைச் செயலகம். 122—125

கல்லூரி ஆசிரியர்கள், வேலை நிறுத்தம் (க.ஈ.). 162

வீரப்பன், திரு. ஆர். எம்.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள். 343—344, 393—394

பக்கம்

வ—தொடர்ச்சி.

வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா.—

கணபதி—உருமண்டம் பாளையம் சாலை, அரசு நிர்வகித்தல். 26—27

பேருந்துகள் (விரைவு), கோவை—கண்ணனூர். 258

பேருந்து (விரைவு), கோவை—திருவனந்தபுரம். 258—260

வேணுகோபால், திரு. த.—

தாளிப்பாடி கிராம கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம், காரியதரிசி தலைமறைவு, நடவடிக்கை. 248

வேலுச்சாமி, திரு. ஓ. சோ.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள். 227

அரசியல் அமைப்புச் சட்டம், 45-வது திருத்தம் (த.தி.) 64—70

தாழ்த்தப்பட்டோர், அருந்ததியார் அல்லது சக்கிலியர், சலுகைகளில் முன்னுரிமை. 136—139

ஜ

ஜெயமணி, திரு. ச.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள். 220, 224

ஜேம்ஸ், திரு. ஜே.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், கொள்கைகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள். 186, 211, 215—234

உரிமைப் பிரச்சினை அறிவிக்கை குறித்து (த.கோ.). 182

கல்லூரி ஆசிரியர்கள், மறியல் (த.கோ.). 157, 161

பக்கம்

ஜ—தொடர்ச்சி.

ஜேம்ஸ், திரு. ஜே.—தொடர்ச்சி.

கல்லூரி ஆசிரியர்கள், வேலை நிறுத்தம் (க.ஈ.). 162, 168—169

சிம்கோ மீட்டர் தொழிற்சாலை, ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து (த.கோ.) 352

துணைக் கேள்விகளுக்கு அனுமதி அளிப்பது குறித்து (ஒ.பி.) 274—275

மாணவர்களுக்கும், போலீசாருக்கும் இடையே சென்னையில் ஏற்பட்ட மோதல் குறித்து (ஒ.தி.). 46—47

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1979 பிப்ரவரி 17.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

சமயநல்லூர் மின்நிலைய இருப்புப்பாதை பிரிவு

*வினா எண் 61—திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் அனல் மின் நிலையம் மூடப்பட்டுவிட்ட பிறகும் அங்குள்ள ரயில்வே சைடிங் இன்னும் அங்கே இருக்கின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதற்காக மின் வாரியம் ரயில்வே இலாக்காவுக்கு ஏதாவது தொகை செலுத்திவருகிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) இருப்புப்பாதை சைடிங்ஸ் பராமரிப்பு, வாடகை, பழுதுபார்த்தல் ஆகிய செலவினங்களுக்காக மின் வாரியம் இருப்புப்பாதைத் துறைக்கு 1976-77-ம் ஆண்டில் ரூ. 10,967-ம், 1977-78-ம் ஆண்டில் ரூ. 10,843-ம் கொடுத்தது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்த சமயநல்லூர் பவர் ஸ்டேஷன் இன்றைக்கு வேலை செய்வதில்லை; அங்கே பவர் உற்பத்தி செய்யப்படவில்லை. அங்கேயிருந்த எந்திரங்கள் எல்லாம் விற்கப்பட்டுவிட்டன என்பது ஏற்கனவே இந்த அவையில் பேசப்பட்டுள்ள ஒன்றாகும். அப்பேர்ப்பட்ட இடத்திற்கு மறுபடியும் இந்த இரயில்வே லையன் போட்டு வைத்திருப்பதன் நோக்கமென்ன? அதனால் மின்வாரியத்திற்கு என்ன பயன் கிடைக்கிறது? என்ன அத்தியாவசியம்? அந்த இருப்புப் பாதையை மின்வாரியம் போக்குவரத்திற்கும் பயன்படுத்துகின்றதா என்பதை அறிய விரும்புகின்றேன்.

[1979 பிப்ரவரி 17

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த இருப்புப்பாதை மின்வாரியத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருந்து வருகிறது. சிமெண்டு, இரும்பு, ஸ்டீல், எம்.எஸ். சானல்கள், ஆங்கில்கள், கம்பிகள் போன்றவைகளை பசுமலை யிலிருந்து எடுத்துவர இது பயன்படுத்தப்பட்டு வருகிறது. இருப்புப்பாதை மூலம் அல்லாமல், சாலை மார்க்கமாக எடுத்துச் சென்றிருந்தால், மின் வாரியத்திற்கு இந்த இரண்டு ஆண்டுகளில் ரூ. 62,814 செலவிட நேரிட்டிருக்கும். இப்போது அது ரூ. 20,000 அளவிலே எடுத்துச் செல்ல வசதி ஏற்பட்டிருக்கிறது.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமயநல்லூர் அனல் மின்திட்டம் மூடப் பட்டதாக கூறப்பட்டிருக்கிறது. அங்கே இருந்த எந்திரங்கள் எல்லாம் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டனவா அல்லது விற்கப் பட்டனவா ? விற்கப்பட்டதென்றால் எந்த முறையில் விற்கப் பட்டது ? டெண்டர் மூலமாகவா அல்லது ஏலத்தின் மூலமாகவா? அதனால் சர்க்காருக்கு லாபமா, நஷ்டமா என்பதை அறிய விரும்பு கிறேன் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சமயநல்லூர் அனல் மின் திட்டம் மூடப்படவில்லை. ஏலம் போடப் பட்டது. அதனால் லாபமா, நஷ்டமா என்ற விவரங்கள் ஏற் கனவே சர்க்காரியா அறிக்கையிலே வெளிவந்துள்ளன. அதன்படி மின்வாரியத்திற்கு வரவேண்டிய போதுமான வருவாய் வர வில்லை. அதனால் மின்வாரியத்திற்கு இழப்பு ஏற்பட்டது. அந்த இழப்பு தகாத முறையில் ஏற்பட்டது என்ற விவரங்கள் ஏற் கனவே சர்க்காரியா அறிக்கையிலே வெளி வந்திருக்கிறது.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அங்குள்ள கட்டிடங்கள், மற்ற இடங்கள் எதற்காகப் பயன் படுத்தப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மின்வாரியத்தின் மற்றப் பணிகளுக்கு அந்த இடம் பயன்படுத்தப் பட்டு வருகிறது. அங்கே ஸ்டோர்ஸ், மற்றும் டிரான்ஸ்பார்மர் மெயின்டெனென்ஸ் பணிகள் நடைபெற்று வருகின்றது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், 'அடானமி பாடி' என்ற பெயரிலே தன்னிச்சையாக அரசைக்கூட கலக்காமல். அவர்களாகவே 105 இலட்சத்திற்கு ஆரம்பிக்கப்பட்டு, 59 லட்சத் திற்கு விற்று, இன்றைக்கு ஆரம்பிப்பதானால் 5 கோடி ரூபாய் செலவாகுமே? அந்த அடானமி பாடிக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தை மாற்றி, திருத்தியமைப்பதற்கு இந்தச் சர்க்கார் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1979 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல அந்த அனல் மின் நிலையம் 106 இலட்சம் ரூபாயில் அன்றைய தினம் நிறுவப்பட்டாலும், அதை ஏலமிட்ட தேதியில் கிட்டத்தட்ட 120 இலட்சம் பெறுமானமுள்ளது. ஆனால் ஏலத்திலே 59 இலட்சம் ரூபாய் கிடைத்திருக்கிறது. பொதுவாக, மின்வாரியம் புதிதாக மின் திட்டங்களை ஆரம்பிக்கின்றபோது இந்த அரசாங்கத்தின அனுமதியைக் கோருகிறது. ஆனால், மின்திட்டங்களை அவர்கள ஏலம் போடுகிறபோது அல்லது மூடுகிறபோது அல்லது விற்கிற போது அரசாங்கத்தின் அனுமதி பெறவேண்டுமென்ற நியதி இல்லை. அதற்கான சட்டமும் இல்லை. ஆகவே இதைப்பற்றி அரசாங்கம் தீவிர பரிசீலனை செய்து, மின்வாரியம் இத்தகைய காரியங்களை மேற்கொள்ளுகிறபோது அரசையும் கலந்துதான் செய்ய வேண்டுமென்ற ஒரு நிலையை உருவாக்குவதற்கு நிச்சயமாக பரிசீலனை செய்யும் என்பதையும், சுய ஆட்சி இந்த வகையில் பொருத்தம் இல்லாதது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நெய்வேலி இரண்டாவது மின் நிலையம்.

*வினா எண் 62—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நெய்வேலியில் இரண்டாவது மின் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இது மத்திய அரசு சம் பந்தப்பட்டது. 1978 பிப்ரவரி மாதத்தில் இரண்டாவது பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் வெட்டுவதற்கும், 630 மெகாவாட் திறனுள்ள இரண்டாவது அனல் மின் நிலையம் அமைப்பதற்கும் தேவையான ஒப்புதலை நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்திற்கு, மத்திய அரசு அனுப்பியுள்ளது. நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம் தற் போது திட்டத்தினை நிறைவேற்றுவதற்கான பணிகளை மேற் கொண்டுள்ளது.

திரு. மா. மணிமாறன் : நெய்வேலியில் இரண்டாவது சுரங்கத்தை வெட்ட வேண்டுமென்பது தமிழகத்தின் நீண்ட நெடுநாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. இந்தத் திட்டத்தை இப்போதாவது விரைந்து செயலாக்க முன் வருவார்களா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : நான் சொன்னது போல் பிப்ரவரி 1978-ல் இந்தத் திட்டத்திற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது மின் உற்பத்தியில் தன்னிறைவு பெற வேண்டுமென்று நினைக்கிற தமிழகம் இத்தகைய திட்டங்கள்

விரைவுபடுத்தப்பட வேண்டுமென்ற அடிப்படையைக் கொண்டு ஒரு குழுவை நம் அரசாங்கத்தில் அமைத்திருக்கிறார்கள். அதிலே தமிழ்நாட்டில் நிறைவேறுகிற நம்முடைய மின் திட்டங்கள், அதே போல் மத்திய சர்க்காரால் நிறைவேற்றப்படுகிற மின் உற்பத்தித் திட்டங்கள் அவைகளின் அதிகாரிகளைக் கொண்ட குழு என் தலைமையில் உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு மூன்று மாதத்திற்கு ஒரு தடவை கூடி எந்த அளவுக்கு அந்தப் பணிகள் விரைவுப்படுத்தப்பட வேண்டுமென்று கண்காணித்து வருகிறது. கல்பாக்கத்திலிருந்தும் நெய்வேலியிலிருந்தும் அதிகாரிகள் மத்திய அரசு ஒப்புதலோடு அந்தக் குழுவில் அங்கம் வகிக்கிறார்கள்.

<u>திரு. என். கிட்டப்பா</u> : தற்போது நெய்வேலியில் எவ்வளவு மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது? இரண்டாவது திட்டத்தின் கீழ் எத்தனை மெகாவாட் மின்சாரம் உற்பத்தித் திறன் கிடைக்க இருக்கிறது? அதற்கான செலவுத் தொகையை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்கிறதா அல்லது மாநில சர்க்காருக்கும் பங்கு உள்ளதா? இதனால் புதிதாக எவ்வளவு பேருக்கு வேலை கிடைக்க இருக்கிறது? 'சன்ஸ் ஆப் தி சாயில்' என்ற அடிப்படையில் நமது மாநிலத்தில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகமாகத் தர அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா?

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u> : இந்தத் திட்டம் முழுக்க முழுக்க மத்திய அரசுத் திட்டம். இந்தத் திட்டத்திற்குச் சுமார் 358.45 கோடி ரூபாய் செலவாகும். சுரங்கம் வெட்டுவதற்கு 144.47 கோடி ரூபாயும், அனல் மின் நிலையம் அமைப்பதற்கு 213.98 கோடி ரூபாயும் செலவாகும்; மாநில அரசு எந்த நிதியும் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்தத் திட்டத்தின் மூலம் 630 மெகாவாட் மின்சாரம் நமக்குக் கிடைக்கும். இதிலே எத்தனை பேர் பணியாற்றுவார்கள், அவர்கள் எவ்வாறு நியமிக்கப்படுவார்கள் என்பதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

<u>திரு. ரா. உமாநாத்</u> : ஒரு குழு அமைத்ததாகக் கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாநில அரசுத் திட்டங்களையும் மத்திய அரசுத் திட்டங்களையும் பற்றிப் பரிசீலிக்க மூன்று மாதத்திற்கு ஒரு தடவை கூடுவதாகச் சொன்னார்கள். முக்கியமாக இந்த நெய்வேலித் திட்டத்திற்கு சென்ட்ரல் கவர்ன்மெண்ட் சாங்க்ஷன் செய்திருப்பதால் அந்தக் குழு அவசரமாகக் கூடி இந்தத் திட்டத்தை விரைவு படுத்தி வேலையை ஆரம்பித்து மின்சாரத்தை உற்பத்தி செய்வது பற்றிய பணிகளை ஆரம்பிக்க ப்ரையாரிடி கொடுத்து செய்ய அரசாங்கம் முன்வருமா? 'சன்ஸ் ஆப் தி சாயில்' என்ற திட்டத்தை நண்பர் கிட்டப்பா அவர்கள் சொன்னார்கள். அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறதா?

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u> : கேள்வி நேரத்தில் கொள்கை அறிவிப்புகள் கூடாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் நன்கு அறிவார்கள். அந்தக் குழு 24-11-78 அன்று கூடியது. இந்த மின் உற்பத்தித் திட்டம் விரைவுபடுத்தப்பட்டால்தான் நாம் மின்வெட்டில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியும் என்ற நிலை நமக்கு இருக்கிறது. கேரளத்திலிருந்து கிடைக்கும் மின்சாரம் தொடர்ந்து கிடைக்கும் என்று சொல்வதற்கில்லை, அவர்களுடைய தேவையும் கூடிக் கொண்டிருக்கிறது. இரண்டாவது பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தை வெட்டுவதற்காகவும் மின் நிலையம் அமைப்பதற்காகவும் உலக அளவில் ஒப்பந்தப் புள்ளிகள் கேட்கப்பட்டுள்ளன. மண் ஆய்வு வேலைகள் முடிவுற்று மேற்கொண்டு அந்தப் பணிகள் நடைபெற்று வருவதாகக் குறிப்பிட்டார்கள், டாடா கலந்தறிவாளர்கள் (கன்சல்டன்ட்ஸ்) கலந்தறிவாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்திருக்கிறார்கள்.

[முற்பகல் 9.10.]

<u>திரு. செ. சிவசாமி</u> : தலைவர் அவர்களே, இன்றைக்குப் பத்திரிகையிலே பார்த்தால் 320 மெகாவாட் நெய்வேலியிலே கிடைப்பதன் காரணமாக மின்வெட்டு நிறுத்தப்பட்டுவிட்டது என்று அறிகிறோம். ஆனால் இதே நடவடிக்கையை சிறிது காலத்திற்கு முன்னாலேயே அரசு எடுத்து இருந்தால் இப்படிப்பட்ட மின்வெட்டு வந்திருக்காது என்று கருதுகிறேன். ஏன் அரசு அப்படிக் கவனம் செலுத்தவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u> : நெய்வேலியிலிருந்து 400 மெகாவாட் சாதாரணமாகக் கிடைத்து வருகிறது. ஆனால் திடீரென்று ஏற்பட்டுவிட்ட இயந்திரக் கோளாறினால் ஒருவாரமாக அந்த அளவிற்குக் கிடைக்கவில்லை, ஆகவே ஒரு மின்வெட்டு தற்காலிகமாக அமல்படுத்தப்பட்டது. மறுபடியும் இப்போது அந்த மெஷினை ரிப்பேர் செய்து அந்த அளவிற்கு 350 மெகாவாட் உற்பத்தியாகிக் கொண்டிருக்கின்றது. அதுபற்றி 41-வது விதியின் கீழ் ஒரு அறிக்கை இந்த மன்றத்திலே வர இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>கூட்டுறவுத் துறை நியாயவிலைக் கடைகள்.</u>

*வினா எண் 63—<u>திரு. எஸ். கணேசன்</u> : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நியாயவிலைக் கடைகளைக் கூட்டுறவுகளிடம் ஒதுக்குவது சாத்தியமில்லாத இடங்களில் படித்து வேலையில்லாதோர்க்கு ஒதுக்க மத்திய அரசு மாநில அரசுக்கு யோசனை கூறியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மத்திய அரசு, நுகர்பொருள் வழங்குதல் கூட்டுறவுத் துறையின் 27-8-77 நாளிட்ட கடிதத்தில் எந்த நியாயவிலைக் கடைகளை சிறப்பு பேரங்காடிகளின் கிளைகளுக்கோ அல்லது நுகர்வோர் கூட்டுறவுச் சங்கக் கிளைகளுக்கோ ஒதுக்க முடியவில்லையோ அங்கு மாநில அரசு நியாயவிலைக் கடைகளை அவைகளுக்காக வகுக்கும் விதிமுறைகளுக்கேற்பப் படித்து வேலை இல்லாதவர்களுக்கு அளிக்கலாம் என்று யோசனை கூறியுள்ளது.

(ஆ) மத்திய அரசு இத்திட்டத்திற்கு இந்திய மாநில வங்கி போதிய நிதியுதவி அளிக்க முன் வந்திருப்பதால் அதனை பயன்படுத்திக் கொள்ளலாம் எனவும் ஆலோசனை கூறியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மாநில வங்கி ரூ. 65,000 வரை கடனாக வழங்குகிறது.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவர்களே, படித்துவிட்டு வேலையில்லாதவர்களுக்கு அளிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் கேள்வியிலே பட்டதாரிகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே பட்டதாரிகளுக்கு அதிலே முன்னுரிமை வழங்கப்படுமா? அடுத்து, அந்தக் கடைகளிலே இப்போது பணியாற்றுகின்றவர்களுக்கு 100 ரூபாய் தான் சம்பளம் வழங்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது, அதைக்கூட்டிக் கொடுக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுவரையில் கூட்டுறவு அமைப்புக்களுடைய துணையோடு வேலை வாய்ப்பு நிறுவனங்களை அணுகி இதுகுறித்து விவரங்கள் சேகரித்த வகையில் இதுவரையில் படித்துவிட்டு வேலையில்லாத வாலிபர்கள் 95 பேர்கள் தான் இதற்கு முன்வந்திருக்கிறார்கள் என்பதைத் தங்கள் மூலமாக நான் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவர் அவர்களே, அரசு புதிதாகத் திறக்கும் நியாயவிலைக் கடைகளில் சேர்க்கப்படும் நபர்களுக்கு 100 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுவதாக மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார்கள், அது உண்மைதான். இப்படி 100 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறபோது அவர்களை 250 ரூபாய் டெபாசிட் கட்டவேண்டுமென்று சொல்கிறார்கள். அதன் காரணத்தால் அரிசன இளைஞர்கள், அரிசன வேலையில்லாத பட்டதாரிகள் கூட டெபாசிட் கட்டமுடியாமல் வேலைக்கே போகமுடியவில்லை. ஆகவே இந்த 250 ரூபாய் டெபாசிட் கட்டவேண்டும் என்பதை அரிசனங்களுக்குத் தள்ளுபடி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினருடைய மேலான யோசனையை அரசு பரிசீலிக்கும்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் விநியோகம் செய்யப்படுகின்ற பொருள்கள் என்ன என்ன விலைக்கு விற்கப்படவேண்டுமென்று அரசு ஏதாவது உத்திரவு அனுப்பியுள்ளதா? அப்படி அனுப்பியிருந்தால் என்ன என்ன பொருள்கள் என்ன என்ன விலைக்கு விற்கவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவரம் அறிய தனிக்கேள்வி போடுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த நியாய விலைக்கடைகளைத் தமிழகத்திலே உருவாக்குவதற்கு மத்திய அரசு உதவி செய்ய முன் வந்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அந்தத் தொகை எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா? இதுவரை நமது மாநில அரசு இதற்காக எவ்வளவு தொகை செலவிட்டிருக்கிறது அல்லது செலவிட உத்தேசித்திருக்கிறது என்பதை அறிய இயலுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, மத்திய அரசு இதனை ஒரு வேண்டுகோளாகத்தான் விட்டிருக்கிறது. எங்கெங்கு மாநில அரசு கூட்டுறவுத் துறையினால் செயல்படுத்த முடியவில்லையோ அங்கு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தலாம் என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறது. அப்படிக் கூட்டுறவுச் சங்கத்தினால் செயலாற்ற முடியவில்லை என்றால் அங்கு படித்து வேலையில்லாத வாலிபர்களுக்கு முன்னுரிமை கொடுக்கலாம் என்றும், அப்படி வேலையில்லாத படித்த வாலிபர்கள் முன்வந்து இந்தக் காரியத்தைச் செய்தால் அவர்களுக்கு ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா 65,000 ரூபாய் வரையிலே உதவி செய்யலாம் என்று மத்திய அரசு தகவலை அனுப்பியுள்ளது. மாநில அரசுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, ஒரு கிராமத்திற்கு ஒரு கடை என்ற முறையில் நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இரண்டு மைல்களுக்கு அப்பாலுள்ள ஒரே கிராமத்தைத் தவிர வேறு கிராமங்களில் இந்தத் திட்டத்தை வேலையில்லாத படித்த வாலிபர்களுக்கு அதிகரித்துக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் அருள்கூர்ந்து மீண்டும் தன் கேள்வியைப் போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[1979 பிப்ரவரி 17

திரு. கே. உச்சி ; தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தைப் ரெவின்யூ கிராமத்திற்கு ஒரு கடை பொறுத்தவரையில் ஒரு இரண்டு மைல்களுக்கு என்பதை மாற்றி, அதற்கு அருகாமையில் மலைப்பகுதியாக இருப்பதால் அப்பாலுள்ள ஊர்களுக்கு, வாலிபர் இந்தத் திட்டத்தை அங்குள்ள படித்த வேலையில்லாத என்பதை அறிய விரும்பு களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்பொழுது ரெவின்யூ கிராம அடிப்படை என்ற வகையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற நேரத் திலேயே 'வயபிலிட்டி' என்ற அதை அடைவதற்கே சில நாட் களாகும் என்ற அனுபவம் ஏற்பட்டிருக்கின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய யோசனை மீண்டும் ஆலோசிக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, 'கடை திறந்தேன், கொள்வாரில்லை, கட்டிக் கொண்டேன்' என்று இராமலிங்க அடிகள் சொன்னமாதிரி இல்லாமல், தொடர்ந்து இந்தக் கடைகள் நடக்கின்ற முறையில் நடவடிக்கை எடுப்பதோடு, அந்தக் கடைகளில் பணியாற்றுகின்ற வர்களுக்கு 100 ரூபாய்தான் ஊதியம் கொடுக்கப்படுகிறது, இதை வைத்துக்கொண்டு அவர்கள் வாழ முடியுமா, ஜீவிக்க முடியுமா என்று பார்த்து, குறைந்த பட்சம் 250 ரூபாயாவது அவர்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா, அதை ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மேலான ஆலோசனைகள் அனுதாபத்தோடு நிச்சயம் பரிசீலிக்கப்படும்.

காய்கறி விற்பனை நிலையம்

*வினா எண் 64— திரு. போ. கோபாலன்: மாண்புமிகு கூட்டுற வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா:

உதகமண்டலம் மார்க்கெட்டில் கூட்டுறவு சங்கத்தின் மூலம் காய்கறி விற்பனை நிலையம் அமைக்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : நீலகிரி மாவட்டத்தில் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம், நீலகிரி காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகிய இரண்டும் மலையில் விளையும் காய்கறிகளை விற்பனை செய்து வருகின்றன. நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் உதகை

1979 பிப்ரவரி 17]

சந்தையில் ஏற்கெனவே ஒரு காய்கறி விற்பனை நிலையம் நடத்தி வருகிறது. புதிதாக காய்கறி விற்பனை நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை. மேலும் நீலகிரி காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் 6·01 இலட்சம் செலவில் அலுவலகத்துடன் இணைந்த ஏல விற்பனை நிலையம் ஒன்றை உதக மண்டலத்தில் தற்பொழுது கட்டியிருக்கிறது.

திரு. கே. உச்சி: தலைவரவர்களே, ஏற்கனவே அந்தச் சங்கத்தில் நடந்து கொண்டிருக்கும் கட்டிடம் மிகவும் இடைஞ்சலான பகுதியில் இருப்பதாலும், அதைப் புதிய இடத் திற்கு மாற்றினால் மக்களுக்கு வாங்குவதற்கும், தாங்கள் கொண்டு வரும் காய்கறிகளை விற்பதற்கும் வசதியாக இருக்கும். ஆகவே. புதிய திட்டத்தை மறுபடியும் பரிசிலனை செய்ய அரசு முன்வருமா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அண்மைக்காலத்தில் நீலகிரி மலையிலே ஏற்பட்டுள்ள இயற்கையின் உற்பாதத்தின் காரணமாகச் சேதத் திற்குள்ளாக்கப்பட்ட ஒரு நிறுவனம் கூட்டுறவு நிறுவனம். அதனை நானே நேரில் சென்று பார்க்கின்ற வாய்ப்பு ஏற்பட்டது. எனவே, நிச்சயமாக இந்த அரசு அதனைத் திருத்தி சீரமைக்க என்னென்ன உரிய நடவடிக்கைகளை உரிய நேரத்தில் எடுக்க வேண்டுமோ அதனை விரைவிலே நிச்சயமாக எடுக்கும்.

(முற்பகல் 9.20)

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவரவர்களே, உதக மண்டலத்திலுள்ள கூட்டுறவு விற்பனை சங்கத்தின் மூலம் காய்கறிக்கடைகள் மேலும் அமைக்கப்படாது என்று அமைச் சரவர்கள் கூறினார்கள். கொடைக்கானல் பகுதியிலாவது அம்மாதிரி கூட்டுறவுக் காய்கறி கடைகள் அமைக்கும் திட்டம் ஏதேனும் உண்டா? காய்கறிகளுக்குத் தற்பொழுது பெரும் பகுதிப் பெயர்கள் ஆங்கிலத்திலேயே இருக்கின்றன. ஆகவே, அவைகளை தமிழில் மாற்றியமைக்க அரசு ஏதேனும் உத்தேசித்துக் கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, கொடைக்கானல் திருநகரத்தின் கூட்டுறவு விற்பனை நிலையத்தின் வாயிலாக காய்கறிகள் விற்க ஏற்பாடு செய்யப்படுமா என்ற விவரத்தை மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டிருக்கிறார்கள். தற்பொழுது நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் வாயிலாக மட்டும் அல்ல, நீலகிரி காய்கறி உற்பத்தி யாளர்கள் விற்பனைச் சங்கத்தின் வாயிலாக மட்டுமல்ல, மேலும்

4 இடங்களில் தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
1. தூத்துக்குடி, 2. திருச்சி, 3. கொடைக்கானல், 4. திண்டுக்கல்
ஆகிய கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுடைய விற்பனை
வாயிலாகவும் காய்கறி விற்பனை தற்பொழுதே நடைபெற்றுக்
கொண்டிருக்கிறது. கொடைக்கானல் கூட்டுறவு விற்பனைச்
சங்கத்தின் வாயிலாக உருளைக் கிழங்கு, ரூ. 4,78,000 மதிப்
புள்ள வகையிலே இன்றையதினம் விற்பனை செய்யப்பட்டு
வருகிறது. அதனைப்போல், திண்டுக்கல் விற்பனை நிலையத்திலே
வெங்காயம் ரூ.35,51,000-க்கு விற்பனை செய்யப்பட்டு
வருகிறது. திருச்சி கூட்டுறவு விற்பனை நிலையத்திலே
வெங்காயம் ஏறத்தாழ ரூ. 1,00,000-க்கு விற்பனை செய்யப்
பட்டு வருகிறது. தூத்துக்குடி கூட்டுறவு விற்பனை நிலையத்தில்
வெங்காயம் ஏறத்தாழ ரூ.6,000 அளவுக்கு விற்பனைக்கு அந்த
முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. எனவே, கொடைக்கானல்
கூட்டுறவு விற்பனை நிலையத்திலே தற்பொழுது ரூ. 4,78,000
அளவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது என்பதை மாண்பு
மிகு உறுப்பினர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக்
கொண்டு வருகிறேன்.

தண்டையார்பேட்டை பகுதியில் நில ஒப்படை

*வினா எண் 65—திரு. சு. பாலன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை 27-வது வட்டம், தண்டையார்பேட்டை யில் காத்பாடா அட்டிங் கிரவுண்ட் ஆர். எஸ். 1802/3, சிதம்பரம் நகரில் சர்க்காருக்குச் சொந்தமான ஆர். எஸ். நெம்பர் 1802 நிலத்தில் எத்தனை அரிசன குடும்பங்கள் வாழ்கின்றனர்?

(ஆ) அவர்கள் எவ்வளவு காலம் அங்கு வாழ்கின்றார்கள்?

(இ) அவர்கள் வாழும் அந்த இடத்திற்கு ஏதாகிலும் வரி அல்லது வாடகை வசூல் செய்யப்படுகிறதா?

(ஈ) இவர்கள் வாழும் இந்த இடத்தைப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென கோரிக்கை வந்துள்ளதா?

(உ) ஆம் எனில் அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டை கிராமம், ஆர். எஸ். நெ.1802/3ல் காத்பாடா நகரில் 57 அரிசன குடும்பங்களும் சிதம்பரம் நகரில் 3 அரிசன குடும்பங்களும் வாழ்கின்றனர்.

(ஆ) அவர்கள் 40 வருடங்களுக்கு மேலாக அங்கு வாழ்கிறார்கள்.

(இ) சென்னை மாநகராட்சியினால் சொத்து வரியும், வருவாய்த்துறையினரால் (Full Competitive Rent) குத்தகைத் தொகையும் வசூலிக்கப்படுகிறது.

(ஈ) சிதம்பர நகர், காத்பாடா நகரிலுள்ள ஆக்கிரமிப்பாளர்கள் அந்நிலத்தினை ஒப்படை செய்வதற்காக விண்ணப்பித்துள்ளார்கள்.

(உ) சிதம்பரம் நகர், காத்பாடா ஆகிய இடங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துவதற்காக, குடிசைமாற்று வாரியத்தின் ஒப்புதலையும் சென்னை பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்தின் இசைவையும் பெற கோரப்பட்டுள்ளது.

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியில் வாழ்கின்ற ஒரு சிலருக்கு ஏற்கனவே பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்குப் பட்டா வழங்காத காரணத்தால், அவர்கள் எந்தவிதத்திலும் தங்கள் இல்லத்தைப் பழுது செய்ய முடியவில்லை. அதனால், உடனடியாகப் பட்டா வழங்கவும், அதேபோல் சென்னையிலே உள்ள மற்ற பகுதிகளில் குடிசை மாற்று வாரியத் திட்டத்திற்கு உட்படாத பகுதிகளில், பட்டா வழங்க அரசு முன் வருமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, இப்படி சென்னையைப் பொறுத்தவரையிலும், மதுரையைப் பொறுத்தவரையிலும் அரசு நிலங்களுக்குப் பட்டா வழங்கக் கூடாது என்று 1971-ம் ஆண்டு இங்கே அரசால் அறிவிக்கப் பட்டு இருக்கிறது. அதற்குப் பிறகு அப்படிச் செய்வது சரியல்ல என்று சொல்லி 1973-ம் ஆண்டு இங்கே இருக்கிற குடிசை மாற்று வாரியத்தின் அனுமதி பெற்று வேண்டுமானால் பட்டா கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இதற்குக் காரணம், இங்கே இருக்கும் குடிசைகளை மாற்றி அரசே கட்டிடம் கட்டிக்கொடுத்து வருவதால், அரசு நிலங்களை முதலில் குடிசை மாற்று வாரியத்திற்குத்தான் கொடுக்க வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. ஆகவே குடிசை மாற்று வாரியத்தின் அனுமதி பெற்று எங்கெங்கே பட்டா கொடுக்க வேண்டுமோ அவைகளைக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

[1979 பிப்வரி 17

ராதாபுரம் கால்வாய் பாசனப்பகுதியில் வரி விதிப்பு

*வினா எண். 66—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிற்றாறு பட்டினங்கால் திட்டத்தில் திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதியிலுள்ள ராதாபுரம் கால்வாய் பாசனப் பகுதிகளில் வசூலிக்கும் மொத்த நில வரி, தல வரி, முன்னேற்ற வரி இவைகளைக் குறைக்கக் கோரி அரசுக்கு பொது மக்கள் முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் பாசனக் கட்டண விகிதங்களைச் சீரமைக்க ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் அறிக்கை கிடைத்தபின் இறுதி முடிவு எடுக்கப்படும்.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவரவர்களே, ராதாபுரம் கால்வாய்த் திட்டத்தில் ஏற்கனவே குமரி மாவட்டம் பேச்சிப்பாறை தண்ணீர் விடப்படுகிறது. அப்படி இருக்கிற காரணத்தால் ஒரு ஆண்டில் 10 அல்லது 15 நாட்களுக்குத்தான் அந்தக் கால்வாயில் தண்ணீர் செல்கிறது. அப்படி இருந்த போதிலும், நில வரி, தல வரி, தனி வரி என்று ஏக்கருக்கு ரூ.100-க்கும் குறையாமல் அங்கே வசூலிக்கும் நிலைமை இருப்பதால் நீண்டகாலமாக அந்தப் பகுதி மக்கள் இன்னலுக்கு ஆளாகி இருக்கிறார்கள் என்பதை மனதில் கொண்டு உடனடியாக அதை நிறுத்துவதற்கு, குழு அறிக்கை தர காலதாமதம் ஆகும் என்கிற நிலைமையையும் கருத்தில் கொண்டு அரசு தனி ஆணை பிறப்பிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, ஏற்கனவே வருவாய் வாரியத்தின் நிலை ஆணை இருக்கிறது. ஆணை எண் 13-1 (1) மற்றும் 13-12 அந்த ஆணையின்படி வறட்சி காலத்தில் அல்லது தண்ணீர் விடாத காலத்தில் வரி வசூலிக்கக் கூடாது அல்லது தள்ளி வைக்க வேண்டும். தண்ணீர் குறைவாகப் போனாலும், அப்படி குறைவாகப் போகிறபோது வசூலிக்கக்கூடாது என்று ஆணை இருக்கிறது. அந்த ஆணைப்படி வசூலிக்கக்கூடாது என்று உத்தரவு அங்கே சொல்லப்பட்டு இருக்கிறது. அது மட்டுமல்ல, ராதாபுரத்தைப் பொறுத்த நிலையில் எல்லா இடங்களிலும் எல்லா வரியையும் வசூலிக்க வில்லை என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 பிப்ரவரி 17]

திரு. யா. சை. மு. யூசுப்: தலைவரவர்களே, ராதாபுரத்தில் வரி வசூல் செய்யப்படுவதாக நான் சொல்லவில்லை. என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், அந்தப் பகுதியில் நிர்ணயிக்கப் பட்டுள்ள வரி மிகவும் அதிகமாக இருக்கிறது. மேலும் அங்கே நில வரி, மேல் வரி ஆகியவற்றைக் கணக்கிட்டு தல வரி வசூலிக் கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதி மக்கள் தல வரி அதிகமாக கட்டவேண்டியிருப்பதால் ஏறத்தாழ ஏக்கருக்கு ரூ.100 க்குமேல் செலுத்த வேண்டி இருக்கிறது, தல வரி இவ்வளவு என்று நிர்ண யித்தால் நல்லது. 3—4 ஆண்டுகளாக வசூலிக்கப்படாமல் இருப்பது இப்போது அவற்றை சேர்த்து வசூலித்தால் அது விவசாயிகளை மிகவும் பாதிக்கும். ஆகவே, அதையும் கருத்தில் கொண்டு அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, அந்தப் பகுதியில் நிலவரி மிகவும் குறைவாக இருக்கிறது. ஒரு ஏக்கருக்கு 1 ரூபாய்தான் நில வரி. மற்ற வரிகள் எதுவும் அங்கே வசூலிக்கப்படவில்லை. நீர் போதுமான அளவிற்குப் பாசனத்திற்குக் கொடுத்தால்தான் வரி வசூலிக்கப்படும். தண்ணீர் கொடுக்கப்படாத நிலத்திற்கு வரி வசூலிக்கப்பட மாட்டாது என்கிற உத்திரவாதத்தை நான் இங்கே தருகிறேன்.

[முற்பகல் 9-30]

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப் பினர் யூசுப் அவர்கள் கூறியதைப்போல பட்டணங்கால் பாசனத்தில் இராதாபுரம், கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற சில பகுதிகள்—அங்கெல்லாம் இம்மாதிரியாக வரி வசூல் செய்யப்படுகிறது. அதிலும் குறிப்பாக 84, 85-ம் ஆண்டுகளுக்கு 'அடிஷனல் வெட் அசெஸ்மெண்ட், அடிஷனல் வாட்டர் செஸ்' போன்ற பாக்கிகளை எல்லாம் சேர்த்து 86-ம் ஆண்டில் வசூலிக்க முடிவு செய்திருப்பதாக அறிகிறோம். பாக்கிகளை வசூல் செய்வது என்றால் அது நியாயமானது அல்ல. ஆகவே, பாக்கிகளை வசூல் செய்வதை நிறுத்தி வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, 84, 85 ஆண்டு என்று உறுப்பினர் தவறாகச் சொல்லிவிட்டார்கள். அது 84-ம் பசலி ஆண்டு, 85-ம் பசலி ஆண்டு என்று கருதுகிறேன். அவைகளுக்கு எந்தெந்த ஆண்டு களில் வரி தள்ளி வைக்கப்பட்டிருக்கிறதோ அவை எல்லா வற்றையும் இப்போது வசூலிக்கக்கூடாது என்று நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : அடிஷனல் வெட் அசெஸ்மென்ட், அடிஷனல் வாட்டர் செஸ்—இந்த இரண்டு வரிகளையும் இப் போதுதான் அந்த பகுதியில் புகுத்தியிருக்கிறார்கள் . ஆகவே,

அந்த ஆணையில் ஏற்கனவே உள்ள 84, 85 பசலி ஆண்டுகளுக்கும் சேர்த்து வசூல் செய்ய வேண்டுமென்ற கட்டாயம் இருக்கிறது. அதனால் பாக்கிகளை வசூல் செய்வதை நிறுத்தி வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, புதிதாக எப்போது வந்தது என்பது அவர்களுக்குத் தெரியும். புதிதாக என்று சொல்வது அரசினுடைய எமர்ஜன்சி காலத்தில் வந்தது. அவைகள் எல்லாம் அந்த ஆண்டுக்கு மேல் வசூல் செய்யப்படாமல் பல மாவட்டங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. இப்போதும் அவைகளை ஆராய்ந்து பார்த்து, அதில் எந்தக் குறை இருந்தாலும் குறைகளை நிவர்த்தி செய்து வசூல் செய்ய ஏற்பாடு செய்கிறேன்.

சமயபுரம் மாரியம்மன் கோவில் தேர்

*வினா எண். 67— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயபுரம் மாரியம்மனுக்கு ''தங்கத் தேர்'' அமைக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) அரசு இப்பணிக்கு மான்யம் ஏதேனும் கொடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) ஆம்

(ஆ) ரூ. 4,34,104/-

(இ) இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, ஏரோட்டும் மக்கள் எல்லாம் ஏங்கித் தவிக்கையிலே தங்கத் தேரோட்டம் தேவைதானா? அதிலும் தங்க விலையைப் பார்த்தால் தாலிக்குக்கூட தங்கம் வாங்க முடியாத சூழ்நிலையில் தேருக்கு தங்கம் அளிக்க அரசு அனுமதிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறதா? அரசுதான் அதை அனுமதிக்க வேண்டுமென்றால் அதை நிறுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட கோயில் திருப்பணிகளுக்கு அரசு மானியம் வழங்குகிறபோதுதான் அனுமதி என்ற பிரச்சனை எழுகிறது. இது அரசு மானியத்தில் செய்யப்படுவதில்லை. பொதுமக்கள், பக்தர்கள்

அவர்களுடைய விருப்பத்தின் பேரில் காணிக்கையாகத் தருகின்ற நிதியிலிருந்து இத்தகைய காரியங்கள் செய்யப்படுகின்றன என்பதால் அரசுக்கு அதிலே தலையிட அதிகாரம் இல்லை.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சமயபுரத்தில் இருக்கிற மாரியம்மனுக்கு தங்கத் தேர் கட்டுவது பற்றி சொல்லியிருக்கிறார்கள். அந்த சமயபுரம் கோயில் நிர்வாகத்தோடு அதன் அருகாமையில் பள்ளிகொண்டு இருக்கிற ஸ்ரீரங்கம் ஆலயமும் சேர்ந்திருக்கிறது. அந்த இரண்டு ஆலயங்களின் நிர்வாகத்தையும் தனித்தனியாகப் பிரிக்கிற குறிப்பு ஏதாவது அரசின் பரிசிலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, நீண்ட காலத்திற்கு முன்பாக ஸ்ரீரங்கம், சமயபுரம் ஆலயங்களின் நிர்வாகம் இணைந்திருக்கிறது. ஆனால் இப்போது இரண்டு நிர்வாகத்தையும் தனித்தனியாகப் பிரிக்க வேண்டுமென்ற வேண்டுகோள் அந்தப் பகுதி மக்களிடமிருந்து அரசுக்கு வந்திருக்கிறது. அதையொட்டி அரசு ஆணைமூலம் நிர்வாகத்தைப் பிரிக்க முடியாது. காரணம் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒன்றின் மூலம் அந்த கோயில் நிர்வாகம் இணைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அறநிலையத் துறை நீதிமன்றத்தின் மூலம் விண்ணப்பித்து இந்த இரண்டு ஆலயங்களின் நிர்வாகத்தையும் பிரிப்பதற்கு முயற்சிக்கலாம் என்று அரசு அறிவுரை வழங்கியிருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, குத்தகைப் பாக்கியினால் உழுகிறவனுக்கு ஊதியம் கூடக் கொடுக்க முடியாமல் போகிறது என்று அடிக்கடி நம்முடைய முதலமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் சொல்லிக் கொண்டிருக்கும்போது சட்டப்படி தலையிட முடியாததினால் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். ஆஸ்பத்திரி கட்டுவதற்கு அதிலிருந்து செலவுக்குப் பணம் கொடுங்கள் என்று வேண்டுகோள் விட்டிருக்கிறார்கள். நான் கேட்கிறேன், இந்த சாமிக்கு எதற்குத் தங்கத் தேர்? அதில் ஏறினால்தான் இழுக்குமா? மரத் தேரில் உட்கார்ந்தால் தேர் உருளாதா? அல்லது உட்கார முடியாதா? ஆகவே, இது சட்டப் பிரச்சனை அல்ல. கோடிக்கணக்கான மக்கள் சொத்து அங்கே இருக்கிறபோது சட்டப்படி இல்லாவிட்டாலும் கூட, அமைச்சர் அவர்கள் அரசாங்கத்தின் சார்பாக இந்த ட்ரஸ்டிகளை அழைத்து, பேசி, இந்தமாதிரியான ஊதாரித்தனமான செலவுகள் எல்லாம் கூடாது என்று 'டிரக்ஷன்ஸ்' கொடுக்கக் கூடாதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, நான் முன்னாலே சொன்ன பதிலுக்குத் தொடர்பாகத்தான் இந்தக் கேள்வியும் அமைந்திருக்கிறது. ஆகவே அந்தப் பதிலிலேயே இதற்கும் பதில் இருக்கிறது. குறிப்பாக இந்தக் கோயிலைப் பொறுத்தவரை அங்கே பணியாற்றுகிற ஊழியர்களுக்கு சம்பள

பாக்கி என்பது கிடையாது. காரணம் என்னவென்றால் இந்த ஆலயம் கொஞ்சம் வளமாக இருக்கிறது. பக்தர்களுடைய பார்வை இந்த ஆலயத்தின் மீது அதிகமாகச் செலுத்தப்படுகிறது. மேலும் பக்தர்கள் விரும்பி காணிக்கை செலுத்தி இப்படிப்பட்ட ஒரு தங்கத் தேர் வேண்டும் என்று விரும்புகிற உரிமை அவர்களுக்கு இருக்கிறது. அதைச் செய்கிற உரிமையும் அவர்களுக்கு இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் போன்றவர்கள் அந்தப் பகுதிக்குச் சென்று இப்படிப்பட்ட தங்கத் தேர்களுக்குச் செலவிடும் பணத்தை மக்களுக்குச் செலவு செய்யலாம் என்ற ஒரு பிரச்சாரத்தை செய்து அவர்களைத் திருத்துவார்களேயானால் நல்லது (குறுக்கீடு) அதை நாங்களும் செய்து கொண்டுதான் இருக்கிறோம், ஆனால் அமைச்சர் என்ற முறையிலே அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு நாங்கள் பொறுப்பேற்றுக் கொண்டு இங்கே இருக்கிறோம். சிறுபான்மை மக்களாக இருந்தாலும், பெரும்பான்மை மக்களாக இருந்தாலும் அவர்களுடைய உணர்ச்சிகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற உறுதிமொழியை எடுத்துக்கொண்டு இங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். ஆகவே அமைச்சர் என்ற முறையில் நாங்கள் செய்ய முடியாததை தயவுசெய்து கம்யூனிஸ்ட் கட்சியைப் போன்ற கட்சியிலே இருக்கிறவர்கள் இந்தப் பணியிலே ஈடுபட்டு அவர்களைத் திருத்துவது பொருத்தமாக இருக்கும். (குறுக்கீடு) நாங்களும் இந்தப் பிரச்சாரத்தைச் செய்து கொண்டுதானிருக்கிறோம் என்பது கடந்த நாற்பதாண்டு காலமாகவே இந்த நாட்டு மக்களுக்குத் தெரியும். ஆகவே இந்த மாதிரி காரியங்களிலே நண்பர் திரு. உமாநாத் போன்றவர்கள் ஈடுபடுவதுதான் பொருத்தம் என்று நான் கருதுகிறேன். அப்போது அது பலனளிக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவரவர்களே, வைதிக மனப்பான்மை கொண்டவர்கள் அவர்களாகவே தங்களுடைய பக்தியைக் காட்டுவதற்கு இப்படி தங்கங்களை அளிக்கின்ற இந்தக் காரியத்தை அதிகமாக ஊக்குவிக்காமல் அவர்களிடம் இருக்கின்ற தங்கம் முழுவதையும் அரசு பொறுப்பில் எடுத்துக் கொண்டுவிடுவதற்கு அரசிடம் ஏதாவது செயற்குறிப்பு வைத்து இருக்கிறதா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, நான் முன்னாலே சொன்ன விடைதான் இதற்கும் பொருந்தும் என்று நான் நினைக்கிறேன். அரசாங்கத்தால் இந்தத் தங்கத்தை எல்லாம் பறிமுதல் செய்ய முடியாது. இது இந்திய அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு நடைபெறுகிற விஷயம். ஆகவே சட்டப்படிதான் காரியங்கள் நடைபெற முடியும்.

திரு. ர. ஜெபமணி: சபாநாயகர் அவர்களே, ஆஸ்திகர்களுடைய மனம் புண்படக் கூடாது என்று சொன்னார்கள். யாராவது இறந்துவிட்டாலோ சமாதி கட்டுவதற்கு கோடிக் கணக்கில் செலவிடுகிறோம். அப்படியிருக்க பூஜை செய்கின்ற கடவுளுக்கு, இந்த நாட்டு மக்களுடைய பக்தியைக் காட்டுகின்ற வகையில் ஏன் இந்த மாதிரிச் செய்யக் கூடாது? உங்களுக்கு வேண்டுமானால் பக்தி இல்லாமல் இருக்கலாம். ஆனால் இங்கே இருக்கக்கூடிய கோடிக்கணக்கான மக்களுடைய உள்ளத்தைப் புண்படுத்தாத வகையிலே ஆவன செய்யப்படுமா என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் என்ன சொல்கிறீர்கள், தங்கத் தேர் விட வேண்டும் என்கிறீர்களா, அல்லது வைரத்தேர் விட வேண்டும் என்கிறீர்களா, அல்லது வேண்டாம் என்று சொல்கிறீர்களா, விளக்கமாகக் கேளுங்கள்.

திரு. ர. ஜெபமணி: நான் சொல்வது என்னவென்றால் பக்தர்களுடைய எண்ணத்தில் குறுக்கிட வேண்டாம். அப்படி குறுக்கிடாமல் இருக்க அரசு முயற்சிக்குமா என்று தான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, பக்தர்களுடைய விருப்பத்தில் நாங்கள் சட்டபூர்வமாகவோ அல்லது வலிந்தோ அல்லது வேறு வகையிலோ அல்லது அதிகாரத்தைப் பயன்படுத்தியோ குறுக்கிட முடியாது என்று நான் முன்னாலேயே தெரிவித்திருக்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, இன்றைக்கு நடைபெறுகிற இந்த சர்க்கார் சுயமரியாதையின் தொடர்ச்சி என்று நான் கருதுகிறேன். ஆண்டவனை வழிபடுகின்ற இந்த முறை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டு இருக்கிறதே. அதைக் குறைப்பதற்கு இந்த ஆட்சியிடம் வழிவகை ஏதாவது உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, கடந்த காலத்திலே நடந்த 9 ஆண்டுக்கால ஆட்சியும் பகுத்தறிவு இயக்கத் தொடர்புள்ள ஆட்சிதான் என்று கருதுகிறேன். அவர்கள் அப்படி ஏதாவது முயற்சி எடுத்தார்களா என்று நான் துருவித் துருவிப் பார்த்தேன். அப்படி ஆளைப்பட்டவர்களாலேயே செய்ய முடியவில்லையே, சாமானியமான, என்னைப் போன்றவர்கள் என்ன செய்ய முடியும். எங்களாலே இதிலே எப்படித் தலையிட முடியும். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் போன்றவர்கள் இந்த முயற்சியிலே ஈடுபட

வேண்டும். அவர் சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையிலே இல்லாவிட்டாலும் ஒரு கட்சியின் உறுப்பினர் என்ற முறையிலே இந்தப் பிரச்சாரத்திலே தீவிரமாக ஈடுபட்டால் அவர்கள் வேறு காரியங்களிலே ஈடுபடுவதாவது கொஞ்சம் குறையும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 9·40]

திரு. வி. கே. கோதண்டராமன் : பக்தர்கள் எப்போது திருந்துவார்கள் என்பது வேறு விஷயம். திருந்தக் கூடிய காலம் கண்டிப்பாக வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் அனைவருக்கும் சேர்த்து திரு. உமாநாத் அவர்கள் கேட்டுவிட்டார்கள். நேரம் இல்லை, எட்டு கேள்விகளுக்கு 40 நிமிடங்களாகிவிட்டன.

திரு. வி. கே. கோதண்டராமன் : மிகப் பாதுகாப்போடு கோவில்களில் இருக்கக்கூடிய நகைகள், சிலைகள் உட்பட, ஆண்டவன் உட்பட, ஆண்டவன் கழுத்தில் இருக்கிற தங்க நகைகள் உட்பட, அவை வைரமாக இருந்தாலும்சரி அல்லது தங்கமாக இருந்தாலும் சரி தினந்தோறும் திருட்டுப்போய்க் கொண்டிருக்கிறது. வறுமை மேலும் மேலும் வளர வளர இது தான் நடக்கும். ஆக, இந்தத் தங்கத் தேரை எங்கே வைக்கப் போகிறீர்கள்? சிலைகளைத் திருடுபவர்கள், நகைகளைத் திருடுபவர்கள் இதை விட்டு வைப்பார்களா என்பதைச் சுட்டிக்காட்டியாவது இந்தத் தங்கத் தேர் அவசியந்தானா என்பதை எடுத்துச் சொல்வதற்கு அமைச்சர் அவர்கள் தைரியமாக முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இதற்கு தைரியம் ஒன்றும் தேவையில்லை. சட்ட நிபந்தனைகளுக்கு, அதன் விதிகளுக்குட்பட்டு நாம் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம், அதற்கு நாம் பணிந்தேயாக வேண்டும். சட்டத்தின் முன்னால் எல்லோரும் சமம் என்றுதான் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பல நேரங்களில் மிகவும் காரசாரமாக விவாதிக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் பக்தர்களையும், கடவுள் மீது நம்பிக்கை உள்ளவர்களையும், அதிலே நம்பிக்கையற்றவர்களையும் சமமாக பாவிக்க வேண்டியதுதானே ஒரு ஆட்சியின் கடமை. ஆகவே நகைகள் திருட்டுப் போகின்றன அல்லது வேறு சில பண்டங்கள் திருட்டுப் போகின்றன என்பதையொட்டி இந்தத் தேரை நீங்கள் செய்யவேண்டாம் என்று அறிவுரை வழங்க முடியாது. ஆணையிட முடியாது. ஆனால் தாராளமாக பிரசாரம் செய்யலாம், அதை யாரும் தடுக்கமுடியாது. ஆனால் தேரை அவ்வளவு சுலபமாக திருடமுடியாது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னையில் காமராஜர் நினைவு இல்லம்.

*வினா எண். 68.....

திரு. என். கிட்டப்பா,
திரு. பெ. ஆண்டி அம்பலம்,
திரு. துரை முத்துசாமி,
திரு. நா. சுந்தரராஜ்,
திரு. சோ. பாலகிருஷ்ணன்,
திரு. செ. ந. பழனிச்சாமி,
திரு. ஓ. சுப்பிரமணியன்,
திரு. ஓ. சோ. வேலுச்சாமி:

மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் உள்ள காமராசர் இல்லத்தை அவரது நினைவுச்சின்னமாக்க இந்த அரசு திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : சென்னையில் அமரர் காமராஜ் அவர்கள் வாழ்ந்த இல்லம் காமராஜ் நினைவு இல்லமாக 15-7-78 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் இல்லம் நினைவுச்சின்னமாகத் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் மராட்டிய மண்டலத்தில் உத்தமர் காந்தியார் அவர்கள் வாழ்ந்த இடம் நினைவுச்சின்னமாக திறந்து வைக்கப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பார்த்திருப்பார்கள். அதில் காந்தியார் அவர்களது வாழ்க்கையில் நடைபெற்ற போராட்டங்கள், ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடத்திய போராட்டங்கள், அறப்போராட்டங்கள் அத்தனையும் சிறந்த முறையில் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் பெருந்தலைவர் காமராஜ் நினைவுச் சின்னத்தை நான் பார்த்தபோது—நன்றாக இல்லை என்று சொல்லவில்லை—அந்த அளவிற்கு சிறப்பாக அமையவில்லை. ஆகவே மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அதில் தனிக் கவனம் செலுத்தி பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் நினைவாலயத்தை மேலும் சிறப்பாக உருவாக்குவதற்கு, இன்னும் எவ்வளவோ பேர்கள் அங்கு சென்று காமராஜ் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை நேரடியாகத் தெரிந்துகொள்வதுபோல் அமைத்துக் கொடுக்க வழிவகை காண முன்வருவார்களா? இன்னொன்று, தனிப்பட்ட முறையில் வருத்தத்தோடு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. என். கிட்டப்பா: பெருந்தலைவர் காமராஜ் அவர்களோடு பழகிய பல முக்கியத் தலைவர்களின் படங்கள், குறிப்பாக நமது முதல் அமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களைப் போன்றவர்கள், ராஜாஜி போன்றவர்கள், தந்தை பெரியார் போன்றவர்கள் படங்கள் எல்லாம் அங்கே மாட்டப்பட்டிருக்கின்றன. என்ன காரணத்தாலோ எங்கள் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் படம் ஏதோ ஒரு மூலையில் மாட்டப்பட்டிருக்கிறது. மூலையில் மாட்டப்பட்டிருந்தாலும், அதற்கு ஒரு தகுதியான இடத்தைத் தரவேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டன் என்ற முறையில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. கிட்டப்பா அவர்கள் காந்தியார் அவர்களுக்கு நினைவுச் சின்னத்தை சிறப்பாக வைத்திருப்பதுபோல் இங்கும் வைக்கப்பட வேண்டும் என்று ஏன் பீடிகை போட்டார்கள் என்பதை கேள்வியின் இரண்டாவது பகுதியிலிருந்து தெரிந்து கொள்ள முடிந்தது. நன்றி. இந்த அரசு காமராஜ் அவர்களது நினைவு இல்லத்தை சிறப்பாக வைத்துக் கொள்ளவேண்டும் என்கின்ற முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. அதற்கான படங்கள், நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட செய்திகள் போன்ற பல்வேறு சாதனைகளைத் திரட்டிக்கொண்டிருக்கிறது. அதற்கான ஒரு பெரிய திட்டத்தை உருவாக்க வேண்டும் என்ற முயற்சியை இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. பின்னால் அவர்கள் கேட்டதைப் போல், முன்னாள் முதலமைச்சர் அவர்களது படத்தை முக்கியமான நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவர்களின் படங்கள் வைக்கின்ற இடத்தில்தான் வைக்கப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து இன்னும் முக்கியமான இடத்தில் அவர்களது படத்தை வைக்கவேண்டும் என்று கேட்கும்போது, மற்றவர்களுக்கெல்லாம் எந்த வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறதோ, அதே போன்ற கருத்தில் இதையும் அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடைய இல்லம் நினைவுச் சின்னமாக ஆக்கப்படுமா என்ற கேள்வி அனுப்பி இரண்டு வருடங்களுக்கு மேலாகிறது. இப்போதுதான் பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. பம்பாயில் காந்தியடிகளுக்கு அழகாக நல்லபடியான நினைவுச்சின்னத்தை எழுப்பியிருக்கிறார்கள். அதைப்போன்று பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடைய நினைவு இல்லமும் பாதுகாக்கப்படுமா? ஏதோ எடுத்து நடத்துகிறோம் என்ற அளவில்தான் இப்போது வைக்கப்பட்டிருக்கிறது என்பதை சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அந்த இல்லம் இந்த அரசால் கட்டப்பட்ட கட்டடம் அல்ல. பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் வாழ்ந்துவந்த இடத்தை நினைவுச்சின்னமாக மாற்றியிருக்கிறோம். அதிலே நாம் மாற்றம் செய்யக் கூடாது. அப்படி மாற்றம் செய்வதும் சரியல்ல, அது பொருத்தமும் அல்ல. ஆனால் அதன் உள்ளே, மக்களுக்குத் தெரிவிக்கவேண்டிய செய்திகளை, நிகழ்ச்சிகளைத் தெரிவிப்பதற்கு நினைவுச்சின்னங்களை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சொ. ந. பழனிச்சாமி: மறைந்த நம்முடைய அன்புத் தலைவர் காமராஜ் அவர்களுடைய நினைவுச்சின்னத்தை தமிழக அரசு எடுத்து நடத்துவது பற்றி மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அதோடு, அவருடைய வாழ்க்கையைச் சித்தரிக்கும் திரைப்படம் ஏதாவது அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அரசிடம் அவருடைய வாழ்க்கையைச் சித்தரிக்கும் திரைப்படம் எதுவும் இப்போது இல்லை. அதை சில நண்பர்கள் எடுத்து வைத்திருக்கிறார்கள் என்று தகவலைத் தந்திருக்கிறார்கள். அவர்களுடன் தொடர்பு கொண்டிருக்கிறோம். தேவைப்படும்போது, அவர்களிடமிருந்து அது பெறப்பட்டு, பாதுகாப்பாக வைத்து மக்களுக்குத் தேவைப்படும் நேரத்தில் திரையிடுவதற்கு இந்த அரசு முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜ் அவர்களது நினைவுச்சின்னத்தை அமைத்திருப்பது போலவே, சென்னை நகரத்தில் அண்ணா அவர்கள் வாழ்ந்த இடத்தை, அவர்களது வாரிசு என்று கூறப்படுபவர்கள் அதை நினைவாலயமாக ஆக்குவதற்கு கொடுப்பதற்கு மறுத்து வருவதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மையானால் அரசாங்கமே அதை எடுத்து தேசியமயமாக்கி, அந்த இடத்தை பேரறிஞர் அண்ணா அவர்களது நினைவாலயமாக உருவாக்குவதற்கான முயற்சியை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்து நீண்ட காலம் வாழ்ந்த காஞ்சிபுரம் இல்லம் அரசுடைமையாக்கப்பட்டு, நினைவுச் சின்னமாக ஆக்குவதற்கான முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது. பிற்காலத்தில் சென்னையில் அண்ணா வாழ்ந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட இல்லத்தை தேசியமயமாக்கி, நினைவுச்சின்னமாக ஆக்கவேண்டுமா என்பதைப்பற்றி அரசு இன்னும் பரிசீலிக்க

வில்லை. ஆனால் அந்த இல்லத்தைக் கொடுப்பதற்கு மறுத்தார்கள் என்கின்ற தகவல் சரியானது அல்ல என்பதையும் இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9·50]

திரு. ர. ஜெயமணி : பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடைய நினைவாலயத்தில் இரவிலே விளக்கு எரிவதில்லை. எனவே, இரவிலே அங்கே ஒரு விளக்கு எரிவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ? நான் இதைப்பற்றி சர்க்காருக்கு எழுதியிருக்கிறேன். கவனிக்கப்படும் என்று சொல்லப்படுகிறதே தவிர, அது ஒரு காடு போல் கிடக்கிறது. எனவே, ஒரு விளக்கு அங்கே எரிவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜர் அவர்களை அடக்கம் செய்த இடத்திலே நினைவாலயம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த நினைவாலயத்திலே விளக்கு மாத்திரம் எரிய வேண்டுமென்ற முடிவில் இந்த அரசு இல்லை. அது இன்னும் சிறப்பாக அமைக்கப்பட வேண்டுமென்ற முயற்சியில் அரசு தகுந்த வரைவுகளைக் கேட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 8 கேள்விகளுக்கு 50 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் 12 கேள்விகள் இருக்கின்றன. கேள்விகளுக்கு எவ்வளவு நேரம் தரமுடியும் என்பதுதான் பிரச்னை. கேள்வி எண். 69.

தொழிற்பயிற்சி நிலையங்களிலிருந்து வெளிவந்துள்ள பயிற்சியாளர்கள்.

*வினா எண். 69—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் 1975–76, 1976–77 ஆண்டுகளில் வெளிவந்துள்ள மொத்த பயிற்சியாளர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அத்தனை பேருக்கும் வேலைவாய்ப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) தமிழ்நாட்டிலுள்ள 31 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயின்று தேர்ச்சிபெற்றவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

1975–76	..	..	..	6,180
1976–77	..	..	..	5,143

(ஆ) அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயின்று தேர்ச்சி பெற்று வெளிவந்துள்ள மொத்த பயிற்சியாளர்களுக்கும் வேலைவாய்ப்பு ஏற்பாடு செய்வது என்பது பாநிலத்தின் தொழில் வளர்ச்சி அபிவிருத்தி மற்றும் பொருளாதார நிலைமையைப் பொறுத்துள்ளதாகும்.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தொழிற்பயிற்சி முடித்துவிட்டு வந்திருக்கின்ற பயிற்சியாளர்களுக்கு, அவர்களுடைய வருமானத்தைக் கருதி, அவர்களில் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் என்ற கொள்கையின் அடிப்படையில் வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் என்ற விகிதாசார அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, தொழிற்பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை என்பது ஒரு நாட்டின் துரதிருஷ்டம்தான். இப்படிப்பட்ட சூழ்நிலையில் வேலைவாய்ப்பு வேண்டுமென்று கேட்டால், தொழிற்பயிற்சி படித்து வாருங்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு வேலை இல்லை. இந்தச் சூழ்நிலையில் அரபு நாடுகளில் வேலை வாய்ப்பு இருப்பதாக அறிகிறோம். அதை ஒழுங்குபடுத்துவதற்கு ஒரு ஏஜென்சி ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, 'ஓவர்சீஸ் மேன் பவர் கார்ப்பரேஷன்' அமைக்கப்பட்டிருக்கிறது என்ற தகவலை நேற்றையதினம் முதல் அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அதன் மூலம் வேலைவாய்ப்புகள் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய தொழில் நிறுவனங்களில், 'பிஎச்இஎல்' போன்றவற்றில் வேலைக்கு ஆட்கள் எடுக்கும்போது, லோகல் எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சிலே ஆட்கள் எடுக்க வேண்டும் என்று தி.மு.க. ஆட்சியிலே போட்ட உத்தரவு, அவசர காலத்தில் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் கொண்டு வருவதன் மூலம், இங்கே ஐ.டி.ஐ. போன்றவைகளில் படித்து பயிற்சி பெற்றுவரும் மாணவர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்க வகை ஏற்படும். ஆனால், இப்போது அப்படி பயிற்சி பெற்றவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. மற்ற மாநிலங்களிலே இருந்து, அகில இந்திய அடிப்படையில், அதிக மார்க்குகள் வாங்கியவர்களுக்கு வேலை கொடுக்கப்படுகிறது. அங்கே அதிகமான மார்க்குகள் போடுகிறார்கள். ஆகவே, இங்கே உள்ள மாணவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இது மத்திய அரசோடு நாம் பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டிய ஒரு கொள்கை பற்றிய கேள்வியாக இருக்கிறது.

புதுக்கோட்டையில் உள்ள அருங்காட்சியகம்.

*வினா எண். 70— திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் உள்ள அருங்காட்சியகத்தை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) புதுக்கோட்டை நகரின் மையப்பகுதியில் புதிய கட்டடம் கட்டி அருங்காட்சியகத்தை அங்கு மாற்ற கருத்துரு ஒன்று பரிசீலனையில் இருக்கிறது.

சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களிடமிருந்து பெறப்பட்ட வைப்புத்தொகை முதலியன.

*வினா எண். 71— திரு. கு. ரமணி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன் போக்குவரத்துக் கழகத்தின் மூலதன முதலீட்டில் தொழிலாளர்களிடம் பிக்சட் டெபாசிட், கடன் பத்திரங்கள் மூலம் வசூலிக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை எவ்வளவு?

(ஆ) அத்தொகைக்கு 1976-ம் வருடம் கொடுக்கப்பட்டுள்ள வட்டி எவ்வளவு ? கொடுக்க பாக்கியுள்ள வட்டி எவ்வளவு ?

(இ) பணம் வாங்கப்பட்டுள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் அத்தாட்சிகள் கொடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) 31-3-78-ந் தேதி நிலவரப்படி சேரன் போக்குவரத்துக் கழகத்தின் மூலதன முதலீட்டில் தொழிலாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட கடன் பத்திரங்களுக்கானது ரூபாய் 21,10,820/-.31-7-78-ந் தேதி நிலவரப்படி தொழிலாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட பிக்சட் டிபாசிட் தொகை ரூபாய் 1,00,600 ஆகும்.

(ஆ) 1977-78-ம் வருடத்திற்கு பிக்சட் டிபாசிட்டிற்கு ரூபாய் 14,208.80 வட்டித் தொகையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. 1977-78-ம் வருடத்திற்கு கடன் பத்திரங்களுக்கு ரூபாய் 1,48,071 வட்டித் தொகையாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

பணியில் உள்ள தொழிலாளர்களுக்குக் கொடுக்க பாக்கியுள்ள வட்டி ஏதும் இல்லை.

(இ) பணம் வாங்கப்பட்டுள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் அத்தாட்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

திரு. கு. ரமணி : சேரன் டிரான்ஸ்போர்ட் கழகத்தில் தொழிலாளர்களுடைய பணமே சுமார் 22 லட்சம், 23 லட்சம் போட்டப்பட்டு உண்மையிலேயே அந்த நிறுவனத்தின் உரிமையாளர்கள் அந்தத் தொழிலாளர்கள் என்று சொல்லத்தக்க அளவுக்கு இருக்கிறது. இதில் பணம் போட்டவர்கள் பலர் வேலையிலிருந்து நீக்கப்பட்டு அவர்களுக்கு அந்தப் பணம் திருப்பிக் கொடுக்கப்படவில்லை என்று ஏதாவது புகார்கள் அரசாங்கத்திற்கு வந்துள்ளதா? பல பேர்களுக்கு அவ்வாறு கொடுக்கப்படாமல் பலவிதமான கணக்குகளைக் காட்டி ஏமாற்றப்படுகிறார்கள் என்ற ரிப்போர்ட் எனக்கு வந்திருக்கிறது. இதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்திருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மூலதன முதலீட்டில் பங்குதாரர்களாகச் சேர்ந்தவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்ட பிறகு அந்தப் பங்குதாரர்களுக்கு அந்தப் பணம் திருப்பித்தர வேண்டுமென்ற கோரிக்கைப் பற்றி அரசுக்குத் தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதுபற்றித் தகவல் கொடுப்பார் களானால் கண்டிப்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கு. ரமணி : பங்குதாரர்களாகப் பணம் கொடுத்த வர்கள் மட்டுமல்ல, அதைவிட அதிகப்படியாக கடன் பத்திரங்கள் மூலமாக ஏராளமான பணம் போடப்பட்டு அந்தப் பணம் கொடுத்தவர்களுக்கு இந்த மாதிரி கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. பல மாதங்கள் அவர்களை இழுத்தடித்து இன்னும் பணம் கிடைக்காத நிலைமையில் கஷ்டங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட விவரங்களை அரசுக்குக் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்து அது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கடன் பத்திரங்களை வாங்கிய தொழிலாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டபின் அந்தத் தொகை அவர்களுக்கு இன்னும் வந்து சேரவில்லை யென்றால் அதுபற்றிய தகவலின் பேரில் கண்டிப்பான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும்.

கணபதி-உருமண்டம் பாளையம் சாலை.

*வினா எண். 72— திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை நகரத்தின் புறநகர் பகுதியில் சக்தி நெடுஞ்சாலை யையும், மேட்டுப் பாளையம் நெடுஞ்சாலையையும் இணைக்கும் கணபதி-உருமண்டம் பாளையம் சாலையை நெடுஞ்சாலை இலாக்காவில் எடுத்து மேம்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: கணபதி—உரு மண்டம் பாளையம் சாலை நெடுஞ்சாலையோடு இணைக்கக் கூடிய பிரதானமான 'பை-பாஸ்' ரோடாக இருக்கிறது. கோவை மேட்டுப்பாளையம் ரோட்டில் தகராறு ஏற்படக்கூடிய நேரத்தில்

சகல போக்குவரத்துகளும் இந்த ரோடு வழியாகத் திருப்பி விடப்படுகின்றன. கணபதி-உருமண்டம் பாளையம் சாலை மூன்று பஞ்சாயத்துக்களின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது. அதை நேரடியாக ஹைவேஸ் ரோடாக மேற்கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப் பினர் குறிப்பிடுகிற சாலையின் பெரும்பகுதி ஊராட்சி ஒன்றியத் தின் கீழும், ஊராட்சியின் கீழும் இருந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல அந்தச் சாலையின் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்துள்ளது. தமிழகத்தில் ஒட்டு மொத்தமாக 38,000 கிலோ மீட்டருக்கு மேற்பட்ட சாலைகள் ஊராட்சி ஒன்றியத்தின் கீழும், ஊராட்சிகளின் கீழும் இருந்து வருகிறது. ஊராட்சி ஒன்றியங்களின் நிதிநிலைமை சரியாக இல்லாத காரணத்தால் செப்பனிடப்படாத சூழ்நிலை இருந்து வருகிறது. அரசினுடைய நிதிநிலையும் ஒரு வரம்புக்குட்பட்டு இருக்கும் காரணத்தால் 38,000 கிலோ மீட்டர் சாலை களையும் ஒரே ஆண்டில் அரசு எடுத்துக்கொள்ள இயலாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சாலையின் முக்கியத் துவத்தை அரசு ஏற்கனவே அறிந்து 92,000 ரூபாய் செலவாகும் என்று மதிப்பிட்டு வரும் ஆண்டில் அது எடுத்துக் கொள்வது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி யோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

பல்லவன் போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள்.

*வினா எண். 73—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு துறைகளிலிருந்து பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் அலுவல் பார்க்கும் அதிகாரிகள் (on deputation) எண்ணிக்கை எத்தனை?

(ஆ) அவர்களுக்கு சிறப்பு ஊதியம் மற்றும் விடுமுறை, மருத்துவ வசதி அளிப்பது எந்த விதியின் கீழ் பின்பற்றப் படுகிறது?

(இ) இந்த சலுகைகள் பல்லவன் போக்குவரத்துக் கழக பணியாளர்களுக்கு அளிக்கப்படுகிறதா?

(ஈ) இல்லையெனில், அதற்கான காரணம் யாது?

[1979 பிப்ரவரி 17

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) 61

(ஆ) அவர்களுக்கு சிறப்பு ஊதியம் நடைமுறையில் இருக்கும் அரசு ஆணைகளின்படி கொடுக்கப்படுகிறது.

விடுமுறை: அவர்களுக்கு தமிழ்நாடு விடுப்பு விதிகள் 1933 (TNLR 1933) கீழ் விடுப்பு அனுமதிக்கப்படுகிறது.

மருத்துவ வசதி: அவர்களுக்குக் கழக அதிகாரிகளுக்கு அளிக்கப்படுவதுபோல உடல் நலப்படியோ அல்லது அவர்கள் சார்ந்த அரசு அலுவலகங்களில் அளிக்கப்படும் மருத்துவ ஈட்டு வசதியோ அவர்கள் விருப்பத்திற்கு ஏற்ப அளிக்கப்படுகிறது.

(இ) & (ஈ) பல்லவன் போக்குவரத்துக்கழகத்தில் முகமையில் உள்ளவர்கள் அரசு அலுவலகங்களில் உள்ள வேலை நேரப்படி பணிபுரியாமல் கூடுதலாக பணி புரிவதாலும் வருடத்தில் 9 நாட்கள் மட்டுமே விடுமுறை பெறுவதாலும் சிறப்பூதியம் பெறுகின்றனர். பல்லவன் போக்குவரத்துக்கழக ஊழியர்கள் (Longevity pay scheme) ஊதியம் தொடர் ஊதிய திட்டப்படி அதன் ஊழியர்கள் பெறுகின்றனர். அக்கழக விதிகளின்படி அதன் ஊழியர்கள் வேலை செய்யவேண்டியவர்கள் ஆதலால் அவர்களுக்கு சிறப்பு ஊதியம் வழங்கப்படுவதில்லை. அவர்களுக்கு விடுப்பும் மருத்துவ வசதியும் தொடர் ஊதிய திட்டப்படியே (Longevity pay scheme) கொடுக்கப்படுகிறது.

திரு. செஞ்சி. ந. இராமச்சந்திரன் : அரசு ஊழியர்களுக்குத் தருவதைப் போன்று சலுகைகள் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே உள்ள அதிகாரிகளுக்கும் மற்ற ஊழியர்களுக்கும் வழங்குவதற்கு அரசிடம் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, லாஞ்சிவிட்டி பே ஸ்கீம் என்று சொல்லப்படுகிற தொடர் ஊதியத் திட்டப்படி பல்லவன் போக்குவரத்துக்கழகம் ஏற்கனவே நிரந்தரமாக்கப்பட்ட ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது. ஆகவே அரசு ஊழியர்களுக்கு உள்ள சலுகைகள் அவர்களுக்குக் கொடுக்கப்படும் எண்ணம் இல்லை.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழக சென்னை டெப்போக்களிலே தினசரி 10, 15 டிரைவர்கள், கண்டக்டர்கள் வெளிப்பணிக்கு செல்வதாக கையெழுத்துப் போட்டுவிட்டு பணியாற்றாமல் டிப்போவிலேயே சுற்றி வருகிறார்கள் என்ற புகார் அரசுக்கு வந்திருக்கிறதா? அப்படியானால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

1979 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த வரையிலே 200-க்கும் மேற்பட்ட ஓட்டுநர்கள், நடத்துநர்கள் தேவைப் படுகிற காரணத்தால் அவர்களைப் பணியில் எடுக்கின்ற எண்ணம் இருக்கிறது. இருக்கின்ற பணியாளர்கள் கையெழுத்துப் போட்டு விட்டு வேலை செய்யாத சூழ்நிலை இல்லை. அதைப்பற்றி ஏதேனும் உறுப்பினர் அவர்கள் குறிப்பு கொடுப்பார்களானால் அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

கொரடாச்சேரி ஒன்றிய மருத்துவ மனைகள்.

* வினா எண் 74—திரு. தாழை மு. கருணாநிதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் கொரடாச்சேரி ஒன்றியத்தில் உள்ள அம்மையப்பன், கொரடாச்சேரி ஒன்றிய மருத்துவ மனைகளை அரசு ஏற்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்கப்படும்?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. தாழை மு. கருணாநிதி : ஒரு யூனியனுடைய தலைமையிடத்தில் அதிகமான பொதுமக்கள் வாழ்கிற இடம். இந்த ஒன்றியத்திலே ஒரு அரசு மருத்துவமனையும் இல்லாத காரணத்தால் அங்கே எல். ஐ. எம். டாக்டர்தான் பணியாற்றுகிறார். அதனால் பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. இனியாவது அரசு மருத்துவமனையை அமைக்கின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, அங்கிருந்து மக்களால் இது சம்பந்தமாக தங்களுக்கு ஒரு மருத்துவமனை வேண்டுமென்று விண்ணப்பம் தரப்பட்டு அந்த விண்ணப்பம் இப்போது ஆய்வு செய்வதற்காக மாவட்ட மருத்துவ அதிகாரிக்கு அனுப்பப்பட்டு அவரிடமிருந்து வருகின்ற ஆய்வு அறிக்கை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. மேலும், 1977-78 ஆம் ஆண்டு அந்தப் பகுதியிலே இருக்கிற 5,6 தரத்தைச் சேர்ந்த பிரிவுகளிலே உள்ள மருத்துவமனைகள் 6-ஐ எடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. சுமார் 20 இதுபோன்ற ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த

[1979 பிப்ரவரி 17

மருத்துவமனைகளை அரசு ஏற்றிருக்கிறது. இது முதல் ரகத்தைச் சேர்ந்த காரணத்தால் உடனடியாக எடுக்கப்பட முடியவில்லை, ஆனாலும் அரசு பரிசீலிக்கும்.

கந்தேகவுண்டன் சாவடியில் ஆரம்ப சுகாதார நிலையம்.

*வினா எண் 75— திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம் கந்தேகவுண்டன் சாவடியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று துவங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : இல்லை.

திரு. ஆ. நடராசன் : தலைவர் அவர்களே, மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்திலே, அரிசிப்பாளையத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அந்த இடத்திற்கும் கந்தேகவுண்டன் சாவடிக்கும் 12 மைல் தூரம் இருக்கிறது. கந்தேகவுண்டன் சாவடியைச் சுற்றி மலைவாழ் மக்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியிலே ஆரம்ப சுகாதார நிலையத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் என்பது ஒரு ஒன்றியத்திற்கு ஒன்று என்ற வீதத்திலே தொடங்குவதுதான் அரசின் கொள்கையாகும். அந்த வகையில், 374 ஒன்றியங்களிலும் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுகின்ற க.க. சாவடி கிராமம் மதுக்கரை ஒன்றியத்தில் இருக்கிறது. இந்தக் கிராமத்திலுள்ள மக்கள் 3,140. ஆகவே, அரிசிப்பாளையத்திலே இருக்கின்ற இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் அவர் குறிப்பிடுகின்ற க.க. சாவடிக்கும் 11 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. மேலும் இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சேர்ந்த ஒரு கிளை நிலையம் இந்த கிராமத்தில் இயங்குகிறது. தற்பொழுது இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு நடமாடும் மருத்துவமனை கொடுக்கின்ற திட்டமும் ஆய்வில் இருக்கிறது. எனவே, அவர்களுக்கு மருத்துவ வசதி கிடைக்க வழி வகைசெய்ய அரசு செய்து கொண்டிக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1979 பிப்ரவரி 17]

பெரியகுளம் அரசு மருத்துவமனை.

*வினா எண். 76— திரு. கே. பன்னை சேதுராம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியகுளம் அரசு மருத்துவமனையில் 30 படுக்கைகள் கொண்ட கட்டிடம் கட்டவும், Blood Bank ஏற்படுத்தவும் திட்டம் ஏதும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : 1979-80-ம் ஆண்டு இரண்டாம் பகுதித் திட்டமாக பரிசீலிக்கப்படும்.

சென்னை நகரில் பணியாற்றுவோருக்கு விடுதிகள்.

*வினா எண். 77— திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் அலுவலகங்களில் பணியாற்றுவோருக்கென தனியே விடுதிகள் அமைத்துத்தரும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : இல்லை.

திரு. துரை கலியமூர்த்தி : பேரவைத் தலைவரவர்களே, சென்னையிலும், சென்னை போன்ற பெரிய நகரங்களிலு[illegible] அரசு அலுவலகங்களிலும், மற்ற அலுவலகங்களிலும் இருப்பவ[illegible] தங்குவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எனவே, சநா— ஹாஸ்டல் போன்ற விடுதிகளைக் கட்டி, சலுகை வாந்தில் அறைகளை விட்டால் அவர்களுக்கு மிகவும் வசதியாக [illegible] அதிலும் பேச்சிலராக இருப்பவர்களுக்கு மிகவும் [illegible] இருக்கும். எனவே, அந்த வகையில் ஒரு விடுதியைக் [illegible] அரசு ஆலோசனை செய்யுமா? நடவடிக்கை எடுக்கு[illegible] அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, ஏற்கனவே சமூக நல இயக்குநரின் மு[illegible] கட்டுப்பாட்டுடன் ஒரு இல்லம் எழும்பூரில் செ[illegible] கொண்டிருக்கிறது. பணிபுரியும் 25 பெண்கள் அங்[illegible] வசதி பெற்று வருகிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பின[illegible] பேச்சிலர் என்று குறிப்பிட்டார்கள். இது சமூக நல இ[illegible] இது பெண்கள் சம்பந்தப்பட்டது. எனவே ஸ்பின்ஸ்டர் [illegible] சொன்னால் சரியாக இருக்கும். ஆனால் இதே இல்[illegible] மணம் புரிந்தவர்களும் தங்கி பணியாற்றிக்கொண்டிருக்கிறார் தனியாக விடுதி கட்ட வாய்ப்பு இருக்குமா என்று கேட்கிறா[illegible]

[1979 பிப்ரவரி 17

பணிபுரியும் பெண்கள் விடுதிகள் நடத்தத் தனியார் தொண்டு நிறுவனங்களும் ஊக்குவிக்கப்படுகின்றன. இதற்காக மாநில அரசின் பரிந்துரையின் பேரில், விடுதிக் கட்டிடத்தின் கட்டுமான/விரிவாக்க மதிப்பீட்டுச் செலவில் 75 சதவீதம் வரை மத்திய அரசு மானியம் வழங்குகிறது. மேலும் மத்திய அரசின் உதவிக்குக் கூடுதலாக மாநில அரசும் 15 சதவீதம் அல்லது 35,000 ரூபாய், இவற்றில் எது குறைவோ அத்தொகையை தனியார் நிறுவனங்களுக்கு மானியமாக வழங்கி வருகிறது. நான், இதுபற்றி சென்னை நகர கார்ப்பரேஷன் சிறப்பு அதிகாரியிடம் இப்படியொரு இல்லம் அமைக்கப்படவேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அதுபற்றிய ஆலோசனை நடந்து வருகிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பெண்களுக்காக விடுதி கட்டியிருப்பதாகவும், கட்டப் போவதாகவும் சொன்னார்கள். ஆனால் ஆண்களுக்கும் அதே நிலை இருக்கிறது. அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, எனது இலாக்கா பெண்களைப்பற்றிய இலாக்கா. கேள்வி இடம் மாறி வந்திருக்கிறது.

Care-homes for children of employed women.

* 78 Q.— THIRU S. M. VASAN: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(a) whether any financial assistance is being given by the Government to private sector undertakings for running care homes for the children of employed women; and

(b) whether any financial assistance is being received from the Central Government or from foreign countries for the purpose?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :

(அ) பணிபுரியும் பெண்களின் குழந்தைகளுக்கென்று காப்பகங்கள் நடத்துவதற்கு தனியார் துறை நிறுவனங்களுக்கு மாநில அரசு நிதி உதவி அளிக்கவில்லை.

(ஆ) இதற்காக மத்திய அரசிடமிருந்தோ மற்றும் அயல் நாட்டிலிருந்தோ நிதி உதவி எதுவும் பெறப்படவில்லை. ஆனால் 1977–78 முதல் மத்திய சமூக நல வாரியம் 90 சதவீத செலவை மானியமாக குழந்தைகள் காப்பகங்களுக்கு வழங்கி வருகிறது. இதன்படி 1978–79 ஆண்டுக்கென ரூ. 2,08,472 மத்திய சமூக நல வாரியம் மானியமாக வழங்கியுள்ளது.

1979 பிப்ரவரி 17]

திரு. சி. மு. வாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதன்மூலம் பயன்பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்று அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவரவர்களே, தனிக் கேள்வி போட வேண்டுகிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கம்.

*வினா எண். 79— திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடப்பாண்டில் வட ஆற்காடு மாவட்டத்தில் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்க விற்பனை அதிகாரிகள், மானேஜர்கள், உதவி மானேஜர்கள் யாராவது பணம் கையாடல் செய்துள்ளார்களா?

(ஆ) எவ்வளவு தொகை கையாடல் செய்யப்பட்டது?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் :

(அ) & (ஆ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் தக்கோலம் விற்பனை நிலையத்தில் 30–6–77-ல் ரூ. 25,129.84 அளவிற்கு சரக்கு இருப்பு குறைவு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தவிர இவ்விற்பனை நிலையத்தில் கடன் விற்பனை வசூல் செய்யப்பட்ட தொகையிலும் ரூ. 16,502.95 குறைவாக இருக்கிறது என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

[முற்பகல் 10.10]

திரு. எஸ். ஜே. இராமசாமி : முதலிலே ரூ. 26,000, அதற்குப் பிறகு ரூ. 16,000 ஆக, ரூ. 42,000 மோசடி செய்யப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் இரண்டு விதமாகச் சொன்னார்கள், ஒத்துக்கொள்கிறேன். ஆனால், அதை எப்படி வசூல் செய்யப் போகிறார்கள்? வசூலிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது? கணக்கு தணிக்கை செய்த அதிகாரிகள் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? இப்படியே விட்டால் சொஸைட்டி உருப்படுமா? யார், யார் தவறு செய்திருக்கிறார்கள்?

இம்மாதிரியே விட்டால் ஒருவர் அல்ல, பல பேர்கள் தவறு செய்யக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே அதன்மீது உடனடி நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : தலைவரவர்களே, கோ-ஆப்டெக்ஸ் தனி அலுவலர், காஞ்சிபுரம் உதவி இயக்குநருக்கு அறிக்கை கொடுத்து அதன் அடிப்படையில் தமிழ்நாடு கூட்டுறவு சங்கவிதி 66-ன் கீழ் சட்டரீதியான ஆய்வு மேற்கொள்ள காஞ்சீபுரம் உதவி இயக்குநருக்கு ஆணை யிட்டுள்ளார். காஞ்சீபுரம் உதவி இயக்குநரும் சட்டபூர்வ விசாரணையினை நடத்தி வருகின்றார். விரைவில் விசாரணை அறிக்கை வரப்பெறும். சட்டபூர்வ விசாரணை அறிக்கையின் அடிப்படையில் குற்றமிழைத்தவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறித் துணிகள் விற்பனையில் தள்ளுபடி

*வினா எண். 80— திரு. த. புஷ்பராஜு : மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

பெருந்தலைவர் காமராஜ் பிறந்த தினத்தின்போது கைத்தறி துணிகள் விற்பனைக்குத் தள்ளுபடி வழங்க அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திருமதி சுப்புலட்மி ஜெகதீசன் : பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் 76-வது பிறந்ததினத்தை சிறப்பிக்கும் பொருட்டு 7 நாட்களுக்கு 20சதவிதம் சிறப்புத் தள்ளுபடி வழங்கப்பட்டுவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு .— ஓர் உரையின் தொடக்கத்தில் [*] உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) தந்தை பெரியாருடைய இதயம் குறித்து.

* திரு. துரை முருகன் : பாயின்ட் ஆஃப் ஆர்டர். தலைவரவர்களே, நேற்றையதினம் இந்த மாமன்றத்தில் கவர்னர் உரைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பதில் அளித்த நேரத்தில் மறைந்த பெரியாருடைய இதயம் கிடைத்துவிட்டது என்ற கருத்தைச் சொன்னார்கள். அந்த இதயம், இங்கே இந்தக் கட்டிடத்தில் இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்கு வேண்டிய ஆதாரமாக சில காகிதங்களைத் தூக்கிக் காட்டினார்கள். ஆனால், அந்தக் காகிதத்திலே என்ன எழுதப் பட்டிருக்கிறது என்று நாங்கள் பார்க்கவில்லை. இதயத்தையும் நாங்கள் பார்க்கவில்லை. ஆகவே, அந்த இதயத்தையும்... (மணியடிக்கப்பெற்றது) அதிலே ஒரு சர்ச்சை எழுந்திருக்கிறது— முதலிலே இல்லையென்று சொல்லி பிறகு வந்திருக்கிறது. ஆகவே நாங்கள் கண்டறியும் இதயத்தைப் பார்த்து, இது ஐயா இதயம்தான் என்று, இதயத்தை முதலிலே மன்ற உறுப்பினர்களுக்குத் திருப்தி அளிக்கின்ற வகையில் சபாநாயகர் அவர்கள் அறையில் வைக்க வேண்டும். அவருடைய இதயம்தான் என்ற அத்தாட்சிக் கடிதங்களையும் நாங்கள் பார்க்கவேண்டும். அதிலே ஏதாவது சந்தேகம் ஏற்படுமானால், இரசாயன அதிகாரி ஒரு ஜட்ஜ் வைத்து பரிசீலிக்க வேண்டும். ஆகவே... ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சுருக்கமாக முடியுங்கள். நீங்கள் கேட்கிற ஒழுங்குப் பிரச்னைக்குப் பதில் சொல்ல முதலமைச்சர் இல்லை. (குறுக்கீடு) உங்களுடைய கருத்து புரிந்துவிட்டது. அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் பதில் சொல்லத் தயாராக இருந்தால் சொல்லட்டும் நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களுடைய இதயம், அது போன்ற மற்ற உறுப்புகள் வேலூர் சி.எம்.சி மருத்துவ மனையில் பாதுகாப்பாக எடுத்து வைக்கப்பட்டிருந்தன. நாம் தொடர்பு கொண்டு எழுதிய கடிதத்தின் விளைவாக அவர்களும் பதில் கடிதம் எழுதி அந்தப் பொருட்களை நம்முடைய மருத்துவத் துறையினரிடம் ஒப்படைத்துள்ளார்கள். நேற்று மதியம் நான் முதல்வர் அறைக்குச் சென்றபொழுது அந்த இதயம் அங்கே கொண்டு வந்து வைக்கப்பட்டிருந்தது. அதை நானும் பார்த்தேன். அதோடு மட்டுமல்லாமல் சி.எம்.சி. மருத்துவ மனையிலேயிருந்து அதிகாரபூர்வமாக எழுதிய கடிதத்தையும் நான் படித்துப் பார்த்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் பெரியார் இதயம் எனக்குப் புரியாது என்று நிச்சயமாகக் கருதமாட்டார்கள் என்று எனக்குத் தெரியும்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1979 பிப்ரவரி 17

மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்புவார்களானால் பெரியாருடைய இதயத்தைப் பேரவைத் தலைவர் அறையில் வைப்பதற்கும் உறுப்பினர்கள் பார்ப்பதற்கும் அரசு நிச்சயமாக வழிசெய்யும்.

திரு. துரை முருகன் : ஆபரேஷன் செய்து எடுக்கப்பட்ட..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரை முருகன், தயவு செய்து உட்காருங்கள். ஒரு விளக்கம் கேட்டீர்கள். அதற்கு பதில் சொல்லியாகிவிட்டது. மேலும் மேலும் விளக்கம் கேட்டுக்கொண்டு போவது சரியல்ல.

திரு. துரை முருகன் : அரசாங்கத்திற்கு உதவி செய்வதற்காகத்தான் கேட்கிறேன். முதலமைச்சர் சொன்னதை நான் சந்தேகிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒழுங்குப் பிரச்னை என்று ஆரம்பித்து, விவாதமாக இதை வளர்த்துக்கொண்டு போவது சரியல்ல.

* திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, உறுப்பினர் மேலும் மேலும் இந்தப் பிரச்னை குறித்து கேட்டுக்கொண்டு இருப்பதற்குக் காரணம் முடிவான கருத்து முழுவதுமாக சொல்லப் படவில்லை. அவர் மருத்துவ மனையில் இருந்து வந்த கடிதம் வைக்கப்படுமா என்று கேட்டார். விருப்பம் இருந்தால் அதையும் வையுங்கள். வேறு பல உறுப்புகள் உள்ளன என்று சொன்னார்கள். இது என்னென்ன உறுப்புகள் என்பது அவைக்குத் தெரிந்தால் நல்லது. பெரியாரைப் பற்றி தெரிந்து கொள்ள இருக்கிற ஆர்வத்தின் காரணமாக கேட்க விரும்புகிறேன். அரசாங்கம் பெரியாரின் இதயம், மற்றும் சில உறுப்புகள் வந்திருப்பதாகச் சொல்லி இருக்கிறது. பெரியாருடைய மூளைதான்— உலகத்திலேயே யாருக்கும் இல்லாத ஆற்றல் கொண்டது என்று பாராட்டப்பெற்றது—அந்த மூளை கிடைத்து இருந்தால் அரசுக்கும், எதிர்கட்சிகளுக்கும் நல்லது. அதுவும் கொண்டு வரப்பட்டு இருக்கிறதா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அங்கே என்னென்ன எடுத்து வைக்கப் பெற்றிருந்தனவோ, அவற்றைத் தந்து இருக்கிறார்கள் அவைகள் கொண்டு வரப்பெற்று இருக்கின்றன. இங்கே இருக்கிற உறுப்பினர்கள் பார்க்க வேண்டுமானால், இங்கே சான்னபால், அவைத் தலைவர் அறையில் வைக்கப்படும். வந்து பார்க்கலாம்.

1979 பிப்ரவரி 17]

(ஆ) ஆங்கிலத்தில் வினாப்பட்டியல் வைக்கப்பெறுவது குறித்து.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தலைவரவர்களே, தமிழை ஆட்சி மொழியாக ஆக்குவதற்கு இனசி இங்கே நாங்கள் போராடவேண்டியிருக்கிறது. ஏனென்றால், இந்த சட்டமன்றத்தில் கூட இங்கே வைக்கப்படும் வினாப்பட்டியல் ஆங்கிலத்தில் வைக்கப்பட்டு இருக்கிறது. இங்கே முதலிடம் ஆங்கிலத்திற்கா, தமிழுக்கா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரின் உணர்வுகளை உணர்கிறேன். ஆங்கிலம், தமிழ் இரண்டு மொழிகளிலும் தரப்படுகிறது. உறுப்பினர் முதலாவதாக எதைக் கையில் எடுத்துக் கொள்கிறாரோ அது அவரிடம் முதலிடம் பெறுகிறது. இன்று எடுத்துக்கொள்ளப்பெற்றிருக்கிற வினாப்பட்டியல் இரண்டு நாட்களுக்கு முன்பே உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றிருக்கிறது.

திரு. துரை முருகன் : இங்கே அனுப்பப்பட்டிருக்கும் சுற்றறிக்கை கூட ஆங்கிலத்தில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் கேள்விப் பட்டியலைப் பற்றித்தான் பேசுகிறார்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தலைவரவர்களே, நான் சொல்வதை கொஞ்சம் கேட்டுவிட்டுச் சொல்லுங்கள். ஆங்கிலத்தில் வேண்டும் என்று நான் கேட்கவில்லை. விரும்புகிறவர்களுக்கு ஆங்கிலத்தில் கொடுக்கட்டும், இங்கே பெரும்பாரியாக தமிழில் நிகழ்ச்சிகள் நடைபெறுவதால் தமிழில்தான் கொடுக்க வேண்டும். ஆங்கிலத்தில் வேண்டும் என்கிறவர்கள் பெயர் பட்டியலை அவர்கள் குறித்து வைத்துக்கொண்டு அவர்களுக்கு மட்டும் ஆங்கிலத்தில் அனுப்பட்டும். சபா நாயகருக்கும், அமைச்சர்களுக்கும் வேண்டுமானால் ஆங்கிலத்திலும் கொடுக்கட்டும் இங்கே அவைமுன் வைக்கப் படுகிற பட்டியல் தமிழில்தான் இருக்கவேண்டும். அதற்குத் தான் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இல்லையேல் எனக்கு தமிழில்தான் வரவேண்டும். ஆங்கிலத்தில் வருமானால் கிழித்து எறிவேன் என்பதை நான் இந்த அவையில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. லத்திப் : தலைவரவர்களே, வீட்டிற்கோ, விடுதிக்கோ அனுப்பப்படுகிற பட்டியல் தமிழ் மொழியில் இருக்கிறது. இங்கே அவையில் வைப்பது ஆங்கிலத்தில் இருக்கிறது, தமிழ் மொழியில் பட்டியல் வீட்டிற்கு அனுப்பப்பட்டிருந்தாலும் அதை சிலபேர் எடுத்துக்கொண்டு

வராமல் இருக்கலாம். ஆகவே, அவையில் வைப்பதும் தமிழில் வைத்துவிட்டால் இந்தப் பிரச்னை வராது. அதற்கு ஏற்பாடு செய்தால் நன்றி உடையவனாக இருப்பேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர்கள் கூத்தக்குடி சண்முகம் அவர்கள் சொன்னதையும், திரு. லத்தீப் அவர்கள் சொன்னதையும் நான் உணர்கிறேன். நீங்கள் சொன்ன கருத்தை நான் செயலாளரிடம் தெரிவித்து, இனிமேல் தமிழிலே தரவேண்டும், விரும்புகிறவர்களுக்கு ஆங்கிலத்தில் தரவேண்டும், என்கிற வகையில் ஏற்பாடு செய்கிறேன். அவையில் உறுப்பினர்களுக்காக மேசை மீது வைப்பதும் தமிழில் இருக்க வேண்டும் என்றும் சொல்கிறேன். இந்த முறை நாளையதினம் முதல் பின்பற்றப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-20]

(இ) உறுப்பினர்களுக்கு தொலைபேசி வசதி செய்து கொடுப்பது பற்றி.

திரு. து. இராமசாமி : தலைவரவர்களே, சட்டசபை எதிர்கட்சிகளுடைய அலுவலகங்களிலே தொலைபேசி வசதி இல்லாமல் இருக்கிறது. நாடாளுமன்றத்திலே எதிர்க்கட்சி அலுவலகங்களுக்கு எல்லாம் தொலைபேசி வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். அதைப்போன்று நம்முடைய மாநிலத்திலும் தொலைபேசி வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று தமிழ்நாட்டில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு டெலிபோன் டைரக்டரி கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதையும் உறுப்பினர்களுக்கு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : சார், மாண்புமிகு உறுப்பினர் சொல்வது மிக முக்கியமான விஷயம். இங்கே அங்கத்தினர்கள் அறைக்கே டெலிபோன் இருக்கும்போது கட்சி அலுவலகங்களுக்கு இல்லாமல் இருப்பது வருந்தத்தக்கது, ஆபீசில் பல வேலைகள் நடைபெறுகின்றன. ஆகவே, அங்கே முக்கியமாகத் தேவைப்படுகிறது. ஆபீஸ் ஒல்டு ஆஸ்டலில் இருக்கிறது. ஒரு எக்ஸ்டன்ஷன் லைனாவது உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : நானும் அதைத் தொடர்ந்து ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் கூறியதை வழிமொழிகிறேன் என்று சொல்லிவிட்டால் போதும். நான் புரிந்துகொண்டேன். தயவுசெய்து உட்காருங்கள். பாராளு

மன்றத்தில், பாராளுமன்ற கட்டடத்திற்குள்ளேயே இருக்கின்ற கட்சி அலுவலகங்களுக்கு டெலிபோன் வசதி செய்து கொடுக்கிறார்கள்; வெளியே இருக்கின்ற அலுவலகங்களுக்கு கிடையாது, நானும் அதை பார்த்திருக்கிறேன். ஆனால் நம்முடைய மாநிலத்தில் கட்சி அலுவலகங்கள் சட்டமன்ற கட்டடத்திற்கு வெளியே இருக்கின்றன. இருந்த போதிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களை ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சரவர்களுடன் கலந்துபேசி, ஆவன செய்ய முயற்சி செய்கிறேன். ஏனென்றால் இது என்னுடைய சட்டமன்றத் துறை சம்பந்தப்பட்டதல்ல; பொதுப்பணித் துறையைச் சேர்ந்தது. ஆகையால் அவர்களிடம் சொல்லித்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது இங்கே இருக்கிறார்களே, அதற்கு அவர்கள் இப்போதே பதில் சொல்லி விடலாம்.

திரு. து. இராமசாமி : தலைவரவர்களே, நாடாளுமன்றத்திலே எல்லா எதிர்க்கட்சிகளுக்கும் நாடாளுமன்ற கட்டடத்திற்குள்ளேயே அலுவலக அறைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டில் எதிர்க்கட்சிகளின் அலுவலகம் செயலகத்திலே இல்லை; இடம் ஒதுக்கப்பட வில்லை. ஆகையால் கட்சி அலுவலகங்கள் வெளியே இருந்தாலும், நாடாளுமன்றத்திலே செய்து கொடுத்திருப்பதைப்போல டெலிபோன் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று உங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் ஒரு நல்ல முடிவை அறிவிப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஆளும் கட்சிக்கே எந்த இடம் என்று இல்லாமல் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தை இந்த அரசு பரிசிலனை செய்யும்.

3. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

மாணவர்களுக்கும், போலீசாருக்கும் சென்னையில் ஏற்பட்டுள்ள மோதல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம்....

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சனை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய ஒழுங்குப் பிரச்சனையை அப்புறம் கேட்கிறேன். இப்போது ஒத்திவைப்புத் தீர்மானம். 16-2-1979 அன்று சென்னை மாநிலக் கல்லூரி மாணவர்களுக்கும் போலீசாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டு மாணவர்கள் படுகாயமடைந்து, உயிருக்கு ஆபத்து ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால் உருவாகியுள்ள பதட்ட நிலை குறித்து பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று திருவாளர்கள் துரைமுருகன், ஆர். [illegible] செ. ரணம், தே. ஞான கிருஷ்ணன், பி. சுந்தரமூர்த்தி, சிகாமணி, என். பழனிவேல், எம். அண்ணாமலை, ரா. உமாநாத், எம். ஏ. லத்தீப், ஏ. ஆர். மாரிமுத்து, துரை முத்துசாமி, அ. ரகுமான்கான், பொ. விஜயராகவன், ஜே. ஜேம்ஸ், மு. அம்பிகாபதி ஆகியோர் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம் என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். முதலில் திரு. துரைமுருகன்.

திரு. அ. ரகுமான்கான் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர், ஒத்திவைப்புத் தீர்மானம் நானும் இந்த விஷயம் குறித்து கொடுத்திருக்கிறேன். ஆனால் தங்களுடைய அறையிலே நான் இதைப்பற்றிக் கேட்கும்போது உங்கள் கட்சியிலிருந்து துரை முருகன் மட்டும் பேசுவார் என்று சொன்னீர்கள். இரண்டு பேரும் கொடுத்திருப்பது ஒரே தீர்மானம் என்றாலும் இருவர் சொல்லியிருக்கின்ற பிரச்சனைகள் வேறு வேறானவை. ஒருவருக்குத் தெரியாதது இன்னொருவருக்குத் தெரியும். ஆகவே, இருவரும் பேசுவதற்கு அனுமதி அளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இதற்கு முன்னாலே அப்படிப் பேசி இருப்பதற்கு ப்ரிசிடெண்டும் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபற்றி அலுவல் ஆய்வுக்குழுவிலே பேசி, ஒரு கட்சியில் ஒரே பொருள்பற்றி 10 பேர், 5 பேர், 6 பேர் தீர்மானம் கொடுத்திருந்தாலும் அவர்களில் யாராவது ஒருவருக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுப்பது என்று முடிவு செய்திருக்கிறோம். இதற்கு முன்னால் இருவர் பேசியிருக்கலாம். இல்லை என்று சொல்லவில்லை. அப்படி ஒவ்வொருவருக்கும் பேசும் வாய்ப்பு கொடுக்கப்பட்டால் நேரம் வீணாகும் என்பதால், ஒரு கட்சியிலிருந்து ஒருவர் என்று முடிவு செய்திருக்கிறோம். அதை மீறி இப்போது உங்களுக்கு வாய்ப்புக்கொடுத்தால், பின்னால் அதைப்போல மற்றவர்களுக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டியிருக்கும். ஆகையால் துரைமுருகன் மட்டும் பேசட்டும்.

திரு. அ. ரகுமான்கான் : *** *** *** ***

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பேசியது அனைத்தையும் நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, ஏன் அதை நீக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள், அது இருந்தால் என்ன தவறு, அதிலே என்ன தவறான வார்த்தைகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்தி வைப்புத் தீர்மானத்திலே அனுமதிக்கும் பொருட்டு ஒருவர்தான் பேச வேண்டும். திரு. துரைமுருகன் ஒருவர்தான் பேச வேண்டும். திரு. ரகுமான்கான் அவர்களுக்கும் பேச அனுமதிக்க முடியாது. ஒருவருக்குத்தான் அனுமதி தர முடியும்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, ஏற்கெனவே இந்த அவையில் இரண்டுபேர் இதுபோன்ற விஷயங்களுக்குப் பேசுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுபோன்ற சமயங்களில் நானும் பேசி இருக்கிறேன். திரு. சுப்பு அவர்களும் பேசியிருக்கிறார்கள். ஆகவே அப்படி திரு. ரகுமான்கான் அவர்களுக்கும் பேச வாய்ப்புத் தரவேண்டும். வேண்டுமானால் என் கட்சியின் சார்பிலே அவருக்கு வாய்ப்புக் கொடுத்துவிடுங்கள். நான் பேசவில்லை. எனக்குப் பதிலாக திரு. ரகுமான்கான் அவர்கள் பேசட்டும்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்திருக்கக்கூடிய இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் நேற்று மாநிலக் கல்லூரி மாணவர்களுக்கு எதிராகவும், விக்டோரியா ஹாஸ்டலிலே இருக்கின்ற மாணவர்களுக்கு எதிராகவும் நடத்தப்பட்ட தாக்குதல் பற்றியது. நமது முதலமைச்சரவர்கள் அடிக்கடி சொல்கிறாரே, அந்தப் பொது மக்கள் கூட்டங்கள் காவல் துறையைச் சார்ந்த கூட்டத்தோடு சேர்ந்துகொண்டு மாணவர்களுக்கு எதிராக மிகப்பெரிய தாக்குதல் நடத்தி இருக்கிறார்கள். குறிப்பாக அங்கே இருக்கக்கூடிய மாநிலக் கல்லூரியில் 400 கல்லூரி மாணவிகள் சாப்பாட்டிற்குக் கூட வெளியே போக முடியாமல் இருண்ட அறையிலேயே இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தக் கல்லூரியிலே இருக்கக்கூடிய கெமிஸ்ட்ரி லாபரேட்டரியிலே உள்ள பொருட்கள் எல்லாம் அடித்து நொறுக்கப்பட்டிருக்கின்றன. வெளியே இருந்து பல ரவுடிகள் உள்ளே புகுந்து அங்குள்ள மேஜை நாற்காலியை எல்லாம் உடைத்திருக்கிறார்கள். ராஜா சிங் என்ற மாணவர் உயிருக்கு ஆபத்தான நிலையிலே ஜி-எச்-லே

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சேர்க்கப்பட்டிருக்கிறார். இன்னும் பல மாணவர்கள் ஆஸ்பத்திரியிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. விக்டோரியா ஹாஸ்டல் மாணவர்கள் சாப்பிட முடியாமல் அவர்களுடைய தட்டுகளை எல்லாம் கூட தூக்கி எறிந்திருக் கிறார்கள். அதற்குப் போலீசும் உடந்தையாக இருந்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இதற்கென்று ஒரு விசாரணை வைக்கவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஜாபர் அலி என்பவர் ஒரு போலீஸ் அதிகாரி. அவர் இங்கே இருந்து கோயம்புத்தூருக்கு மாற்றப்பட்டிருக்கிறார். அதேபோல விஸ்வநாதன் என்பவர் ராமநாதபுரத்திற்கு மாற்றப் பட்டிருக்கிறார். ஆனால் நேற்று நடைபெற்ற சம்பவங்களில் அவர்களும் கலந்துகொண்டிருக்கிறார்கள். நான் அதனை ஆதாரத்தோடு சொல்ல விரும்புகிறேன். மாற்றப்பட்ட அதிகாரிகள் எப்படி இங்கே வந்தார்கள் என்பதைப் பற்றி விளக்க வேண்டும். அவர்கள் மாற்றப்பட்டார்கள் என்று முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது. பிறகு எப்படி அந்த இடத்திற்கு வந்தார்கள்? அதுமட்டுமல்ல. *** *** ***

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு உறுப்பினர் ஒரு பொருளை அவையில் காட்டுவதாக இருந்தால் அதை என்னிடம் காட்டி முன் அனுமதி பெற்ற பிறகுதான் காண்பிக்க வேண்டும், என்னுடைய முன் அனுமதி பெறாமல் சபையிலே எந்தப் பொருளும் கொண்டுவரப்படக்கூடாது. அதுவும் திரு. ரகுமான்கான் போன்ற உறுப்பினர்கள் இப்படி நடந்துகொள்ளக் கூடாது.

மேலும் அவர்கள் ஏன் அவையை ஒத்திவைத்து இந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்கான காரணங்களைச் சொல்ல வேண்டும், அதற்குள் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு இசைவு கொடுத்து விட்டதைப் போல விளக்கமாக பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே திரு. ரகுமான்கான் அவர்கள் கையில் வைத்திருக்கின்ற பொருளைக் காட்டிப் பேசியது அத்தனையும் நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

முன்பு திரு. புருஷோத்தமன் அவர்கள் கூட அவையில் ஒரு பொருளைக் காட்ட என் அனுமதி வேண்டினார்கள். நான் அனுமதி அளித்த பிறகே காட்டினார்கள். நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆகவே எதை வேண்டுமானாலும் தலைவரின் அனுமதியின்றி அவையில் கொண்டுவந்து காண்பிக்கலாம் என்று எண்ணக் கூடாது.

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

<u>திரு. அ. ரகுமான்கான் :</u> தலைவரவர்களே, இப்படிப்பட்ட சூழ்நிலை இருப்பதன் காரணத்தால் அவையின் மற்ற அலுவல் களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-30]

<u>திரு. கே. கந்தசாமி :</u> பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சபை உறுப்பினர்களுக்குப் பலவிதமான உரிமைகள் இருக்கின்றன என்பதை நாம் மரபாக நாம் ஏற்றுக் கொண்டிருந்தாலும் இப்படிப்பட்ட பயங்கர விளைவுகளை விளைவிக்கக்கூடிய பொருள்களை சபைக்குள் கொண்டுவரலாமா? உறுப்பினர் அவர்கள் அதன் விளைவுகள் தெரியாமல் அதைக் கொண்டுவந்து அது வெடிக்குமானால் என்ன ஏற்படும், ஆகவே எங்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும். இப்படிப்பட்ட பொருள்களை சபைக்குள் கொண்டுவருவது முறைதானா என்பதற்கு தங்களது மேலான தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அருகில் வரும்போது நாமே ஆபத்துக்கு உள்ளாவோமோ என்று பயந்தேன்.

<u>திரு. க. அன்பழகன் :</u> தலைவர் அவர்களே, அதன் விளைவு ஏற்கனவே தெரிந்து கொண்டுவரப்பட்ட வெறும் கூடு. வெறும் கூடைத்தான் கையில் எடுத்து வந்தார்களேதவிர; அதுகுறித்து பயப்படுகிற நிலையிருந்தால் அவரே எடுத்து வந்திருக்க மாட்டார்களென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்பாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அதைப் பார்த்த பிறகு தானே அது வெறும் கூடு என்று தெரிந்தது. அதைக் காட்டும் போது உள்ளே ஏதாவது இருந்திருந்தால் என்ன செய்வது, ஆகவேதான் வேண்டாம் என்று சொன்னேன்.

<u>திரு. எஸ். ஆர். இராதா :</u> இந்தக் கூட்டை அவர்கள் கொண்டுவந்து காட்டியது சம்பந்தப்பட்டவற்றை நீக்கி விட்டீர்கள். அதற்குப் பின்னால் எழுந்த விவகாரங்கள் குறிப்பில் வரப்போகிறதா? அதை அனுமதிக்கப் போகிறீர்களா?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அவர்கள் எடுத்துக் காட்டியதை நீக்க வேண்டும் என்று உத்தரவிட்டேன். இப்படிப் பட்ட பொருள்களை உள்ளே கொண்டு வருவதற்கு எனது அனுமதி தேவை என்ற விவரத்தை திரு. கந்தசாமி அவர்கள் சொன்னார்கள். அதனால் விளைவுகள் அதிகமாக வராது.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநிலக் கல்லூரியின் வரலாற்றிலேயில்லாத ஒரு நிகழ்ச்சி நேற்று நடந்திருக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்பாக பச்சையப்பன் கல்லூரியிலே இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி நடந்தது. அப்போது மாணவர்களுக்கு தக்க போலீஸ் பாதுகாப்பு வழங்கப்படும் என்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்ட போது இங்கே சொல்லப்பட்டது. ஆனால் நேற்று நடந்த சம்பவம் மிகவும் பரிதாபத்துக்குரியதாகும். மாநிலக் கல்லூரியைப் பொறுத்தவரையில் தேர்தலின்போது வால்போஸ்டர்கள் அடிக்கக் கூடாது, குறிப்பிட்ட அளவிற்கு போஸ்ட்கார்ட் அளவில்தான் விளம்பரம் செய்யக்கூடிய ஒரு வரையறை வகுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்று மாநிலக் கல்லூரி முதல்வர் அவர்கள் விரக்தியாகச் சொல்லியிருக்கிறார்கள். நிர்வாகத்தில் சரியாகக் கவனம் செலுத்தாத காரணத்தால்தான் இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்று. பொதுவாக வால்போஸ்டர்கள் ஒட்டக்கூடியவர்களை டிஸ்குவாலிபை செய்து வந்தார்கள். நேற்று சம்பவம் இதன் தொடர்ச்சியாக வந்திருக்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும். சம்பவம் நடந்த பிறகு பக்கத்திலுள்ள சில பொதுமக்கள், உங்கள் பாஷையில் சொல்லக்கூடியவர்கள், நேற்றுவந்து ஆண்களும் பெண்களும் சோடா பாட்டில்கள், கற்கள், கம்புகள் எல்லாம் வைத்துக்கொண்டு மிகக் கடுமையாகத் தாக்கியிருக்கிறார்கள். கெமிஸ்ட்ரி லாபரட்டரி கம்ப்ளீட்டாக சேதம் அடைந்திருக்கிறது. அதோடு வகுப்பறைக்குள் நுழைந்து..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகச் சொல்லுங்கள், விவரங்களுக்குள் செல்லாதீர்கள்.

திரு. ரா. கிருஷ்ணன் : மெஸ்—க்குள் சென்றும் ட்யூப் லைட்ஸ், ஃபான்ஸ் இவற்றை எல்லாம் நொறுக்கியிருக்கிறார்கள். இவ்வளவும் போலீஸ் அதிகாரிகளுடைய கண்காணிப்பில்தான் செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கனவே வாக்குறுதி கொடுக்கப்பட்டிருந்தும் கூட மறுநாளே இத்தகைய வன்முறை நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. ஆகவே இதுபற்றி முழுமையாக விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, நேற்று மாணவர்களுக்கும் பஸ் தொழிலாளர்களுக்கும் இடையே நடந்த சண்டையில் போலீஸ் தலையிட்டு கண்ணீர்புகை வெடிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படி நேற்று நடந்த சம்பவங்கள் பல இடங்களிலும் நடக்காது என்று சொல்ல முடியாது. சண்டை வரக் காரணம் என்ன என்று பத்திரிகைகளிலிருந்து தெரிந்து கொண்டது, பஸ்ஸில் ஏதோ

நோட்டீசை கொண்டுவந்து ஒட்ட வந்தார்களாம், அதைத் தடுத்தார்கள், இதுதான் சண்டைக்குக் காரணம் என்று பத்திரிகை வாயிலாக அறிகிறோம். இம்மாதிரி முன்பு பஸ் தொழிலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே நடந்து வந்த சண்டைகள் கொஞ்சம் குறைந்திருக்கிறது இப்போது, மேலும் இப்படி நடந்தால் அது நல்ல விளைவுகளை ஏற்படுத்தாது. ஹாஸ்டலுக்குள் நுழைந்து மாணவர்கள் அடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இம்மாதிரியான சம்பவங்கள் ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்தப்படவேண்டும். இன்று ஏற்படும் தவறுகளைச் சரியான முறையில் தெரிந்து அவை நிவர்த்திக்கப்படவில்லையென்றால் மேலும் பல சங்கடங்கள் ஏற்பட அது ஏதுவாகும். ஆகவே இதுகுறித்து விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, மிக துர்ப்பாக்கியமான சம்பவம் நடைபெற்றிருப்பது நமக்குக் கவலையை உண்டாக்கக்கூடியதாக இருக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன் பச்சையப்பன் கல்லூரி நிகழ்ச்சி சம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானம் வந்தது. அரசு தரப்பில் அதற்கு விளக்கம் கொடுத்தார்கள். உத்திரவாதமும் தந்தார்கள். அடுத்த நாள் மதுரை வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி சம்பவம் ஒன்று. இதில் மோதல்கள் ஏற்பட்டு மாணவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். நேற்றையதினம் மாநிலக் கல்லூரி நிகழ்ச்சி நடந்திருக்கிறது. இந்து பத்திரிகையில் இந்தச் செய்தி தெளிவாக வந்திருக்கிறது. கண்டக்டருக்கும், மாணவர்களுக்கும் ஏதோ வாக்குவாதம் ஏற்பட்டு, பின்னால் கண்டக்டர் இறங்கிச் சென்று அருகாமையிலுள்ள குடிசைவாழ் மக்களிடத்தில் சென்று அவர்களை அழைத்துக் கொண்டுவந்து, மாணவர்களைத் தாக்கியதாக இந்து பத்திரிகையும் மற்றப் பத்திரிகைகளும் குறிப்பிட்டிருக்கிறது. இந்த இடைக்காலத்தில் ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கண்டக்டர் இறங்கிச் சென்று குடிசை வாழ் மக்களை அழைத்து வந்து தாக்குகின்ற அளவுக்கு, இடையில் இருந்த நேரத்தில், ஏற்கனவே இந்த தகராறை அறிந்த போலீசார் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுதான் பெரும் கேள்வியாக இருக்கிறது. போலீசார் இருக்கும்போதே குடிசை வாழ் மக்கள் வந்து தாக்குகிறார்கள் என்று தெரிந்தும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினைக்குள் ஊடுருவிச் செல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். சுருக்கமாக ஏன் ஒத்திவைக்க வேண்டும் என்பதைப்பற்றி மட்டும் சொல்லுங்கள். (குறுக்கிடு) அனுமதி கொடுக்காவிட்டால் பேசுவதற்கு அனுமதிக்கவில்லை என்று சொல்லுகிறீர்கள்.

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> இது மிகப்பெரிய கவலைக்குரிய
விஷயம். மேலும் விடுதிக்குள் நுழைந்து மாணவர்கள் தாக்கப்
பட்டிருக்கிறார்கள், வெளியே உள்ள பொதுமக்கள் என்று
சொல்லக்கூடியவர்கள் ஆஸ்டலுக்குள் சென்றிருக்கிறார்கள்.
போலீஸ்காரர்கள் இருந்தும் இது நடந்திருக்கிறது. விடுதிக்குள்
மற்றவர்களை நுழைய விடாமல் தடுத்திருக்கலாம் அல்லது
மாணவர்களை வெளியே போக வேண்டாமென்று,
தடுத்திருக்கலாம். ஆகவே போலீஸ்காரர்கள் இருந்தும்,
வேண்டுமென்றே மாணவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.
ஆகவே, இது மிகப் பெரிய முக்கியமாக விவாதிக்க வேண்டிய
பிரச்னை. இது அவசரமும், அவசியமும் ஆகும். இதற்கு
முதலமைச்சர் அவர்கள் தெளிவான விளக்கத்தைத் தரவேண்டும்
என்று கேட்டுக்கொள்வதோடு இந்தப் பிரச்னையை
விவாதிப்பதற்கு சபை நடவடிக்கைகளை ஒத்தி வைக்க
வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> தலைவர் அவர்களே, நேற்றயதினம்
மாநிலக் கல்லூரியிலும், விக்டோரியா ஆஸ்டலிலும் ஏற்பட்ட
நிகழ்ச்சிகளைப்பற்றி எனக்கு முன்பு மாண்புமிகு உறுப்பினர்கள்
விரிவாகக் கூறினார்கள். ஆகவே அதை நான் மீண்டும் கூற
விரும்பவில்லை. இருந்தாலும் இப்போது இது எந்த அளவுக்கு
முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையாக இருக்கின்றது என்பதை
மட்டும் சொல்ல விரும்புகிறேன். பரீட்சை எழுதக்கூடிய காலம்
வந்து கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் மாணவர்களிடையே
அமைதியின்மை ஏற்படக் கூடாது, இங்கே நடைபெறுகின்ற
நிகழ்ச்சியைப் பார்க்கிறபோது, சமூக விரோதிகள் மாநிலக்
கல்லூரிக்குள் நுழைந்து, மாணவர்களை காயப்படும்படியான
அளவுக்குத் தாக்கியிருக்கிறார்கள். அதுவும் குறிப்பாக போலீஸ்
காரர்கள் முன்னிலையில் நடைபெற்றிருக்கிறது. சமூக விரோதி
கள் கல்லூரிக்குள் வருவதற்கு என்ன தேவை ஏற்பட்டது? அவ்
விதம் வருவதற்கு அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தது யார்?
அல்லது அரசாங்கத்தின் பாதுகாப்பு அவர்களுக்கு இருக்கின்றது
என்ற நம்பிக்கை இருக்கிறதா? ஆகவே இப்படிப்பட்ட பல்வேறு
நிகழ்ச்சிகள் மற்றக் கல்லூரிகளுக்கும் பரவாமல் தடுக்க வேண்டிய
பொறுப்பு இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது என்பதை இங்கே
நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[முற்பகல் 10·40]

இந்த நிகழ்ச்சி மாணவர்களுக்கு இடையேயும், கண்டக்டருக்கு
இடையேயும் ஏற்பட்ட நிகழ்ச்சி அல்ல. மாணவர்களுக்கு இடை
யேயும் ஏற்பட்ட நிகழ்ச்சியும் அல்ல. மாணவர்களை மற்றவர்கள்

வந்து தாக்கியிருக்கிறார்கள். ஆகவே, இதில் ஒரு நீதி விசாரணை நடத்த வேண்டும். அப்படி நடத்தினால் தான், இதிலே பேக்கிரவுண்ட் என்ன இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள முடியும். ஆகவே, இது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை. இதை விவாதிக்க, இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. மு. அம்பிகாபதி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன் பச்சையப்பன் கல்லூரியில் இம்மாதிரியான சம்பவம் நடந்தது. கடந்த ஆண்டு எம். சி. ராஜா ஆஸ்டலில் நடந்தது. நேற்றைய தினம் சென்னை மாநிலக் கல்லூரியிலும்; விக்டோரியா ஆஸ்டலிலும் நடந்திருக்கிறது. மாணவர்களைத் தொடர்ந்து தாக்குவது என்பதும், மாணவர்களுக்கும் பஸ் தொழிலாளர்களுக்கும் பிரச்னை ஏற்பட்டால், அடியாட்களை வைத்து மாணவர்களைத் தாக்குவது என்பதும் இப்போது நடைமுறையாக இருக்கிறது. எந்தப் பிரச்னையானாலும், அது என். ஜி. ஓ. பிரச்னையானாலும் அல்லது ஆசிரியர்கள் பிரச்னையானாலும் வெளியே இருந்து வந்து தாக்குவது என்பது ஒரு வழக்கமாகி வருகிறது. இதன் பின்னணி என்ன? நேற்றையதினம் இந்த ஆஸ்டலிலும் சரி, மாநிலக் கல்லூரியிலும் சரி வெளியே இருந்து குண்டர்கள் வந்து மாணவர்களைத் தாக்கியிருக்கிறார்கள். மாணவர்கள் மலர் போன்ற மென்மையானவர்கள். அவர்களை இப்படித் தாக்குவது நல்லதல்ல. எனவே, மாணவர் சமுதாயத்தைப் பாதுகாப்பதற்கு மாணவர்களை அழைத்துப் பேசி ஒரு முடிவு காண வேண்டும். அதோடு, இப்படி பச்சையப்பன் கல்லூரியில், நேற்றைய தினம் ஆஸ்டலில், இன்னும் மாநிலக் கல்லூரியில் நடந்த இந்தச் சம்பவங்களைப் பற்றியெல்லாம் விசாரிக்க ஒரு நீதிபதியை வைத்து கமிஷன் அமைப்பதற்கு அரசு முன்வரவேண்டும். இதைப் பற்றி விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> தலைவர் அவர்களே, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை கொண்டுவந்து, சபையை ஒத்தி வைக்க வேண்டுமென்று இங்கே பேசிய எதிர்க்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் நேற்றையதினம் மாநிலக் கல்லூரியில் நடைபெற்ற சம்பவங்களைப் பற்றியும், அது சம்பந்தமாக எங்கு பெரும் கலவரமாக ஆகிவிடுமோ என்கின்ற அச்சத்தையும் வெளிப்படுத்தினார்கள். நான் முதல் முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, அந்தச் சம்பவங்களின் தொகுப்பை உற்று நோக்கினால், நிச்சயமாக அத்தகைய அச்சத்திற்கோ அல்லது பெரும் விளைவுக்கோ இடமில்லை என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநிலக் கல்லூரியில் மாணவர் பேரவைக்கான தேர்தல் பெப்ரவரி மாதம் 21 ஆம் தேதி நடைபெற இருக்கிறது. அந்தப் பேரவைக்கான தேர்தலில் போட்டியிடுகின்ற மாணவர்களை ஆதரித்து, மாநிலக் கல்லூரியின் சுற்றுப்புற மதிலின் வாயிலிலே மாணவர்கள் நின்றுகொண்டு, அங்கே வருகின்ற மாணவர் களிடத்தில் தேர்தல் வாக்குகளை கேட்டு வருகின்றனர். நேற்றைய தினம் 16 ஆம் தேதி, சுமார் 10.30 மணி அளவில் மாணவர்கள் இத்தகைய வாக்கு கேட்கின்ற நிகழ்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டு இருந்தபோது, அங்கே ஒரு பேருந்து வந்தது. அந்தப் பேருந்தில் மாணவர் தேர்தலுக்கான சுவரொட்டியை ஒட்ட வேண்டுமென்று மாணவர்கள் முயற்சித்திருக்கிறார்கள். சுவரொட்டி ஒட்ட வருவதைக் கண்ட பேருந்து ஓட்டுனர் அந்தப் பேருந்தை வேகமாக எடுத்துச் சென்று விட்டார். அதற்குப் பிறகு 13-பி வழித் தடத்தில் இன்னொரு பேருந்து அவ்வழியே வந்தது. முதலில் சென்ற பேருந்து வேகமாகச் சென்ற காரணத்தினால், அந்தப் பேருந்தில் இந்தச் சுவரொட்டியை ஒட்ட வேண்டுமென்று முயற் சித்து மாணவர்கள் கல்லால் அடித்திருக்கின்றனர். அப்படிக் கல்லால் அடித்தபோது, அந்தச் சாலையில் நின்று கொண்டிருந்த பெண்மணி மேல் அந்தக் கல் பட்டு விட்டது. அந்தப் பெண்மணி மாணவர்களை ஏசியிருக்கிறார். அதைப் பார்த்துக் கொண்டிருந்த பேருந்து நடத்துனர், 'படித்திருக்கின்ற நீங்கள் இப்படிக் கல் எறியலாமா' என்று அவரும் மாணவர்களைக் கேட்டிருக்கிறார்.

ஆத்திரம் அடைந்த மாணவர்கள் அந்த கண்டக்டரை அடித் திருக்கிறார்கள். கண்டக்டர் அடிபட்டதைப் பார்த்த அருகிலே இருந்த பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த டைம் கீப்பரும், ஒரு மாட்டாங்குப்பம் வாசியும் ஓடிவந்து கண்டக் டரைக் காப்பாற்ற முயற்சி செய்திருக்கிறார்கள். இந்த அடி தடியில் அவர்களுக்கும் அடி விழுந்திருக்கிறது. மாட்டாங்குப்பம் வாசி அடிபட்டதும் உடனே அந்தப் பிரச்சினை மாணவர்களுக்கும் பஸ் தொழிலாளர்களுக்கும் என்ற நிலைமை மாறி மாணவர் களுக்கும் மாட்டாங்குப்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் என்று ஆகி விட்டது. ஆகவே, மாட்டாங்குப்பத்தைச் சேர்ந்தவர் அடி பட்டார் என்ற நிலைமை ஏற்பட்டதும் அந்தக் குப்பத்திலிருந்து சுமார் 500 பேர் திரண்டு வந்து விட்டார்கள். அவர்கள் வருகிறார்கள் என்ற நிலைமை ஏற்பட்டவுடன் மாணவர்களும் சுமார் 500 பேர் திரண்டு விட்டார்கள். இந்தச் சூழ்நிலையில் இரு கும்பல்களுக்குமிடையே கல்லெறி துவங்க ஆரம்பித்து விட்டது கல்லெறி வேகமாக நடைபெற்றுக்கொண்டிருந்த சூழ் நிலையில் தகவல் அறிந்தவுடன் காவல் துறையைச் சேர்ந்த துணை ஆணையாளர் (சட்டம் ஒழுங்கு—தெற்கு), துணை ஆணை யாளர் (சட்டம் ஒழுங்கு—வடக்கு), துணை ஆணையாளர் (போக்குவரத்து), உதவித் தலைமை போலீஸ் அதிகாரி (அசிஸ் டன்ட் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ்) ஆகியோர்

காவலர்களுடன் விரைந்து சென்றார்கள். சுமார் 11 மணி அளவில் அவர்கள் அங்கே சென்றிருக்கிறார்கள். இருசாராரையும் கலைந்து போகும்படி எவ்வளவோ வற்புறுத்தியும் ஒன்றும் நடை பெறவில்லை.

இதற்கிடையில் 13-பி என்ற பேருந்தை தீ வைத்துக் கொளுத்த முயன்றதாகவும், தீ விபத்தைத் தடுக்கவேண்டுமென்ற முயற்சி ஏற்பட்ட அந்தச் சூழ்நிலையில் காவல் துறையினர் வேறு வழியின்றி கண்ணீர்ப்புகைக் குண்டுகளைப் பிரயோகப்படுத்தும் நிலைமை ஏற்பட்டது. சுமார் 8 கண்ணீர்ப்புகைக் குண்டுகள் இரு சாராரின் மீதும் பிரயோகப்படுத்தப்பட்டன. அதில் 5 மாணவர்கள் காயமுற்றனர். 13 பொதுமக்கள் காயமுற்றனர். 4 காவல் துறையினர் காயமுற்றனர். 4 பல்லவன் போக்கு வரத்துக் கழகப் பேருந்துகள், அவ்வழியே சென்ற பேருந்துகள் கல்லெறியினால் சேதம் அடைந்திருக்கின்றன.

ஆனால் இருவர் மட்டும்—மாணவர்களில் இருந்து ஒருவரும் பொது மக்கள் சார்பில் இருந்து ஒருவரும் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை செய்யப்பட்டு வருகிறார்கள். மாணவர் இராயப்பேட்டை மருத்துவ மனையிலும், பொது மக்கள் சார்பில் காயமுற்றவர் பொது மருத்துவ மனையிலும் வைத்து மருத்துவ சிகிச்சை செய்யப்படுகின்றனர். இது சம்பந்தமாக திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

நேற்றையதினம் கல்லூரிக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. இன்று சூழ்நிலை சுமுகமாக இருக்கிறது. இதிலே நான் தெரி விக்க விரும்புவது ஏதோ காவல் துறையினர் குப்பத்திற்குச் சென்று குப்பத்தில் இருக்கின்றவர்களைக் கொண்டு வந்து மாநிலக் கல்லூரியில் இருக்கும் மாணவர்களை அடிக்க வேண்டுமென்றோ அல்லது அங்கே இருக்கிற விஞ்ஞானக் கூடங்களைத் தகர்க்க வேண்டுமென்றோ நிச்சயமாக அவசியம் இல்லை ஒரு சிறு தீப் பொறியானது எப்படி பெரும் கலவரமாக மாற்றிவிட்டது என் பதற்கு எடுத்துக்காட்டாக இது இருக்கிறது. தற்போது நிலைமை கட்டுக்கு அடங்கியிருக்கும் காரணத்தால் அவையின் மற்ற நட வடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று பேரவைத் தலைவர் அவர்களே, உங்களிடம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை யென்ற காரணத்தால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. கவன ஈர்ப்புத் தீர்மானங்கள்.

(அ) மின் உற்பத்திக் குறைவினால் மின் வெட்டுக் கொண்டு வரப் பெறுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், டி. ஞான சிகாமணி, ஆர். கிருஷ்ணன், சி. கோவிந்தராஜன், ந. பழனி வேல், என். வரதராஜன் ஆகியோர் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரின் கவனத்திற்கு ஒரு நிகழ்வினைக் கொண்டுவர திர் மானம் கொடுத்திருக்கிறார்கள்....

திரு. கே. கந்தசாமி : பாயின்ட் ஆப் ஆர்டர். தாங்கள் சமநீதி வழங்குவீர்கள் என்பதில் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு. Under similar circumstances, similar occurences have taken place in Madurai District in Vellaichamy Nadar College......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து எந்த அடிப் படையில் ஒழுங்குப் பிரச்சினை எழுப்புகிறீர்கள் என்று சொன்னால் நலமாக இருக்கும்.

(முற்பகல் 10.50)

திரு. கே. கந்தசாமி : நான் அதுபற்றி 41-ல் வேறு கொடுத்து இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 41-இல் கொடுத்திருந்தால் அது நிச்சயமாக வரும். திங்கட்கிழமை காலையில் அது எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, "மின் உற்பத்தி குறைந்துள்ளதால், தமிழகத்திலுள்ள பல ஊர்களுக்குப் பகல் நேரங்களில் மின் சப்ளை நிறுத்தப் படும் என்று அரசு அறிவித்துள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து" மின்சாரத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தமிழகத்தில் தற் போதைய மின்சாரத் தேவை ஏறத்தாழ 1800 மெகாவாட் ஆகும். இத்தேவையைப் பூர்த்தி செய்ய நெய்வேலி அனல் மின் நிலையத்திலிருந்து 400 மெகாவாட் மின்சாரம் கிடைக்கிறது.

2. நெய்வேலியிலிருந்து 400 மெகாவாட் மின்சாரம் கிடைப் பதற்குப் பதிலாக சுமார் 225 மெகாவாட் மின்சாரமே கிடைத்து வந்தது. இந்த அளவும் 5.2.1979 முதல் 130 மெகாவாட்டாகக் குறைந்து பின்னர் 7.2.1979-ல் இது 100 மெகாவாட்டாகக் குறைந்தது. இந்தச் சூழ்நிலையில் தமிழ்நாட்டின் மின் தேவையை முழுவதுமாகச் சமாளிக்க இயலவில்லை. ஆதலால், பகல் நேரத்தில் மட்டும் கீழ்க்கண்ட இடங்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ள படி மின்சார சப்ளை தடைசெய்ய வேண்டியது குறித்து மின் வாரியம் 8. 2. 1979 அன்று அறிக்கை வெளியிட்டது :

(1) காலை 6 மணி முதல் 8 மணி வரையிலும், பிற்பகல் 12 மணி முதல் 2 மணி வரையிலும் மின் சப்ளை தடை செய்யப் படும் இடங்களும் அதன் சுற்றுவட்டாரங்களும் :
ஆத்தூர், சின்னசேலம், கடலூர், வில்லியனூர், விருத்தா சலம், விழுப்புரம், திண்டிவனம், பண்ருட்டி, போளூர், காஞ்சி காவேரிப்பாக்கம், ஆரணி, திருவண்ணாமலை, செங்கல்பட்டு, திருவள்ளூர், திருத்தணி மற்றும் வேலூர்.

(2) காலை 8 மணி முதல் 10 மணி வரையிலும், பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரையிலும் மின் சப்ளை தடை செய்யப்படும் இடங்களும் அதன் சுற்றுவட்டாரங்களும் :

கயத்தாறு, மதுரை, தாழையூத்து, தேனி, இராம நாதபுரம், மேலக்கல்லூர், கல்லக்குடி, செம்பட்டி, வேளங்குடி, திருச்சி, தஞ்சாவூர். தாத்தையங்கார்பேட்டை, புலியூர், மாய வரம், மற்றும் திருவாரூர்.

(3) காலை 10 மணி முதல் 12 மணி வரையிலும், பிற்பகல் 4 மணி முதல் 6 மணி வரையிலும் மின் சப்ளை தடை செய்யப் படும் இடங்களும் அதன் சுற்று வட்டாரங்களும் :

ஈரோடு, கோயம்புத்தூர், தாராபுரம், கோபிசெட்டிப் பாளையம், அத்திபூர், சோமனூர், பெரிய நாயக்கன் பாளையம், மேட்டுப்பாளையம், சிங்காரப்பேட்டை, திருப்பத்தூர் குடியாத்தம், வடக்குதிப்பட்டி, ஆம்பூர், அரூர், காரிமங்கலம், வெள்ளிச்சந்தை, சேலம், இராசிபுரம், நாமக்கல், மேட்டூர் மற்றும் சங்ககிரி,

3, நெய்வேலியிலிருந்து கிடைக்கும் மின்சாரத்தில் இப்போது ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இப்போது 150 மெகா வாட் மின்சாரம் கிடைக்கிறது. இன்னும் ஒரு வாரத்தில் நெய் வேலியிலிருந்து 400 மெகாவாட் மின்சாரம் தமிழ்நாடு மின் வாரியத்திற்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இப் போது 350 மெகாவாட் கிடைப்பதால் இத்தடை நீக்கப்பட்டது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். நான் இன்னொரு விஷயத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். நெய்வேலியிலே 400 மெகாவாட் உற்பத்தி குறைந்ததன் காரணமாகத்தான் இப்படி ஏற்பட்டது என்று சொன்னார்கள். இப்படிப் பல இடங்களிலே பல தடவைகள் ஏற்பட்டு உற்பத்தி பாதிக்கப்பட்டதன் காரணமாக தடை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தடுப்பதற்கு பர்னஸ் ஆயில் பயன்படுத்தியோ அல்லது கேரளா போன்ற அண்டை மாநிலங்களிலேயிருந்து வாங்கியோ இப்படித் தடையில்லாமல் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நெய்வேலி அனல் மின் நிலையம் 400 மெகாவாட் உற்பத்தி செய்யக்கூடியது. அந்த உற்பத்தி குறைகிறபோது பர்னஸ் ஆயில் மூலமாகவோ அல்லது கேரள மாநிலத்திலிருந்து வாங்குவதன் மூலமாகவோ பெரிய அளவுக்கு வாங்கி அப்படிப் பெரிய அளவிற்குச் செய்யமுடியாது. ஏனென்றால் பெருமளவுக்கு அப்படிச் செய்வது என்பது முடியாது. அங்கிருந்து வருகிற அளவு குறைந்த போது அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது. இது தற்காலிகமான ஒன்று. நெய்வேலி நிலையத்திலுள்ள இயந்திரங்களில் ஏற்பட்ட சில கோளாறுகளின் காரணமாக ஒரு வாரம் வேலை செய்யாமல் போய்விட்டதே தவிர வேறல்ல.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, இப்பொழுது மின்சார வெட்டு எந்தெந்தப் பகுதிகளிலே இருக்கின்றது என்பதைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். இப்படிப் பட்ட அந்தக் குறிப்புகளை முன்கூட்டியே பத்திரிகைகளுக்கு விளம்பரம் செய்வது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். இப்படிப்பட்ட ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்பு கிறேன். அத்துடன், இப்பொழுது கேரளாவிலிருந்து வாங்கக் கூடிய மின்சாரத்தின் விலை கூடியிருப்பதாகக் கேள்விப்பட்டேன். ஆகவே, இதனால் பயன்படுத்துகிறவர்களுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, 8-2-1979 அன்றே பத்திரிகையில் இந்தத் தடை பற்றிய குறிப்பு வெளியிடப்பட்டது. நேற்று நிலைமை அபிவிருத்தி அடைந்ததும் நேற்றைய தினம் தடைகளும் ரத்து செய்யப்பட்டு விட்டன. இன்றைய காலைப் பத்திரிகையிலும் வந்திருக்கிறது.

கேரள மின்சாரத்தைப் பற்றித் தனியாகக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. மா. மணிமாறன் அவர்களும், திரு. மு. அம்பிகாபதி அவர்களும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை கொண்டுவருவார்கள் திரு. மா. மணிமாறன் அவர்கள்

(ஆ) விவசாயிகளுக்கு கூட்டுறவுச் சங்கக் கடன்களைத் தள்ளிவைக்க வேண்டியம் அவசியம் குறித்து.

திரு. மா. மணிமாறன் : தலைவரவர்களே, 41-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

''1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் தொடங்கிய மழை வழக்கத்திற்கு மாறாக, 1979 சனவரி திங்கள் இரண்டாவது வாரத் தொடக்கம் வரை பெய்ததின் காரணமாகத் தஞ்சை மாவட்டத்தில் விளைச்சல் குறைவினால் விவசாயிகள் பாதிக்கப் பட்டுள்ள நிலையில், கூட்டுறவுச் சங்கக் கடன்களைத் தள்ளி வைக்க வேண்டிய அவசியம் குறித்து''.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, புயல், வெள்ளம் மற்றும் வறட்சி போன்ற இயற்கையின் உற்பாதங்களினால் பயிர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் போது கூட்டுறவு விவசாய சேவை சங்க அங்கத்தினர்களின் நடப்பாண்டின் திருப்பிச் செலுத்த கெடு ஏற்படுகின்ற குறுகிய கால விவசாயக் கடன்கள் அந்த ஆண்டு வசூலிக்கப்படுவதில்லை. வருவாய்த் துறை அதிகாரிகள் சராசரி மகசூல் 6 அணாவுக்கும் குறைவாக உள்ளது என்று வழங்குகின்ற அனாவாரி சான்றிதழ் களின் அடிப்படையில் குறுகிய காலக்கடன்கள் மூன்று ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் மத்தியக் காலக் கடன்களாக மாற்றப்படுகின்றன. மேலும் ஏற்கனவே மாற்றம் செய்யப் பட்டுள்ள குறுகிய காலக் கடன்கள் தொடர்ந்து மறு ஆண்டும் பயிர் பாதிப்பு ஏற்படும்போது மேலும் இரண்டு ஆண்டுகளில் கடன் தவணைகளை, ஆக மொத்த 5 ஆண்டுகளில் திருப்பி செலுத்தும் வகையில் கடன் தவணை நீட்டிக்கப்படுகிறது.

அண்மையில் ஏற்பட்ட பலத்த மழையினால் தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் கூட்டுறவு மத்திய வங்கியின் எல்லைக்குட்பட்ட 276 கிராமங்களிலும் தஞ்சாவூர் கூட்டுறவு மத்திய வங்கியின் எல்லைக்குட்பட்ட 84 கிராமங்களிலும் ஆக மொத்தம் 360 கிராமங்களில் பயிர் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் இந்த கிராமங்களில் சராசரி மகசூல் 6 அணாவுக்கும் குறைவாக உள்ளது என்றும் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது

தஞ்சாவூர் கூட்டுறவு மத்திய வங்கியினைப் பொறுத்த வரை அனாவாரி சான்றிதழ் குறுவைப்பயிர்களுக்கு மட்டும் வழங்கப் பட்டுள்ளது. ஆனால் மத்திய வங்கி பாதிக்கப்பட்ட குறுவைப் பயிர்களுக்குக்கடன் வழங்கவில்லை. எனவே தஞ்சாவூர் கூட்டுறவு மத்திய வங்கியைப் பொறுத்த வரையில் கடன் மாற்றம் அல்லது ஏற்கனவே மாற்றம் செய்யப்பட்ட கடன்களின் தவணை நீட்டிப்பு என்ற அவசியம் ஏற்படவில்லை.

கும்பகோணம் கூட்டுறவு மத்திய வங்கியினை பொறுத்த வரையில் அனாவாரி சான்றிதழ் வழங்கி 11.49 இலட்சம் ரூபாய் குறுகிய காலக்கடன் மத்தியக் காலக் கடன்களாகவும் ஏற்கனவே மாற்றம் செய்யப்பட்ட 35.18 இலட்சம் ரூபாய் குறுகிய காலக்கடன்கள் கடன் தவணையை நீட்டிப்பு செய்யவும் வேண்டி யுள்ளது. கும்பகோணம் கூட்டுறவு மத்திய வங்கி இது தொடர்பாக ரிசர்வ் வங்கிக்குத் தேவையான மாற்றுக்கடன் விண்ணப்பம் தயாரித்து அனுப்ப நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றது.

<u>திரு. க. அன்பழகன் :</u> அனா காலம் போய்விட்டது இப்பொழுது நயாபைசா வந்துவிட்டது.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :</u> அனா இருந்த காலத்தில் வழக்கத்திற்கு வந்தது, இனிமேல்தான் நயாபைசா என்று மாற்ற வேண்டும்.

[முற்பகல் 11.00]

<u>திரு. மா. மணிமாறன் :</u> பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் சொல்கின்றபொழுது, மேலத் தஞ்சையிலே மட்டும் குறுவையில் வாங்கிய கடனை ஒத்தி வைத்திருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் வழக்கத்திற்கு மாறாக தஞ்சையில் கடந்த 3 மாத காலமாகத் தொடர்ந்து பெய்த மழையின் காரணமாக விளைவு மிகவும் பாதிக்கப்பட்டுவிட்டது. அனாவாரிச் சான்று சென்ற ஆண்டு கொடுத்துவிட்ட காரணத் தால், ரெவின்யூ அதிகாரிகள் சார்பில் இந்த ஆண்டு கொடுக்க அச்சப்படுகிறார்கள். ஆகவே, அரசு விளைவு என்ன ஆயிற்று என்று அறிய குழு அமைத்தாலொழிய விவசாயிகளுக்குப் பாது காப்பு கிடைக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ரெவின்யூ ஆட்களை நம்பினால், விவசாயிகள் பாதிக்கப்படுகிற நிலைமையில் இருக்கிறார்கள். இன்னொன்று, கடந்த 3, 4 தடவையாக ஒத்தி வைத்திருக்கிற காரணத்தினால், விளைந் திருக்கிற விளைச்சல் வட்டிக்குக் கூட இல்லாத அளவு — விவசாயம் பாதிக்கப்பட்டு— இருக்கிறது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட என். டி. சி. மீட்டிங்குக்குச்சென்று வந்ததற்குப் பின்னாலே விவசாயிகளுக்கு முடிவு சொல்வதாகக் கூறியிருக்

கிறார்கள். எனவே, அவர்களைக் கலந்து கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் கடன் வசூல்களைத் தள்ளி வைக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :</u> தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய மேலான யோசனை அனுதாபத்தோடு பரிசீலிக்கப்படும்.

<u>திரு. மு. அம்பிகாபதி :</u> மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இந்தப் பசலியைப் பற்றி சில விளக்கங்களைச் சொன்னார்கள். மிக முக்கியமான பிரச்னை தஞ்சை மாவட்டத்திலே எழும்பியிருக்கிறது. 1385 ஆம் பசலி வறட்சி, 1386 ஆம் பசலி — வெள்ளம்—அரசாங்கமே அறிவித் திருக்கிறது. 1387 ஆம் பசலி புயல்—அரசே ஒப்புக்கொள்கிறது. 1388 ஆம் பசலி வெள்ளம். அத்தனையும் ஏற்றுக்கொண்டிருக் கிறது அரசு. இவ்வளவையும் ஏற்றுக்கொண்டு விவசாயிகள் வாங்கிய கடனை ஒத்தி வைக்கிறோம், சேர்த்துக் கொடுங்கள் என்றால், நிலத்தை விற்றாலும் வராது. எனவே, அந்தக் கடன்கள் முழுவதையும் தள்ளுபடி செய்ய ஏதாவது திட்டம் வைத்திருக்கிறார்களா என்று விவசாயிகள் கேட்கிறார்கள், கிளர்ந்தெழுகிறார்கள், மாநாடு நடத்துகிறார்கள். எனவே, அரசாங்கம் அதனைப் பரிசீலித்து சுத்தமாக தள்ளுபடி செய்கின்ற வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த 1388 ஆம் பசலியில் விளைவு இல்லை; விளைவு இல்லை என்பதோடு மட்டுமல்ல, விலையும் இல்லை. விவசாயிகள் கடும் கோரமான தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :</u> மாண்புமிகு தலைவர் அவர்களே, இதற்கு முன்பு பேசிய மாண்புமிகு மணி மாறன் அவர்கள் சொன்னதைப் போல், முதல்வர் அவர்கள் டெல்லி சென்று வந்த பிறகு நல்ல முடிவுகளை, அங்கே, டெல்லியிலே, கலந்துபேசி அறிவிக்க இருக்கிற காரணத்தினாலே மாண்புமிகு உறுப்பினர்கள் உறுதியோடு இருக்கலாம் என்று நான் இந்த அவைக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

<u>திரு. மா. மணிமாறன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லி பேரரசு அந்த முடிவுக்கு மறுத்துவிட்டாலும் கூட அனுதாபத்தோடு தமிழக அரசு தமிழக விவசாய மக்களுக்கு உதவுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்றைக்குமே தமிழக அரசு விவசாயிகளுடைய நலன் காக்கின்ற அரசுதான்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாராஷ்டிரத்திலே ரூ. 138 கோடி, பீகார் மாநிலத்தில் ரூ. 180 கோடி விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அதனையும் அரசு பரிசீலிக்குமா? இங்கு தள்ளுபடி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினருக்கு சொல்லப்படுகிறது என்றுதான் சொல்லமுடிகிறதே தவிர அவர்கள் தள்ளியிருக்கிறார்களா என்ற விவரம் சொல்ல வில்லை. என்றாலும்கூட அந்த யோசனையை நிச்சயமாக இந்த அரசு பரிசீலிக்கும்.

(5) அரசினர் தனித்தீர்மானம்

அரசியல் அமைப்பு 45-வது திருத்தச் சட்டத்திற்கு ஏற்பளிப்பது குறித்து.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Mr. Speaker, Sir, I move,

'That this House ratifies the amendments to the Constitution of India falling within the purview of the proviso to clause (2) of article 368 thereof, proposed to be made by the Constitution (Forty fifth) Amendment Bill, 1978, as passed by the two Houses of Parliament and he Short title of which has been changed into 'The Constioution (Forty-fourth Amendment) Act, 1978'

The primary objects of the said Bill are to provide adequate safe guards against the recurrence in the future of the Fundamental Rights including those of life and liberty, being taken away by a transient majority, and to remove or correct the distortions which came into the Constitution by reason of amendments enacted during the period of Internal Emergency.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

Sir, I commend the resolution for the ratification by this House.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றத்தின் இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்ட இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 45-வது திருத்த மசோதாவை இந்தப் பேரவை ஆதரிக்கிறது. அதற்கான தீர்மானத்தை கற்றறிந்த நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் இங்கே முன்மொழிந்து இருக்கிறார்கள். இந்தத் திருத்தத்தின் மீது நடைபெறுகிற விவாதத்தில் கலந்து

கொண்டு நான் சார்ந்து இருக்கின்ற கழகத்தின் சார்பாக இந்திய அரசியல் சட்டத்திற்கான 45-வது திருத்தத்தை ஆதரிக்கிறேன் என்பதை எங்கள் கட்சியின் சார்பாக நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் நான் இன்னொன்றையும் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டியவனாக இருக்கிறேன். இங்கே கொண்டு வரப்பட்டு இருக்கும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 45-வது திருத்தம், முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் கொண்டு வந்த 42-வது அரசியல் திருத்தத்தை மாற்றி அமைக்கும் வகையில் இருக்கிறது. அன்றைக்குக் கொண்டு வரப்பட்ட அரசியல் திருத்தச் சட்டம் ஜனநாயகத்திற்கு விரோதமாக, ஜனநாயக உரிமைகளைப் படுகொலை செய்யும் விதத்தில் பல ஷரத்துக்களை உள்ளடக்கியதாக இருந்தது. எடுத்துக்காட்டாகச் சொல்லவேண்டுமானால், தொழிற்சங்க உரிமைகளைப் பறிக்கும் விதத்தில், மொழி ஆதிக்கம் கூடாது என்று வாதாடுவதைத் தடுக்கும் விதத்தில், அதுபோன்ற வேறு ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் அம்சமாக அந்த 42-வது அரசியல் சட்டத்திருத்தம் இருந்தது. அந்த 42-வது அரசியல் சட்டத் திருத்தத்தின் ஷரத்துக்களை ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் நிலைமையில் உள்ள அந்த ஷரத்துக்களை நீக்கும் விதத்தில் தான் இன்றையதினம் அவசர நிலைப்பிரகடனத்தை எதிர்த்து மிகப்பெரிய யுத்தம் நடத்தியபோது திராவிட முன்னேற்றக் கழகத்தோடு இணைந்து நின்று இந்திரா காங்கிரசை எதிர்த்து நின்ற ஜனதா கட்சி இன்றைக்கு ஆட்சிப் பொறுப்புக்கு வந்த உடனே அந்த 42-வது அரசியல் சட்டத்திருத்த ஷரத்துக்களை நீக்கும் வகையில் 45-வது திருத்தத்தைக் கொண்டு வந்து இருக்கிறது. இதிலே வேடிக்கை என்னவென்றால், அன்றையதினம் அவசர நிலைப் பிரகடனம் செய்யப்பட்டிருந்தபோது, 42-வது அரசியல் சட்டத்திருத்தம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டபோது, இன்றைக்கு ஆட்சிப்பொறுப்பில் இருக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அதை ஆதரித்து வாக்குகளை வழங்கியது. ஆனால் இன்றைய தினம் அந்த 42-வது அரசியல் சட்டத் திருத்தம் ஜனநாயகத்திற்கு விரோதமானது, ஜனநாயக உரிமைகளைப் பறிக்கக்கூடியது, ஆகவே' அதை நீக்கவேண்டும் என்கிற வகையில் கொண்டுவரப்பெற்றுள்ள 45-வது அரசியல் சட்டத் திருத்தத்தையும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கிறது. அன்று இந்திரா காந்தியை ஆதரித்தது, இன்று மொரார்ஜி தேசாயை ஆதரிக்கிறது. காரணம் அவர்களுடைய சின்னம், இரட்டை இலை, ஆகவே, இரட்டைக் கொள்கை. அன்றும் ஆதரித்தார்கள், இன்றும் ஆதரிக்கிறார்கள். அந்த வகையில் அவர்கள் இரட்டை வேடம் நடிப்பதில் வெற்றி பெற்று இருக்கிறார்கள் என்பதை இந்த அவையில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. அ. ரகுமான்கான்] [1979 பிப்ரவரி 17

அடுத்து நான் கேட்கவிரும்புவது, முதலமைச்சர் அவர்களுக்கும் சட்ட அமைச்சர் அவர்களுக்கும் இதிலே ஒத்த கருத்து இருக் கிறதா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அண்மையில் முதலமைச்சர் அவர்கள் வெளிநாடு சென்று பல விசேஷ உண்மைகளைக் கண்டறிந்து வருவதற்காகச் சென்றபோது அவர்கள் வெளிநாடுகளில் பேசுகிறபோது அவசர நிலைப் பிரகடனம் இருந்தபோது பல நன்மைகள் வந்தன என்றும், அவசர நிலைப் பிரகடனம் நாட்டிற்குத் தேவையானதாக இருந்தது என்றும் பேசியிருக்கிறார். ஆனால் நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் மதுரையில் பேசுகிறபோதும், மற்ற சந்தர்ப்பங்களில் பேசுகிறபோதும் அவசரநிலைப் பிரகடனம் விரும்பத்தகாதது என்றும், அதை ஆதரிக்க முடியாது என்றும் அன்றும் பேசினார், இன்றும் பேசினார். ஆகவே நான் கேட்க விரும்புவது இந்த அரசாங்கத்தின் கொள்கை என்ன? முதலமைச்சர் அவர்களின் கருத்து என்ன என்று கேட்க ஆசைப் படுகிறேன். உங்களின் அரசியல் கருத்து என்ன? இதிலும் முதலமைச்சருக்கு ஒரு கருத்து, சட்டஅமைச்சருக்கு ஒரு கருத்து இருக்கிறதா? இதிலும் இரட்டைபோக்கா? காரணம் அவர்களுடைய சின்னம், இரட்டை இலை, அதனாலே இரட்டைப் போக்கு.

[முற்பகல் 11–10]

இன்னொரு கருத்தையும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 45-வது அரசியல் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பது அரசியல் சட்டத்தினுடைய 18-வது பிரிவு எமர்ஜன்ஸிப் பற்றிப் பேசுகிறது; அவசரநிலைப் பிரகடனத்தைப்பற்றிப் பேசுகிறது. போர் அல்லது, வெளிநாட்டு ஆக்கிரமிப்பு அல்லது உள்நாட்டுக் கலவரம்—அதாவது நாட்டின் பாதுகாப்புக்கு உள்நாட்டிலிருந்து கலவரங்கள் ஏற்படுமானால் அவசரநிலைப் பிரகடனம் செய்யலாம் என்று 18-வது பிரிவு சுட்டிக்காட்டுகிறது. இப்போது இந்த ஜனதா அரசு கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டத்திருத்தத்தில் அவர்கள் சொல்லியிருப்பது, Declaration of emergency in the event of internal disturbance in the country. இன்டர்னல் டிஸ்டர் பன்ஸ்—உள்நாட்டுக் கலவரம் ஏற்படுகிறது என்றால் அதை அவரவர் சவுகரியத்திற்கேற்ப பயன்படுத்தி, அவசரநிலையைப் பிரகடனம் செய்யலாம் என்ற ஒரு குற்றநிலையை உருவாக்கி யிருக்கிறார்கள். அது கூடாது உள்நாட்டுக் கலவரம் என்பதற்குச் சரியான விளக்கம் இல்லை. ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி, அதுதான் இன்டர்னல் டிஸ்டர்பன்ஸுக்குக் காரணம், அப்படி இல்லாவிட்டாலும் இருக்கிறது என்று சொல்லி எமர்ஜன்ஸி டிக்ளேர் செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அந்நியநாட்டு ஆக்ரமிப்பு என்றால் இருக்கலாம். ஆனால் அதே

1979 பிப்ரவரி 17] [திரு. அ. ரகுமான்கான்]

நேரத்தில் உள்நாட்டுக் கலவரம் என்பதற்குப் பதிலாக ஆயுதம் தாங்கிய புரட்சி இருக்கவேண்டுமென்ற மாறுதலைச் செய்திருக் கிறார்கள். 42-வது அரசியல் சட்டத் திருத்தம் வந்தபோதே இது ஜனநாயக விரோத செயல் என்று சொல்லி எதிர்த் திருக்கிறோம். அதே கருத்தைத்தான் இந்த 45-வது அரசியல் சட்டத் திருத்த மசோதா கூறுகிறது. அவசர நிலைப் பிரகடனம் இருக்கலாம் என்று சொல்வதை ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொள்ளவில்லை; அந்த ஷரத்து இருக்கக்கூடாது என்று சொல்கிறது. வெளிநாட்டுப் படையெடுப்பு, ஆக்கிரமிப்பு இருந்தால்' இந்திய நாட்டுக்கு ஒரு பேரபாயம் ஏற்படுமானால் பாதுகாப்பு நடவடிக்கைக்காக இந்த எமர்ஜன்சியை டிக்ளேர் செய்யவேண்டும் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அப்படியே இருந்தாலும் அதை முடிவு செய்ய வேண்டியது சுப்ரீம் கோர்ட்டுதான்.

இன்றைக்கு அமெரிக்காவிலே 'எமர்ஜன்ஸி கிடையாது. ஆஸ்திரேலியா அரசியல் சட்டத்தில் எமர்ஜன்சிக்கு புரொவிஷன் கிடையாது; 'வார் பவ்வர்ஸ்' தான் இருக்கிறது, போர் காலத்தில் மாநிலங்கள் தங்களுடைய விருப்பத்தின் பேரில் மத்திய அரசுக்குச் சில உரிமைகளை விட்டுக்கொடுக்கலாம். நமமுடைய நாட்டில் உள்நாட்டுப்பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பங்கம் எற்பட்டிருக்கிறது, அபாயநிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை சுப்ரீம் கோர்ட் தெரிவிக்க வேண்டும். அதன்பிறகு தான் எமர்ஜன்சி டிக்ளேர் செய்யலாம்.

1935 ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தில் இப்படிப்பட்ட ஒரு பிரிவு கிடையாது. அதுமட்டுமல்ல. உள்நாட்டுக்கலவரம் என்பதற்கு 'ஆர்ம்டு ரிபெலியன்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆர்ம்டு ரிபெலியன் என்றால் என்ன? நாடாளுமன்றத்தில் எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் முரசொலி மாறன் அவர்கள் சொன்னார்கள். ஆர்ம்டு ரிபெலியன் என்று சொல்வதற்கும் இன்டர்னல் டிஸ்டர்பன்ஸ என்று சொல்வதற்கும் வித்தியாசம் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். கம்பு கொண்டு தாக்குவதைக்கூட ஆர்ம்டு ரிபெலியன் என்று சொல்லலாம். அப்படியானால் ஓட்டேரியில் நடைபெற்ற சாராயச் சண்டை கூட ஆர்ம்டு ரிபெலியன்தான். அதற்காகக் கூட எமர்ஜன்சி டிக்ளேர் செய்யவேண்டியதுதான். இந்தத் திருத்தத்திலே பல நல்ல அம்சங்கள் இருந்தாலும் இன்டர்னல் டிஸ்டர்பன்ஸுக்கு அவர்கள் சொல்லியிருக்கிற காரணம் சரியில்லை; எமர்ஜென்ஸி டிக்ளேர் செய்யலாம் என்பதற்கான காரணம் சரியில்லை. ஓட்டேரி சாராயச் சண்டைக்கெல்லாம் எமர்ஜன்ஸி டிக்ளேர் செய்யலாம் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதைத் தெளிவாக விளக்கிட விரும்புகிறேன்.

சீன ஆக்கிரமிப்பின்போது எமர்ஜன்ஸி டிக்ளேர் செய்தார்கள். பாகிஸ்தான் படையெடுப்பின்போது டிக்ளேர் செய்தார்கள். அதை அண்ணா அவர்கள் வரவேற்றார்கள்; கலைஞர் அவர்கள் வரவேற்றார்கள். அதே ரீதியில் எங்கள் கட்சி இப்போதும் வரவேற்கிறது.

அடுத்து நான் சொல்ல விரும்புவது அரசியல் சட்டத்தின் 356-வது பிரிவு பிரசிடென்ட் ரூல் பற்றிச் சொல்கிறது. இதில் எந்த அளவுக்கு இந்த அரசு இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். காரணம் நம்முடைய இந்த ஆட்சிக்கு எப்போதுமே ஒரு அபாயகரமான ஆபத்து இருக்கிறது. இங்கே கவர்னர் இருக்கிறார். சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று அவர் ஒரு ரிப்போர்ட் மத்திய அரசுக்கு அல்லது ஜனாதிபதிக்கு அனுப்பினால் போதும்; இந்த அரசைக் கவிழ்த்து விடுவார்கள்.

கவர்னருடைய ரிப்போர்ட் செல்ல வேண்டும் என்று கூட இல்லாமல், ஜனாதிபதி தனக்குத் தானே இங்கு சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டது என்று கருதினால் கூட, அந்த வகையில் அவர் திருப்தி அடைந்தால் கூட குடியரசுத் தலைவர் ஆட்சியை ஒரு மாநிலத்திலே கொண்டுவந்துவிட முடியும். இது மிகவும் ஜனநாயக விரோதமான ஒன்று, மாநில ஆட்சிக் கொள்கைக்கு விரோதமான ஒரு சரத்து. ஆகவே இந்த சரத்து இருக்கக்கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இந்த அரசியல் சட்டத்தை நிர்ணயிக்கும்போதே ஒன்று சொன்னார்கள், இந்தக் குடியரசுத் தலைவர் ஆட்சியை மாநிலங்களிலே பிரகடனப் படுத்துவதை நான் அதிகமாக விரும்ப மாட்டேன் என்றார். தவிர்க்க முடியாத சூழ்நிலையில் இதனை அமல் நடத்த வேண்டும் என்றிருந்தால் அதை விசாரித்து அந்த மாநிலத்திடம் ஒரு விளக்கம் கேட்கவேண்டும். அப்படி அவர்கள் விளக்கம் கொடுத்தபின்னாலும் அதிலே திருப்தி ஏற்படவில்லை என்றால் தான் ஆட்சியை மாற்ற வேண்டும், அப்போதும் பிரெசிடென்ட் ரூலைக் கொண்டுவரக்கூடாது. ஒரு தேர்தல் நடத்தித்தான் ஆட்சியை மாற்ற வேண்டும் என்று டாக்டர் அம்பேத்கார் அன்றைக்கே சொன்னார்கள்.

கவர்னர் திருப்தி அடையவில்லை என்று சொன்னால், ஜனாதிபதி திருப்தி அடையவில்லை என்று சொன்னால் ஒரு மாநிலத்தின் அரசைக் கவிழ்க்கின்ற அபாயம் இருக்கிறது. அவர்களது விருப்பப்படி ஆட்சியைக் கவிழ்க்கின்ற அபாயகரமான சூழ்நிலை இருக்கின்றது.

இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். 1959-லே நடந்தது எல்லோருக்கும் தெரியும். திரு. நம்பூதிரிபாட் அவர்கள் தலைமையிலே கேரளாவிலே ஆட்சி நடைபெற்று வந்தது. அந்த அரசினை விலக்கினார்கள், விலக்கிவிட்டு குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டு வந்தார்கள். அப்போது அதற்காகக் கூறப்பட்ட காரணம் என்ன தெரியுமா? மிகவும் மோசமான ஒரு காரணம் கூறப்பட்டது. ''அங்கே இருக்கின்ற அரசியல் கைதிகளை எல்லாம் அந்த அரசினர் விடுதலை செய்து அவர்களை எல்லாம் மார்க் ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களாக ஆக்குகிறார்கள். கம்யூனிஸ்ட்காரர்கள் நிர்வாகத்திலே தலையிடுகிறார்கள்'' என்கின்ற காரணங்களைச் சொல்லி 1959-லே அன்றைக்கு கேரளாவிலே இருந்த திரு. நம்பூதிரிபாட் அவர்கள் தலைமை யேற்று நடத்திய ஆட்சியைக் கலைத்தார்கள். ஆகவே மத்திய அரசிற்கு விரோதமான ஆட்சி என்றால் கலைத்துவிடுகின்ற சூழ்நிலை இருக்கின்றது என்பதைக் கேரளாவிலே 1959-லே நடைபெற்ற நிகழ்ச்சியை வைத்தே அறிந்து கொள்ள முடியும்.

இங்கே இன்னொரு நிகழ்ச்சியையும் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். 1965-லே இங்கே இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. அப்போது தமிழ்நாடு பூராவும் ஆர்ப்பரித்து எழுந்தது. கடல் அலை போல் மக்கள் எழுந்தனர். எரிமலையாக வெடித்தது அந்தப் போராட்டம். அப்போது தமிழ்நாட்டிலே சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று அந்த அரசை மத்திய அரசு கலைக்க உத்தரவிட்டதா? இல்லை. ஏன் என்றால் அப்போது தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தவர் திரு. பக்தவத்சலம் அவர்கள். அப்போது இங்கே பிரெசிடென்ட் ரூல் கொண்டுவரப்படவில்லை. பிரசிடென்ட் ரூல் டிக்ளேர் செய்யப்படவில்லை. ஆகவே மாநிலங்களிலே இருக்கின்ற அரசு எப்போதும் மத்திய அரசினை அனுசரித்து இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலைதான் இன்றைக்கு ஜனநாயகத்தின் பெயராலே இருக்கின்ற இந்த அரசியல் சட்டத்திலே ஜனநாயக விரோதமான சரத்து இருக்கின்றது. இது இருக்கக்கூடாது.

அடுத்து மற்றொன்று. இங்கே இந்தியாவில் இதுவரை 34 தடவை மாநிலங்களிலே ஆட்சி கலைக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டிருக்கிறது. அந்த 34 தடவைகளிலேயும் திருமதி இந்திரா காந்தி அம்மையார் ஆண்ட காலத்திலே 24 தடவை மாநிலங்களிலே ஆட்சி கலைக்கப்பட்டு குடியரசுத்தலைவர் ஆட்சி கொண்டுவரப் பட்டிருக்கிறது. திருமதி இந்திரா காந்தி அவர்கள் சிறந்த ஜனநாயகவாதி என்று நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட வெளிநாடுகளிலே எல்லாம் சென்று சொல்லியிருக்கிறார்கள். ஒருவேளை இப்படிப்பட்ட அந்தத் தன்மைகளைத்தான் அவர் சிறந்த ஜனநாயக முறை என்று எடுத்துக்கொண்டு அப்படிச்

சொன்னாரோ என்று தெரியவில்லை. ஆக இப்படி 24 தடவை
அந்த அம்மையாருடைய ஆட்சியிலே குடியரசுத்தலைவர் ஆட்சி
மாநிலங்களிலே பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது..

திரு. எ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு.
ரகுமான்கான் அவர்கள 24 தடவை குடியரசுத்தலைவர் ஆட்சி
நடைபெற்றது என்று சொன்னார்கள். ஆகவே நான் ஒன்று
கேட்க விரும்புகிறேன். குடியரசுத தலைவர் ஆட்சியை
மாநிலங்களிலே கொண்டுவரக்கூடாது என்பதற்கு ஏதாவது
மாற்றங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றனவா என்று அறிந்து
கொள்ள விரும்புகிறேன்

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, நான் அந்தப்
பிரச்சினைக்குள் வருவதற்குள்ளாக கற்றறிந்த பெரியவர்
திரு. மாரிமுத்து அவர்கள் அவசரப்பட்டுவிட்டார்கள் என்று
கருதுகிறேன். குடியரசுத் தலைவர் ஆட்சி கூடாது என்று
நான் சொல்லவில்லை. அதிலே இருக்கின்ற, அந்த அரசியல்
சட்டத்திலே இருக்கின்ற இப்படிப்பட்ட சில அம்சங்கள்
வேண்டாம் என்றுதான் சொல்வதற்கு வந்தேன்.

[முற்பகல் 11–20]

இங்கே கொடுத்திருக்கக்கூடிய 45-வது திருத்தச்சட்டப்படி
குடியரசுத் தலைவர் ஆட்சி ஒரு ஆண்டு காலம் இருக்கலாம்.
ஒரு ஆண்டுக் காலத்திற்கு மேல் நீடிக்கக்கூடாது என்று
சொல்லியிருக்கிறார்கள். அதேபோல எமர்ஜன்ஸி பற்றிக் கூறும்
போது அது எவ்வளவு ஆண்டுகள் வேண்டுமானாலும் இருக்கலாம்,
அதற்கான காலம் குறிப்பிடப்படவில்லை. அவசர நிலைப்
பிரகடனம் இருந்தால் ஒரு மாநிலத்தில் குடியரசுத் தலைவர்
ஆட்சி எவ்வளவு காலம் வேண்டுமானாலும் இருக்கலாம்.
ஆனால் நார்மல் கண்டிஷன்ஸில், எமர்ஜன்ஸி இல்லாத காலத்தில்
குடியரசுத் தலைவர் ஆட்சிக்காலம் ஒரு ஆண்டுதான் இருக்க
வேண்டும் என்று இதன்படி சொல்கிறார்கள். இது ஜனநாயக
விரோதமானது. ஒரு ஆண்டு என்றிருக்கக்கூடாது. குடியரசுத்
தலைவர் ஆட்சியை ஒரு மாநிலத்தில் எப்போது புகுத்து
கிறார்களோ உடனே தேர்தல்கள் வந்தாகவேண்டும். கர்நாடகா
வில் அர்ஸ் மந்திரிசபையைக் கலைக்கிறபோது உடனடியாகத்
தேர்தல்கள் நடத்தப்பட்டன. ஆகவே எவ்வளவு விரைவில்
தேர்தல்கள் வைக்கமுடியுமோ அவ்வளவு விரைவில் தேர்தல்கள்
நடத்தப்பட வேண்டும், ப்ரஸிடென்ட் ரூல் டெக்ளார் செய்தவுடன்
தேர்தலுக்கு ஆணையிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
எங்கள் கட்சி சார்பாக இந்தக் கருத்தை வலியுறுத்த
விரும்புகிறேன். அடுத்து, மத்திய அரசு மாநிலங்களில்
தங்களுடைய போலீஸ் படையை நிறுத்தலாம் என்ற ஒரு
பிரிவு 42-வது அரசியல் சட்டத்திருத்தத்தில் இருந்தது.

திரு. சாந்திபூஷன் அவர்கள் கொண்டுவந்த 45-வது திருத்தச்
சட்டத்தில் அது இருக்கக்கூடாது என்று கொண்டுவந்தார்கள்.
ஆனால் துரதிருஷ்டவசமாக ராஜ்யசபாவில் இந்திரா காங்கிரஸ்
கட்சிக்காரர்களால் அது தோற்கடிக்கப்பட்டுவிட்டது. ஆக,
45-வது திருத்தச் சட்டத்தில் இப்போதுள்ள அரசியலமைப்புப்படி
நிலை என்னவெனில் மத்திய அரசு மாநிலங்களுடைய
ஆலோசனைகளைக் கேட்காமலேயே அவர்களுடைய
விருப்பத்திற்கு எதிராகவே மத்திய அரசு தனது போலீஸ்
படையை நிறுத்தலாம் என்றிருப்பது அபாயகரமானதாகும்.
அது கூட்டாட்சி தத்துவத்திற்கே விரோதமானது. அது
ஜனநாயகத்திற்கு விரோதமானது. சட்டம் ஒழுங்கு கெட்டு
விட்டால் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்தலாம்.
என்று 356-வது பிரிவு இருக்கும்போது மத்திய அரசு தனது
போலீஸ் பட்டாளத்தை அதுவும் மாநில அரசைக் கேட்காமலேயே
வைத்திருப்பது என்பது ஜனநாயகத்திற்கு விரோதமானதாகும்
என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல் கல்வி
பொதுப்பட்டியலில் இருக்கிறது. அது மாநிலப் பட்டியலில்தான்
இருக்க வேண்டும். 35-வது திருத்தச்சட்டப்படி கல்வி மாநிலப்
பட்டியலில்தான் இருந்தது, இப்போது அதைப் பொதுப்
பட்டியலில் கொண்டுவருவது என்றால், மத்திய அரசுக்கு
இந்தியைப் புகுத்த கல்வி இலாகாவை, கல்வித் துறையைப் பயன்
படுத்துவதற்கான ஒரு வாய்ப்பு இருக்கிறது. இன்னும் சொல்லப்
போனால் தொழிற்பயிற்சிக் கல்லூரியில் படிக்கிற மாணவர்
களுக்குக் கேள்வித் தாள்கள் இந்தியில் கொடுக்கப்படுகிறது.
அதைத் தடுக்க முடியாத ஒரு சூழ்நிலை. ஆகவே இந்தி ஆதிக்கத்
தைத் தமிழ்நாட்டில் புகுத்துவதற்கு, கல்வியைப் பொதுப்பட்டிய
லில் வைப்பது அதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்த முடியும்.
ஆகவே அது மாற்றியமைக்கப்பட வேண்டும்.

திரு. பொ. விஜயராகவன் : பாயின்ட் ஆப் ஆர்டர்.
மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சொல்கிற
போது கல்வி பொதுப்பட்டியலில் இருக்கிறது என்று
சொன்னார்கள். அது ஒரு தவறான தகவல். கல்வி
கன்கரன்ட் லிஸ்டில் இருக்கிறது என்பதை அவர்கள் புரிந்து
கொள்ள வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : இன்னொன்று. சட்டப்படி—Right
to property-Fundamental right—என்று, சொத்துரிமை மக்களது
ஜீவாதார உரிமை என்றிருந்தது ; ஆனால் இப்போது அது
ஜீவாதார உரிமைகளில் ஒன்று என்று சொல்ல முடியாது என்று
சொல்லியிருக்கிறார்கள், இது ஒரு முற்போக்கான கருத்து.
சொல்லப்போனால் ஒரு சோஷலிஸ சமுதாயத்தை, ஒரு
நிலப்பிரபுத்துவமற்ற சமுதாயத்தை, முதலாளித்துவ
சுரண்டலற்ற சமுதாயத்தை உருவாக்க இது ஒரு பெரிய

முற்போக்கான வாய்ப்பாக அமையும். ஆகவே, இந்த கடமைப்பட்டிருக்கிறோம். அம்சத்தை நாங்கள் பாராட்டக் எமர்ஜன்ஸி காலத்தில் அதேபோல் தடுப்புக் காவல் சட்டப்படி, எண்ணிப்பார்க்கும்போது, இருந்த இருண்ட நாட்களை விசாரணை இல்லாமலேயே சிறைச்சாலைகளில் தள்ளப்பட்டார் கள். அப்போது சிறை சென்றிருந்தவர்களுக்குத் தெரியும், இவர்கள் ஆட்சி வந்தபிறகு அட்வைஸரி போர்ட்டுக்கு ரெபர் செய்யாமல் மூன்று மாத காலம் வைக்கலாம் என்பதை இப்போது ஒரு மாதம் என்று குறைத்திருக்கிறார்கள், இதனால் என்ன பலன்? இந்த "ப்ரவின்டிவ் டிட்டென்ஷன்" என்பதே இருக்கக்கூடாது. அது அபாயகரமானதாகும். 42-வது திருத்தச் சட்டப்படி ஜனநாயகத்திற்கு விரோதமாகப் போகக்கூடிய அம்சங்கள் கொண்டுவரப்பட்டன, இதில் சில முற்போக்கு அம்சங்கள் இருப்பதை வரவேற்கிறோம். அதேநேரத்தில் பல பிற்போக்கான அம்சங்களும் இருக்கின்றன. அவற்றைக் களைய வேண்டும். அரசியல் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவர மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை. அதேநேரத்தில் கூட்டாட்சித் தத்துவ அடிப்படையில் இயங்கும் நாடுகளில் மாநிலங்களும் திருத்தங்கள் கொண்டு வர உரிமை இருக்கிறது. ஆனால் இந்தியாவில் இருப்பது கூட்டாட்சித் தத்துவம்தான் என்று சொல்லப்பட்டு வந்தாலும், இப்படிப்பட்ட மத்திய அரசின் அரசியலமைப்பு சட்டத்திருத்த தீர்மானங்களுக்கு நம்மால் திருத்தங்கள் கொண்டு வர முடியாது. இந்தச் சட்டத்திற்கு நாம் அங்கிகாரம் வழங்குகிறோம். மத்திய அரசு கொண்டு வருகின்ற இந்தச் சட்டத் திருத்தத்திற்கு அகில இந்திய அண்ணா தி. மு. க.வும் அங்கீகாரம் அளிப்பதோடு, இதில் இருக்கின்ற சிரமங்களைக் குறிப்பிட்டு, மத்திய அரசுக்கு ஒரு குறிப்பு அனுப்ப வேண்டும். முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். இவர்களுடைய போக்கு ஒரே குழப்பாக இருக்கிறது. இப்போது மொரார்ஜி தேசாயையும் ஆதரிக்கிறார்கள், அப்போது வந்த 42-வது அரசியல் சட்ட திருத்தம் வந்தபோது, அதையும் ஆதரித்து ஓட்டுப் போட்டார்கள். இதுதான் இரட்டை இலையின் அடையாளம், இதுதான் இரட்டைக்கொள்கை என்று சொல்லுகிறார்களா என்பதை கேட்டுக்கொண்டு அமருகிறேன்.

திரு. ஒ. சோ. வேலுச்சாமி: தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் சார்பில், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 45-வது திருத்தத்தில் ஒரு சில கருத்துக்களைச் சொல்லவிரும்பு கிறேன். நமது மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள இந்தத்தீர்மானத்தை முன்மொழிகின்றபோது, ஆதார உரிமை களில் சில குறைபாடுகள் 42-வது திருத்தச் சட்டத்தில் ஏற்பட்டு விட்டது. ஆகவே, அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற் காக 45-வது திருத்த மசோதா கொண்டுவரப்படுவதன் குறிக் கோள் என்று சொன்னார்கள்.

பொதுவாக சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்கு மத்திய அரசும் மாநில அரசும் சட்டங்கள் இயற்றுகின்றன. ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு முன்பு இந்திய அரசியலமைப்புச் சட்டம் இயற்றப்பட்டது. ஆனால் சமூக பொருளாதார வளர்ச்சி முன்பு இருந்ததற்கும், இப்போது இருப்பதற்கும், அப்போதுள்ள பிரச்னைகளுக்கும் இப்போதுள்ள பிரச்சினை களுக்கும் பெரும் வேறுபாடு இருப்பதின் காரண மாக அரசியலமைப்புச் சட்டத்தை திருத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அது மட்டும் ஒரு காரணம் என்று சொல்லிவிட முடியாது. சமீபத்தில் ஜனதா துணை பிரதமராக இருக்கும் ஜகஜீவன்ராம் அவர்கள் ஐதராபாத்தில் பேசுகின்றபோது' சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு நீதிமன்றங்களில் சட்டங்களுக்குக் கொடுக்கப்படுகின்ற வியாக்கி யானங்களால் பெரிய பிரச்னை ஏற்படுகிறது. இதன் காரணமாக அதிகமான திருத்தங்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் ஏற்பட்டு விட்டது என்று அவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். 42-வது திருத்தச் சட்டத்தில் எந்தெந்த அணுகுமுறை இருக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. 42-வது திருத்தச் சட்டத்தின் அடிப்படை, அதன் நோக்கம், அதன் கொள்கை எல்லாம் கூடுமான வரையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 4-வது பிரிவாக இருக்கின்ற வழிகாட்டும் கொள்கை களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது, அதற்கேற்றவாறு முற்போக்குத் திட்டங்களுக்கும் சமூகப் பொருளாதாரத் திட்டங் களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பது தான் அதன் பொருள். அதே நேரத்தில் ஜனதா கட்சியின் அணுகுமுறையில் முக்கியத்துவமாக இருப்பது, அரசியல் அமைப்புச் சட்டத்தில் 3-வது பிரிவான 'பண்டமென்டல் ரைட்ஸ்' ஆதார உரிமைகள் தான் முக்கியத் துவம் என்று வாதாடுகிறார்கள். அப்படிவரும்போது, வழிகாட்டும் கொள்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதா, அல்லது ஆதார உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதா என்பது தான பிரச்னை. ஆகவே இந்தப் பிரச்சனையைத் திசை திருப்ப வேண்டா மென்று அருமை நண்பர் ரகுமான்கான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்த முரண்பாடுகள் இருந்தால், அவற்றை நீக்கக் கூடிய அளவுக்கு 31-சி பிரிவு அரசியலமைப்புச் சட்டத்தில் இருக்கிறது, அதன் அடிப்படையில் ஆதார உரிமைகளையும் கவனித்து, சமூகப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்காகவும் சட்டங்கள் இயற்றப்படவேண்டும். அப்படி ஏதாவது முரண் பாடுகள் வரும்போது நீதிமன்றத்தில் 'அன்-கான்ஸ்டிடியுஷன்' என்று சொல்லி விடக்கூடும். இந்த நேரத்தில் உரிய பணியைச் செய்வதற்குதான் 31-சி பிரிவு இருக்கின்றது.

(முற்பகல் 11-30)

இந்த 31(சி)யிலே கூட காங்கிரஸ் கட்சி 71-ஆம் ஆண்டு 25-வது திருத்தச் சட்டம் கொண்டு வந்தது. அந்த 25-வது திருத்தச் சட்டத்திலே......

திரு. அ. ரகுமான்கான்: அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 31 (டி)-ஐப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதாவது நீதி மன்றங்களுக்கு கொண்டு வருகின்ற போது, அந்தச் சட்டங்கள் சட்டவிரோதமானது என்று கூறுவது ஜீவாதார உரிமையை, அதாவது பண்டமெண்டல் ரைட்ஸ், பேசிக் ரைட்ஸ் ஐப் பாதிக்கிறது. அந்த முரண்பாட்டை நீக்கிவிட வேண்டுமென்பதற்காகத் தான்......

திரு. ஓ. சோ. வேலுச்சாமி: 31 (சி)யிலே 1971 ஆம் ஆண்டு 25-வது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டத்தில் 14, 19, 31 என்ற என்ற பிரிவுகள் ஆதார உரிமைகளைப் பற்றியவை. அதிலே 3-வது பிரிவில் 14, 19, 31 பிரிவுகள் பல்வேறு முற்போக்குத் திட்டங்களைச் சட்டங்களாக்குவதற்கு ஒரு முரண்பாடாக இருந்தன. ஆகவே, எந்த அளவிற்கு முரண்பாடு இருக்கின்றதோ அந்த அளவிற்கு அது செல்லத்தக்கதல்ல என்று சொல்லி, அதன் அடிப்படையில் 25-வது திருத்தம் கொண்டு வரப்பட்டது. சட்டங்கள் சமூக நலனுக்காக, பொருளாதார நலனுக்காக இயற்றப்பட்டால் அந்தச் சட்டங்கள், இந்தப் பிரிவுகளின் அடிப்படையில் செல்லாது என்று கோர்ட்டு சொல்ல முடியாத அளவிற்கு இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இந்தத் திருத்தச் சட்டம்கூட, கேசவானந்த பாரதி வெர்சஸ் கேரள மாநிலம் என்ற வழக்கிலே அந்தச் சட்டம், அரசியல் சட்டத்திற்கு முரண்பாடாக இருக்கிறது என்று சொல்லி நீக்கிவிட்டார்கள். ஆகவே, இந்தக் குறைபாட்டை நீக்குகின்ற அடிப்படையிலே 42-வது திருத்தச் சட்டம் இருக்கிறது. இந்தக் கோட்பாடுகளைப் பற்றி டாக்டர் அம்பேத்கார் அவர்கள் கான்ஸ்டிடியூவன்ட் அசம்பிளியிலே 19-11-48-இல் பேசுகின்றபோது, 'என்னுடைய கணிப்பிலே வழிகாட்டும் கொள்கை அதிக முக்கியத்துவம் கொண்டது. ஏனெனில், அந்த அரசியலமைப்பில் நமது குறிக்கோளான பொருளாதார ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது' என்று சொல்லுகிறார்கள்.

In my judgment Directive principles have a greater value and our ideal is to lay down an Economic Democracy.

ஆகவே, இந்த வழிகாட்டும் கொள்கையின் அடிப்படையிலே நாம் சட்டத்தை இயற்ற முடியவில்லை அந்த அடிப்படையிலே. சட்டத்தை இயற்ற முடியாது ஒரு சூழ்நிலை நிச்சயமாக

ஏற்பட்டிருக்கிறது. எனவே, நாம் பொருளாதார ஜனநாயகத்தை அடைய முடியாது என்பதைத் தான் டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய கருத்து என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பாராளுமன்ற விவாதத்தில் இரண்டு பேர்களுடைய கருத்துக்கள் பேசப்பட்டன. எதிர்க் கட்சித் தலைவராக இருக்கும் மதிப்பிற்குரிய திரு. ஸ்டீபன்ஸ் அவர்கள் சோஷியலிச கொள்கையை அதாவது வழிகாட்டும் கொள்கையை வலியுறுத்தியிருக்கிறார்கள். ஜெத்மலானி அவர்கள் முதலாளித்துவ கொள்கைக்கு ஆதாரமான உரிமைகளின் அடிப்படையிலே அங்கே பேசுகின்றார்கள். ஆகவே, ஒரு பெரிய முரண்பாடு இருக்கிறது. சோஷலிச கொள்கைக்கும், முதலாளித்துவ கொள்கைக்கும் இருக்கக்கூடிய பெரிய முரண்பாடு என்பதை நாம் மறந்துவிட முடியாது. ஆனால் புதிய சமுதாயத்தை ஏற்படுத்தப் போவதாகச் சொல்கிறார்கள். இந்தப் புதிய சமுதாயம் எந்த அளவுக்கு ஜீவாதார உரிமைகளுக்கு அவைகள் முரண்பட்டதாக, முட்டுக்கட்டையாக இருக்கின்றதோ, அவைகளை நாம் நீக்கித்தான் ஆகவேண்டும். நீக்க முடியாது, நீக்கக் கூடாது என்று சொல்வது பெரிய ஜனநாயக விரோதமாகும்; சர்வாதிகாரமான காரியமாகும். ஆகவே, ஒருசில பேர்களுடைய தனிப்பட்ட உரிமைகள் பாதுகாக்கப்படுகிறது; அதனால் சமுதாயத்திற்கு நன்மைகள் ஏற்படாமல் அது பாதிக்கின்றது என்ற அடிப்படையிலே ஹெரால்டு லஸ்கி கொள்கை விளக்கமாக தன் கருத்தைச் சொல்கிறார். கன்சர்வேடிவ் கட்சியைவிட நிர்வாகத்தில் நாங்கள் சிறந்தவர்கள் என்று சொல்ல நான் விரும்பவில்லை, ஆனால் எங்களுடைய கொள்கை புதிய முறையான சமுதாயத்தை ஏற்படுத்துவது என்பதுதான். தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைப் பற்றி ஹெரால்ட் லஸ்கி பேரறிஞர் சொல்கிறார். "Our aim is to create a better and different society."

இதுதான் காங்கிரஸ் கட்சியின் கொள்கை. ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒருவேளை காங்கிரஸ்காரர்களை விட அவர்கள் நிர்வாகத்தை நன்றாக நடத்தலாம். காங்கிரஸ் கட்சிக்கும், ஜனதா கட்சிக்கும் பெரிய வேறுபாடு என்னவென்றால் — நிர்வாகத்தை நடத்துவதில் வேறுபாடு இல்லை, எப்படிப்பட்ட சமுதாயத்தை நாம் ஏற்படுத்தப் போகிறோம் என்பதிலேதான் கொள்கை வேறுபாடு இருக்கிறது. எங்களுடைய கொள்கை ஹெரால்டு லஸ்கியின் கொள்கை. to create a better and different society பொருளாதாரத்தின் அடிப்படையில்தான் ஏற்படுத்தியாக வேண்டும். பொருளாதாரத்தின் அடிப்படையில் ஏற்படுவதற்கு அதில் எந்த அளவுக்கு முரண்பாடுகள் இருக்கின்றனவோ அந்த முரண்பாடுகளை நீக்கித்தான் ஆகவேண்டும்.

அவசரப் பிரகடனம் பற்றி இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஜனதாவின் தேர்தல் அறிக்கையில் அவசரப் பிரகடனம் செய்வதற்கான ஷரத்தை அப்படியே நீக்கிடுவோம் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். 'இன்டர்னல் டிஸ்டர்பன்ஸ்' இருந்தால், உள்நாட்டுக் கலவரம் நடந்தால் அவசரப் பிரகடனம் பிறப்பிக்கலாம். 'இன்டர்னல் டிஸ்டர்பன்ஸ்' என்று இருந்ததை 'ஆர்ம்டு ரிபெலியன்' என்று இப்போது மாற்றியிருக்கிறார்கள். 'ஆயுதம் தாங்கிய ஒரு கலகம்' என்று குறிப்பிடுகிறார்கள். பெருமதிப்பிற்குரிய மத்திய சட்டத்துறை அமைச்சர் சாந்திபூஷன் அவர்கள் இரண்டுக்கும் இடையில் வேறுபாடு இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள்.

உள்நாட்டுக் கலவரம் என்றால் கையாலா சண்டை போடுவார்கள்? 'இன்டர்னல் டிஸ்டர்பன்ஸ்' என்றாலும் 'ஆர்ம்டு ரிபெலியன்' என்றாலும் ஒன்றுதான். முன்பு அவசரப் பிரகடனம் ஏற்படுவதற்கு முன்பு மதிப்பிற்குரிய ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் இராணுவமும் போலீசும் அரசின் கட்டளைகளுக்கு உட்பட்டு நடக்கக்கூடாது; அவர்களை எதிர்த்து புரட்சி செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அதை உண்மையில் அவர்கள் எந்த அடிப்படையில் சொன்னார்கள்? அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் அது இன்டர்னல் டிஸ்டர்பன்ஸ் என்று வராதா? 'இந்த அடிப்படையிலேதான் மக்களுடைய அசெம்பிளியை நடத்த வேண்டும், இந்தச் சட்டமன்றத்தை ஏற்றுக்கொள்ள மாட்டோம்' என்று பீகாரில் சொன்னார்கள்.—

"Towards Total Revolution"

என்ற புத்தகத்தில் தெளிவாகவே கூறியிருக்கிறார்கள். அன்று அவசரப் பிரகடனம் ஏற்பட்டதற்குக் காரணமாக ஜனதா கட்சிக்கு ஆசானாக இருக்கக்கூடிய ஜெயப்பிரகாஷ் நாராயணும் அவர்களுடைய நண்பர்களுந்தான்.

தடுப்புக் காவல் சட்டம் (பிரிவென்டிவ் டிடென்ஷன் ஆக்ட்) பற்றி ஜனதா மத்திய அரசினுடைய துணைப் பிரதமராக இருக்கக்கூடிய சரண்சிங் ஒரு கருத்தைச் சொன்னார். 'பிரிவென்டிவ் டிடென்ஷன் ஆக்ட்' கிரிமினல் ப்ரொசீஜர் கோடில் சேர்ந்திருக்கவேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். இது எந்த விதத்தில் நியாயமான கருத்து என்று தெரியவில்லை. நல்ல வேளையாக அந்த கருத்து ஏற்கப்படவில்லை. அது கிரிமினல் ப்ரொசீஜர் கோடில் சேர்க்கப்பட்டு விட்டால் 'பிரிவென்ட்டிவ் டிடென்ஷன்' அதிகாரம் காவல் துறையினர் கையில் சென்றிருக்கும். அதனால் பயங்கரமான விளைவுகள் ஏற்பட்டிருக்கும். என்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

பிரிவென்டிவ் டிடெக்ஷன் இருக்கவேண்டிய அடிப்படைக் காரணம் ஆர். எஸ். எஸ். இயக்கந்தான். இந்த நேரத்தில் ஒன்றை நான் இந்த மாமன்றத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த பிரிவென்டிவ் டிடெக்ஷன் ஆக்டைப் பயன்படுத்தி ஆத்துராம கோட்சே, நாத்துராம் கோட்சே, இப்போதைய ஜனதா கட்சிப் பொதுச் செயலாளர் நானாஜிதேஷ்முக் ஆகியவர்களை எல்லாம் அன்று கைது செய்திருந்தால் நிச்சயமாக காந்தியடிகளைக் காப்பாற்றியிருக்கலாம். ஜனதா கட்சிப் பொதுச் செயலாளர் நானாஜிதேஷ்முக் காந்தியடிகள் கொலை வழக்கில் அவர் மூன்றாவது எதிரி என்பதை மறந்து விடக் கூடாது. பிரிவென்ட்டிவ் டிடென்ஷன் அந்த அளவுக்கு தேவை என்பதை நான் அறிகிறேன். அதே நேரத்தில் அதைப் பயன்படுத்துகிறபோது மிகவும் ஜாக்கிரதையாகப் பயன்படுத்த வேண்டுமென்பதிலே கருத்து வேறுபாடு யாருக்கும் இருக்க முடியாது. ஜனதா கட்சி ஆட்சி ஏதோ அதிலே பெரிய மாற்றத்தைச் செய்துவிட்டது போல்' ஒரு வருஷம் என்று இருந்ததைச் ஆறு மாதம் என்று மாற்றியிருக்கிறோம்' என்று சொல்லுகிறார்கள். அங்கும் கூட சில காரணங்களுக்காக இந்த ஆறு மாத காலத்தை மேலும் நீடிக்கலாம் என்று சொல்லுகிறார்கள். ஜனதா கட்சியைப் பற்றிச் சொல்லுகிறபோது மாண்புமிகு திரு. ரகுமான்கான் அவர்கள் 'ஜனதா கட்சி இந்த ஷரத்தையே எடுத்துவிட வேண்டும் என்று சொன்னார்கள்' என்று சொன்னார்கள். அங்கே எங்கள் தலைவர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஆட்சி செய்கிறபோது அதிகமான மாநிலங்களில் அதிகமான தடவைகள் இதைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று ஜனதாக் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூறினார்கள்.

(முற்பகல் 11-40)

ஆனால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பாண்டிச்சேரியைப் பொறுத்தவரையில் அவர்கள் சட்டசபையை நாங்கள் கூட்டி மெஜாரிட்டி பலத்தை நிரூபிக்கிறோம் என்று சொல்லியும்கூட இப்போதுள்ள ஜனதா அரசு அங்கே ஜனாதிபதி ஆட்சியை ஏற்படுத்தியதை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆனால் முன்பெல்லாம் சட்டசபையைக் கூட்டி பெரும்பான்மையை நிரூபிப்போம் என்று சொன்னால் அங்கே ஜனாதிபதி ஆட்சி ஏற்பட்டிருக்காது, ஏற்படுத்தி இருக்கவும் முடியாது.

அதைப்போலவே பாராளுமன்ற, சட்டமன்றங்களின் உறுப்பினர்களின் பதவிக்காலத்தினை 6 ஆண்டுகளாக இருந்ததை ஐந்து ஆண்டுகளாகக் குறைத்து இருக்கிறார்கள். இது ஒரு பெரிய மாற்றம் என்று சொல்ல முடியாது, 45-வது திருத்தத்தை பெரிய மாற்றங்கள் கொண்டது என்று சொல்ல முடியாது. சிறுசிறு மாற்றங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்படி மாற்றத்தை ஏற்படுத்தினாலும், வருங்காலத்திலே அரசியலமைப்புச் சட்டத்திலே இருக்கின்ற ஷரத்துக்கள் பொருளாதார சமூக வளர்ச்சிக்கு பயன் உள்ளதாக இருக்க வேண்டும், அப்படி பயன் உள்ளதாக

அவைகள் இல்லையானால் அவைகள் நீக்கப்படும் என்பதையும் தெளிவுபடுத்திக் கொண்டு எனக்கு வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவர் அவர்களே, ஜனதா கட்சி கொடுத்த வாக்குறுதியின் பின்னணியில் இந்தத் திருத்தச் சட்டத்தைப் பார்க்கவேண்டுமென்று நான் சொல்ல விரும்புகிறேன். சர்வாதிகாரத்தின் கட்டுக்கோப்பைத் தகர்த்து எறிய வேண்டுமென்று சொல்லித்தான் அந்த அடிப்படையிலே தேர்தலின்போது பிரச்சாரம் செய்துதான் அவர்கள் அதிகாரத்திற்கு வந்தார்கள். 42-வது அரசியல் சட்ட திருத்தம் சர்வாதிகாரத்திற்கு சட்ட வடிவம் கொடுத்தது என்பது நமக்குத் தெரியும். அதைத் தகர்த்து எறிவதற்காகத்தான் 45-வது அரசியல் சட்ட திருத்தம் வந்திருக்கிறது. லோக் சபாவிலே ஜனதா அரசாங்கத்தின் சார்பாக பிரேரேபிக்கப்பட்டுள்ள பில் அரைகுறையானது, தள்ளாடித் தள்ளாடித்தான் கொண்டு வரப்பட்டது என்று கருதுகிறேன். ஜனதா கட்சியினர் உள்நாட்டு அவசரநிலைப் பிரகடனம் என்பதை தேர்தலின்போது முழுக்க முழுக்க எதிர்த்தார்கள். தேர்தல் பிரச்சார சமயத்திலே சர்வாதிகாரத்தைத் தகர்த்து எறிவோம் என்று சொன்னார்கள் இனிமேல் எந்தக் காரணத்தைக் கொண்டும் அதை அனுமதிக்க முடியாது என்று தேர்தலுக்கு முன்னால் சொன்னார்கள் அந்த ஷரத்தையே நீக்குவோம் என்று சொன்னார்கள். ஆனால் இந்தத் திருத்தச் சட்டத்திலே அந்த ஷரத்தை அவர்கள் நீக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. ஆனால் வார்த்தையை மாற்றியிருக்கிறார்கள். உள்நாட்டு கலவரம் என்றால் அவசரநிலைப் பிரகடனம் செய்யலாம் என்று இருப்பதை உள்நாட்டுக் கலவரம் என்பதற்குப் பதிலாக ஆயுதந் தாங்கிய கலவரம் என்று வார்த்தையை மாற்றியிருக்கிறார்கள், ஆயுதம் தாங்கிய கலவரத்தை அடக்கத்தான் என்று சொல்லிக்கொண்டு அந்த ஷரத்தை துர்உபயோகம் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. ஜெயபிரகாஷ்நாராயண் அவர்கள் நடத்திய இயக்கமானாலும் சரி, மற்ற இயக்கங்களானாலும் சரி, அம்மாதிரி நடந்த இயக்கங்கள் எல்லாம் மக்களுடைய இயக்கங்கள் என்ற முறையிலே தான் தேர்தலிலே மக்கள் தீர்ப்பளித்தார்கள், அந்த இயக்கத்தை உள்நாட்டுக் கலவரம் என்று தான் அன்றைக்கு இருக்கக்கூடிய அந்த ஷரத்தை வைத்துக்கொண்டு அதை துர்உபயோகம் செய்து எமர்ஜன்ஸி டிக்ளேர் பண்ணினார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. அப்படித்தான் ஷா கமிஷனும் கருத்தைத் தெரிவித்து தீர்ப்புக் கூறியிருக்கிறார்கள். இப்போது புதிய திருத்தத்திலே சொல்லியிருப்பதைப் பார்த்தால் அவசரநிலைப் பிரகடனம் செய்ய வேண்டுமென்றால் ஒரு மாநிலத்திலே மாநிலம் தழுவிய போராட்டத்திலே விவசாயிகள் செய்யும் போராட்டத்திலே ஒரு பத்து துருப் பிடித்த துப்பாக்கிகள், 5 நாட்டுத் துப்பாக்கிகள்,

ஒரு 5 வெடிகுண்டுகள், 5 சைக்கிள் செயின்களைக் கொண்டு வந்து வைத்து அவைகளைப் போட்டோ பிடித்து இப்படிப்பட்ட ஆயுதங்களை வைத்து கலவரம் செய்தார்கள் என்று சொல்லி அவசரநிலைப் பிரகடனம் செய்யலாம். ஹிட்லர் அப்படித்தான் செய்தார். அங்கே கம்யூனிஸ்ட் கட்சியும், சோஷலிஸ்ட் கட்சியும் வளர்ந்துகொண்டிருந்ததைப் பார்த்து உடனே பாராளுமன்றத்திற்கே கூலியாட்களை வைத்து தீ வைத்தார்கள்.

கட்டிடம் பூராவையும் எரித்துவிட்டார்கள். அதைச் சொல்லி கம்யூனிஸ்ட் பார்ட்டியை பேன் செய்தார்கள், டிரேட் யூனியனை பேன் செய்தார்கள். அப்படிச் செய்து சர்வாதிகாரத்தைக் கொண்டு வந்தார்கள்.

நான்கு நாட்களுக்குமுன்பு மெக்கோ பிட்டன் தொழிலாளிகள் உண்ணாவிரதம் இருப்பதைப் போலீஸ் தலைமையில் டார்ச் லைட் புரொசஷன் நடந்தது. டார்ச் லைட் புரொசஷன் என்றால் சாதாரணமாக நீண்ட பந்தம் ஏந்திக் கொண்டு புரொசஷன் நடத்துவது உண்டு. அப்படி நடத்தினார்கள். அப்படி நடத்தியதற்காக ஒரு கேஸ் என்ன போடப்பட்டிருக்கிறது என்றால், நேற்றைக்குப் பத்திரிகையிலே பார்த்தேன். கேஸ் போட்டிருப்பது தெரியும். ஆனால் என்ன போட்டிருக்கிறார்கள் என்றால், பயங்கரமான ஆயுதங்களுடன் கலவரம், டெட்லி வெப்பன்ஸ் என்று. டெட்லி வெப்பன்ஸ் என்ன? பந்தங்கள். ஆகவே, இந்த முறையிலேயே இப்படியிருக்கிறது என்றால் பிறகு ஒரு அரசாங்கம் எமர்ஜென்சியை டிக்ளேர் செய்துவிட்டால் என்ன ஆகும்? 10 சாமியை ஒன்றாக ஊர்வலம் விட்டால் அதைக் காட்டி அவசரப் பிரகடனத்தைக் கொண்டு வந்தாலும் வருவார்கள். அப்படியென்றால் ஒரு சாமிக்கு 4 பந்தங்கள் என்றால் என்ன ஆயிற்று? 40 பந்தங்கள். ஆகவே, அதைக் காட்டியே பயங்கர டெட்லி வெப்பன்ஸ் என்று சொல்லி அவசரப் பிரகடனம் கொண்டு வரலாம். இங்கு பக்தர் இல்லை, அவர் இருந்திருந்தால் இதை சப்போர்ட் பண்ண வேண்டி வரும்.

மிசாவை ஜனதாக் கட்சி எதிர்த்தது. என்ன காரணம்? அதில் அடங்கியுள்ள கோட்பாட்டை எதிர்த்தது. விசாரணையின்றி எக்காரணத்தைக் கொண்டும் சிறைப்படுத்தக் கூடாது என்ற அந்தக் காரணத்திற்காக அவ்வாறு செய்வது தவறானது, காட்டுமிராண்டித்தனமாகும் என்று எதிர்த்தது. அதை நீக்க வேண்டுமென்று சொன்னார்கள். Preventive Detention Act என்ற ஆக்ட் கொண்டிருக்கிற ஷரத்து "they have retained" அதற்கு காரணம் என்ன சொல்கிறார்கள் என்றால், துர்விநியோகம் செய்யாமல் இருக்க பாதுகாப்புகளுக்கு ஏற்பாடு செய்திருப்பதாகச் சொல்

கிறார்கள். என்ன பாதுகாப்பு? ஒரு ஆளைப் பிடிக்க வேண்டு மென்றால் சார்ஜ் ஷீட் போட்டு போடுவார்கள், போர்டு கூட்டத்திற்கு விடுதல் என்று சொல்கிறார்கள். இந்த சார்ஜ் ஷீட், போர்டு எல்லாம் நாங்கள் பார்த்தவர்கள்தான. 1952 ஆம் ஆண்டில் இராமமூர்த்தியை டிடென்ஷனில் வைத்தார்கள். அதற்கு சார்ஜ் ஷீட் கொடுத்தார்கள். சார்ஜ் ஷீட் என்ன வென்றால், ஒரு பாராகிராஃப் படிக்கிறேன். அரசாங்க முத்திரையிட்ட படியில்தான் நிலப்பிரபுக்களுக்குக் குத்தகை அளிக்க வேண்டுமென்றும், விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூலி அளிக்க வேண்டுமென்றும் அவர் கோவை விவசாயத் தொழிலாளர்களைத் தூண்டினார் என்பது டிடென்ஷனுக்கு ஒரு காரணம். சர்க்கார் முத்திரையிட்ட படியில்தான் அளக்க வேண்டுமென்று விவசாயிகளைத் தூண்டினாராம். இது ஒரு கவர்மெண்ட் சார்ஜ். அந்த சார்ஜ் ஷீட் போர்டு முன் வைத்து detantion was confirmed ஆகவே, அந்தப் பாதுகாப்பு என்பதெல் லாம் நடக்காத காரியம்.

1965 ஆம் ஆண்டிலே டிடென்ஷன் செய்தார்கள். அதற்குக் காரணம் என்ன சொன்னார்கள் என்றால், சீனாவுக்குத் தூதரை அனுப்ப நாங்கள் பிரச்சாரம் செய்தோம் என்று செய்தார்கள். இதன்படி பார்த்தால், போலீஸ் மந்திரி பட்டேல் அவர்களுக்கும் நம்முடைய நாட்டுப் பிரதம மந்திரி மொரார்ஜி தேசாய் அவர் களுக்கும் சண்டை வந்தால் நிச்சயமாகப் பட்டேல் அவர்கள் மொரார்ஜி தேசாயை டிடெயின் செய்வார்கள். என்ன சார்ஜ் என்று போடுவார்கள் என்றால், மொரார்ஜி தேசாய் அவர்கள் வெளி உறவு அமைச்சர் வாஜ்பாயியை சீனாவுக்கு அனுப்பி வைத்தார் என்று போடலாம். ஆகவே, நிச்சயமாக அவர்களை டிடெயின் செய்ய வேண்டியிருக்கும். ஆகவே, இப்படிப்பட்ட ஆபத்து இருக்கிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—திரு. எஸ். ஜே. இராமசாமி தலைமை)

அதேமாதிரி மாநில அரசுகளைக் கலைக்கும், ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டுவரும் ஷரத்தும் நீக்கப்படவில்லை. ஆனால் பீரியடைக் குறைத்திருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே, ஜனதா அரசாங்கம் கொண்டு வந்திருக்கக்கூடிய திருத்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் என்னுடைய ஷார்ப் கிரிட்டிசிசம் இதுதான்.

ஆனால், சில வரவேற்கக் கூடிய நல்ல அம்சங்களும் இருக் கின்றன. ஏற்கனவே மாநில அரசுக்கு அதிக அதிகாரம் இல்லை, குறைவு தான் என்ற நிலையில், இருந்த குறைச்சலில் கல்வி இருந்தது. அதையும் இந்திரா காந்தி அவர்கள் 42-வது அமென்ட்

மென்ட் மூலம் பறித்து விட்டார்கள். இதைக் கைப்பற்ற, இந்தச் சின்ன அதிகாரத்தைக் கைப்பற்ற திருமதி காந்தி அவர்கள் ஒரு நாசுக்கான சாகசத்தை மேற்கொண்டார்கள். அது மிகவும் ஆச்சரியமானது. நாங்கள் அப்பொழுது அண்டர்கிரவுண்டிலே இருக்கிறோம். திருவனந்தபுரத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் அவர்கள் பேசினார்கள். மக்களே, இந்த எஜுகேஷன் கன்கரண்ட் லிஸ்டிலே இருக்க வேண்டுமென்று நான் ஏன் கேட்கிறேன் என்றால், வடக்கத்திய மக்கள் ஆங்கிலத்தை ஏற்க மாட்டேன் என்று சொல்கிறார்கள், ஆகவே, ஆங்கிலத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ள வைப்பதற்காக சட்டம் இயற்ற எஜுகேஷன் கன்கரண்ட் லிஸ்டிலே வந்தால் அதிகாரம் கிடைக்கும் என்று பேசினார்கள் திருவனந்தபுரத்தில். அதைச் சொல்லிவிட்டு லக்னோவிற்குப் போய் என்ன பேசினார்கள் என்றால், எஜு கேஷன் கன்கரண்ட் லிஸ்டிலே எதற்காக வரவேண்டு என்று கேட்கிறேன் என்றால் இந்தி தேசிய மொழி என்பதை தென்னகத்திலே இருக்கின்ற மக்கள் ஏற்றுக்கொள்ள மறுக் கிறார்கள் எதிர்த்துக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாகத் தமிழ் நாட்டு மக்கள் எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள், ஆகவே, அவர்களை ஏற்றுக்கொள்ள வைப்பதற்காக இந்த அதிகாரம் எனக்கு வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இப்படி சரியான விலாங்கு மீனைப்போல, பாம்புக்குத் தலையையும், மீனுக்கு வாலையும் காட்டுகின்ற முறையிலே செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட முறையிலே பயங்கரமான சாகசத்தை மேற் கொண்ட அவர்கள் அதையும் பறித்துவிட்டார்கள்.

(முற்பகல் 11-50)

Dr. Jekyl and Mr. Hide என்று சொல்வோம். (குறுக்கீடு) கேட்கட்டும். I want their intervention. I am provoking them வர மாட்டேனென்கிறார்கள். இப்படி திருமதி காந்தி இந்த Dr. Jekyl and Mr. Hide வேடம் போட்டு விளையாடுவதன்மூலம் காங்கிரஸ் கட்சியின் அரசியல் பாசாங்கை அம்பலப்படுத்தியது. திருமதி காந்தி இரட்டைக்குரலில் பேச, சீடர்கள் பாட்டுக்கு ஏற்ப ஆட கல்வியை நம்மிடமிருந்து கவ்வினார்கள்—பிடுங்கிக் கொண்டார்கள். அதை ஜனதா கட்சி மீண்டும் வழங்கியது.

அரசியல் சட்டத்தில் உள்ள அடிப்படை உரிமைகளை மாற்ற விரும்பினால் நாடாளுமன்றம் செய்தால் செல்லாது, மக்கள் வாக்கெடுப்பில்தான் செய்யமுடியும் என்று கொண்டு வந்தனர். அதாவது அரசியல் சட்டத்தில் உள்ள அடிப்படை உரிமைகளை மாற்ற விரும்பினால் ரெஃபரண்டம் வைக்கவேண்டுமென்று இதில் இருந்தது. இன்னும் சில நல்ல அம்சங்களும் இதில் அடங்கியுள்ளது. ஆனால், திருமதி காந்தியின் காங்கிரஸ் ராஜ்யசபையில் தனக்கு உள்ள பலத்தை வைத்து இந்த சட்டத்தின் இதயத்தையே அறுத்து வீசி—தூக்கி—எறிந்து விட்டார்கள் என்று சொல்ல

விரும்புகிறேன். சர்வாதிகாரம் என்று சொல்கிறபொழுது அருமை
நண்பர் மாரிமுத்து அவர்கள் அதுகம்யூனிஸ்ட் கட்சியின் தாரக
மந்திரமாக இருக்கிறது என்று சொன்னார்கள். "No" நண்பர்
மாரிமுத்து போன்றவர்கள்கூட விழிப்புடன் இருக்கவேண்டிய
விஷயம். அவர் காங்கிரஸிலேயே இருந்தால்கூட, அந்தக் கட்சி
ஆட்சிக்கு வந்தால், சர்வாதிகாரத்தால் அவருக்கு ஆபத்து வராது
என்று சொல்லமுடியாது. He must take interest in preventing that
authoritarianism. லோக் சபா அதை நிறைவேற்றியது! அரசியல்
சட்ட அடிப்படை அதிகாரங்களை, அதனுடைய உரிமைகளை
மாற்றுவது என்று சொன்னால் பார்லிமெண்ட் செய்யக்கூடாது.
பொதுமக்கள் வாக்கெடுப்புக்கு வைத்துத் தான் செய்யவேண்டு
மென்று லோக் சபா கூறியது. லோக் சபா நிறைவேற்றி ராஜ்ய
சபாவிற்கு அனுப்பிய சட்டத் திருத்தத்தின் உயிரே, அந்த
ரெஃபரண்டம் தான். அதைஎடுத்தால் சர்வாதிகாரத்திற்கு கதவு
திறந்துவிட்டது என்று அர்த்தம். அந்த ஷரத்தைத்தான் திருமதி
இந்திரா காந்தி அவர்களுடைய கட்சியினர் தோற்கடித்தார்கள்.
அதற்கு திருமதி இந்திரா காந்தியினுடைய வாதம் என்ன
வென்றால், வாக்கெடுப்பு என்றால் நாடாளுமன்றத்தின்
Supremacy (மேலதிகாரம்) போய்விடுகிறது என்பதாகும்.
I want to ask supremacy over what? எதன் மீது ஆதிக்கம்.
Over the executive? "Yes" நிர்வாகத்தின்மீது நாடாளுமன்றத்தின்
மேலாதிக்கம்—அதை ஒத்துக்கொள்ளலாம். But supremacy over
the people, supremacy over the sovereignty of the people for a parlia
ment, "No" I won't accept. ஜனங்கள்மீது நாடாளுமன்றத்திற்கு
ஆதிக்கம் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்று
சொல்ல விரும்புகிறேன். அதற்கு பதிலாக நாடாளுமன்றத்திற்கு
மேலாக, மக்களுக்குத்தான் மேலதிகாரம் இருக்கவேண்டுமென்பது
தான் எங்கள் கருத்து. அரசியல் சட்டம் என்ன கூறுகிறது?
"இந்திய மக்களாகிய நாம் இந்த அரசியல் சட்டத்தை நாமே
நமக்கு வழங்குகிறோம்" என்று தெளிவாக சொல்லியிருகிறோம்.
ஆகவே, இந்த சுப்ரீம் மக்களின்மீது நாடாளுமன்றத்தை ஆதிக்கம்
செலுத்த முயற்சி செய்ய வேண்டுமென்பதுதான் திருமதி
காந்தியினுடைய கட்சியினர் லோக் சபா திருத்தத்தை எதிர்த்து
ஓட்டு செய்ததன் நோக்கம். இது சர்வாதிகாரமில்லையா?
ஆனால் திருமதி காந்தி கூறுவது என்னவென்றால். "நாடாளு
மன்ற உறுப்பினர்கள் மக்கள் நலனைக் காப்பவர்கள்" என்ப
தாகும், ஆகவே, இந்த ரைட்ஸ் திருத்தம் இல்லாமலிருந்தால்,
The people will be safe in their hands என்று சொல்கிறார்கள்.
நான் கேட்கிறேன், 1975 ஆம் ஆண்டில், எல்லா ஜனநாயக
உரிமைகளும் ஒரே அடியிலே அழிக்கப்பட்டது. At one blow
they were liquidated. அப்பொழுது நாடாளுமன்ற உறுப்பினர்கள்
என்ன செய்தார்கள்! காப்பாற்றினார்களா? தங்களுடைய
தன்மையைக் கருதி இரண்டு கைகளைத் தூக்கினார்கள். அதே
மாதிரி அமைச்சரவையைக் கேட்காமல் அரசியல் சட்டத்தை மீறி
அன்றைய ஜனாதிபதியிடம் சட்டவிரோதமாக கையெழுத்துவாங்கி,

எமர்ஜென்சி டிக்ளேர் செய்தார்கள். அப்பொழுது இந்த
நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்தார்கள்? இரண்டு
காலையும் சேர்த்து தூக்கினார்கள். கொலைகள்—சித்திரவதைகள்
நடந்தன. இரண்டு கொலைகள் நடந்தன. ராஜன் கேஸ்—
எல்லோருக்கும் தெரியும். நாகம்மாள் விவகாரம் தெரியாதா?

நான் தலைமறைவாக இருந்தேன் அந்த பீரியடிலே. என்
னென்னமோ செய்து பார்த்தார்கள், நான் கிடைக்கவில்லை.
(குறுக்கீடு) அதைச் சொல்லமாட்டேன். மறுபடியும் பிடிக்க
வந்தால் ஒளிய வேண்டும். அப்பொழுது என்ன செய்தார்கள்
நாடாளுமன்ற உறுப்பினர்கள்? நான் தலைமறைவாக இருப்பதால்,
அடிக்கடி டெலிகிராம் மெட்ராஸ் போலிசுக்கும், திருச்சி
போலிசுக்கும் வருகிறது, எங்கே அந்த ஆள் என்று சொல்லி.
உமாநாத்தை ஏன் பிடிக்கவில்லை என்று துளைக்கிறார்கள்.
அப்பொழுது இங்கு அட்வைசராக இருந்த ஆர். வி. சுப்பிரமணியம்
திருச்சிக்கு கேம்ப் வந்தார். ஒரு போலிஸ் அதிகாரியைக்
கூப்பிட்டார். உமாநாத் எங்கேஎன்று கேட்டார். நாங்கள்
சர்ச் பார்ட்டி அனுப்பியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்.
அவர் மனைவி எங்கே இருக்கிறார் என்று கேட்டு இருக்கிறார்.
மனைவி வீட்டில் இருக்கிறார் என்று சொல்லியிருக்கிறார்கள்.
அவர் சொன்னாராம், நீங்கள் என்ன செய்வீர்களோ
எனக்குத் தெரியாது, உமாநாத் அவர்களை ஒரு
வாரத்திற்குள் அரெஸ்ட் செய்து கொடுக்கவேண்டும். அதற்கு என்ன
பொருள், உமாநாத் மனைவியைக் கைது செய், மனைவிக்குத்
தெரியும் எங்கே இருப்பார் என்று. நாகம்மாள், நாகம்மாள்
மகள் சித்திரவதை செய்யப்பட்டதுபோல் செய்தால் அவருடைய
வாயில் இருந்து அந்த இடம் வெளியே வரும், உமாநாத்தை கைது
செய்யலாம். இப்படிப்பட்ட பயங்கரமான நிகழ்ச்சி நடைபெற்ற
போது பாராளுமன்ற உறுப்பினர்கள் காப்பாற்றினார்களா—
வாட் டிட் தே டூ— அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. திருமதி
இந்திரா காந்தி அவர்களின் அடியாட்களாக, கழுதைகள் என்று
சொல்லவேண்டாம். They acted as flunkeys of Mrs. Gandhi, flunkeys
ஆகிவிட்டார்கள், ஏன் ஆகிவிட்டார்கள், சிறையில் அடைப்பார்கள்
என்ற பயம்—அதனால் தான் பிளங்கிஸ் ஆக இருந்தார்கள்.
கோழைத்தனம் மனச்சாட்சியைக் கவ்வியது. இட் வாஸ் எ
கேப்டிவ் பார்லிமெண்ட். அந்த பார்லிமெண்டை வைத்துத்தான்
இவ்வளவு விவகாரமும் நடந்தது. It was a captive parliament.
How can they protect. Only the people can protect. என்று
சொல்கிறேன். அந்த மாதிரியான ஜனநாயகத்திற்கு அரசியல்
சட்டத்தின் ஷரத்து மாற்றும் அதிகாரம் மக்களுக்குக் கொடுக்க
வேண்டும். இப்படிப்பட்ட பார்லிமெண்டிற்குக் கொடுக்கக்
கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன். அந்த ஷரத்தைத்தான்
இந்திரா காந்தி அவர்கள் கட்சியினர் டிபீட் செய்தார்கள்.
அவர்களுக்கு, அந்தக் கட்சியினருக்கு எம். பி. யாவதற்கு, எம்.

எல். ஏ. ஆவதற்கு, முதலமைச்சர் ஆவதற்கு அந்த மக்களின் ஓட்டு வேண்டும். ஆனால் அரசியல் சட்டத்தை மாற்றுவதற்கு அந்த மக்களுக்கு எந்தப் பாத்திரமும் கொடுக்கக்கூடாது என்று காங்கிரஸ் கட்சி—திருமதி காந்தி அவர்களுடைய கட்சி கருதுகிறது என்பது அர்த்தம். திருமதி காந்தி அவர்களுக்கு பதவியைக் காப்பாற்றி கொள்ள மக்கள் ஒரு ஏணிப்படியாக இருக்க வேண்டும். ஆனால் அமைச்சர் பதவிக்கு வந்தவுடன் மக்களை கருவேப்பிலை ஆக்கிவிடுவார்கள். இந்த நாட்டின் அரசியல் சட்டத்தை மாற்றுவதற்கு— அந்த சாவரின் பவரை மாற்றுவதற்கு அந்த மக்களுக்கு அதிகாரம் இல்லை. அதிலே என்ன பொருள் இருக்கிறது என்றால்—அவர்கள் ஏன் அதில் பிடிவாதமாக இருந்து டிபீட் செய்தார்கள் என்றால்—மீண்டும் அதிகாரத்திற்கு வந்தால் அந்தப் பார்லிமென்டைப் பயன்படுத்தி உரிமைகளைப் பறித்து தன்னுடைய பதவியைக் காத்துக் கொள்ள வசதியாக இருக்கும் என்று எண்ணியிருக்கிறார்கள். அதற்கு இப்போதே வழி செய்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்ததாக, நான் கருத்து தெரிவிக்க விரும்புவது உள்நாட்டு, அவசரப் பிரகடனம் என்ற ஷரத்தை அவர்கள் வற்புறுத்தியது குறித்து ஆகும். அந்த அம்மையார் அதை மிகவும் வலியுறுத்தினார்கள், ஆளும் கட்சியும் வற்புறுத்தினார்கள். அந்த ஆர்ம்ட் ரெபெல்லியன் உள்நாட்டு கலகம்—அந்த ஷரத்தை ஜனதா கட்சியும் வற்புறுத்தியது. அதற்கு சப்போர்ட் செய்தது. நான் கேட்கிறேன் ஏன் அந்த உள்நாட்டு பிரகடனம், எமர்ஜென்சி கிளாஸ் இருக்க வேண்டும். திருமதி இந்திரா காந்தி அவர்கள் பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுத்தார்கள். இனிமேல் இன்னொரு 1000 ஆண்டு காலத்திற்கு அவசரகால நிலை வராது. அதற்கு வழி இல்லை என்று சொன்னார்கள். அது உண்மை என்றால் அந்த ஷரத்து எதற்கு அரசியல் சட்டத்தில் இருக்கவேண்டும். ஆயிரம் ஆண்டுகளுக்கு வராது என்றால் அந்த அதிகாரம் ஏன் அரசியல் சட்டத்தில் இருக்கவேண்டும். அவர்கள் மனதில் தோன்றியிருக்கக் கூடும். மீண்டும் நாம் ஆட்சிக்கு வந்தால் இது தேவைப்படலாம் என்று நினைத்து இருக்கலாம். இதிலே ஆச்சரியப்படவேண்டிய விஷயம் என்னவென்றால், அவர்களுடைய கட்சியின் முக்கியமான உறுப்பினர் திரு. சாத்தே அவர்கள் லோக் சபையில் பேசியிருக்கிறார். அவர் பேசியது நமக்குக் கொடுக்கப்பட்ட லோக் சபை ரிக்கார்டில் இருக்கிறது. அவர் பேசும்போது சொல்லியிருக்கிறார், இந்த மாதிரி எமர்ஜென்சி— ஆர்ம்ட் ரெபெலியன் என்று இருப்பது டேன்ஜரஸ் என்று சொல்லி ஆட்சேபித்து இருக்கிறார். நாளைக்கு ஒரு ஸ்ட்ரைக் வந்தால் கூட அதை வைத்துக்கொண்டு ஆர்ம்ட் ரெபெலியன் என்று சொல்வார்கள். ஆகவே, அந்த எமர்ஜென்சி கிளாஸ் எடுத்து விடுங்கள் என்று லோக் சபையில் இந்திரா காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர் திரு. சாத்தே அவர்கள் சொல்லியிருக்கிறார். அது ரிக்கார்டில் இருக்கிறது. அப்படி

இருக்கிற போது ராஜ்ய சபையில் அது விவாதத்திற்கு வருகிற போது அதற்கு ஆதரவு கொடுத்து அதை ஜெயிக்க வைத்தார்கள். காரணம், அங்கே, அதாவது லோக் சபையில் அவர் பேசியதற்குப் பிறகு அம்மையார் அவர்களுக்குத் தோன்றியிருக்கக்கூடும்—மீண்டும் நாம் ஆட்சிக்கு வருவோம் என்று—இடையில் ஏதாவது தேர்தல் வந்து இருக்கும்—ஆகவே, அவர்கள் அதற்கு ஆதரவு தந்து இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஜானஸ் பேஸ் என்று சொல்வார்கள். இதன் மர்மம் என்ன மீண்டும் பதவிக்கு வருவோம் என்ற நப்பாசை அப்போது நமக்கு எமர்ஜென்சி பவர் வேண்டும்.

[நண்பகல் 12·00]

இப்போது மீண்டும் எமர்ஜென்சி கொண்டுவருவதற்கான அறிகுறிதான் இந்த திருத்தம். சமீபத்தில் சிக்மகளூர் பொதுக் கூட்டத்தில் எமர்ஜென்சி கொண்டு வந்தது நியாயமானது என்று இந்திராகாந்தி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஒரு வேளை மீண்டும் அவர்கள் ஆட்சிக்குவந்தால் அது வேண்டுமென்ற எண்ணத்தில் சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

அதேமாதிரி ‘டிப்ளாய்மென்ட் ஆப் சென்ட்ரல் போலீஸ்’ —மத்திய அரசின் போலீஸ் படையை மாநில அரசின் அனுமதி இல்லாமலேயே எந்த மாநிலத்திற்கும் அனுப்பி வைக்கலாம் என்பது. 42-வது அரசியல் சட்டம் ஜனநாயகத்தையே மாற்றி விட்டது; அதை இவர்கள் மாற்றிவிடவில்லை.

இன்றைக்கு ‘லா அண்ட் ஆர்டர்’ நம்முடைய சப்ஜெக்ட். மாநிலத்திற்கு இருக்கிற உரிமை அது ஒன்று தான். அதாவது ஜனங்களை உதைக்கிற அதிகாரம் இருக்கிறது. இப்போது வந்திருக்கிற திருத்தம், நீங்கள் என்ன உதைக்கிறது, நாங்களே உதைக்கிறோம் என்பது. மாநில அரசின் அனுமதி இல்லாமலேயே மத்திய அரசின் போலீஸ் அனுப்பப்படலாம் என்றால் ஒரு ஜனநாயக நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சர்க்கார் எப்படி ஆட்சி நடத்த முடியும்? இதிலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சர்க்காரை கவிழ்ப்பதற்கான சாத்தியக்கூறுகள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே, இந்த திருத்தச் சட்டம் கொண்டுவரப் பட்டிருப்பதன் நோக்கம், அவசர நிலை ஷரத்தை தக்கவைப்பது ஒன்று. இரண்டாவது விசாரணையின்றி வழக்கு இல்லாமல் கைது செய்யலாம் என்பதை தக்க வைக்க. மூன்றாவதாக ஜனதா கட்சி ஆட்சியை தக்க வைக்க. இந்த மூன்றும்தான் இந்தத் திருத்தத்திற்கான காரணங்கள்.

முன்னால் இந்திரா காந்தி காலத்தில் இந்தச் சட்டத் திருத்தம் வந்தபோது, அவசரநிலை பிரகடனத் திருத்தம் வந்த போது ஜனதாக் கட்சிக்காரர்களும் சேர்ந்துதான் ஓட்டுப் போட்

[திரு. ரா. உமாநாத்] [1979 பிப்ரவரி 17

டிருக்கிறார்கள். ஒருவேளை நாம் ஆட்சிக்கு வரும்போது இது தேவைப்படும் என்று தெரிந்துதான் அப்போதே ஆதரித்திருப்பார்களோ என்னவோ.

கடைசியாக நான் குறிப்பிட விரும்புவது, போன தடவை இப்படிப்பட்ட ஒரு 'பில்' இங்கே கொண்டுவரப்பட்டபோது சட்ட அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதன் குறிப்பு கூட எனக்கு வேண்டுமென்று அவர்களிடம் கேட்டேன். அவ்வளவு அழகாக அப்போது குறிப்பிட்டார்கள். அவர்களுடைய உரையிலே '19 மன்த்ஸ் காங்கிரஸ் டிக்டேட்டர்ஷிப்' என்று குறிப்பிட்டார்கள். காங்கிரஸ் சர்வாதிகாரம் என்று சொன்னார்கள். நான் மிகவும் சந்தோஷப்பட்டேன். அப்போது அவர்கள் மனந்திறந்து சில உண்மைகளை வெளியிட்டார்கள். தேர்தல் நடந்தது, ஆட்சி மாறியது. 19 மாத இருள் நிறைந்த காலம் மாறியது. இருள் நிறைந்த ஆட்சியை மாற்றிவிட்டார்கள் என்று சொன்னார்கள்.

அப்படி இருந்தும், அதற்குப் பின்னாலே பாராளுமன்றத்திலே பேசிய பாலாபழனூர் அவர்கள் இந்த ஷரத்தை ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள். எந்த வழக்கும் இல்லாமல் விசாரணை இல்லாமல் கைது செய்யலாம் என்பதை ஆதரித்திருக்கிறார்கள். எந்த நேரத்திலும் ஒரு ஸ்டேட் கவர்ன்மென்டை டிஸ்மிஸ் செய்யலாம் என்பதை ஆதரித்திருக்கிறார்கள். ஆக இப்படிப்பட்ட ஒரு திருத்தத்திற்கு அண்ணா தி.மு.க.வினரும் உடந்தையாக இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி, இதிலே வரவேற்கத் தக்க பல அம்சங்களும் இருக்கின்ற காரணத்தால் இந்த பில்லை நான் ஆதரிக்கிறேன் என்று கூறி, முடித்துக் கொள்கிறேன். நன்றி.

* திரு. பொ. விஜயராகவன் : பேரவையின் தற்காலிகத் தலைவரவாகளே, மாண்புமிகு மத்திய சட்ட அமைச்சர் சாந்தி பூஷன் அவர்கள் கொண்டுவந்து, பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும நிறைவேற்றப்பட்ட, இங்கே நம்முடைய தமிழ்நாடு சட்ட அமைச்சரவர்களால் இந்த மன்றத்திலே ஏற்பளிக்க வேண்டுமென்று கொண்டு வந்திருக்கிற திருத்தத்திற்கு ஆதரவளித்து நான் சார்ந்திருக்கிற ஜனதா கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்று, ஜனதா கட்சி ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு தான் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமென்ற அடிப்படையில் இழந்துபோன ஜனநாயகத்தை மீட்டுத் தந்த மக்களைக் காப்பாற்ற, இந்த 5-வது சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். அதிலும் குறிப்பாக ஜனநாயக உணர்வு கொண்டவர்கள் இந்த திருத்தத்தைப் பாராட்டி, வரவேற்பார்கள் என்று நிச்சயமாக என்னால் கூற முடியும்.

1979 பிப்ரவரி 17] [திரு. பொ. விஜயராகவன்]

கடந்த கால ஆட்சியின்போது, 19 மாதங்களாக ஜனநாயகம் இருளடைந்திருந்த நேரத்தில்' ஜனநாயகத்தைக் காக்க, இந்த நாட்டிலே ஜனநாயகத்தை நிலைநாட்ட ஜனதா அரசை மக்கள் தேர்ந்தெடுத்தார்கள். அந்த நம்பிக்கை வீண்போகாமல், ஜனநாயகத்தைக் காப்பதற்காகவே இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை ஜனநாயக உணர்வு உள்ளவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

முன்பு நெருக்கடி நிலையினைப் பிரகடனம் செய்தார்கள். அதற்குக் காரணமாகப் பலவற்றைக்கூட இங்கே சப்பைக் கட்டாகக் கட்டினார்கள். அவ்வாறு நெருக்கடி நிலை கொண்டு வரப்படுவதற்கு முக்கியமான காரணம் என்ன என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அலகாபாத் நீதிமன்றத்தில் திருமதி இந்திரா காந்தியின் தேர்தல் செல்லாது என்று உயர்நீதி மன்றத்திலே தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதை மனதில் வைத்துக் கொண்டுதான் அவ்வாறு அறிவிக்கப்பட்டது. உயர்நீதிமன்றத்தினுடைய அதிகாரத்தை மட்டுமல்ல, நாட்டினுடைய பல உரிமைகள் கூட, அதாவது அடிப்படை உரிமைகளைக்கூட பறிக்கத் துணிந்தவர்கள் அவர்கள் அப்படி திருமதி இந்திரா காந்தி அவர்கள் சர்வாதிகாரமான முறையில் செயல்பட்டார் என்பதை நாட்டுமக்கள் மறந்துவிட்டிருக்க மாட்டார்கள், ஆனால் அதற்கு சரியான பதிலடியும் கொடுத்து அவர்களை வீட்டிற்கு அனுப்பினார்கள். எவ்வாறு நெருக்கடி நிலைப் பிரகடனம் அறிவிக்கப்பட்டது என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அமைச்சரவை தன்னுடைய கருத்தை குடியரசுத் தலைவருக்கு வழங்கிய பிறகுதான் குடியரசுத்தலைவர் நெருக்கடி நிலைப்பிரகடனத்திலே கையெழுத்திட வேண்டும் என்கிற நிலைமையைக் கூட மாற்றியமைத்து அறிவிக்கப்பட்டது. அப்போது அன்றைய நிதியமைச்சர் இங்கே, சென்னையிலே இருந்தார். ஆக அமைச்சரவர்களைக் கூட சரியாக கலந்து ஆலோசிக்காமல், அமைச்சரவர்களின் பதிலைக் கூட பெறாமல் அந்த அவசரகாலநிலைமை பிரகடனம் செய்யப்பட்டது என்று சொன்னால் அது மிகையாகாது.

ஆனால் இன்றைக்கு இருக்கிற நிலைமையை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவசரகால நிலைமையை குடியரசுத்தலைவர் பிரகடனப்படுத்துகின்ற அதிகாரம் அவருக்கு இருந்தாலும் அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில்தான், அதுவும் எழுத்து மூலமாகக் கொடுக்கப்படுகின்ற ஒப்புதலின் அடிப்படையில் தான் அவசரகால நிலையை பிரகடனப்படுத்த முடியும், இல்லையென்றால் பிரகடனப்படுத்த முடியாது என்கின்ற ஒரு நிலையினை ஜனதாக் கட்சி அரசு கொண்டு வந்திருக்கிறது. அப்படிக் கொண்டு வந்திருப்பது தவறா என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. பொ. விஜயராகவன்] [1979 பிப்ரவரி 17

முன்பு, உள்நாட்டுக் குழப்பம் இருந்தால் தான் அவசர கால நிலையை பிரகடனம் செய்ய முடியும் என்று இருந்தது. ஆனால் இப்போது உள்நாட்டிலே ஆயுதப் புரட்சி நடந்தால் தான் அதனைப் பிரகடனப் படுத்தலாம் என்று கொண்டு வரப்பட்டிருக்கிறது. நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட பிறகு அது பாராளுமன்றத்திற்கு வந்தால்கூட அதனை மாற்றியமைக்க முடியாத நிலை இருந்த வந்தது. ஆனால் இப்போது பாராளுமன்றத்திலே பத்தில் ஒரு பங்கு உறுப்பினர்கள் கூட இந்த அவசர காலச் சட்டத்தை அது அமுலிலிருக்கும்போது எதிர்த்து அதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை என்று ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து அது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் குடியரசுத் தலைவர் அதை ரத்து செய்கின்ற அளவிற்கு இன்றைக்கு அந்த விதிகளிலே திருத்தங்கள் கொண்டு வந்தது ஜனதா சர்க்கார் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து அரசியலமைப்புச் சட்டத்தைப் பொறுத்தவரையில் ஆர்ட்டிக்கிள் 368-லே எவ்வளவு பெரிய உரிமையை மக்களுக்குக் வழங்கி இருக்கிறார்கள் என்பதை நான் எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கூட மக்கள் தான் நமக்கு எஜமானர்கள், நாம் அவர்ளுக்கு எஜமானர்கள் அல்ல என்று கூறினார்கள். அவர்கள்கூட இந்தத் திருத்தத்தைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன் என்றார்கள். ஆனால் இன்றைக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்ற வகையில் இந்திரா காங்கிரஸ் கட்சியினர், நாடாளுமன்றத்திலே மாநிலங்களவையிலே இம்மசோதாவைக் கொண்டு வருகின்ற நேரத்திலே அதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. அவர்கள் தாங்கள் மக்களுக்கு எஜமானர்கள் என்ற கருத்தை வலியுறுத்துகிறார்களே அல்லாமல் மக்கள் நமக்கு எஜமானர்கள் என்ற கொள்கையை அதாவது "people are sovereign to us" சாவரின் இஸ் ஃபார் இ பீப்பிள் என்ற தத்துவத்தை அவர்கள் மறந்துவிட்டார்கள் என்று நான் சொல்ல முடியும். இன்னும் அந்த சர்வாதிகாரப்போக்கில் தான் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இதைவிடத் தெளிவான விளக்கம் வேறு எதுவுமே இல்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முன்பெல்லாம் நாடாளுமன்றத்திலே அரசியலமைப்புச் சட்டத்திற்கான திருத்தத்திற்கான வழி முறை என்னவென்றால் மூன்றில் இரு பங்கு மெஜாரிட்டி பாராளுமன்ற இரு அவைகளிலும் கிடைக்க வேண்டும். மட்டுமல்லாமல் இந்திய நாட்டின் சட்ட மன்றங்களின் பாதி சட்ட மன்றங்களின் ஒப்புதலும் ஏற்பும் கிடைக்கப் பெற்றால்தான் அவைகளைத் திருத்த முடியும் என்ற விதி இருந்தது. ஆனால் இன்றைக்கு பொதுஜன வாக்கெடுப்பு அதாவது ரெஃபரண்டம் என்ற முறை ஏற்பட்டிருக்கிறது. அதாவது 51 சதவீதம் மக்கள் அந்த அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தத்தை ஆதரித்தால் தான் திருத்த முடியும் என்று கொண்டு வந்திருக்கிறார்கள். இதைவிட பெரிய ஜனநாயக முறை வேறு என்ன இருக்க முடியும் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

1979 பிப்ரவரி 17] [திரு. பொ. விஜயராகவன்]

அடுத்து, இங்கே தடுப்புக் காவல் சட்டத்தைப் பற்றிச் சொல்லப் பட்டிருக்கிறது. அந்தச் சட்டப்படி முன்பெல்லாம் மூன்று மாதங்களுக்கு மேல் கூட ஒருவரைக் காவலில் வைக்கிற நிலை இருந்தது.

[பிற்பகல் 12-10]

ஆனால், இன்றைக்கு அதை இரண்டு மாதங்கள் குறைப்பது என்று மட்டுமல்லாமல், ஆலோசனைக் குழு என்ற அளவில் ஏனோதானோ என்று, இவர்தான் ஆலோசனைக் குழு, இவர்தான் ஆலோசனைக் குழுத்தலைவர் என்றல்லாமல் ஒரு மாநில உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியின் தலைமையில் அங்கிருக்கிற இரண்டு நீதிபதிகள், தற்போது பொறுப்பேற்றுக் கொண்டிருந்தாலும் அல்லது ஓய்வு பெற்றவர்களாக இருந்தாலும் மூன்று பேர்களைக் கொண்ட ஒரு குழு தடுப்புக் காவல் சட்டத்தை அங்கீகரிக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, தன்னுடைய ஒப்புதலை அளிக்காமல் தன் கருத்துக்களைக் கூறி, தன் எண்ணங்களைக் கூறி இந்தத் தடுப்புக் காவல் மூலம் சிறைப்படுத்துவது சரியல்ல என்று இரண்டு மாதங்களுக்குள் சொன்னால் அந்தத் தடுப்புக் காவல் சட்டத்தைப் பயன்படுத்தி யாரையும் உள்ளே வைக்க முடியாது என இப்போது ஒரு புதிய விதி கொண்டுவரப்பட்டிருக்கிறது. உயர்நீதிமன்றங்களின் அதிகாரங்களையெல்லாம் பறித்தார்கள். ஆர்டிகிள் 226 உயர்நீதிமன்றங்களுக்கு வழங்குகின்ற அதிகாரங்கள் எல்லாம் அவசர காலத்தில் பறிக்கப்பட்டன. ஆனால் இன்று பலவிதமான புதிய திட்டங்களை, புதிய விதிகளை அரசியல் அமைப்புச் சட்டத்தில் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னால் இதை வரவேற்காமல் வத்தல் தொத்தல் என்று பேசுவது உண்மையில் ஜனநாயக வழியில் வருகிற எங்களுக்கு வருத்தத்தைத் தருகிறது. தாற்காலிகத் தடை உத்தரவு என்று வந்துவிட்டால் ஒருவர் Ex parte தாற்காலிக தடை உத்தரவை வாங்கிவிட்டால் பாதிக்கப்பட்டவர் அதை நீக்கி ஒரு உத்தரவைப் பெற முன்னால் கால தாமதமாகும். சிலர் ஆண்டுக்கணக்கில் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஆனால் இப்போது அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வந்தால் 15 நாட்களுக்குள்ளாக அதுபற்றி விசாரித்து அந்தத் தாற்காலிகத் தடை உத்தரவை நீக்கவேண்டும் என்ற முறையில் இப்போதுத் ஒரு விதி சேர்க்கப்பட்டிருக்கிறது என்றால் இதைவிட நீதி வழங்குகிற ஒரு நிலை வேறு என்ன இருக்கமுடியும்

முன்பெல்லாம் குடியரசுத் தலைவர் ஆட்சியை எவ்வளவு முறை வேண்டுமானாலும் நீட்டிக்கலாம், எவ்வளவு ஆண்டுகள் வேண்டுமானாலும் அதை வைத்திருக்கலாம். ஆனால் இன்று நிலை அப்படியல்ல.

குடியரசுத் தலைவர் ஆட்சி அதிகபட்சம் ஒரு ஆண்டுக் காலத்திற்குத்தான் இப்போது கொண்டுவரப்பட்டுள்ள திருத்தப்படி வைத்துக்கொள்ளமுடியும். அதிகபட்சமாக ஒரு ஆண்டுதான் இருக்கமுடியும். அந்த அளவிற்கு சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது, அதை வரவேற்க வேண்டாமா? அடுத்து, மாநிலங்களுக்கு மத்திய ஆயுதப் படையை அனுப்பலாம் மாநிலத்தின் அனுமதி இல்லாமல் என்று இருக்கிறது. அப்படி மாநில அரசுகளின் உரிமைகளை ஆக்கிரமித்துக் கொள்ளலாம் என்று சென்ற காலத்தில் செய்யப்பட்டதை மாற்றியமைக்கவேண்டும் என்று, அதைத் திரும்பப் பெறவேண்டும் என்று சட்டம் கொண்டுவந்தால் அதைத் தடை செய்கிறவர்கள் யார் என்று அடையாளம் கண்டு கொள்ளவேண்டும். அன்று சர்வாதிகாரத்திற்குத் தூபம்போட்டவர்கள், அதற்கு வால் பிடித்தவர்கள், சர்வாதிகாரத்திற்குத் துணை போனவர்கள் இன்று இதுபோன்ற நல்லதொரு சட்டத்தினைக் கொண்டுவருவதை எதிர்க்கிறார்கள் என்று சொன்னால் அப்படிச் சொல்கிறவர்களை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும் என்று கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

பத்திரிகை சுதந்திரம் பற்றி வாய்கிழியப் பேசுகிறார்கள். பாராளுமன்றத்தில் அல்லது சட்டமன்றங்களில் பேசப்படுகிற பேச்சுக்களை அல்லது அங்கு விவாதிக்கப்படுகிற பிரச்னைகளை வெளியிடுவது குற்றம் இல்லை என்ற முறையில் அரசியலமைப்புச் சட்டத்தில் ஒரு விதியை ஜனதா அரசு ஏற்படுத்தியிருக்கிறது என்பதை உறுப்பினர்கள் எண்ணிப்பார்க்கவேண்டும். அடுத்தபடியாக, பாராளுமன்ற, சட்டமன்றங்களின் ஆயுட்காலத்தை ஐந்து ஆண்டுகள் என்றிருந்ததை ஆறு ஆண்டுகள் என்று மாற்றினார்கள். மரபுவழி வந்து அதை ஐந்து ஆண்டுகள் என்று மீண்டும் பெற்றுத் தந்திருக்கிறார்கள். இப்போது ஒரு முக்கியமான கருத்து. தேர்தல்களைப் பற்றிய வழக்குகள், குறிப்பாக பிரதமர் தேர்தல், குடியரசுத் தலைவர் தேர்தல், சபாநாயகர் தேர்தல் இவை பற்றி வழக்கு மன்றங்களுக்குக் கொண்டுபோக முடியாது— இதன் பின்னணி என்ன? பிரதமராக இருந்த திருமதி இந்திரா காந்தி அம்மையார் அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் அவர்களது தேர்தல் செல்லாது என்று குறிப்பிட்டதை மனதில் வைத்துக்கொண்டு பிரதமரின் தேர்தல், குடியரசுத் தலைவர் தேர்தல், சபாநாயகர் தேர்தல் இவை பற்றி வழக்குமன்றங்களுக்குச் செல்லக்கூடாது. இவை பற்றி தங்கள் கருத்துக்களைச் சொல்லக்கூடாது என்ற முறையில் சர்வாதிகாரப்போக்கில் அன்று அரசியல் சட்டம் திருத்தப்பட்டது.

ஆனால், குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் மீதும் உச்ச நீதிமன்றத்தில் அவர்களுடைய தேர்தல் குறித்து வழக்குத் தொடர்ந்து நடத்தலாம் என்கின்ற வகையில் திருத்தம் செய்யப்பட்டிருப்பதோடு மட்டுமல்லாமல், பிரதமராக இருந்தாலும் சரி, சபாநாயகராக இருந்தாலும் சரி அவர்கள் மீதும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் அவர்களுடைய தேர்தலைக் குறித்து உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம் என்று, பிரதமர் என்றோ சபாநாயகர் என்றோ பாரபட்சம் இருக்கக்கூடாது, என்ற முறையில் அந்த பாரபட்சத்தை, ஓரவஞ்சனையாக இருந்த முறையை, எதேச்சாதிகாரமாகக் கொண்டு வந்த அந்த முறையைத் தகர்த்து எறிந்ததோடு மட்டுமல்லாமல் ஏற்கனவே இருந்து போல், பிரதமராக இருந்தாலும் சரி, சபாநாயகராக இருந்தாலும் சரி, குடியரசுத் தலைவராக இருந்தாலும் சரி, நாட்டில் சட்டத்தின் முன்னால் எல்லோரும் சமம், எல்லோரும் ஒருவகை என்ற கருத்தை வலியுறுத்துகின்ற வகையில் இப்படிப்பட்ட சட்டத் திருத்தத்தை ஜனதா சர்க்கார் கொண்டு வந்திருக்கிறது. இதன் மூலம் இந்த நாட்டினுடைய பெருமையை உயரச் செய்திருக்கிறது என்பதை நாம் மறந்து விட முடியாது.

இன்னொன்று நாட்டில் உச்சமன்றத்திற்கு அப்பீல் செய்வதற்கான முறைகள் ஆக்டிகில் 132, 134-ல் சொல்லப்பட்டிருக்கிறது. உச்ச நீதிமன்றத்தில் அப்பீல் செய்ய வேண்டும் என்றால் அதற்காக உயர்நீதிமன்றத்தில் மனு போடவேண்டும். உயர்நீதிமன்றம் அதற்கு அங்கீகாரம் அளிக்க வேண்டும் இதற்கு முன்னால் உயர்நீதிமன்றம் அந்த மனுவை விசாரிக்க வேண்டும். இதற்குக் காலம் கடந்து போகக்கூடிய நிலைமை ஏற்படும் போது நிலைமை எபபடில போகும் என்று யாராலும் சொல்ல முடியாது. தெரியவுத் முடியாது அப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்றி தாமதம் ஏற்பட்டால் நீதி கிடைக்காது என்ணி........ ஆங்கிலத்தில் சொல்லுவார்கள். Justic delayed is justice denied என்று சொல்வார்கள். 'காலதாமதப்பட்டு வழங்கப்படும் நீதி, நீதி அல்ல' என்று சொல்வதை கருத்திற்கொண்டு, உயர்நீதிமன்றம் அளிக்கின்ற தீர்ப்புக்கு மேலாக, உச்ச நீதிமன்றத்தில் அப்பீல் செய்யவேண்டுமென்றால் உயர்நீதிமன்றத்தில் வாய்மொழி மூலமாக 'நான் இந்த வழக்கில் உச்சமன்றத்திற்கு அப்பீலுக்குப் போகிறேன்' என்று சொன்னால், அதற்கு வழிவகை செய்யலாம். என்பதோடு மட்டுமல்லாமல், காலதாமதத்தை குறைக்கவும், காலவிரயத்தை குறைக்கவும் என்பதோடு விரைவில் நீதி கிடைக்கும்படியான அளவில் இந்த சட்டத் திருத்தத்தை கொண்டு வந்திருக்கிறார்கள்.

இதைப்பற்றி சொல்லும் போது. இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் மாண்புமிகு ஓ. எஸ. வேலுசாமி அவர்கள் ஆதார உரிமைகள் என்பதில் வருகின்ற முக்கியத்துவம், 'டைரக்டிவ்

(திரு. பொ. விஜயராகவன்) [1979 பிப்ரவரி 17

ப்ரின்சிபிள்'ளில் வருகின்ற முக்கியத்துவம் இதில்தான் முரண்
பாடு இருக்கிறது என்றும், டைரக்டிவ் பிரின்ஸிபிள்ஸ் தான்
பண்டமென்டல் ரைட்-களை விடவும் உயர்ந்தது என்ற முறையில்
வாதாடினார்கள். ஆனால் இன்றைக்கு நாட்டு மக்களிடத்தில்
என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சொத்து உரிமை
என்பதின் அடிப்படையில் தான் பல வழக்குகள் வழக்குமன்றத்
திற்குப் போய்க் கொண்டிருக்கின்றன. வழக்குமன்றத்தில் இந்த
உரிமைகள் எல்லாம் தடைக் கற்களாக இருக்கின்றன. சொத்து
உரிமை என்பது அடிப்படை உரிமைகளுக்கு உட்பட்டது அல்ல.
சட்டங்களுக்கு உட்பட்ட உரிமை தான் என்கின்ற முறையில்
சமதர்மமான—புரட்சிகரமான—சமூக பொருளாதாரத்தை
வளர்க்கின்ற இந்த 45 திருத்த தீர்மானத்திற்கு என்னுடைய
கட்சியின் சார்பாக ஆதரவைத் தெரிவித்துக் கொண்டு நன்றி
கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. சோ. பழனிசாமி; ஜனதா கட்சி நண்பர் அவர்கள்,
பேசும்போது நீதிமன்றத்தைப் பற்றியும் நீதிமன்ற உரிமைகளைப்
பற்றியும் சொன்னார்கள். அதே நேரத்தில் பொதுமக்களால்
நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திராகாந்தி
அவர்களைப் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கியது
மட்டும் எப்படிப் பொருத்தம் என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

[பிற்பகல் 12-20]

திரு. பொ. விஜயராகவன்; தாற்காலிகத் தலைவர் அவர்களே
இதற்காகத் தனியாக ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டால்
அதிலே எங்கள் நிலையைப் பற்றி விளக்குவதற்கு நாங்கள்
தயாராக இருக்கிறோம் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி; தலைவர் அவர்களே, நம்முடைய
பேரவையின் முன்னாலுள்ள அரசியல் சட்டத் திருத்தம் சம்பந்த
மாகக் கம்யூனிஸ்ட் கட்சியின் சில கருத்துக்களைச் சொல்ல
முன்வருகிறேன். 42-வது திருத்தத்திற்கு, அதிலே பல திருத்
தங்கள் பாராளுமன்றத்திலே வந்த நேரத்திலே, எங்கள்
கட்சியைப் பொறுத்தமட்டில் பல ஷரத்துக்களை எதிர்த்திருக்
கிறது. அதிலே உள்ள முற்போக்கான ஷரத்துக்கள் என்று
சொல்லக்கூடியவற்றை ஆதரித்தும் இருக்கிறோம். ஆனால் அது
பின்னால் எப்படி மக்களுடைய அடிப்படையான சில உரிமைகளைப்
பாதித்தது, எப்படி ஜனநாயக உரிமைகள் அதன் காரணமாக
மறுக்கப்பட்டது என்பதை அவசரகால நேரத்திலே நாம்
தெரிந்து கொண்டோம். அதற்குப் பின்னரும், இப்போதும்

1979 பிப்ரவரி 17] (திரு. சோ. அழகர்சாமி)

45-வது திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதிலே இந்த
ஜனதா அரசாங்கம் பொதுமக்களுக்குக் கொடுக்கப்பட்ட பெரு
வாரியான உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன. அரசியல் சட்டத்
திலே பெருவாரியான ஷரத்துக்களை மாற்ற வேண்டுமென்று
சொன்னார்களே தவிர, எந்த அளவுக்கு மாற்றம், என்ன
மாற்றங்கள் கொண்டு வந்தார்கள் என்பதை திரு.
உமாநாத் அவர்கள் பல விவரங்களோடு எடுத்துச்
சொன்னார்கள். அந்தச் சட்டத்தின் அடிப்படையிலே, 42 வது
அரசியல் சட்டம் வந்த காலத்தில். வழிகாட்டும் கொள்கைகள்
அதிலே ஆதிக்கம் செலுத்த வேண்டுமா அல்லது அடிப்படை
உரிமைகள் அதிலே ஆதிக்கம் செலுத்தவேண்டுமா? இந்த
அரசியல் சட்டத்திலே சில அடிப்படையான உரிமைகளை
தடுக்கக் கூடாது என்ற ஷரத்து இருந்தது. பல திருத்தங்கள்
மூலமாக நியாயம் வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டதும்
உங்களுக்குத் தெரியும்.

இதேமாதிரிதான் தடுப்புக் காவல் சட்டத்தின் அடிப்படை
யிலே யாரையும் பிடித்து உள்ளே போடலாம். அப்படிப்
பிடிப்பவர்களை மூன்று மாத காலத்திற்கு உள்ளே போட்டு
விட்டு, உள்ளே வைத்திருந்து திரும்பவும் அவர்களை அட்வை
சரி போர்டுக்கு அனுப்பலாம் என்றிருக்கிறது. இதிலே என்ன
மாற்றம் செய்திருக்கிறார்கள் என்றால், யோசித்துப்பார்த்தால்.
3 மாதங்கள் என்பதை 2 மாதங்களாக்கி இருக்கிறார்கள். எனவே
இதிலேயும் ஆபத்து நீங்கியபாடில்லை.

இதேமாதிரிதான் ஒரு மாநில சர்க்காரைக் கலைக்கக்கூடிய
அதிகாரம் ஜனாதிபதி அவர்களுக்கு இருக்க வேண்டுமா?
அப்படி அவர் ஒரு மாநிலத்தைக் கலைத்ததற்குப் பின்னால்
ஒரு வருஷம், ஆறு மாதங்கள் அல்லது இரண்டு வருஷங்கள்
என்று நீட்டித்துக் கொண்டும் போகலாம். இந்த அதிகாரமும்
கூடாது என்று. இந்தத் திருத்தத்திலே கொண்டு வரப்பட
வில்லை. இதேமாதிரியாகத் தான், இன்று பொது மக்களுடைய
ஜீவாதாரமான பிரச்னைகளுக்கு மட்டுமல்ல. அவசரச் சட்டம்
என்று ஒன்றைக் கொண்டு வந்து, எமர்ஜன்சி என்று கொண்டு
வந்து, உள்நாட்டிலே ஏதோ கலகங்கள், குழப்பங்கள் ஏதாவது
வரலாம், வந்தால் இதன் அடிப்படையிலே அதைத் தடுக்கலாம்
என்று இந்திரா காந்தி அவர்கள் கொண்டு வந்தார்கள்.

அப்படி அந்த அம்மையார் கொண்டு வந்தது தவறு என்று
அன்றைக்கு வாதாடக் கூடியவர்கள், இன்றைக்கு அவர்கள்
ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு அதே காரணத்தை முன்னிட்டு
அதை நீக்க முயற்சிக்கவில்லை. எமர்ஜன்சி என்றால், வெளி
நாட்டிலே இருந்து படையெடுப்பு போன்ற ஆபத்து வந்தால்
இப்படிச் சொல்வது நியாயம். ஆனால், அவசரகாலச் சட்டம்
கொண்டுவந்தது தவறு என்று அன்றைக்கு வாதாடியிருக்கிறார்கள்,

ஆனால் அவர்கள் ஆளும் கட்சியாக வந்தபிறகு அதே காரணத்தைச் சொல்லி, அந்த அதிகாரத்தை, தங்கள் கையிலேயே வைத்துக் கொள்ள விரும்புகிறார்கள். இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது, தாங்கள் எதிர்க் கட்சியாக இருந்து பேசியதை எல்லாம் அவர்கள் மறந்துவிட்டு, அந்த அதிகாரங்களை யெல்லாம் தாங்களும் வைத்துக்கொண்டு ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்பதற்காக அந்த ஷரத்துக்கள் வேண்டும், வைத்துக் கொள்ளலாம் என்று விரும்புகிறார்கள். அப்படி வைத்துக் கொண்டு மாநில சர்க்காரைக் கலைத்தும் இருக்கிறார்கள். இப்படி ஏதாவது குழப்பம் வந்தால், அது உதவியாக இருக்கும் என்று நினைக்கிறார்கள் என்றும் நான் கருதுகிறேன். எனவே, இது விரும்பத்தக்கதல்ல. இந்தத் தடுப்புக் காவல் சட்டம் நம் ஜனநாயக கொள்கைக்கு விரோதமானது, மக்களுடைய உரிமைகள் பறிக்கப்படுகின்றன. அப்படி பறிக்கும் இந்த ஷரத்துக்கள் எல்லாம் பூரணமாக நீக்கப்படவில்லை.

மக்களுக்காகத்தான் அரசியல் சட்டமே தவிர, அரசியல் சட்டத்திற்காக மக்கள் அல்ல. மக்களுடைய உரிமைகளில், அடிப்படைப் பிரச்னைகளைத் தீர்ப்பதில் குறுக்கே நிற்கும் எந்த ஷரத்தும் மாற்றப்பட வேண்டியது அவசியந்தான். ஆனால் இப்போது வந்திருப்பதை முற்போக்கான திருத்தம் என்று நினைக்க முடியவில்லை. அவர்களுடைய விருப்பத்திற்கேற்றவாறு கொண்டு வந்திருக்கிறார்கள். பூரணமாக மாறுதல்களைக் கொண்டுவர முயற்சிகளைச் செய்யவேண்டுமென்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, 45 வது அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலம் நாட்டிலே ஏதோ பெரிய மாறுதலைக் கொண்டு வந்துவிட்டதாகப் பெரிதாகப் பேசப்படுகிறது. இதிலே என்ன மாறுதல்களை, எந்த அளவுக்குப் பெரிதாகச் செய்திருக்கிறார்கள் என்று பார்த்தால் ஒன்றும் இல்லையென்று தான் சொல்ல வேண்டும். எமர்ஜென்சியை டிக்ளேர் பண்ணுவதற்கு 42 வது அமெண்ட்மெண்ட் ஒன்றும் வழி வகுக்கவில்லை. எமர்ஜன்சி பிரிவு ஆர்டிகிள் 352-ல் அரசியல் சட்டத்திலேயே இருப்பது. 42 வது திருத்தத்திற்கும் இந்த கான்ஸ்டிட்யூஷன் ஆர்டிகிளுக்கும் சம்பந்தம் இல்லை. இந்த 45 வது திருத்தத்தில் அந்த 352 வது பிரிவுக்கு ஒரு திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். 42 வது திருத்தத்தை வைத்து எமர்ஜன்சி டிக்ளேர் பண்ணவில்லை. ஆகையால் அதற்கு முன்னாலேயே அரசியல் சட்ட கர்த்தாக்கள் இந்த ஆர்டிகிளைச் சேர்த்திருக்கிறார்கள். இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கொண்டு வந்தது அல்ல ஆர்டிகிள் 352. எமர்ஜென்சியை ரத்து பண்ணுவோம். 42 வது அரசியல் சட்டத் திருத்தத்தை அடியோடு நீக்குவோம், தூக்கி வீசுவோம், கடலில் கரைப்போம்

என்றெல்லாம் பேசிக்கொண்டு வந்தவர்கள் என்ன செய்தார்கள். என்ன பெரிய திருத்தத்தைச் செய்தார்கள் என்று பார்த்தால் சொன்னதற்கும் செய்திருப்பதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.

திரு. அ. ரகுமான்கான்: திரு. மாரிமுத்து அவர்கள் எமர்ஜென்சி ப்ரொவிஷன் ஏற்கனவே அரசியல் சட்டத்தில் இருக்கிறது. 42-வது திருத்தப் பிரிவின் காரணமாக அது வரவில்லை என்று சொன்னார்கள். அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்களே அந்தப் பிரிவை வைத்திருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். 'இன்டர்னல் டிஸ்டர்பன்ஸ்' என்று கூறி இந்தியாவில் முதல் முதலாக எமர்ஜென்சியை டிக்ளேர் பண்ணியது இந்திரா காந்தி தான்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: அரசியல் சட்டத்தில் அந்த ப்ரொவிஷன் இருந்தது. நாட்டில் அப்போது குழப்பமான நிலை இருந்தது என்று அவர்கள் கருதியதால் செய்தார்கள். பிரைமினிஸ்டராக இருப்பவர்தான் அதைச் செய்ய முடியும். இன்னொருவர் எப்படி முடிவு செய்ய முடியும்? ஒரு நாட்டில் கலவரம்—இன்டர்னல் டிஸ்டர்பன்ஸ் இருக்கிறதா என்பதை ஆட்சியில் இருப்பவர்கள் தான் முடிவு செய்ய முடியும் .....

திரு. ர. ஜெயமணி: நாட்டில் குழப்ப நிலை இருந்தது என்ற காரணத்தால் அந்த அம்மையார் கொண்டு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒவ்வொருவர் பேசும்போதும் குறுக்கே எழுந்து பதில் சொல்லிக் கொண்டே இருந்தால் நேரம் இருக்காது.

திரு. ர. ஜெயமணி: திரு. மாரிமுத்து அவர்கள் பேசுவது பத்திரிகையில் வரும். ஆகையால் பதில் சொல்லியாக வேண்டும். குழப்ப நிலை இருந்தது. ஆகவே, எமர்ஜென்சி வந்தது என்று சொல்வது சரியல்ல. கேரளாவில் இரண்டு அமைச்சர்கள் தேர்தல்கள் செல்லாது என்றவுடன் ராஜினாமா செய்துவிட்டு போனார்கள். எங்கே பதவி பறிபோய் விடுமோ என்ற அவசரத்தினால் இரவோடு இரவாக, எந்த அமைச்சரையும் கலக்காமல், இரவு தூங்கிக் கொண்டிருந்த ஜனாதிபதியைத் தட்டி எழுப்பி இந்த நாட்டில் அக்கிரமத்தைச் செய்தவரைப் பற்றி அவர்கள் இப்படிப் பேசுகிறார்கள் என்றால் அது மற்றவர்களைக் கேலி செய்வதாக இருக்கிறது, அவர்களுடைய உள்ளக் கிடக்கையைக் காட்டுகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய பெரியவர் எதையோ நினைத்துக் கொண்டு பேசுகிறார். நாட்டில் அன்று குழப்பம் இல்லை என்பது அவருடைய நினைப்பே தவிர அன்று நாட்டில் குழப்பம் இருந்தது என்பது எல்லோருக்கும் தெரியும்.

[பிற்பகல் 12-30]

திரு. பொ. விஜயராகவன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், துணைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது நாட்டிலே குழப்பம் இருந்தது என்ற ஒரு தகவலைச் சொன்னார்கள். ஆனால் அப்போது நாட்டிலே இருக்கின்ற எல்லா கவர்னர்களும் தங்களுடைய அறிக்கைகளை அனுப்பி வைக்கிற நேரத்திலே நாட்டிலே அதுபோன்ற குழப்பமான நிலைமை இல்லையென்று சொல்லி இருக்கிறார்கள் என்பது ஷா கமிஷன் விசாரணையில் புலனாகியிருக்கிறது. ஆகவே தவறான தகவலைக் கொடுக்கிறார்கள். அதுமட்டுமல்ல தங்களுடைய குடும்பத்திற்கு ஆபத்து என்றுதான் அவர்களுடைய தலைவர் இலண்டனிலே சொல்லியிருக்கிறார்கள் என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : அது ஜனதா கட்சியினுடைய கருத்து. நான் பேசியது எங்கள் கட்சியினுடைய கருத்து, பெரும்பான்மையோருடைய கருத்து. எமர்ஜென்சியை எடுத்துவிடுகிறேன் என்று சொன்னார்கள். ஆனால் அப்படியே தான் வைத்திருக்கிறார்கள். இங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் சொல்லும் பொழுது ஜனதா கொண்டுவந்திருக்கிற திருத்தத்திலே எமர்ஜென்சியை வைத்திருப்பது நியாயமல்ல என்று சொல்லுகிறவர்கள் இந்தத் திருத்தத்தை அங்கே எதிர்த்திருக்க வேண்டும், நாங்கள் ஏன் எதிர்க்க வேண்டும், ஏன் வைத்திருக்கிறீர்கள் என்று அவர்களோடு சண்டைபோட்டுக் கொண்டு வெளியே வரவேண்டும், ஏன் உறவு வைத்துக் கொண்டிருக்கிறார்கள்........

திரு. ரா. உமாநாத் : நாங்கள் ராஜ்ய சபாவிலே இந்த விஷயத்தைக் கொஞ்சம் கூட தயவுதாட்சண்யம் இல்லாமல் பைட் பண்ணியிருக்கிறோம், இப்போதும் பண்ணிக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : வெளியிலே இருந்து பேசுவது வேறு, அதிகாரத்திற்கு ஆட்சிக்கு வரும் போது சிக்கல்களைப் பார்த்த பிறகு, நடைமுறைகளைப் பார்த்தபிறகு எடுக்கிற முடிவுகள் வேறு என்பது தான் தெரிகிறது. எமர்ஜென்சியை எடுக்கவில்லை, அந்த வார்த்தையை வார்த்தை ஜாலத்தை மாற்றியிருக்கிறார்கள். அவ்வளவு தான். 42-வது திருத்தச் சட்டத்தை மாற்றவேண்டுமென்ற முறையிலே தான் 45-வது திருத்தச் சட்டத்தைக்கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் முன்னாலே என்ன சொன்னார்கள், இது பூராவையும் தகர்த்தெறிவோம் என்று சொன்னார்கள். அப்போதுகூட திரு. மதுலிமாயும், நானாஜி தேஷ்முக்கும் அப்படியே அதைத் தகர்த்து எறியக் கூடாது. அதிலே நல்ல விஷயங்கள் இருக்கின்றன, ஆகவே

மாற்றங்கள் தான் தேவை என்று சொன்னார்கள். இன்றைக்கு 42 வது திருத்தச் சட்டத்திலே உள்ள 23 பகுதிகளை அப்படியே வைத்துக்கொண்டு பாக்கியைத்தான் மாற்றம் செய்து வைத்திருக்கிறார்கள். பிரியாம்பிளை மாற்றுவோம் என்று சொன்னார்கள், இன்றைக்கு அப்படியே வைத்துக் கொண்டிருக்கிறார்கள்......

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, பிரியாம்பிள் திருத்தப்படும் என்று சொல்லவில்லை. பிரியாம்பிள் என்பது அரசியலமைப்புச் சட்டத்தினுடைய பார்ட் அல்ல, ஆகவே அதற்குத் திருத்தம் கொண்டுவர முடியாது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : 42 வது திருத்தச் சட்டத்திலே பிரியாம்பிளை மாற்றித் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை அவர்கள் கைவிடவில்லை என்பதைத்தான் சொல்கிறேன். சோஷலிஸ்ட் என்ற வார்த்தை அப்படியே இருக்கிறது, இது 42 வது திருத்தச் சட்டத்திலே சேர்க்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு கட்டத்திலே குடியரசுத் தலைவருக்குத் தான் முழு அதிகாரம் என்று இருந்தது. ஆனால் 42-வது திருத்தச் சட்டத்தின்படி அமைச்சருடைய அட்வைஸ் பேரிலேதான் குடியரசுத் தலைவர் செயல்பட வேண்டுமென்று செய்யப்பட்டது, அதை அப்படியே வைத்திருக்கிறார்கள். எமர்ஜென்சியை நாடு முழுவதற்கும் தான் போடமுடியும் என்ற நிலைமை இருந்தது. அதை மாற்றி எந்தப் பகுதியிலே அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறதோ அந்தப் பகுதியிலே மட்டும் எமர்ஜென்சியை டிக்ளேர் செய்யமுடியும் என்ற முறையிலே கொண்டுவந்தார்கள். அதையும் அப்படியே வைத்திருக்கிறார்கள். எங்கள் கட்சி உறுப்பினர் பேசிய மாதிரி டைரக்டிவ் பிரின்சிபிள்ஸ்க்கும் பண்டமண்டல் ரைட்ஸுக்கும் இடையே மோதல் வருகிற போது எதற்கு முக்கியத்துவம் கொடுப்பது என்கிறபோது சமூக நலனுக்குத்தான் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டுமென்று இருந்தது. அதுதான் 42 வது திருத்தம். ஆனால் தனிமனிதனுக்குத் தான் உயர்ந்த உரிமை கொடுக்க வேண்டுமென்று—முற்போக்காகச் செல்கிறோம் என்று சொல்கிறவர்கள் இப்படிப் பின்னுக்குப் போய்விட்டார்கள்—அந்த முறையிலே கொண்டு வந்து விட்டார்கள். இப்படி ஜனதா கட்சி கீழே போவதற்கு ஆன நிலைமையைத்தான் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் துணை தலைவரவர்களே, 45 வது அரசமைப்புத் திருத்தச் சட்டம் இந்த அவையின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டிருக்கிறது. ஜனதா கட்சி தேர்தலுக்கு முன்பு நாட்டிலே இருந்த நிலைமைகளைப் பிரத்யட்ச நிலை

(திரு. எம். ஏ. லத்திப்) [1979 பிப்ரவரி 17

மையிலே அனுபவித்து, அந்த அனுபவத்தின் வாயிலாக அவர்கள் பெற்ற சில கசப்பான நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு தான், அவர்கள் 1977-ல் தேர்தலில் நிற்கும் பொழுது அரசமைப்புச் சட்டம் எந்தெந்தவகையிலேயெல்லாம் மாற்றப்படும் என்ற உறுதியைத் தந்து ஆட்சியிலே அமர்ந்தார்கள். அந்த உறுதியின் அடிப்படையிலே 45-வது சட்டத் திருத்தத்தைப் பாராளுமன்றத்திலே அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். இதிலே எந்த அளவிற்கு நாட்டிலேயிருக்கும் பிரத்யட்ச நிலைமைகளை உத்தேசித்து, கருத்திலே வைத்து, நாட்டுக்குத் தேவையான முறையில், இன்றைய தேவை, நாளைய தேவை, வருங்காலத் தேவை, நாட்டிலேயிருக்கின்ற பல்வேறு இன மக்களின் தனித் தனித் தேவைகள், பல்வேறு வட்டாரங்களின் அபிலாஷைகள் இப்படிப்பட்ட அடிப்படையில் இவர்கள் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்களா என்று பார்த்தால், பல்வேறு இன மக்கள் பல்வேறு வட்டாரங்களிலே, பல்வேறு கோட்பாடுகள், பண்பாடு, நாகரிகங்களின் அடிப்படையில் வாழும் இந்திய நாட்டு மக்களின் அபிலாஷைகளை எண்ணத்தில் வைத்துக்கொண்டு கொண்டு வந்தார்கள் என்று சொல்வதற்கில்லை. காரணம், அவர்கள் நெருக்கடி நிலையிலே அனுபவித்த அனுபவத்தை மட்டும் வைத்துக்கொண்டு, காங்கிரஸ் சர்க்கார் வாயிலாகக் கொண்டு வரப்பட்ட சில சட்டங்கள் எப்படி அவர்களையும், மற்றக் கட்சிக்காரர்களையும் பாதித்தது என்பதை மட்டும் எண்ணத்தில் கொண்டு தேக்கி வைத்து, அந்த எண்ணத்தின் அடிப்படையிலே இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றுதான் என்னால் சொல்ல முடியும். இருந்தாலும் பிறகு பாராளுமன்றம் உருவாக்கப்பட்டபொழுது லோக்சபையிலே அவர்கள் இருக்கின்ற நிலை, இராஜ்ய சபையிலே அவர்களுக்கு இருக்கின்ற நிலை ஆகியவற்றின் அடிப்படையிலே, அந்தக் கட்டாயங்களின் அடிப்படையிலே லோக்சபையில் நிறைவேற்றுகின்ற சில திருத்தங்கள், அவர்கள் விரும்புகின்ற சட்டங்கள் இராஜ்ய சபையில் தோற்கடிக்கப்படக்கூடிய சூழ்நிலை உருவாகும் பொழுது தான் சில மாறுதல்களை, அவர்களின் எண்ணத்திற்கு விரோதமாகவோ அல்லது தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகளுக்கு மாறாகவோ இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பது என்னுடைய ஒரு கருத்தாகும்.

ஜனதா சர்க்கார் முக்கியமாக வடபுலத்திலே வெற்றிபெற்றது. வடபுலத்திலே அதற்குப் பெரும்பான்மையான இடங்கள் கிடைத்தன. அதுமட்டுமல்ல உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களிலே நூற்றுக்கு நூறு அவர்கள் வெற்றிபெற்றிருக்கிறார்கள். அப்படி நூற்றுக்கு நூறு வெற்றிபெற்றதன் காரணமாக இன்றைக்கு அவர்கள் எதை ஒப்புக் கொள்கிறார்களோ இல்லையோ எனக்குத் தெரியாது, ஆனால் உத்திரப்பிரதேசத்திலும், மத்தியப்பிரதேசத்திலும், பீகாரிலும், வங்காளத்திலும், டெல்லியிலும், அரியானாவிலும், பஞ்சாபிலும், இராஜஸ்தானிலும் இருந்த சிறுபான்மை

1979 பிப்ரவரி 17] (திரு. எம். ஏ. லத்திப்)

மக்கள், குறிப்பாக முஸ்லிம் பெருமக்களின் பேராதரவை அவர்கள் பெற்ற காரணத்தால் ஆட்சிக்கு வந்தார்கள் என்பது சரித்திர உண்மை. அதை அவர்களும் மறுக்க முடியாது, மறைக்கவும் முடியாது. இப்பொழுது முஸ்லிம் பெருமக்களிடம் அவர்கள் வாக்குக்காக நாடியபொழுது தெளிவாக வாக்குறுதி தந்தார்கள். அந்த வாக்குறுதி என்னவென்றால், 42-வது திருத்தச் சட்டத்தின் வாயிலாக அந்த 'டைரக்டிவ் பிரின்சிபிள்ஸ்' என்று இருக்கின்ற டைரக்டிவ் பிரின்சிபிள்ஸ்க்கு, ஃபண்டமெண்டல் ரைட்டின் மீது கொடுக்கப்பட்ட முன்னுரிமை, பிரையாரிட்டி இதைப்பற்றி அவர்கள் தெளிவாக வாக்குறுதி தந்தார்கள். ஏன் அந்த மாதிரி வாக்குறுதி தந்தார்கள் என்றால், 42-வது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலே 'டைரக்டிவ் பிரின்ஸிபிள்ஸ்க்கு முன்னுரிமை என்று வரும்பொழுது குறிப்பாக முஸ்லிம் பெருமக்களை, சிறுபான்மை மக்களை அடிப்படையாக இருக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆர்ட்டிகிள் 44, அரசியலமைப்புச் சட்டம் 42-வது விதியின்கீழ், Codification of common Civil law for all the citi-zens of India என்பது இந்த நாட்டிலே இருக்கின்ற எல்லாமக்களுக்கும் பொதுவான ஒரு சிவில்சட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்பது அரசமைப்புச் சட்டவிதி 44-ன் அடிப்படையிலே குறிப்பிட்டுள்ள ஒன்று.

[பிற்பகல் 12-40]

அதற்கு அன்றிருந்த நிலையிலே 42-வது திருத்தச் சட்டத்திற்கு முன்பு அந்த மாதிரி 'கோடிஃபிகேஷன்' வருமானால், ஃபண்டமென்டல் ரைட்ஸ்' என்ற வகையில், 'ரிலிஜியஸ் ரைட்ஸ்' மார்க்கத்தைப் பேணுகிற அடிப்படை உரிமை என்று வரும் போது, 42-வது விதி அடிப்படை உரிமை என்ற காரணத்தினால் பின்னே தள்ளப்படும் என்ற நிலைமை இருந்தது. அதை இஸ்லாமிய மக்களும் கிறிஸ்தவர்களும், மற்ற ஏனைய, மார்க்க அடிப்படையிலே, சிறுபான்மையாக இருக்கக் கூடியவர்களும், எதிர்த்தார்கள். ஜனதா கட்சியினர் இந்திரா செய்த அநீதி இது என்று வாதிட்டார்கள். அந்த அநீதியைப் போக்குவோம் என்று தெளிவாக்கினார்கள். ஆனால், இன்றைக்கு இந்தத் திருத்தச் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். நிறைவேற்றியும் இருக்கிறார்கள். ஆனால், அதில் பார்த்தால் 42-வது திருத்தச் சட்டத்திலே குறிப்பிட்ட The priority of the Directive principles over the Fundamental Rights என்கின்ற அந்த நிலை இன்றைக்கும் நீடிக்கிறது,

ஆகவே, இந்தத் திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலே ஏதோ ஒரு அரசாங்கம் தனக்கு இருக்கிற பெரும்பான்மையை வைத்துக் கொண்டு, ஷரியத் சட்டத்தை மாற்றவேண்டும், இந்த நாட்டில் இருக்கிற சிறுபான்மையினர் பொதுச்சட்டத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும், கிறிஸ்தவ சமுதாயத்தினர் பொதுச்

சட்டத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். ஜைன மதத்தைச் சேர்ந் தவர்கள் பொதுச்சட்டத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும், பார்சி மக்கள் எல்லாம் பொதுச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளவேண்டு மென்று பாராளுமன்றத்திலே சட்டம் கொண்டுவருவார்களானால் பாதிக்கப்படுகிற சிறுபான்மை மக்கள் தங்களுடைய அடிப் படை உரிமை, தங்களுடைய மார்க்கத்தை பேணுகின்ற உரிமை, தங்களுடைய கலாச்சாரத்தைப் பேணுகின்ற உரிமை, தங்க ளுடைய மொழியை வளர்க்கின்ற உரிமை, தங்களுடைய தனித் தன்மையை வளர்க்கின்ற உரிமை, இந்த உரிமைகள் எல்லாம் பாதிக்கப்படுகிற வகையில் 'காமன் சிவில் கோட்' கொண்டு வருகிறார்கள், எங்களுடைய அடிப்படை உரிமை பாதிக்கப்படு கிறது என்று கோர்ட்டிலே நீதி கோர முடியாது. இது ஜனதா சர்க்கார் தான் கொடுத்த உறுதிக்கு மாறாக நடந்துகொள் கிறது என்பதைக் காட்டுகிறது. அவர்கள் சிறுபான்மை மக்களை மட்டுமல்லாமல் தங்களுடைய மனசாட்சியை ஏமாற்றுகிற நிலை என்ற அளவில் இருப்பது கண்டிக்கத்தக்கது.

ஆகவே, குறிப்பிட்ட இந்தத் திருத்தச் சட்டத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று சொல்கிறோம். அதே நேரத்தில் இதை எதிர்க்கிறோம் என்று சொல்கிறோம். அதற்கு, ஜனதா கட்சியினர் ஒரு வாதத்தைக் குறிப்பிட முடியும். நாங்கள் அடிப்படை உரிமைக்கு முன்னுரிமை கொடுக்கத்தான் நினைத்தோம். பழைய நிலைமைக்கு போகத்தான் நினைத்தோம். லோக் சபாவிலே எங்களுக்கிருக்கிற மெஜாரிட்டியை வைத்து நாங்கள் செய்ய முடியும். ஆனால் ராஜ்யசபாவிலே அவர்கள் எதிர்த்தார்கள் என்று காரணம் சொல்லலாம். ராஜ்யசபாவிலே அப்படித்தான் நடந்திருக்கிறது. காங்கிரஸ்காரர்கள் ஏற்கனவே சட்டத்தைப் பிறப்பித்தார்கள், ஆகவே, இப்பொழுது அதைத் திருத்துவதை எதிர்த்தார்கள். அவர்களைப்பற்றி நாம் புரிந் திருக்கிறோம், நம்மைப் பற்றி அவர்கள் புரிந்திருக்கிறார்கள். நாடு புரிந்திருக்கிறது சிறுபான்மை மக்கள் புரிந்திருக்கிறார்கள். ஆனால், லோக் சபாவில் ஒரு வாக்குறுதியாவது கொடுத்திருக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்குமானால், இப்பொழுது இந்த நிலைமை இராது. ராஜ்யசபாவிலே ஜனதா கட்சிக்கு எண்ணிக்கை அதிகரிக்கும் போது இந்தத் திருத்தத்தை நிறைவேற்றுவோம் என்று லோக் சபாவிலே வாக்குறுதியைத் தந்திருப்பார்களானால், அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற அரசியல் நெருக்கடியை நாம் புரிந்திருக்கமுடியும். ஆனால் அப்படி அவர்கள் செய்யவில்லை என்பது எங்களுக்கு எல்லாம் வருத்தத்தைத் தருகிறது. ஆகவே இந்த திருத்த சட்டத்தை எங்களால் ஆதரிக்க முடியாது, என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே ரபரேன்டம் பற்றி சொன்னார்கள். The basic features of th Constitution, even if they are sought to be changed by Parliament even after change or amendments to be carried out is ccepted by both the Houses of Parliament and subsequently

ratified by the required number of States, it will be referred for the opinion of the people by way of referendum, பேசிக் பியூச்சர்ஸ் என்ன என்ற அடிப்படையில் சில நிலைமைகளை பாராளு மன்றமும் சட்டமன்றமும் எடுத்துக்கொண்டாலும் அந்த அடிப் படை நிலைமைகளை மக்களிடத்திலே கேட்டுத்தான் செய்து வருகிறோம் என்பது ரெபரேன்டம் வைத்தால் தான் செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். அரசியல் சட்டத்தில் பிரியாம் பிள் இருக்கிறது. அந்த முகப்புரையில் பேசிக் ப்யூச்சர்ஸ் ஆப் கான்ஸ்டிடியூஷன் என்ன என்று தெளிவாகப் போடப்பட்டு இருக் கிறது. 42-வது திருத்தத்திலே இந்திரா காந்தி அம்மையார் பிரதம அமைச்சராக இருந்தபோது நிறைவேற்றிய அந்தத் திருத்தத்திலே Democratic and secular Republic of India அவர்கள் அதிலே செகுலர் என்று சொல்கிறார்கள். அப்போதே வாதம் எழுந்தது. செகுலர் என்பதற்கு உங்களுடைய அர்த்தம் என்ன? டெமாக்கிரடெக் என்பதற்கு அர்த்தம் தெரிகிறது. ஜனநாயகம் என்பதற்கு அர்த்தம் தெரிகிறது. டெமாக்ரடிக் பிரின்சிபிள் என்று சொல்கிற போது சிறுபான்மையினருக்கு நீங்கள் எந்த அளவிற்கு நீங்கள் பாதுகாப்பு கொடுத்துள்ளார்கள். அவர்களுடைய வரையறை என்ன என்று கேட்டார்கள். அன்று கூட விவாதம் எழுந்தது. ஆனால் பதில் சொல்லவில்லை. ஜனதா சர்க்கார் வந்த நேரத்தில் தெளிவாகச்சொன்னார்கள். இந்த செகுலர் என்பதற்கு வரையறை வகுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். செகுலர்—மதசார்பின்மை என்றதால் அரசாங்கத்தின் சார்பாக எந்த ஒரு மதத்தையோ, மார்க்கத்தையோ வளர்ப்பதற்கு, அல்லது அதை நிலைநாட்டு வதற்கு வழி வகுக்காது. இந்த நாட்டின் நன்மைகள் என்று சொல்லப்படுகிறபோது ஒரு வார்த்தை சொன்னார்கள். அது என்ன வார்த்தை என்றால் 'பொது நன்மை' அந்தப் பொது நன்மை என்ன என்று தெரியவில்லை. நாட்டில் உள்ள சிறு பான்மையினர் பாதிக்கப்படும்பொது நன்மைஇருக்காது: ஆகவே பொது நன்மை என்பது என்ன என்பது வரையறுக்கப்பட வேண்டும். ஒரு சிறுபான்மையினருக்கு பாதகம் ஏற்பட்டாலும் அது செகுலர் ரிபப்ளிக்குக்கு சாத்தியம் இல்லை. ஆகவே, மதக்கோட்பாடுகள். மார்க்கக்கோட்பாடுகள் ஆகியவற்றின் மீது உள்ள தீவிர எண்ணங்கள் தடுக்கப்படவேண்டும், குறைக்கப் படவேண்டும். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், அது மத்திய அரசாங்கம் என்று இருந்தாலும், மாநில அரசாங்கம் என்று இருந்தாலும் பொதுவான ஒரு அடிப்படையில் எந்த வகையில் செகுலரிசம் வளர்க்கப்படவேண்டும் என்று விளக்கப்பட வேண்டும் என்று கேட்கப்பட்டது. அன்றைய சர்க்காரும் பதில் சொல்லி விளக்கவில்லை. ஆனால் ஜனதா சர்க்கார் அதை விளக்குவதாக வாக்களித்தார்கள் ஆனால் இந்திரா காந்தி அம்மையார் எப்படி கொண்டு வந்தார்களோ அதைப்போலவே 'டெமாக்கிரடிக் செகுலர் ரிபப்ளிக் ஆப் இந்தியா' என்ற எக்ஸ் பிரஷனை அப்படியே வைத்து இருக்கிறார்கள். அப்படி வைத்து இருந்தாலும் பரவாயில்லை.

We are also for secularism and we mean what you mean by secularism. Secularism means complete neutrality so far as the State is concerned with reference to different religions of the country. The Government should not align itself with any particular religion, but should maintain complete and perfect neutrality with regard to religions. அப்படித்தான் எங்களுடைய செகுல ரிசம். நாங்கள் சொல்வது எந்த மதத்திலாவது அவர்கள் இருக்கட்டும். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் எந்த மதத்தோடும் குறிப்பிட்ட [illegible] தொடர்பையோ வைத்துக்கொள்ளக்கூடாது என்பது எங்களுடைய செகுலர் வாதம். அதற்குத் [illegible] விளக்கம் தந்து இருந்தால் நன்றாக இருந்திருக்கும். அதற்கு விளக்கம் தரவில்லை. ஆகவே, அந்த அடிப்படையிலும் நாங்கள் இது குறித்து சிந்தித்துப் பார்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம். மற்றொன்றும் நாம் நினைவு [illegible] கொள்ளவேண்டும். ரெபரேன்டம் என்று சொல்கிறபோது, மெஜாரிட்டி, மைனாரிட்டி என்று வருகிற போது, ஒரு குறிப்பிட்ட அளவிலே மத அடிப்படையிலே, மைனாரிட்டி அடிப்படையிலே, கலாச்சார அடிப்படையிலே இருப்பவர்கள் 51 சதவிகிதம் மக்கள். இந்திய நாட்டின் ஒட்டு மொத்தமான வாக்கெடுப்பு எடுக்கிறபோது 51 சதவிகிதம் குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்தவர்கள் வாக்களிப்பார்களானால் 49 சதவிகிதம் மக்களின் எண்ணங்கள் அடிக்கப்படுகின்றன. இது ஜனநாயகத்திற்கு [illegible] தேவைதான். ரிபப்ளிக் என்று சொல் கிறபோது நாம் இன்றைக்கு பாராளுமன்ற ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்டு இருப்பதால் பாராளுமன்ற ஜனநாயகத்தில் என்ன நடைபெறுகிறது என்றால் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள் சபைக்கு வருகிறார்கள். அந்த பிரதிநிதிகள் உட்கார்ந்து இந்த சபை ஒரு தீர்மானத்தை நிறை வேற்றுகிறபோது, அந்தத் தீர்மானத்தை மதிக்காமல், மக்க ளிடத்தில் அனுப்புவோம் என்று சொல்வது ஏதோ ஒரு உள் நோக்கம் வைத்து செய்து இருக்கும் காரியம் போல் தெரிகிறது. அதுவும் மேல்மட்டத்தில், இன்றைக்கு வடபுலத்திலே இருக்கின் றவர்களின் எண்ணம், அவர்களின் மரபு, அவர்களின் பாரம் பரியம் இவைகளை எல்லாம் எண்ணிப்பார்க்கும் போது இதிலே ஒரு பயங்கரமான ஆபத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

[முற்பகல் 12.50]

நான் ஒரு தமிழன்; தமிழ் மொழியைக் காக்கின்ற உரிமை எனக்கு உண்டு; அந்தத் தகுதி எனக்கு உண்டு; தமிழ் மொழி யிலே பேச எனக்கு உரிமை உண்டு. ஆனால் நீங்கள், உங்களுடைய மொழியைத்தான் பேச வேண்டும், உங்களுடைய கலாச்சாரத்தைத்தான் பின்பற்ற வேண்டும், உங்களுடைய மரபைத்தான், உங்களுடைய பாரம்பரியத்தைத்தான் கடைபிடிக்க

வேண்டும் என்று சொன்னால் அதை நாங்கள் எப்படி ஏற்றுக் கொள்வது? அதுவும் 'ரெஃபரெண்டம்' என்ற பெயராலே [illegible] ரெஃபரெண்டம் என்று சொல்லி, 51 சதவிகிதம் பேர் ஆதரவாகவும் 49 சதவிகிதம் பேர் எதிர்த்தும் வாக்களித்தால் [illegible] திணைத்ததை எல்லாம் செய்யலாம். [illegible] வடபுலத்திலே இருக்கிற ஜனத்தொகைதான் அதிகம், தென்புலத்திலே இருப் பவர்கள் குறைவு. ஒரு [illegible] நாட்டிலே, [illegible] விரோதமான காரியங்களை எல்லாம் கூட தீர்மானம் போட்டு ரெஃபரண்டம் மூலம் செயல்படுத்த முடியும்.

மொழியைப்பற்றி விரிவாகப் பேசவேண்டுமானால் அதற்கு ஒரு தீர்மானமே வர இருப்பதாகத் தெரிகிறது; அதிலே பேசலாம் என்றிருக்கிறேன். ஆனால் இப்போது [illegible] விரும்பவில்லை. ஒரு சமஷ்டி ஆட்சியில், பெடரேஷன் செட்டப் பில் அனைத்து மக்களுக்கும் சம உரிமை இருக்கவேண்டும். அது அல்லாமல் மெஜாரிட்டி மக்களின் விருப்பப்படி காரியங்கள் செய்யலாம் என்ற நிலைமை ஏற்படுமானால், வடபுலத்திலே இருக்கிற தலைகள் தான் அதிகம்; தென்புலத்திலே இருக்கிற தலைகள் குறைவு; அதுவும் 60 கோடி மக்கள் தொகையில் தமிழ் நாட்டில் இருக்கிறவர்களின் எண்ணிக்கை 4½ கோடிதான். ஆகவே ரெஃபரண்டம் என்ற பெயரால் எந்த முடிவை எடுத்தாலும் அது தமிழகத்திற்கு விரோதமானதாகப் போய்விடும் சாத்தியக்கூறு தான் இருக்கிறது. விந்திய மலைக்கு வடக்கே இருக்கிற நிலைமை வேறு, விந்திய மலைக்கு தெற்கே இருக்கிற நிலைமை வேறு. தென்புலத்து மக்கள் விரும்பாத ஒன்றை ரெஃபரண்டம் என்ற பெயரால் திணிப்பதாக இருந்தால் அது இந்த நாட்டின் 'டெமாக் ரஃபிச்சரை'யே மாற்றிவிடும். ஆகவே, ஏற்படுகின்ற அபாயம் எப்படிப்பட்டது என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இன்றைக்கு நடைபெறுகின்ற காரியங்களைப் பார்க்கின்ற போது மத்தியிலே இருப்பவர்கள் யாராக இருந்தாலும், காங்கிரசாக இருந்தாலும் அல்லது ஜனதாவாக இருந்தாலும் அல்லது வேறு யாராக இருந்தாலும் பேச்சு மாறுகிறதே தவிர எண்ணங்கள் மாறவில்லை; மொழியிலே வார்த்தை ஜாலங்கள் இருக்கின்றனவே தவிர உள் அர்த்தம் மாறவில்லை; மாறாது என்பதைச் சிந்தித்துப் பார்க்க நாம் எல்லாம் கடமைப்பட்டிருக் கிறோம்.

இன்னொன்றையும் மிக வருத்தத்தோடு நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: நேரமாகிவிட்டது. இன்னும் மசோதாக்கள் வேறு இருக்கின்றன; இந்தத் தீர்மானத் திலே பலர் பேசவேண்டியிருக்கிறது. நீங்கள் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: முடிக்கும் தருவாய்க்கு வந்துவிட்டேன். இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டத்திருத்தத்திலே எப்படிப்பட்ட பேரபாயங்கள் எல்லாம் இருக்கின்றன என்ற சந்தேகத்தை எடுத்துச் சொன்னேன். இந்த சந்தேகத்தை நிவர்த்தி செய்கின்ற வகையிலே சட்ட அமைச் சரவர்கள் தெளிவாக விளக்கமளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் என்ன விளக்கமளிப்பார்கள் என்பது தெரிகிறது; இருந்தாலும் சந்தேகங்களைச் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்பதை நான் உணருகிறேன். உறுப் பினர்கள் மாமன்றத்திலே இப்படியெல்லாம் பேசினார்கள், கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள், உணர்வுகளை வெளிப் படுத்தினார்கள் என்பதைப் புரிந்துகொண்டு தன்னுடைய பதிலுரையிலே சட்ட அமைச்சரவர்கள் விளக்கமளிப்பார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக இருப்பது தடுப்புக் காவல் சட்டம். அது மிசா போல் இருக்கிறது. மிசாவைப் பற்றி பாராளுமன்றத்திலே,

The Maintenance of Internal Security Act which is the exclusive creation of Mrs. Indira Gandhi, the then prime Minister was not Maintenance of Internal Security Act, but it was only Maintenance of Indira-Sanjay Act என்று பாராளுமன்றத்திலே சொல்லியிருக் கிறார்கள். The Act was mainly intended to have the secured official position to Mrs. Indira Gandhi and her son Mr. Sanjay என்று நான் சொல்லவில்லை; பாராளுமன்றத்தில் சொல்லியிருக் கிறார்கள். அந்த மிசாவை அகற்றிவிட்டோம் என்று சொல் கிறார்கள். ஆனால் மிசாவை அகற்றிவிட்ட பிறகு. 'ப்ரிவென்டிவ் டிட்டன்ஷன்' என்கிறீர்களே, அது எதற்கு? அது தேவையா? இப்போது இருக்கிற ஐ. பி. சி. மூலம் எந்த ஒரு இடத்திலும் எப்படிப்பட்ட நேரத்திலும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பாதகம் ஏற்படுமானால் நடவடிக்கை எடுக்க இடம் இருக்கும் போது, அனைத்து சாத்தியக்கூறுகளும் இப்போதே ஐ. பி. சி-யில் இருக்கும்போது வேறு எதுவும் தேவையில்லையே. விசாரணை இல்லாமல் கைது செய்தவர்களை மூன்று மாதம் காவலில் வைத்துவிட்டு, அதற்குமேல் 'அட்வைசரி போர்டுக்கு' ரெஃபர் செய்ய வேண்டும் என்றிருந்ததை இரண்டு மாதமாகக் குறைத்து விட்டோம் என்று சொல்கிறார்கள்.

அதை வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் என்ன? ஆகவே அதை நான் எதிர்க்கிறேன் என்று தெரிவித்துக் கொள்வதோடு இன்னொன்றையும் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த ப்ராப்பர்ட்டி ரைட் பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

(மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் முடியுங் கள். பேசுவதற்கு அழைக்கவில்லை என்று கூறுகிறீர்கள், பேச அழைத்துவிட்டால் முடிக்க மாட்டேன் என்கிறீர்கள், எல்லோரும் பேசவேண்டி இருக்கிறது. ஆகவே சீக்கிரம் முடியுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: அடுத்து ப்ராப்பர்ட்டி ரைட் பற்றிச் சொல்ல விரும்புகிறேன், ப்ராப்பர்ட்டி என்றால் வீடு, வாசல், நிலம் இவைகள்தான் என்பதல்ல. இந்தமாதிரி மெட்டீரியல் ஆப்ஜெக்ட்தான் ப்ராப்பர்ட்டி என்று நினைத்துவிடக் கூடாது.

Property is some thing more than what you believe and what you know.

ப்ராப்பர்ட்டி என்பது பேசுகிற உரிமை கூட ப்ராப்பர்ட்டிதான். பேசுகிற உரிமை that is also my property, எழுதுகிற உரிமை

that is also my property. Though it is not tangible, it is fundamental right and basic right.

இவைகளைக் காப்பாற்ற நினைக்கும்போது அதுதான் நான் ப்ராப்பர்ட்டியைக் காப்பாற்ற நினைக்கின்ற தன்மையாகும். அதுவே என்னுடைய உரிமையாகும். வேறு நாடுகளிலே இருக் கின்றவர்கள் வேண்டுமானால் உண்பது, உடுப்பது, உறங்குவது என்னுடைய உரிமை என்று சொல்லிக் கொள்ளலாம். ஆனால் இந்தியாவைப் பொறுத்தமட்டில் உள்ளத்திலே வளர்த்துக் கொண்டிருக்கின்ற உணர்ச்சிகளைப் பாதுகாப்பதுதான் நமது உரிமை என்று எண்ணிக்கொண்டிருக்கிறோம். தமிழ் மொழியைக் காப்பதற்கு என்னுடைய உயிரையே தருகிறேன் என்று சொல்லு கின்ற பாரம்பரியம் உள்ள நாடு இது. ஆகவே உள்ளத்து உணர்ச்சிகளைப் பாதுகாப்பது நம் உரிமை. என்னுடைய மொழியைப் பாதுகாப்பதும் என்னுடைய மதத்தைப் பாதுகாப் பதும் என்னுடைய உரிமை. நான் பேசுகின்ற அந்த என்னுடைய உணர்ச்சியைத் தெரிவிக்கின்ற மொழியை நான் மதிக்கிறேன். என்னுடைய முஸ்லீம் மதத்தை நான் மதித்து அதைக் காப்பாற்ற நினைக்கிறேன்.

property relegated to the background என்பது fundamental rihgt status இல்லை என்று சொல்வதாகும்,

ஆகவே அந்த அடிப்படையிலே இதற்கான விளக்கங்களை எல்லாம் மாண்புமிகு அமைச்சரவர்கள் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அணுகுமுறைகளை இந்த உணர்ச்சிகளின் அடிப்படையிலும் மாற்றிக்கொண்டு பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்; இத்துடன் என்னுடைய கருத்துக்களை முடித்துக்கொள்கிறேன்.

2. ஒழுங்குப் பிரச்சினைகள் (தொடர்ச்சி)

(அ) தந்தை பெரியாருடைய இதயம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை உறுப்பினர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர வர்கள் காலையில் அறிவித்தபடி தந்தை பெரியார் அவர்களுடைய இதயமும் இன்னும் சில உறுப்புக்களும் பேரவைத் தலைவரின் அறையிலே வைக்கப்பட்டிருக்கின்றன. அது இரண்டரை மணி வரை அங்கே இருக்கும். அதற்குப் பிறகு வேறு இடத்திற்குக் கொண்டு செல்லப்படும். ஆகவே அதற்குள்ளாக பார்க்க விரும்புகின்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பேரவைத் தலைவருடைய அறைக்குச் சென்று பார்க்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து திரு. ரா. மார்க்கபந்து அவர்களைப் பேச அழைக்கிறேன்.

(5) அரசினர் தனித் தீர்மானம். (தொடர்ச்சி)

அரசியலமைப்பு 45-வது திருத்தச் சட்டத்திற்கு ஏற்பளிப்பது குறித்து (தொடர்ச்சி)

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்று 45-வது அரசியல் சட்டத் திருத்த மசோதாவை இந்தத் தமிழகத்துச் சட்ட மன்றம் ஆதரிக்கின்றதா இல்லையா என்பதைக் காண்பதற்குரிய ஒரு அளவு கோலாக இங்கே விவாதத்திற்கு வைத்திருக்கிறார்கள். இதிலே ஒரு சில கருத்துக்களை அப்படியே ஏற்றுக்கொள்வது என்று இல்லாமல் நம்முடைய உள்ளத்திலே தோன்றுகின்ற கருத்துக்களைச் சொல்வது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். குறிப்பாகக் கல்வியைக் கன்கரன்ட் லிஸ்டிலே வைத்திருக்கிறார்கள். அந்தந்த ஸ்டேட்டிலே இருந்தால்தான் அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற கல்வி, கலாசாரம், பண்பு இவைகளை உள்ளடக்கி அந்தக் கல்வி முறையானது அந்தப்பகுதி மக்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே அமையும். அப்படியில்லாமல் பொதுவாக அது கன்கரன்ட் லிஸ்டிலே இருந்தால் ஒருவித அச்சத்தை உண்டுபண்ணுவதற்கு வாய்ப்பாக இருக்கக்கூடும், காரணம் சொல்ல விரும்புகிறேன். இந்தியைப் புகுத்துவதற்கு முயற்சிகள் செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

[பிற்பகல் 1.00]

இந்தியைப் பரப்புவதற்கு எவ்வளவு தொகை வேண்டுமானாலும் செலவு செய்யலாம் என்ற சட்டமும் இருக்கிறது. இவைகளையெல்லாம் பார்க்கிற நேரத்தில் கல்வி மத்திய மாநில அரசுகளின் கன்கரன்ட் லிஸ்டில் இருப்பதால் ஒரு

விதத்தில் இந்தியைப் புகுத்த இது வழி வகுத்து விடுமோ என்ற அச்சத்தை உண்டுபண்ணுகிற காரணத்தால் இந்தத் தமிழக அரசு கல்வியை ஸ்டேட் லிஸ்டில் வைத்தாகவேண்டும் என்ற தன்னுடைய அழுத்தமான கருத்தினைச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தச் சட்டத்தில் மதச்சார்பற்ற அரசு என்று சொல்கிறபோது ஒன்றை நாம் உணர்ந்தாகவேண்டும். இந்திய நாட்டில் வாழ்கிறவர்கள் அனைவரும் மதச்சார்பற்றவர்களாக மதச்சார்பற்ற தன்மையில் நடந்துகொள்ளவேண்டும் என்று சொல்லும்போது ஒன்று வேதனைக்குரியதாயிருக்கிறது. தமிழ்நாட்டில் இந்தியநாட்டின், பல்வேறு பகுதிகளிலும் இந்துக்கள் என்று சொன்னால் அவர்களுக்கு என்று ஒரு சட்டம், கிருத்தவர்களுக்கு என்று ஒருசட்டம் முகமதியர்கள் என்று சொன்னால் அவர்களுக்கு ஒரு சட்டம் என்று பல்வேறுவிதமான சட்டங்கள் இருப்பதால் ஒருசாராருக்கு அது நன்மையாக அமைகிறது, மற்றவர்களுக்குப் பாதகமாக அமைகிறது. இப்படி பலவிதமான சட்டங்கள் இந்த நாட்டில் அமல்படுத்துவதை விட்டு There must be one codified law for all the citizens of India என்று சொல்கிற அளவில், முகமடன் லா, ஹிந்து லா, கிருத்தவர்களுக்கு என்றுள்ள இந்தியன் சக்ஸஷன் ஆக்ட் போன்ற சட்டங்களை எல்லாம் எடுத்துவிட்டு இந்தியன் ஆக்ட் என்று அனைவருக்கும் பொதுவாக, ஏற்புடைத்ததாக ஒரு சட்டத்தை அமல் படுத்துவது சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அப்படி அமல்படுத்துவதனால் இந்திய நாடு ஒரு மதச்சார்பற்ற நாடு என்பதை நாம் நிலைநிறுத்தமுடியும் என்று குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஹிந்து மாரியேஜஸ் ஆக்ட் என்று சொல்லும்போது, பிகமி ப்ரிவன்ஷன் ஆக்ட் என்று சொல்லக் கூடியதெல்லாம் இந்துக்களுக்குத்தான் பொருந்தும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஒரு ஹிந்து ஒரு மனைவிக்கு மேல் இன்னொரு மனைவியைக் கட்டிக்கொள்ளக் கூடாது, அப்படிக் கட்டிக் கொண்டால் அது வழக்குமன்றத்திற்குச் சென்று அபராதம், தண்டனை போன்றவையெல்லாம் இருக்கும்போது முஸ்லிம், முகமதிய சமுதாயத்தினர் மட்டும் நான்கு மனைவிகள் வரை கட்டிக்கொள்ளலாம் என்ற தாராள நிலை ஏன் இருக்கவேண்டும் என்று கேட்க விரும்புகிறேன். இது இரண்டு விதத்தில் ஆபத்தை உண்டுபண்ணுவதாகும்.

திரு. எம். ஏ. லத்திப்: On a point of order. it is not a rule but an exception. எவ்வளவு முஸ்லிம்கள் இப்போது நான்கு மனைவிகளோடு வாழ்கிறார்கள்?

* * * *

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நான்கு மனைவிகளைக் கட்டிக்கொள்ளவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. தேவைப்பட்டால், உங்களுக்கு தேவைப்பட்டால் நீங்கள் நான்கு மனைவிகளை கட்டிக்கொள்ளலாமே தவிர it is not a rule but an exception. அப்படிக் கட்டிக்கொள்ளாமல், ஒரு மனைவியை வைத்துக்கொண்டு

* * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் பேசியதில் * * என்று ஆரம்பித்து சொன்ன வாக்கியங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அவை பத்திரிகைகளிலும் வரக்கூடாது.

திரு. ரா. மார்க்கபந்து: சட்டத்திற்கு முன் எல்லோரும் சமம் என்று சொல்லும்போது இந்தச் சட்டம் அதற்கு குறுக்கே நிற்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒரு தாரம் இருக்கும்போது வேறு ஒரு மணம் செய்து கொண்டால் ஐ. பி. சி. 494 படி ப்ராஸிக்யூட் செய்யப்பட்டு குறைந்த பட்சம் ஆறுமாதம் ஜெயில் தண்டனை கிடைக்கும் என்றிருக்கிறது. ஆனால், முஸ்லிம்களுக்கு அது பொருந்தாது. அப்படிப்பட்ட வேறுபாடு இருக்கிறது. ஒரு புறத்தில் வளர்ந்துவருகிற மக்கள் தொகையைக் குறைக்க வேண்டும் என்று இந்த அரசு நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டுவருகிற போது மக்கள் தொகையை அதிகப்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திவிட்டால் பின்னால் நாம் அதன் விளைவுகளைச் சந்திக்கவேண்டியிருக்கும். ஆகவே மக்களிடையே எந்தவிதப் பாகுபாடும் இருத்தல் கூடாது. இந்திய நாட்டில் இருக்கிற அனைவருக்கும், எல்லா மக்களுக்கும் பொதுவாக இருக்கிற சட்டங்களை இயற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக. . . . .

திரு. எம். ஏ. லத்தீப்: பாயிண்ட் ஆப் ஆர்டர், இஸ்லாமிய சட்டம் என்பது முஸ்லீம்களால் உருவாக்கப்பட்டதல்ல. இறைவனால் உருவாக்கப்பட்டு முஸ்லிம்களுக்கு கொடுக்கப்பட்டது. அந்தச் சட்டத்தை அனுசரிப்பவர்கள் தான் முஸ்லிம்கள். முஸ்லீம்கள் இருப்பது வரை இந்தச் சட்டம் இருக்கும். அந்தச் சட்டம் வேண்டுமா வேண்டாமா என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் முஸ்லீம்கள் தான். அப்படிப்பட்ட இந்த முஸ்லிம் சட்டத்தை மாற்றவேண்டுமென்று யாராவது நினைத்தால், அது இந்திய நாட்டிலுள்ள 12 கோடி முஸ்லிம்களின் பிணத்தின் மீது தான் மாற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. ரா. மார்க்கபந்து: நான் சொன்னதை அருமை நண்பர் வேறு விதமாக எடுத்துக் கொண்டார்கள் என்று நினைக்கிறேன். இவ்வளவு 'ஃபெனடிக்' ஆக இதை வற்புறுத்த இப்படிப்பட்ட சட்டம் இருந்தே ஆகவேண்டும், ஒரு குறிப்பிட்ட மதத்தினரின் பெயரால், குறிப்பிட்ட சலுகைகள் என்பது இருந்துதான் ஆகவேண்டும் என்று கூறுகின்ற நிலைமை இருக்கக் கூடாது என்பதைத்தான் என்னுடைய வாதமாக நான் வைக்க விரும்புகிறேன். மதத்தின் பேரால் ஏன் சட்டங்கள் உருவாக்கப் பட வேண்டும்? இன்றைக்கு நாட்டில் என்ன இருக்கிறது? (மகமடன்) முகமதியர் லா இருக்கிறது, இந்தியன் சக்ஸஷன் லா இருக்கிறது. இந்து லா இருக்கிறது. இப்படிப்பட்ட சட்டங்கள் இருப்பதின் காரணத்தால் தான், ஜாதியின் பெயரால், மதங்களின் பெயரால் மக்களை வேறுபடுத்தக்கூடிய சட்டங்கள் எதுவும் இருக்கக்கூடாது என்பதைத்தான் நான் வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். இன்றைக்கு நாட்டில் நாம் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறோம், மக்கள் தொகையை கட்டுப்படுத்தவேண்டும், இரண்டுக்கு மேல் இருக்கக் கூடாது, என்று சொல்லிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில், இன்னொரு பக்கத்தில், மதத்தின் பேரால் சட்டங்கள் இருப்பதின் காரணமாக, அதனுடைய வாய்ப்புகளை பயன்படுத்திக்கொண்டு, குறிப்பிட்ட மதத்தைச் சார்ந்தவர்கள் தங்களுடைய மக்கள் தொகையை அதிகமாக்கிக் கொள்கின்ற வாய்ப்பும் இருக்கின்றது என்பதையும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். ஸெக்குலார் ஸ்டேட் என்று சொல்லப்படுகிற நேரத்தில். . .

There must be one unified law for the entire nation என்ற முறையில் இதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். டைரக்டிவ் பிரின்ஸிபிள் என்பது அமல் படுத்தப்பட வேண்டும். இப்போது ஜனதா அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பில் வருவதற்கு முன்னால் தங்களுடைய 'மானிபஸ்டோவை' விட்டார்கள். பின்தங்கிய மக்களுக்கு தனியாக பிரதிநிதித்துவம் அளிப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். இப்போது பீகாரில் என்ன நடந்தது. ரத்த களறிகள், ரண களங்கள், பிற்போக்கான மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, 74 சதவீதமும், மற்ற சமுதாயத்தினருக்கு 26 சதவீதமும் ஒதுக்கப்பட்டதின் காரணமாக எவ்வளவோ நிகழ்ச்சிகள் அங்கு நடைபெறுவதை நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம்.

There should be equality to minimise the inequality of the income between the individuals and group of individuals என்று சொல்வது வரவேற்கத் தக்கது தான். இதிலுள்ள திருத்தங்களின் அடிப்படையில், வேலைவாய்ப்புகளைத் தருகின்ற பொழுது, ஒரே குடும்பத்தில் உள்ள நான்கைந்து பேர்களுக்கு வேலை கொடுக்கிற பொழுது, இன்றைக்குள்ள நிலைமையில் பல சட்டங்கள் இருப்பதை மனதில் கொண்டு நாம் சிந்திக்க வேண்டும். இன்று கூட ஒரு ஊர்வலம் வந்ததை நான் பார்த்

தேன். அந்த ஊர்வலத்தில் என்ன சொல்லிக் கொண்டு வந்தார்கள் என்றால், பதவி உயர்வை ஜாதி அடிப்படையில் கொடுக்காதே-என்று சொல்லிக் கொண்டு வந்தார்கள். ஜாதி அடிப்படையில் பதவி உயர்வு தரக்கூடாது என்று சொல்வதை நான் வரவேற்கிறேன். வேலைக்கு ஆட்களை தேர்ந்தெடுக்கும்போது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவீதம் என்றும், பின்தங்கிய மக்களுக்கு 31 சதவீதம் என்று நாம் ஒதுக்கி வருகிறோம். இதில் வீக்கர் செக்ஷனுக்கு ஒதுக்கம் செய்கிறோம். அப்படி இடம் ஒதுக்கிக் கொடுத்து வேலை கொடுத்த பிறகு, அவர்களுக்கு ப்ரமோஷன் கொடுக்க வேண்டும் என்று வரும்போது, ஜாதி அடிப்படையில் கொடுக்கப்படும் என்றிருப்பது தேவையில்லாத ஒன்று என்று கருதப்படுகிறது. நேற்றும் இன்றும் 5,000 தொழிலாளர்கள், ஆவடி டாங்க் பாக்டரி தொழிலாளர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதிலுள்ள நிர்வாகியை கலந்து இதுபற்றிப் பேச வேண்டும் என்று சொல்லும்போது, பார்க்க முடியாது என்கின்ற நிலைமை தான் ஏற்பட்டிருக்கிறது. ஜாதியின் அடிப்படையில் பதவி உயர்வு கொடுக்க வேண்டும் என்றும், அவ்விதம் கொடுக்கக் கூடாது என்றும் இரண்டு கூறுகளாகப் பிரிந்து இருக்கிறார்கள். இரண்டு பிரிவுகளில் இருக்கின்ற தொழிலாளர்களிடையிலும் தேவையில்லாத அளவுக்கு போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. ஜாதியின் அடிப்படையில் பதவி உயர்வுகள் கொடுக்கப்படுமானால் சமுதாயத்தில் இருக்கின்ற 'வீக்கர் செக்ஷன்' என்று சொல்லுகின்றவர்களின் உணர்வுகளால் வேதனையான விளைவுகள் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, மாநில அரசாங்கங்களுக்கு அதிக அதிகாரங்கள் தரப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கும் விஷயத்தில் நமது மாநில அரசின் கருத்தோடு, பிரதம நீதிபதியின் பரிந்துரையும் ஏற்று, பிரசிடெண்டுக்கு அனுப்பி அங்கீகாரம் பெறுகிறோம். ஆனால், இப்போது அந்த நிலைமை காற்றில் பறக்கவிடக்கூடிய நிலையில் வந்திருக்கிறது. நாட்டினுடைய அடிப்படை உரிமையை பறிக்கக் கூடிய நிலைமை இப்போது வந்திருக்கிறது.

[பிற்பகல் 1-10]

அப்படிச் சொன்னால், இந்த மாநிலத்திற்கு, இங்கே ஏற்படுகின்ற காலியிடங்களுக்கு நீதிபதிகளை நியமிக்கும் பொறுப்பு கூட இந்த மாநில அரசாங்கத்திற்கு இல்லை அல்லது மாநில அரசாங்கம் அப்படி யாரையாவது சிபாரிசு செய்தால், அதை ஏற்காது மத்திய அரசு தட்டிக் கழிக்கலாம் என்கின்ற நிலைமை வருமானால், மாநிலத்தினுடைய இந்த அதிகாரங்கள், இந்தப் பொறுப்புக்கள் எல்லாம் பறிக்கப்படுகின்ற ஒரு நிலை உருவாகும்.

மாநிலங்களினுடைய தனித்தன்மை, மாநிலங்களினுடைய அதிகாரங்கள் பறிக்கப்படுகின்ற ஒரு நிலைமை வந்தால், இந்த அரசாங்கம்

It must be a puppet in the hands of the Central Government என்று சொல்லக்கூடிய நிலைக்கு ஆளாகும். பின்னர், ஒவ்வொரு மாநிலமும் மத்திய அரசாங்கத்தின் முன்னாலே கைகட்டி நிற்க வேண்டி வரும். அதிகாரம் இழந்த வெறும் பொம்மைகளாக

இருக்க வேண்டிய நிலைமை வரும். அந்த நிலைமை இந்தத் தமிழகத்திற்கு வரக்கூடாது; அதேபோல் இந்த நாட்டின் மற்ற மாநிலங்களுக்கும் வரக்கூடாது. அனைத்து மாநிலங்களுக்கும் இந்த அதிகாரங்கள் தரப்படவேண்டும்; வைத்துக்கொள்ள வேண்டும். இவைகள் பாதிக்காத அளவில் வழிகாட்டிச் செல்ல வேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தவிர, இங்கே இந்தத் திருத்தத்தை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கொண்டு வந்ததற்காகக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். காரணம், அவர்கள் 6 ஆண்டு காலம் என்று பதவி உயர்த்தியதை, இவர்கள் 5 ஆண்டு காலம் என்று குறைத்திருக்கிறார்கள். 5 ஆண்டு காலம் என்று ஏன் குறைக்க வேண்டுமென்று தெரியவில்லை. அந்த அம்மையார் அவர்கள் கொண்டு வந்தார்கள் என்பதற்காகவே, அந்தக் காரணத்திற்காகவே, இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று கூறி, இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

<u>திரு. க. சுப்பு</u> : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ள இந்த அரசியல் சட்டதிருத்தத்தின்மீது ஒரு சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இங்கே பேசிய சில நண்பர்கள் இதை எதிர்த்துப் பேசினாலும் கூட, நான் இதற்கு எதிர்ப்பு சொல்லவில்லை. நான் ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே, இந்த 45-வது அரசியல் சட்டத்தை வரவேற்கிறேன். ஏனெனில், இதையும் விட்டுவிட்டால் 42 மட்டும் தான் நிற்கும். எனவே, இந்த 45 எவ்வளவோ பரவாயில்லை. அந்த அளவிலே இதை நான் வரவேற்கிறேன். வேறு வழியில்லை.

மாரிமுத்து அவர்கள் பேசும்போது, இதிலே அவ்வளவு புரட்சியில்லை என்றார்கள். அப்படியென்றால், இதிலே ஓரளவுக்கு புரட்சி இருக்கிறது என்பதை அவர்களே ஒப்புக்கொள்கிறார்கள். அந்த அடிப்படையிலே தான் இந்த அரசியல் திருத்த சட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. அது துரதிருஷ்டம்தான். ஒருவேளை அவர்களுடைய உணர்வு பிரதிபலிப்பதாக இந்தத் திருத்தம் அமையவில்லை என்று சொல்லலாம். இதிலே

[திரு. க. சுப்பு] [1979 பிப்ரவரி 17

நம்முடைய உணர்வை ஒத்துக்கொள்வதைவிட, அவர்களுடைய உணர்வு தேவைப்படுகிறது. ஜனநாயக நிலையை ஒட்டித்தான் நாம் இதைப் பார்க்கவேண்டும்.

முன்னாலே உள்ள எமர்ஜன்சி புரொவிஷனைப் பொறுத்த வரையில், ஒருவரே, இந்திராகாந்தி அம்மையாரே, எமர்ஜென்சியை டிக்ளேர் செய்யலாம். ஆனால், மொரார்ஜி தேசாய் அப்படிச் செய்ய வில்லை. அதற்குத்தான் இப்போது ஒரு திருத்தம் வந்திருக்கிறது. காபினெட் கூடி முடிவெடுத்தால், பின்னர் எழுத்து மூலமாக ஜனாதிபதிக்கு அனுப்பி டிக்ளேர் செய்ய வேண்டும். இதிலே வித்தியாசம என்னவென்றால், முன்பு ஒரு ஆள் செய்தார், இப்போது காபினெட் செய்ய வேண்டும். அவ்வளவுதான். இதுகூட வேண்டாம்; இந்த புரொவிஷனே தேவையில்லை; இருந்தாலும் வைத்திருக்கிறார்கள். மொத்தத்தில் சர்வாதி காரத்தை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். நாம் ஏற்றுக் கொள்ள முடியாது என்ற கருத்து இருந்தாலும், அவர்கள் அதை வைத்திருக்கிறார்கள். ஆனால், அதைத் தனி நபருக்கு விடக்கூடாது. 'இன்டர்னல் டிஸ்டர்பன்ஸ்' என்று சொல்லி எமர்ஜன்சியை டிக்ளேர் செய்வதற்கு இந்தப் புரொவிஷனை வைத்திருக்கிறார்கள். ஒரு மாநிலத்திலே 'ஆர்ம்ட் ரெபலியன்' ஏற்பட்டால், ஆயுதம் தாங்கி போராடக் கூடிய நிலைமை, கலவரம் ஏற்பட்டால், அதை முதல் மந்திரி கவர்னருக்குத் தெரிவித்தால், ஜனாதிபதி உடனே எமர்ஜன்சியை டிக்ளேர் செய்யலாம்.

அதேபோல் ஒரு மாநிலத்தில் தொழில் தகராறுகள் ஏற்பட்டு, கலவரங்கள் ஏற்பட்டால் 'ஆர்ம்ட் ரெபலியன்' என்று வந்தால் அந்த மாநில முதலமைச்சர் மத்திய அரசை ஆயுதம் தாங்கிய ரிசர்வ் போலீசை கேட்டுப் பெற முடியும். அது அவ்வளவாக பொருத்தமில்லை; அதை ஏற்க முடியாது. காரணம், ஒரு சிறிய தொழில் தகராறு ஏற்பட்டாலும், உதாரணத்திற்கு தார்க் குச்சியை வைத்துக்கொண்டு சண்டை போட்டாலும், அந்த தார்க் குச்சியின் முனையிலே ஒரு குண்டூசி இருக்கிறது, ஆணி இருக்கிறது என்று சொல்லி, இந்த எமர்ஜன்சி டிக்ளேர் புரொவிஷனை வைத்துக் கொண்டு ஒரு மாநிலம் ரிலிப் கேட்கலாம். ஆனால், இங்கே ஒரு தொழில் தகராறு ஏற்பட்டபோது, தார்க்குச்சி வைத்திருந்தார் என்பதற் காக ஒருவரைப் பிடித்துக்கொண்டு போய், அவர்மேல் கேஸ் போடப்பட்டது.

23 ஆம் தேதி பந்த் நடந்தது. அபாயகரமான ஆயுதங்கள் என்ற லிஸ்டிலே ஒரு தார்க் குச்சியையும் சேர்த்துக் கொண்டி ருக்கிறார்கள். அதிலே ஒரு ஆணி இருந்ததாம். மாடு பிடித்துக் கொண்டு வந்தவன் தார்க்குச்சி வைத்திருந்தான். சட்டம் இருக்கலாம், அதை அமல்படுத்தும் பொறுப்பு யார் கையில் இருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் அது செயல்படுகிறது. 14 வயதுக்குக் கீழே இருக்கும் குழந்தைகள் எந்தத் தொழிலிலும்

1979 பிப்ரவரி 17] [திரு. க. சுப்பு]

ஈடுபடக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. 36 பேர் சிவகாசி யில் செத்த பிறகும் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை வேலை யில் ஈடுபடுத்தக் கூடாது என்பதைத் தடுத்து நிறுத்த முடியாது என்று சொல்லுகிறார்கள். அப்படித் தடுத்து நிறுத்த முடியாவிட் டால் உங்களுக்கு என்ன வேலை? அன்றைக்கு மோகன்குமார மங்கலம் குழந்தைகள் வேலை செய்வதைப் பார்த்துக் கண்ணீர் வடிக்கிறேன் என்று சொன்னார். கண்ணீர் வடிப்பதற்காகவா அவர் மந்திரியாக இருந்தார்? இப்போது செத்துப்போன குழந்தை களின் குடும்பத்திற்கு முதலமைச்சர் 5,000 ரூபாய் கொடுப்ப தாகச் சொன்னார். அது கூட கொடுக்கப்படவில்லை. சவுந்தரராஜன் பேசும்போது 5,000 ரூபாய் கொடுக்கிறோம் என்று சொல்லி அதைக்கூட கொடுக்காமல் விட்டு விட்டீர்களே என்று சொன்னார். என்ன செய்யலாம். தொழிலாளர்களை உள்ளே தள்ளலாம், பொய்க் கேஸ் போடலாம். அரசியல் சட்டத்தில் எழுதி வைத்துவிட்டால் அமல்படுத்தி விட்டதாகி விடுமா? ஜனநாயகப் போராட்டத்தின் விளைவாக அங்கே ஒரு அரசாங்கம் வந்திருக்கிறது. அந்த உணர்வுகளை உள்ளடக்கி ஒரு திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த உணர்வுகள் முழுமையாகப் பிரதிபலிக்கவில்லை என்று சுட்டிக்காட்டலாம். முன்பு பிரிவென்டிவ் டிடென்ஷன் ஆக்டின் கீழ் முத்துராமலிங்கத் தேவர் போன்ற பெரியவர்களை எல்லாம் உள்ளே போட்டார்கள். இந்தச் சர்க்காருக்கு அதுகூடத் தேவையில்லை. 151-வது செக்ஷன் போதும். மிசாவை விடக் கேவலமான சட்டம் ப்ரொஹி பிஷன் சட்டம். எந்த நேரத்தில் வேண்டுமானாலும் போலீஸ்காரர் எங்கே வேண்டுமானாலும் நுழையலாம்.

அது மாதிரி அவசரச் சட்டம் போட வேண்டுமா? ப்ரொஹி பிஷன் சட்டம் என்றால் அதற்கும் ஒரு அனுமதி. அதற்கு அனுமதி கொடுக்க என்ன அவசரம்? தற்போது பேசிக் ஸ்ட்ராக்சரில் நம்பிக்கை கிடையாது. பேசிக் ஸ்ட்ரக்சரே கிடை யாது. இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வந்தவர்கள் ஜனநாயகத்தை மதிக்கக்கூடிய இந்த ரெசல்யூஷனையும் கொண்டு வந்திருக்கிறார்களே. யாரை வேண்டுமானாலும் பிடிக்கலாம். மிசாவில் பிடித்தவர்களுக்குக் கூட அலவன்ஸ் கொடுத்தார்கள் — எனக்கு அல்ல, மற்றவர்களுக்கு. சாராயம் குடித்தால் உடம்புக்குக் கெடுதி. உள்ளே போனால் ரொம்ப நல்ல டானிக்கா தரப்போகிறீர்கள்? சிவில் ரைட்சையே பறிக்கக்கூடிய அவ்வளவு மோசமான சட்டத்தைக் கொண்டு வந்தவர்கள் இந்தத் தீர்மானத்தையும் கொண்டு வந்திருக்கிறார்களே என்ப தால் என்னால் எப்படி இவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியும்?

அசெஸ் பண்ண மூன்று ஜட்ஜ்களைப் போடச் சொல்லு கிறார்கள். இதற்கு முன்னால் எக்சிக்யூட்டிவிடம் அந்த அதிகாரம் இருந்தது. பிரிவென்டிவ் டிடென்ஷன் என்றால்

இரண்டு மாதத்திற்குள் அட்வைசரி கமிட்டி பரிசீலிக்க வேண்டும். இப்போது மூன்று ஜட்ஜ்கள் முடிவு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

** ** **

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே. உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியைப் பற்றிப் பேசிய கருத்தை அவைக் குறிப்பில் அனுமதிக்கப் போகிறீர்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு : நான் சொன்னது வேறு ஒன்றும் இல்லை. ** ** ** இவர்கள் எல்லாம் சேர்ந்து பூந்தமல்லியில் நடந்த விழாவில் கலந்து ** ** கொண்டபோது என்ற முறையில் ** ** பேசியிருக்கிறார்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் மீண்டும் சொல்லுகிறேன். அந்த மாதிரிப் பேசப்பட்டதாகச் சொல்லுவதற்கு ஆதாரம் உண்டா? எந்த நேரத்தில் எதற்காக அது பேசப்பட்டது என்பதையெல்லாம் எண்ணிப் பார்த்து அதை இந்த மன்றத்தில் எடுத்து வைப்பது முறையாக இருக்கும். ஆகவே, தலைவர் அவர்கள் சிந்தித்து முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

திரு. க. சுப்பு : துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்லி விடுகிறேன், *** *** பூந்தமல்லியிலே நடந்த ஃபிங்க்ஷனிலே

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, தண்டிக்கப்பட வேண்டியவர்கள் தண்டிக்கப் படாமல் விடுதலை செய்யப்படுகிறார்கள் அடித்தளத்திலே, கீழ் மட்டத்திலே உள்ள நீதிபதிகளால் என்பதை நாங்கள் மட்டுமல்ல, எதிர்க்கட்சியிலே உள்ளவர்களும் வெளியே பேசியிருக்கிறார்கள் என்பதையும் பொதுமக்கள் மத்தியிலே சாதாரணமாகப் பேசப்படுகிறது அப்படி. *** *** *** என்று அவர்கள் குறிப்பிட்டவைகளைத் தாங்கள் நீக்கப் போகிறீர்களா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. க. சுப்பு : நான் சொல்வது அதைத்தான். தண்டிக்கப்பட வேண்டியவர்கள் விடுதலை செய்யப்படுகிறார்கள் என்ற கருத்து மற்றவர்களுக்கு இருக்கிறதோ இல்லையோ உங்களுக்கு இருக்கிறது....

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு பிரச்சினையை நீட்டிக் கொண்டு போக விரும்பினால் நாங்களும் பேசிக்கொண்டிருக்கத் தயாராக இருக்கிறோம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கருத்துஇருக்கிறது. நீங்கள் விரும்புகிறீர்களோ இல்லையோ நாங்கள் விரும்புகிறோமோ இல்லையோ என்று பேசுவது சரியல்ல. அவரவர்கள் விரும்புகின்ற கருத்துக்களை அவரவர்கள் பேசுவதற்கு உரிமை இருக்கிறது, அதிலே நான் குறுக்கிடவில்லை, தலையிடவில்லை, தடுக்கப்போவது இல்லை. ஆனால். அவர்கள் முதலிலே குறிப்பிட்டது *** *** *** அது அவைக் குறிப்பிலே இருக்க வேண்டுமா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சுப்பு அவர்கள் பேசும்போது, * * * * அந்த வாசகங்களை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுமாறு ஆணையிடுகிறேன்.

திரு. க. சுப்பு : முதலமைச்சர் இலண்டனிலே இலண்டன் முரசு பத்திரிகைகாரர்களிடத்திலே பேட்டி கொடுத்திருக்கிறார்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, இலண்டன் முரசு பத்திரிகைக்கு நான் பேட்டி கொடுக்கவில்லை. இலண்டனிலே இருக்கிற இந்தியத் தூதுவர் சாட்சியாக இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : விளக்கத்திற்கு நன்றி. குங்குமம் பத்திரிகையிலே வந்திருக்கிறது. நீங்கள் இதயம் பேசுகிறது படிக்கிறீர்கள். அதோடு சேர்த்து இதையும் படியுங்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இலண்டனிலே இருக்கிற சிலர் சைக்கிளோஸ்டைல் அடித்து இங்கே அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1979 பிப்ரவரி 17

திரு. க. சுப்பு : அதைப்பற்றி நான் மேலே சொல்ல முடியாது. அவர்கள் சொல்வதற்கு அவர்கள்தான் அதாரட்டி. இலண்டனுக்கு அவர்தான் போயிருந்தார். நான் போகவில்லை. நான் போக முடியுமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : என்னை நம்பாவிட்டாலும் இந்திய அரசின் தூதுவரை நம்புவார் என்று நம்புகிறேன்.

திரு. க. சுப்பு : தூதுவரை விட உங்களை நான் நம்பு கிறேன். * * * என்னையும் நீங்கள் நம்ப வேண்டும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : * * * என்ன பேசினார் என்பதிலே அவர் சொன்ன அந்த வார்த்தைகளைத் தான் நான் குறிப்பிட்டேன், வேறு வகையிலே இல்லை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு : ஓய்வுபெற்ற நீதிபதிகளை நீங்கள் போடுவது எவ்வளவு கெட்ட பழக்கம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் : மீண்டும் ஓய்வு பெற்ற நீதிபதிகளை 'நீங்கள்' போடுவது என்று சொல் கிறார்கள். முன்னாலே இருந்தவர்களும் செய்திருக்கிறார்கள், மற்ற மாநிலங்களிலேயும் நடைமுறையிலே இருந்து வருகின்ற ஒன்றுதான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சுப்பு அவர்கள் பேசியபோது * * என்று சொன்ன அந்த வாசகங் களை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று ஆணை யிடுகிறேன்.

திரு. க. சுப்பு : ஏன் நீக்குகிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எவிடன்ஸ் இல்லை நீங்கள் சொல்வதற்கு.

திரு. க. சுப்பு : நான்தான் சொல்கிறேனே....

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : ** என்பது தான் தங்களுடைய தீர்ப்புக்கு உள்ளது. தலைமை நீதிபதி முன்பு இந்தக் கருத்தை வெளியிட்டார் என்பதிலே எங்களுக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் * * * என்று சொல்வது சரியல்ல. அந்த வார்த்தைகள் சரிதானா என்பதைப்பற்றி தங்களுடைய தீர்ப்பைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1979 பிப்ரவரி 17]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த வார்த்தைதான் பிரச்சினைக்குள்ளாகியிருக்கிறது. * * என்று திரு. சுப்பு பேசியது நீக்கப்படுகிறது. **

The Hon. Thiru K. NARAYANASWAMY : Mr. Deputy Speaker, Sir, to say that * * would certainly constitute reflection on the conduct of the Judge. That is prohibited in one of the rules. I think there is a rule.

Thiru. K. SUPPU : I am not casting reflection on the conduct of a Judge.

The Hon. Thiru K. NARAYANASWAMY : Thank you for the distorted version. What my hon. Friend has said would certainly undoubtedly constitute a reflection and stigma on the conduct of any Judge of any Court. Therefore, I pray that these remarks may be deleted from the proceedings of the House.

Thiru K. SUPPU : I am mentioning about the conduct of the Minister.

நான் சொல்வது காண்டக்ட் ஆஃப் தி மினிஸ்டர். அதைத் தப்பாகப் புரிந்துகொண்டால் என்ன செய்வது? என்ன என்று புரிந்து கொள்ளாமலே பேசுகிறீர்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவ ரவர்களே, திரும்பத் திரும்ப சுப்பு அவர்கள் * * * அவையிலே தான் பேசிக் கொண்டிருக்கிறார். இதை நீங்கள் தொடர்ந்து அனுமதிக்கப் போகிறீர்களா என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் ஏற்கனவே சொல்லி விட்டேன். நான் நீக்கியதற்குப் பிறகு மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் பேசினார்கள். நான் முதலிலேயே சொல்லிவிட்டேன். இது மாதிரி * * என்று கூறிய கருத்துக்களை சபைக் குறிப்பிலேயிருந்தும் பத்திரிகைக் குறிப்பிலேயிருந்தும் நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : அமைச்சரவர்கள் நீதிபதியின்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைப் பற்றிப் பேச வேண்டாம். வேறு விஷயத்தைப் பற்றிப் பேசுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, நான் ஒரு விளக்கத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். காரணம், கான்டெம்ட் ஆஃப் மினிஸ்டர் என்று சொல்லும் பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் பூந்தமல்லியில் நடந்த விழாவில் இன்ன அமைச்சர் பேசினார் என்று ஆதாரத்தோடு சொல்கிறார், பேசவில்லை என்று சொல்வதற்கு முதலமைச்சரிடத்தில் ஆதாரம் என்ன இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நான் மீண்டும் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் * * அவர்கள் அங்கு பேசவில்லை என்று நான் சொல்லவில்லை. ***என்று சொல்கிறார். **என்பதைத்தான் நான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் சொல்வது மாதிரி அமைச்சரின் நடவடிக்கை இருந்தாலும், பேச்சு இருந்தாலும் உரிமைப்பிரச்னை அல்லது வேறு ஏதாவது கொண்டுவர வேண்டுமென்றால் எழுத்து மூலமாகக் கொண்டுவர வேண்டுமே தவிர, நான் இருந்தேன், கேள்விப்பட்டேன் என்று எழுந்துகொண்டு ஆதாரம் கொடுக்காமல் பேச முடியாது.

திரு. க. சுப்பு: * *

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: துணை தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் எவ்வளவு நேரம் வேண்டுமென்றாலும் இந்த அவையை நீட்டித்துக்கொண்டு போக உங்கள் அனுமதியைப் பெற்று அதைச் செய்ய விரும்பினால் எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் இதை தான் சாமர்த்தியமாகக் கேட்டு விட்டதாக நினைத்து அதற்கு முயற்சித்தால் இந்த நாட்டிற்கு என்ன கருத்தை வெளியிட வேண்டுமோ அதற்கு முக்கியத்துவம் இல்லாமல் நேரத்தை வீணாக்கிவிடுகிறாரே என்று நினைத்துத்தான் நான் வருந்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: * * என்ற அந்தக் கருத்துக்களைப் பத்திரிகைக் குறிப்பிலிருந்தும், சபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்தும் நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு ஆதாரமாக எதை வைத்துக்கொண்டு அவர்கள் சொல்கிறார்கள் என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, குறை கூற வேண்டுமென்ற ஆசை அல்லது ஆர்வம் இருந்தால் அதற்கு ஆதாரம் இருந்தால் நாளை மறுதினத்திலிருந்து மூன்று நாட்கள் நேரம் தர இருக்கிறார்கள். என்னென்ன குற்றச்சாட்டுக்களைச் சொல்ல முடியுமோ அவைகளையெல்லாம் சொல்லுங்கள், அதற்கெல்லாம் பதிலைப் பெறுங்கள் என்று சொல்லிக்கொண்டு, இப்படி நேரத்தை வீணாக்குவதால் பயன் இல்லை என்றுதான் நான் சொல்கிறேன்.

திரு. க. சுப்பு: நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் பேசுவதால், மற்ற புரொசீடிங்ஸெல்லாம் உங்கள் மீது நம்பிக்கையிருக்கிறது என்று அர்த்தமில்லை, இன்ச் பை இன்ச் உங்கள் மீது நம்பிக்கையில்லை என்று நாங்கள் சொல்லிக்கொண்டிருப்போம்.

(பிற்பகல் 1.30)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நம்பிக்கையில்லாத தீர்மானத்திலே ஒவ்வொரு உறுப்பினர்களும் இங்கே பேசுகிறார்கள் என்று நான் சொல்ல முடியாது. ஆனால் நம்பிக்கையிருப்பவர்கள் தான் எல்லோரும் என்று நான் சொல்ல முடியாது. ஆனால் இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் இரண்டுமுறை இரட்டை இலை என்று சொன்னாரே அதை நான் கவனிக்காமலும் இல்லை, பதில் சொல்ல முடியாமலும் இல்லை; அதற்கு நேரம் வரும்போது பதில் சொல்லலாம் என்று இருக்கிறேன். அதைப் போல் மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் பேசுவார்களானால் நான் பின்னால் பதில் சொல்கிறேன் என்று சொல்கிறேனே தவிர, வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு பேரவையின் நேரத்தை நீட்டிக்கிறேன்.

திரு. க. சுப்பு: அட்வைசரி கமிட்டி எப்படி இருக்கவேண்டுமென்று சொல்லும்போது தலைமை நீதிபதியால் நியமிக்கப்படக்கூடிய சிட்டிங் ஜட்ஜ்தான் இருக்கவேண்டுமென்று இருக்கிறது. ஆனால், நீங்கள் அப்படியா செய்கிறீர்கள்? ரிட்டையர்ட் ஜட்ஜ்களை எல்லா கமிஷன்களுக்கும் போடுகிறீர்கள். அப்படியென்றால், ரிட்டையர்ட் கிராக்கி வேண்டியதைச் செய்யும் என்று அர்த்தம். முக்கியமான பே கமிஷனுக்கு ரிட்டையர்ட் ஜட்ஜை தலைவராகப் போட்டீர்கள். அது பேய் கமிஷனாகத் தானிருந்தது. ரூ. 5 கூட கிடைக்கவில்லை என். ஜீ. ஓ.க்களுக்கு, தலைமை நீதிபதியைக் கேட்க வேண்டுமென்றால், ரிட்டையர்ட் ஜட்ஜ்களையா போடுவது! எல்லா அரசாங்க வேலைகளுக்கும் அவர்களையா போடுவது? சோமசுந்தரம் கமிஷன் போடுகிறீர்கள். அவரை. நியாயமா, இல்லையா என்று கேட்கிறீர்கள். அவர்

நியாயம் என்று சொல்கிறார். உடனே, அண்ணாமலைப் பல்கலைக் கழக வைஸ் சயன்சலர் ஆக்கினீர்கள். இன்றைக்கு அவர் யுனிவர்சிட்டியை மூடிவிட்டார்கள். மூடுவதுதான் உங்கள் நோக்கமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நாங்களும் இப்படி குறிப்பிட வேண்டிய அவசியம், கட்டுப்பாடோடிருக்கிற எங்கள் கட்சி உறுப்பினர்களுக்கும் ஏற்பட்டால், இந்த அவை ஒழுங் காக நடைபெறாது என்பதை நான் வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன், எதற்கோ நீதிபதியை நியமித்து, எதையோ செய் தார். அதற்காக அணை வேந்தராக நியமித்தார்கள் என்பதெல்லாம் இந்த அவையை உண்மையிலேயே மதிக்கவில்லையென்பதையும் துணை வேந்தராக யார், யார் நியமிக்கப்படுகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் சட்டமன்ற உறுப்பினர்—சட்டம் தெரிந் தவர்—எதையும் யோசித்துப் பேசுவது நல்லது. இப்படியே பேசிக் கொண்டு போய்க் கொண்டிருந்தால் அது சரியா என்பதை நீங்களே யோசித்துக் கொள்ளுங்கள். பிறகு, நாங்கள் கட்டுப் படுத்தி வைத்திருக்கிற எங்கள் உறுப்பினர்கள் இதே மாதிரி கேள்வி கேட்க ஆரம்பித்தால் இந்த அவை ஒழுங்காக நடக்காது, அது நல்லதல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நாம் எடுத்துக் கொண்டிருக்கிற பொருளுக்கும், துணை வேந்தர் நியமனத் திற்கும் நீங்கள் தெரிவித்தற்கும் சம்பந்தம் இல்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : இந்தப் பேரவையைப் பொறுத்தவரை முதலமைச்சராக இருக்கலாம், நாங்களாக இருக்கலாம் எல்லோரும் equal. The Hon. chief Ministor cannot dictate. The Dep ty Speaker cannot dictate. Parliamentary proceedings curtail பண்ணச் செய்தார்கள் என்பதுதான் இந்திரா காந்தியின்மேல் உள்ள குற்றச்சாட்டு .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : என்னை யாரும் கட்டுப்படுத்தவில்லை. அவர் சொல்கிறார், இவர் சொல்கிறார் என்பதற்காக நான் சொல்லவில்லை. எனக்குத் தெரிகிற நியாயத்தைத்தான் நான் சொல்கிறேன். என்னை யாரும் கட்டுப்படுத்தவில்லை.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : பார்லிமென்ட்டிலே, ப்ரொசி டிங்சை இந்திரா காந்தி தடுத்தார் என்று சொல்வதை நான் மறுக்கிறேன்.

திரு. க. சுப்பு : இந்திரா காந்தி தடுத்தார்கள் என்று சொல்லவில்லை. ஆனால், பார்லிமென்ட்டரி ப்ரொசிடிங்சை பப்ளிஷ் செய்வதிலே, வெளியிடுவதிலே, சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அதை நீக்கத்தான் இந்தச் சட்டத் திருத்தம். பார்லிமென்ட்டரி ப்ரொசிடிங்ஸ் ஃப்ரீயாக இருக்கவேண்டும். இந்த மன்றத்திற்குள்ளே ப்ஃரீயாக பேச அனுமதிக்கப்பட வேண்டும். நீங்கள் இதை டிஸ்கஸ் பண்ண முடியாது, அதை டிஸ்கஸ் பண்ண முடியாது என்றால், டிஸ்கஸ்ட் ஆகி விடுவீர்கள். இந்த அவையிலே ஒழுங்காக நடக்க நாங்கள் விரும்புகிறோம். நீங்கள் வேண்டாம் என்று நினைத்தால் எங்களுக்கும் வேண்டாம். நாங்கள் ஃப்ரீயாக கருத்துக்களைச் சொல்லத்தான் வந்திருக் கிறோம். என்னைப் பொறுத்தவரையில் நிதானமாகவும் அதே நேரத்தில் ஆழமாகவும் எங்கள் கருத்துக்களைச் சொல்லவிரும்பு கிறேன். நீங்கள் தடுத்தாலும், விரும்பவில்லையென்றாலும், நாங்கள் சொல்லவிரும்புவதை சொல்லித்தானாகவேண்டும்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் சொல்ல விரும்புவதை சொல்லித்தானாக வேண்டுமென்றால், நான் நீக்கவேண்டியவற்றை நீக்கித்தான் ஆகவேண்டும். சொல்ல விரும்புவதைச் சொல்வது உங்கள் கடமையென்றால், நீக்க வேண்டியதை நீக்குவது என் கடமை.

திரு. க. சுப்பு : * * *

திரு. எஸ். ஆர். இராதா : ஏதோ முன்னால் நடந்ததை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு சொல்கிறார்கள். இரண்டு சபாநாயகர்கள் அவையை நடத்தியதெல்லாம் இரண்டு ஆண்டு களுக்கு முன்பு....

திரு. மு. கருணாநிதி : அன்றைக்கு நீங்கள் சபாநாயகரைக் கைக்குள்ளே போட்டுக்கொண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தீர்கள். அதைப் பார்த்துக்கொண்டு எல்லோரும் உட்கார்ந்து கொண்டிருப்பார்களா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அப்பொழுது சபாநாயகரை நாங்கள் கையில் வைத்திருக்கக்கூடிய பெரும் பான்மையிலும் இல்லை; அப்பொழுது சபாநாயகர் அந்தத் திட்டத்திலும் இல்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1979 பிப்ரவரி 17

திரு. மு. கருணாநிதி : அன்றைக்கு இருந்த சபாநாயகர் திரு. மதியழகன் இந்த அவையில் அன்றிருந்த அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த நேரத்தில், இந்த அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லை என்பது ஓட்டெடுப்பில் வெற்றிபெற்று விட்டது என்று அறிவிப்புச் செய்ததாக பத்திரிக்கைகளில் செய்தி வெளியாகியிருக்கிறது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் அதை மறுக்கிறேன். தலைவரவர்களே, அப்படிப்பட்ட செய்தி வந்தது என்பதை இன்று தான் நான் கேள்விப்படுகிறேன்.

திரு. மு. கருணாநிதி : ஆங்கிலப் பத்திரிக்கைகளில் வெளி வந்து இருக்கிறது. நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வெற்றி பெற்று விட்டது என்று அறிவிப்புச் செய்து விட்டு சபாநாயகர் வெளியே சென்றார் என்று வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத்தலைவர் அவர்களே, தங்களைப் பற்றி திரு. சுப்பு அவர்கள் குறிப்பிட்டார்கள். அது சபைக் குறிப்பில் இருந்து நீக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் இந்தத் தீர்மானத்தை ஒட்டி நல்ல கருத்துக்களைச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; துணைத் தலைவரை பதவியில் இருந்து நீக்கவேண்டும் என்றால் அதற்கு முறை இருக்கிறது. முதலில் மோஷன் கொடுத்து, அதற்குப் பிறகு தான் நீக்க முடியும். திரு. சுப்பு, நான் துணைத் தலைவராகி நீடிக்கக்கூடாது என்று கருதுகிறாரா என்ன என்பது எனக்குத் தெரியவில்லை.

THIRU K. NARAYANASWAMY : Mr. Deputy Speaker, Sir, I also appeal to Mr. Suppu, who has expressed his support to the ratification of this amendment to confine himself to the merits of supporting the constitutional amendment which is now before this house.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ** ** என்று திரு. சுப்பு சொன்னதை சபைக்குறிப்பில் இருந்து நீக்கவேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

திரு. க. சுப்பு : நீங்கள் சபாநாயகராக ப்ரமோஷனிலேயே வாருங்கள். இங்கே பேசிக் ஸ்ட்ரக்சர் என்று சொல்கிறபோது என்னால் ரிடையர் ஜட்ஜ் பற்றி சொல்வதை விடமுடியவில்லை. 83 வயதான ஆளைக்கொண்டு வந்து விசாரணைக் கமிஷனுக்குத் தலைவராகப் போட்டால் அவன் தூங்கி விழாமல் எப்படி எழுதுவான். அவர்களை நிம்மதியாக இருக்க விடுங்கள்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1979 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கு 82 வயது என்பதையும் சொல்லிவிட்டு, எப்படி எழுதுவான் என்று வார்த்தைகளைச் சொல்வது நல்லதல்ல.

திரு. க. சுப்பு: 'ன்' க்குப் பதிலாக 'ர்' வேண்டுமானால் போட்டுக்கொள்ளுங்கள்.

திரு. த. இராமசாமி : பாரதப் பிரதமர் மொரார்ஜி தேசாய்க்குக் கூட 82 வயது ஆகிறது. நீதிபதிகளுக்கு 82 வயது ஆனால் என்ன?

திரு. க. சுப்பு : பாரதப் பிரதமருக்கு ** ** (சிரிப்பு) பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்த அடிப்படையில் அரசியல் அமைப்புச் சட்டத்தின் பொதுவான கூறுகளைச் சொல்கிறபோது அவைகளை மாற்ற முடியாது. கூற போட முடியாது என்பதற்காகத்தான் டெமாக்ரடிக் செகுலர் ரிப்பளிக் இருக்க வேண்டும். டெமாக்கிரடிக் ஆர்டர் இருக்கவேண்டும். எங்களைப் பொறுத்தவரையில் இந்தத் தீர்மானத்தை நாங்கள் ஆதரிக்கிறோம் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, உங்களுடைய தீர்ப்புக்கே விடுகிறேன். மதிப்பிற்குரிய பிரதம அமைச்சரைப் பற்றி பேசுகிறபோது திரு. சுப்பு அவர்கள் கொஞ்சம் வேகமாக வாக்கியத்தைக் குறிப்பிட்டார்கள். –

[பிற்பகல் 1.40]

*THE HON. THIRU K. NARAYANASWAMY : I am really thankful, Mr. Deputy Speaker, Sir, to the contribution made by Thiru Rahman Khan of the D.M.K. Party, Thiru Veluchamy of the Congress-I party, Thiru Umanath of the Communist (Marxist) Party, Thiru Vijayaraghavan of the Janata party, Thiru Alagiriswamy of the Communist Party of India, Thiru A. R. Marimuthu of the Congress-I Party, Thiru Latheef of the Muslim League, Thiru Marghabandu of the Toilers Party and not the least but the most persistent speaker-Thiru K. Suppu of the D. M. K. party for their respective contributions to this debate.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[Thiru K. Narayanaswamy] [1979 பிப்ரவரி 17

This debate, I am glad to confess, started on a note of sobriety. Later on, it developed into what may be called a certain amount of disagreement over the uniform Civil Code between two friendly neighbours Thiruvalargal Latheef and Marghabandu. As we have seen, it have gone a little out of the way or out of step with the narrow question that fell for consideration by this august House in the latter stages of the debate. The debate's focal point is narrow, the scope of it is rather limited and that is only to ratify the amendments to the Constitution of India.

I am thankful warmly and sincerely for all the speakers for supporting this ratification proposal put before this House. Only one dissentient voice I heard is that of Thiru Latheef. He is not prepared to support this for certain reasons which he has also strongly putforth and propounded before this House. I will summarise the entire theme.

This Constitution 45th Amendment Bill came in the shape of actually 49 clauses. And in respect of 5 clauses the Congress-I party in the Rajya Sabha have objected. The result was that the Lok Sabha accepted and the present Bill which has been placed before this House for ratification is now before you minus the five amendments which have been vetoed in the Rajya Sabha by the Congress-I party.

I will make a brief summary of them. In Article 31-C of the Constitution, for the words and figures "Article 14, Article 19 or Article 31", Article 14 or Article 19 are retained and only Article 31 has been omitted. That is in consonance with the reduction or with the conversion of the fundamental right to property into a legal right to property. Then, the provision in respect of the Tribunal has been retained. It has been embodided as a separate part in the Constitution 42nd Amendment Bill. The third change relates to the expressions "secular" and "socialist" and they have been retained in the Preamble and there has been no change in that. It was also in respect of Article 368, the Janata Party wanted to bring in the idea of referendum. But that has been objected to and that has been dropped. The last is Clause 47 which deals with alterations in the 7th Schedule where in deployment of Central forces in the States and education and Forests were sought to be put in different Lists. Originally they wanted to have the deployment of forces in the States with their consent. That relevant Article has been omitted but the article has been retained as Entry 2 A of List I of Schedule 7. Then, so far as Education and Forests are concerned, they have been retained in the Concurrent list because the 45th Amendment Bill has been vetoed by the Congress-I in the Rajya Sabha.

1979 பிப்ரவரி 17] [Thiru. K. Narayanaswamy]

So far as the ruling party is concerned, may I say so far as the serving party is concerned, for, I believe, if any party comes to power, it is to serve the people; therefore I use a new phrase 'serving party, if I may use a phrase like that. On behalf of the serving party' when we actually considered the 42nd Amendment Bill at an earlier stage before we came to manage the affairs of the State and serve the people of this State here, we pleaded for-please remember–the omission of this provision in Entry 2A from the Constitution. We also opposed the retention or rather we had opposed the transfer of Education and Forests from the State List to the Concurrent List. In spite of it, these entries have been transferred. Even later we pleaded for their transfer back to the State List and omission of Entry 2-A. But somehow the Congress-I chose to support these entries as they were found in the Concurrent List and in the List II. I think all the Members of parliament acted on the footing that half a loaf is better than no bread. 45-th Amendment is better than 42nd Amendment and therefore, let us atleast support and get something out of that. In that way the present 45th Amendment Bill has been placed before you for ratification and I am really thankful to you all for the great support you have extended. But - I regret to note that Thiru Latheef has dissented and I hope by now he might have changed his attitude and express his support to this ratification move that has been placed before this House.

One or two things Thiru Latheef has asked me to particularly answer him. I do not think in the light of what I have said before this House, there is any need for me to further answer him. I should think that the reasons I have given, the explanations I have offered and the circumstances in which this Bill has come to be placed before this House as passed by both the Houses of Parliament are quite sufficient to induce even Thiru Latheef to change his mind and express his view and give support to the Bill unanimously for its ratification.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் பேசும்போது பாரதப் பிரதமர் அவர்கள் * * * என்று சொன்ன அந்தப் பகுதியை நீக்கும்படி உத்தரவிடுகிறேன். ஏனென்றால் அது பத்திரிகையிலே வந்தால் ஒருவேளை தவறாகக் கருதப்படும், எனவே அந்தப் பகுதியை மட்டும் நீக்கும்படி உத்தர விடுகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அடுத்து பேரவை முன்னுள்ள கேள்வி—

''நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்று, 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (நாற்பத்தி நான்காவது திருத்தச்) சட்டம் என்று மாற்றப்பெற்ற, குறுந்தலைப்பினைக் கொண்ட, 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (நாற்பத்தி ஐந்தாவது திருத்தச்) சட்ட முன்வடிவினால் செய்யக் கருதப் பெற்றுள்ள, இந்திய அரசியலமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் கீழ் வரும் திருத்தங்களுக்கு, இப்பேரவை ஏற்பளிக்கின்றது.''

அரசினர் தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 19—2—78 அன்று காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–17 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

6. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

94. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வாகன விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 19-9-1978 ஆம் தேதியிடப்பெற்ற உள்துறையின் 2274 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*27 தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 1/1979).

*28. தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவிற்கான இணைப்பு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 1/1979).

---

* 15—2—1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.

29. 27–8–1969 ஆம் தேதியன்று தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையில் நிறைவேறிய தீர்மானத்திற்கிணங்க 31–3–1978 ஆம் தேதியன்று உள்ளவாறு, கீழ்க்கண்ட சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களின் சொத்திருப்பு பற்றிய விவரக் கணக்குகள் பேரவை முன் வைக்கப் பெற்றன:—

1. திரு. க. இரா. சின்னராசு
2. திரு. எச். ஜி. ஆறுமுகம்
3. திரு. என். கிட்டப்பா
4. திரு. ரா. உமாநாத்
5. திரு. கூத்தக்குடி ச. சண்முகம்
6. திரு. ரா. நாராயணன்
7. திரு. இரா. இராசமாணிக்கம்
8. திரு. ப. க. சி. முத்துசாமி

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1979 பெப்ரவரி 19

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

I. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

தமிழ்நாடு தலைமைச் செயலகக் கட்டிடம்

*வினா எண் 100—அ திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு தலைமைச் செயலகத்தின் அலுவலகங்களுக்காக கூடுதலாகக் கட்டப்பட்ட 11 மாடி கட்டடத்திற்கு போடப்பட்ட மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

(ஆ) அதற்கு ஆன இறுதி செலவு எவ்வளவு ?

(இ) இங்கு பொருத்தப்பட்டுள்ள மின் சாதனங்கள், மேஜை நாற்காலிகள் இவைகளுக்கான செலவு எவ்வளவு?

(ஈ) மேலும் இடவசதிக்காக கூடுதல் கட்டடங்கள் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :—

(அ) ரூ. 189 லட்சம்.

(ஆ) ரூ. 1, 74, 07, 000

(இ) மின் சாதனங்களுக்காக ஆன செலவு ரூ. 29,06,718. மேஜை நாற்காலிகளுக்காக ஆன செலவு ரூ. 2, 43, 743.

(ஈ) ஆம். சட்டமன்றத் துறைக்காகவும், சட்டமன்ற உறுப்பினர்கள் ஓய்வு அறை அமைக்கவும் புதிதாக ஒரு கட்டிடம் ரூ. 1.30 லட்சம் செலவில் கட்ட நிர்வாக ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

[1979 பிப்ரவரி 19

திரு. என். கிட்டப்பா : தற்போது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையையொட்டிய நூலகத்தில் போதுமான இடம் இல்லை என்பது எல்லோருக்கும் நன்கு தெரியும். எனவே புதிதாகக் கட்டப்பட்டிருக்கிற இந்தக் கட்டடத்தில் அந்த நூலகம் சிறப்பான முறையில் அமையத்தக்க வகையில் ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தக் கட்டடம் தலைமைச் செயலகத்திற்காகக் கட்டப்பட்ட கட்டடம். சட்ட மன்ற உறுப்பினர்களுக்காக, அவர்களின் வசதிக்காக ரூ. 1, 30, 000 செலவில் வேறு ஒரு திட்டம் மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கான நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையையும் சேர்த்துக் கொள்ளலாம்.

திரு. துரை முத்துசாமி : அசெம்பிளி டிப்பார்ட்மென்ட்டுக்காக ரூ. 1, 30, 000 செலவிடப்படவிருப்பதாகச் சொன்னார்கள் அமைச்சர் அவர்கள். அந்தத் தொகை போதாது என்று கருதுகிறேன். எனவே அதை அதிகப்படுத்தும் உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : எந்தவகையில் போதாது என்று கருதுகிறார்கள் என்று தெரியவில்லை. ரூ. 1,30,000 என்பது போதுமானது.

திரு. து. இராமசாமி : தலைமைச் செயலகத்திற்கு என்று கட்டப்பட்டிருக்கிற அந்தக் கட்டடத்திற்கு பூர்ணமாக மாற்றப்படவில்லை என்று கருதுகிறேன். இந்தக் கட்டடத்தில் உள்ள செகரட்டரிகள், மற்றவர்களை அந்தக் கட்டடத்திற்கு மாற்றினால் இந்தக் கட்டடம் சட்டசபை அலுவலக அதிகாரிகளுக்கும் உறுப்பினர்களுக்கும் பயன்படத்தக்க வகையில் ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இரண்டு கட்டடமும் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

*வினா எண். 100 —ஆ திரு. பொ. விஜயராகவன், திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தலைமைச் செயலகத்தில் மதிய உணவுக்கான தரம் வாய்ந்த உணவு விடுதி இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

1979 பிப்ரவரி 19]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :—

(அ) தலைமைச் செயலகத்தில் மதிய உணவுக்கான தரம் வாய்ந்த உணவு விடுதிகள் உள்ளன.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. இராசமாணிக்கம் : தரம் வாய்ந்த உணவு என்பதைவிட, இப்போது நெல்லின் விலை குறைந்திருக்கிற நேரத்தில் சாப்பாடு ஒன்று ரூ. 3 என்று விற்கப்படுகிறது; அதைக் குறைப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சாப்பாடு என்றால் அதில் பல ஐட்டங்கள் அடங்குகின்றன. எத்தகைய சாப்பாட்டை உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை.

திரு. கி. கோவிந்தராசன் : தரமான உணவு விடுதிகள் இங்கே இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அமைச்சரான பிறகு அவர்கள் அங்கே சாப்பிட்டதில்லை என்று கருதுகிறேன். தரமான உணவு விடுதியாக உண்மையிலேயே இல்லை. அவை நல்லமுறையில் அமைய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் நான்-வெஜிட்டேரியன் மில்ஸ் பற்றுக் கேட்கிறார்கள்.

திரு. கி. கோவிந்தராசன் : இரண்டையும் சேர்த்துத்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இங்குள்ள உணவு விடுதியில் சாப்பிடுகிற பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறமாதிரி தரம் குறைந்ததாக எனக்குத் தகவல் இல்லை. இங்கே பல்வேறு தனியார் துறையினரும், அதேபோல் தலைமைச் செயலக ஊழியர்கள் நடத்தும் கூட்டுறவு உணவு விடுதியில் இந்த உணவு வகைகளை வழங்கி வருகின்றன. இது வரை தரமாகத்தான் தந்துவருகிறார்கள் என்பதுதான் நிலைமை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனக்கு அந்த அனுபவம் ஏற்படவில்லை என்று சொன்னார்கள். அனுபவிக்கக்கூடிய நாங்கள் அதைப்பற்றி நன்கு அறிவோம். எனவே, இந்தத் தலைமைச் செயலகத்தில் மதிய உணவு ஏற்பாடு செய்வதை நமது அரசாங்கமே முன்நின்று அதை ஏற்பாடு செய்வதற்கு முன்வருமா? அதேபோல், நமது சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் உணவு விடுதியில் தரம்....

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் அதைப்பற்றிச் சொல்லக் கூட முடியவில்லை. ஆனால், இந்தத் தலைமைச் செயலகத்திலே கிட்டத்தட்ட 7 உணவுவிடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

(1) இந்தியா காப்பி வாரியம் நடத்தும் சிற்றுண்டிச் சாலை.

(2) தலைமைச் செயலக ஊழியர்கள் நடத்தும் கூட்டுறவு உணவு விடுதி.

(3) தனியார் துறையில் தர்பார் ஓட்டல் என்னும் பெயரில் இயங்கும் உணவு விடுதி.

(4) தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் சார்பில் நடத்தப்படும் கோழி பிரியாணி, ஆம்லெட் விற்பனை நிலையம்.

(5) இந்தியா தேனீர் வாரியம் நடத்தும் தேனீர் அறை.

(6) தேசிய படித்த இளைஞர்களின் சுய வேலை வாய்ப்பு சங்கம் நடத்தும் சிற்றுண்டிச் சாலை.

(7) இரண்டு சிறிய தனியார் டீக் கடைகள்.

ஆக இப்படி ஏழு நிறுவனங்கள் நடக்கும்போது, அரசாங்கம் இதிலே தலையிட வேண்டிய அவசியமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்கள், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் விடுதியும், இங்கே நமது தலைமைச் செயலகத்திலே நடத்தப்படுகின்ற விடுதிகளும் தனியார்களுக்கு வாடகைகூட இல்லாமல் விடக்கூடிய சூழ்நிலையிலேகூட, அதிகமான கட்டணத்தை உணவுக்கு வசூலிக்கப்படுவது அரசுக்கு தெரியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த ஆண்டிலிருந்து அவைகளுக்கு வாடகை வசூலிக்கப்படுகின்றது. மற்றவற்றைப் பற்றி அமைச்சர் அவர்களை விசாரிக்கலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிக விலை நிர்ணயிக்கப் படுவதாகக் குறிப்பிடுகிறார்கள். ஆனால், கோழி பிரியாணி ரூ. 3 என்றுதான் இதிலே பட்டியலிலே இருக்கிறது. ஆனால், அளவு சம்பந்தப்பட்ட விவரங்கள் இங்கே இல்லை. உண்மையிலேயே அதிக விலை இருக்குமானால் அதைப்பற்றி அரசு சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவிக்கும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் விடுதியும், தலைமைச் செயலகத்திலே நடத்தப்பட்டு வரும் விடுதிகளுக்கும் நியமித்துள்ள ஒழுங்கு முறை விதிகள் என்ன என்பதை அரசு அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அத்தகைய விதி முறைகளுக்கான விவரம் தற்போது இல்லை. ஒழுங்காக சாப்பாடு போட வேண்டுமென்பதுதான் விதியாக இருக்குமென்று கருதுகிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கியிருக்கும் விடுதியில் தற்போது சாப்பாடு எடுப்பதற்கு ஆறே ஆறு சாப்பாடு காரியர்கள்தான் இருக்கின்றன; ஆறே ஆறு பிளாஸ்குகள்தான் இருக்கின்றன. இவைகளும் 10 ஆண்டுகளுக்கு முன்பு வாங்கப்பட்டவை. இதைத்தவிர, அங்கே ஜன்னல்களிலே இருக்கக்கூடிய கொக்கிகள் சரிவர இல்லை. இதைப்பற்றி 3, 4 முறைகள் நான் ஏற்கனவே இங்கே சொல்லியிருக்கிறேன்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இக்கேள்வி சாப்பாடு விடுதியைப் பற்றியது. இந்த ஜன்னலுக்கு ரிப்பேர், கதவுக்கு ரிப்பேர் என்பதைப் பற்றி கேட்கக் கூடாது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இது தலைமைச் செயலகத்திலே நரமான உணவு கொடுக்கப்படுமா என்பதைப் பற்றிய கேள்வி. சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலே என்ன நிலைமை என்பதுபற்றி தனியாகக் கேள்வி போட்டால், அதைப்பற்றிய தகவலைச் சேகரித்து தரப்படும். தவிர, அவர்கள் அங்கே 6 கேரியர்கள்தான் இருக்கின்றன; அதுவும் மிகவும் பழமையாக இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். நிச்சயமாக பேரவைத் தலைவர் அதை கவனத்தில் வைத்துக் கொண்டுள்ளார்.

அறநிலையத்துறைக்கென வாரியம்.

*வினா எண் 81—திரு. என். கிட்டப்பா: திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அறநிலையத்துறைக்கென தனியே வாரியம் ஒன்று அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

செயற்குறிப்பு எதும் தற்போது இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, அறநிலையத் துறையில் அறங்காவலர்கள் நியமிக்கப்படுவதற்கு, இதற்கு முன்னாலே காங்கிரஸ் கட்சி 'ஏரியா' கமிட்டி என்று போட்டிருந்தது. பின்னர் வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அது கலைக்கப்பட்டு, வேறு வகையான முறையில்

நியமிக்கப்பட்டது. இப்போது மறுபடியும் இந்த ஏரியா கமிட்டி கொண்டு வரப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். எனவே, அறநிலையங்களில் அறங்காவலர்களை நியமிக்கப்படுகின்ற போது, உள்ளபடியே ஆண்டவன்மேல் கடவுள் என்று சொல்லப்படுகின்றவர்மேல் பக்தி வைத்திருக்கக்கூடியவர்களை கொண்ட ஒரு குழுவை உருவாக்கி, அந்தக் குழுவின் மூலம் வாரியத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-10]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, 1925-ஆம் ஆண்டு முதல் 1950-ஆம் ஆண்டு வரை பலவேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, தனிப்பட்ட வாரியமாக இருந்து வந்த நிலைமையை மாற்றி 1940 ஆம் ஆண்டு ஆர். வி. கிருஷ்ணய்யர் அவர்களது அறிக்கையின் மீது 1942-ல் உயர்நீதிமன்றத்திலிருந்து ஓய்வு பெற்ற நீதிபதி திரு. வெங்கட்டரமணராவ் அவர்கள் தலைமையில் திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை போன்றவர்கள் எல்லாம் இருந்த குழு கொடுத்த அறிக்கை மீது ஒரு முடிவு எடுத்தார்கள் 1951-ம் ஆண்டு முதல் இது அரசு துறையாக மாற்றப்பட்டிருக்கிறது. மேலும் மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்னால் ஏரியா கமிட்டி இருந்தது, பின்னால் முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் அது நீக்கப்பட்டுவிட்டது. இப்போது அது மீண்டும் வந்திருப்பதாக சொன்னார்கள். முன்னால் இருந்த ஏரியாக் கமிட்டிக்கு சில அதிகாரங்கள் இருந்தன. இப்போது போட்டிருப்பது ஆலோசனைக் குழு. ஏனென்றால், ஆயிரக்கணக்கான அறங்காவலர்களை நியமிக்கின்ற போது, அது பற்றி அதிகாரிகள் மட்டும் முடிவு செய்வது சரியல்ல, அதற்கு ஆலோசனை வழங்குவதற்காகத்தான் இந்த கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது. அறங்காவலர்களாக நியமிக்கவேண்டும் என்று வரும் விண்ணப்பங்களை விசாரித்து விவரங்களை தந்து, இன்னின்னார் தகுதியுள்ளவர்கள் என்ற ஆலோசனைகளை வழங்குவதற்காக இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

திரு. இ. தமிழரசன் : தலைவர் அவர்களே, ஆலயங்களில் ஆதிவாசிகள், அரிசனங்கள் செல்லக்கூடாது என்பதை தந்தை பெரியார் அவர்களால் தகர்த்து எறியப்பட்டது. அந்த கருத்துக்கு உரமூட்டக்கூடிய வகையில், அறங்காவலர் குழுவில் அரிசனங்களும் ஆதிவாசிகளுக்கும் இடம் கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இப்போது அறங்காவலர் குழுவில் ஒரு அரிசன் கண்டிப்பாக இடம் பெறவேண்டும் என்று விதியிருக்கிறது. அதற்கு மேல் தகுதியுடையவர்கள் இருந்தாலும் அவர்கள் நியமிக்கப்படலாம். அதற்கு கட்டுப்பாடு எதுவும் கிடையாது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, ஏற்கனவே கன்னியாகுமரி மாவட்டத்தில் தேவஸ்வம் போர்டு செயல்பட்டுக் கொண்டிருந்தது. அது இப்போது இல்லை. அது மீண்டும் அமைக்கப்படுமா? ஆமெனில், எப்போது அமைக்கப்படும்? மேலும் கன்னியாகுமரி தேவஸ்வம் போர்டில் பணிபுரிகின்ற போர்டு ஸ்டாப்-ஏறக்குறைய 130 பேர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு மாநிலத்தில் இருக்கின்ற பிற அறநிலைய ஊழியர்களைப் போல், அரசு ஊழியர்களைப் போல் பென்ஷன், பிராவிடன்ட் பண்ட் போன்ற எல்லா சலுகைகளும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை அரசிடத்தில் இருக்கிறது. அதை அவர்களுக்கு அளிக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : கன்னியாகுமரி மாவட்டத்தில் தேவஸ்வம் போர்டுக்கு அந்த நிர்வாகக் குழு அமைப்பதற்கான முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது. அதைப் போலவே கேரள மாநிலத்திலிருந்து, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு திருப்பிவிடப்பட்ட அந்த தேவஸ்வம் போர்டைச் சேர்ந்த ஊழியர்களின் வேண்டுகோள் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் அதுபற்றிய முடிவுகள் அறிவிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்வி எண் 82.

(திரு. துரை முத்துசாமி அவர்களும், திரு. து. இராமசாமி அவர்களும் எழுந்து நின்றனர்....)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அடுத்த கேள்விக்கு போய் விட்டேன். தயவு செய்து உட்காருங்கள்.

திரு. துரை முத்துசாமி : ஆலயங்கள் பற்றிய கேள்வி, சில முக்கியமான கேள்விகள் கேட்க வேண்டியிருக்கிறது, அதற்கு ஏன் சந்தர்ப்பம் தரக்கூடாது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாக் கேள்விகளுக்கும் சந்தர்ப்பம் தந்து கொண்டிருக்க முடியாது. கேட்கும்போதெல்லாம் நேரம் கொடுத்துக் கொண்டிருக்க முடியாது....

திரு. துரை முத்துசாமி : மற்றவர்களுக்கெல்லாம் நேரம் கொடுக்கும் போது ஏன் எங்களுக்கு மட்டும் கொடுக்கக் கூடாது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை எல்லாம் நீங்கள்) கேட்கக் கூடாது. தலைவரை இப்படி குறுக்கே கேள்விகள் கேட்டுக்கொண்டிருந்தால் உங்களை அழைக்கவே முடியாத நிலை ஏற்படும். நான் எவ்வித பாகுபாடும் இல்லாமல் தான் நடந்து கொள்கிறேன். மேலும் தலைவர் ஒரு முடிவை சொல்லி விட்டால் அதை ஏற்றுக்கொள்வது தான் மரபு....

[1979 பிப்ரவரி 19

(திரு. துரை முத்துசாமி எழுந்து நின்று கொண்டிருந்தார் ..)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி சொல்லிக் கொண்டேயிருந்தால் திரு. துரை முத்துசாமி அவர்கள் பார்வை பேரவைத் தலைவரின் கண்ணுக்கு வராமல் கூட போய்விடக் கூடிய நிலைமை ஏற்படும்......

திரு. து. இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் இம்மாதிரி முடிவு எடுப்பது உண்மையிலேயே வேதனைக் குரியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் ஒழுங்குப் பிரச்சினை இல்லை. கேள்வி கேட்க வாய்ப்பளிக்க வேண்டுமென்று என்னைக் கட்டாயப்படுத்த முடியாது.

திரு. து. இராமசாமி : விவகாரம் பண்ணுகிறவர்களுக்குத் தான் சந்தர்ப்பம் கொடுப்பீர்கள் போல் இருக்கிறது. எப்போதோ ஒருமுறை நாங்கள் கேட்கிறோம். அப்படிக் கேட்கிற வர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கக்கூடாதா? முக்கியமான கேள்விகளுக்குத்தான் கை தூக்குகிறோம். இதுவரை நாங்கள் எத்தனை சப்ளிமென்டரி கேள்விகள் கேட்டிருக்கிறோம் என்று தயவு செய்து பாருங்கள்.

திரு. துரை முத்துசாமி : எதிர்க்கட்சி வரிசையில் தற்போது இருக்கின்ற ஒரே ஒரு தலைவர்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற தலைவர், உறுப்பினர் என்று பார்த்து கேள்வி நேரத்தில் வாய்ப்பு அளிக்கப்படுவதில்லை. ஒரே ஒரு கேள்விக்கு 15 நிமிஷம் ஆகியிருக்கிறது. எப்படி பேரவைத் தலைவர் நேரத்தை அட்ஜஸ்ட் செய்ய முடியும்?

திரு. து. இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்குக் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பங்களைக் கொடுக்க மறுப்பதாலும், கடுமையான வார்த்தைகளை உபயோகப்படுத்திய தாலும் எங்களுடைய வருத்தத்தையும், அதிருப்தியையும் தெரி விக்கிற முறையில் நாங்கள் வெளி நடப்புச் செய்கிறோம்.

[காங்கிரஸ் (இ) கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்.]

கொல்லி மலைப்பகுதியை சுற்றுலா மையமாக்கல்

* வினா எண். 82 திரு. கே. சௌந்தரராசன் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1979 பிப்ரவரி 19]

திருச்சி மாவட்டம், துறையூர் அருகில் உள்ள கொல்லி மலைப் பகுதியை சுற்றுலா மையமாக ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தற்போது இல்லை.

திரு. கே, சௌந்திரராசன் : திருச்சி மாவட்டத்தில் வெளி நாட்டுச் சுற்றுப் பயணிகளைக் கவருகின்ற அளவுக்கு வசதி வாய்ப்பு இல்லாத காரணத்தால் வெளிநாட்டுப் பயணிகள் வந்து தங்குவதற்குரிய சூழ்நிலை இல்லாமல் இருக்கிறது. துறையூருக்குப் பக்கத்தில் உள்ள கொல்லிமலைப் பகுதியை சுற்றுப் பயணிகளைக் கவரத்தக்க அளவுக்கு மாற்றியமைத்தால் திருச்சி மாவட்டம் வளர்ச்சி பெறுவதோடு கொல்லி மலையும் வளர்ச்சிபெற ஏதுவாக இருக்கும். கடந்த காலத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தப் பகுதியில் வந்து தங்கியிருந்தபோது அதை ஒரு சுற்றுலாப் பகுதியாக அபிவிருத்தி செய்தால் சுற்றுலாப் பயணிகளை அது ஈர்க்க முடியும் என்று சொன்ன கருத்தை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அந்தக் கொல்லி மலைப் பகுதியின் அடிவாரத்தில் இருந்த பல மரங்கள் கடந்த வெள்ளத்தின்போது விழுந்து வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு விட்டன. ஒரு அருவி மாத்திரம் இப்போது அங்கே இருக்கிறது. அதையும் அங்குகுடிதண்ணீர்த்திட்டத்திற்கும் வேறுதிட்டத்திற்கும் பயன்படுத்த பொதுப்பணித் துறை அணை கட்டும் திட்டத்தைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறது. அப்படி ஒரு அணை கட்டப்படுமானால் அதற்குப் பிறகு வேண்டுமானால் அதை ஒரு சுற்றுலா ஸ்தலமாக மாற்ற முயற்சி எடுத்துக் கொள்ளலாம் என்ற கருத்து சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இருக்கிறது. இருப்பினும் அது வெளி நாட்டுப் பயணிகளைக் கவரும் அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்காது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இ. தமிழரசன் : கம்ப இராமாயணம் இனிமையானது, சுவையானது என்று தமிழர்கள் போற்றுகிறார்கள். அத்தகைய கம்ப இராமாயணம் அரங்கேற்றப்பட்ட மாவட்டம் திருச்சி மாவட்டம். அந்த மாவட்டத்தில் உல்லாசப் பயணிகளைக் கவரும் விதத்தில் கம்பன் அரங்கம் நினைவாலயம் அமைக்க இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : கம்பன் அரங்கமும், இல்லமும் உல்லாசப் பயணிகளைக் கவராது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

[1979 பிப்ரவரி 19

முறைசாராக் கல்வித் திட்டம்

வினா எண். 83 திரு. நா. பழனிவேல் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) முறைசாராக் கல்வி பயிலும் ஏழைக் குழந்தைகளுக்கு மாலை உணவு வழங்கும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :—

(அ) இல்லை.

(ஆ) இந்த வினாவுக்கு இடமில்லை.

திரு. பெ சு. திருவேங்கடம் : அமைச்சர் அவர்கள் இல்லையென்று பதில் சொல்கிறார்கள். பல பெரியவர்கள் மாலைநேரங்களில் முறைசாராக் கல்வி பயிலுகின்றபோது உணவு இல்லையென்று சொன்னால்கூட சிற்றுண்டியாவது வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு. மு. ஜான் வின்செண்ட் : முறைசாராக் கல்வித் திட்டத்தில் பள்ளி ஆய்வாளர்கள் நியமிப்பது எந்த அடிப்படையில் கல்வித் தகுதியை வைத்தா, அனுபவத்தை வைத்தா அல்லது வயதை வைத்தா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-20]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, கல்வித் துறையிலே ஆய்வாளர்கள் தகுதியையும் அனுபவத்தையும் வைத்துத்தான் நியமிக்கப்படுகிறார்கள்.

திரு. துரை கலியமூர்த்தி : தமிழகத்திலே முறைசாரா கல்வியை யூனியன்கள் மூலமாக ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தமிழகத்திலே உள்ள எல்லா யூனியன்களிலேயும் இயங்குகிறதா? ஒவ்வொரு யூனியனிலேயும் எத்தனை இடங்களில் இது இயங்குகிறது? அதோடு 2-10-78 ஆம் தேதி மத்திய அரசு அடல்ட் எஜுகேஷன் என்ற முறையிலே 300 கோடி ரூபாய் செலவிலே ஆரம்பிக்கப்பட உள்ளதாகச் சொல்லப்படுகிறது. அது தமிழகத்திலே எத்தனை இடங்களிலே செய்யப்படுத்த இருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, முறைசாராக் கல்வித் திட்டம் இன்றைய தினம் யூனியன்களிலே பல்வேறு பகுதிகளிலே நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

1979 பிப்ரவரி 19]

எத்தனை இடங்களிலே என்ற விவரம் இப்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரமுடியும். 2-10-78இல் துவக்கப்பட்டிருப்பது முதியோர் கல்வித்திட்டம், இப்போது அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள், பயிற்சிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கூடியவிரைவில் தமிழகத்திலே முழுவதும் இது துவங்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எல்லோரும் அவையை விட்டு வெளியேறினார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சின்னையா அவர்கள் மட்டும் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் அந்த வெளிநடப்பிலே கலந்துகொள்ளவில்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

* வினா எண் 84—திரு. க. சுப்பிரவேலு : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

முறைசாராக் கல்வி திட்டத்தை உயர்நிலைப் பள்ளிகளில ஆரம்பிக்கும் திட்டம் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆரம்ப கல்வியினை பெறாதவர்களுக்காக முறைசாராக் கல்வி வகுப்புகள் தற்போது ஆரம்பப் பள்ளி கட்டிடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. அவ்வாறு இடவசதி அமையாத இடங்களில் உயர்நிலைப்பள்ளி கட்டிடங்களில் வகுப்புகள் நடத்தவும் முறைசாராக் கல்வி இயக்குநர் அனுமதி அளித்துள்ளார்.

Development Schemes in Unions.

* Q. No. 85—Thiru R. UMANATH : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) The procedure adopted to sanction and execute development schemes like laying of roads, etc. by the Panchayat Unions run by Special Officers;

(b) Whether the Government have issued any directive that unless all the ex-members (i.e. Panchayat Presidents) of the union without exception, give their approval, the schemes shall not be executed; and

(c) if not, what is the specific directive issued regarding consultation with the ex-members and the powers in such consultations?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :—

(அ) ஒன்றியங்களின் தலைவர்கள் மன்றங்கள் இவற்றின் அனைத்து அலுவல்களையும்—பொறுப்புக்களையும் தனி அலுவலர்களே நிறைவேற்றுகின்றனர்.

(ஆ) இல்லை.

(இ) இல்லை.

திரு. மு. ஜான் வின்செண்ட் : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலே உள்ள சாலைகளில் பஸ் போக்குவரத்து நடைபெறுகிறது. ஆனால் அந்த ரோடுகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அவைகளை சரி செய்வதற்கு ஒன்றியங்களிலே நிதிநிலையில்லை என்கிறார்கள். ஆகவே அரசாங்கமே அந்த சாலைகளையெல்லாம் எடுத்துக் கொள்வதற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : சாலை பழுதுபார்க்கின்ற நிலையை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களிடம் தெரிவித்தால் அவர்கள் கிராமசாலைகள் என்ற திட்டத்தின்கீழ் அதைச் செயல்படுத்துவார்கள்.

திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, ஒன்றியங்களிலே உள்ள சாலைகள் செப்பனிடுவதற்கு போடுவதற்கு உச்சமட்ட தொகை, அதாவது சீலிங், ஒன்று விதிக்கப்படுகிறது. அந்தத் தொகை 1961-ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டதால் இப்போது உள்ள கணக்குகள் படி சாலைகள் அமைக்கப்படக் கூடிய சூழ்நிலை இல்லை. எனவே அந்த கணக்கு விதங்களை எல்லாம் பார்த்து உச்சமட்டத் தொகையை உயர்த்தி ஆணை பிறப்பிக்க முன்வருமா? அப்படிப்பட்ட செயல் முன்னேற்றங்களையெல்லாம் பற்றி குறைந்த பட்சம் காலாண்டுக்கு ஒரு முறையாவது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஆய்வு அறிக்கை என்ற முறையிலே கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இவ்வளவு விரிவான இந்தக் கேள்வியைத் தனியாகப் போட்டால் தகவல் சொல்லப்படும்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் நேரடி அதிகாரிகளின் கீழ் ரோடு வேலைகளுக்காக டெண்டர்கள் கோரப்படுகிறபோது, உடனடியாக செயல்படுவதில்லை, காலதாமதம் ஏற்படுகிறது, அந்தக் காலதாமதத்தைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இது ஒரு புகார். குறிப்பிட்டுச் சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படும்.

போளூர் பேரூராட்சியை நகராட்சியாக்கல்

* வினா எண். 86—திரு. கே. ஜே. சுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு மாவட்டம், போளூர் வட்டம், போளூர் பேரூராட்சியை நகராட்சி ஆக்க அரசிடம் திட்டம் ஏதாவது உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) & (ஆ) மாவட்ட ஆட்சியாளரின் பரிசிலனையில் உள்ளது.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள பேரூராட்சிகளை நகராட்சிகளாக உயர்த்துவதற்கு அரசிடம் தனித் திட்டம் இருக்கிறதா? அப்படியானால் எந்த எந்த பேரூராட்சிகளை நகராட்சிகளாக உயர்த்தப்போகிறார்கள்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : திட்டம் இருக்கிறது. கீழக்கரை, அரியலூர், அம்பாசமுத்திரம், திருத்துறைப்பூண்டி ஆகிய பேரூராட்சிகள் நகராட்சிகளாக ஆக்கப்படும் திட்டம் இருக்கிறது.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே உள்ள பேரூராட்சி மன்றங்களிலே குடிநீர்த் திட்டம் இல்லை, குடிநீர் கிடைப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது. அதற்குத் தனியாகத் திட்டம் உண்டா? 4,5 லட்சம் ரூபாய் அளவில் திட்டம் போட்டு அதிலே நான்கில் ஒரு பங்கு கட்டவேண்டுமென்று சொல்லப்படுவதால் ஒன்றியங்களிலே உள்ள நிதிநிலையின் காரணமாக கட்டமுடியாத நிலைமை இருக்கிறது. அதன் காரணத்தால் குடிநீர் கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது என்று சொல்லப்படுகிறது, ஆகவே அதற்குத் தனியாக திட்டம் உள்ளதா

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, குடிநீர் வாரியத்திற்குப் பொறுப்பேற்றிருக்கின்ற தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுக்குத் தனிக்கேள்வியாகப் போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, போளூர் பேரூராட்சியை நகராட்சியாக ஆக்குவதற்கான திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசிலனையில் இருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். போளூர் நகரம்,

பொருளாதாரத்திலே மிகவும் பின்தங்கியிருக்கும் மக்கள் வாழும் இடம். அதை நகராட்சியாக மாற்றினால் மக்களுக்கு அதிக வரி விதிக்க வேண்டி வரும். எனவே, அது தொடர்ந்து பேரூராட்சியாகவே இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அதனுடைய வருமானம் மூன்று இலட்சத்திற்கு மேல் அதிகரித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அதை நகராட்சியாக ஆக்கக்கூடாது என்று பேரூராட்சியின் தலைவர் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, இதுபற்றி விரிவாக அனுப்புமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 87 முதல் 89 வரையில் அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க நாளை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, ஒரு சிறு வேண்டுகோள். இரண்டாவது பெரிய எதிர்க்கட்சியாக இருப்பவர்கள் மன வருத்தத்திலே போய்விட்டார்கள். அவர்கள் இருந்திருந்தால் துணைக்கேள்விகள் போடுவார்கள். வரச்சொல்லி நீங்கள் ஒரு வார்த்தை சொல்லக்கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் வந்து விட்டார்கள்.

வேடர் சமூகத்தினர்

* வினா எண். 90 — திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்பட்டோர் வகுப்பினர் பட்டியலில் உள்ள வேடர் சமூகத்தினரை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்திட மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பிற்பட்டோர் வகுப்பினர் பட்டியலில் உள்ள வேடர் சமூகத்தினரை தாழ்த்தப் பட்டோர் பட்டியலில் சேர்த்திட மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யவில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள்

அறிவித்தார்கள். இந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பல்லாண்டுக் காலமாகத் தங்களுடைய சமூக நிலை முன்னேற வேண்டுமென்ற அடிப்படையில் தங்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து வருவதாகச் சொல்லப்படுகிறது. எனவே, நமது புதிய அரசு இனிமேலாவது மத்திய அரசாங்கத்திற்கு அவர்களைத் தாழ்த்தப் பட்டோர் பட்டியலில் சேர்க்குமாறு வேண்டுகோள் விடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்றால் அவர்கள் தீண்டத்தகாதவர்களாக இருக்க வேண்டும். இந்த அடிப்படையில்தான் மத்திய அரசாங்கம் சில வரைமுறைகளை வகுத்துத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலை உருவாக்கி யிருக்கிறார்கள். ஆகவே, இந்த விதிமுறைக்கு உட்படாத காரணத்தால் இவர்களைச் சேர்க்க இயலவில்லை.

திரு. சே. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்த வேடர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவகையிலே தாழ்த்தப் பட்டவர்கள் மாதிரியாகவும், தீண்டப்படாதவர்கள் மாதிரியும் கருதப்படுகிறார்கள். ஆகவே, அவர்கள் மாநிலம் முழுவதும் கருக்கமாகத்தான், பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, இவர்களை இந்த தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று இந்த அரசாங்கம் வற்புறுத்தி மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, வேடர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சாதிக் கொடுமைக்கு ஆளானதாக இந்த அரசுக்குத் தகவல் இல்லை. இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் மத்திய அரசாங்கத்திற்கு இதற்கு முன்பு சில வகுப்பினரை தாழ்த்தப் பட்டோர் பட்டியலில் சேர்க்க எழுதியும் மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ள மறுத்திருக்கிறது.

திரு. போ. கோபாலன் : தலைவரவர்களே, வேறு ஏதாவது பிற பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களைத் தாழ்த்தப் பட்ட சமுதாயமாக அறிவிக்க மத்திய அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த அரசு அப்படி எதுவும் செய்யவில்லை.

[1979 பிப்ரவரி 19

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்டவர்கள், பின்தங்கியவர்கள் ஆகியோருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக 26 வயது, 31 வயது என்ற வயது வரம்பு. வேலை கொடுப்பதற்கா அல்லது வயது வரம்பு வைத்து வேலையில்லை என்பதற்கா என்று அமைச்சரவர்கள் அறிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, மூலக்கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரமாகச் சொல்கிறேன்.

திரு. து. இராமசாமி : தலைவரவர்களே, கோவை மாவட்டத்திலே பவானி தாலுக்காவிலே குமாரபாளையம் என்ற பகுதியிலே லம்பாடி சாதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான ஏழைகள் இருக்கிறார்கள். அந்த வகுப்பைச் சேர்ந்தவர்களைத் தாழ்த்தப்பட்டவர்கள் என்று அறிவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்திரபாண்டியன் : தலைவரவர்களே, கேள்வி வேடர் சமூகத்தினரைப் பற்றியது, லம்பாடிகளைப் பற்றியது அல்ல.

அருந்ததியார்களுக்குச் சலுகைகள்

* வினா எண் 91—திரு. ஓ. சோ. வேலுச்சாமி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அரிசனங்களில் அருந்ததியார் அல்லது சக்கிலியர் என்ற பிரிவினர் தாழ்த்தப்பட்ட மக்களுக்குள் மிகவும் தாழ்த்தப்பட்ட மக்களாக இருக்கிறார்கள் என்ற காரணத்தினால் சலுகைகள் வழங்குவதில் இவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க அரசு செயற்குறிப்பு வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இல்லை.

[முற்பகல் 9-30]

திரு. ஓ. சோ. வேலுச்சாமி : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களில் அருந்ததியார்களுக்கு முன்னுரிமை கொடுப்பது அவசியம், ஏனெனில், அவர்கள் மிகவும் சிறுபான்மையினராக இருக்கிறார்கள். அதிலும் தாழ்த்தப்பட்ட மக்களிலேயே இந்த அருந்ததியார்கள் தாழ்த்தப்பட்ட மக்களாக இருக்கிறார்கள். ஆகவே, அரசு மறுபரிசீலனை செய்து அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

1979 பிப்ரவரி 19]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் அருந்ததி சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள் என்பது உண்மைதான். இந்த அரசாங்கம் தனிப்பட்ட விதிமுறை வகுக்க இயலாது என்றாலும் செய்கின்ற காரியங்களில் அவர்களுக்குப் பல சலுகைகள் தந்து, வீடு கட்டுதல், மனை வழங்குதல், உதவித் தொகை வழங்குதல் இதுபோன்ற வகைகளில் சலுகைகள் அளித்து வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, இது மிக முக்கியமான கேள்வியாகும். அமைச்சரவர்கள் இதற்கு விசேஷ கவனம் செலுத்தமுடியாது என்று சொன்னார்கள். இப்பொழுது காலனிகள் கட்டிக் கொடுப்பதிலேகூட, இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்குப் பெரும்பான்மையாக, ஏன் மொத்தமாகவே, அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுவது கிடையாது. அது மட்டுமல்ல, பெரியார் நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இந்த நேரத்திலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எவ்வளவு கொடுமைகள் இழைக்கப்படுகின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். அரிசனங்களுக்கு வெட்டப்பட்ட கிணறுகளில் கூட இந்தப் பிரிவினர் தண்ணீர் எடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. சட்டத்திலே இடம் இல்லையென்றாலும் விசேஷமாக அவர்களுக்குத் தனியாக ஏற்பாடு செய்து, வீடுகள் கட்டிக் கொடுப்பதிலே, குடிதண்ணீர் கொடுப்பதிலே முன்னுரிமை கொடுக்க, விசேஷ கவனம் செலுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த அரசாங்கம் பொறுப்பேற்றபிறகு வீடுகட்டுதல், வீட்டு மனை வழங்குதல் போன்ற காரியங்களில் நானே தனிக் கவனம் செலுத்தி அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்துக் கொண்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் தண்ணீர் எடுப்பதில் தகராறு இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி எந்தத் தகராறும் இதுவரை இந்தச் சமூகத்தில் வரவில்லை.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தாழ்த்தப்பட்டவர்களில் வள்ளுவர் என்ற சமூகத்தினர் மிகவும் குறைவாக இருக்கிறார்கள். அவர்கள்தான் அரிசனங்களுக்குத் திருமணம் செய்து வைப்பவர்கள். அது தவிர அவர்களுக்கு வேறு வேலை கிடையாது. அவர்களுக்கும் இதுமாதிரி முன்னுரிமைச் சலுகைகள் அளிக்க சர்க்கார் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்திரபாண்டியன் ; தலைவரவர்களே, அரிசனங்களுக்கெல்லாம் திருமணம் செய்து வைப்பவர்கள் அவர்கள்தான் என்பது முறை அல்ல.

அரிசனங்களது தாய் தந்தையர்கள்தான் திருமணம் செய்து வைக்கிறார்கள். தேவையான முன்னேற்பாட்டையும் செய்து வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சமூகத்தினருக்கும் எல்லா சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

திரு. சொ. ந. பழனிசாமி : பேரவைத் தலைவரவர்களே, அருந்ததியர் சமூகம் மிகவும் தாழ்ந்த நிலையிலிருக்கிறது என்று நம்முடைய இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உதவித் தலைவர் திரு. ஓ. எஸ். வேலுச்சாமி அவர்கள் சொன்னார்கள். அது முற்றிலும் உண்மை. இதற்காக அரசாங்கம் தனிக் கவனம் செலுத்தி பல சலுகைகளை அறிவித்து அவர்கள் முன்னேற வழிவகை செய்ய வேண்டுமென்று மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மற்றபடி அருந்ததியர் பிரிவுக்காக ஒரு மாநாட்டைக் கூட்டினேன். அதற்கு நமது அரிசன நல அமைச்சரவர்கள் வருவதாகக் கூறி நாள் கடத்திச் சென்றது மிகவும் வருந்தத்தக்க விஷயம் என்பதை இங்கே நான் சபை முன்பு அறிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, அருந்ததியர் மக்களின் பேரில் இந்த அரசாங்கம் தனிக் கவனம் செலுத்தும் என்பதைச் சொல்வதோடு அவர் அழைத்த இடத்திற்கு வரவில்லையென்று சொன்னார். காலம் வரும்போது நிகழ்ச்சிக்கு நானும் வருவேன்.

திரு. பொ. காளியப்பன் : தலைவரவர்களே, அருந்ததி மக்களைப் போல், இராமநாதபுரம், தஞ்சை மாவட்டங்களிலே வாழ்கின்ற வலையர் சமூகத்தினர் மிகவும் பின்தங்கிய மக்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்த மாதிரி முன்னுரிமை, சலுகை அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, வலையர் சமூகத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்னது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அருந்ததியர் அல்லது சக்கிலியர் என்று சொல்லப் படுகிற சமூகத்தினருடைய வாழ்க்கையை பாட்டா கம்பெனியினர் பறித்து விட்டார்கள். வீதிகளிலே அவர்கள் செருப்பை ரிப்பேர் செய்கின்ற தொழிலைச் செய்து சிரமப்படுகிறார்கள். ஆகவே, இந்தச் சமூகத்தினரைக் கூட்டுறவு முறையில் ஒன்றுசேர்த்து, செருப்பு தைக்கின்ற தொழிலைச் செய்ய அவர்களுக்கு உதவி கொடுத்து, அவர்களுடைய வாழ்க்கையை வளமுறப்படுத்த அரசு முன்வருமா? இன்னொன்று, சேலம் மாவட்டத்தில் தடுப்பட்டியல் கிணறைத் தூர்த்துவிட்ட நிலைமை கூட ஏற்பட்டிருக்கிறது இந்த நாட்டில். எனவே, அருந்ததியினரைக்

காப்பாற்ற கூட்டுறவு முறையில் அவர்கள் தொழில் செய்கின்ற முறையை அமுல்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இப்போதே அரசாங்கம் அவர்கள் தொழில் நடத்துவதற்கு வட்டியில்லாக்கடன் வழங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் நான் தண்ணீர் எடுப்பதில் பிரச்னை இல்லை என்று சொன்னதாக குறிப்பிட்டார்கள். நான் சொன்னது அந்தச் சமூகத்திற்குள்ளே; அவர்கள் சொல்வது தாழ்த்தப்பட்டவர்களுக்கும் மற்றவர் களுக்கும் இருக்கும் பிரச்னை.

மணிமுத்தா ஆற்றின் குறுக்கே பாலம்

*வினா எண் 92—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், கூத்தக்குடி—நின்னியூர் சாலையின் குறுக்கே அமைந்துள்ள மணிமுத்தா ஆற்றில் பாலம் கட்ட ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. மொ. பெரியசாமி : தலைவரவர்களே, தென்னாற் காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், கூத்தக்குடி—நின்னியூர் சாலையின் குறுக்கே அமைந்துள்ள மணிமுத்தா ஆற்றில் பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற இடத்தில் பாலம் கட்ட ரூ. 4.50 லட்சம் செலவில் 1979–80-க்கான இரண்டாம் பாகம் திட்டத்தில் செயல்படுத்த அரசு பரிசீலனையில் உள்ளது.

பாபனாசம் சாலை—தாம்பரபரணி பாலம் சாலை

*வினா எண் 93—திரு. சு. முத்துசாமி கரையாளர் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1979 பிப்ரவரி 19

(அ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம், பாபநாசம் ரோட்டிலிருந்து பிரிந்து கோடாரங்குளம் மார்க்கமாக ஆலடியூர், தாம்பரபரணி பாலம் வரையிலும் உள்ள யூனியன் ரோட்டை நெடுஞ்சாலை கிராமப்பணித்துறையினர் ஏற்றுக்கொள்ளும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம், பாபநாசம் ரோட்டிலிருந்து பிரிந்து கோடாரங்குளம் மார்க்கமாக ஆலடியூர், தாம்பரபரணி பாலம் வரையிலும் உள்ள யூனியன் சாலையை நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறையினர் 1978-79-ம் நிதியாண்டில் ஏற்றுக் கொள்ளும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

கோவை நகரில் ஓடும் ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு மீட்டர்கள் பொருத்துதல்

*வினா எண் 94 திரு. த. ராமணி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

கோவை நகரில் ஓடும் ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு சென்னை நகரில் உள்ளது போல் சதுர மீட்டர்கள் பிரயாணிகள் பார்க்கும்படி பொருத்தப்பட்டு கட்டணம் வசூலிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கோயம்புத்தூர் நகரில் ஓடும் எல்லா ஆட்டோ ரிக்ஷாக்களிலும் பெரிய சதுர மீட்டர்களைப் பொருத்தியிருக்க வேண்டும் என கோயம்புத்தூர் நகர ஆட்டோ ரிக்ஷா உரிமையாளர்களை, கீழ்க்கண்ட சமயங்களில் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் வலியுறுத்துகிறார்.

1. ஆட்டோ ரிக்ஷா உரிமம் வழங்கும்பொழுதும், அதனைப் புதுப்பிக்கும் பொழுதும்.

2. வாகனங்களையும், உரிமங்களையும் மாற்றிக்கொள்ள அனுமதியளிக்கும் பொழுதும்.

3. தகுதிச் சான்றிதழ் அளிக்கும் பொழுதும், புதுப்பிக்கப்படும் பொழுதும்.

1979 பிப்ரவரி 19]

திரு. த. ரமணி : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் உரிமங்களைப் புதுப்பிக்கும்போது கட்டாயமாக மீட்டர் பொருத்த வேண்டும் என்று கூறி அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுத்து இருப்பதாகவும், அதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு இருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு ஏராளமான ஆட்டோ ரிக்ஷாக்கள் அரசாங்கம் பிக்ஸ் செய்து இருக்கும் மினிமம் சார்ஜ் வாங்காமல் அதிகமான கட்டணம் வசூலிக்கிறார்கள். ஐந்து இலட்சம் மக்களுக்கு மேல் வாழும் கோவை நகரில் குறைந்த கட்டணம் செலுத்தி செல்லக்கூடிய சைக்கிள் ரிக்ஷாவோ அல்லது மினியம் கட்டணம் செலுத்திச் செல்லக்கூடிய அளவிற்கு டாக்சிகளோ கிடையாது. மேலும், கோவை நகரத்தில் டவுன் பஸ், ஆட்டோ ரிக்ஷா தவிர வேறு வாகனங்கள் எதுவும் கிடையாது. டவுன்பஸ் போதுமான அளவிற்கு இல்லை. பல ஆட்டோ ரிக்ஷாக்களில் சதுர மீட்டர்கள் பொருத்தப்படவில்லை. ரவுண்ட் மீட்டர் பொருத்தி வைத்துக்கொண்டு, இருக்கிறார்கள். அது டிரைவர் காலுக்கு அடியில் இருக்கிறது. ஆகவே, இதைக் கருத்தில்கொண்டு சகல ஆட்டோ ரிக்ஷாக்களுக்கும் சதுர மீட்டர் போட வேண்டும் என்று வற்புறுத்தி, மினிமம் சார்ஜ் அல்லது மீட்டர் காட்டும் சார்ஜையே சென்னையில் வசூலிப்பது போல் அங்கும் அந்த ஆட்டோ ஓட்டுனர்கள் வசூலிக்க வேண்டும் என்ற முறையை ஏற்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, சிறிய மீட்டர் பொருத்திக்கொண்டு அந்த ஆட்டோ ரிக்ஷாக்கள் இயங்குவதால் பொது மக்களுக்கு சில இன்னல்கள் ஏற்பட்டன என்று அரசுக்குத் தகவல் கிடைத்ததும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அந்த சிறிய மீட்டர் வைத்துள்ளதால் ஏற்படும் குறைபாடுகளைப் போக்குவதற்கும், மீட்டர் காட்டும் தொகைக்கு மேல் கட்டணம் வசூலிப்பதைத் தடுப்பதற்கும், அது போன்ற தவறுகள் நடக்கின்றன என்று அரசுக்குப் புகார்கள் வந்த காரணத்தால் அதன் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. கோவை நகரில் தற்போது 1,632 ஆட்டோ ரிக்ஷாக்கள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. 31-5-79-க்குள் அனைத்து ஆட்டோ ரிக்ஷாக்களிலும் சதுர மீட்டர்கள் போடப்பட வேண்டும் என்றும், மீட்டர் சார்ஜ்க்கு மேல் கட்டணம் வசூலிப்பவர்கள்மேல் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

(முற்பகல் 9-40)

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கடுமையான உத்தரவு போடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அந்த உத்தரவுப்படி அங்கே இருக்கின்ற போலீஸ்

அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதில்லை. கோவை நகரில் ஆட்டோ ரிக்ஷாக்களில் மீட்டர்கள் பொருத்தப்பட்டிருந்தும் ஓட்டுநர்கள் அதைப் பயன்படுத்துவதில்லை. மீட்டரில் உள்ள கட்டணத்தை வசூலிப்பதற்குப் பதிலாக 10 ரூபாய், 15 ரூபாய் கேட்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, அரசினுடைய கடந்த கால உத்தரவுகளை எதிர்த்து கோவை ஆட்டோ ரிக்ஷா உரிமை சங்கம் உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து தடை உத்தரவு பெற்று, இதுகாறும் நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்தது. ஆனால் 3-8-1978 அன்று அந்த தடை உத்தரவு நீக்கப்பட்டுவிட்டது. அதன் பிறகு அரசு உத்தரவுப்படி செயல்படாதவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திரு. என். லட்சுமிநாராயணன்: தலைவரவர்களே, மதுரை மாநகரிலும் ஆட்டோ ரிக்ஷாக்களில் மீட்டர் பொருத்த கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, சென்னை மாநகரத்தை அடுத்து கோவையிலும், மதுரையிலும், திருச்சியிலும், சேலத்திலும் கண்டிப்பாக மீட்டர்கள் பொருத்தப்பட வேண்டுமென்றும் அதை மீறுபவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் அரசு உத்தரவிட்டிருக்கிறது.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, ஆட்டோ ரிக்ஷா ஓட்டுபவர்கள் கூடுதல் கட்டணம் கேட்பதற்கு ஒரு காரணம் இருப்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா? அதாவது, ஆட்டோரிக்ஷா சொந்தக்காரர்கள் வாடகைக்கு விடும்போது ஒரு குறிப்பிட்ட தொகையை நிர்ணயித்துவிடுகிறார்கள். அதை அவர்களால் கொடுக்க முடியவில்லை. ஆகையால் ஓட்டுநர்கள் மீட்டர்கள்படி இல்லாமல் அதிகமாக வசூல் செய்கிறார்கள். அவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம், பாட்டா இவ்வளவு என்று நிர்ணயித்து, சொந்தக்காரர்கள் கொடுத்துவிட்டால் இத்தகைய தவறு குறையும். ஆகையால் இந்த உத்தரவு ஆட்டோரிக்ஷா சொந்தக்காரர்களுக்கும் பொருந்தும்படி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: கண்டிப்பான முறையில் மீட்டர் பொருத்த வேண்டுமென்ற உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டாலே மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய எண்ணமும் எண்ணியபடி நடைமுறைக்கு வந்துவிடும் என்று நான் கருதுகிறேன்.

திரு. பொ. சிகாமணி: தலைவரவர்களே, சென்னையில் எத்தனை ஆட்டோ—ரிக்ஷாக்கள் ஓடுகின்றன? அவற்றை மேலும் அதிகரிக்க உத்தேசம் உண்டா? அப்படியானால் எவ்வளவு அதிகமாகும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: சென்னை மாநகரில் 2,025 ஆட்டோ—ரிக்ஷாக்கள் ஓடுகின்றன. இவைகளை மேலும் அதிகப்படுத்தினால் சாலை விபத்துக்கள் அதிகமாக ஏற்படும் என்று ஆய்விலிருந்து தெரிகிறது. ஆகையால் மேலும் அதிகப்படுத்தும் உத்தேசம் இல்லை.

திரு. கோ. புளங்கோவன்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் விடை சொல்லும்போது திருச்சியிலே உள்ள ஆட்டோ—ரிக்ஷாக்களில் மீட்டர்கள் பொருத்த ஆணையிடப்பட்டுள்ளது என்று சொன்னார்கள். ஆனால் மீட்டர்கள் இருந்தாலும் அவை பயன்படுத்தப்படுவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? எல்லா ஆட்டோ—ரிக்ஷாக்களிலும் மீட்டர்கள் பொருத்தி, உரிய கட்டணம் மட்டுமே வசூல் செய்ய அரசு தகுந்த ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, திருச்சியில் மீட்டர் பொருத்தப்பட வேண்டுமென்றும், எல்லா ஆட்டோ—ரிக்ஷாக்களிலும் அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் தற்போதுதான் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. பொ. முனுசாமி: தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்தில இருக்கிற ஆட்டோ—ரிக்ஷாக்களுக்கு மீட்டர்கள் பொருத்தப்படவில்லை. அங்கும் மீட்டர்கள் பொருத்தப்பட வேண்டுமென்ற உத்தரவை அரசு செயல்படுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் 128 ஆட்டோ—ரிக்ஷாக்கள்தான் இயங்குகின்ற காரணத்தால் எங்களுக்கு அதிலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று ஆட்டோ—ரிக்ஷா சங்கத்தினர் கேட்டுக்கொண்டதால் பரிசீலனை செய்வதற்காக ஆறுமாத காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. பரிசீலனை செய்து பின்னர் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, ஆட்டோ—ரிக்ஷாக்களை சொந்தமாக வைத்து ஓட்டுகின்ற டிரைவர்களும் இருக்கிறார்கள்; வாடகைக்கு விடுகின்றவர்களும் இருக்கிறார்கள். டிரைவர்களே சொந்தக்காரர்களாக இருக்கின்ற ஆட்டோ—ரிக்ஷாக்களில் மீட்டர் பொருத்த அவர்களுக்கு சிரமம் இருக்கிறது. ஏனென்றால் மீட்டர் பொருத்த 500 ரூபாய் செலவழிக்கின்ற வசதி அவர்களுக்கு இல்லை. எனவே, டிரைவர்கள் சொந்தக்

காரர்களாக இருக்கின்ற ஆட்டோ—ரிக்ஷாக்களில் மீட்டர்களைப் பொருத்த அவர்களுக்கு கடனாக வழங்கி, அதை குறைந்த வட்டியில் சுலபமான தவணையில் வசூல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இந்த அரசு ஓட்டுநர் களே உரிமையாளர்களாக இருக்கின்ற ஆட்டோ—ரிக்ஷாக்களுக்கு மீட்டர்கள் வாங்க மட்டுமல்ல ஆட்டோ வாங்குவதற்குக்கூட மிகக் குறைந்த வட்டியில் சுலபமாகத் திருப்பிக் கொடுக்கின்ற வகையில் இந்த அரசு டி.ஐ.சி. மூலம் உதவி செய்ய ஏற்பாடு களை செய்து வருகிறது.

திரு. இ. தமிழரசன் : பேரவைத் தலைவரவர்களே, நிலத்தை உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும் என்றெல்லாம் சொல்லப்படுகின்ற இந்த காலத்திலே, அப்படிப்பட்ட ஒரு கொள்கையை அமல்படுத்துகின்ற இந்த நேரத்திலே யார் யார் ஆட்டோ—ரிக்ஷாவை வைத்திருக்கிறார் களோ அவர்களிடம் இருந்து அதை வாங்கி யார் யார் ஓட்டு கிறார்களோ அவர்களுக்கே சொந்தமாக்குகின்ற ஒரு நடவடிக் கையை எடுப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவ ரவர்களே, வருங்காலத்தில் ஆட்டோ—ரிக்ஷாக்களுக்கென்று உரிமங்கள் வழங்கப்படும்போது ஓட்டுநருக்குத்தான் தரவேண்டும் என்ற ஒரு உத்தரவு ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, இப்போது சென்னையிலே, இரண்டே இரண்டு பேர்கள்தான் பெண்கள் ஆட்டோ—ரிக்ஷா ஓட்டுவதாக அறிகிறேன். ஆகவே எல்லா இடங்களிலும் மகளிர் ஆட்டோ—ரிக்ஷா ஓட்டுவதற்கு விரும்பு பிப்பார்களேயானால் அவர்களுக்கு வட்டியில்லாக் கடன் கொடுத்து அவர்களை ஆட்டோ—ரிக்ஷா வாங்குவதிலும் ஓட்டு வதிலும் ஊக்குவிப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, பெண்களுக்கு உரிமம் வழங்குவதிலே எந்தவித பிரச்சினையும் இல்லை. ஆகவே பெண்கள் ஆட்டோ ஓட்டுவதற்கு முன்வரு வார்களேயானால் கண்டிப்பாக அவர்களுக்கு கடன் உதவி தருவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்றும் அதுவும் குறைந்த வட்டியில் தருவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர் களே, ஆட்டோ—ரிக்ஷா தொழிலாளர்களைப் பொறுத்தவரை யில் இப்போது பெட்ரோல் விலை மிக அதிகமாக இருப்பதன் காரணத்தால் அவர்களுக்கு போதிய வருமானம் கிடைக்காத நிலை இருந்து வருகிறது. ஆகவே இதனைக் கணக்கிட்டு நியாய மான அடிப்படையில் அந்தக் குறைந்தபட்ச கட்டணத்தை நிர்ணயிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, நியாயமான அடிப்படையில் என்று சொல்கிறபோது, பொது மக்களின் நலன் கருதி ஆட்டோ—ரிக்ஷாவின் குறைந்தபட்ச கட்டணத்தை உயர்த்தாமல் இருப்பதே சாலச்சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, நாங்கள் வெகு நேரமாக கையைத் தூக்கிக் கொண்டு இருக்கிறோம். எங்களுக்கு வாய்ப்பு தாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னைப் பொறுத்த வரையில் ஒவ்வொருவருக்கும் வரிசையாகத்தான் வாய்ப்பு தந்து கொண்டிருக்கிறேன். எல்லாக் கட்சிகளுக்கும் வாய்ப்பு தர வேண்டும் என்ற அடிப்படையில் ஒவ்வொரு கட்சியாக வரிசை யாகத்தான் வாய்ப்பு தந்து கொண்டிருக்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோருக்கும் வாய்ப்பு வரும். அப்போது நான் கேள்வி கேட்பதற்கு வாய்ப்பு தருகி றேன். என்னுடைய கண் பார்வையில் வரும்போது கை தூக்கி யவர்கள் அனைவருக்கும் நான் வரிசையாக வாய்ப்பு தருகிறேன்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஆறுமுகம், திரு. சென்னை மு. அரங்கநாதன் ஆகிய இருவரும் பேசிய பேச்சுக்கள் அத்தனையையும் அவைக் குறிப்பில் இருந்து நீக்க உத்தர விடுகிறேன்.

(கூச்சல்— குழப்பம்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன

[1979 பிப்ரவரி 19

[முற்பகல் 9-50]

திரு. சி. ஆறுமுகம் : * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு இக்கட்டான நிலை வருகிறபோது பேரவைத் தலைவருக்கு உதவியாக அந்தந்தக் கட்சித் தலைவர்கள் கொஞ்சம் கட்டுப்பாடு விதித்தால் உதவிகரமாகயிருக்கும் என்றுதான் சொன்னேன். அந்த அடிப்படையில் சொன்னேனே தவிர வேறு அல்ல. நான் கூறியது உட்பட இதுபற்றி விவாதித்த அனைத்தையும் குறிப்பேட்டிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன். பத்திரிகைகளிலும் அவற்றை வெளியிடக் கூடாது.

திரு. சி. ஆறுமுகம் : * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் * * * இவற்றையும் நீக்கும்படி ஆணையிடுகிறேன்.

மோத்தக்கல் வட்டாரத்தில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்.

*வினா எண்.—95 திரு. கே.ஜே. சுப்பிரமணியம்; மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம், போளூர் தொகுதியில் பின்தங்கிய பகுதியாகிய மோத்தக்கல் அதன் வட்டாரக் கிராமங்களுக்கு சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வங்கிகள் மூலம் கடன் வழங்கும் வசதி செய்து தரும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா

மாண்புமிகு திரு. ப, குழந்தைவேலு : வினாவில் கூறியவாறு மோத்தக்கல் கிராமம் வட ஆறகாடு மாவட்டம் போளூர் தொகுதியைச் சார்ந்ததல்ல. மோத்தக்கல் செங்கம் தொகுதியைச் சார்ந்தது. மோத்தக்கல் அதன் வட்டார கிராமங்களுக்கு சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கறவை மாடுகள் வாங்குவதற்கு வங்கி மூலம் கடன் வழங்கும் வசதி செய்யப்பட்டு வருகிறது. இப்பகுதியில் சிறப்புக் கால்நடை பராமரிப்புத் திட்டத்தின் கீழ் ஆடுவாங்க உதவி அளிக்கப்படுகிறது. சிறப்புக் கால்நடைத் திட்டம் இயங்குகின்ற இடங்களில் சிறு விவசாயிகள் மேம்பாடு திட்டமும் செயல்படுமேயானால், இரண்டாவது திட்டத்தின் கீழ் ஆடு வாங்க உதவி அளிக்கக் கூடாது என்று மத்திய அரசு விதிமுறைகள் ஏற்படுத்தியுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : போளூர் வட்டத்திலுள்ள சேத்துப்பட்டு ஒன்றியம் இந்தத் திட்டத்தின்கீழ் வரவில்லை. எனவே அதையும் இந்தத் திட்டத்தின்கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமா ?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

1979 பிப்ரவரி 19]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; ஏற்கனவே வட ஆற்காடு மாவட்டத்தில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 13 ஒன்றியங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன, அதில் ஒன்று சேத்துப்பட்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ முனுசாமி : வட ஆற்காடு மாவட்டம் வந்தவாசி தொகுதியில் உள்ள மூன்று ஒன்றியங்களில் இரண்டு ஒன்றியங்கள்தான் இந்தத் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அனக்காவூர் ஒன்றியம் இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்படவில்லை. அதையும் இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : சிறு விவசாயிகள் மேம்பாட்டுத்திட்டம் வருகிற 31—3—79 உடன் முடிவடைகிற திட்டம். அதற்குப் பின்னால் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் தொடர்ந்து நடைபெறவிருக்கிறது. அந்தத் திட்டத்தின் மூலம் வேண்டுமானால் அனக்காவூர் ஒன்றியத்தைச் சேர்ப்பது. பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இந்த சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், இந்தத் திட்டங்களில் ஒதுக்கப்பட்ட மான்யங்கள் செலவு செய்யப்படாமல் இருப்பது எல்லோருக்கும் தெரியும். காரணம் சிறு விவசாயிகளுக்கு கடன் கொடுக்க கூட்டுறவு வங்கிகளோ அல்லது எந்த வங்கிகளுமோ முன்வருவதில்லை. காரணம் கியாரண்டி கொடுக்கவில்லை என்பதுதான். மத்திய சர்க்காரின் பணம் செலவழிக்கப்படாமல் எந்தத் திட்டமும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. ஆகவே பாங்குகள் கடன் கொடுப்பதற்கு தகுந்த கியாரண்டியை அரசாங்கமே கொடுத்து கடன் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப, குழந்தைவேலு : சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் 1974 முதல் 1979 வரை செயல்பட வேண்டிய ஐந்தாண்டு காலத் திட்டம். * * * * இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஒரு சிறப்பு அம்சமாக அமைய வேண்டும் என்ற எண்ணத்தோடு, மாவட்ட ஆட்சித் தலைவர்களால் கொடுக்கப்பட்ட திட்டத்தின் கீழ் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. மேலும் சிறு விவசாயிகள் பாங்குகள் மூலம் கடன் வாங்குவதற்கு சொத்துக்கள் வேண்டும் என்று சொல்லுகிறார்கள். சொத்துக்கள் இருக்கின்றவர்களுக்கு இன்று பணம் கொடுக்கிறார்கள் என்ற நிலைமை இருந்து வருகிறது. கடன்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன,

தாராளமாக வழங்கவேண்டும் என்பதற்காக வங்கி அதிகாரிகளை அழைத்து கேட்டுக் கொண்டிருக்கிறோம். எவ்வளவு தூரத்திற்கு எளிதான முறையில் கடன் கொடுத்து உதவ முடியுமோ அந்த அளவுக்குச் சீக்கிரமாக கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இந்தத் திட்டத்தின் மூலம் 50 கோடி ரூபாயை வருகின்ற 31—3—79 க்குள் செலவழித்து, அதன் மூலமாக சிறு விவசாயிகளுக்கு என்னென்ன வசதிகளைச் செய்து கொடுக்க முடியுமோ அதற்கான முயற்சிகளில் இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் கேட்க விரும்புவது கேள்வி அல்ல. உங்கள் மூலமாக அறிந்து கொள்ள விரும்புகின்ற ஒரு கருத்து. * * என்கின்ற ஒரு கருத்தை முன்பு இருந்த அரசின்மீது ஒரு குற்றச்சாட்டாக அமைச்சர் அவர்கள் சுமத்தியிருக்கிறார்கள். இது விவாதத்திற்கு உரிய ஒன்று. * * * ஆகவே முன்பு இருந்த அரசின் மீது சொல்லப்படும் குற்றச்சாட்டு அவைக்குறிப்பில் இடம் பெறலாமா என்பதைத் தான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டாக தெரிவிக்கும் வகையில் பதில்கள் இருக்கக்கூடாது. ஆகவே அமைச்சர் அவர்கள் கூறிய அந்தக் குற்றச்சாட்டான வார்த்தைகளை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்கள் பகுதியில் 11 நில வள வங்கிகள் இருந்தன. இப்போது ஒன்றே ஒன்றுதான் செயல் பட்டுக் கொண்டிருக்கிறது. இவ்விதம் ஏன் இந்தக் காலத்தில் நடைபெறுகிறது என அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூத்தகுடி சண்முகம் அவர்கள் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கேட்க வேண்டிய கேள்வி இது. விவசாயத் துறையைப் பொறுத்த கேள்வியைக் கேட்டால் பதில் சொல்லுகிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, திருவண்ணாமலை உட்பட எட்டு ஊராட்சி ஒன்றியங்களில் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்துவதாக அறிந்து, சேத்துப்பட்டில் இதை நடத்த வேண்டும் என்று அதிகாரிகளிடத்தில் கேட்கும்போது, இந்த ஒன்றியம் சேர்க்கப் படவில்லை என்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். ஆனால்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

அமைச்சர் அவர்கள் சேத்துப்பட்டு சேர்க்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள், அப்படியானால் சேத்துப்பட்டு ஒன்றியத்திலும் ஏன் இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பதில் சொல்லும்போது, வட ஆற்காடு மாவட்டத்தில் 13 ஒன்றியங்கள் இந்தத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னேன். அந்த 13 ஒன்றியங்களின் பெயரையும் நான் சொல்லுகிறேன் .. செங்கம், புதுப்பாளையம், தண்டராம்பட்டு, போளூர், கலசப்பாக்கம், சேத்துப்பட்டு, திருவண்ணாமலை, துரிஞ்சாபுரம், கீழ்பென்னாத்தூர், திருப்பத்தூர், கந்திரி, நாட்ராம்பாளையம், ஆலங்காயம்.

திரு. டி. ஆர். இராஜாராம் ரெட்டி : பேரவைத் தலைவர் அவர்களே, எஸ். எப். டி. எ., ஐ. ஆர். டி. பி. எ. இந்தத் திட்டங்களில் முக்கியமாக தென் ஆற்காடு மாவட்டத்தில் ஐ. ஆர். டி. பி. எ. திட்டத்தின் கீழ் ஒரு பைசா கூட செலவு செய்திருப்பதாக தெரியவில்லை. வங்கிகளில் கடன் வாங்குவதற்கு இருக்கின்ற கஷ்டங்கள்தான் இதற்கெல்லாம் காரணம். மேலும் மாடுகள் வாங்க வேண்டும் என்று கேட்கும்போது, கோயம் புத்தூரில் குறிப்பிட்ட சதீஷ் கம்பெனி என்னும் ஒரு கம்பெனியில் தான் வாங்க வேண்டும், அப்போதுதான் மாட்டின் விலைக்கு 3000 என்றால், அதில் 1000 ரூபாய் உதவி பெறமுடியும் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, மாடுகளை எங்கு வாங்கினாலும் இந்த உதவித்தொகை கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? உடனடியாக இதற்கான நடவடிக்கை எடுக்கப் படுமா?

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கின்றேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட இடத்தில் மாடுகள் வாங்க வேண்டுமென்று இந்த அரசு நிர்ணயிக்கவில்லை. ஆனாலும், மாடுகளைப் பொறுத்த அளவிலே நம்முடைய தமிழகத்திலே இருக்கக் கூடிய மாடுகள் சாதாரணமானவை. எனவே, சிறந்த கறவை மாடுகளை தமிழகத்திலே உள்ள சிறு விவசாயிகளுக்கு வாங்கிக் கொடுப்பதன் மூலம், அவர்கள் அதிலே பாலைக் கறந்து, சொஸைட்டிகளுக்கு அனுப்பி அவர்கள் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் இந்த நல்ல திட்டத்தை நாங்கள் அமுல்படுத்திக் கொண்டிருக்கிறோம், மேலும், உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய அளவிலே

தமிழகத்திலே இருக்கக்கூடிய சந்தைகளிலே எங்கெங்கே நல்ல மாடுகள் வாங்குவதற்கு வசதிகள் இருக்கின்றதோ, அப்படி வாங்கி சிறு விவசாயிகளுக்கு கொடுப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாடுகள் வாங்கிக் கொடுக்க போதுமான நிதி இல்லை என்று சொல்லப் படுகிறது. எனவே, இதற்காக அதிக நிதி ஒதுக்கி, நீலகிரி மாவட்டத்தை முன்னேற்றுவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அது ஒரு மலைப் பிரதேசம். 'ஹில் ஏரியா டெவலெப்மென்ட் ஸ்கீம்' என்று ஒன்றிருக்கிறது. அதன் மூலம் உதவுவது பற்றி இந்த அரசு பரிசிலனை செய்து, அதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக சிறு விவசாயத் தொழிலாளிகளுக்கு உதவி செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனாலும், இந்த சிறு விவசாயத் தொழிலாளிகள் ஆடுகள் வாங்குவதற்கு, மாடுகள் வாங்குவதற்கு, அவர்கள் கடன் பெறுவதற்கு அதுவும் கூட்டுறவு வங்கிகளிலும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலும் கடன் வாங்குவதற்கு என்னஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் இல்லாத இடங்களில், சிறப்புக் கால்நடைத் திட்டம் என்று ஒன்றிருக் கிறது. அந்த சிறப்பு கால்நடைத் திட்டத்தின் மூலம் செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் வாங்கிக் கொடுக்கப்படுகின்றன. ஏழை எளிய நிலமில்லாத, குறுநில விவசாயிகளுக்கு இந்தத் திட்டம் பேருதவியாக இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், வங்கிகளில் கடன் பெற வேண்டுமென்றால், யாராவது ஒருவர் கியாரண்டி கொடுக்கவேண்டும். ஏறத்தாழ ரூ. 3,000 அவர்களுக்கு கடன் கொடுக்கப்பட்டு வருகின்றது. அதையும்கூட இந்த தேசிய வங்கிகளில் எளிய முறையில் சீரியமுறையில், அதே நேரத்தில் எவ்வளவுசீக்கிரமாகக் கொடுக்கமுடியுமோ அவ்வளவு சீக்கிரமாகக் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

வெள்ளாற்றுப் பாலம்.

*வினா எண் 96:—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் வட்டத்தில் உள்ள சேத்தியாதோப்பு வெள்ளாற்றின் பாலத்தை சீர்திருத்தம் செய்யும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

இல்லை.

திரு. துரை கலியமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் வட்டத்தில், சேத்தியாதோப்பில் கட்டப்பட்ட இந்த பாலமானது ஏறக்குறைய 100 ஆண்டுகளுக்கு மேலாகிறது. இது போக்குவரத்து வசதிக்காக மட்டும் கட்டப்பட்டது அல்ல. வெள்ளாற்றில் தண்ணீர் அதிகம் வரும்போது அத்தண்ணீரைத் தேக்குவதற்காகவும் கட்டப்பட்டது. வெள்ளக் காலத்திலே பஸ்களும், பேருந்துகளும், இதர வண்டிகளும் செல்லும்போது அது அபாயகரமான நிலையில் உள்ளது. அது முக்கியமாக நெய்வேலி, பண்ருட்டி வழியாக கும்பகோணம், தஞ்சை போன்ற ஊர்களை இணைக்கின்றது. ஆகவே, இதை உடனடியாக விரிவு படுத்தி, நல்ல நிலையில் அமைக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் 1855 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும். இது வெள்ளாற்றின் குறுக்கே அமைந்திருக்கிறது. சேத்தியாதோப்பு அணைக்கட்டிலே 17 கண்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கண்ணின் அகலமும் 30 அடி. இந்தப் பாலத்தின் அகலம் 13½ அடி. இது சாலைப் போக்குவரத்துக்கு முக்கியமான இடமாக இருக்கின்றது என்று அரசுக்கு மனுக்கள் வந்திருக் கின்றன. எனவே, சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இந்த அரசு இந்தத் திட்டத்தைச் சேர்த்து, இப்போது ஆய்வில் இருந்து வருகிறது. இது 41 லட்சரூபாய் செலவில் செப்பனிடப்பட இருக்கின்றது, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இதற்கான நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் தஞ்சை மாவட்டத்தின் பெரும் பகுதி மக்கள் சென்னை செல்வதற்கு உரிய பாலமாக அமைந்திருக்கின்றது. எனவே, இந்தப் பாலத்தைஅகலப்படுத்த முடியவில்லை என்றால், அதற்கு அருகில் ஒரு பெரிய பாலத்தை அமைத்து, சென்னை,

தஞ்சை மாவட்டத்தை இணைக்கக்கூடிய வகையில் ஒரு திட்டத்தை உடனடியாகச் செய்வதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : மூலக் கேள்விக்கு நேரடியாக தொடர்பு இல்லாவிட்டாலும் சிதம்பரத்திற்கு அருகில் வெள்ளாற்றின் குறுக்கே சிதம்பரம் முட்டலூர், புவனகிரி முட்டலூர் இரு பகுதிகளையும் இணைக்கின்ற பாலம் பல்லாண்டுக்கு முன்பே இடிந்து விட்டது. அந்தப் பாலத்தை மறுபடியும் கட்டி அதை இணைக்கவேண்டுமென்ற கோரிக்கை பல்லாண்டு காலமாக அப்பகுதி மக்களால் வைக்கப்பட்டு வருகிறது. அந்தப் பாலம் கிழக்குக் கடற்கரைச் சாலையில் சேர்க்கப்பட்டிருப்பதாக முன்பு சொல்லப்பட்டது. அந்தப் பாலத்தை வெள்ளாற்றின் குறுக்கே அமைக்க அரசு தற்போது என்ன நடவடிக்கையை எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அரிய யோசனையை ஏற்கனவே இருந்த அரசு காலத்தில் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். இதையெல்லாம் பற்றி அரசு பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : ஏற்கனவே இருந்த அரசிடம் சொல்லியிருந்தால் என்று அமைச்சர் அவர்கள் சொல்வது எப்படி சரியாகும்? அருள்கூர்ந்து உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே ஒரு கேள்விக்கு அமைச்சர் இவ்வாறு பதில் சொன்ன போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் காட்டி அது நீக்கப்பட்டது. இப்போது மறுபடியும் அந்த முறையில் பதில் சொல்லுகிறார்கள். இந்த அரசு செய்யுமா செய்யாதா என்று பதில் சொல்லுவதுதான் முறையாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முன்னாலே சொன்னது 'செய்யவில்லை' என்று நேரடியாகச் சொன்ன குற்றச்சாட்டு. இப்போது முன்னாலேயே சொல்லியிருக்கலாமே என்ற ஒரு யோசனையாகத்தான் சொன்னார்களே தவிர குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. அதைத் தவறாக எடுத்துக் கொள்வது நியாயமில்லை.

திரு. துரை முத்துசாமி : வெள்ளாற்றின் குறுக்கே உள்ள அந்தப் பாலத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று பலரும் கேட்டார்கள். அங்கு ஒரு பாலம் 41 லட்சம் ரூபாய் செலவில் கட்டும் நிலைமை இருக்கிறதா? அமைச்சர் அவர்களே அந்த

வழியாகச் சென்றிருக்கக் கூடும். ஒரு வண்டி போனால் மறு வண்டி போக முடியாது. நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியிருக்கும். ஆகவே, உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இந்தக் கேள்வியைத் தனிக் கேள்வியாக போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு எழுதிக் கேட்டால் அவர்கள் காலத்தை நிர்ணயித்து பதில் சொல்லுவார்கள்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது இந்தப் பாலம் 1855 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி துவங்குவதற்கு முன்னாலே கட்டப்பட்டதாகச் சொன்னார்கள். தமிழகத்தில் அந்தமாதிரி பல பாலங்கள் இருக்கின்றன. நீடாமங்கலத்தில் அப்படிப்பட்ட ஒரு பாலம் பாமினி ஆற்றின் குறுக்கே உள்ளது இடிந்து கிடக்கிறது. இப்படி பல இடங்களில் இருக்கின்றன. நீண்ட காலத்திற்கு முன்னாலே கட்டப்பட்ட இப்படிப்பட்ட பாலங்களை எல்லாம் ஆராய்ந்து அனைத்தையும் புதுப்பிக்க அரசு தீவிர சிறப்புத் திட்டத்தை மேற்கொண்டு செயல்படுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் மூலக் கேள்விக்கான பதிலிலேயே விளக்கமாகப் பதில் சொல்லியிருக்கிறேன். வெள்ளாற்றின் குறுக்கே அமைந்துள்ள சேத்தியாத்தோப்பு அணைக்கட்டுப் பாலத்தைப் பற்றிச் சொன்னார்கள். இது நீர்ப் பாசனத்திற்காக ஏற்படுத்தப்பட்ட பாலம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் கேட்கிற கேள்வி சாலை அபிவிருத்தித் துறையிடம் கேட்க வேண்டிய கேள்வி என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நொய்யல் ஆற்றின் குறுக்கே அணை.

*வினா என். 97—திரு. கு. வடிவேல் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் தாலுகாவில் உள்ள நொய்யல் ஆற்றின் குறுக்கே அணை கட்டும் உத்தேசம் ஏதாவது அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படும்?

(இ) இத்திட்டத்தின்கீழ் எத்தனை ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் தற்போது ஆய்வில் உள்ளது. ஆய்வுப் பணிகள் 1979-ம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முடிவடையலாம். ஆய்வுக்குப்பின் இத்திட்டம் பயனுள்ளதாக இருக்கும் என்று கண்டறிந்தால் திட்டம் செயலாக்கப்படும்.

(இ) இத்திட்டத்தின்கீழ் கரூர் தாலுகாவில் ஏறத்தாழ பத்தாயிரம் ஏக்கர் நிலம் பயனடையலாம்.

திரு. கே. சௌந்திரராசன் : கரூர் பகுதியில் நொய்யலாற்றின் குறுக்கே அணை கட்ட வேண்டுமென்று கோரிக்கை எவ்வளவு காலமாக இருந்து வருகிறது? இந்தக் கோரிக்கை இவ்வளவு காலமாக கிடப்பில் கிடந்ததன் காரணம் என்ன? இந்தத் திட்டத்தை நிறைவேற்ற இந்த அரசுக்கு எவ்வளவு செலவு ஏற்படும்?

(முற்பகல் 10.10)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நொய்யலாற்றின் குறுக்கே கரூர் தாலுக்காவில் சின்னமுத்தூர் அருகே ஒரு ஒழுங்கியக்கியும் (ரெகுலேட்டர்), ஆத்துப்பாளையம் அருகே தனியே ஒரு நீர்த்தேக்கமும் கட்டி, நொய்யலாற்றின் தண்ணீரை ஒழுங்கியக்கிலிருந்து 12 கி, மீ. நீளமுள்ள தனி வாய்க்கால் மூலம் நீர்த்தேக்கத்திற்குக் கொண்டுசென்று அங்கிருந்து 30 கி. மீ. நீளமுள்ள கால்வாய் மூலம் சுமார் 10,000 ஏக்கர் பாசனம் பெற பூர்வாங்க ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தைச் செயலாக்க ஏறத்தாழ 6 கோடி ரூபாய் செலவாகலாம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இன்னும் இந்தத் திட்டம் ஆய்விலே இருக்கிறது. திட்டத்தைப் பொறுத்தவரையில் நொய்யலாற்றின் குறுக்கே அணை கட்டவேண்டுமென்று அந்த விவசாயப் பெருங்குடி மக்கள் பல ஆண்டுகளாகக் கோரிக்கை விட்டுக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால் இந்த அரசு அமைந்ததற்குப் பிறகுதான் அந்தக் கோரிக்கை பரிசீலனை செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சதாசிவம் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் 1957-ம் ஆண்டிலிருந்தே இந்த மாமன்றத்திலே இருக்கும் அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். ஆனால் இப்போது அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது இந்தத் திட்டம் ஆய்வில் இருக்கிறது என்று சொன்னார்கள். இந்தத் திட்டம் மிக நல்ல திட்டம், முன்பே பரிசீலனையில் இருந்தது என்று சொல்லப்படுகிறது. அந்தத் தகவலைக் கொண்டு இந்த ஆண்டிலேயே இந்தத் தொடர் கூட்டத்திலே ஒரு சிறிய நிதியை அதற்காக ஒதுக்கீடு செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆய்வுப் பணிகளைப் பொறுத்தவரையில் அவைகள் மார்ச் மாதம் கடைசிக்குள் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அது முடிந்ததற்குப் பின்னாலே அது சரியான திட்டமா, நல்ல திட்டமா, விவசாயிகளுக்குப் பலன் அளிக்கக்கூடிய திட்டமா என்பதை அந்த தகவல்களைக் கொண்டு இந்தத் திட்டம் பற்றி முடிவு செய்ய வேண்டியிருக்கிறது.

வட ஆற்காடு மாவட்டத்தில் யானைக்கால் வியாதித்தடுப்பு.

*வினா எண் 98:—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் யானைக்கால் வியாதி அதிகமாக பரவி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: (அ) வட ஆற்காடு மாவட்டம் யானைக்கால் வியாதி அதிகமாகப் பரவும் வாய்ப்பு உள்ள பகுதியாகும்.

(ஆ) வட ஆற்காடு மாவட்டத்தில், வேலூர், இராணிப்பேட்டை, வந்தவாசி, செய்யாறு, காவேரிப்பாக்கம், சத்துவாச்சேரி, பள்ளிக்கொண்டா ஆகிய இடங்களில் தேசிய யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2. அரக்கோணம், ஆரணி, குடியாத்தம், திருவண்ணாமலை, வாணியம்பாடி, போளூர், வாலாஜாப்பேட்டை, காந்தி நகர், திருவத்திபுரம் ஆகிய உள்ளாட்சிகளில் விரிவான ஆய்வு செய்யப்பட்டு, நோயின் விகிதம் கண்டறியப்பட்டு சம்பந்தப்பட்ட நகராட்சிகளும், பேரூராட்சிகளும் யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டத்தின்கீழ் தடுப்பு நடவடிக்கைகளை செயற்படுத்தி வருகின்றன.

3. இம்மாவட்டத்தில், நெமிலி பேரூராட்சி, காங்கேய நல்லூர், சேத்துப்பட்டு ஆகிய இடங்களிலும் மக்கள் நல்வாழ்வுத் துறை தடுப்பு மருந்துத்துறை இயக்குநரால் விரிவான கணிப்பு செய்யப்பட்டு அதன்படி அங்கு யானைக்கால் நோய் பரவியுள்ளதாக அறியப்பட்டு, அதற்கான தடுப்பு நடவடிக்கை திட்டங்கள் தீட்டப்பட்டு அப்பேரூராட்சிகளின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், ஆம்பூர், திருப்பத்தூர், பேரணாம்பட்டு, தாரப்படவேடு ஆகிய இடங்களில் கொசுத் தொல்லை பரவியிருப்பதால் இந்நோயை கட்டுப்படுத்த கொசுத் தடுப்பு நடவடிக்கைகள், சம்பந்தப்பட்ட நகராட்சியினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் விரிவுரையாளர்கள் பதவிகள்.

*வினா எண் 99—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் அனைத்துத் துறைக்கும் விரிவுரையாளர்கள் உள்ளார்களா?

(ஆ) சில துறைகளுக்கு இல்லையெனில் உடன் பூர்த்தி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) உள்ளனர்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

இராணுவப் பணியிலிருந்து திரும்பும் மருத்துவர்கள்.

*வினா எண் 100—திரு. என். கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராணுவத்தில் பணியாற்றி விட்டு திரும்பிய டாக்டர்களை வேலையில் அமர்த்துவதில் அரசு முன்னுரிமை கொடுக்கிறதா?

(ஆ) அவர்களுக்குக் கொடுக்கப்படும் மற்ற சலுகைகளின் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: (அ) ஆம்.

(ஆ) (1) ஐந்து வருடம் இராணுவத்தில் சேவை செய்துவிட்டு திரும்பும் மருத்துவப் பட்டதாரிகளுக்கு தற்காலிக உதவி அறுவை மருத்துவர் நியமனத்தில் முன்னுரிமை தரப்படுகிறது.

(2) ஆண்டுதோறும் ஏற்படும் உதவி அறுவை மருத்துவர்களின் நிரந்தரப் பணியிடங்களில் ஐந்து சதவீதம் இராணுவத்தில் பணிபுரிந்து திரும்பியவர்களுக்கும் ஒதுக்கப்படுகிறது; இதன் மூலம் இவர்கள் தேர்வு ஆணைக் குழுவால் முறையான உதவி அறுவை மருத்துவர்களாக நியமிக்கப்படத் தேர்ந்தெடுக்கப்படுவதில் சலுகை காட்டப்படுகிறது.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவர் அவர்களே, இராணுவத்திலிருந்து திரும்பிய மருத்துவர்களுக்கு உதவி அளிப்பதைப் போலவே வெளிநாடுகளுக்குச் சென்று பட்டம்பெற்று அல்லது அங்கே பல ஆண்டுகள் பணியாற்றிவிட்டுத் தாயகம் திரும்புகின்ற மருத்துவர்களுக்கும் அதுபோன்ற சலுகைகள் அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

கல்லூரி ஆசிரியர்களது மறியல் குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன் சார், அரசு கல்லூரி ஆசிரியர்கள் இன்றையதினம் மறியலில் ஈடுபட்டுள்ளதாக தெரிகிறது. அது சம்பந்தமாக நான் அவசரமாக விவாதிக்க வேண்டுமென்று தங்களிடம் அவசரத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதைத் தாங்கள் அவசரம் என்று கருதுகிறீர்களா என்று தெரியவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, கல்லூரி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் சம்பந்தமாக விதி 42-ன் கீழ் தீர்மானம் ஒன்றைக் கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் கூறிய அந்தப் பிரச்னையை ஒட்டியதா அல்லது வேறு பிரச்னையா?

திரு. ஜே. ஜேம்ஸ் : கல்லூரி ஆசிரியர்கள் இன்றுமுதல் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். ஆகவே, அதுசம்பந்தமாக......

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இதே விஷயம் குறித்து நானும் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்தேன். அதை மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானமாக மாற்றியிருக்கிறார்கள். கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதிலாக ஒத்தி வைப்புத் தீர்மானமாகக் கொடுத்தால் உதவியாக இருக்குமென்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதே பிரச்சனைதானே

திரு. கோ. இளங்கோவன் : வேறு பிரச்சனை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு நான் பதில் சொல்லிவிடுகிறேன். இந்தப் பிரச்னை பற்றி விதி 41—ஆக மாற்றியிருப்பதை அனைவருக்கும் தெரிவித்திருக்கிறார்கள். அறிவ் அறிக்கை வந்தவுடன் உடனடியாக இந்த அவையிலே எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, இதே பிரச்னை மேலவையில் எழுப்பப்பட்டு, ஒத்தி வைப்புத் தீர்மானமாக அனுமதிக்கப்பட்டு அமைச்சரும் பதில் தந்திருக்கிறார்கள். எனவே புதிதாகத் தகவல் தேட வேண்டிய அவசியமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அமருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : மேலவையிலே இதே பிரச்னை குறித்த தகவலை வைத்திருக்கிறார்கள். எனவே, பிரச்னை இருக்காது.

திரு. துரை முருகன் : வீட்டிலே வைத்து விட்டு வந்திருப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது விளையாட்டுப் பேச்சாக அமையக் கூடாது.

திரு. துரை முருகன் : நான் பேசாமல் உட்கார்ந்திருக்கிறேன், துரைமுருகனும் கொடுத்திருக்கிறார்கள் என்று ரெக்கார்ட் செய்ய வேண்டும் அல்லவா? பெயரைச் சொல்லலாம் அல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தத் தீர்மானம் மேசை மீது இப்பொழுது இல்லை. அந்தப் பிரச்னையை எடுத்துக் கொண்டிருந்து, அப்பொழுது துரைமுருகனின் பெயரைப் படிக்காமல் இருந்திருந்தால் அவர்கள் கேட்பது நியாயம். ஆனால் வீட்டில் வைத்து விட்டு வந்திருப்பார்கள் என்றெல்லாம் சொன்னால் உங்கள் தலைவரும் கட்டுப்படுத்துவதாகத் தெரியவில்லை, நான் கட்டுப்படுத்தினாலும் கட்டுப்படப்போவதில்லை, என்ன செய்வது?

திரு. மு. கருணாநிதி தலைவரவர்களே, தங்களுக்கும் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையிலே உள்ள தகராறு உண்மையிலேயே கோபத்தின் அடிப்படையில் இருந்தால் தலையிடலாம். ஆனால் இரண்டு பேருமே சிரித்துக்கொண்டே வார்த்தைகளைப் பரிமாறிக்கொள்கிறீர்கள், இதில் நான் தலையிட்டால் எனக்கு ஆபத்து வரும் என்று எண்ணுகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும் தங்களுக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள். தங்களுக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் என்று சொன்னால் சரியாக இருக்கும்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தலைவரவர்களே, தங்களது மேலான கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன். இரண்டு சபைகளும் அருகருகே நடக்கின்றன. ஒரு இடத்தில் முருகையன் கொலை சம்பந்தமாக ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வரப்படுவதும், இங்கே வேண்டாமென்றும், அதேபோல ஒத்தி வைப்புத் தீர்மானத்தை அங்கே அனுமதிப்பதும், இங்கே வேண்டாமென்பதும் எந்த அளவிற்கு இந்த அவையிலே தலைவரைப்பற்றிய எண்ணங்களை ஏற்படுத்தும் என்பதைப்பற்றித் தயவு செய்து எண்ணிப்பார்த்து, அப்படிப்பட்ட நிகழ்ச்சி ஏற்படாமல் பார்த்துக்கொள்வது தலைவரின் கடமை என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கூத்தக்குடி சண்முகம் அவர்கள் சொல்கிறார்கள், ஆனால் அந்த அவையிலே நடப்பதில் நாம் தலையிட உரிமையில்லை. இந்த அவையிலே என்ன நடக்கிறது என்பதில் அவர்கள் தலையிடவும் உரிமையில்லை. அங்கே என்ன எடுத்துக்கொண்டிருக்கிறார்கள், எடுத்துக்கொள்ளவில்லை என்பதைப்பற்றி இங்கே ஆராய்வதற்கு நமக்கு இடமில்லை, அவர்கள் எடுத்துக்கொண்டதைச் சுட்டிக்காட்டலாமே தவிர அங்கே எடுத்துக்கொண்டவைகளை இங்கே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்திக்கக்கூடாது.

திரு. சி. ஆறுமுகம் : இரண்டுக்கும் ஒரே அமைச்சர்தானே தகவலைத் தருகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் தலைவர் முன் வரிசையில் இருக்கிறார். நீங்கள் அமருங்கள்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களைக் காண்பித்தே எங்களை தள்ளுகிறீர்கள்.

திரு. துரை முருகன் : எப்படியோ எங்கள் தலைவரால் நீங்கள் சபையை நடத்துகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் தலைவரால் நடத்துகிறேன் என்பது அல்ல; உங்கள் தலைவர்களே உட்கார்ந்து கொண்டு என்ன நடக்கிறது என்று பார்க்கிறார்கள்.

திரு. துரை முருகன் : எப்படியோ தலைவர்களைப் பற்றிச் சொன்னதற்குச் சந்தோஷம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வேறு என்ன செய்வது? வேறு ஏதாவது செய்ய வேண்டுமா? வேறு ஏதாவது செய்யச் சொல்கிறீர்களா?

<u>திரு. கூத்தக்குடி ச. சண்முகம் :</u> தலைவரவர்களே, கட்டாயம் இல்லை என்பதை நான் அறிவேன். அங்கே எடுத்துக் கொள்ளப்பட்டவைகள் இங்கே எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய அவசியமில்லை என்பதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் ஏக காலத்திலே பத்திரிகைகளில் இரண்டும் வரும்பொழுது, ஒரு அவையில் அனுமதிக்கப்பட்டும், இன்னொரு அவையில் அனுமதி யில்லை என்ற எண்ணம் ஏற்பட்டால் என்ன ஏற்படும் என்பதை உங்களுக்குச் சொன்னேனே தவிர வேறொன்றுமில்லை.

(முற்பகல் 10-20)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நான் அனுமதிப்பது இல்லை என்று சொல்லவில்லை. அதை ஒப்பிட்டுச் சொல்ல வேண்டாம். நீங்கள் உங்கள் உரிமைகளைக் கட்டாயப்படுத்துங்கள் கொண்டுவரவேண்டுமென்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவாருங்கள். நான் அதை சுட்டிக் காட்டி முடியாது என்று சொல்லவில்லை.

<u>திரு. செ. சிவசாமி:</u> பாயிண்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே கேள்வி நேரத்தின்பொழுது 100-வது கேள்வியை முதலிலே எடுத்துக்கொண்டு 81-வது கேள்வியைப் பின்னால் எடுத்திருப்பதன் காரணம் என்ன? ஏதாவது பாரபட்சமா?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அது 100-அ & ஆ. அக் கேள்விகள் முதலமைச்சருடையதாக இருந்ததால் முதலிலே எடுத்துக்கொண்டேனே தவிர 100-ஐ முதலிலே எடுத்துக் கொண்டு 81-ஐ கடைசியிலே எடுத்துக்கொண்டு போவது என்று இல்லை.

<u>திரு. க. சுப்பு :</u> ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வரப் போகிறோம் என்று சொன்னபோது, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதாக இருப்பதால், ஒத்தி வைப்புத் தீர்மானத்தை கொண்டு வர முடியாது என்று தாங்கள் அறையிலே சொன்னீர் களே, அதே காரணத்தை இங்கே சொல்வதிலே என்ன கஷ்டம் இருக்கிறது?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> உறுப்பினர் எனக்கு உதவிகரமாக இருக்கிறாரா என அறிய விரும்புகிறேன். அதை எடுத்துக்கொள்ள வேண்டாம். அறையிலே சொன்ன வார்த்தை களை இங்கே எடுத்துச் சொல்லுங்கள் என்று சுப்பு அவர்கள் சொல்வதற்கு நன்றி. இது அவ்வளவு முக்கியமானது, ஆகவே எடுத்துக் கொள்ளவேண்டுமென்று எல்லா உறுப்பினர்களும்

சொல்வதாலேதான் எடுத்துக்கொள்கிறேன். ஆகவே, இதை கவன ஈர்ப்பு தீர்மானமாக எடுத்து அமைச்சரவர்கள் இப் பொழுதே பதில் சொல்வார்கள்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> தலைவரவர்களே, இந்தப் பிரச்னை சம்பந்தமாக விதி 42-ன் கீழ் தங்களிடம் பலர் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். 41-ன் கீழும் தீர்மானம் கொடுக்கப் பட்டிருக்கிறது. இரண்டு தீர்மானங்களிலே 42-க்கு முக்கியத்துவம் கொடுத்து 42-ஐ எடுத்துக் கொள்ளவேண்டுமே தவிர 41-ஐ எடுத்துக்கொள்வது முறையாகாது. ஆகவே, 42-ஐ எடுத்துக் கொண்டு..............

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> தயவுசெய்து உட்காருங்கள். தலைவா, நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகிறபொழுதோ, நிதிநிலை அறிக்கை பொது விவாதத்தின்பொழுதோ, ஆளுநர் உரைமீதான பொது விவாதத்தின்பொழுதோ, ஒத்தி வைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் உட்பட எடுத்துக் கொள்வதில்லை. இந்த விவாதங்களின்போது, பல கருத்துக்களைப் பேச வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்தாலே, ஒத்தி வைப்புத் தீர்மானங்களைத் தள்ளி விடுவது மரபாக இருக்கிறது. ஆனால் உறுப்பினர்கள் உடனடியாகக் கவனம் செலுத்தவேண்டும், அதன் மீது விவாதித்து, அரசுத் தரப்பிலேயிருந்து ஏதாவது செய்திகள் பெறவேண்டுமென்று கேட்ட காரணத்தாலேதான் இதை ஏற்றுக் கொள்கிறேன். இந்தப் பொருள்கள் பற்றிப் பேச நம்பிக்கை யில்லா தீர்மானத்திலே வாய்ப்பிருக்குப்போது, இன்றைக்கும், நாளைக்கும் நாளை மறுதினத்திலும் ஒத்தி வைப்புத் தீர்மானங் கள், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ள வாய்ப்பே கிடையாது, இருந்தாலும் அவையினுடைய கவனத்திற்கு வர வேண்டுமென்பதற்காகவும், தேவைப்படுகிற செய்திகள் உடனடி யாக கிடைக்கும் என்பதாலும், அனுமதிக்கிறேனே தவிர, இன்றிருக்கிற நிகழ்ச்சிகளின்படி நான் அனுமதிக்க முடியாது. இருந்தாலும் பொதுமுக்கியத்துவம் வாய்ந்ததாலே அனுமதிக் கிறேன்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> தங்களுடைய அனுமதி அளிக்கும் அதிகாரத்திற்குள் நான் தலையிட விரும்பவில்லை. ஆனால் இருக்கிற பிரச்சினை என்னவென்றால், ஒரே பொருள்பற்றி 41, 42 விதிகளின் கீழ் தீர்மானமிருக்கிறது. இரண்டிலும் 42-வது விதியின்கீழ் இருப்பதுதான் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். ஆகவே, இருப்பதில் 42-க்கு முக்கியத்துவம் கொடுத்து எடுக்கவேண்டும் தவிர, அதே பொருள்பற்றி 41-வது விதியின் கீழ் கொடுத்திருப்பதை எடுப்பது விதிமுறைகளுக்கு முரணானது, அது முறையாகாது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நான் சொல்வதிலேயே அது அடங்கிவிட்டது. இரண்டையும் எடுக்கமாட்டேன். நம்பிக்கையில்லா தீர்மானம் இருப்பதாலே நான் எடுக்க வேண்டிய

அவசியம் இல்லை. ஒத்தி வைப்புத் தீர்மானத்தை, நம்பிக்கையில்லா தீர்மானம் வரும்போது ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை இல்லை. ஆனால், இப்பொழுது இந்த அவைக்குத் தேவை என்று கருதி நானாக அனுமதித்திருக்கிறேன். ஆகவே, இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்புகள்.

(அ) கல்லூரி ஆசிரியர்களது மறியல் குறித்து.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: ''மாநிலம் பூராவும் உள்ள கல்லூரி ஆசிரியர்கள் பணிபாதுகாப்பிற்கு அரசு ஏற்பாடு செய்யுமாறு கோரி 20-2-1979முதல் காலவரையற்ற வேலை நிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்து உள்ளதால் மக்களிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து'' என்ற கவன ஈர்ப்புத் தீர்மானத்தை திரு.பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. ஆர். கிருஷ்ணன், திரு. டி. ஞானசிகாமணி, திரு. கு.ராமனி, திரு. ரா. உமாநாத், திரு. கோ. இளங்கோவன், திரு. பொ. விஜயராகவன், திரு. ஜே. ஜேம்ஸ், திரு. துரை முருகன், திரு. க. சுப்பு, திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா, திரு. அ. ரகுமான்கான் ஆகியோர் தந்திருக்கிறார்கள்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, நான் இந்தப் பிரச்னை குறித்து 42-வது விதியின் கீழ் தீர்மானம் முந்தாநாளே கொடுத்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் 42-வது விதியின் கீழ் கொடுத்த தீர்மானம் தள்ளப்பட்டு விட்டது. இந்தப் பொருள் குறித்து 41-வது விதியின் கீழ் எடுத்துக்கொள்ளப் பெறுகிறபோது உங்கள் பெயர் இல்லை.

திரு. மு. அம்பிகாபதி: முதன் முதலில் நான் தான் 42-வது விதியின் கீழ் கொடுத்தேன். என் தீர்மானத்தை தள்ளிவிட்டு அதை இப்போது 41—விதியின் கீழ் எடுத்துக்கொள்கிறீர்கள். இது சரியா? என் பெயரையும் சேர்த்துக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, திரு. அம்பிகாபதி உங்கள் பெயரையும் சேர்த்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, மாநிலம் பூராவும் உள்ள கல்லூரி ஆசிரியர்கள் பணிபாதுகாப்பிற்கு அரசு ஏற்பாடு செய்யுமாறு கோரி 20.2.79 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்துள்ளதால் மக்களிடையே எழுந்துள்ள பதட்டநிலை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வியமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; பேரவைத் தலைவரவர்களே, கல்லூரி ஆசிரியர்கள் தங்கள் கோரிக்கைகளை எழுப்பி போராட்டம் நடத்த உத்தேசித்து இருக்கும் நேரத்தில் அரசு இதுகாறும் இக்கோரிக்கைகள் மீது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைக் குறிப்பிடவேண்டியிருக்கிறது. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் கல்லூரி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்ட உறுதிமொழிகள் ஒவ்வொன்றின் மீதும், அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. பலவற்றின் மீது தக்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு விட்டன. ஆக ஆசிரியர்கள் நலனிலும், மாணவர் நலனிலும், கல்வித் தரம் உயரவேண்டும் என்ற நோக்கத்திலும் அரசுக்குப் பெரும் அக்கறை உண்டு. ஆசிரியர்கள் கோரிக்கை மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை விவரங்கள்;

கல்லூரிக் கல்வித் துறையின் வரலாற்றிலேயே இதற்குமுன் எப்போதும் இல்லாத அளவில் கல்லூரி ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாதகல்லூரி அலுவலர்களுக்கும் பல்வேறு சலுகைகள் இப்போது அளிக்கப்பட்டன.

எடுத்துக்காட்டாக—

(1) பல்கலைக் கழகப் பண உதவிக் குழுவின் பரிந்துரைகளின்படி சம்பள விகிதங்கள் 8,500-க்கு மேலாக உள்ள தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும், 4,000—க்கு மேலாக உள்ள அரசு கல்லூரி ஆசிரியர்களுக்கும் 1-1-77 முதல் செயல்படுத்தப்பட்டுள்ளன.

(2) 31—3—77 அன்று பணியில் இருந்த கல்லூரி ஆசிரியர்களுக்கான பணிப்பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது (அரசு ஆணை எண் 871, கல்வி, நாள் 12·5·78).

(3) மாணவர் எண்ணிக்கை 20-க்கும் குறைவாக உள்ள பாட வகுப்புகளுக்கும் அரசு கொடை கணக்கிடப்பட்டுள்ளது.

(4) 1977 ஜூன் மாதம் முதல் கல்லூரி ஆசிரியர் அனைவருக்கும் 100 விழுக்காடு சம்பளம் அனுமதிக்கப்படுகிறது.

(5) ஒவ்வொரு மாதமும் தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் ஒழுங்காகவும், முழுமையாகவும் சம்பளம் வழங்கப் போதுமான அளவு பணம் இருக்கும் வகையில், கல்லூரி நிர்வாகத்தினருக்கு ஆண்டுக்கு எட்டு முறைக்கும் மேல் அரசு உதவிக் கொடை வழங்கப்படுகிறது.

(6) நாகர்கோவில், பயோனியர் குமாரசாமி கல்லூரி செயல்படுவதில் பல சிக்கல்கள் ஏற்பட்டு, ஆசிரியர்களும் மாணவர்களும் சங்கடங்களுக்கு ஆளாகி ஒரு இக்கட்டான நிலை உருவாகியது. தற்காலிகமாக அக்கல்லூரி நிர்வாகத்தை, அரசு மேற்கொள்ள சில சட்டப் பிரச்னைகள் எழுந்தன. நீதிமன்றம் இப்பிரச்சினைப் பற்றிய வழக்கில் தீர்ப்பு கூறிய சில மணி நேரத்திற்குள்ளாக அரசு தற்காலிக நிர்வாகத்தை 1-12-78—இல் ஏற்றுக்கொண்டது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1979 பிப்ரவரி 19

(7) மேலநீலிதநல்லூர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நினைவுக் கல்லூரியிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்டு, வேலையின்றி வறுமையால் வாடிநின்ற பத்து ஆசிரியர்களுக்கு அரசு நிர்வாகத்திலுள்ள கல்லூரிகளில் வேலை தர உறுதி யளித்த ஒரு வாரத்திற்குள்ளாக அந்த பத்து ஆசிரியர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது.

(8) தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு அரசு பணிப்பாதுகாப்பு அளித்த பின்னரும், அரசாணைக்குப் புறம்பாக சில நிர்வாகங்கள் சில ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்த தகவல் அரசுக்குக் கிடைத்தவுடன், அரசு அந்த ஆசிரியர்களை மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ளுமாறு உடனுத்தரவு பிறப்பித்தது. அரசுக்குத் கிடைத்த தகவல்படி உத்தரவுக்குப் புறம்பாக விதிகளை மீறி வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர் எண்ணிக்கை 43 ஆகும். இந்த ஆசிரியர்களில் சிலர் பணி பாதுகாப்புக்கு தகுதி அற்றவர். மீதமுள்ளவர்களை மீண்டும் அந்தந்த கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ள கல்லூரிக் கல்வி இயக்குநர் ஆணையிட்டார். இதன் விளைவாக 8 ஆசிரியர்கள் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர். மூன்று ஆசிரியர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்வதில் மட்டுமே சில பிரச்னைகள் உருவாகியுள்ளன. 8,500 தனியார் கல்லூரி ஆசிரியர்கள் பணியாற்றுமிடத்து 3 ஆசிரியர்கள் மட்டுமே இந்த நிலைக்கு ஆளாகியிருப்பது வேதனையைத் தருவதாக இருந்தாலும், அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்து செயல்பட்டு வருவதால் தான் மேலும் தவறான வேலை நீக்கங்கள் தவிர்க்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

(9) 3 வருடம் பணிபுரிந்த பயிற்றுநகர்கள்/விளக்குநர்களுக்கு மேல் பட்டப்படிப்பு இருந்தால், அவர்களுக்கு உதவிப் பேராசிரியர் பதவி அளிக்கப்படுகிறது. இதுவரை ஏறக்குறைய ஆயிரம் பயிற்றுநர்/விளக்குநர்கள் இவ்வாறு பதவி உயர்வு பெற்றுள்ளார்கள்.

(10) 31–3–77 அன்று பணியில் இருந்த ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும் பணிப்பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

[முற்பகல் 10.30]

(11) உரிய காலத்தில் தனியார் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கும் மூன்றாம் சம்பளக் குழுவின் பரிந்துரைப்படியான சம்பள விகிதங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

(12) தனியார் கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும் விடுப்பு விதிகள் விரிவு படுத்தப்பட்டுள்ளன.

1979 பிப்ரவரி 19] [திரு. செ. அரங்கநாயகம்]

(13) ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் ஆகியவை, தனியார் கல்லூரி ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கும் செயல்படுத்தப்பட்டுள்ளன.

(14) கல்வித்துறைக்கென தனி ஆலோசனைக் குழு சட்டமன்ற பேரவை. மேலவை உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்படவிருக்கிறது.

(15) பேராசிரியர்களுக்கு ரூ.1,100—50—1,300-ஈ. பி.-50—1,600 என்ற சம்பள விகிதம் தர முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

(16) பட்ட வகுப்புள்ள கல்லூரி முதல்வர்களுக்கு ரூ. 1,200—50—1,300-60—1,900 என்ற சம்பள விகிதம் தர முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

இதிலே மேல்நிலைப் பள்ளிகளைத் தொடங்கியதால் வேலை இழக்கின்ற கல்லூரி ஆசிரியர்கள் என்ற அடிப்படையில்தான் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். மன்ற உறுப்பினர்களின் மேலான கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புவது, இந்த ஆண்டு புகுமுக வகுப்பை எடுத்துவிடுவதாக இருந்தோம். ஆனால் அடுத்தாண்டுதான் எடுக்க இருக்கிறோம் ; இந்த ஆண்டு எடுக்கவில்லை. புகுமுக வகுப்பில் 80,000 மாணவர்கள் சேர்க்கப்பட வசதி இருந்தும். சேர்ந்திருக்கிற மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் 68,000 தான். ஆகவே, புகுமுக வகுப்பில் விரும்பி சேருகின்ற மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது என்பது தெரிகிறது. அப்படி இருந்தாலும் பணி பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற முறையில், வேலையிழப்பு ஏற்படும் நிலை இருந்தாலும், நான் குறிப்பிட்ட மாதிரி ஆசிரியர்களுக்கு வேலை தந்திருக்கிறோம் என்பதை மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இன்னும் கூடுதலாக இருக்கின்ற ஆசிரியர்களுக்கு எந்த அடிப்படையிலே வேலை அளிக்க இருக்கின்றீர்கள் என்பதை ஒரு கேள்வியாக எழுப்பி இருக்கின்றீர்கள். இந்த பணி பாதுகாப்பு தந்த உடனே என்னை வந்து சந்தித்த ஆசிரியர்களை எந்தெந்த வகையிலே வேலையிழப்பு ஏற்படாமல் இருக்க திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்ற ஆலோசனையை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். இதுவரையிலே யாரும் வந்து யோசனை சொல்லவில்லை என்பதை இங்கே வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். அப்படிக் கேட்டதற்குக் காரணம் அரசே திட்டமிட முடியவில்லை என்பதற்காக அல்ல; இதுபோன்ற காரியங்களில் ஆசிரியர்களை நல்லமுறையில் ஈடுபாடு கொள்ளச்செய்ய வேண்டுமென்ற புதிய கண்ணோட்டத்தின் அடிப்படைதான் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாணவர்கள் நலன்பெற கல்லூரிகளிலே அமைதி நிலவ வேண்டுமென்பது அனைவருக்கும் தெரியும்; அனைவருக்கும் அதில் அக்கறை இருக்கிறது. ஆனால் எல்லோரையும் விட சிறப்பான அக்கறை அங்கே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு இருக்கிறது. ஆசிரியர்களை நல்ல வழிகாட்டியாகக் கொண்டு தான் மாணவர்கள் தங்களை செயல்படுத்திக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, அத்தகைய நல்லதொரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்றால் இத்தகைய போராட்டங்கள் உதவாது என்பதால் நான் ஆசிரியர் பெருமக்களைக் கேட்டுக்கொள்கிறேன்; பேசித் தீர்க்க வேண்டியவைகளைப் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும்; அதுதான் நல்லது.

கடந்த 15 மாதங்களாக எத்தனையோ பிரச்சனைகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அவர்கள் போராட்டத்தைத் திரும்பப் பெறவேண்டுமென்று நான் உங்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

திரு. மு. அம்பிகாபதி : துணைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டில் கல்லூரிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் இன்றைக்கும் நாளைக்கும் மறியல் போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்திருக்கிறார்கள். சனிக்கிழமை அன்று அவர்கள் மாநாடு ஒன்றும் நடந்தது. குறிப்பாக 10 பிளஸ் 2 என்ற புதிய கல்வித் திட்டத்தின் காரணமாக கல்லூரிகளில் பி.யு.சி. வகுப்பில் மாணவர் எண்ணிக்கை குறைவதன் காரணமாக வேலையிழப்பு ஏற்படும் என்று ஆசிரியர்கள் கருதுகிறார்கள். அதுமட்டுமல்ல. லாபரட்டரி வசதி பெறுவதற்கு இப்போது கல்லூரிகளில் இருக்கும் லாபரட்டரிகளை புதிய கல்வித் திட்டத்தில் பயன் படுத்தும் முயற்சிகள் இருக்கின்றன. சுமார் 700 ஆசிரியர்கள் வேலையிழந்திருக்கிறார்கள். தனியார் கல்லூரிகளில், நெல்லை மாவட்டத்தில் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரியில் பல ஆசிரியர்கள் ஒரு வருடமாக வேலையில்லாமல் இருக்கிறார்கள். அதைப்போல உத்தமபாளையத்தில் ஹாஜாமுகமது கல்லூரி இருக்கிறது. அங்கேயும் அதைப்போன்று பல்வேறு கல்லூரி களிலும் ஆசிரியர்களுக்கு அவர்களுடைய பயத்தைப் போக்கு வதற்கு உத்தரவாதம் கொடுத்தால் மட்டும் போதாது. அதை சட்டரீதியாக சட்ட வடிவம் கொடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவரவர் களே, நாங்கள் கொடுக்கின்ற உறுதிமொழிகள், அதுவும் சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலே கொடுக்கின்ற உறுதி மொழிகள் நிச்சயம் காப்பாற்றப்படும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஆனால் உயர்நிலைப்பள்ளிகளிலே வசதிகள் இல்லை, வாய்ப்புகள்

இல்லை என்ற காரணத்தைத் தெரிந்தோ தெரியாமலோ பல பேர் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். பல்வேறு காரணங் களாலே பல நல்ல வாய்ப்புகளை பலர் பெறாமலே போய்விடக் கூடாது என்றும் அவர்களுக்கும் சமூக நீதி வழங்க வேண்டும் என்ற அடிப்படையிலும் உயர்நிலைப் பள்ளியிலே இன்றையதினம் இந்த வகுப்புகளை ஆரம்பிக்கின்ற திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அதாவது தகுதி, திறமை என்கிற வகையில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பாதிப்பு ஏற் படாமல், அவர்களுக்கும் வாய்ப்பு வசதிகளைத் தருகின்ற அடிப் படையில், அவர்களும் பயன் அடைய வேண்டும் என்ற அந்த சமூக நீதியை எதிர்ப்பதற்கு பல முயற்சிகள் இன்று நடை பெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே இந்த மாதிரி காரியங் களைப் புரிந்துகொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. ரு. ரமணி: துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது 1977-வது ஆண்டுக்கு முன்பு இருந்த ஆசிரி யர்களுக்கு வேலை வாய்ப்பு உண்டு என்று கூறினார். அப்படி யானால் 1977—வது ஆண்டுக்குப் பிறகு வந்துள்ள ஆசிரியர்களின் நிலை என்ன? அவர்களும் ஆசிரியர்களாக பணியிலே சேர்ந் திருப்பவர்கள்தானே? ஆகவே, அவர்களுக்கும் வாய்ப்பு அளிப் பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்த ஆசிரியர்கள் போராட்டத்திலே இறங்கு கிறார்கள் என்று தெரியும்போது அதிலே அரசு தலையிட்டு அவர்களுடைய பிரதிநிதிகளை அழைத்துப் பேசி இருக்க வேண்டும். அப்படிப் பேசவில்லை. ஆகவே, இனிமேலாவது அவர்கள் அப்படி ஒரு முயற்சி செய்து அவர்களை அழைத்துப் பேசி இந்தப் போராட்டத்திற்கு ஒரு சரியான தீர்வை காண் பதற்கு முயற்சிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

அடுத்து இன்னொன்று. வேலை இழந்தவர்களுக்கு உத்தர வாதம் உண்டு என்று சொல்கிறார்களே, அதிலே அந்த ஆசிரியர் களுக்கு அவநம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. வேலைக்கே இடம் இல்லாமல் இருக்கும்போது எப்படி வேலை கொடுக்க முடியும் என்று கருதுகிறார்கள். அப்படி வேலை இல்லாவிட்டால் அவர் களுக்கு வேலை கொடுக்கப்படும் வரை அவர்கள் அத்தனை பேர்களையும் அங்கேயே வைத்திருந்து அவர்களுக்கு முழுச் சம்பளத்தையும் இந்த அரசு தரப்போகிறதா என்பதை அறிய விரும்புகிறேன். ஆகவே, வேலைக்கு உத்தரவாதம் என்பதை அரசு எப்படித் தரப்போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவரவர் களே, அவர்கள் இப்போது போராட்டத்திலே இறங்கி இருக்கிறார் கள். அவர்களுடைய பிரச்சனையைப் பொறுத்தவரையில் பேசித்

தீர்த்துக்கொள்வதற்கு எப்போது வேண்டுமானாலும் பேசலாம். அதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால், மாணவர்களின் நலன் கருதி அந்த ஆசிரியர்கள் போராட்டத்தை வாபஸ் வாங்கவேண்டும். உத்தரவாதத்தைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு வாய்ப்புகள் தருவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அவைகளை அவர்கள் பெறுகிற வரைக்கும் அந்தக் கல்லூரியிலேயே அவர்கள் சம்பளம் வாங்கிக்கொண்டிருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. ரா. உமாநாத் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்போது கனம் அமைச்சரவர்கள் சொல்லி இருக்கக்கூடிய பதிலின்படி கடுமையான சூழ்நிலை ஏற்படும். அவர்கள் வாபஸ் வாங்க வேண்டும். அதற்குப்பிறகுதான் பேசுவது என்பது நல்லதல்ல. மாணவர்களும் ஆசிரியர்களும் சேர்ந்து படிப்பைக் கெடுக்கின்ற நிலை வரும். அது அப்படித்தான் வரும். கட்டாயம் வரும். இப்படி வாபஸ் வாங்க வேண்டும் என்று பேசக்கூடாது. அதனால் விரும்பக்கூடிய விளைவுகள் ஏற்படாது. அது ரொம்ப டேஞ்சரஸ் பொசிஷன். இது அவர்களிடத்திலே ஆத்திரத்தை ஏற்படுத்தக்கூடும். ஆகவே, அவர்கள் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையிலே போராட்டத்திலே இறங்கிவிட்டார்கள் என்று தெரிந்த உடனேயே அவர்களை அழைத்துப் பேசுவதற்கு தயாரா! அவர்கள் தயாராக வேண்டும் என்றுதான் கேட்டுகொள்கிறேன். அவர் தயாரா என்றும் கேட்கிறேன். அதை அவசியம் கேட்கிறேன். நான் அதை வலியுறுத்துகிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> துணைத் தலைவரவர்களே, பேசுவதற்கு என்றும் நான் தயாராக இருக்கிறேன், ஆனால், அவர்கள் எந்தவிதமான முன் அறிவிப்பும் இல்லாமல் போராட்டம் ஆரம்பித்து இருக்கிறார்கள். அன்றையத்தினம் காலையிலே கூட கல்லூரி ஆசிரியர்களைச் சந்தித்துப் பேசும்போது அவர்கள் இதுபற்றிச் சொல்லவே இல்லை. இந்த மாதிரி ஒரு போராட்டம் நடத்தப்போவதாக எந்த அறிகுறியையும் அன்றைக்குத் தெரிவிக்கவில்லை. இதனை மெத்த வேதனையோடும் வருத்தத்தோடும் தெரிவிக்கிறேன். இப்படிப்பட்ட ஒரு பெரிய நடவடிக்கை நாங்கள் எடுக்கப்போகிறோம் என்ற எந்த முன் அறிவிப்பும் அவர்கள் தரவில்லை. ஆகவே, பேசுவது என்பது எப்போது வேண்டுமானாலும் பேசிக்கொள்ளலாம். ஆனால், நிலைமை சீர்கேடு அடைவதற்கு நாம் உதவியாக இருந்துவிடக்கூடாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10.40]

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> இதை ஒரு கௌரவப் பிரச்னையாக எடுத்துக்கொள்ளாமல், அரசுக்கும் ஆசிரியருக்கும் மட்டும் உள்ள பிரச்னை என்று கருதாமல், இது இந்த நாட்டிலுள்ள நாலரைக்

கோடி மக்களின் பிரச்னை என்பதை அரசு உணரும் என்று நான் நினைக்கிறேன். ஆசிரியர்களுக்கு இருக்கிற அச்சம் என்னவென்றால், வாக்குறுதி ஒரு பக்கம் இருந்தாலும், இதை எவ்வாறு நிறைவேற்றப்போகிறார்கள் என்பதை அரசு கூற வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ஆசிரியர்களிடம் யோசனை கேட்டு ஆறு மாதங்களாகியும் அவர்களிடமிருந்து யோசனை வரவில்லை என்று. அவர்களிடமிருந்து யோசனை கேட்டு பிரச்னையைத் தீர்ப்பதற்குப் பதிலாக அரசுத் தரப்பிலிருந்து அரசின் யோசனையை அவர்களிடம் வைத்து அவர்கள் ஏற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வது உசிதமாக இருக்கும். ஆசிரியர்களுக்குள்ள முக்கிய பிரச்னை என்னவென்றால், பி.யு.சி.யை பிரித்துவிடும் அபாயம். 10 (எ) (1) ஆசிரியர்களாக பணியாற்றுகிறவர்களுக்கு எப்படிப் பணிப்பாதுகாப்பு அளிக்கப்போகிறீர்கள்? அடுத்து, ஆசிரியர்களுக்கு நேரடியாக சம்பளம் வழங்குவதில் நிச்சயம் கஷ்டமிருக்காது. அதை அரசு செய்ய உடனடி நடவடிக்கை எடுத்தால் ஓரளவு பிரச்னை தீர ஏதுவாகயிருக்கும், ஆகவே, அரசு அந்தமுறையில் செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> சென்ற தடவை இதேபோல் போராட்டம் துவக்கப்பட்டபோது பேசி அவர்களிடம் உடன்பாடு மேற்கொண்டு அதை அறிக்கை மூலம் இந்த மன்றத்தில் வைத்திருக்கிறேன். அந்த உறுதிமொழிகளைத்தான் இப்போது பேசிக்கொண்டிருக்கிறோம். அதை நிறைவேற்றுவதாகச் சொல்லியிருக்கிறேன். நேரடியாகச் சம்பளம் கொடுப்பது பற்றி, அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது, நிச்சயமாக அதில் ஒரு நல்ல முடிவை எடுக்கும்.

<u>திரு. கோ. இளங்கோவன் :</u> மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கல்லூரி ஆசிரியர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள சலுகைகள் பற்றி நீண்டதொரு பட்டியலைத் தந்தார்கள், அதேபோல் அவர்களது கோரிக்கைகளும் நீண்டதொரு பட்டியலாக இருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன். 31–3–1977 அன்று பணியில் இருந்த கல்லூரி ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு? அவர்களில் நிரந்தரமானவர்கள் எவ்வளவு பேர்கள்? தாற்காலிகமாக இருந்தவர்கள் எவ்வளவு பேர்கள்?

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> கேள்வியைப் போடுங்கள்.

<u>திரு. கோ. இளங்கோவன் :</u> எவ்வளவு பேர்கள் வேலையிழக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, பி.யு.சி.யை எடுத்துவிடுவதால் இந்த அச்சஉணர்வு ஆசிரியர்கள் மத்தியில் இருப்பதாகச் சொன்

[திரு. கோ. இளங்கோவன்] [1979 பிப்ரவரி 19

னார்கள். மற்றொரு கருத்தும் சொல்ல விரும்புகிறேன். அடுத்தாண்டு மேல் உயர்நிலைப் பள்ளிகள் மூலம் தேர்வு எழுத இருக்கிற மாணவர்கள் ஏறத்தாழ ஒரு லட்சம் இருக்கும் என்று கருதுகிறேன். அதில் வொக்கேஷனல் எட்யுக்கேஷன் என்று பார்க்கும்போது 25,000 மாணவர்கள் அடங்குவார்கள் என்று நம்புகிறேன். ஆக, எஞ்சியுள்ள 75,000 மாணவர்களில் எவ்வளவு பேர்கள் தேர்ச்சி பெறுவார்கள் என்று பார்த்தால் 35,000 அல்லது 40,000 பேர்கள் தேர்வு பெறமுடியும். அதில் எவ்வளவு பேர்கள் பட்டப்படிப்பிற்குச் செல்லக்கூடும் என்ற ஐய உணர்வு ஆசிரியர்கள் மத்தியில் இருப்பதை அரசு அறியுமா? அதற்குத் தக்க பதில் அளிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : உயர்நிலைப் பள்ளிகளில் தமிழில் படித்து, பி.யு.சி.யில் ஆங்கிலத்தில் படித்து 40% தேறி பட்டப்படிப்பு வகுப்புக்களை நிரப்பிக்கொண்டிருக்கிறார்கள். இன்றையதினம் 75,000-க்கு மேல் படிக்கிறார்கள். பெரும்பாலோர் தமிழ் வகுப்பில் படிக்கிறார்கள். நிறைய பேர்கள் தேர்வுக்குச் சென்று, பட்டப்படிப்பிற்கு இது வரையில்லாத அளவிற்கு கூட்டம் வரும். அதற்காக அச்சப்பட வேண்டாம்.

திரு. துரை முருகன் : ஒட்டுமொத்தமாக இதில் வருகிற பிரச்னை, சர்க்காரிடத்தில் ஒரு தெளிவான கொள்கை இல்லாததுதான் காரணம். முதலில் ஒன்று சொல்கிறார்கள், பின்னால் அவர்களே அதை மறுக்கிறார்கள். ஒன்றை நான் கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் உதாரணத்திற்காக. இப்போது 10 ப்ளஸ் 2 என்று ஆரம்பித்திருக்கிறார்கள். உயர்நிலைப் பள்ளிகளுக்கு யார் யார் டெப்பரியாக இருக்கிறார்களோ அவர்கள் போகிறார்கள் என்று ஒரு ஜி.ஓ. போட்டார்கள், பின்னர் அது ஆப்ஷன் என்று சொன்னார்கள். நேற்று ஒரு ஜி.ஓ. போட்டிருக்கிறார்கள். நீங்கள் போகவில்லையென்றால் இனிமேல் உங்கள் ப்ரமோஷன்ஸ் மற்றவை தரப்படமாட்டாது என்றும் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் சொன்னார்கள். முதலில் ஆப்ஷன் என்று சொல்லிவிட்டு பின்னர் கம்பல்ஸரி என்று சொல்கிறார்கள். ஆக, ஒரு தெளிவு இல்லை. தெளிவில்லாத கொள்கையைத்தான் இந்த அரசு கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே மாணவர்கள் சரியாகவில்லை, எல்லாக் கல்லூரிகளும் ஈரான் நாட்டுத்தெருக்கள் போல் காட்சியளிக்கின்றன.

அதற்குமேல், இப்போது ஆசிரியர்கள் கல்லூரிக்குப் போகவில்லை. இது கல்விப் பிரச்னை, சர்க்கார் இதில் பிடிவாதமாக இருக்கக்கூடாது. எதிர்கட்சிகளை தாக்குவதில் வேண்டுமென்றால் பிடிவாதமாக இருக்கலாம். எல்லோர் வீட்டிலுள்ள பிள்ளைகளும் கல்லூரிகளில் படிக்கக்கூடும். ஆசிரியர்கள் சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். இதில் அரசாங்கம் பிடிவாதம் காட்டாமல் . . . . . .

1979 பிப்ரவரி 19]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது கவன ஈர்ப்புத் தீர்மானம். தீர்மானம் கொடுத்தவர்கள் ஒன்றிரண்டு கேள்விகளை மட்டும் கேட்கலாம், நீண்ட பேச்சாக அமையக் கூடாது . . . . . .

திரு. துரை முருகன் : ஒரு முக்கிய பிரச்னையை மட்டும் கூற விரும்புகிறேன். மதுரை யூனிவர்சிட்டியை சேர்ந்த கல்லூரி ஆசிரியர்கள் அசோஸியேஷன் இருக்கிறது. இன்னும் பல கல்லூரி ஆசிரியர்கள் அசோஸியேஷன் இருக்கிறது. இந்த அசோஸியேஷன்களுக்கு (ரிகக்னிஷன்) அங்கீகாரம் கொடுக்க மாட்டேன் என்று சர்க்கார் சொல்லுகிறது. என்.ஜி.ஓ.க்களுக்கு போட்டி சங்கம் வேண்டுமென்று கேட்டால், பொலிக்காளையை வளர்ப்பது மாதிரி போட்டி போட்டுக்கொண்டு அங்கீகாரம் கொடுக்கிறீர்கள். அப்படியிருக்கும்போது, இதுபோன்ற ஆசிரியர்கள் சங்கத்திற்கு அங்கீகாரத்தை மறுப்பது ஏன்? சங்கம் என்பதை ஒத்துக்கொண்ட பிறகு, அதற்கு அங்கீகாரம் கொடுப்பது அழகான முறை. அந்த வகையில் அவர்களுக்கு அங்கீகாரம் கொடுப்பதோடு, அவர்களை அழைத்துப் பேசி அவர்களுடைய பிரச்னைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசு பிடிவாதமாக இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அரசு பிடிவாதமாக என்றைக்கும் இல்லை, இன்றைக்கும் இல்லை. சங்கங்களுக்கு ஏன் அங்கீகாரம் தரக்கூடாது என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் ஏன் அங்கீகாரம் தரப்படவில்லை என்பதை அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து இந்த அரசுக்கு தெளிவு இருப்பதில்லை. முன்றுக்குப் பின் முரணாக நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஒரு சில ஆசிரியர்களை மேல்நிலை பள்ளிக்கு அனுப்புகிறோம். சிலர் போக முடியாது என்று சொல்லுகிறார்கள். அப்படி வரும்போது, இனிமேல் என்றைக்கும் போக முடியாது, இப்போதுள்ள இடத்திலேயே இருங்கள் என்று சொல்லுகிறோம். அவ்வளவுதான். வேறு எதுவும் இல்லை.

திரு. க. சுப்பு : திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் போட்டி என்.ஜி.ஓ. சங்கத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்படவில்லை, போட்டி தொழிலாளர் சங்கங்களுக்கும் அங்கீகாரம் அளிக்கப்படவில்லை. ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் என்ற நிலைமைதான் கடைபிடிக்கப்பட்டு வந்தது. இப்போதும் அது சொல்லப்பட்டு வருகிறது. அதை ஏன் இன்னும் நடைமுறைப்படுத்தவில்லை என்பதை மட்டும்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> அது பற்றி ஆராயலாம்.

<u>திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :</u> துணைத் தலைவர் அவர்களே, இந்தப் புதிய கல்வித் திட்டம் வந்த பிறகு கல்லூரி ஆசிரியர்களுக்கு தங்களுக்கு வேலை இழப்பு ஏற்படும் என்கிற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. வேலையிழப்பு ஏற்படாது என்று வாக்குறுதி கொடுத்திருந்தாலும், அப்படி நிலைமை ஏற்பட்டால் அவர்களுக்கு அரசாங்கமே சம்பளம் கொடுத்து அவர்களுக்கு பணிபாதுகாப்பு கொடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறார்கள்.

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> துணைத்தலைவர் அவர்களே, மானேஜ்மெண்டார், அரசாங்கத்திலிருந்து சம்பளத்தைப் பெற்றுத்தான் அவர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

<u>*திரு. க. அன்பழகன் :</u> அமைச்சர் அவர்கள் கேட்ட கேள்விக்கு சுற்றுவழியில் பதில் சொல்லுகிறார்கள். அதிலும் முக்கியமாக கல்வி அமைச்சர் அவர்கள் சுற்றுவழியில் பதில் சொல்வது சரியல்ல. கேட்ட கேள்வி, அரசிலிருந்து பெறக் கூடிய கிராண்டிலிருந்து ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்கப் படுகிறது என்றாலும், தனியார் நிர்வாகத்தின் கீழ் பணி யாற்றுவர்கட்கு வேலையிழப்பு ஏற்பட்டால், அப்போது அரசே அவர்களுக்கு நேரிடையாக சம்பளத்தை கொடுக்கின்ற முயற்சி யில் பொறுப்பை ஏற்றுக்கொண்டு சம்பளத்தை வழங்குமா என்பதுதான்.

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> துணைத் தலைவர் அவர்களே அதைத் தான் அப்படிச் சொன்னேன். மானேஜ்மெண்டா ருக்கும் பொருந்தக் கூடிய வகையில்தான் அப்படிச் சொன்னேன். மானேஜ்மெண்டார் கொடுக்காத நிலை ஏற்பட்டால் அதில் அரசு தலையிட்டு ஆசிரியர்களுக்குச் சம்பளத்தைக் கொடுக்க அரசு முயற்சி எடுத்திருக்கிறது. மேலும் எடுக்கும், இது மானேஜ் மெண்டாருக்கும் பொருந்தும் என்ற வகையில்தான் இப்படி சொன்னேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> அடுத்து (திரு. கூத்தக்குடி எஸ். சண்முகம் அவர்கள் பேச எழுந் திருந்தார்........) இது கவன ஈர்ப்புத் தீர்மானம், இதில் தீர்மானம் கொடுத்தவர்கள் மட்டும், ஒன்றிரண்டு கேள்விகளை கேட்கலாம். எல்லோரும் இதில் கேள்விகளைக் கேட்க ஆரம் பித்தால், மற்ற நடவடிக்கைகளுக்கு நேரம் இராது. அடுத்து...

<u>திரு. அ. ரகுமான்கான் :</u> துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெயரையும் சேர்த்துத்தான் பேரவைத் தலைவர் அவர்கள் இதில் வாசித்தார்கள். எனக்கு இதில் பேச சந்தர்ப்பம் தர வேண்டும்..

<u>மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :</u> நீங்கள் கேள்விகள் கேட்கப் போகிறீர்களா. கேளுங்கள்..

<u>திரு. அ. ரகுமான்கான் :</u> துணைத் தலைவர் அவர்களே. ''உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே'' என்று புறநானூறு கூறுகிறது. அப்படி யென்றால் இதன் அடிப்படையில் குறைவழி நடக்கவேண்டும், நான் கேட்க விரும்புவது, கல்லூரி ஆசிரியர்களுக்கு வேலை யிழப்பு ஏற்படாது என்று சொன்னால், இதில் 10-எ.-1- ஆசிரியர்களும் அடங்குவார்களா!..

(முற்பகல் 10·50)

டெமான்ஸ்ட்ரேட்டர்கள், டியூட்டர்கள் ஐந்து ஆண்டுகளில் மாஸ்டர் ஆப் பிலாசபி டிகிரி வாங்க வேண்டுமென்று சொல்லப் படுகிறது. அப்படியானால், இந்த அரசைப் பேராசிரியர்களுக்கே இந்த மாஸ்டர் ஆப் பிலாசபி டிகிரி வாங்கக்கூடிய நிலைமையில் இல்லாதபோது, டெமான்ஸ்ட்ரேட்டர்களையும், டியூட்டர்களையும் இந்த டிகிரி வாங்க வேண்டுமென்று சொல்வது சாத்திய மாகுமா! (3) ஏற்கனவே, கல்லூரிகளில் தற்காலிகமாக பணி யாற்றிக் கொண்டிருந்தவர்கள், தி.மு.க. ஆட்சி காலத்தில் நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி இந்த அரசு அவர்களை ஆக்குமா! * * * இந்த அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்!

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> துணைத் தலைவர் அவர்களே, இந்த விளக்குநர்கள், பயிற்றுநர்கள் ஆகியோரைப் பற்றிச் சொல்லப்படுகின்ற அதிக தகுதியானது இன்றைய கல்வி வளர்ச்சியைப் பொறுத்தவரை ஆசிரியர்கள் எல்லோருக்கும் ஒரளவு தகுதியிருக்க வேண்டுமென்ற அடிப்படையிலேதான். இந்த 10 (எ) (1)–ஐப் பொறுத்தவரையான அதிகாரம் அரசுக்கு இல்லை; தேர்வாணைக் குழுவிற்கு உட்பட்டது. அந்த அடிப் படையிலேதான் நான் அவருக்கு இந்த உறுதிமொழி வழங்கினேன் மற்றபடி, கல்லூரி ஆசிரியர்களை இல்லாத காலத்தில் சொல்லப் பெற்ற இலக்கியத்தை இக்காலத்தில் சொல்லிக்கொண்டிருப்பது நல்லதாக இருக்காது.

<u>திரு. கூத்தகுடி. எ. சண்முகம் :</u> பாயின்ட் ஆப் ஆர்டர், துணைத் தலைவர் அவர்களே, நம்பிக்கை இல்லாத் தீர்மானத் தைப் பற்றி இந்த அவையிலே நிறைய பேர்கள் பேசியிருக் கிறார்கள். அது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை. நாம் இதிலேயே காலத்தை வீணாக்குவது சரிதானா? முறை தானா?

---

* மாண்புமிகு பேரவை துணைத் தலைவரின் ஆணைப்படி நீக்க அகற்றப் பெற்றது.

[1979 பிப்ரவரி 19

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுடைய இயக்கத்தைச் சார்ந்த திரு. அம்பிகாபதி அவர்கள் முதலில் வலியுறுத்திய காரணத்தால், மற்ற எதிர்க்கட்சியினர் இதை வலியுறுத்தி எடுத்துக் கொள்ளப்பட்டது. இல்லாவிட்டால், நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான விவாதத்தை எடுத்துக் கொண்டிருக்கலாம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசும்போது, *என்னும் வகையில் பேசினார். அப்படி அவர் ** பேசியது சபைக் குறிப்பிலே இடம் பெற வேண்டுமா என்பதைப் பற்றி முடிவு செய்ய வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : *** என்று ரகுமான்கான் அவர்கள் கூறிய பகுதியை சபைக் குறிப்பிலே இருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன். அதைத் தொடர்ந்து, அமைச்சர் அவர்கள் பேசிய அதைக் குறிப்பிட்டு சொன்னதையும், *** நீக்கிவிடுமாறு உத்தரவிடுகிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, கல்லூரி ஆசிரியர்களுடைய நியாயமான காரணத்தை உணர்ந்து பார்க்க வேண்டும். இங்கே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், 1977-க்கு முன்னர் ஆசிரியர் பணிக்கு வந்தவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட மாட்டார்கள் என்று. ஆனால், இன்றைய தினம் கல்லூரி ஆசிரியர்களுக்கெல்லாம் மூன்றில் ஒரு பங்கு பணி நீக்கம் செய்யப்படுவார்கள் என்ற ஒரு அச்சம் ஏற்பட்டிருக்கிறது. அந்த அச்சத்தைப் போக்குவதற்கு என்ன திட்டம் வைத்திருக்கிறார்கள் என்பதை தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, இன்றைய தினம் இந்தப் போராட்டத்தின் முக்கிய காரணம் அரசுப் பொறுப்பிலே இருக்கின்றவர்களுடைய தவறான அணுகுமுறை தான் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அந்த வகையில் இன்றைய தினம் கல்லூரி ஆசிரியக் குழுவின் ஸ்டேட் ஜாயிண்ட் செகரட்டரி போராட்டத்தை அறிவித்த பிறகு, அவர் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறார். இது நியாயம் தானா, இதற்கும் பதில் கூறுமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பணிப் பாதுகாப்புக் கொடுக்கப்படும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டு விட்டது. அதை நிச்சயம் அரசு காப்பாற்றும். அவர்கள் அச்சப்படு

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

1979 பிப்ரவரி 19] [திரு. செ. அரங்கநாயகம்]

கிறார்கள் என்று கூறுகிறார்கள். அவர்களுடைய அச்சத்தைப் போக்கத்தான் உறுதிமொழி அமைச்சர் என்ற வகையில் அளிக்கிறேன். அப்படி உறுதிமொழி தந்த பிறகும் அவர்கள் அச்சத்தை வைத்துக் கொண்டிருந்தால் அதற்கு அவர்கள் தான் பொறுப்பு. நிச்சயமாக சொன்ன உறுதிமொழியைக் காப்பாற்றுவோம். யாரும் அச்சப்படத் தேவையில்லை. ஒரு மாறுதலைப் பற்றிச் சொன்னார்கள். அது வேறு காரணங்களுக்காகச் செய்யப்பட்டது.

திரு. து. இராமசாமி : புதிய கல்வி திட்டத்தினால் ஏற்பட்ட....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது சம்பந்தமாகக் கேட்கக் கூடாது.

திரு. து. இராமசாமி : இது வேறு. பாயிண்ட் ஆப் ஆர்டர். பேரவையும் மேலவையும் நடந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் புதிய கல்வித் திட்டத்தைப் பற்றிய கொள்கையை, திட்டங்களை இந்த அவையில் அறிவிப்பதுதான் மரபு. அதை விடுத்து ஒரு திருமண விழாவில் முதலமைச்சர் அவர்கள் புதிய கல்வித் திட்டம் கைவிடப்படுவதாகச் சொன்னார்கள்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சபைக்கு வெளியே நடந்த ஒரு நிகழ்ச்சி சபையின் விதிகளுக்கு முரண்பட்டது என்று கருதினால் அதைப் பற்றி எழுத்து மூலமாக முதலில் கொடுக்க வேண்டும். பத்திரிகையில் வந்தது பற்றிக் குறிப்பாக எழுதிக் கொடுத்து அதற்கு அனுமதி பெற்ற பின்னர்தான் அவைமுன் கொண்டுவர முடியும்.

(ஆ) வெள்ளைச் சாமி நாடார் கல்லூரி மற்றும் யாதவ கல்லூரி மாணவர்கள் மோதல் குறித்து

திரு. செ. சிவசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை நாகமலைப் புதுக்கோட்டை வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி மாணவர்களின் இரு சாராரிடையே 15-2-1979 ஆம் தேதி நடைபெற்ற மோதலில் பல மாணவர்கள் காயமுற்றதால் மேற்கண்ட கல்லூரியும் யாதவர் கல்லூரியும் மூடப்பெற்று மாணவர்களிடையேயும், பொது மக்களிடையேயும், அமைதியின்மை நிலவுவதன் காரணமாகப் பொது அமைதிக்குப் பங்கம் விளையக் கூடிய பதட்ட நிலை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, நாகமலைப் புதுக்கோட்டையிலுள்ள வெள்ளைச் சாமி நாடார் கல்லூரி மாணவர்கள் அக்கல்லூரியின் மாணவர் பேரவைத் தேர்தல் நடைபெற்றதைத் தொடர்ந்து இரு கோஷ்டிகளாகப் பிரிந்து அவ்வப்போது மோதலில் ஈடுபட்டு

வருகின்றனர். 15-2-79 அன்று திரு. அருள்நாதன் மற்றும் 14 மாணவர்கள் ஒன்று சேர்ந்து கத்தி கம்பு, ஆயுதங்களுடன் எதிர் கோஷ்டி மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலின் விளைவாக ஒரு சில மாணவர்கள் காயமுற்றனர். காயமுற்ற மாணவர்கள் மதுரை எர்ஸ்கின் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டு இருக்கின்றனர். இச்சம்பவம் நடைபெற்ற தகவல் முதல்வரிடமிருந்து பெறப்பட்டவுடன் கோட்டாட்சி அலுவலர் மற்றும் காவல் துறை அலுவலர்கள் கல்லூரிக்குச் சென்று சட்டம் ஒழுங்கைநிலை நாட்ட தகுந்த நடவடிக்கை மேற்கொண்டார்கள். இத்தாக்குதலில் ஈடுபட்ட திரு. பழனிசாமி, திரு. ராமலிங்கம், திரு. அருளானந்தம், திரு. கிருஷ்ணமூர்த்தி ஆகிய மாணவர்கள் காவல்துறை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர், கல்லூரிக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட்டு உள்ளது. மேலும் இக்கல்லூரி 21-2-79-ந்தேதி வரை மூடப்பட்டுள்ளது.

(2) மதுரை யாதவா கல்லூரியில் 'யாதவர்கள் அல்லாத மாணவர் சங்கம்' அமைக்க கல்லூரி முதல்வர் மறுத்ததன் பலனாக 'யாதவர்கள் அல்லாத மாணவர்கள்' திரு. பொன் முரளிமோகன் தலைமையில் 15-2-79 அன்று கல்லூரிக்குச் செல்ல மறுத்தனர். யாதவர் மற்றும் யாதவர் அல்லாத மாணவர்களிடையே இதனால் ஏற்பட்ட பதட்ட நிலையைக் கருத்தில் கொண்டு இக்கல்லூரி காலவரையின்றி மூடப்பட்டுள்ளது. கல்லூரி விடுதியில் தங்கியுள்ள மாணவர்களும் உடனடியாக விடுதியை விட்டு வெளியேறும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. இக்கல்லூரிக்குத் தகுந்த பாதுகாப்பு வசதிகளும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி கல்லூரிகளின் நிலையை அரசு உரிய கவனத்துடன் கண்காணித்து வருகிறது.

[முற்பகல் 11-00]

* __திரு. செ. சிவசாமி :__ துணைத் தலைவர் அவர்களே, இது மாதிரி மாணவர்கள் சம்பவங்கள் ஏற்பட்டவுடனே உடனடியாகக் கல்லூரிகளை மூடுவது என்பது பலன் தராது. உடனடியாக சம்பந்தப்பட்ட மாணவர்களிடத்திலே நேரடியாகச் சென்று ஏன் அப்படி ஏற்பட்டது என்று கேட்டு, காரணத்தை ஆராய்ந்து தான் இந்த நாட்டிலே கல்வியை நல்ல முறையிலே போதிக்க முடியும், ஆசிரியர்களிடத்திலே இருக்கிற கஷ்டத்தைப் போக்க முடியும். நல்லதொரு சமுதாயத்தை அமைக்க முடியும். உடனடியாக நடவடிக்கை எடுக்காததன் காரணமாகத்தான் கடந்த காலத்திலே மதுரைக் கல்லூரியிலே எந்த அளவிற்குச் சம்பவங்கள் நடந்தன என்பது நமக்குத் தெரியும், மதுரைக் கல்லூரியிலே மாணவர்கள் சம்பவங்கள் நடந்தபோது உடனடியாக நடவடிக்கை எடுக்காத காரணத்தால் அந்த சம்பவங்களிலே அவை

களின் ஊடே ரௌடிகள் நுழைந்து கொண்டு மாநில அளவிலே அதைக் கொண்டுவந்து விட்டு விட்டார்கள். அதுபோன்றுதான் சிவகங்கை கல்லூரியிலேயும் நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. 13 மாணவர்கள் அங்கே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். எங்கே பார்த்தாலும் மாணவர்கள் அமைதியின்மை இருந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையை மாற்றுவதற்கு அரசு முன்வரவேண்டும். முன்னாலே மாணவர்கள் இங்கே வந்த போது உங்களுக்குத் தெரியும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேலேயிருந்து கீழே வந்து மரத்தடியிலே மாணவர்களைச் சந்தித்து அவர்களோடு பேசி பிரச்சனையை தீர்த்து விட்டார்கள். என்பது நமக்குத் தெரியும். அப்படி ஏன் இப்போது தீர்க்கக் கூடாது. அன்றைக்கு இருந்த நிலைமை இன்றைக்கு மாறியிருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

__மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :__ அவைத் தலைவர் அவர்களே, இது மாணவர்களுக்குள்ளே ஏற்பட்ட மோதலாகும். இது புதிதாக இப்போதுதான் நடந்திருக்கிறது. மேலும் நிலைமையில் சீர்கேடு ஏற்படக்கூடாது என்ற முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற முறையிலே பாதுகாப்புக்காகத்தான் கல்லூரி மூடப்பட்டது. கல்லூரியை மூடவேண்டுமென்பதற்காகக் கல்லூரியை மூடவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

__திரு. கே. பண்ணை சேதுராம் :__ *

__திரு. க. அன்பழகன் :__ *

__மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :__ வம்பே வேண்டாம். திரு. பண்ணை சேதுராம் அவர்கள் கேட்ட விளக்கத்தையும் அதற்குப் பிறகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னவற்றையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுமாறு ஆணையிடுகிறேன்.

__திரு. துரை முத்துசாமி :__ கல்லூரி மூடப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், எப்போது அது திறக்கப்பட இருக்கிறது? அது எந்த நிலையில் இருக்கிறது? மாணவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறதா? யார் யார் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது? இடைத்தரகர்கள் புகுந்ததாகக் கூறுகிறார்கள், அதனுடைய விவரங்களை அறிய விரும்புகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : யார் யார் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி ஏற்கெனவே சொன்னேன். சீர் கேடு அடைந்துள்ள நிலைமையை சீர்படுத்துவதற்கான நிலைமைகள் மேற்கொள்ளப்பட்டு கல்லூரி திறக்கப்படும்.

(4) அரசினர் தீர்மானம்.

விதி 41 (3) ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

“பேரவையின் 41 (3) விதியின்கீழ் இரண்டுக்கும் மேற்பட்ட பொருள்களை எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற விதியை தளர்த்தி மூன்றாவது பொருளையும் இன்று எடுத்துக் கொள்ள வேண்டும்.”

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஏகமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(3) கவன ஈர்ப்புகள் (தொடர்ச்சி).

(இ) சாதி இந்துக்களின் கொடுமைகளைக் கண்டித்து அரிசனங்கள் பாத யாத்திரை மேற்கொண்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 41-வது விதியின் கீழ் திருவாளர்கள் வ. குழுக்காளை, ரா. கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், எம். அண்ணாமலை, ரா. உமாநாத், நா. பழனிவேல், கி. பழனிமுத்து ஆகியோர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு அறிவிக்கை கொடுத்து இருக்கிறார்கள். யாராவது ஒருவர் கொண்டு வந்தால் போதும். திரு. அண்ணாமலை அவர்கள்.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 41-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

“சேலம் மாவட்டம் நடுப்பட்டி கிராம அரிசன ஆண்கள், பெண்கள், ஜாதி இந்துக்களின் கொடுமைகளைக் கண்டித்து பாத யாத்திரையாக சென்னை வந்து கொண்டிருப்பதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.”

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இங்கே கொடுத்திருக்கிற கவன ஈர்ப்புத் தீர்மானம் வேறு, அவர் படித்தது வேறு.

சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டத்தைச் சேர்ந்த நடுப்பட்டி கிராமத்தில் சர்வே எண். 63/1-ல் உள்ள குடிநீர் கிணற்றுக்கு அரிசன மக்கள் செல்வதற்கும் அவர்கள் உபயோகித்து வரும் இடுகாட்டிற்குச் செல்லும் பாதையை உபயோகிப்பதற்கும் அரிசன மக்களுக்கும் நிலச் சொந்தக்காரருக்கும் இடையே ஏற்பட்ட தகராறு காரணமாக 16-2-1978 அன்று சேலம் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தின் முன்பு அக்கிராமத்தைச் சேர்ந்த சில அரிசன மக்கள் உண்ணாவிரதம் இருந்தனர், இடுகாட்டிற்குச் செல்லும் பாதை தனியார்களுக்குச் சொந்தமான சர்வே நம்பர்கள் 53, 52 மற்றும் 51 உள்ள நிலங்களின் வழியாக செல்லுகிறது. அப்போதைய மாவட்ட ஆட்சியாளர் இது குறித்து தலையிட்டு தக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளிக்கவே, உண்ணாவிரதம் அன்று கைவிடப் பட்டது.

நிலச் சொந்தக்காரர்களின் முறையீட்டின் பேரில் மேற்சொன்ன நிலங்களை அரிசனங்கள் உபயோகிப்பதைத் தடை செய்து சங்ககிரியிலுள்ள மாவட்ட முன்சீப் 4-11-1977 அன்று தடை பிறப்பித்துள்ளார் என்று மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார்.

மறுபடியும் 2-10-1978 அன்று நடுப்பட்டி அரிசன மக்கள் மேலே குறிப்பிட்ட நிலங்களையே தொடர்ந்து பயன்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும் எனக்கூறி உண்ணாவிரதம் இருந்தனர். சேலம் மாவட்ட ஆட்சியாளர் உடனடியாகத் தலையிட்டு சமரச உடன்பாடு செய்வதாக உறுதியளித்ததின் பேரில் உண்ணாவிரதம் அன்று கைவிடப்பட்டது. 19-10-1978 அன்று சேலம் மாவட்ட ஆட்சியாளர் சம்பந்தப்பட்ட மற்ற அலுவலர்களுடன் அக்கிராமத்திற்குச் சென்று பேச்சு வார்த்தைகள் நடத்தினார். அன்று சமரச ஏற்பாடு எதுவும் செய்ய முடியாததால் மறுபடியும் பேசி ஒரு முடிவெடுக்க மாவட்ட ஆட்சியாளர் ஏற்பாடு செய்திருந்தார்.

இதனிடையே 18-11-1978-ம் தேதியன்று நடுப்பட்டி கிராமத்தில் அரிசன காலனியிலிருந்து ஒரு சவத்தை இடுகாட்டிற்கு எடுத்துச் செல்வது சம்பந்தமாக மாவட்ட துணைக் காவல்துறை கண்காணிப்பாளரும், மேட்டூர் வருவாய்த்துறை கோட்டாட்சியரும் தலையிட்டு அன்று மட்டும் சவத்தை மேலே குறிப்பிட்ட நிலங்களின் வழியாக அரிசனங்கள் எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்தார்கள்.

ஒரு நிரந்தரமான முடிவு காண மீண்டும் 24-11-1978-ம் தேதியன்று சேலம் மாவட்ட ஆட்சியாளர் நடுப்பட்டி கிராமத்திற்கு சென்று சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். மாவட்ட ஆட்சியாளர், அரிசனங்கள் ஏற்கெனவே பயன்படுத்திய கிணறு, இடுகாட்டுப் பாதை ஆகியவைகளை

மாற்றி வேறு இடத்தில் கிணறு, மயானம் முதலியவற்றை அமைத்துக் கொடுப்பதாகச் சொல்வதை அரிசனங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

19-12-1978 அன்று அரிசன மக்கள் குடியிருப்பில் மரணம் அடைந்த ஒரு குழந்தையின் சடலத்தை அடக்கம் செய்ய அவர்கள் மேற்கண்ட வழக்கமான பாதை வழியாக செல்ல முயற்சித்தபோது திரும்பவும் பிரச்சினை ஏற்பட்டு அசம்பாவிதம் எதுவும் நடக்காமல் தீர்க்கப்பட்டது.

[மாண்புமிகு மாற்றுத்தலைவர்—தொடர்கிறி]

எனவே, இந்தப் பிரச்சினைக்கு இறுதியாக ஒரு முடிவு காண வேண்டி, வருவாய் வாரிய உறுப்பினரொருவரை அனுப்பி இடத்தை நேரில் பார்வையிட்டு உண்மை நிலைமையை அறிந்து அரசுக்கு அறிக்கை கொடுக்குமாறு அரசு ஆணையிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, சேலம் மாவட்டம் நடுப்பட்டி அரிசனத் தெரு, சுடுகாட்டுக்குச் செல்லும் பாதையும் குடிதண்ணீர் கிணறும் 300 ஆண்டுக்காலமாக அனுபவத்தில் வந்துள்ளது. கடந்த இரண்டுக் காலமாக மைனர் என்ற கோவிந்தன் வகையறாக்களால் அந்தச் சுடுகாடு பாதை குறுக்கப்பட்டு நடைபாதை போக் உள்ள நிலையில் 18-11-78-இல் இறந்த மாரியம்மாள் என்ற அம்மையாரின் பிரேதத்தை எடுத்துச் சென்றார்கள். வழியில் குச்சிக்கிழங்கு செடியைத் தடுக்கிவிட்டார்கள் என்ற காரணத்தைச் சொல்லி அந்த அரிசனங்கள் பேரில் வழக்கும் போட்டுள்ளதோடு வழியிலே நடக்கக்கூடாது என்று பல்வேறு தொல்லையோடு ஊர்க்கட்டுப்பாடும் செய்யப்பட்டது. குடிநீர்க் கிணற்றில் விஷ பொருட்கள் போடப்பட்டு குடிநீரை எடுக்கக்கூடாத சூழ்நிலையை உருவாக்கினார்கள்.

[முற்பகல் 11-10]

இதை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அமைச்சர்களுக்கும் தந்திகள் கொடுக்கப்பட்டதையொட்டி அங்கு சுமார் 80-க்கு மேல்பட்ட ரிசர்வ் போலீசைக் காவல் வைத்த சூழ்நிலையில்—அந்தக் கிணற்றையும் இடித்து சமமாக்கி அடையாளம் தெரியாமல் செய்யப்பட்டதோடு போலீஸ் இருக்கும் போதே 14-12-78-ம் தேதி கிருஷ்ணவேணி என்னும் சிறுமி சவத்தை எடுத்துச் செல்கிறார்கள். அந்தச் சவத்தை எடுத்துச்செல்லும் போது தடுத்து கலகம் விளைவித்துள்ளதையும் பார்த்த போலீஸ் ஒருதலைப்பட்சமாக லத்தி சார்ஜ் செய்தது, அதனால் அந்தச் சிறுமியினுடைய பிரேதத்தை அங்கேயே பதறிப் போட்டு விட்டு அரிசனங்கள் வீட்டுக்கு ஓடும் அளவிற்கு துரத்தி விட்டு அந்த பிரேதத்தை போலீஸ் எடுத்து அடக்கம் செய்திருக்கிறது. அடக்கம் செய்த இடம் இதுவரை தெரியாது. இதையொட்டி

நடந்த நிலைமைகளை குறித்து அதிகாரிகளுக்கும் அமைச்சர்களுக்கும் 67 முறை மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றது. 5 முறை உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். 16 முறை தந்திகள் கொடுத்திருக்கிறார்கள்.....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு பி. எச். பாண்டியன்) : கேள்வி கேளுங்கள், பெரிய உரை நிகழ்த்தாதீர்கள்.

திரு. எம். அண்ணாமலை : இருந்தும் எந்தவிதமான பாதுகாப்புமற்ற நிலையில் தவிக்கின்றார்கள். இங்கே அமைச்சரவர்கள் கொடுத்த அறிக்கையில் சொல்லப்படுவது முற்றிலும் உண்மைக்கு மாறானது. அந்தச் சிறுமியின் பிரேதத்தை அவர்கள் அடக்கம் செய்தார்கள், இடம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது என்பது உண்மைக்கு முரணானது. அந்தப் பிரேதத்தைப் புதைத்த இடம் இன்றும் கூட தெரியாது. அந்தச் சூழ்நிலையில் தான் தவிர்க்க முடியாத நிலையில் 2-2-1979 அன்று 45 அரிசனங்கள்—பெண்கள் 8 பேர் உள்பட ஓமலூர் நடுப்பட்டியில் இருந்து பாத யாத்திரை வந்து 13-ஆம் தேதி சென்னையை அடைந்து, ஆளுநரைச் சந்தித்து விட்டு அமைச்சரைச் சந்தித்து, தங்கள் குறைகளை விளக்கிச் சொன்னார்கள். இவ்வளவு நடந்தது போக, இனியாகிலும் காலம் தாழ்த்தாமல் அரசு துரிதமாக நடவடிக்கை எடுத்து, மூடிவிட்ட கிணற்றை, தூர் எடுத்து கொடுத்து அமைதியான சூழ்நிலையை உருவாக்க அரசு முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அந்த நடுப்பட்டி கிராமத்து மக்கள் சந்தித்து கூறிய நிலைமையை ஆராய்ந்த பிறகு வருவாய் வாரிய உறுப்பினரை அனுப்பி உண்மை என்ன என்று அரசுக்கு அறிக்கை அனுப்பக் கேட்டிருக்கிறோம். அது வந்தபிறகு எது நியாயமோ அதை அரசாங்கம் கண்டிப்பாகச் செய்யும் என்பதை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன்.

திரு. ரா. உமாநாத் : சேர்மென் அவர்களே, இன்று நமது மாநிலத்தில் அமுலில் இருக்கக்கூடிய கடுமையான ஜாதிக் கொடுமையினுடைய ஒரு சிம்பல்தான் இது. 'Just lightning problem'. ஆகவே, இது ரொம்ப சீரியஸ். Such serious things are happening. பிணத்தைப் புதைக்க சுடுகாடு இல்லை. சுடுகாட்டு விஷயம் தண்ணீர் விஷயம் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. இதன் விளைவாக ஒரு பிணத்தைக் கொண்டு போய் புதைக்கப் போனால், அந்தப் பிணத்தைப் புதைக்கக்கூடாது என்று தகராறு வளர்ந்து, கலகம் விளைந்து புதுப் பிணங்கள்

வருகின்றன. ஆகவே, இது ரொம்ப சீரியஸ்ஸான விஷயம். இதிலே, அரசு இதுவரை பல இன்ஸ்டன்ஸ்களில் ஆக்ஷன் எடுக்கவில்லை. அவர்கள் ஹங்கர் ஸ்டிரைக் இருந்திருக்கிறார்கள் பாத யாத்திரை செய்திருக்கிறார்கள் என்பதிலிருந்து இதுவரையில் எந்த ஆக்ஷனும் எடுக்கவில்லையென்று தெரிகிறது. For a long time it is brewing பல இடங்களில் சுடுகாடு இல்லாதது, குடி தண்ணீர் இல்லாமல் இருப்பது, மாநிலத்திலே பல இடங்களிலே நடப்பதுவாகும். போலீஸ் அவர்களுக்கு உதவியாக இல்லாமலிருப்பதாலே ரெவின்யூ அபிஷியல்ஸ், போலீஸ் இருவரும் ஜாதியிலே ஒன்று படுவதாலே இது வெடிக்கிறது. என்னுடைய கேள்வி, இது சம்பந்தமாக ஒவ்வொரு இடத்திலும் வெடிக்கிறவரைக்கும் காத்திருக்காமல், எல்லா இடங்களுக்கும் ரெவின்யூ போர்ட் மெம்பரை அனுப்பி எந்தெந்த ஊரிலே இந்தப் பிரச்சினை இருக்கிறது என்று பார்த்து, அதைத் தடுக்க ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா? அத்தகைய திட்டம் இம்ப்ளிமென்ட் செய்யப்படுகிறதா? இல்லை என்றால் இந்த சேலம் இன்ஸ்டன்ஸுக்குப் பிறகாவது இந்த மாதிரி சர்வே நாடு பூராவும் எடுத்து அதனைத் தடுக்க நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, 14-2-1979 ஆம் தேதி வருவாய் வாரிய உறுப்பினருக்கு ஆணையிட்டிருக்கிறோம். ஒரு வாரத்திற்குள் அவர் அந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டு அரசுக்கு அறிக்கை அனுப்புமாறு அரசாங்கம் கேட்டுள்ளது. அந்த அறிக்கை வந்தபிறகு அவர் நிலைமையை எடுத்துச் சொல்வதைக் கேட்டபிறகு இந்த அரசாங்கம் யார்மீது தவறு இருந்தாலும் வருவாய்த் துறை அலுவலர்மீது தவறு இருந்தாலும் காவல் துறையினர் மீது தவறு இருந்தாலும் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும். அதே போல் தமிழ்நாட்டிலே எங்கெங்கே இந்தப் பிரச்னை இருக்கிறதோ, அங்கங்கே கண்டிப்பாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

(2) தகவல் கோரல் (தொடர்ச்சி)

(ஆ) உரிமைப் பிரச்சினை அறிவிக்கை குறித்து

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, நான் ஒரு பிரிவிலெஜ் மோஷன் கொடுத்து இருந்தேன் ** *** **

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு ஜனதா கட்சித் தலைவர் ஜேம்ஸ் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னை கொடுத்து இருக்கிறேன் என்று சொல்ல

*மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

லாம். ஆனால் உரிமைப் பிரச்னை என்ன என்பதைப் பற்றி விளக்க ஆரம்பிக்கிறார்கள். உரிமைப் பிரச்னையை அவர்கள் தலைவரிடம் கொடுத்து இருந்தால் அது குறித்து அவர்கள் தெரிந்து கொள்வதற்கு எல்லா வாய்ப்புகளும் இருக்கின்றன. ஏற்கெனவே நேரம் அதிகமாகிக்கொண்டு இருக்கிறது. இன்றைக்கு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற இருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் அல்லது மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்கு நிச்சயமாக முக்கியத்துவம் கொடுப்பார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): திரு. ஜேம்ஸ் கொடுத்த உரிமைப் பிரச்னை பேரவைத் தலைவரின் ஆய்வில் இருக்கிறது. திரு. ஜேம்ஸ் அவர்கள் யார் மீது உரிமைப் பிரச்னை என்று சொன்னதை அவைக்குறிப்பில் இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு 1979.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, தமிழ்நாடு 1979-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப் படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே. இந்த மசோதாவானது அரசாங்கம் ஏற்கெனவே அறிவித்து இருக்கின்ற கொள்கைக்கு இசைவாக இல்லை. மாநில அரசாங்கம் அரியர்சை வசூல் செய்வதைத்தான் தள்ளி வைக்கிறது. ரத்து செய்யவில்லை. இதே போன்ற நிலைமை இருந்தபோது திராவிட முன்னேற்றக் கழகம் ரத்து செய்து இருக்கிறது. மேலும், பாக்கி வசூல் செய்வதை ரத்து செய்யவேண்டும் என்று இங்கே ஏற்கெனவே வலியுறுத்தப்பட்டு இருக்கிறது. இங்கே கொண்டு வரப்பட்டு இருக்கும் மசோதா ரத்து செய்வதற்கு பதிலாகத் தள்ளி வைக்க வேண்டும் என்று இருக்கிற காரணத்தால், நான் இந்த மசோதா அறிமுகம் செய்வதை எதிர்க்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, ரெவின்யூ அமைச்சர். . . . .

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : இந்த மசோதா விவாதத்திற்கு வரும்போது பேசுங்கள்.

அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச், பாண்டியன்) சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(அ) புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு 1979

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, இதிலும் நான் ஏற்கெனவே எதிர்ப்பு தெரிவித்ததுபோல் தெரிவிக்க விரும்புகிறேன். புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விளைச்சல் இல்லாமல் போய்விட்டது. விளைச்சல் இருந்தால் தான் வசூலிக்கவும் நியாயம் இருக்கிறது. விளைச்சல் இல்லாமல் இருக்கிறபோது வசூலிக்கவும் நியாயம் இல்லை. அது எப்படி சட்டப்படி செல்லும். சட்டப்படி செல்லாத ஒன்றை ரத்து செய்வது தான் முறை என்று சொல்லிக்கொள்கிறேன்.

அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

[முற்பகல் 11-20]

(இ) நகர்ப்புற நிலம் (உச்ச வரம்பு கட்டுதலும், முறைப் படுத்துதலும்) குறித்த திருத்த சட்ட முன்வடிவு 1979.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தற்காலிகத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்த சட்ட முன்வடிவு பேரவைமுன் அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, இந்த நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்டமுன்வடிவை நான் எதிர்க்கிறேன். இதிலே ஏற்கெனவே பல கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, சாரிட்டபிள் என்டோமெண்ட் போன்ற நிறுவனங்களுக்கு விதிவிலக்கு என்று இருப்பதால், உச்சவரம்புச் சட்டத்தின்படியுள்ள மிச்ச நிலத்தை எடுக்க முடியவில்லை. அதனால் பாதிக்கப்படுகிறவர்கள் சாதாரண மக்களே தவிர மிராசுதாரர்கள் அல்ல. அண்ணாமலை யுனிவர்சிட்டி பெயரால் செட்டியார் விதிவிலக்கு என்ற அமைப் படையில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை வளைத்து வைத்துக் கொண்டிருக்கிறார். ஏற்கெனவே இருந்த சட்டத் தின்படி, மிச்ச நிலத்திற்கு விதிவிலக்கு இல்லாமல் மொத்தத்தையும் எடுத்துவிட வேண்டும். இல்லையென்றால் சட்டமே தேவையில்லை என்று சொல்லிவிடலாம். மிராசுதாரர்களிடம் இருக்கின்ற மிச்ச நிலத்தை எடுக்கமுடியாத நிலையில் இப்படி துண்டு, துண்டு சட்டங்களாகக் கொண்டுவந்தால் கடைசியில் மிச்சமிருக்கும் நிலம் 'ஜீரோ' தான். அதனால் இந்த சட்டமே 'ஜீரோ' என்ற முறையில் நான் இதை எதிர்க்கிறேன்.

அமைச்சரின் திர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி அளிக்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தற்காலிகத் தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப் படுத்துகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி, எச். பாண்டியன்) சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(6) அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம் ஆகியவை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எச். பாண்டியன்) அடுத்து அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானத்தையும், அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் மூன்று தீர்மானங்களையும் மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். அவைகளுக்குப் பேரவை ஏற்கெனவே அனுமதி அளித்திருக்கிறது. தீர்மானத்தைக் கொடுத்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் தீர்மானத்தை முன்மொழிந்து, வழிமொழிந்த பிறகு எல்லாத் தீர்மானங்களும் ஒட்டு மொத்தமாக விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலில் திரு. சாதிக் பாட்சா.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவரவர்களே, மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையிலான அமைச்சரவையின் மீது இப்பேரவை நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கிறது என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, நான் அந்தத் தீர்மானத்தை வழிமொழிகிறேன்.

திரு.ரா.உமாநாத்: மிஸ்டர் செயர்மென், மாண்புமிகு திரு.எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களை முதலமைச்சராகக் கொண்ட அமைச்சரவையின் தொழிலாளர் பற்றிய கொள்கையை இப்பேரவை நிராகரிக்கிறது என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் — தலைமை)

திரு.மு.அம்பிகாபதி: துணைத் தலைவரவர்களே, நான் அந்தத் தீர்மானத்தை வழிமொழிகிறேன்.

திரு.ஜே.ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு திரு.எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையிலான அமைச்சரவையின் 'சட்டம் ஒழுங்கு' பற்றிய கொள்கையை இப்பேரவை நிராகரிக்கிறது என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. பொ. விஜயராகவன்: தலைவரவர்களே, திரு. ஜேம்ஸ் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

திரு. எம்.ஏ.லத்தீப்: தலைவரவர்களே, மாண்புமிகு திரு.எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையிலான அமைச்சரவையின் சிறுபான்மையினர் பற்றிய கொள்கையை இப்பேரவை நிராகரிக்கிறது என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு.சி.ஆறுமுகம்: தலைவரவர்களே, அத் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான்கு தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. முதலில் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள்.

திரு.எஸ்.ஜே.சாதிக்பாட்சா: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானத்தை நான் முன்மொழிந்து பேசுவதற்கு வாய்ப்பு தந்த தங்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நம்பிக்கையின்மைத் தீர்மானத்தைப் பற்றி பேசும்போது முதலிலே மிக மிக முக்கியமான பிரச்சனையை அரசுக்கு உணர்த்த வேண்டுமென்று விரும்புகிறேன். இன்று திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதா கட்சி, முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளும் நம்பிக்கையின்மைத் தீர்மானத்தைக் கொண்டு வரா விட்டாலும் இந்த அரசினுடைய கொள்கையைக் கண்டிக்கிற தீர்மானங்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

9-2-79 அன்று கவர்னர் உரை நடைபெற்ற நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத் தலைவர் பேராசிரியர் இந்த மன்றத்தில் ஒரு அறிக்கையை வாசித்தார்கள். அந்த அறிக்கையில் குறிப்பிட்டு கூறப்பட்டிருக்கிற ஒரு பிரச்சனையை ஆராய்ந்து பார்த்ததில் அந்த அடிப்படையில் இந்த அரசு இந்த மன்றத்திலே நம்பிக்கையிழந்துவிட்டிருக்கிற விவரங்களைப் புரிந்து கொள்ள முடியும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த 1979-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9-ம்தேதி அன்று பேராசிரியர் அவர்கள் வாசித்த அந்த விளக்கவுரையை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

"மேதகு ஆளுநர் அவர்களே, திரு. எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் உள்ள இந்த ஆட்சியில் சட்டம், ஒழுங்கு அமைதி பெருமளவுக்குப் பாழ்பட்டு விட்டது." என்று குறிப்பிட்டிருக்கிறார். அதாவது சட்டம் ஒழுங்கு பெருமளவிற்குப் பாழ்பட்டுவிட்டது என்று சொன்னால் மக்கள் பெருமளவிற்கு இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்றுதான் பொருள்.

"மது விலக்கைத் திரிமாக்குவதாகச் சொல்லிக்கொண்டே ஆளுங்கட்சியினர் தாராளமாகக் கள்ளச்சாராயம் காய்ச்சி விற்பனை செய்ய இந்த ஆட்சி மறைமுகமாக உதவி செய்து வருகிறது. கோரிக்கைகள் எழுப்பும் தொழிலாளர்கள், விவசாயிகள், அரசு

அலுவலாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மாநிலம் முழுவதும் போலீஸ் அடக்குமுறைக்கும், ஆளுங்கட்சிக்காரர்களின் தாக்குதலுக்கும் ஆளாக்கப்படுகிறார்கள்.'' இதுவும் அவருடைய விளக்கவுரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் மேற்கோள்கள் காட்ட முடியும். பல பிரச்சினைகள் இந்தச் சட்டமன்றத்திலேகூட விவாதிக்கப்பட்டிருக்கின்றன. கல்லூரிப் பேராசிரியர்கள் போன்றவர்கள் தங்களுடைய நியாயமான கோரிக்கையை அரசாங்கத்தின் முன் வைத்தால் அவர்களைக் கைது செய்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகளை எல்லாம் இன்று காண முடிகிறது.

''தாழ்த்தப்பட்டோருக்கும் பிற்படுத்தப்பட்டோருக்கும் விரோதமான அரசாக இந்த அரசு செயல்படுகிறது. எதிர்க் கட்சிகளின் தலைவர்கள் திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களைத் தீர்த்துக்கட்ட மேலும் முயற்சிகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இவற்றில் முறையான புலன் விசாரணைகளோ சட்டப்படியான நடவடிக்கைகளோ இல்லாதது மட்டுமல்ல; வன்முறைத் தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சிகளை முதலமைச்சர் கேலியும் கிண்டலும் செய்து வருகிறார். எண்ணற்ற பொய் வழக்குகள் போடப்பட்டு, எதிர்க்கட்சிகளை ஒடுக்க எண்ணும் போக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்குப் புறம்பாக அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படாமல் இருக்கிறார்கள். ஊழலற்ற ஆட்சி யென்பது வெறும் உதட்டளவுப் பேச்சாக இருக்கிறதேயல்லாமல் அரசின் மேல் மட்டத்தில் தொடங்கி கீழ்மட்டம் வரையில் லஞ்ச லாவண்யமும், கட்சி நிதி என்ற பெயரால் கட்டாய வசூல்களும் பெருகி வருகின்றன.'' என்ற விவரங்கள் அந்த விளக்கவுரையிலே படிக்கப்பட்டிருக்கிறது.

ஆக இப்படி இரண்டாண்டு காலத்தில் பலவகையிலும் தமிழ் நாட்டு மக்களுக்குப் பாதகமான ஆட்சி நடத்திவரும் இந்த முதலமைச்சரின் ஆட்சியின் மீது நம்பிக்கை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு எடுத்துக்கூறி குற்றச்சாட்டுகளைச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே இந்த அமைச்சரவையின் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்ற இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்.

இதிலே இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். எதிர்க் கட்சியிலே இருக்கின்ற திரு. உமாநாத் அவர்கள் தொழிற்சங்கத்திலே நீண்டநாளாக இருந்தவர்கள். பாராளுமன்றத்திலே பணியாற்றியவர்கள். அவர்களைக் கூட இன்றைக்குத் தாக்குகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. திரு. உமாநாத் அவர்களுடைய வீடு

தாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே நான் திடமாகக் கூற விரும்புகிறேன், இந்த அமைச்சரவையின்மீது நாட்டு மக்கள் நம்பிக்கையை இழந்துவிட்டார்கள் என்று.

இப்போது குறிப்பாக ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். நாட்டிலே நடைபெற்று வருகின்ற முறை பாராளுமன்ற ஜன நாயக முறையாகும். அந்த ஜனநாயக முறை மூன்று அமைப்புக் களைக் கொண்டது. அதாவது லெஜிஸ்லேச்சர், எக்ஸிக்யூட்டிவ், ஜுடீஷியரி என்ற மூன்று பகுதிகள் இருக்கின்றன. அதாவது சட்டமன்றம், நீதித்துறை, நிர்வாகத்துறை என்பதாகும். இந்த மூன்று துறைகளுக்கும் குறிப்பிட்ட அதிகாரங்கள் இருக்கின்றன. அந்த நிலையிலே நாம் பார்க்கும்போது நீதித்துறையைப் பொறுத்த வரையில் சீஃப் ஜஸ்டிஸ் தலைவராக இருக்கின்றார். இன்றைக்கு எக்ஸிக்யூட்டிவ் என்ற முறையிலே நிர்வாகத்தின் தலைவராக கவர்னர் அவர்கள் இருந்தாலும் முக்கியப் பொறுப்புடையவர் முதலமைச்சர் தான்.

[முற்பகல் 11-30]

CONSTITUTION OF INDIA: Article 164:

The Cheief Minister shall be appointed by the Governor and the other Ministers shall be appointed by the Governor on the advice of the Chief Minister and the Ministers shall held office during the pleasure of the Governor ''

Article 164 Clause (5):

The salaries and allowances of Ministers shall be such as the Legislature of the State may from time to time by law determine and, until the Legislature of the State so determines, shall be as specified in the Second Schedule.

அமைச்சர்களுக்கு சம்பளம் இவ்வளவு என்று நிர்ணயிக்கப்பட்டிருக் கிறது. இந்தச் சம்பளத்தை நம் சட்டமன்றம் அனுமதிக்கிறது. அப்படி சட்டமன்றம் அனுமதிக்கிற நேரத்தில் அமைச்சர் பொறுப்பில் இருப்பவர்கள் சட்டத்திற்குக் கட்டுப்பட்டும், சம்பிர தாயங்களுக்கு உள்ளடங்கியும் பணியாற்ற வேண்டிய கடமை அவர்களுக்கு இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

நமது முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி தெரிவிக்கிறார்கள். சினிமாத் தொழிலுக்கு போகலாமா என்ற கருத்தைத் தெரிவித் தார்கள். அதில் எனக்கு எவ்வித ஆட்சேபணையும் கிடையாது. ஆனால் சட்டப் பிரச்னைகளை, சம்பிரதாயங்களைச் சுட்டிக் காட்ட வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

உதாரணத்திற்கு, சீப் ஜஸ்டிஸ், தலைமை நீதிபதி பொறுப்பில் இருப்பவர்கள். தலைமை நீதிபதி பொறுப்பை வகித்துக்கொண்டு மாலை நேரத்தில் ஐந்து மணியானபிறகு லீகல் அட்வைஸ் கொடுக்கும் பணியை அவர்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. அதே மாதிரி அரசில் பணியாற்றிக்கொண்டிருப்பவர்கள் அந்தந்தக் காலகட்டத்தில் செய்யவேண்டிய கடமைகள் இருக்கின்றன. அவர்கள் அதில் முக்கிய கவனம் செலுத்தி பணியாற்றவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். நம் அரசியல் சட்டத்தைப் பொறுத்த வரையில் இருக்கிற விதிகள் அல்லது சட்ட முறைகள் விளக்கமாகயில்லை என்றாலும் அல்லது சில விளக்கங்களை நாம் அறிந்துகொள்ள முடியவில்லையென்றாலும், அப்படியில்லாத வற்றைப்பொறுத்து பிரிட்டிஷ் ஹௌஸ் ஆப் காமன்ஸ் நடைமுறையைப் பின்பற்ற வேண்டும் என்று அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, ஹௌஸ் ஆப் காமன்ஸ் டிபேட்டிலிருந்து ஒரு சில கருத்துக்களைக் கூறுவது உதவியாகயிருக்கும் என்று கருதுகிறேன்.

British House of Commons Debates, 19th June, 1913 : Vol. LXIV (54) லார்ட் ஆஸ்க்வித் சொல்கிறார்கள்,

In the debate on the Marconi affair, the Prime Minister (Asquith) enunciated these principles as follows:

"The first of course . . . is that (1) Ministers ought not to enter into any transaction whereby their private pecuniary interests might even conceivably, come into conflict with their public duty . . . Again (2) no Minister is justified under any circumstances in using officicial information, information that has come to him as a Minister, for his own private profit or for that of his friends. Further (3) no Minister ought to allow or to put himself in a position to be tempted to use his official influence in support of any scheme, or in furtherance of any contract, in regard to which he has an undisclosed private interest . . . (4) no Minister ought to accept from persons who are in negotiation with or seeking to enter into contractual or proprietary or pecuniary relations with the State any kind of favour . . . I will add a further proposition, which I am not sure has been completely formulated, though it has no doubt been adumbrated in the course of these debates, and that is that (5) Ministers should scrupulously avoid speculative investments in securities as to which from their position and their special means of early or confidential information, they have, or may have, an advantage over other people in anticipating market changes.

The Asquith code was reformulated and elaborated in guidance Issued by winston Churchill when Prime Minister, published in House of Commons Debate, 25th February 1952.

1. It is a principle of public life that Ministers must so order their affairs that no conflict arises or appears to arise, between their private interests and their public duties.

2. Such a conflict may ariset if a Minister takes an active part in any undertaking which may have contractual or other relations with a Government Department, more particularly with his own Department. It may arise, not only if a Minister has a financial interest in such an undertaking but also if he is actively associated with anybody, even of a philanthropic character, which might have negotiations or other dealings with the Government or be involved in disputes with it. Furthermore Ministers should be free to give full attention to their official duties, and they should not engage in other activities which might be thought to distract their attention from those duties.

இதில் முக்கியமாக வலியுறுத்த விரும்புவது........

. . . which might be thought to distract their attention from those duties. . .

முதலமைச்சர் கடமையைச் செய்கிற நேரத்தில், அந்தக் கடமையைச் செய்கின்ற நேரத்தில் ஓரளவேனும் பாதகம் ஏற்படும் என்று சொன்னால்கூட அதில் ஈடுபடக்கூடாது என்று வழி வழி வந்த ஜனநாயக நாட்டிஉள்ள பிரதம அமைச்சர் சர்ச்சில் கூறியிருக்கிறார் என்பதை நான் சுட்டிக்காட்டிக் கொள்கிறேன்.

மக்கள் என்ன எண்ணி இவர்களை அனுப்பி வைத்தார்கள்? எம்.ஜி,ஆர். முதலமைச்சர், இவர்களுடைய அமைச்சரவையில் முதலமைச்சராக இருக்கின்ற முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் பரிபூரணமாக தனது முழு நேரத்தையும் இந்த நாட்டு மக்களுக்காகச் செலவிடுவார்கள் என்று மக்கள் நம்பினார்கள். ஆனால் முதலமைச்சர் அடிக்கடி சொல்லுகிறார்கள். அவர்கள் பல்வேறு கருத்துக்களை அடிக்கடி தெரிவித்து வருகிறார்கள். ஆகவே, ஜனநாயகத்திற்குப் புறம்பான வகையில் பேசிக் கொண்டிருப்பதால், இந்த ஆட்சியின் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை. இவர்கள் மக்களிடத்தில் தனது நம்பிக்கையை இழந்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதைச் சொல்வதற்கு இன்னொரு காரணம். இரண்டொரு நாட்களுக்குமுன் பத்திரிகையில் செய்தி வெளிவந்திருந்தது. மைனாரிட்டி கமிஷனுடைய கமிஷனர் ஜஸ்டிஸ் அன்சாரி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் தமிழக அரசுக்கு அனுப்பியுள்ள ரிப்போர்டுக்கு......

Have not even been acknowledged.

வந்து சேர்ந்ததா இல்லையா என்பதற்குக்கூட பதில் தெரிவிக்க வில்லை என்று கூறியிருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு முழு நேரம் இருந்தால் இதில் கவனம் செலுத்தி யிருக்க முடியும். முழு நேரத்தையும் செலவழிக்க முடியாத நிலைமை இருப்பதால் தான் இப்படிப்பட்ட முக்கியமான தவறுகள் ஏற்படுகின்றன என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, முக்கியமான பிரச்னை தமிழ்நாட்டில் இப்போது இருப்பது மொழிப்பிரச்னைதான் முக்கியமாக இருக்கிறது என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. எந்தக் கட்சியாக இருந் தாலும் இன்றைக்குத் தமிழ்நாட்டில் வாழ வேண்டுமானால் மொழியை காப்பாற்றுகின்ற கொள்கையை வைத்துத்தான் இருக்க வேண்டும் என்கின்ற நிலைமை இருப்பதை பார்க்கிறோம். ஆனால் அரசாங்கத்தின் நிலைமை என்னவென்றால் ஒரே குழப்பமான நிலைமையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு மத்திய அரசின் கல்வி அமைச்சர் சுந்தர் என்ன சொல்லுகிறார்? தமிழ்நாட்டு மக்கள் இந்தியை ஆதரிக்கிறார்கள், ஆனால், சில அரசியல் கட்சிகள்தான் இந்திக்கு ஆட்சேபணை தெரிவிக்கிறார்கள் என்று சொல்லுகிறார். மேலும், இந்த மன்றத்தில், கடந்த ஆண்டு, நம்முடைய பிரதம அமைச்சர் மொரார்ஜி தேசாய் இந்திமொழிப்பிரச்னை சம்பந்தமாக முதலமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார் என்ற செய்தி வந்தபோது நான்தான் சபா நாயகர் அவர்களிடம் அரை மணி நேர டிஸ்கஷன் வேண்டும் என்று கேட்டேன். அப்போது தலைவர் அவர்கள் சட்டவிதி களுக்குட்பட்டு அப்போது அனுமதிப்பதற்கில்லை என்று மறுத் தார்கள். அதற்குக் கட்டுப்பட்டு நான் அப்போது ஒரு வார்த்தை கூட ஆட்சேபணையாகத் தெரிவிக்கவில்லை.

ஆனால் அதே பொருள்பற்றி கேள்வி வந்தபோது, கேள்வி அனுமதிக்கப்பட்டது. ஆனால் அதற்குப் பதில் அளிக்கும்போது, in the public interest பொதுநன்மையைக் கருதி பதில் அளிக்க முடியாது என்று, சில குறிப்பிட்ட கேள்விகளுக்குச் சொல்லப் பட்டது. ஏன் அப்போதே அந்தப் பிரச்னையைப் பற்றிச் சொல்லி யிருக்கக்கூடாது? இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை இந்தித் திணிப்பு எதிர்ப்பு கொள்கை என்று திட்டவட்டமாக அன்றைக்கே தெரிவித்திருந்தால் இன்றைக்குப் பிரதம அமைச்சர் இப்படிப் பேச மாட்டார். இன்றைக்கு என்ன சொல்கிறார்? இங்கே வந்து சொல்கிறார், 'இந்தியை படிக்க மாட்டேன் என்று சொல்லுவது தேசப்பற்றுக்கே விரோதமானது......' தேசத்துரோகம் என்று குற்றஞ் சாட்டியிருக்கிறார்கள். இந்த அறிக்கையைப் பார்த்த உடனேயே தேவராஜ் அர்சு அவர்களின் ரத்தம் கொதிக்கிறது. இப்படி சொல்வது நியாயமல்ல என்று சொல்லுகிறார். நம்முடைய முதலமைச்சர் அப்படி சொல்லுகிறாரா என்றால் இல்லை. இப்படி பேசுவது தவறு என்று அறிவித்திருந்தால் நாட்டினுடைய நிலைமை

யிலேயே மாற்றம் ஏற்பட்டிருக்கும் என்று நான் நம்புகிறேன். இந்தச் சபையில் கேட்கிறோம், முதலமைச்சரிடத்தில். இந்தச் சபையை முதலமைச்சர் நம்பிக்கையில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

"You should take this House into confidence"

இந்தச் சபையின் மீது நம்பிக்கை வைத்து அரசு சில விஷயங் களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11—10)

முதல் அமைச்சர் என்ன செய்தார்? உடனே நன்றி தெரி வித்து ஒரு தந்தி அனுப்புகிறார்கள். அதன் நிலைமை இன்றைக்கு என்ன? எல்லா மத்திய சர்க்கார் அலுவலகங்களிலும் இந்தி புகுத்தப்படுகிறது. இரண்டு நாட்களுக்கு முன் நான் கோயம் புத்தூர் போய் இருந்தேன். அங்கே ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் செய்யக்கூடிய ஒரு நண்பரைச் சந்தித்தேன். பெயரை கூற விரும்ப வில்லை. அவர் அந்தத் தொழிற்சாலையின் மூலமான சாமான் களைச் செய்து மத்திய அரசாங்கத்தின் ரயில்வே, போஸ்டல் போன்ற இலாகாக்களுக்கு சப்ளை செய்து வருகிறார். அவருக்கு வரக்கூடிய ஆர்டர்கள் எல்லாம் இந்தியிலே வருகிறது என்று சொன்னார்கள். மேலும் அவர்கள் வருத்தப்பட்டுக்கொண்டு சொன் னார்கள். இப்படியே காலப்போக்கில் தமிழ் நாட்டிற்கு வருகின்ற உத்தரவுகள்கூட இனிமேல் வராமலும் போகலாம் என்று. எனவே, இன்றைக்கு இந்தியானது இந்திய அரசாங்கத்தால் தீவிரமாகப் புகுத்தப்படுகின்றது. எல்.ஐ.சி. புரோமஷனுக்கு என்றால், இந்தி பாஸ் செய்திருக்க வேண்டும். போஸ்டலிலேயும் அப்படித்தான் இந்தி பாஸ் செய்ய வேண்டும். எனவே, இந்தி மொழியானது மிகவும் வேகமாகப் புகுத்தப்படுகின்ற நிலைமையை பார்க்கிறோம். இந்த நிலையைப் பார்க்கும்போது, இன்றைக்கு நம்முடைய ஜனாதிபதி அவர்கள் பேசியதைப் பற்றிக்கூட பத்திரிக்கையிலே பார்த்திருக்கலாம். அவர்கள் ஒரு கல்லூரி விழாவிற்குப் போகிறார். அங்குள்ளவர்கள் ஜனாதிபதியை வைத்துக்கொண்டு இந்தியிலே பேசுகிறார்கள். ஜனாதிபதிக்கு ஆத்திரம் வருகிறது. ஜனாதிபதி என்ன செய்கிறார்? அவர்கள் அதைக் கண்டித்துவிட்டு, தானும் முதலில் தெலுங்கில் பேசிவிட்டு, பின்னர் ஆங்கிலத்திலே பேசு கிறார். எனவே, இந்தச் சர்க்காருக்கு மொழிப்பிரச்னை எப்படி உருவாக்கப்படுகி றது என்ற நிலைமையை எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து மதுவிலக்கு. இதைப்பற்றி நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. காரணம், இதை இந்த அரசு எவ்வளவு தீவிரமாக நிறைவேற்ற வேண்டுமென்று நினைக்கிறதோ, அந்தக் கொள்கையை நானும் கொண்டவன். அப்படி இந்தக் கொள்கை கடுமையாக நிறைவேற்றப்படுகின்றபோது, பழிவாங்கும் நோக்கத் தோடு நடவடிக்கைகளிலே ஈடுபட வேண்டாம், அப்படிக்கூடாது.

என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏன் சொல்லுகிறேன் என்று சொன்னால், இந்த மதுவிலக்குச் சட்டத்தை சாதகமாக எடுத்துக்கொள்ளும் சூழ்நிலையில், சென்னையிலே உள்ள சில அதிகாரிகள் நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி மாறன் அவர்கள் வீட்டிற்கும். அவருடைய சகோதரர் வீட்டிற்கும் சென்று சோதனை செய்வதற்காகக் கதவுகளைத் தட்டுகிறார்கள், அதேபோல் மாவட்டச் செயலாளர் சீதாபதி அவர்கள் வீட்டிற்கும் சென்று கதவைத் தட்டுகிறார்கள். இதுபற்றி ஏற்கனவே புகார் செய்யப்பட்டிருக்கிறது. எனவே, இந்தச் சட்டத்தைத் தீவிரமாக அமுல்படுத்துவதாகச் சொல்லிக்கொண்டு, குற்றமற்றவர்களையும், குற்றம் புரியாதவர்களையும் பாதிப்புக்கு உள்ளாக்கக் கூடாது.

இன்னொரு நிலைமையும் பார்க்கிறோம். இன்றைக்கு நம்முடைய சென்னைத் தெருக்களிலே நடந்துபோனால், போலீஸ்காரர் 'ஊது, ஊது' என்று சொல்லி சாராய வாடைஅடிக்கின்றதா என்று பார்க்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். என்னுடைய டிரைவர் சேகர் என்பவர் என் வீட்டிற்கு அருகிலே சுமார் 4 மணியிலிருந்து 7 மணி வரை உட்கார்ந்திருக்கிறார். அவரைப் பார்த்து ஊது என்று சொல்லும்போது, நான் எம்.எல்.ஏ.-வின் டிரைவர் என்று சொன்னதால் விடப்பட்டார், இல்லாவிட்டால் காவல் நிலயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டிருப்பாரோ என்னவோ தெரியவில்லை. எனவே, மதுவிலக்குச் சட்டத்தை முறையாகச் செயல்படுத்தவில்லை என்று குற்றச்சாட்டைச் சொல்கிறேன். சட்டத்தை உருவாக்கினால் மட்டும் போதாது. அதைச் சரியான முறையிலே 'இம்ப்ளிமென்ட்' செய்யவேண்டும்.

இப்போதுள்ள சட்டத்தின் காரணமாக, இரண்டாம் வகுப்பு மாஜிஸ்திரேட்டுகள் அதிகாரத்தை, அவர்கள் செய்ய வேண்டியவை முதல் வகுப்பு குற்றமாக மாற்றி, முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அதனாலே, இன்றைக்கு அந்த வழக்குகள் எல்லாம் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளுக்குப் போகிறது. அதனால், அங்கே வழக்குகள் எல்லாம் தேங்கி நிற்கின்றன என்பதைப் பற்றியெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அப்படி ஒரு நிலைமை சட்டத்திலே வருமானால், இந்த இரண்டாம் வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளுக்கு முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளுக்கான பவரை ஏற்படுத்தி இருக்கவேண்டும் அல்லது முதல்வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளையாவது அதிகப்படுத்தி இருக்கவேண்டும். ஆனால் இந்த இரண்டையும் செய்யவில்லை, இந்த நிலைமையில் அவர்களுடைய தற்காலிகப் பதவிகள் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கின்றன. 76-லே இதற்காக தி.மு.க. ஆட்சிக் காலத்திலே போடப்பட்ட உத்தரவை நிறைவேற்றாமல், இதை மீண்டும் பரிசிலனை செய்வதாகச் சொல்லி கடந்த மூன்று வருஷங்களாக இது இருந்துகொண்டு வருகிறது. கடந்த ஆண்டு

கூட நான் இதைப்பற்றிக் கேள்வி கேட்டேன். இதைப்பற்றி நான் கேட்டபோது, சட்ட அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி பரிசீலித்து, நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. 75-லே இருந்து இந்த இரண்டாம் வகுப்பு மாஜிஸ்திரேட்டுகள் தற்காலிகமாக இருந்து கொண்டு, அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய இன்கிரிமென்ட், மற்றுமுள்ள சலுகைகள் கிடைக்காமல் நீதிமன்றங்களிலே இருக்கக் கூடிய நீதிபதிகளுக்கே உங்கள் மீது நம்பிக்கை இழந்து விடக்கூடிய நிலைமை இருக்கின்றது என்ற குற்றசாட்டைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்

அடுத்து, விவசாயிகள் பிரச்சினை. இந்த விவசாயிகள் பிரச்சினை பற்றி பெரும் வேகமாகப் பேசப்படுகிறது. ஆனால், அப்படி வேகமாகப் பேச விரும்பவில்லை. ஆனால், இன்றைக்கு இந்த விவசாயிகள் பிரச்சினை மிகவும் பயங்கரமாக உருவெடுத்துக் கொண்டிருக்கிறது. திரு. நாராயணசாமி நாயுடு அவர்களைக் குறைவாகப் பேசுவதால் மாத்திரம், நாம் இதற்குப் பரிகாரம் காண முடியாது. 10, 15 தினங்களுக்கு முன் தாராபுரத்திற்கு 7, 8 மைல்கள் அப்பாலுள்ள என் சகோதரியார் வீட்டிற்கு நான் போகிறேன், போகிற வழியிலே, சாரை சாரையாகக் கட்டை வண்டிகளில், விவசாயிகள் போவதைக் கண்டேன். அதிலே, 60 வயதான பெண்களும், வயதானவர்களும் போவதைக் கண்டேன்.

அத்தனை விவசாயிகளும் நாராயணசாமி நாயுடு கூட்டத்திற்கு போகிறார்கள். இன்றைக்கு நாராயணசாமி நாயுடு ஒரு பெரிய தலைவராக மாறிக்கொண்டிருக்கிறார். என்ன காரணம்? பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தராத காரணத்தால்தான் அந்த நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. விவசாயிகள் பிரச்சினையிலே அரசாங்கம் கவனம் செலுத்தத் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக இன்று அரசாங்கக் கடன்கள் வசூலிக்க முடிவதில்லை. மின்சாரக் கட்டணத்தை வசூலிக்க முடிவதில்லை. இப்படிப் பல்வேறு பிரச்சினைகள் உருவாகியிருக்கும் நேரத்தில் வாக்குறுதிகள் மாத்திரம் கொடுத்து விட்டால் போதுமா? அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன்.

காவிரிப் பிரச்சினை என்னவாயிற்று? நாங்கள் ஆட்சியில் இருக்கும்போது திரு. எட்மண்ட் அவர்கள் எவ்வளவு கடுமையாகச் சாடினார்கள். இன்றைக்கு நிலைமை என்ன? காவிரிப் பிரச்சினை பற்றிப் பேச முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டினார்கள். எதிர்க்கட்சித் தலைவருக்குப் பதிலாக நான் அந்தக் கூட்டத்திற்குப் போயிருந்தேன். அன்று முதலமைச்சர் அவர்கள் என்ன கருத்துத் தெரிவித்தார்கள்? டில்லிக்குப் போய் வந்து மீண்டும் என்ன நிலைமை என்று எதிர்க்

கட்சித் தலைவர்களைக் கூப்பிட்டுச் சொல்லுவதாகச் சொன்னார்கள். அதற்குப் பிறகு மத்திய அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். இதுவரை என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. காவிரிப் பிரச்சினையில் இந்த அரசு முறையாக, தீவிரமாக நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டைச் சுமத்துகிறேன்.

நான் பத்திரிகையில் பார்த்தேன். கர்நாடக காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நஞ்சா கவுடர் என்ற தலைவர் சொல்லுகிறார். மேட்டூர் அணையில் புதிதாக இரண்டு மூன்று திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாக மின்சார அமைச்சர் அவர்கள் சொன்னதாகச் சொல்லி அந்த அறிவிப்பு வந்த உடனேயே எப்படி அனுமதி கொடுக்கலாம் என்று அனுமதி இல்லாமலேயே பல திட்டங்களைக் கர்நாடகத்தில் நிறைவேற்றிய அரசுக் கட்சியைச் சேர்ந்த நஞ்சா கவுடர் அவர்கள் துள்ளிக் குதிக்கிறார்கள். பொதுவாக, காவிரிப் பிரச்சினையில் இந்த அரசு சரியாக நடந்து கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன்.

பரம்பிக்குளம் திட்டத்தைப் பற்றிச் சொல்லி குழந்தைவேலு அவர்கள் சாதிக்பாட்சா பெயரையே கெடுத்து விட்டார் என்று பேசியிருக்கிறார்கள். பரம்பிக் குளம் பாசனத்தில் 1¼ லட்சம் ஏக்கராவை மேலும் சேர்க்கலாம் என்ற உத்தரவு அன்று போடப் பட்டது. அன்று அமைச்சராக இருந்த ப.உ.ச. அவர்கள்தான் போட்டார்கள். அந்த உத்தரவு ஜனாதிபதி ஆட்சிக்காலத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு மீண்டும் இப்போது அது எடுத்துக் கொள்ளப்பட்டதாகச் சொல்லப்பட்டது. கடந்த ஆண்டு பட்ஜட்டில் பரம்பிக்குளம் விஸ்தரிப்புத் திட்டத்திற்காக சுமார் ¼ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் பரம்பிக்குளம் திட்டம் வந்ததா என்றால் இல்லை. மாறாக என்ன வருகிறது? பொள்ளாச்சி பகுதியில் 6,000 ஏக்கரா இந்தப் பாசனத்திலிருந்து நீக்கப் பட்டிருக்கிறது. இதுதான் நியாயமா?

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u>: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் ஏதோ அவர்மேல் குற்றம் சாட்டியதாகச் சொன்னார்கள். பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தைப் பொறுத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கெடுத்து விட்டார்கள் என்று சொன்னதாகச் சொன்னார்கள். எந்த இடத்தில் நான் அப்படி குற்றத்தைச் சாட்டினேன் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தை விஸ்தரிக்கவேண்டுமென்பது திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்த திட்டம். இந்த அரசு அதை மீண்டும் அமுல் படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறது. பரம்பிக்

குளம் திட்டத்தைக் கோடிட்டுக் காட்டி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கெடுத்துவிட்டார்கள் என்று நான் எப்போதும் பேச வில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா:</u> இந்த விளக்கத்திற்கு நன்றி. பரம்பிக்குளம் திட்டத்தை வைத்து என்று சொல்லவில்லை. நம்முடைய அமைச்சர் அவர்கள் எவ்வளவு வேகமாகப் பேசு கிறார்கள் என்ற நிலையைக் காட்டத்தான் சொன்னேன். என்னை பற்றிக் கூறியிருக்கிறார்கள். நான் அதிகமாக அந்தப் பத்திரிகை களைப் படிப்பது கிடையாது. சில நண்பர்கள் கொண்டு வந்து காட்டினார்கள். பார்த்தேன். அன்னை பத்திரிகையில் - 'சாதிக் பாட்சா அவர்கள் அமைச்சராக இருந்தபோது உடுமலைப்பேட்டை தொகுதிக்குக் கெட்ட பெயர் வாங்கிக் கொடுத்து விட்டார்' என்று பேசியிருக்கிறார். உடனே, சர்க்காரியாவிலே குற்றச்சாட்டு என்று சொல்லுகிறார். திரு. ப.உ.ச. அவர்கள் சர்க்காரியா அறிக்கையை கிழி கிழி என்று கிழித்தெறிவேன் என்று இந்த மன்றத்திலே சொன்னார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை. வழக்குப் போடுங்கள், வழக்கைச் சந்திக்கிறோம். உடுமலைப்பேட்டைக்குக் களங்கத்தை உண்டாக்கிய சாதிக்பாட்சா உடுமலைப்பேட்டையில் பேச என்ன அருகதை என்று பேசியிருக்கிறார். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அருப்புக்கோட்டையில் நின்று வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

[முற்பகல் 11.50]

நான் ஆயிரம்விளக்கிலே போட்டியிட்டேன், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அருப்புக்கோட்டையிலே போட்டி யிடுகிறார். ஒரு பழமொழி உண்டு. ஒருவன் இன்னொருவனை நோக்கி ஒரு விரல் நீட்டினால், அவனை நோக்கி மூன்று விரல்கள் காட்டுகின்றன, மேலே ஒரு விரல் காட்டுகிறது. அப்படி மேலே ஒரு விரல் காட்டுவது ஆண்டவனை நோக்கியென்று குசையர்கள் கூறுகிறார்கள். எனவே இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளைச் சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பி. ஏ. பி. திட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லையென்று நான் குற்றஞ்சாட்டுகிறேன். விவசாயிகளுடைய பிரச்சினைகளும் இந்த அரசாங்கத்தால் தீர்க்கப்படவில்லை என்று குற்றஞ் சாட்டுகிறேன்.

அடுத்து வியாபாரிகள் பிரச்சினை. ஒருமுனை விற்பனை வரி கொண்டுவரவேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். தி. மு. க. ஆட்சியிலே சில பொருட்களுக்கு ஒருமுனை விற்பனை வரி கொண்டு வந்தோம். அன்றைக்கு செய்வார் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டது, அதனுடைய ரெக்கமண்டேஷன்கள் நமக்குத் தெரியவில்லை. வியாபாரிகளைப் பொறுத்தவரையில் அவர் களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றவில்லை இந்த அரசாங்கம்.

சிங்கிள் பாயின்ட் டாக்ஸூம் போடவில்லை, வணிகர் நல நிலையம் ஒன்று ஏற்படுத்தவேண்டுமென்று சொல்லப்பட்டு அப்போது முதலமைச்சர் அவர்கள் 1 கோடி ரூபாய் ஒதுக்குவதாக உறுதி யளித்தார்கள், அதற்குள்ளாக அப்போது இருந்த ஆட்சி கலைக்கப் பட்டது. இன்றைக்கும் அதுபற்றி இந்த அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை, குறைந்த பட்சம் அட்வைசரி கமிட்டியை 3 மாதத்திற்கு ஒரு முறை கூட்டுகிறார்களா என்றால் அது கூட இல்லை, ஆகவே வியாபாரிகளுக்கும் இந்த அரசின் மேல் நம்பிக்கை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து தொழிலாளர்கள், தொழிலதிபர்கள், மாணவர்கள், பேராசிரியர்கள், அரசாங்க ஊழியர்கள் ஆகியவர்களுக்கும் இந்த அரசாங்கத்தில் நம்பிக்கை இல்லை; தொழிலாளர்களுடைய அதிருப்தியைப்பற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களும் பேசுவதற்குத் தயாராக இருக்கிறார்கள், நான் அதிகமாக அதுபற்றிப் பேசவில்லை: ஆனால் தொழிலதிபர்களைப் பொறுத்தவரையில்,—தொழில் முன்னேறினால்தான் ஒரு நாட்டினுடைய பொருளாதாரம் முன்னேற்றமடையும்--இன்றைக்குப் பல தொழிலதிபர்கள்--நான் பெயர்களைச் சொல்லமாட்டேன்--அவர்கள் சொல்கிறார்கள். முதலமைச்சரைச் சந்திக்க முடியவில்லையென்று, அது மட்டுமல்ல, சேம்பர் ஆப் காமர்ஸுக்கும் வருவதில்லை, வந்தாலும் எங்களுடைய பிரச்சினைகளைச் சொல்லலாம், நாங்கள் என்ன செய்வது என்று தொழிலாளர்களுடைய அதிருப்தியைப் போல் அவர்களும் அதிருப்திப்பட்டிருக்கிறார்கள்.

மாணவர்கள், பேராசிரியர்களுக்கு இந்த அரசாங்கத்திலே நம்பிக்கை இல்லையென்பதை நாம் இப்போது பார்த்துக் கொண்டிருக்கிறோம். பேராசிரியர்கள் போராட்டம் நடத்தி அவர்கள் கைது செய்யப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே தொழிலாளர்கள், தொழிலதிபதிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், இவ்வளவு பேர்களுக்கும் இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து இந்த அரசாங்கத்தின் முதுகெலும்பாக இருக்கின்ற அரசாங்க ஊழியர்கள், அவர்களுக்கும் இந்த அரசாங்கத்தின்மீது நம்பிக்கை இல்லை. இந்த அரசாங்கத்தின் கொள்கை என்ன? 75 ஆண்டுக்காலம் அனுமதிக்கப்பட்ட ஒரு என். ஜி. ஓ. யூனியன் இருக்கும்போது இன்னொரு யூனியனுக்கு அனுமதி தந்திருக்கிறார் கள். ஆனால் அவர்கள் என்ன சொல்கிறார்கள்? போட்டி அமைப்புக்கள் கூடாது, ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் தான் இருக்கவேண்டும், சங்கத் தலைவர்கள், அந்தத் தொழிலிலே ஈடு பட்டவர்களாக இருக்கவேண்டுமென்றெல்லாம் சொல்லுகிறார்கள். ஆனால் இன்றைக்கு 75 ஆண்டுகளாக ஒரு சங்கம் அனுமதிக்கப்

பட்டிருக்கும்போது இன்னொரு சங்கத்தை அனுமதித்து இருப்பது நியாயம்தானா? எனவே அரசாங்க ஊழியர்களும் நம்பிக்கை இழந்து விட்டார்கள்.

அடுத்து இன்னொரு முக்கியமான பிரச்சினை. இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன், இந்த அரசாங்கம் எப்படி அலட்சியமாக நடந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சேலம் மாவட்டத்திலே ஜேடர்பாளையம் அணைக்கட்டு இருக்கிறது. அங்கே 1977 ஆம் ஆண்டிலே ஏப்ரல் மாதத்திலே ஒரு கசிவு, லீக்கேஜ் ஏற்பட்டது. அந்தக் கசிவைச் சரிக்கட்டுவதற்காக ஒரு திட்டம் போடப் பட்டது, அதற்குக் கிட்டத்தட்ட 48 லட்சம் ரூபாய் அனுமதிக்கப் பட்டது. செலவாகியிருப்பது 36 லட்சம் ரூபாய்தான். இந்த வேலையில் ஊழல் நடைபெற்றிருக்கிறது என்று நான் குற்றஞ் சாட்டுகிறேன். அதைப் பகிரங்கமாகச் சொன்னால் நடவடிக்கை எடுக்கக் கஷ்டமாக இருக்கும் என்று சொல்லி நான் இரகசியமாகக் கடிதம் எழுதி அன்றைக்குப் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த திரு. இராமச்சந்திரனுக்கும் முதலமைச்சருக்கும் விண்ணப் பங்களை அனுப்பினேன். நான் அனுப்பியது மாத்திரமல்ல, அதிலே உள்ள குறைபாடுகளைக் குறித்து 12.8.77 அன்று

the first petition was presented to Hon. Finance Minister at Trichy Circuit House along with Thottiam M.L.A. Thiru Kathamuthu

என்ற முறையிலே அனுப்பப்பட்டது.

Another petition was presented to Hon. Minister for Agriculture along with Kapilarmalai M.L.A. Thiru Sengodan (June 1978)

கொடுத்தாகிவிட்டது. ஆனால் இதுவரையில் ஒரு நடவடிக்கையும் கிடையாது. இதிலே 10 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி குறைந்து 10 லட்சம் ரூபாய் நஷ்டம் என்று சொல்லி கலெக்டருக்கு பொது மக்கள் மனுக்கொடுத்து கலெக்டர் அதைப்பற்றி விசாரித்துக் கொண்டிருக்கிறார்.

இதிலே என்ன குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டிருக்கின்றன என்றால், முதலமைச்சருக்கு அனுப்பிய பெட்டிஷனில் அவைகள் குறிக்கப்பட்டிருக்கின்றன.

1977 ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் ஜேடர்பாளையம் அணையில் இராஜவாய்க்காலுக்குத் தண்ணீர் எடுக்கப்படும் பகுதியில் அணைக்கட்டிற்கு அடியில் இலேசான கசிவு ஏற்பட்டது. 1,000 ரூபாய் செலவு செய்து ரூபாய் 5,000 முதல் 6,000 வரை பில்போட்டு எடுத்துள்ளது. இதற்கு ஒப்பந்தக்காரர் திரு. கே. சண்முகம் என்பவரை கூட்டு சேர்த்து, இளநிலைப் பொறியாளர் திரு. கே. சின்னசாமியே வேலை செய்தார்.

நாமக்கல் தாலுக்கா 1977 புயல் வெள்ளத்தால் பாதிக்கப்படாத பகுதி என அரசுக்குத் தகவல் தந்த அதே அதிகாரிகளால் பிறகு புயல் வெள்ளத்தால் அணை பழுதேற்பட்டுள்ளதாகத் தகவல் தரப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டை ஏற்கனவே தெரிவித்திருக்கிறார்கள்.

சுமார் 30,000 சாக்குகள் செலவழித்துவிட்டு, 1,50,000 சாக்குக்குக் கணக்கு தரப்பட்டுள்ளது. மற்றும் பல பொய்க் கணக்குகள் தயாரித்து சுமார் 2,50,000 ரூபாய் பாழடிக்கப்பட்டு ஓட்டை பெரிதாகிவிட்டதைத் தவிர அடைக்க முடியவில்லை. ஆற்றில் தண்ணீரும் குறைக்கப்படவில்லை. இதனால் கட்டிடத்தின் அடிப்பாகம் பூராவும் ஓட்டை ஏற்பட்டுக் கட்டிடம் கீழே விழுந்து விட்டது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

ஜேடர்பாளையத்தில் கொரம்பு கட்டவும் மோகனூர் வாய்க்காலில் கொரம்பு கட்டவும் அளவு எடுக்காமலே மதிப்பீடு தயாரித்து ஒப்புதல் பெறாமலே வேலை செய்கிறார்கள். 1977-78லும் இதே மாதிரி மோகனூரில் தலைப்பு கொரம்பு கட்டாமலே பொய் பில் ரூ. 50,000 மோசடி செய்யப்பட்டுள்ளது.

இப்படிப்பட்ட விவரங்களையெல்லாம் சொல்லியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனால் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்றால், இந்தத் தவறுகளை யார் சொன்னார்களோ அவர்கள்மீது, தாமோதரன், முனுசாமி என்பவர்கள் விவரத்தைக் கொடுத்தார்கள், அதிகாரிகளிடத்தில் 'த்ரு ப்ராப்பர் சேனல்' தான் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் என்ன நடவடிக்கை அரசாங்கத்தின் சார்பாக எடுக்கப்பட்டிருக்கிறது என்றால், தாமோதரன், முனுசாமி ஆகிய இருவரும் டிரான்ஸ்ஃபர் செய்யப்பட்டார்களே தவிர வேறு நடவடிக்கை எடுக்கவில்லை. ஒருவேளை தாமோதரன், முனுசாமி ஆகிய இருவரும் எங்கள் மீது குற்றச்சாட்டுக்களைச் சொல்லி அப்ரூவராக மாறினால் எடுத்துக்கொண்டிருப்பார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. அரசாங்கத்தின்மீது குற்றச்சாட்டுக்களைச் சொன்னதால் மாற்றிவிட்டார்கள். யார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. அந்தச் சான்றுகள் டிஸ்—அப்பீயர் ஆகக்கூடிய அளவிற்கு, மறைந்து போகின்ற அளவிற்கு நடவடிக்கைகள் இருக்கின்றன என்பதைத் தான் சுட்டிக்காட்ட நான் விரும்புகிறேன்.

இந்த மன்றத்திலே இந்தப் பிரச்னைகளைப்பற்றி எழுப்பிய பொழுது விவசாயத்துறை அமைச்சரவர்கள் சொன்னார்கள், இதைக் கிளப்ப வேண்டாம் என்று சொல்லி நடவடிக்கை

எடுப்பதாகச் சொன்னார்கள். நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்று பார்த்தால் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைத் தான் குற்றச் சாட்டாகச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, வெள்ளச் சேதத்தைப்பற்றி எடுத்துக்கொண்டால், அதிலே முக்கியமான பகுதியாக நான் கருதுவது இராமேஸ்வரம், மண்டபம் வெள்ளச் சேதம். அதையடுத்து உதகமண்டலத்தில் ஏற்பட்ட வெள்ளச் சேதம். இவைகளில் அரசாங்கம் நடவடிக்கை சரியாக எடுத்திருக்கிறதா என்றால் இல்லை என்றே சொல்ல வேண்டும். மண்டபம், இராமேஸ்வரம் பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளச்சேதம் 10 கோடி ரூபாய்க்கு மேல் ஏற்பட்டிருக்கும் என்று சொல்கிறார்கள். அதில் அரசாங்கமாவது, அதிகாரிகளாவது விரைந்து செயல்பட்டார்களா என்றால் இல்லை. அந்தப் பகுதிக்கு நான் சென்றபொழுது—அந்த வெள்ளம் ஏற்பட்ட பிறகு ஒரு வாரம் கழித்துத்தான் நான் போனேன்- அப்பொழுதே நான் பல சேதங்களைப் பார்த்தேன். உயர் அதிகாரிகள் வந்து சேரவில்லை, வரவில்லை. இதில் வேடிக்கை என்னவென்றால், பாம்பன் பாலம் கட்டுகிறார்கள், பாம்பன் பாலம் காண்ட்ராக்டரைப் பற்றி, எப்படியெல்லாம் அவர் அந்தக் காண்ட்ராக்டை வாங்கினார் என்று என்னைவிட நண்பர் ப.உ.ச. அவர்கள் நன்கு சொல்வார்கள், இதே மன்றத்திலே விளக்கியிருக்கிறார்கள். அங்கே போன அதிகாரிகள், இரண்டு மூன்று நாட்கள் கழித்துப் போனவர்கள்-அங்கு ஏற்பட்ட சேதத்தைப் பற்றி விளக்கம் கொடுக்காமல், அதற்கு உடனடியாக நிவாரணம் கொடுக்காமல் தனிப்பட்ட காண்ட்ராக்டருக்குச் சாதகமாக அறிக்கை தருகிறார்கள். இது என்ன நியாயம் என்று கேட்க விரும்புகிறேன்.

பாம்பன் ரோடு பிரிட்ஜ் ஒரு தனிப்பட்ட காண்ட்ராக்டரால் வேலை செய்யப்பட்டு வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சேத விவரங்களைத் திரட்டி அறிவிப்பதற்கு முன்னமேயே ஒரு தனிப்பட்ட நபருக்கு ஏற்பட்டுள்ள சேதத்தைப்பற்றி மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு சேத மதிப்பை மிகைப்படுத்தி அறிக்கைகள் வெளியாகியிருப்பது மர்மமாக இருக்கிறது.

இப்படித் தனிப்பட்ட காண்ட்ராக்டரைப்பற்றி அக்கறை ஏன் என்பதுதான் குற்றச்சாட்டு என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து ஒரு முக்கியமான விஷயம். புயலடித்தது 24-11-78-இல். அன்றுமுதல் 27-11-78 தேதி வரை ராமேசுவர பகுதியில் புயலால் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிடவோ, அந்தப் பகுதி மக்களுக்கு ஆறுதல் கூறவோ அரசு அதிகாரிகள் ஒருவரும் வரவில்லை என்று அங்குள்ள மக்கள் கூறுகிறார்கள்.

26-11-78ம் தேதி மண்டபம் கேம்ப் வரை வந்த அமைச்சர் ராமேசுவரத்திற்கு வரவில்லையென்றும், 28-11-78ம் தேதி யன்று ராமேசுவரத்திற்கு மற்றொரு அமைச்சர் வந்தார் என்றும், 28-11-78-ம் தேதி வந்த அமைச்சரோடுதான் மாவட்ட ஆட்சித் தலைவர் புயலடித்த பகுதிக்கு முதல் முறையாக வந்தார் என்றும் அப்பகுதியிலுள்ள மக்கள் மன வருத்தத்தோடு கூறினார்கள்.

(நண்பகல் 12-00)

வேதாளை என்னுமிடத்தில் ஆறுமுகம் என்னும் மீனவர் படகைக் காப்பாற்றும் முயற்சியில் உயிரிழந்தார் என்றும், அவர் இறந்ததைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் கொடுத்த அறிக்கை தவறானதென்றும், அந்தப் பகுதி மக்கள் வன்மையாக மறுக்கிறார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த ஜகுபர், மாவட்ட ஆட்சித் தலைவர் விடுத்த அறிக்கை உண்மைக்குப் புறம்பானது என்று சொல்கிறார்கள். அங்கு இறந்து போன ஆறுமுகத்திற்கு மனைவியும், குழந்தைகளும் இருக்கிறார்கள். அவருக்கு சீனியம்மாள் என்ற மனைவியும், நான்கு வயது மகள் காளியம்மாள் மூன்று வயது மகள் ஜெயந்தி, இரண்டு வயது மகன் முருகன் ஒரு வயது மகன் முருகவேல் இருக்கிறார்கள். இந்தச் சீனியம்மாளையும் அவருடைய தகப்பனாரையும் நான் நேரில் சந்தித்து..

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> மாண்புமிகு சாதிக் பாட்சா சில பத்திரிகைக் குறிப்புகளைத் தந்தார்கள். அது எந்தப் பத்திரிகை என்பதையாவது தெரிவிப்பார்களா ?

<u>திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :</u> பத்திரிகையை உங்கள் இன்ஃபர்மேஷன் துறையில் வாங்கிப் பார்த்திருக்கிறார்கள். என்னுடைய முழு அறிக்கை இருக்கிறது. அரசாங்கத்திற்கும் இது வந்து சேர்ந்திருக்கிறது. இது என்னுடைய கருத்து. பத்திரிக்கையை நீங்கள் மறுக்கலாம். இது என்னுடைய கருத்து நானே எழுதிய கட்டுரை இது. நானே 3 நாள் போய் பார்த்து எழுதிய விஷயம் இது. ஆகவே, இந்த ஆறுமுகம் இறந்து விட்டார் என்ற செய்தியை அரசாங்கத்திற்குத் தகவல் கொடுக்கும் போது, மாவட்ட ஆட்சித் தலைவர் தவறாகத் தகவல் தந்திருக்கிறார். ஆனால், நான் போய் பார்த்துவிட்டு வந்தபிறகு, ரூ 1,000 அக்குடும்பத்திற்குக் கொடுத்திருப்பதற்காக மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால், இந்தக் குடும்பத்திற்கு யாருமே ஆதரவு கிடையாது. ஆனால், தவறான தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் கொடுக்கிறார். என்ன காரணம்? எப்படி அறிக்கை கொடுத்தாலும் கவனிக்கமாட்டார்கள் என்பதாலேதான் அரசாங்கத்திற்குத் தவறான அறிக்கையினைக் கொடுத்திருக்கிறார்.

எனது கட்டுரையிலே, உடனடியாக செய்யப்பட வேண்டியவை பற்றி முக்கியமான கருத்துக்களைக் கூறியிருக்கிறேன். அவற்றில் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். குடியிருப்புக்களை இழந்தவர்களுக்கு குடியிருப்புகள் கட்டித் தரவேண்டும். மீனவர்கள் மீண்டும் அவர்கள் தொழிலில் ஈடுபடும்வரை இடைக்கால நிவாரணம் அளிக்கப்பட வேண்டும். படகுகளை பழுது பார்க்க அரசாங்கத்தின் மூலம் பண உதவி அளிக்க வேண்டும். நீண்ட கால கடனாகவும் கொடுத்து உதவ வேண்டும். அரசு உதவிகள் படகு வைத்திருப்பவர்களுக்கே கிடைக்கச் செய்ய வேண்டும். தவணை முறையில் படகு வாங்கியிருப்பவர்களுக்கு தவணை முறையில் பணம் செலுத்த தவணையை ஒருவருடம் தள்ளிப்போட வேண்டும். அரசாங்கமே இன்சூரன்ஸ் அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு படகு சேதத்திற்கு பணத்தை வாங்கித் தர முன்வர வேண்டும். கடற்கரை மணலில் புதைந்து கிடக்கின்ற படகுகளை எடுக்க உடனடியாக கிரைன் ஏற்பாடு செய்து மீட்க வேண்டும். விவசாய பூமிகளில் கடல்நீர் உட்புகுந்து பயிர் சேதம் ஏற்பட்டுள்ளது. அவைகளை மீண்டும் விவசாயம் செய்ய பயனுள்ளதாக்கித் தரவேண்டும். அரசு அதன் முழுச் செலவையும் ஏற்றுக் கொள்ளவேண்டும். கடலோரப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு நோய்கள் பரவாமல் தடுப்பு மருந்துகள்-சுகாதார வசதிகள் உடனடியாக செய்து தரவேண்டும். மூளைக் காய்ச்சல் வருகிறது என்று சொல்கிறார்கள். சுகாதார வசதியில்லாததால்தான் இம்மாதிரி வருவதாகச் சொல்கிறார்கள், இராமேஸ்வரத்திலே கூட ஒரு டாக்டர் தான் இருக்கிறார். பிரிதா என்ற பெண் டாக்டர் ஒருவர்தான் அங்கே இருந்து வருகிறார்கள். அரசுத்துறைகள் அனைத்தும் இணைந்து செயல்பட்டு பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள், மீனவர்கள், குடிசைவாசிகள் அனைவருக்கும் நிவாரணமளிக்க சிறப்புத்திட்டம் வகுத்து உடனடியாகச் செயல்படவேண்டும். ஊரணிகளிலுள்ள உப்புத்தண்ணீரை வெளியேற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் (பம்பு செட்டுகள் வைத்து) என்று பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பல அறிக்கைகளை மறுத்து இருக்கிறார். ஆனால், இதற்கு மறுப்பு கொடுக்கவில்லையென்பதால் நான் சொன்னது உண்மைதான் என்று நினைக்கிறேன். அடுத்து நிறைய விஷயம் இருக்கிறது, ஆனால் நேரம் இல்லாததால் விட்டு விட்டேன்.

அடுத்து, ஊட்டியில் நிறைய இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ரூ. 10 கோடி, ரூ. 20 கோடிக்கு மேலாக இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆயிரம், இரண்டாயிரம் ஏக்கர் நிலங்களில் உருளைக்கிழங்கு பாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. அங்கேயும் இருக்கிற விவசாயிகளுக்குக் கடன் உதவி கொடுக்கப்பட்டதா? உதவி செய்யப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. இன்றைக்குச் சொல்லப்படுகிற அளவுக்கு நடவடிக்கையில்லையென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1979 பிப்ரவரி 19

அரசாங்க உதவி கிடைக்க இன்றைக்கு எல்லோருக்கும் உதவி
கொடுக்கிறார்கள். சினிமாத் துறையைப் பற்றி நான் குறிப்பாக
பேச விரும்பவில்லை. ஆனால், இன்றைக்கு சினிமா துறையிலே
இருப்பவர்களுக்கு உதவி செய்கிறார்கள். மாதந்தோறும்
கொடுக்கிறார்கள். அதைப்பற்றி கூட ஆட்சேபணைச் சொல்ல
வில்லை. ஆனால் நிலைமை என்ன என்று பார்க்கும்போது,
புயலுக்குப் பலியானவர்கள் 73 பேர்கள் குடும்பத்திற்கு
ரூ. 2,000 தரப்படும் தமிழக அரசால் என்று அறிவித்துவிட்டு,
சீப் செக்ரட்டரி ஒரு அறிக்கை கொடுக்கிறார். விவரங்கள்
சேகரித்தபிறகு அதற்கான உதவித் தொகை கொடுக்கப்படும்
என்று சொன்னார்கள். சென்னையிலே பலியானவர்கள்
விவரத்தைச் சொல்கிறேன். 1. வீராசாமி (வயது 12), சென்னை
ஜார்ஜ் டவுன் கிருஷ்ணனின் மகன், 2. நாகப்பன் (12) சென்னை
குரோம்பேட்டை ஏகாம்பரம் என்பவரின் மகன். 3. சண்முகம் (11)
குரோம்பேட்டை செல்வம் என்பவரின் மகன், 4. கண்ணப்ப
நாயக்கர் (55), சென்னை வியாசர்பாடி, 5. சந்திரா (45),
கண்ணப்ப நாயக்கரின் மனைவி, 6. சபுபாய் (48), சென்னை
ஆயிரம் விளக்கு. 7. மகேஷ் (8) சென்னை கொத்தவால் சாவடி
நரசிங்கன் மகன். 8. நாகராஜ் (2), மகேஷின் தம்பி. இது
பற்றி நான் ஏற்கனவே பேசியிருக்கிறேன். சென்னையைப்
பொறுத்தவரை இந்த 8 பேர் குடும்பத்திற்கும் இதுவரை
உதவித்தொகை அளிக்கப்படவில்லை. ராஜநர்த்தகிக்கு ஆயிரம்,
என்று சொல்கிற அரசு, இப்படியெல்லாம் இருக்கிற ஏழைகளுக்கு
மாதா மாதம் கூட அல்ல, எந்தவிதமான உதவித்தொகையும்
கொடுக்கப்படவில்லை.

திரு. கே. பன்னை சேதுராம் : தலைவரவர்களே, மாண்பு
மிகு உறுப்பினர் சில பத்திரிக்கைகளில் இருந்து அவைத்
தலைவரின் அனுமதி இல்லாமல் படித்துக்கொண்டு இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே என் அனுமதியை
அதற்காக அவர் பெற்று இருக்கிறார்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திரு. பன்னை சேதுராமன்
இந்தக் கேள்வியை என்னைப் பார்த்து கேட்டு இருக்கக்கூடாது.
நான் அப்படி அனுமதி வாங்காமல் பேச மாட்டேன். தலை
வரிடம் பத்திரிக்கைகளைக் காண்பித்து விட்டு, அதில் உள்ள
குறிப்புகளைத்தான் படிக்கிறேன், என்பதை திரு. பன்னை
சேதுராம் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வசதி படைத்த கலைஞர்களுக்கு மாதம் ஆயிரம் கொடுக்கும்
நிலையில் இப்படி 8 பேர்கள் ஒரு குடும்பத்தில் நாதியற்று இருக்கிற
போது அவர்களுக்கு ஆயிரம் கொடுக்கக்கூடாதா? கோபால
புரத்தில் 1976-ம் ஆண்டில் ஏற்பட்ட தீ விபத்தின்போது ஒருவர்

1979 பிப்ரவரி 19] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

இறந்து விட்டார். அவரின் மனைவி என்னிடத்தில் ஒரு மனு
கொடுத்தார். அந்த மனுவை நான் அரசாங்கத்திற்கு அனுப்பி
வைத்தேன். அந்த அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்த மனுவில்
என்ன சொல்லப்பட்டிருந்தது என்றால், எனக்கு வருமானம் கிடை
யாது, விதவை, வாழ வழியில்லை, அரசாங்கத்தின் மூலம் ஆயிரம்
ரூபாய் கொடுத்தால் ஒரு சில்லரை கடை வைத்துப் பிழைத்துக்
கொள்வேன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த
அரசாங்கத்தில் இருந்து என்ன பதில் அனுப்பியிருக்கிறார்கள்
என்றால், 1976 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஆட்சிக்காலத்தில் நடை
பெற்றது அந்த விபத்து, இப்போது பணம் தர முடியாது என்று
சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய குற்றச்சாட்டு எல்லாம்,
இப்படி வாழ்விழந்த மக்களுக்கு எல்லாம் உதவி செய்கிறோம்
என்று சொல்லிவிட்டு, அப்படிப்பட்ட மக்களுக்கு உதவி
செய்யாமல், ஆயிரம், இரண்டாயிரம் மாதத்திற்கு என்று
வாழ்க்கையில் செம்மையாக உள்ளவர்களுக்குக் கொடுக்கப்
படுகிறது என்பதைக் குற்றச்சாட்டாக நான் சொல்ல விரும்பு
கிறேன். இப்படிப்பட்ட நடவடிக்கை மூலமாக சாதாரண
மக்களும் இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழந்து
இருக்கிறார்கள்.

அடுத்து சென்னை, சென்னையில் மழை, புயல் சேதம் ஏற்
பட்டது. அரசாங்கம் நிவாரணப்பணிகளை பாரபட்சமான
முறையில் செய்து இருந்தால் வரவேற்று இருப்பேன், பாராட்டி
யிருப்பேன். ஆனால் நிலைமை வேறு விதமாக இருந்தது, நான்
வெள்ளச்சேதப் பகுதிகளைச் சுற்றிப்பார்க்கிறபோது ஜெமினி
பிளை ஓவருக்கு கீழே சில குடிசை வாழ் மக்கள் வாழ்ந்து
கொண்டிருக்கிறார்கள், ஒரு ஆளும் கட்சியைச் சேர்ந்த நண்பர்
கார்ப்பரேஷன் கொடுக்கிற அந்த உணவை அந்த பெரிய பாக்கை
வைத்துக்கொண்டு விநியோகம் செய்யும் நேரத்தில் பாரபட்சம்
காட்டக்கூடாது. ஆனால் அங்கு காட்டப்பட்டது. நானும்
பத்திரிக்கையில் அப்போது அறிக்கை விட்டேன். ஆளும் கட்சி
காரர்கள் முன் நின்று இன்னின்னாருக்கு கொடுக்க வேண்டும்
என்று சொன்னால் அதில் தவறு இல்லை. ஆனால் அவர்களே
பொறுப்பு ஏற்றுக்கொண்டு செய்வது நியாயம் இல்லை என்று
தெரிவித்தேன். அதற்குப் பிறகு என்ன நடந்தது? சில இடங்
களில் போலீஸ் வைத்து, மக்களை வரிசையாக நிற்க வைத்து
கொடுத்தார்கள். ஆனால் நிலைமை என்னவென்றால் நான்
அம்பேத்கார் கல்லூரிக்குப் போனபோது அங்கேயும் போலீசார்
லாரிகளில் கார்ப்பரேஷன் அளிக்கும் உணவை ஏற்றிக்கொண்டு
வருகிறார்கள். அதில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்
இருக்கிறார்கள். அவர்கள் தான் இன்னாருக்குக் கொடுக்க
வேண்டும் என்று சொன்னார்கள். நான் சொல்வதைத் தவறாக
எண்ணிவிடக்கூடாது. இதுபோன்று தவறு ஏற்பட்டு இருக்கிறது.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1979 பிப்ரவரி 19

இது மட்டுமல்ல, பணம் லஞ்சம் ஊழல் அங்கே நடைபெற்று இருக்கிறது. அதை ஒரு குற்றச்சாட்டாக நான் சொல்ல விரும்புகிறேன். அறிஞர் அண்ணா பொதுப்பணி மன்றம்-77-வது வட்டம், சென்னை-14. தலைவர் பி. மம்மது, செயலாளர் ஆ. விக்டர். மற்ற ஆபீஸ் பேரர்ஸ் பெயர்களைச் சொல்ல விரும்பவில்லை. அவர்கள் முதல்வருக்கு கொடுத்துள்ள கடிதத்தில் இருந்து குறிப்பாக படித்துக்காட்ட விரும்புகிறேன். அந்தக் கடிதம் துணைச்செயலாளர் ஜி. பரமானந்தம் என்பவரால் கையெழுத்து இடப்பெற்று இருக்கிறது. தேதி 9-2-79. அதில் சொல்லப்பட்டு இருப்பது—''எம். சுப்பிரமணி தான் தவறு செய்ததோடு அல்லாமல் அரசு ஊழியரையும் முறைப்படி தங்கள் அறிவிப்புக்கு மாறாக நடக்க வைத்துள்ளார்.'' இப்படி அக்கடிதத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒரு மன்றம் முதல்வருக்கு கடிதம் எழுதியிருக்கிறது.

[பிற்பகல் 12.10]

அதில் சொல்லியிருப்பது, லஞ்சம், ஊழலை ஒழிக்க வேண்டிய இந்த சுப்பிரமணியம் தன் சுயநலத்திற்காக லஞ்சம் கொடுக்கச் சொல்லியிருக்கிறார். நான் முழுவதையும் படிக்கவில்லை; அதற்கு நேரமில்லை. இவை அனைத்தையும் விசாரித்தபின்தான் இந்த முடிவுக்கு வந்துள்ளோம் என்று முதலமைச்சருக்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

அதோடு அந்த பெட்டிஷனையும் வாங்கி அனுப்பியிருக்கிறார். பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி அளிக்கப்பட்டது. அதாவது இராயப்பேட்டை, 77-வது வட்டத்தில். ரெவின்யூ அதிகாரி-தாசில்தார் அலுவலகத்திலிருந்து வந்து 9 டோக்கன்களை இந்த அ. இ. அ. தி. மு. க. மாஜி கார்ப்பரேஷன் M. C சுப்பிரமணியத்திடம்—100 ரூபாய்க்கான டோக்கன்கள் 9—கொடுத்துவிட்டுச் செல்கிறார். ஆனால் அந்த டோக்கன்கள் உண்மையிலே பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படாமல் பாதிக்கப்படாதவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக அவர்களிடமிருந்து சுப்பிரமணியம் பணம் பெற்றுக்கொண்டார்.

இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள். இந்த விஷயமாக பாதிக்கப்பட்டவர்கள் கையெழுத்திட்டு—சில கையெழுத்துக்கள் உருது மொழியிலும் இருக்கின்றன; அவைகளை எல்லாம் படிக்க நேரமில்லை—5-2-77-ந் தேதியில் இராஜாஜி மண்டபத்தில் அப்துல் காதரிடம் கொடுத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட அக்கிரமம் செய்யும் எம். சுப்பிரமணியத்தின் மீது ரெவின்யூ இன்ஸ்பெக்டர் தக்க விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பெட்டிஷன் கொடுத்திருக்கிறார்கள். இவைகளைப் பார்க்கும் போது இந்த அரசின்மீது பொதுமக்கள் நம்பிக்கை இழந்து விட்டார்கள் என்பது தெரிகிறது.

1979 பிப்ரவரி 19] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

அதிகாரிகள் கணக்கு எடுத்திருந்தால் நியாயமாக எடுத்திருப்பார்கள். நண்பர்களுக்குத் தெரியும்; திரு. இராமச்சந்திரன் அமைச்சரவர்களுக்கும் தெரியும். ஆயிரம் விளக்கு உசேன்—அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளர். பாதிக்கப்பட்டவர்களுக்கு 50 கிலோ அரிசியும், 100 ரூபாயும் வழங்கப்படும் என்ற பட்டியலில் வரக்கூடியவர்கள் விவரம் தயாரிக்கப்பட்டது. அந்த பட்டியலில் இடம் பெற வேண்டியவர் இந்த உசேன். ஆனால் அவர் தி. மு. க. வைச் சேர்ந்தவர் என்ற காரணத்தால் அவருடைய பெயர் விடப்பட்டது. இதற்கு முக்கியமான காரணம் ஆளும் கட்சிக்காரர்களின் தலையீடுதான் என்பதில் சந்தேகமில்லை. 72-வது வட்ட மக்கள் ஊர்வலமாகச் சென்று மனு கொடுத்தார்கள். நேற்று ஜனதா கட்சியின் சார்பாக தாய்மார்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். இத்தகைய பல்வேறு தவறுகள் ஆளும் கட்சிக்காரர்களால் அல்லது அவர்களுடைய தலையீடுகளால் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

கடந்த 1977 ஆம் ஆண்டு வெள்ளத்தின்போது வீடு இடிந்து, அந்த வீட்டில் புருஷனும் மனைவியும் இறந்து விட்டார்கள் பெரம்பூரில். அதுபற்றிய குறிப்பு அனுப்பப்பட்டும், காவல் துறையினர் விசாரித்து ரிப்போர்ட் கொடுத்த பிறகும் அவர்களுக்கு அறிவிக்கப்பட்ட உதவி இன்னும் கிடைக்கவில்லை.

இன்றைக்கு ஆளும் கட்சியினர் தலையீடு எப்படியெல்லாம் இருக்கிறது என்பதற்கு இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். எ. டி. பி. கிரேடு 2 செலக்ஷன் நடைபெறுகிறது. அதற்கு இன்டர்வியூ நடந்தது. கமிஷனர் ஆஃப் போலீசும், சீஃப் மெட்ரோபாலிடன் மாஜிஸ்ட்ரேட்டும் இன்டர்வியூ நடத்தினார்கள். 3-3-1978-ல் இன்டர்வியூ நடைபெற்றது. பண்ணை சேதுராமன் அவர்கள் நான் சொல்வதை ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். சாதாரணமாக தேர்வு எப்படி நடைபெறும் என்றால் இன்டர்வியூவில் யார் யார் கலந்து கொள்கிறார்களோ அவர்களிலிருந்துதான் தேவைப்பட்டவர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். இதுதான் முறை, ஆனால் இங்கே வேடிக்கை என்னவென்றால் இன்டர்வியூவில் கலந்து கொள்ளாத ஒருவர், ஏ. இராதாகிருஷ்ணன் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்; அவர் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்ல, நியமிக்கப்பட்டிருக்கிறார் அரசாங்கத்தினால். இன்டர்வியூ வைக்காமல் நியமிக்கப்பட்டிருந்தால், ஒரு வேளை அது அரசாங்கத்தின் நடவடிக்கை என்று நினைத்துக்கொள்ளலாம் அல்லது அரசாங்கத்தின் விருப்பம் என்று நினைத்துக் கொள்ளலாம் இன்டர்வியூவில் கலந்து கொண்டவர்கள் தகுதி இல்லை என்றால் அதை விட்டுவிட்டு, இன்னொரு இன்டர்வியூ நடத்தியிருக்கலாம். அதுவும் செய்யவில்லை. இன்டர்வியூவில் கலந்து கொண்டவர்கள் ஒவ்வொருவரும் தனக்குத்தான் வேலை கிடைக்கும் என்று

காத்துக்கொண்டிருப்பார்கள். ஆனால் அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்காமல் எப்படி இந்த பதவி நியமனம் நடைபெற்றது? அதற்கு என்ன பின்னணி யாருடைய தலையீட்டினால் இப்படி நடைபெற்றது என்ற அளவுக்கு கீழே போய் பேச நான் தயாராக இல்லை. இவைகளைப் பார்க்கின்ற மக்கள் இந்த அரசின்மீது நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்பதை எடுத்துக்காட்டு வதற்காகவே இங்கே குறிப்பிடுகிறேன்.

எக்மோர் கோர்ட்டில் வக்கீல்கள் தாக்கப்பட்டதைப்பற்றி சொன்னார்கள். ஆக, இந்த அரசின்மீது வக்கீல்களும் நம்பிக்கை இழந்துவிட்டார்கள், பொது மக்களும் நம்பிக்கை இழந்து விட்டார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் சட்டம் ஒழுங்கு பற்றி விரிவாக பேசுவார்கள். இந்த சட்டம் ஒழுங்கு பிரச்சனை இன்றைக்கு ஒரு பெரும் பிரச்சனையாகிவிட்டது. சட்டம் ஒழுங்கு சரியில்லை என்றால் அரசாங்கம் முறையாகச் செயல்பட வில்லை என்றுதான் அர்த்தம். பிரேமா கொலை வழக்கு, முருகையன் கொலை வழக்கு போன்ற பல்வேறு சம்பவங்களில் இந்த அரசு முறையாகச் செயல்படவில்லை என்று நான் குற்றஞ் சாட்டுகிறேன். பிரேமா கொலை வழக்குபற்றி பேசி, பேசி தீர்ந்துவிட்டது. இதுவரையில் குற்றவாளி யார் என்று கண்டு பிடிக்கப்படவில்லை. திறமையற்ற அதிகாரிகளா என்றால் நிச்சயமாக இல்லை. மிகத் திறமைமிக்க அதிகாரிகள் எல்லாம் இங்கே இருக்கிறார்கள்; அவர்கள் திறமையில் எனக்கு சந்தேகம் இல்லை. ஆனால் திறமையற்ற சர்க்கார்தான் அதற்குக் காரணம், ஆளும் கட்சியினர் தலையீடுதான் காரணம், அதனால் தான் பிரேமா கொலை வழக்கில் குற்றவாளிகளை கண்டுபிடிக்க முடியவில்லை என்று குற்றஞ்சாட்டுகிறேன்.

மதுரை இளஞ்செழியன் கொலை வழக்கு என்ன நிலைமையை அடைந்தது என்பது தெரியும். பழக்கடை பாண்டியன் என்பவர் களால் கொடுக்கப்பட்ட கம்ளயின்ட் விசாரிக்கப்படாமலேயே ரத்தாகிவிட்ட நிலைமையைக் காண முடிகிறது.

அடுத்து சேரன் ட்ரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் ஊழியர் பற்றிய விஷயம். கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களைப் பொறுத்த வரையில் இது மிக முக்கியமான பிரச்சினை. விஸ்வநாதன் என்பவர் உயிரோடு எரிக்கப்படுகிறார். மாண்புமிகு அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் கூடச் சென்று பார்த்தார் என்று சொல்லப்படுகிறது. அந்த வழக்கு ஒரு கொலை வழக்கு. அது கொலை வழக்கா என்ற சந்தேகம் கிளப்பப்பட்டு கடைசி யில் அது 'தமிட்டட் சூசைட்' என்கின்ற நிலைமைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்போது, இந்த நாட்டில் சட்டம், ஒழுங்கு காப்பாற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டைத்தான் நான் சொல்லவிரும்புகிறேன்,

அடுத்து சமீபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. முருகையன் அவர்கள் கொலை செய்யப்பட்டது அனைவருக்கும் தெரியும். அது பற்றிக்கூட இங்கே பேசப்பட்டது. இந்தப் பிரச்சினையைப் பார்க்கின்றபோது திரு. மிஸ்ரா என்பவரின் கொலை வழக்கு பற்றிய நிகழ்ச்சி நினைவுக்கு வருகின்றது. அந்த வழக்கிலே அவருடைய மனைவி ஒரு அறிக்கை கொடுத்திருந்தார், தான் கூட சரியாக விசாரிக்கப்படவில்லை என்று. அதே போன்று திரு. முருகையன் அவர்களுடைய மனைவியும் தன்னை விசாரிக்காமலே வழக்கு சென்று கொண்டிருக்கிறது என்கின்ற ஒரு அறிக்கையைக் கொடுத்திருக் கிறார். ஆகவே ஒருவர் இறந்துவிட்டார் என்ற அளவில் அவருடைய மனைவியைக் கூட விசாரிக்காத நிலை இருக்கின்றது அவர் விசாரிக்கப்படாமலேயே நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாக முடித்துக் கொண்டால் நல்லது. நிறையபேர் பேசவேண்டியிருக்கிறது. 3/4 மணி நேரத்திற்கு மேல் பேசிவிட்டீர்கள். சீக்கிரம் முடித்தால் நல்லது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இன்றைக்கு இன்னும் இரண்டு பேர் பேசவேண்டி இருக்கிறது. அது எப்படி முடியும் என்பதைத் தாங்கள் எண்ணிப்பார்த்து திரு. சாதிக்பாட்சா அவர்கள் பேசி, பிறகு ஒருவர் மட்டும் பேசுகின்ற வகையில், திரு. சாதிக்பாட்சா அவர்களுக்கு கொஞ்சம் நேரம் அதிகம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்கும் நிறையபேர் பேசவேண்டி இருக்கிறது. ஆகவே திரு. சாதிக்பாட்சா அவர்கள் சுருக்கமாக முடித்துக்கொண்டால் நல்லது.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, இன்றைக்கு மதிப்பிற்குரிய திரு. சாதிக்பாட்சா சாகிப் அவர்கள் இன்னும் கொஞ்சம் நேரத்தை எடுத்துக்கொள்வார்கள் என்று நினைக் கிறேன். ஆகவே எனக்கும் நேரம் தேவை என்பதால் சொல் கிறேன்; நான் வேண்டுமானால் நாளை பேசிக்கொள்கிறேன். இன்றைக்கு இடையில் நான் பேசினேன் என்றால் மிகக் குறைவான நேரம் தான் கிடைக்கும். ஆகவே நான் நாளை பேசிக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, அடுத்து உளி வீச்சு சம்பவத்தைப பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இந்த விஷயத்தில் உள்ளே நான் போக விரும்பவில்லை. ஆனால்

இந்தச் சம்பவத்தின் தொடர்பாக செபஸ்டியன் என்பவர் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவருடைய மாமன் கேபிரியல் என்பவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அக்கடிதத்தில் வள்ளியூரிலிருந்து 12 மைல் தூரத்திலுள்ள ராதாபுரம் என்ற இடத்தில் நடந்த இச் சம்பவத்திற்கு ஒரு தனி நபர் மட்டும் காரணமாக இருக்க முடியாது என்றும், அது ஒரு திட்டமிட்டுச் செய்யப்பட்ட சதியே என்றும் புலன் விசாரணைகளை மறைக்கின்ற வகையிலேதான் செபஸ்டியன் ஒருவர் மீது மட்டும் 307 இ. பி. கோ. என்ற செக்ஷன்படி வழக்கு போடப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

[பிற்பகல் 12.20]

ஆக, இன்று ஒரு பின்னணி இருக்கிறது, அந்த மூடிமறைக்க முயற்சி செய்வதுதான் குற்றச்சாட்டு என்பதில் இடம் பெறுகிறது போலீஸ் தரப்பில் இருந்து மாஜிஸ்ட்ரேட்டிடம் கொண்டுபோய் ரிமாண்ட் கோரப்படுகிறது.

Remand Report Crime No. 57/79, sections 429 and 307, I. P. C. The accused Sabastian is a member of the A.I.A.D.M.K.

என போலீஸ் அதிகாரி எழுதுகிறார். ராதாபுரம் எம். எல். ஏ. யூசுப் அவர்கள் திட்டவட்டமாக மறுக்கிறார், நிரூபித்தால் ராஜிநாமா செய்கிறேன் என்று சொன்னார்கள். அவர் என் நண்பர். அவர் இங்கே இருக்கத்தான் வேண்டும். ஆனால் அவர்கள் உண்மையைப் புரிந்து கொள்ளவேண்டும் என்று மட்டும்தான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு யா. சை. மு. யூசுப்: இன்னும் திட்டவட்டமாக மறுக்கிறேன். சபாஸ்டின் என்று சொல்லக்கூடியவர் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்தவர் அல்ல. ஆகவே என் சவால் இன்னும் அப்படியே இருக்கிறது.

** ** ** **

திரு. ஜே. ஜேம்ஸ்: * இந்த அவையில் இல்லை. அவரைப் பற்றி எனக்குத் தெரியாது, தெரிவதற்குள்ள வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்களுக்குப் பேச நிறைய நேரம் இருக்கிறது. அப்போது பதில் சொல்லிக் கொள்ளலாமே இப்போது குறுக்கிட வேண்டுமா? தாங்கள் பேசும்போது குறிப்பிட்டுப் பேசலாம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

திரு. ஜே. ஜேம்ஸ்: நண்பர் யூசுப் அவர்கள் சொல்வது பத்திரிகைகளில் வரும் என்று சொன்னால் அது உண்மையா பொய்யா என்று தெரிந்து கொள்ள வாய்ப்பில்லாத சூழ்நிலை ஏற்படும் என்பதால் அவர்கள் அப்படிச் சொல்லியிருப்பதை குறிப்பிலிருந்து நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் இல்லை என்று சொல்வதை மட்டும் வைத்துக் கொண்டு இன்னொரு கட்சியின் பெயரைக் குறிப்பிட்டதை நீக்குவது நல்லது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. யூசுப் பேசியதை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

* * *

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஒரு கட்சி உறுப்பினர் தவறு செய்தார் என்றால் அதனால் அந்தக் கட்சிக்கே களங்கம் வந்துவிடும் என்று சொல்ல முடியாது. உண்மை நிலையை ஏற்றுக்கொள்ளவேண்டும். இப்போது அந்த இன்ஸ்பெக்டர் மாற்றப்பட்டிருக்கிறார் என்று தகவல் வந்திருக்கிறது. அங்கே போஸ்ட் செய்த டெப்டி சூப்பரிடெண்ட் டெண்ட் ஆப் போலீஸ் திருச்சியிலிருந்து வந்து 'ஜாயின்' செய்வதற்கு முன்னால் கோவைக்கு மாற்றப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே மூடிமறைத்துப் பேசுவது குற்றச்சாட்டைப் பலப்படுத்துவதாக ஆகிறது. அதுமட்டுமல்ல, அந்தக் குற்றவாளியை ரிமாண்ட் செய்த பிறகு இரண்டு நாட்களுக்குப் பிறகு போலீஸ் ஒரு விண்ணப்பம் கொடுக்கிறது. அவருக்கு 'மூளைக் கோளாறு' ஆகவே 'ஆப்சர்வேஷன்' வைக்கவேண்டும் என்று சொல்லி. நானும் பதினைந்து ஆண்டுகளாக வக்கீலாக பணிபுரிந்துகொண்டு வருகிறேன். சாதாரணமாக எதிரிதான் தனக்கு மூளைக் கோளாறு என்று சொல்லி டிபன்ஸ்க்கு தயார் செய்து கொள்வார்கள். ஆனால் அரசாங்கமே இப்படி டிபன்ஸ்க்கு தயார் செய்து கொடுக்கலாமா? அடுத்து, தாழ்த்தப்பட்டவர்கள்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். விழுப்புரம் பற்றியெல்லாம் பேச நேரமில்லை. ஒரு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. Memorandum No. 88876/MK/74, dated 4-7-1975 issued by Rural Development and Local Administration Department.

SUB : Establishment — Municipal Councils Township Committees and Madurai Corporation — Recruitment of sons/

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

daughters/near relatives who die in harress — procedure for recruitment through the Employment Exchage — Relaxation ordered — Amendment — Issued,

REF : 1. G. O. Ms. No. 2535. RD. A., dated 6-12-1972.

*** *** ***

In modification of the orders issued in para. 2 of G. O. cited relaxing the general procedure of recruitment through Employment Exchange in favour of the sons and daughters/near relatives who would take care of the family of an employees of the Municipal Councils, Township Committees and Corporation of Madurai, the Government direct—

*** *** ***

முனிசிபாலிட்டி, டவுன்ஷிப், கார்ப்பரேஷன் இவற்றில் பணியாற்று
இறவர்கள் பணியாற்றும் காலத்தில் இறந்துவிட்டால் அவர்கள்
குடும்பத்திலுள்ள அவர் வாரிசுதாரருக்கு வேலை கொடுக்க
வேண்டும் என்று 1975-ல் உத்தரவுப் போடப்பட்டிருக்கிறது.

There is another G. O.

G. O. Rt. No. 351. Health and Family Welfare Department, dated 5-4-1978

Read again : G, O. Rt. No. 1841, Labour and Employment, dated 17-8-1977.

*** *** ***

Implementation of Justice Gajendra Gadkar Report :

(a) Preference to the heirs of existing sanitary worker in appointment as sanitary workers :—

சானிடரி வொர்க்கர்ஸ்-ஐக் அதிகமாக தாழ்த்தப்பட்ட மக்கள் தான் வேலை செய்து வருகிறார்கள். அவர்களுக்கு கொடுக்கப் பட்டிருந்த சலுகைக்கு இப்போது என்ன ஏற்பட்டிருக்கிறது என்றால்......

At present, if a sanitary worker dies in harness during his service, his son or daughter or his relative is given employment relaxing the general procedure of recruitment through Employment Exchange. If the request of giving preference to the

heirs of the existing sanitary workers in the matter of apointment of sanitary workers is conceded, only the heirs of sanitary workers will get appointment without any opportunity to others. The facility of appointing the heirs of sanitary workers will, in no way improve the lots of sanitary workers. The Government therefore decline to accept the request of the sanitary workers. என்று கொடுக்கப்பட்ட சலுகை இதன் மூலம் மறுக்கப்பட்டிருக்கிறது. உரிமைப்போட்டையில் காளியம்மாள் என்பவர் காலமாகிவிட்ட தன்னுடைய கணவருடைய வேலை தனக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டபோது, இவ்வாறு மறுக்கப்பட்டிருப்பதாக சொன்னார்கள். இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய சேலம் பேச்சு. விலைவாசி போராட்டத்தின் போது, நாம் எல்லாம் சிறை சென்றோம். சிறை சென்று வெளியே வருகின்ற நேரத்தில் தான் சீன ஆக்கிரமிப்பு நடைபெற்றது. அப்போது அண்ணா அவர்கள் சொன்னார்கள். 'சுவர் இருந்தால் தான் சித்திரம் எழுதலாம், அதே போன்று இந்திய நாட்டை பாதுகாத்து வைத்திருந்தால்தான் நமது கோரிக்கைகளை கேட்டு உரிமைகளைப் பெற முடியும்' என்று மிகுந்த அக்கறையோடு சீன ஆக்கிரமிப்பைப் பற்றி அப்போது சொன்னார்கள். அதை யாரும் மறந்து விட முடியாது. ஆனால் நமது முதலமைச்சர் அவர்கள் சேலத்தில், பேசிய பேச்சு 'தென்னகத்தில்' வந்திருக்கிறது. அத்தனையையும் நான் வாசிக்கவில்லை, குறிப்பிட்ட வாக்கியத்தை மட்டும் வாசிக்கிறேன். "இன்னொன்றும் சொல்லுகிறேன். தமிழைக் காக்க எங்களை விட்டால் வேறு யார் என்று நீங்கள் பேசினீர்கள். ஆனால் அன்றைக்கு இந்திய அரசின் பாதுகாப்பு நிதிக்கு நிதி திரட்டி கொடுத்தீர்கள். தமிழ்மொழி மீது பற்று இருந்தால் நீங்கள் அன்று நிதித்திரட்டிக் கொடுத்திருப்பீர்களா ......" இதைப் பார்த்தால் இந்திய பாதுகாப்புக்குரிய செயலாக அமைந்திருக்கிறது. இதன் காரணமாகத்தான் இந்த அரசாங்கத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கையில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கடைசியாக, ஒரு விஷயத்தைப்பற்றிக் குறிப்பிட்டு சொல்ல விரும்புகிறேன். சட்டத்தின் முன்னால் எல்லோரும் சமம் என்று சொல்லுகிறார்கள். சட்டத்தின் முன்னால் எல்லோரும் சமம் என்கின்ற நிலை இருந்து வருகிறதா என்றால், இன்றைக்கு அமைச்சருக்கு ஒரு சட்டம், எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒரு சட்டம் என்ற நிலைமை தான் இருந்து கொண்டிருக்கிறது.

ஒரு விஷயத்தை இங்கு சொல்ல விரும்புகின்றேன். இன்றைக்குக் கூட நமது அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் தலையிட்டுப் பேசினார்கள். அவர்கள் மீது ஒரு வழக்கு, செக்ஷன் 147, 149, 323, 324, 452 ஐ. பி. ஸி. இந்த செக்ஷன்களில் சி. சி. 6/77 என்ற நம்பரில் எ. எஸ். எம். கோர்ட் கோயம்புத்தூர்—இங்கு ஒரு வழக்குப் பதிவாகி விசாரணைக்கு வந்திருக்கிறது. அதே நேரத்தில் ஒரு பிரைவேட் கம்ப்ளைன்ட் ஒன்றும் இருக்கிறது. சி. சி. 4/77 என்று வழக்கு இருக்கிறது. இதில் கம்ப்ளைனன்ட் நாராயணசாமி — வெர்ஸஸ்—(எதிராக) சுவரன் அன்ட் 12 அதர்ஸ்–. சி. சி. 6/77—ல் குழந்தைவேலு அன்ட் 18 அதர்ஸ்– என்று ஒரு வழக்கு. இவைகள் இப்போது 79–ம் ஆண்டில் விசாரணைக்கு வந்திருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் மீது வழக்கு என்றால் நாங்கள் அத்தனை பேரும் கோர்ட்டுக்குப் போக வேண்டும். இதில் அமைச்சர் போவதேயில்லை. இந்த நிலைமையில் தான் சட்டம் நடந்து கொண்டிருக்கிறது. எனவே நாட்டிலுள்ள பொதுமக்கள், தொழிலாளர்கள், மாணவர்கள் இவர்களுக்கெல்லாம் இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லை என்பதைத்தெரிவித்து நான் கொடுத்திருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u> : தலைவர் அவர்களே, சி. சி. 6/77 என்கின்ற வழக்கு கோயம்புத்தூர் கோர்ட்டில் பெண்டிங்–கில் இருக்கிறது. அதற்கு சி. ஆர். பி. சி. 205–ன் படி மனு போடப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அருமை அண்ணன் சாதிக் பாட்சா அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மனு போடாமல் எந்த வழக்கும் காலதாமதப்படுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, இந்த வழக்கு யாரால் 'தூண்டி விடப்பட்டுப் போடப்பட்டது என்பதும் அருமை அண்ணன் சாதிக் பாட்சா அவர்களுக்குத் தெரியும் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

<u>திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா</u>: நான் சொல்ல விரும்புவது, இதில் சட்ட அமைச்சர் அவர்களும் அக்கறை எடுத்துகொள்ள வேண்டும். இந்த வழக்கு 77—ம் ஆண்டிலிருந்து பெண்டிங்–காக இருக்கிறது. சாதாரணமாக கிரிமினல் வழக்குகள் மூன்று மாதங்களுக்குள் முடிக்கப்பட வேண்டும் என்று நியதி இருக்கிறது. இந்த நிலைமை தனிப்பட்டவர்கள் யாருக்காவது இருந்திருந்தால் இதற்குள் அரஸ்ட் வாரண்ட் போட்டு, எத்தனையோ தொல்லைகள் கொடுத்திருப்பார்கள். அதற்காகத்தான் இந்த நிலைமை இருப்பதை தெரிவித்தேன். இத்தகைய காரணங்களால் இந்த நாட்டிலுள்ள மக்களுக்கு இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு இதில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றிகூறி முடித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12.30]

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> ; பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. எம், ஜி. இராமச்சந்திரன் தலைமையிலுள்ள அமைச்சர் அவையின் சட்டம், ஒழுங்கு பற்றிய கொள்கையை இம்மாமன்றம் நிராகரிக்கின்றது என்ற தீர்மானத்தை ஏற்கனவே முன்மொழிந்திருக்கிறேன். அந்தத் தீர்மானத்தையொட்டி சிலக் கருத்துக்களைச் சுருக்கமாகக்கூற விரும்புகின்றேன்.

இந்த அவையில் இருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானம் அதேபோல் தொழிலாளர்கள் கொள்கை சம்பந்தமான தீர்மானம், சிறுபான்மையோர் உரிமை சம்பந்தமான தீர்மானம் ஆகியவைகளில்மேல் இந்த அரசாங்கத்தின் கொள்கைகளைக் கண்டிக்கின்ற தீர்மானங்களை ஆதரித்தாலும், சட்டம் ஒழுங்கு என்ற தீர்மானத்தின் மீது மட்டும் நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகின்றேன்.

லா அன்டு ஆர்டர் என்ற உரிமை மாநில அரசுகளுக்கு அரசியல் சட்டத்தின் அடிப்படையில் 'எக்ஸ்குளுசிவ்' வாக மாநில அரசுகளுக்குமட்டுமே இந்த அரசியல்சட்டத்தில் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த உரிமையில் வேறு எந்த அதிகாரமும் தலையிட முடியாது. ஆக, அவ்வளவு நம்பிக்கையோடு இந்த அதிகாரம் அல்லது கடமையை அரசியல் சட்டம் மாநில அரசுகளுக்குக் கொடுத்திருக்கிறது என்று சொன்னால், மாநில அரசுகளை நடத்திச் செல்லக் கூடிய அரசுகள் உண்மையிலேயே நேர்மையோடும், நீதியோடும் இந்தக் கடமைகளை ஆற்றுவார்கள் என்று அன்றைய தினம் அரசியல் சட்டத்தை அமைத்த பெரியோர்கள் எண்ணியிருந்தார்கள். ஆனால், இன்றைய தினம் இந்த மாநிலத்தை ஆளுகின்ற அரசு செயல்படுகின்ற முறைபற்றி அரசியல் சட்டத்தை இயற்றியவர்கள்தெரிந்திருந்தால், அரசியல் சட்டத்தை அதற்குத் தக்கபடி இந்த அரசுகள் இந்த உரிமைகளை கடமைகளை ஒழுங்காக நிறைவேற்ற மாட்டார்கள், அதனால் மக்களுக்குப் பெருந் தொல்லை ஏற்படும் என்று நினைத்து, முறையாக அரசியல் சட்டத்தை இயற்றியிருப்பார்கள். ஆனால், இந்த எதிர்பார்ப்பு இல்லாததன் காரணமாக, இம்மாதிரி யெல்லாம் நடக்குமென்று அரசியல் சட்டத்தை அமைத்தவர்கள் நினைக்காததன் காரணமாக, துரதிருஷ்டவசமாக இந்த அதிகாரம் மாநில அரசுகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த அதிகாரத்தை சாதாரணமாக மாநில அரசுகளில் முதல் அமைச்சர் தான் வகிப்பது வழக்கம். காரணம், முதல் அமைச்சர் தான் பொறுப்பாக இந்த நிர்வாகத்தை நடத்துவார் என்ற பொதுவான நம்பிக்கை. ஆக முதல் அமைச்சர் இந்தப் பொறுப்பை அவருக்கு கீழ் ஒரு போலீஸ் இலாகா அமைத்து சட்டம், ஒழுங்கு ஆகியவைகளை நிறைவேற்றுவதற்கு அமைத்

திருப்பதை நாம் அறிவோம். இந்த அளவுக்குச் செயல்படுகின்ற இந்த அரசு, 'சட்டத்தின் முன்னால் எல்லோரும் சமம்' 'all are equal before Law' என்ற கொள்கையின் அடிப்படையிலே நடத்தக் கடமைப் பட்டிருக்கிறார்கள். ஆனால், ஒருவேளை இந்த அரசு அப்படித்தான் செயல் படுகின்றது என்று சொன்னாலும் கூட. இங்கே நடைபெறுகின்ற காரியங்களைப் பார்க்கும்போது, நிச்சயமாக இங்கே சட்டத்திற்கு முன்னால் எல்லா மக்களும் ஒன்று போல் நடத்தப்படவில்லை என்பது மிகத் தெளிவாகப் புலனாகின்றது. குதிரையானது, குதிரை ஓட்டுகின்றவனுடைய எண்ணத்தைப் புரிந்துகொண்டு ஓடும் என்று சாதாரணமாகக் கூறுவார்கள். அதைப்போல் தான் இந்த போலீஸ் இலாகாவானது, அதன் தலைவரான முதல் அமைச்சர் எந்த முறையில் நினைக்கிறார் என்பதை அறிந்து, அதற்குத் தக்க முறையில் செயல்படும், செயல்படுகின்றது என்பதை இங்கே நடைபெறுகின்ற காரியங்கள் மூலமாக நாம் பார்க்க முடிகிறது ; உணர முடிகிறது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம், அரசின் கொள்கையைக் கண்டிக்கிற தீர்மானங்கள் எல்லாம் இந்த மாமன்றத்தில் ஏற்றுக் கொள்ள முடியாத அளவுக்கு மிருக பலம் உள்ளதாக ஆளும் கட்சி இங்கு இருக்கும் காரணத்தால் எங்கள் தீர்மானங்களை ஒருவேளை எள்ளி நகையாடலாம். இன்றைய தினம் அந்தத் தீர்மானம் எந்த அளவுக்கு அமைந்திருந்தாலும், ஒரு விதையை நிலத்தில்போடுகிறபோது வெளியேதெரியாது என்றுசொன்னாலும் பருவகாலத்தில் முளைத்து செடியாக அது வெளியேதெரிய ஆரம்பிப்பது போல் இந்த அரசு இதனை உணரும் காலம் வரும் என்பதை இந்த அரசு உணரவேண்டும். இன்றைய தினம் இந்த அவை எங்கள் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளா விட்டாலும் ஒரு நாள் இந்த அரசு நிச்சயமாக இதை உணரக்கூடிய நிலைமை ஏற்படும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த மாநிலத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள் கடந்த சில மாதங்களாக நடைபெற்று வருவதை நாம் நன்றாக அறிவோம். குறிப்பாக திருமதி இந்திரா காந்தி அம்மையாரைப் பாராளுமன்றம் அவை உரிமை மீறல் குற்றத்திற்காகத் தண்டித்த போது இந்த மாநிலத்தில் பல வன்முறைச் செயல்கள் நடைபெற்றன.

திரு. துரை முத்துசாமி ; அவையில் இல்லாத ஒருவரைப் பற்றி இங்கு பேசுவது முறையா ?

திரு. ஜே. ஜேம்ஸ் : சஞ்சய் காந்தியின் அன்னை திருமதி இந்திரா காந்தி பாராளுமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக..

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இந்திரா காந்தியைப் பற்றிப் பேசினால் பரவாயில்லை. சஞ்சய் காந்தியை இழுத்துப் பேசவேண்டிய அவசியமில்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அவையில் இல்லாதவர்களைப் பற்றிப் பேசலாம். ஆனால் அவர்களைப் பற்றிக் குற்றம் சொல்லக்கூடாது.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்த நாடு ஏற்றுக் கொள்ளாத ஒரு குற்றச்சாட்டை நான் கூறவில்லை. நாடு ஏற்றுக் கொண்ட குற்றத்தை மட்டுந்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சஞ்சய் காந்தியின் அன்னை இந்திரா காந்தியின் அம்மையார் மாருதி விவகாரம் சம்பந்தமாக பாராளுமன்றத்திற்காக சில நகல்களைச் சேகரிக்கச் சென்ற அதிகாரிகளைத் துன்புறுத்தி அவர்கள் மீது பொய் கேசுகள் போட்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக......

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; தயவு செய்து ஜேம்ஸ் அவர்கள் அந்தப் பிரச்சினைகளைப் பாராளுமன்றத்தில் பேச விட்டுவிடுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இல்லாத ஒன்றைச் சொன்னால் நீங்கள் கண்டிக்கலாம். நான் சொன்னது இந்த நாட்டில் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. பாராளுமன்றத்தில் இந்திரா காந்தி மீது உரிமை மீறல் குற்றம் சாட்டப்பட்டு பாராளுமன்றம் அவருக்கு சிறைத் தண்டனையும் கொடுத்து அங்கத்தினர் பதவியை ரத்து செய்த நிகழ்ச்சியையொட்டி மாநிலத்தில் சில வன்முறைச் சம்பவங்களை அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் நடத்தினார்கள் என்பதை இந்த மாமன்றம் நன்றாக உணர்ந்திருக்கிறது.

திரு. துரை முத்துசாமி : ** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அகில இந்திய ரீதியில் இருக்கும் பிரச்சினைகளைப் பற்றிப் பேசாது நம்முடைய அரசின் மீது கண்டனத் தீர்மானம் கொண்டு வந்திருப்பதைப் பற்றி அதற்கான காரணங்களைப் பற்றிப் பேச வேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன். திரு. துரைமுத்துசாமி அவர்கள் சொன்னது கூட அவ்வளவு முறையாக இல்லை. தனிப்பட்டவர்களைப் பற்றி அவ்வாறு பேசப்பட்டவற்றை நீக்கி விடலாம். அவர்கள் பேசிய....

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. ஜே. ஜேம்ஸ்: நீங்கள் அவற்றையெல்லாம் நீக்கி விட்டால் நான் பேச வேண்டிய அவசியம் இல்லை. I will withdraw my Censure Motion and go out.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இந்த அரசின் மீது எந்தக் கொள்கையின் அடிப்படையில் கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்பதைப் பற்றிச் சொன்னால் நல்லது.

திரு. ஜே. ஜேம்ஸ்: சட்டம், ஒழுங்கு பிரச்சினையை நிலைநாட்ட இந்த அரசு தவறிவிட்டது. எந்தச் சூழ்நிலையில் தவறிவிட்டது என்பதைத் தான் சுட்டிக்காட்ட நான் முன்வருகிறேன். உண்மைக்குப் புறம்பான காரியங்களைச் சொன்னால் நீக்கலாம். பாராளுமன்றத்திற்கு எதிரான காரியங்களைச் சொன்னால் நீங்கள் நீக்கலாம், நான் பேசியவற்றையெல்லாம் நீக்கி விடுவது என்பது நல்லது அல்ல.

[பிற்பகல் 12.40]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் ஒருவர் மீது, இங்கே இல்லாதவர் மீது குற்றச்சாட்டாகப் பேசாமல் பேசினால் நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்த நாடு ஏற்றுக் கொண்ட காரியங்களைத் தான் நான் சுட்டிக்காட்டுகிறேன். யார் மீதும் நான் பழி சுமத்தவில்லை.

திரு. து. இராமசாமி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

திரு. ஜே. ஜேம்ஸ்: அப்படியென்றால் நான் நாளைக்குப் பேசிக்கொள்கிறேன். I am very serious about this matter. I cannot talk about this law and order pattern on any other occasion. I have taken this opportunity to point out several things. If I am not permitted to continue my speech, I will withdraw. Or else, I must be permitted to express my views.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் என்னுடைய நிலைமையைப் பாருங்கள். ஒழுங்குப் பிரச்சினையென்று எழுப்புகின்றபோது எப்படி முடியாது, உட்காருங்கள் என்று நான் சொல்வது?

திரு. ஜே. ஜேம்ஸ்: அப்படியென்றால் காங்கிரஸ்காரர்கள் எடுத்துக் கொண்ட டைம் எனக்குக் கொடுக்கப்படவேண்டும். அப்படியென்றால் அவர்கள் எதை எழுப்பினாலும் அதற்கு நான் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. து. இராமசாமி: * * * * * * * * * அதைப் பற்றி திரு. ஜேம்ஸ் என்ன சொல்கிறார் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: * * * என்று அவர் இங்கே சொல்வதற்கு என்ன காரணம் இருக்கிறது? நான் பேசுவதற்கும் அவர்கள் பேசுவதற்கும் என்ன உடன்பாடு இருக்கிறது என்று தாங்கள் பாருங்கள், தேவைப்பட்டால் வைத்துக்கொள்ளுங்கள், தேவையில்லையென்றால் தாங்கள் அதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய வேண்டுகோள் தாங்கள் சட்டம், ஒழுங்கு பற்றி, அந்தப் பிரச்சினை பற்றி இங்கே பேசினால் நல்லது. பாராளுமன்றத்திலே நடந்துள்ளவைகளைப் பற்றியெல்லாம் இங்கே பேசாமல் இருப்பது நல்லது.

திரு. ஜே. ஜேம்ஸ்: சட்டம், ஒழுங்கு இங்கே கெட்டுவிட்டதற்குக் காரணம், இந்திரா காந்தி மீது நடவடிக்கை எடுத்தது பற்றித்தான், அதையொட்டியது தான். ஆகவே அதைப்பற்றிப் பேசாமல் இருக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய கருத்து என்னவென்றால் இந்திரா காந்தி இங்கே வருகை தந்தபோது சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டது என்று குறிப்பிட்டுப் பேசினால் எனக்கு ஆட்சேபனையில்லை, ஆனால் சஞ்சய் காந்தி என்று சொல்வதும் அதற்கு இவர்கள் காந்தி தேசாய் என்று சொல்வதும் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: நான் குற்றஞ்சாட்ட விரும்புவது என்னவென்றால் இந்த அரசாங்கம் இந்திரா காந்தி மீது மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததைக் கண்டித்து அதற்கு ஆதரவு கொடுத்ததன் காரணமாகத்தான் சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டது என்பதுதான். நான் பேசக்கூடாது என்று தாங்கள் சொல்லி அரசுக்கு ஆதரவாக இருந்தால் நான் இங்கே பேசத் தயாராக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றிப் பேசுவதில் எனக்கு ஆட்சேபணையில்லை, சஞ்சய் காந்தி, காந்தி தேசாய் பற்றி இங்கே பேசத்தேவையில்லை என்று தான் சொன்னேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : சஞ்சய் காந்தியினுடைய அன்னை என்று தான் சொன்னேன். சஞ்சய் காந்தியைப் பற்றி நான் பேசவில்லை. சட்டத்திற்குப் புறம்பாக அவையினுடைய விதிகளுக்குப் புறம்பாகப் பேசக்கூடாது, என்பது எனக்கு நன்றாகத் தெரியும். தெரிந்து தான் பேசுகிறேன். தாங்கள் அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்றால் தாங்கள் காப்பாற்றுவதிலே எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் நான் இங்கே இல்லை என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. து. இராமசாமி : நாடாளுமன்ற நடவடிக்கைகள் பற்றி ஜனதாக் கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள். ராஜ்ய சபையிலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியும் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே *** *** *** அதன் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

திரு. ர. ஜெபமணி : தலைவர் அவர்களே, ராஜ்ய சபாவிலே நிறைவேற்றப்பட்டதாகச் சொன்னார்கள். ராஜ்ய சபாவிலே தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். லோக் சபாவிலே அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தபோது ஓடோடிப் போனார்களே அதைப்பற்றி அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைத் தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜேம்ஸ் அவர்கள் சஞ்சய்காந்தியின் அன்னை என்றுதான் பேசியிருக்கிறார். திரு. துரை முத்துசாமி அவர்கள்**** சொன்னதும், இராமசாமி அவர்கள்****** பற்றிய விவகாரத்தைச் சொன்னதும் குறிப்பேட்டிலே இருப்பது நல்லதல்ல. அவைகளை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன். ஜேம்ஸ் அவர்கள் சஞ்சய் காந்தியின் அன்னை வருகை தந்தபொழுது என்பது தவிர மற்றவற்றைப்பற்றிப் பேசியிருந்தால் அவைகளையும் நீக்கி விடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. து. இராமசாமி : அவர் மாருதி விவகாரத்தைப் பற்றிப் பேசியிருக்கிறார். அதற்குத் தீர்ப்பு கொடுங்கள்,

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இந்திரா காந்தியைப் பற்றி நான் சொல்லும்பொழுது, இந்திரா காந்தி யார் என்று சொல்லும் பொழுது சஞ்சய் காந்தியின் அன்னை என்று சொன்னேனே தவிர, சஞ்சய் காந்தியின் மீது எந்த அலிகேஷனையும் சொல்லவில்லை.

இந்திரா காந்தியைப் பாராளுமன்றம் சிறையில் தள்ளியதும் அவரது பாராளுமன்றப் பதவி பறிக்கப்பட்டதும் இந்த மாநிலத்தில் பல வன்முறைச் சம்பவங்கள் நடந்தன என்று சொன்னேன், வேறு ஏதாவது தவறாகச் சொல்லியிருந்தால் அவற்றை நீக்கிவிடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிப் பேசுவதில் தவறு இல்லை.

திரு. து. இராமசாமி : அவர் சொன்னதில் தவறு இருப்பதாகச் சொல்லவில்லை. நாடாளுமன்றம் பதவியைப் பறித்தது என்று சொன்னார்கள், அதற்கு முன்னால் ஜனதா செயற்குழுவிலே அவரை வெளியேற்றிவிட முடிவு செய்தார்கள், அதைக் கண்டித்துப் போராட்டம் நடத்தப்பட்டது. நாடாளுமன்ற ப்ரொசிடிங்ஸை எதிர்த்துப் போராடவில்லை என்பதைத் தெளிபடுத்த விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இங்கே என்னுடைய குற்றச்சாட்டு என்னவென்றால், நேர்மையாகச் செயல்பட வேண்டிய தமிழ்நாடு அரசு இங்கே வன்முறைச் சம்பவங்களை இந்திரா காங்கிரஸ்காரர்கள் நடத்தியபொழுது அவர்களோடு சேர்ந்து வன்முறைகளைத் தூண்டினார்கள். அந்த வன்முறைகளுக்கெல்லாம் அரசு தேவையான எச்சரிக்கையான நடவடிக்கைகளை எடுப்பதற்கோ அல்லது அப்படி நடக்காமல் காரியங்களைச் செய்வதற்கோ, வன்முறைகளைச் செய்தவர்களின் மீது போதுமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். காரணம் என்னவென்றால், அந்த வன்முறை நடக்கும்பொழுது எல்லாம் பல மாவட்டங்களிலும் பல ஊர்களிலேயும் அந்தந்த பிரதேசத்திலிருக்கின்ற போலீசாருக்கு அங்கேயுள்ள பொது மக்களும், ஜனதாக் கட்சித் தொண்டர்களும் இங்கே வன்முறை நடக்கவிருக்கிறது, எங்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று தகவல் கொடுத்தும், அதன் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. அதற்குமாறாக வன்முறைநடக்கும்பொழுது போலீசார் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தார்களே தவிர வன்முறையைத் தடுப்பதற்கு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

அதுமட்டுமல்லாமல், சிலர் என்ன கூறினார்கள் என்றால் இந்த நடவடிக்கைகளில் நாங்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று எங்களுக்கு மேலிடத்திலிருந்து தகவல் வரவில்லை என்று கூறியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், சில போலீசார் நடந்து கொண்ட முறைகளைப் பார்க்கும்பொழுது அரசு அவர்களுக்கு நீங்கள் வன்முறைகளுக்கு ஆதரவு கொடுத்து இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற உத்தரவுகூட கொடுத்திருப்பதாக மக்கள் எண்ணக்கூடிய சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இங்கே நடைபெற்ற வன்முறைகளுக்கு அரசு ஏன் முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை மேற்கொள்ளவில்லை? அதை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்தது. காரணம், 12-10-77-இல் இங்கே இருக்கின்ற மாநில இந்திரா காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. என்னவென்றால், மீண்டும் இந்திராகாந்தி கைது செய்யப்பட்டால் காங்கிரஸ் கொடியின் கீழ் வன்முறைகளும், புரட்சியும் ஏற்பட்டு மத்திய அரசு தூக்கி எறியப்படும் என்ற வகையில் தீர்மானம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், 19-12-78 நாளையொட்டி பல வன்முறைச் சம்பவங்கள் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றன என்பதைப்பற்றி நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கும்பகோணத்தில் தபால் நிலையம், இரயில் நிலையம் மீது கல்லெறிந்து சேதப்படுத்தினார்கள், இரயில்கள் ஓடாதவாறு தடுத்தார்கள். டெலிபோன் கம்பிகளை அறுத்தார்கள், ரோட்டின் குறுக்கே தூண்களை வைத்து வாகனங்கள் செல்ல முடியாத அளவில் செய்தார்கள்.

[பிற்பகல் 12.50]

அதுமட்டுமல்லாமல், பல ஊர்களில் இந்த நாட்டின் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களுடைய உருவத்தைச் செய்து, கொடும்பாவி கொளுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் பல ஊர்களில் போலீசார் முன்னிலையில் நடைபெற்றன.

அடுத்து, கூடலூரில் இந்திரா காங்கிரஸ் ஆட்கள் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களுடைய உருவத்தை செருப்பாலும் துடைப்ப கட்டையாலும் அடித்து, தீ வைத்துக் கொளுத்தினார்கள். தலைவரவர்களைத் தகாத வார்த்தைகளிலே வைது தாக்கினார்கள். இவை அத்தனையும் போலீசார் முன்னிலையில் நடந்தன.

பல ஊர்களில் ஜனதா கொடிகளைத் தாங்கிய கம்பங்கள் வெட்டப்பட்டு, கொடிகள் கிழிக்கப்பட்டு, கம்பங்கள் எரிக்கப்பட்டன. தேனியில், தேவதாஸ் என்ற ஜனதா கட்சி காரியதரிசியின் பெட்ரோல் பங்கை......

திரு கே. சௌந்திரராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டினுடைய பிரதமரை செருப்பாலும் துடைப்பக் கட்டையாலும் அடித்தார்கள் என்று மதிப்பிற்குரிய ஜேம்ஸ் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அது சட்டசபை நடவடிக்கைக் குறிப்பிலே இடம் பெறலாமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தேனியில் தேவதாஸ் என்ற ஜனதாக் கட்சியின் டவுன் செயலாளரது பெட்ரோல் பங்கில் ஆயிரக்கணக்கான ரூபாய் அளவுக்குச் சேதபடுத்தியுள்ளார்கள். இந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முன்னதாகவே அவர் போலீசுக்குத் தகவல் கொடுத்திருக்கிறார். இருந்தாலும் அவருக்குப் பாதுகாப்பு கொடுக்கவில்லை. அங்கே ஒரு முடி திருத்தகம், நகைக்கடை, டீ ஷாப் தாக்கப்பட்டு, அங்கே வேலை செய்து கொண்டிருந்தவர்கள் பலமாகக் காயம் அடைந்திருக்கிறார்கள்.

மானாமதுரையிலே ஒரு வேடிக்கையான நிகழ்ச்சி நடைபெற்றது. மூப்பனார் கட்சியும் நெடுமாறன் கட்சியும் என்று இரண்டு கட்சி ஊர்வலம் நடந்தது. ஆனால், அரசாங்கத்தின் உணர்வை நன்றாக உணர்ந்த போலீசார் மூப்பனார் கட்சியினரை ஊர்வலம் புறப்பட்ட இடத்திலேயே கைது செய்தார்கள். ஆனால் நெடுமாறன் ஊர்வலத்தை அது துவங்கி, முறையாக எங்கே முடியவேண்டுமோ அங்கே தான் கைது செய்தார்கள்.......

திரு. துரை முத்துசாமி : மதுரையிலே என்னவோ நெடுமாறன் கட்சி, மூப்பனார் கட்சி என்று சொல்கிறார். டெல்லியிலே கூட சரன்சிங் கட்சி மொரார்ஜி கட்சி என்று விவசாயிகள் ஊர்வலம் போனது அவருக்குத் தெரியாதா?..

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; தயவு செய்து உட்காருங்கள்....

திரு. துரை முத்துசாமி ; சம்பந்தமில்லாமல் ஏன் பேசுகிறார்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; உங்களுக்கு மறுக்காமலிருக்கிறது நீங்கள் பேசுங்கள்.

திரு. துரை முத்துசாமி ; இரண்டு கட்சி இருக்கிறதா?.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திரு. துரை முத்துசாமி, நான் அவையிலே பேசுவதில் பாராளுமன்ற பேச்சுக்குப் புறம்பாக இருக்கிறதா என்பதைத்தான் கவனிக்க வேண்டும். அவர்கள் பேசுவதில் அப்படி இருக்குமானால் நீங்கள் சுட்டிக்காட்டினால் அதை நான் பரிசிலிக்கத் தயார். அப்படிப்பட்டவைகள் எல்லா மன்றங்களிலும் பேசப்படுவது வழக்கம். அதற்குப் பதில் உரைக்க உங்களுக்கு வாய்ப்பளிக்கும்போது சொல்லுங்கள். பேசக் கூடாது என்று சொல்ல எந்த விதியின் கீழோ, மரபின் கீழோ முடியாது.

திரு. ர. ஜெபமணி: பாயின்ட் ஆப் ஆர்டர். இரண்டு ஊர்வலங்கள் போனதால்தான் எங்கள் கட்சித் தலைவர் அதைச் சொன்னார்.

திரு. துரை முத்துசாமி : சரண்சிங் டெல்லியிலே போனாரே.

திரு. ர. ஜெபமணி: சரண் சிங் அங்கு போகவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெபமணி கேட்டது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. திரு. ஜேம்ஸ் அதுபற்றிச் சொல்லுவார், நீங்கள் உட்காருங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: பல போஸ்ட் ஆபிஸ்களில் ரெக்கார்டுகளை எடுத்து, ரெயில்வே ஸ்டேஷனில் டிக்கட்டுகளையும் எடுத்து, பணத்தைத் திருடி இம்மாதிரி வன்முறை நிகழ்ச்சிகள் அங்கங்கே நடைபெற்றன, சில இடங்களில் ஊர்வலமாகச் சென்று அங்கங்கே கடைகளை அடைப்பதற்கான காரியங்களைச் செய்திருக்கிறார்கள். தூத்துக்குடியில் டவுன் ஜனதா கமிட்டியின் தலைவர் ஒரு வழக்கறிஞர். அவரை நையப்புடைத்திருக்கிறார்கள். பாளையங்கோட்டையில் போலிஸ் கஸ்டடியில் இருந்த ஜனதா தொண்டர்களை கஸ்டடியில் இருந்த காங்கிரஸ் தொண்டர்கள் வன்மையாகத் தாக்கியிருக்கிறார்கள். குமரியில் போலீஸ் ஸ்டேஷனில் கஸ்டடியில் இருந்த ஜனதா தொண்டர்களை, வெளியிலிருந்து வந்த காங்கிரஸகாரர்கள் தாக்கியதன் காரணமாக, அவர்கள் அருகாமையிருந்த பார் அசோசியேஷனில் புகலிடம் புகுந்திருக்கிறார்கள்.

அங்கேயும் உள்ளே சென்ற ஜனதா கட்சிக்காரர்களைத் தாக்கி, அங்கே இருந்த வழக்கறிஞர்களைத் தாக்கி, வன்முறையில் ஈடுபட்டு இருக்கிறார்கள். அதேபோல் பல்வேறு ஊர்களில் காங்கிரஸ்காரர்கள் என்று நாமம் இல்லாத இடங்களில் கூட வன்முறை தாண்டவம் ஆடியிருக்கிறது. இந்தக் கொடுமைகளுக்கு எல்லாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் சேர்ந்து கொண்டார்கள். காஞ்சிபுரத்தில் ஒரு நிகழ்ச்சி நடை

பெற்று இருக்கிறது, அங்கே அர்த்தால் நடைபெறுவதாகவும். அந்த நேரத்தில் யாராவது கடை திறந்தால் அவர்களை நையப் புடைத்து விடுவோம் என்றும் சொல்லி இருக்கிறார்கள். அங்கேயிருக்கும் டி. எஸ். பி. ஜனதா கட்சியினரை நையப்புடைத்து இருக்கிறார்.

திரு. துரை முத்துசாமி: காங்கிரஸ்காரர்கள் என்று பெயர் இல்லாத ஊரில் கூட வன்முறை நடந்து இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்கு நாங்கள்தானா பொறுப்பு?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது குறித்து உங்களுக்கு வாய்ப்பு வரும்போது பதில் சொல்லுங்கள். இப்போது தலையிடுவது சரியல்ல.

திரு. துரை முத்துசாமி: ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது வேண்டாம். உங்களுக்கு வாய்ப்பு வரும்போது கேளுங்கள். பதில் சொல்லுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: சில ஊர்களில் திவட்டி ஊர்வலம் நடத்தினார்கள். அதனால் அந்த ஊர் தெருவெல்லாம் வன்முறை தாண்டவம் ஆடியது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அரசு அல்லது இந்த அரசைச் சார்ந்து இருக்கின்ற கட்சியானது அந்த வன்முறைக்கு எல்லாம் ஆதரவு கொடுத்ததைப் பற்றி நான் கவலைப்படவில்லை. சட்டம் ஒழுங்கை காப்பாற்றும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் அரசு இந்த அளவிற்கு போய் இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டவும், இந்த நிலைமை நீடித்தால் பொதுமக்கள் கதி என்னவாகும் என்பதை உங்களுக்குச் சுட்டிக்காட்டவும்தான் நான் இதைக் குறிப்பிடுகிறேன். போராட்டத்திற்கு ஆதரவு கொடுக்கலாம். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமே ஒரு போராட்டத்தை நடத்தலாம். ஆனால் நரபலியாக பல்லாயிரக்கணக்கான உயிர்களை எடுத்து நடத்தும் அளவில் அது தூண்டிவிட்டு இருக்கிறது என்று சொன்னால் அது உண்மையிலேயே மன்னிக்கமுடியாத காரியம் என்பதைக் கூறிக் கொள்கிறேன். இந்த வன்முறை தூண்டிவிடுவதற்கு முதன் முதலில் வித்திட்டவர் மாண்புமிகு முதலமைச்சர்தான் என்பதை நான் கூறிக்கொள்கிறேன். காரணம் அவர் வெளிநாட்டில் இருந்தபோது ஒரு அறிக்கை விட்டார்கள். இந்திரா காந்தி வெற்றி பெற்றதாலே இங்கே இருக்கும் எதிர்க்கட்சிக்காரர்கள் கௌரவம் உயர்ந்து இருக்கிறது என்று அறிக்கை விட்டார்கள், பிறகு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் விட்டு இருக்கும் அறிக்கையை நீங்கள் நன்றாக அறிந்து இருப்பீர்கள். இந்திரா காந்தியை சிறையில் வைத்தால் தமிழ் நாட்டில் மத்திய அமைச்சர்கள் தெருக்களில் நடக்க முடியாது. ஆகவே, அந்த

அளவிற்கு வன்முறை தூண்டிவிடக்கூடிய வகையில் முதலமைச்சர் அவர்களும், அவர் கட்சியைச் சேர்ந்த பொறுப்புள்ள பாராளுமன்ற உறுப்பினரும் சேர்ந்து இங்கே இருக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களைத் தூண்டி விட்டார்கள். ஆகவே, தான் இந்த வன்முறை சம்பவங்களுக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவு கொடுத்தது என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்'

மூப்பனார் அறிக்கை கொடுத்தார்கள். அதை படிக்க விரும்புகிறேன். 20–ம் தேதி காங்கிரஸ் தொண்டர்கள் கொதித்து எழவேண்டும்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:</u> மாண்புமிகு திரு. ஜேம்ஸ் அவர்கள் படிப்பதற்கு கொஞ்சம் அவகாசம் கொடுக்கலாம் என்று கருதுகிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேறறக்கழக நாடாளுமன்ற உறுப்பினர் கொடுத்த அறிக்கை பற்றிச்சொன்னார்கள். அந்த அறிக்கையை அவர் கொடுந்ததற்காக விளக்கம் கேட்கப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும், பொதுச்செயலாளர் அவர்களும் கூட விளக்கம் கேட்டு பெற்றார்கள் என்பதும் அது உடனடியாக அது தவிர்க்கப்பட்டது என்பதையும் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[பிற்பகல் 1.00]

<u>திரு. ஜே. ஜேம்ஸ்:</u> அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டதாக பத்திரிகையில் செய்தி வந்தது. ஆனால் அந் நடவடிக்கை கைவிடப்பட்ட தாகவும் செய்தி வந்தது. அம்மாதிரியாக வன்முறைகளைத் தூண்டிவிடுகின்ற அளவுக்கு அறிக்கை வநதது என்றால் அந்த அரசியல் கட்சியில் இருக்கும் தொண்டர்கள் எப்படி நினைப்பார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் உணர்ந்து கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

இன்னொரு சம்பவம். இந்திரா காந்தியை கைது செய்தவுடன் தமிழ்நாட்டிலிருந்து மூப்பனார் விடுகின்ற அறிக்கை. ''இந்திரா காந்தியின் பதவியை பறித்து சிறையில் அடைத்ததன் மூலம் இந்திரா காந்தியின் சரித்திரத்தை முடித்துவிடலாம் என்று ஜனதா கட்சியினர் கனவு காண்கின்றனர். ஆனால் உண்மையில் இதுதான் இந்திரா காந்தியின் புது சகாப்தத்தின் ஆரம்பமாகும். இதை காங்கிரஸ் தொணடர்களுக்கு நினைவுபடுத்துகிறேன். காங்கிரஸ் தொண்டர்கள் கொதித்தெழ வேண்டும் '' இதுதான் அறிக்கை. அறிக்கை வந்ததும் நடந்தது என்ன!

* *

என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப் பெற்றது.

அடுத்து, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை விடுத்தார்கள். இதையெல்லாம் ஏன் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் என்றால், வன்முறைக்கு யார் காரணம் என்பதை இந்த மாமன்றமும் மக்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்.

<u>திரு. துரை முத்துசாமி :</u> தலைவரவர்களே, இங்கே இல்லாத ஒருவரைப் பற்றி அங்கத்தினர் அவர்கள் பேசுகிறார்கள். அதை அனுமதிக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

<u>திரு. ஒ. சோ. வேலுச்சாமி :</u> சார், பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு ஜனதா கட்சி உறுப்பினர், சட்டசபைத் தலைவர்–ஜேம்ஸ் அவர்கள் சட்டம், ஒழுங்கு பற்றி பேசுகிறார்கள். ஆனால் சட்டம், ஒழுங்கு பற்றி அவர்கள் சொல்கிற காரியத்திற்கும் தலைவர் மூப்பனார் அவர்களை இந்த அவைக்கு இழுப்பதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? ஆகவே, மூப்பனார் பற்றி குறிப்பிட்டதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. ஜேம்ஸ் அவர்கள் கோபமாகப் பேசுகிறார்கள். அவர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைப் பற்றி மட்டும் பேசினால் நல்லது. திரு. மூப்பனாரைப்பற்றி அவர்கள் குறிப்பிட்டதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> கனம் அங்கத்தினருடைய வேண்டுகோள் அப்படி இருக்குமானால் அதை எடுத்துவிடுவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. நான் சொல்ல வந்தது. இந்திராகாந்தி அம்மையார் மீது நடவடிக்கை எடுத்தவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்கள், ''லோக் சபாவில் இந்திராகாந்திக்கு வழங்கியுள்ள தண்டனை மக்களிடையே அவர்களுக்கு மிகுந்த நற்பெயரை ஏற்படுத்தி கொடுக்கும்'' என்று மாண்புமிகு முதலமைச்சர் எம். ஜி, இராமச்சந்திரன் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

அதைப்பார்த்தார் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள். முதலமைச்சர் சொல்லிவிட்டால் நாம் சும்மா இருந்துவிடுவதா என்று நினைத்தார். உடனே தானும் ஒரு அறிக்கை–அதாவது தந்தி வடிவில்–விடுகிறார். அவர் பிரதமருக்கு அடித்த தந்தியில் கூறியிருக்கிறார், ''பாராளுமன்றத்தை கொலைக் களமாக்க அனுமதிக்காதீர்கள்''. பிரதமர் தேசாய்க்கு நிதியமைச்சர் திரு. மனோகரன் அவர்கள் அடித்த தந்தி இது. அடுத்து ஒரு அறிக்கையில் தெரிவித்திருக்கிறார். ''எதிர்பார்த்தது நடந்து விட்டது; இனி எதிர்பாராததும் நடைபெறலாம்''. இது அறிக்கை. இப்படி ஒவ்வொரு வார்த்தையும் அமைந்திருக்கிறது. இதை கட்சித் தொண்டர்கள் எப்படி

பயன்படுத்துவார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஆக, இங்கே நடந்த வன்முறைகளுக்கு இந்த அமைச்சரவைதான் காரணம் என்பதை நான் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நாகர்கோவிலில் நடந்த காரியத்தைப்பற்றி சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன். அகில இந்திய இந்திரா காங்கிரஸ் போராட்டத்திற்கு இந்திரா காங்கிரஸை தயார் படுத்தினார்கள். நாகர்கோவிலில் ஒரு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி இருக்கிறது. அங்கே அவர்கள் போராடுவதற்கு ஏற்பாடு செய்தார்கள். ஏற்பாடு செய்து, அவர்கள் வெளியிட்ட, மிகவும் பரபரப்பூட்டுகின்ற முக்கியமான அறிக்கை ஒன்றில் கூறினார்கள். ''ஆயிரம் பேர் மறியல்-மாவட்டத் தலைவர் அறிக்கை''.

டிசம்பர் 20-ம் தேதி ஒரு அறிக்கை வந்திருக்கிறது பத்திரிக்கையில். அதில் யார் யார் பங்கு கொள்கிறார்கள் என்று சொன்னால், தக்கலையில் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் டாக்டர் ஜோசப் தலைமையில் 50 பேர்கள் போராட்டத்திற்கு தயார் ஆகியிருக்கிறார்கள். டாக்டர் ஜோசப் அவர்களை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி 50 தொண்டர்களுடன் போராட்டத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள்.

அவர்கள் போராட்டத்திற்குச் சென்ற அன்று மாலையில் கே. டி. சி. பஸ் ஒன்று கொளுத்தப்பட்டிருக்கிறது. அதிலே 7 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். இன்னும் பல பிரயாணிகள் உயிருக்குப் போராடுகின்ற நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டிருக்கிறார்கள். அவர்களில் பார்வதி, ஜானகி என்ற இரண்டு பேரும் காய்கறி வியாபாரத்திற்காக கேரளாவிலிருந்து வந்து கொண்டிருந்தார்கள். அங்கே கமலம் என்ற மற்றொரு பெண்ணும் இறந்திருக்கிறாள். அந்த பெண்மணிக்கு 8 வயது குழந்தை ஒன்றிருக்கிறது. அதோடு பொன்னுநாடார் என்பவரும் இறந்திருக்கிறார். அடையாளம் தெரியாத ஒருவர் கூட இறந் திருக்கிறார். அந்த கண்டக்டர் கூட ஆஸ்பத்திரியில் இறந்து விட்டார். அங்கே தீ பிடித்து எரியும்போது பிரயாணிகளைக் காப்பாற்றுகின்ற வகையில் தீயோடு போராடி கடைசியில் ஆஸ்பத்திரியில் உயிரைவிட்டுவிட்டார். இதை எல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால் போலீஸ் இன்வெஸ்டி கேஷன் பற்றிச் சொல்வதற்காகத்தான். 50 பேர் டாக்டர் ஜோசப் என்பவருடைய தலைமையில் போராட்டத்திற்கு வந்திருந்தார்கள். ஆகவே காங்கிரஸ் கட்சி திட்டமிட்டுத்தான் அந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

<u>திரு. து. இராமசாமி:</u> தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். நாகர்கோவிலில் நடந்த இந்த நிகழ்ச்சியைப் பற்றி திரு. ஜேம்ஸ் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். எற்கனவே

எங்கள் கட்சியின் சார்பிலே அந்த நிகழ்ச்சியைக் கண்டித்து ஒரு அறிக்கை விட்டிருக்கிறோம். சம்பந்தப்பட்டவர்களை மாவட்ட காங்கிரஸ் கமிட்டியிலேயிருந்து நீக்கி வைத்திருக் கிறார்கள். இளைஞர் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை அவர் தலைவராக அறிவிக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்;</u> தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் அன்றைய தினம் இருந்த நிலைமைகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இந்த நிகழ்ச்சிக்கு சில நாட்களுக்கு முன்னதாக கலெக்டர் அவர்களுக்கு நாங்கள் எழுதியிருக்கிறோம். சட்டம் ஒழுங்கு சரியில்லை தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று எழுதியிருக் கிறோம். அந்தப் பகுதியிலே டி. எஸ். பி. ஒருவர் இருக்கிறார். பக்கத்திலேயே எஸ். பி-யும் இருக்கிறார். பல நிகழ்ச்சிகள் நடைபெற்று இருக்கின்றன.

18-ம் தேதி தக்கலையில் தபால் நிலையம் தீ வைக்கப் பட்டு கிட்டத்தட்ட ஒரு இலட்சம் ருபாய் நஷ்டம் ஏற்பட்டது. இது போலீசுக்கும் அறிவிக்கப்பட்டது. 19-ம் தேதி தக்கலையில் மருத்துவமனை முன்பு கே. டி. சி. பஸ்ஸில் தீ வைப்பதற்கு முயற்சி செய்தார்கள். அந்த பஸ் கண்டக்டரும் மற்றும் சிலரும் சேர்ந்துகொண்டு ஜனங்களைக் காப்பாற்றியிருக் கிறார்கள். இந்தத் தகவலும் போலீசுக்கு கொடுக்கப்பட்டிருக் கிறது. 19-ம் தேதி இரவு ஆர். டி. ஓ. ஆபீஸ் முன்பு சி.ஐ.டி.யூ. தொழிலாலர் போராட்டம் நடத்துவதற்குரிய செட்டை தீ வைத்துக் கொளுத்தியிருக்கிறார்கள். இவை அனைத்தும் தெரிந்தும் கூட அங்கே போலீஸ் நடவடிக்கை எடுக்கவில்லை. அப்படி நடவடிக்கை எடுக்கப்பெற்றிருந்தால் 20-ம் தேதி அன்று இக்கோரச்சம்பவம் நடைபெற்றிருக்காது என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன், இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் அரசியல் காரணமாகத்தான் நடந்திருக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே இந்தக் கொலைகளின் காரணமாக இந்த அரசை கொலைகார அரசு என்று இங்கே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அடிப்படை கடமையைக்கூட நிறைவேற்றத் தவறிய இந்த அரசு இந்த மாநிலத்தைதலே ஆளுகின்ற தன்மையை இழந்து விட்டது என்று நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

[பிற்பகல் 1—10]

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:</u> மாண்புமிகு உறுப் பினர் ஜனதாக் கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது இந்த அரசில் நடந்த சட்ட ஒழுங்கு சம்பந்தமான பிரச்னைப் பற்றி பேசிவந்தார்கள். ஆனால் அதைக்குறிப்பிட்டுவிட்டு, கடைசியில் பத்திரிகைகளுக்கு தலைப்பு கொடுக்கின்ற வகையிலோ என்னவோ இது கொலைகார அரசு என்று குற்றஞ்சாட்ட

விரும்புகிறேன் என்று குறிப்பிட்டார்கள். அது உண்மையிலேயே இந்த அவையினுடைய உணர்வுக்கு ஏற்றதுதானா என்பது ஒரு புறமிருக்க அது ஜனதா கட்சியின் உண்மையான உணர்வா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: அது இந்த நாட்டு மக்களுடைய உணர்வு என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டுவர விரும்புகிறேன். அடுத்து ஒருவேளை என்னுடைய தீர்மானம் நிறைவேற்றப்படாமல் இருந்தாலும் கூட இந்த மாநிலத்தில் உள்ள நாலரைக் கோடி மக்களின் உணர்வை இந்த அரசு நன்கு புரிந்துகொள்ள வேண்டும். குறிப்பாக அங்கே உயிர் இழந்த அருமை சகோதரர்களின் குடும்பங்களின், அந்தப் பிரதேசத்தில் இருக்கிற மக்களின் எண்ணத்தை இந்த அரசு நன்றாகப் புரிந்துகொள்ளவேண்டும். அந்த மக்கள் வடிக்கிற கண்ணீர் இந்த அரசின் ஆணிவேரை அசைத்திருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒருவேளை இப்போது பதவியில் நீடித்தாலும்கூட நிச்சயமாக ஒரு கட்டத்தில் இந்த அரசை அது அசைத்துவிடும்; நீங்கள் நீண்ட நாட்கள் பதவியில் இருக்க முடியாது என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். The days of this Government are numbered. நாட்கள் எண்ணிப்பார்க்கக்கூடிய அளவிற்கு வருகிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்து, தொழிலாளர்கள் பிரச்னை சம்பந்தமாக எனது நண்பர்கள் இங்கே விரிவாகக் கூறியிருக்கிறார்கள் என்று சொன்னாலும் நானும் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். எல்லாத் துறைகளிலும் இந்த அரசு டபிள் ஸ்டான்டேர்ட் கொள்கையை வைத்திருக்கிறது. நான் இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இரண்டு மாதங்களுக்கு முன்பாக தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை வைத்து போராட்டம் நடத்தியதை நாம் அறிந்திருக்கிறோம். அந்தப் போராட்டம் எந்த முறையில் அடக்கி ஒடுக்கப்பட்டது என்பதை எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் எடுத்துக் கூறினார்கள். முதல் அமைச்சர் அவர்கள் ரேடியோவில் அறிக்கை விட்டதை நாம் மறந்திருக்க முடியாது. அதேபோல் ஒரு ஸ்டேட்மென்ட் இந்த வன்முறைச் செயல்களை எதிர்த்து இவர்கள் செய்தார்களா என்று கேட்க விரும்புகிறேன். நாகர்கோவிலில் நடந்த இந்த அக்கிரமச் செயலுக்கு வருத்தம் தெரிவித்து அல்லது அனுதாபம் தெரிவித்து நமது முதல் அமைச்சர் அவர்கள் ஒரு வார்த்தை கூட கூறவில்லை. மட்டுமல்ல. ஆளுநர் அவர்களது உரையில் கூட இந்த நிகழ்ச்சி பற்றியோ அல்லது இந்த நிகழ்ச்சிக்கு அனுதாபம் தெரிவித்தோ ஒரு வார்த்தை கூட கூறவில்லை. காரணம் மனசாட்சி குத்துகிறது, ஏன் தானே பொறுப்பாக இருக்கிற நிகழ்ச்சிபற்றி கூறுவது என்று தயங்கினார்கள் என்று தான் கூறவிரும்புகிறேன். ஆகவே தொழிலாளர்கள் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் தொழிலாளர்களின் மீது வன்முறை தாண்டவமாடுகிறது. பல பொய் வழக்குகள் சுமத்தப் பட்டன. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள

குலசேகரத்தில் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தினார்கள். வெளி ஊர்களிலிருந்து வந்த போலீஸ் அங்கே தொழிலாளர்களை நையப் புடைத்து, பொய் வழக்குகள் போட்டிருக்கிறார்கள். வழக்கு என்னவென்றால், கண்ணுக்குத் தெரியக் கூடியது என்று சொல்லி 500 பேர்களை என்றைக்காவது அவர்களை போலீஸ் விரும்பினால் அவர்களை வழக்கில் சேர்த்துக் கொள்ளக்கூடிய, ஆளாக்கக்கூடிய அளவிற்கு பொய் வழக்குகள் சுமத்தியிருக்கிறார்கள். இங்கேயிருக்கிற கம்யூனிஸ்ட்கட்சி நண்பர் ஜி. எஸ். மணி அவர்கள் பேரில் ஒரு வழக்கு போட்டிருக்கிறார்கள். என்னவென்றால், ஜனதாக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் கடைக்கு அவர்கள் சென்று கள்ளத்தனமாக இரவு ஏதோ கொள்ளையடிக்கச் சென்றதாக பொய் வழக்கு. ஜனதாக் கட்சி நண்பரிடம் ஏன் இப்படி நடந்தது என்று கேட்டால் நான் ஒன்றும் அறியவில்லை, நிச்சயமாக நடக்கவில்லை என்று சொன்னார்கள். ஆனால் இன்றும் அம்மாதிரி ஒரு பொய் வழக்கு இருந்துகொண்டேயிருக்கிறது. ஆக, தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் சட்டம் ஒழுங்கை எடுத்துக்கொண்டால் டபிள் ஸ்டான்டேர்டை கையாள்கிறார்கள் இந்த அரசு என்பதை ஒரு குற்றச்சாட்டாக நான் கூறவிரும்புகிறேன். அடுத்து, கோவைக்கு முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் வந்தார்கள். அப்போது லாரிகளில் எல்லாம் தொண்டர்கள் வந்தார்கள். அனுமதிக்கப்பட்டார்கள். அங்கு மட்டுமல்ல. மதுரைத் தேர்தலுக்காக நிதி வழங்க கோவையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அங்கு முதலமைச்சர் அவர்கள் பங்கு கொண்டார்கள். அதற்கு லாரியில் வந்தார்கள். அதற்கெல்லாம் வழக்கு இல்லை. ஆனால் சென்ற வருடம் ஜனதா மாநாடு நடந்தது. அதற்கு லாரியில் வந்த தொண்டர்கள் மீது பல்வேறு வழக்குகள் சுமத்தப்பட்டு பைன்கள் போடப்பட்டது. ஆகவே இந்த அளவுக்கு டபிள் ஸ்டேன்டர்டு என்ற கொள்கையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே Unfair administration என்கின்ற குற்றச்சாட்டை சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து முருகையன் படுகொலை சம்பந்தமாக—இதைப்பற்றி பல நண்பர்கள் விரிவாக பேசுவார்கள். இன்னும் அவருடைய மனைவியிடம் போலீசார் விசாரிக்காமல் இருக்கிறார்கள். அந்த பாடியில் 30 குத்துக்கள் இருந்தன என்பதையும் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். அது சம்பந்தமாக அரசாங்க தரப்பிலிருந்து எந்த ஒரு விளக்கமும் தரப்படவில்லை என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவேதான் இந்த அரசின் போலீஸ் அதிகாரிகள் விசாரணை செய்தால் நீதி வராது. மத்திய அரசாங்கத்தின் புலன் விசாரணை இலாகாவின் கீழ் இந்த சம்பவம் பற்றி விசாரணை செய்யவேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் கல்யாணசுந்தரம் அவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்கள். ஏன் இந்த அரசாங்கம் அதை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, நாகர்கோவிலில் நடந்த கோர நிகழ்ச்சி பற்றி இந்த அரசாங்கம் விசாரித்தால் நீதி வராது. ஆகவே அதையும் மத்திய புலன் விசாரணை இலாகாவால் விசாரணை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை விடுத்தும் இதையும் அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. எம். வின்சென்ட்: (அமைச்சரின் பேரவை செயலர்); இந்த நிகழ்ச்சி நாகர்கோவிலில் நடைபெறவில்லை. தக்கலை என்ற இடத்தில் நடைபெற்றது, ஆனால் ஜனதாக் கட்சித் தலைவர் அவர்கள் திரும்பத் திரும்ப இது நாகர்கோவிலில் நடைபெற்றதாக சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அது சரியல்ல.

திரு. ஜே. ஜேம்ஸ்: அருமை நண்பர் வின்சென்ட் அவர்களுக்கு நன்றி. தக்கலை என்ற இடத்தில் நடந்ததாகச் சொன்னார்கள், சரியாக இது நடந்தது வெள்ளியோடு என்ற இடத்தில் நடந்தது. ஆகவே அவர்கள் சொன்னதும் தப்பு, இரண்டு பேரிடத்திலும் தப்பு இருக்கிறது. இரண்டையும் திருத்திக் கொள்வோம். ஆகவே இந்த இரசு மீது நம்பிக்கை இழந்திருக்கின்ற நிலையில், இங்குள்ள போலீசாரிடம் நீதி கிடைக்காது என்கின்ற சூழ்நிலை வருமானால், மத்திய புலன் விசாரணை இலாகா மூலம் இதை விசாரிப்பதற்கு இந்த அரசு தவறியது குற்றம் என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு ஒரு நிகழ்ச்சி நடந்தது என்பதை நண்பர்கள் எல்லாம் இங்கு எடுத்துச் சொன்னார்கள். அது உளியா, புலியா என்றெல்லாம் இங்கு கேலி பேசப்பட்டது. அந்த 'வேனை' நான் பார்த்தேன். அந்த அளவுக்கு அபாயமாக நடந்திருக்கிறது. தெய்வாதீனமாக அவர் உயிர் பிழைத்திருக்கிறார். அரசியல் பிரச்சினைகளுக்காக உயிரை பறிக்கின்ற நிலை வருமானால், இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கு எப்படி இருக்க முடியும் என்பதை உணர்ந்து பார்க்க வேண்டும். அது சம்பந்தமாக அடுத்து என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை நாம் காத்து இருந்துதான் பார்க்க வேண்டியிருக்கிறது. பொதுவாக வன்முறையில் இறங்குகின்றவர்களுக்கு இந்த அரசாங்கம் பாதுகாப்பு அளிக்கிறது என்று நான் சொல்லவில்லை. ஆனால் பாதுகாப்பு அளிக்கும் அல்லது பாதுகாப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருப்பதால்தான் சிலர் இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்பதையும் இப்படிப்பட்ட நம்பிக்கை அளிக்கக்கூடிய வகையில் அரசு நடந்து கொள்ளக்கூடாது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து எங்கள் மாவட்டத்தில் திருவட்டாறு என்ற இடத்தில் கொலை நடந்தது. இது நடந்து ஒரு வருடம் ஆகிறது. இதுவரை யார் இதைச் செய்தார்கள் என்பதும் வெளியாக வில்லை. கொலை செய்யப்பட்ட தாய், சம்பவம் நடந்தபோது, தன்னுடைய குழந்தையையும் வைத்திருந்தாள். குழந்தை உயிரோடு இருந்தது. தாய் கொலை செய்யப்பட்டாள்.

இது நடந்து ஒரு வருடம் ஆகிறது. இதுவரை புலன்விசாரணை சரியாக நடைபெறவில்லை. இதில் ஏதோ மர்மம் இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்வதோடு, கையாலாகாத போலீசை – காவல்துறை வைத்திருப்பதால், மேலும், அரசியல் தேவைகளுக்காக இவற்றை பயன்படுத்துகிற காரணத்தால், போலீஸ் தவறுகிறது என்பதை நான் குற்றஞ்சாட்டுகிறேன்.

அடையாறில் பிரேமா கொலை வழக்கு பற்றி இந்த சட்ட மன்றத்தில் எடுத்துக் கூறப்பட்டது. அந்த கொலை வழக்கில் எந்தவிதமான பிராகரஸ்ஸும் இல்லாமல் இருப்பது எந்த அளவுக்கு சட்டம் ஒழுங்கு இந்த நாட்டில் செயல்படுகிறது என்பதை நாம் சிந்திக்க கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். நான் ஒரு நாள் முதலமைச்சர் அவர்கள் டிரெயினில் போகவிருப்பதை பார்த்தேன். முதலமைச்சருக்கு பாதுகாப்பு வேண்டியதுதான்.

[பிற்பகல் 1.20]

முன்னால் இருக்கின்ற கம்பார்ட்மெண்டிலும், பின்னால் இருக்கின்ற கம்பார்ட்மெண்டிலும் நிறைய போலீஸ் இருக்கிறார்கள். ஆகவே, முதல் அமைச்சருக்குப் போதுமான பாதுகாப்பு இருக்கிறது. ஆனால், என்னைப் போன்ற சாதாரண பஸ்களிலோ அல்லது நடந்து போகின்றவர்களுக்கோ, ஏழை அரசியல்வாதிகளுக்கு என்ன பாதுகாப்பு இருக்கின்றது என்பதை தலைவர் மூலமாக இந்தச் சந்தர்ப்பத்தில் அரசைக் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து சென்னை, இராயபுரத்தில் ஒருநிகழ்ச்சி, சில நாட்களுக்கு முன் ஒருவருக்கு பணம் சம்பந்தமாக தகராறு ஏற்பட்டது. அதையொட்டி அவர் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதுவரையிலும், அவருடைய மனைவிக்கு இது சம்பந்தமான தகவல் கொடுக்கப்படவில்லை; போலீஸ்காரர்கள் தேவையான நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பாளையங்கோட்டை கல்லூரியில் சதகதுல்லா கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த ஒரு மாணவன் காணாமல் போய்விட்டான். காணாமல்போய் 3, 4 மாதங்களாக அவரது பெற்றோருக்குத் தகவல் கொடுக்கப்படவில்லை. கடைசியாக அந்தக் கல்லூரி முதல்வரிடமிருந்து ஒரு கடிதம் வருகிறது. அந்த மாணவனுடைய உடல் கிடைத்திருக்கிறது, அது மருத்துவமனையிலே இருக்கின்றது, வந்து எடுத்துக் கொள்ளுங்கள் என்று. அங்கு போய் பார்த்தால், அந்த உடல் அழுகிய நிலையிலே இருந்தது; எலும்புக் கூடுதான் இருந்தது. கடைசியாக விசாரித்ததில், முதல்வர் கூறியிருக்கிறார், இறந்த மாணவன் ஒரு திருட்டு வழக்கிலே மாட்டிக்கொண்டு, கல்லூரியிலே இருந்து வெளியேற்றப்பட்டார். அதற்குப் பின் நடந்தது என்ன என்பது தனக்குத் தெரியாது என்று கூறியிருக்கிறார். அப்படியானால், இந்த உண்மையை ஏன் உடனடியாகப் பெற்றோர்களுக்குத் தகவல் கொடுக்கவில்லை. அந்த மரணத்தில் பல சந்தேகங்கள் இருக்கின்றன. இதுவரையிலும் அங்கே போலீஸ்

[திரு ஜே. ஜேம்ஸ்]   [1979 பிப்ரவரி 19

நியாயமாக விசாரிக்கவில்லை, விசாரணை நடத்தவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, இந்த அளவுக்கு இந்த மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு ஆகியவை கெட்டுவிட்டது. இந்த மாநிலத்தில் உயிருக்கும், உடமைக்கும் ஒருவருக்கு பாதுகாப்பு இல்லை. அதிலும் குறிப்பாக அரசியல்வாதிகளுக்கு பாதுகாப்பு இல்லை. ஆக, இந்த மாநில அரசிலிடம் அரசியல் சட்ட அடிப்படையில் கொடுக்கப்பட்டிருக்கின்ற அந்த பெரிய கடமைகள், பெரிய பொறுப்புகள் ஆகியவைகளை இந்த மாநில அரசு நிறைவேற்றத்தவறிவிட்டது. ஆகவே, இந்த மாநில அரசு ஆளத் தகுதியற்றுவிட்டது, அந்த உரிமையை இந்த மாநில அரசு இழந்துவிட்டது என்று கூறி, இந்த அரசின் மீது நான் கொண்டு வந்த தீர்மானத்தை வலியுறுத்தி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.23 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(7) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

95. திருத்தணி— திருப்பதி சாலைகள் சந்திப்பில் சோதனைச் சாவடி ஒன்றை அமைப்பது குறித்து 13-12-1978-ம் தேதியிடப் பெற்ற வணிக வரிகள்—அறக்கட்டளைகள் துறையின் 1534—ஆம் என் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

* 30. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 2/1979).

* 31. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்த சட்ட முன்வடிவிற்கான இணைப்பு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 2/1979).

* 32. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 3/1979).

* 33. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவிற்கான இணைப்பு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 3/1979).

---

* 16-2-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1979 பிப்ரவரி 20.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள் — விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

தென்னாற்காடு மாவட்டத்தில் புதிய காவல் நிலையங்கள்.

* வினா என். 120. அ—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டம் செஞ்சி வட்டம் வல்லத்தில் ஒரு வெளிப்புற (out—post) காவல் நிலையமும், சத்திய மங்கலத்தில் உள்ள வெளிப்புற (out—post) காவல் நிலையத்தை காவல் நிலையமாகவும் மாற்றும் செயற்குறிப்புகள் அரசிடம் உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

முத்துராமலிங்கத்தேவர் நினைவுத் தபால் தலை

* வினா என். 120 ஆ—திரு. டி. பி. எம். பெரியசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு நினைவுத் தபால் தலை வெளியிட மத்திய அரசுக்கு இந்த அரசு பரிந்துரை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் நினைவுத் தபால் தலையை 30-10-78-ல் வெளியிட இவ்வரசு மத்திய அரசிற்கு பரிந்துரை செய்தது. இதனை அஞ்சல் தலை ஆலோசனைக்குழு 14-4-78-ல் நடந்த அதன் கூட்டத்தில் பரிசீலித்தது என்றும் தபால் தலைகள் தலைவர்களின் நூறாவது பிறந்த நாள், நூறாவது நினைவு நாள், நூற்று அய்ம்பதாவது பிறந்த நாள், அல்லது முதலாவது, பத்தாவது மற்றும் அய்ம்பதாவது நினைவு நாட்களில் வெளியிடுவது வழக்கம் என்றும் இதனால் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் நினைவு தபால்தலையை இப்பொழுது வெளியிட இயலவில்லை என்று மத்திய அரசு இவ்வரசிற்கு அறிவித்துள்ளது.

திரு. என். கிட்டப்பா: அவ்வாறு அறிவித்துள்ள மத்திய அரசை மீண்டும் தமிழக அரசு வலியுறுத்த ஆவன செய்ய முன்வருமா? அதைப் போலவே பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கு இதுவரை நினைவாலயம் எழுப்பப்பட்டதாகத் தெரியவில்லை, அத்தகைய பெரியவருக்கு நினைவாலயம் உருவாக்க புதிய அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு முதல்வர் அவர்கள் 8-3-78 அன்றே மத்திய அரசுக்கு இது குறித்து விரிவாக விளக்கி கடிதம் எழுதியுள்ளார்கள். இருப்பினும் அவர்கள் 14-4-78 அன்று நடந்த கூட்டத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் நூறாவது பிறந்த நாள் விழாவோ அல்லது நூறாவது நினைவு நாள் விழாவோ அல்லது மற்ற குறிப்பிட்ட ஆண்டுகளில் வருகிற நினைவு நாட்களோ இப்போது சமீபத்தில் வரவில்லையாதலால் இப்போது ஒன்றும் செய்வதற்கில்லை என்று முடிவு செய்து பதில் அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லுகிற கணக்குப்படி 30-10-2008-ல் தான் அவருக்கு நாம் ஸ்டாம்ப் வெளியிட வேண்டிய சூழ்நிலை வருகிறது. ஆகையால் இது குறித்து மீண்டும் மத்திய அரசுக்கு எழுதப்படும். அவருடைய நினைவாலயம் அவருடைய பிறந்த இடத்தில் இருப்பதாக எனக்கு நினைவு.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: மீண்டும் இந்த அரசு முத்துராமலிங்கத் தேவர் தபால் தலையை மத்திய அரசு வெளியிட வேண்டுமென்பதற்காக முயற்சி எடுத்திருப்பதாக அறிவித்ததற்கு நன்றி. தமிழக வரலாற்றோடு இணைந்த மதிப்பிற்குரிய ஜீவா அவர்களுக்கு நினைவு ஸ்டாம்ப் வெளியிடுவதற்கு இந்த அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அரசு அதைக் கவனத்தில் கொள்ளும்.

திரு. க. மருதாசலம்: மறைந்த தேசியத் தலைவர்களுக்கு அரசு சார்பில் விழா எடுக்கப்படுகிறது. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பிறந்த நாள் விழா எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஏற்கெனவே பிறந்த நாள் விழா எடுக்கப்பட்டு வருகிறது. அதிலே பேசுகின்ற பேறு பெற்றவன் நான்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பெரியார் நூற்றாண்டு விழா தபால் தலையை சமீபத்தில் வெளியிட்டார்கள். இப்போது எந்த போஸ்ட் ஆபீசில் அந்தத் தபால் தலை கேட்டாலும் கிடைப்பதில்லை. ஆனால் பல்வேறு வட மாநிலங்களின் தலைவர்கள் தபால் தலை கிடைத்துக் கொண்டே இருக்கிறது. மத்திய அரசுக்கு எழுதி பெரியார் நூற்றாண்டு விழா தபால் தலையைக் கொஞ்சம் அதிகமாக வெளியிட மத்திய அரசுக்கு எழுதப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தந்தை பெரியார் அவர்களுடைய படம் வெளியிடப்பட்ட தபால் தலை தபால் அலுவலகங்களில் கிடைக்கவில்லை என்றால் அது தந்தை பெரியார் அவர்களுடைய செல்வாக்கைக் காட்டுகிறதே தவிர வேறு அல்ல. அதிகமாக அந்த ஸ்டாம்புகளை வெளியிட வேண்டுமென்று நிச்சயமாக நாம் கேட்போம்.

லாஸ்கோ ஸ்டீல் பாக்டரி, அரூர்

* வினா எண். 120 இ — திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அரூர் வட்டம் ஆர். தொட்டம்பட்டி லாஸ்கோ ஸ்டீல் பாக்டரியில் மின்சார டிரான்ஸ்பார்மர் பழுதடைந்ததின் காரணம் அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ)&(ஆ): இந்நிறுவனத்தின் தொழிற்சாலையில் நிறுவப்பட்டுள்ள 1200 கிலோ வாட் சக்தியுள்ள மின்சார டிரான்ஸ்பார்மர் 29-5-78 அன்று ஷார்ட் சர்க்யூட் ஆனதால் நடுவில் உள்ள பிரதான காயில் தீய்ந்துபோய் பழுதடைந்தது. அந்த டிரான்ஸ்பார்மர் திருவொற்றியூரிலுள்ள அதன் தயாரிப்பாளர்களான திருவாளர்கள் ஹாக்பிரிட்ஜ் ஹெவட்டிக் அண்ட் ஈசன் நிறுவனத்தினால் பழுது பார்க்கப்பட்டு, 4-9-78 முதல் மீண்டும் இயங்கி வருகிறது.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, அரூர் தொட்டம்பட்டி வாஸ்கோ ஸ்டீல் பாக்டரியில் இந்த மின்சார டிரான்ஸ்பார்மர் பழுது பார்க்கப்பட்டு இப்போது செயல்பட்டு வருகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி பழுதுபட்ட இடைக்காலங்களில் இரண்டு மாதங்கள் வேலையற்று இருந்த நாட்களில் அந்தத் தொழிலாளர்களுக்கு அட்வான்ஸ் கொடுக்கப்பட்டது. அந்த அட்வான்ஸை அரசு உதவித் தொகையாக அளிக்க பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அந்தத் தொழிற்சாலையில் உற்பத்தியாகக் கூடிய பொருட்களினுடைய தரங்களை உயர்த்துவதற்கும், சீர்படுத்த நடவடிக்கைகள் எடுப்பதற்குப் அந்தத் தொழிலாளர்களுடைய ஆலோசனை அறியப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இது ஒரு விடுவிப்பு நிறுவனம், அதாவது ரிலீப் அண்டர்டேக்கிங், ஆகவே தொழில் தகராறுகள் சட்டத்தின்கீழ் தொழிலாளர்களுக்கு வேலையிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட காலத்திற்கு, அதாவது லே ஆப் பீரியடிற்கு, நிவாரணம் அளிக்க வேண்டியதில்லை. எனினும் தொழிலாளர்களுடைய நிலைமையைக் கருத்தில் கொண்டு அவர்களுடைய கஷ்டங்களை ஓரளவிற்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்ற முறையிலே தான் வேலையிலிருந்து நிறுத்தப்பட்ட தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு தொழிலாளருக்கும் 100 முதல் 300 ரூபாய் வரை அட்வான்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகை 1979 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் மாதம் 50 ரூபாய் வீதம் அவர்களுடைய சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்து கொள்ளப்படும். இப்போது தான் இந்தத் தொழில் நிறுவனம் சரியாக இயங்க ஆரம்பித்து இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை மானியமாகவோ இனாமாகவோ வழங்க வேண்டுமென்று சொன்ன கருத்து, அதனுடைய நிதிநிலையைப் பொறுத்து எடுக்கவேண்டிய முடிவு, ஆகவே அது சாத்தியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நிறுவனத்தை நல்ல முறையிலே நடத்துவதற்கு அந்தத் தொழிலாளர்களுடைய ஆலோசனை பெறப்படுமா என்று கேட்டார்கள். அது அந்த நிர்வாகத்தை நடத்துகின்ற இயக்குநரையும் நிர்வாக ஆலோசனைக் குழுவையும் பொறுத்தது.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, நிதிநிலையைப் பொறுத்து அந்தத் தொழிலாளர்களுக்குக் கொடுத்த அட்வான்ஸை இலவசமாக்குவதற்கு சாத்தியமில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இருந்தாலும் அவர்களுடைய சம்பளத்தில் பிடித்தாலும்கூட அந்தத் தொழிலாளர்களுக்குக் குடும்ப ஜீவனத்திற்கு கட்டுபடியாகக்கூடிய நிலைமை இல்லை. ஆகவே, முதலமைச்சர் நிதியிலிருந்து—அந்தத்

தொழிற்சாலையும் பிற்பட்ட பகுதியை சார்ந்துள்ள நிலைமையைக் கருத்தில் எடுத்துக்கொண்டு—நிவாரணமாகக் கொடுத்த அந்தத் தொகையை ஈடுகட்ட அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஒரு நிறுவனத்திலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள்—அந்த நிறுவனம் சரியாக இயங்குகிற சூழ்நிலை வருகிறபோது அதனால் ஏற்படுகிற லாபத்தைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்கள்—அதைப் போலவே ஒரு நிறுவனத்திலே நஷ்டம் ஏற்படுகிறபோது அந்த நஷ்டத்தையும் அவர்கள் பகிர்ந்து கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறது.

கட்டிடக் கழகம்

* வினா எண். 101—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் கட்டிட கார்ப்பரேஷன் ஒன்றை அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன், விவரம் என்ன ?

திரு. எம். வின்சென்ட் : (அமைச்சரின் பேரவை செயலர்) :

(அ) & (ஆ) இவ்விஷயம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இதைப்பற்றி நிர்வாக சீர்திருத்தக் குழு ஏதாவது பரிந்துரைகள் செய்துள்ளதா ? அதைப் போலவே இதற்கு முன்னாலே இருந்த தி. மு. க. அரசு இதைப் பற்றி ஏதேனும் முடிவு எடுத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர் : தலைவர் அவர்களே, தனக்கென தனியாக (பொதுப்பணித் துறையிலிருந்து வேறுபட்ட) கட்டுமான பிரிவுகளைக் கொண்ட அரசுத் துறைகள் / நிறுவனங்கள் ஆகியவைகள் தாங்களே அவைகளுக்குரிய கட்டுமானப் பிரிவுகளை வைத்துக்கொள்ளலாம். எனினும் அவைகள் பரவலாகப் பெருகாமல் தடுக்கவேண்டும் என்று நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் பரிந்துரை செய்துள்ளது. எல்லா அரசுத்துறை/நிறுவனங்கள் ஆகியவைகளின் கட்டுமானப் பணிகளை பொதுப்பணித் துறையே மேற்கொள்ள வேண்டும் என்று 1975 இல் முன்னால் இருந்த அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலே உள்ள மருத்துவமனைக் கட்டடங்களை மருத்துவத் துறையே மேற்கொள்ள அரசு ஆவன செய்யுமா ?

<u>திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்) :</u> தலைவர் அவர்களே, மருத்துவ மனைகள், பள்ளிக்கூடங்கள் ஆகியவைகளைக் கட்டும் பணி தற்போது பொதுப் பணித் துறையின் பொறுப்பில் உள்ளது. அந்தப் பொறுப்பு அத்துறையிலிருந்து பிரித்து எடுக்கப்பட்டு அக்கட்டடப் பணிகளை மருத்துவம் மற்றும் கல்வித் துறைகளே மேற்கொள்ள கட்டுமானப் பிரிவுகளை ஏற்படுத்தலாம் என்று கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுப்பணித் துறையில் உள்ள கட்டடப் பிரிவில் வருங்கால அமைப்பு குறித்து முடிவெடுப்பதற்காக அமைச்சரவையின் பரிசிலனைக்கு வைக்கலாம் என்று முதல்வர் ஆணை பிறப்பித்து இருக்கிறார். அமைச்சரவையின் முடிவு தெரிந்து பின்புதான் கட்டட கட்டுமான நிறுவனம் அமைப்பது பற்றி பரிசிலிக்கப்படும்.

[முற்பகல் 9-10]

<u>திரு. சோ. அழகர்சாமி :</u> பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது இந்தக் கட்டிட கார்ப்பரேஷன் ஒன்றைத் தனியாக அமைக்க உத்தேசம் இருப்பதாக அமைச்சரின் பேரவைச் செயலர் அவர்கள் கூறினார்கள். இப்பொழுது இருக்கின்ற பொதுப்பணித்துறை கட்டி வரும் அந்த நிலைக்கும், தனியாகக் கட்டிட கார்ப்பரேஷன் அமைக்க உத்தேசித்திருப்பதற்கும் என்ன சிலாக்கியம் இருக்கிறது அல்லது அதைவிட இது எப்படி மேம்பட்டதாக இருக்கும் என்று விளக்கினால் நலமாக இருக்கும்.

<u>திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்) :</u> பேரவைத் தலைவரவர்களே, அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள் ஆகியவைகளின் கட்டிடப்பணிகளை யார் எடுத்துச் செய்வது என்னும் கேள்வி கடந்த சில ஆண்டுகளாகவே ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆய்வுகளுக்குப் பிறகுதான் அதன் முழுமையான விவரங்கள் தெரிவிக்கப்படும்.

<u>டாக்டர் கே. சமரசம் :</u> பேரவைத் தலைவரவர்களே, சாலைகள் வரையிலான கட்டுமான நிறுவனம் அமைப்பது ஆய்வில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

<u>திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்) :</u> பேரவைத் தலைவரவர்களே, சாலைகள் வரையிலான கட்டுமான நிறுவனம் ஒன்று அமைப்பதுபற்றி இத்துறை முன்பு ஆராய்ந்தது. ஆனால் இப்போது அது போக்குவரத்துத் துறையில் ஆராயப்பட்டு வருகிறது.

<u>திரு. கே. பன்னை சேதுராம் :</u> தலைவரவர்களே, கட்டிட கார்ப்பரேஷன் தனியார்களுக்கு டெண்டர் மூலம் காண்ட்ராக்ட் விடுவதைத் தவிர்த்து கார்ப்பரேஷனே நேரடியாக அந்தக் கட்டிடத்தைக் கட்டி, தனியார் பெறும் இலாபம் அரசுக்குக் கிடைக்க வழிவகை செய்யுமா? வேலையில்லாதவர்களுக்கு நிரந்தர வேலை கொடுக்கும் திட்டத்தை அரசு பரிசிலிக்குமா?

<u>திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்) :</u> பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் தனியாகக் கேள்வி போடட்டும்.

பம்பு செட்டுகளுக்கு மின்விசை வழங்கல்

வினா எண். 102—<u>திரு. என். கிட்டப்பா :</u> மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விவசாயப் பம்பு செட்டுகளுக்கு மின்விசை வழங்குவதில் புதிய நடைமுறை ஏதேனும் மேற்கொள்ளப்படுகின்றதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> (அ) ஆம்.

(ஆ) புதிய நடைமுறைகளின்படி, 1—7—78 முதல் மனுச் செய்த தேதியின் அடிப்படையில் மட்டும் முன்னுரிமை அளிக்கப்பட்டு மின் வழங்கும் திட்டத்தின்கீழான 10 சதவிகித அளவு வருவாய் அளவை கருத்தில் கொள்ளாமல் மின் இணைப்பு வழங்கப்படும். தன்னிச்சையாக மின்வாரியம் நிலத்தடி நீர் சான்றிதழ் கேட்காது.

<u>திரு. என். கிட்டப்பா :</u> தலைவரவர்களே, விவசாய பம்பு செட்டுகளுக்கு மின்விசை வழங்குவதில் முன்னுரிமை அடிப்படையில் அவர்கள் கோரிக்கை விடுத்த 9 மாத காலத்திற்குள்ளாகவே கொடுக்கப்பட வேண்டுமென்ற நியதி இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அவர்கள் பம்பு செட்டுகள் வாங்கியதற்குப் பின்னாலும்கூட மின்விசை வழங்குவதில் 9 மாத காலத்திற்குள்ளாக வழங்கப்படுவதில்லை என்று சொல்லப்படுவது அரசுக்குத் தெரியுமா ? அப்படியிருப்பின் அதை நிவர்த்தி செய்ய அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> தலைவரவர்களே, 9 மாதம் என்ற காலவரையறை இல்லை. ஆனால் சேங்ஷன் ஆனவுடன் அந்த விவசாய பம்பு....

<u>திரு. என். கிட்டப்பா :</u> மன்னிக்கவும் 9 மாதம் அல்ல, 90 நாட்கள்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> அதாவது சேங்ஷன் ஆன 3 மாதங்களுக்குள் அவர்கள் மோட்டாரை வாங்கி வைக்க வேண்டும். அவர்கள் மின்சாரத்தை எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் அது அமைகிறது. அப்படி 3 மாதங்களுக்குள் மின்சார மோட்டாரை வாங்கி வைக்காவிட்டால் அவர்களுக்கு அனுமதி ரத்து செய்யப்படுகிறது.

நம்மிடத்திலே கிட்டதட்ட இரண்டு இலட்சம் மனுக்கள் தேங்கி இருக்கின்ற காரணத்தால் நாம் வேகமாக மின்சாரத்தை வழங்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். ஆகவே, 3 மாதத்தை நீட்டிப்பது சாத்தியம் அல்ல.

திரு. து. இராமசாமி : பேரவைத் தலைவரவர்களே, இரண்டாண்டுகளுக்கும் அதிகமாகத் தேங்கிக் கிடக்கின்ற விண்ணப்பங்களைப்பற்றிப் பரிசீலித்து உடனடியாக அவைகளுக்கு மின்னிணைப்பு கொடுக்க அரசு முன்வருமா ? ஏற்கெனவே மின்னிணைப்பு கொடுத்திருக்கின்ற கிணறுகளிலே டிபார்ட்மெண்ட் மூலமாகக் கொடுக்க வேண்டிய ஒயர், ஃப்யூஸ், கேரியர் ஆகியவை பலயிடங்களில் வெந்து விட்டதால் மின்சார மோட்டார் பாதிக்கப்பட்டிருக்கிறது. இவைகளை டிபார்ட்மெண்டிலிருந்து மாற்றியமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மின்சாரப் பொருட்கள் வெந்து விட்டதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனியாகக் கேள்வி போட்டுத் தெரிவிக்கலாம். ஆனால், மனுக்கள் இரண்டாண்டுகளுக்கும் மேலாக இருக்கின்ற அத்தனைக்கும் மின்சாரம் வழங்க முடியுமா என்று கேட்டார்கள். நான் சொல்ல விரும்புவது, 1963-64 ஆம் ஆண்டிலேயிருந்து மனுக்கள் தேங்கிக்கிடக்கின்றன. அது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வருவதற்கு முன்பிருந்த மனுக்கள் தேங்கிக் கிடக்கின்றன. சுமார் இரண்டு இலட்சத்து முப்பதாயிரம் மனுக்கள், 1978-79 ஆம் ஆண்டு, மொத்தம் அந்த அளவிலே பார்க்கிறபொழுது தேங்கிக்கிடக்கின்றன. நாம் இப்பொழுது மேற்கொண்டிருக்கும் முடிவு ஆரம்ப காலத்திலே தேங்கிக் கிடக்கின்ற மனுக்களை முறையாகப் பைசல் செய்து கொண்டு வர வேண்டுமென்ற அடிப்படையில் நாம் உத்தரவிட்டிருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இப்பொழுது நம்முடைய மின்சார வாரியம் கடைபிடிக்கும் கொள்கையானது சாதாரண சிறு விவசாயிகள் அல்லது ஏழைகளைப் பாதிக்கக் கூடிய முறையிலும் அதிகமாக மின்சாரம் உபயோகிப்பவர்களுக்கு சலுகை அளிக்கும் முறையிலும் இருப்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா ? உதாரணமாக, மின்சாரக் கட்டணம் சிறு விவசாயிகளுக்கு 12 பைசா என்று குறிப்பிட்டாலும், 20 பைசா வரை ஆகிறது. காரணம் அவர்களிடம் மாதாமாதம் மீட்டர் சார்ஜஸ்; இரண்டாவது ஹார்ஸ்பவருக்கு இவ்வளவு என்று வசூலிக்கிற காரணத்தாலே சிறு விவசாயிகள் அதிகமான பளுவை சுமக்கக்கூடிய நிலைமை இப்பொழுது இருக்கிறது. அதே மாதிரி மில்களுக்கும் அதிகமான மின்சாரம் உபயோகிப்பவர்களுக்கு குறைந்த சார்ஜ் வசூலிக்கப்படுகிறது. இந்த முறையை மாற்ற அரசு தீவிரமாக ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தக் கேள்வி பம்ப் செட்களுக்கு மின்விசை வழங்குவதைப் பற்றி. மின்சாரக் கட்டணத்தைப்பற்றி தனிக்கேள்வி போடவும்.

திரு. இ. தமிழரசன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள், விவசாயிகள் மனு கொடுக்கின்ற தேதியை வைத்துக்கொண்டு சீனியாரிட்டிபடி மின் இணைப்பு கொடுக்க வேண்டும் என்ற விதி இருக்கிறது என்று சொன்னார்கள். இதுவரையிலும் மின் இணைப்பு பெறாத சிறு விவசாயிகளுக்குக் குறிப்பாக கிராமப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகளுக்கு அதிலே முன்னுரிமை இந்த அரசு கொடுக்க நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்த முடிவு எடுத்ததே சிறு விவசாயிகளுக்கு நன்மை கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில். ஏனென்றால், பணம் படைத்த விவசாயிகள் மனுபோட்டு மின்சாரத்தைப் பெறுவதற்குப் பல வழிகள் தெரிந்தவர்கள். சிறு விவசாயிகளுக்குத்தான் இந்தக் கஷ்டம் இருந்தது. ஆகவே, தேதி அடிப்படையில் இந்த மனுக்களை மின்சாரம் வழங்க எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னதே ஏதும் அறியாத சிறு விவசாயிகளுக்குச் சலுகை கிடைக்கத்தான்.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவரவர்களே, வங்கிகளிலே கடன் பெற்றவர்களுக்குத்தான் மின்சார பம்பு செட்டுகளுக்கான இணைப்பு கொடுக்கப்படும், மற்றவர்களுக்கு இல்லை என்ற அறிவிப்பு ஒன்றை இந்த அரசாங்கம் தந்தது. அதன் மூலமாக வங்கிகளுக்கு மனுப்போட்டு இதுவரைக்கும் சாங்க்ஷன் ஆகாத காரணத்தாலே, நீங்கள் குறிப்பிட்ட 90 நாட்களுக்குள்ளாக பம்ப் செட்களை வாங்கி வைக்க முடியவில்லையென்ற நிலையிலிருக்கிற விவசாயிகளுக்கு அந்த 90 நாட்கள் கெடு என்பதை நீட்டித்துத் தர இந்த அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததைப் போல் சுமார் 2½ இலட்சம் மனுக்கள் தேங்கிக் கிடக்கின்றன. ஆகவே, நாம் ஒருவருக்கு சாங்க்ஷனைக் கொடுத்து அவர் 6 மாதம், 1 வருஷம் காத்திருந்த பிறகு இன்னொருவருக்குக் கொடுக்கப் போகிறோம் என்றால், 10, 15 ஆண்டுகளுக்கு மேலாக ஆகும்.

Thiru R. MARGABANDU : Only those who get loans from banks, are given the pumpsets. That is what the order says.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நான் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவிக்க விரும்புவது அத்தகைய உத்தரவோ, கட்டுப்பாடோ மின்வாரியத்தைப் பொறுத்தவரையில் இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள், புதிய திட்டத்தின் பிரகாரம் மோட்டார் வாங்கி பதிவு செய்யப்பட வேண்டுமென்று இருக்கிறது, என்று. இலாகாவில், 90 நாட்களுக்குள் மோட்டார் வாங்க வேண்டுமென்று நோட்டீஸ் கொடுக்கிறார்கள். அதனால், பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் மோட்டார் வாங்கி வைத்துவிடுகிறார்கள். ஆனால், மின்சார வாரியம் மின் இணைப்பு கொடுக்க இப்பொழுது கால வரையறை இல்லை. இதனால், பல ஆயிரக்கணக்கான மோட்டார்கள் இணைப்பு இல்லாமல் தேங்கிக் கிடக்கின்றன. ஆகவே, மின்சார வாரியமும் ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் இணைப்பு கொடுக்க வேண்டுமென்ற வகையில் அரசு ஏதாவது செய்யவேண்டும்.

அது மட்டுமல்லாமல், இந்தக் காலதாமதம் ஏற்படுகிற காரணத்தினால் அந்த 90 நாட்கள் என்பதை 6 மாதம் என்று மாற்றுவதிலே ஒன்றும் சிரமம் இல்லை. ஆகவே, 3 மாதம் என்பதை 6 மாதம் என்று அரசு மாற்றுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கால வரையறை என்பது மின் வாரியத்தைப் பொறுத்த வரையிலும் ஓர் ஆண்டுக்கு இவ்வளவு பம்ப் செட்கள் கொடுக்கப் போகிறோம் என்று வகுத்திருக்கிறோம். இணைப்பு கொடுக்காத நிலை குறிப்பிட்ட பகுதியில் இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினரவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். 3 மாதத்திற்குப் பதிலாக 6 மாதம் ஆக்கலாமே என்கிறார்கள். 6 மாதம் ஆக்குவதிலே எனக்கு ஒன்றும் கஷ்டம் இல்லை. ஆனால், பம்ப் செட்களின் எண்ணிக்கை அதிகமாக வராது.

[முற்பகல் 9-20]

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே, நீண்டகால்மாக மின் இணைப்பு கோரி பண்ருட்டி வட்ட விவசாயிகள் கேட்டு வந்த போதிலும் இது வரையியில் அளிக்கப் படவில்லை. அவர்களுக்கு அந்த காலதாமதம் நீண்ட நாட் களாக இருந்தால் அது தவிர்க்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படி மின் இணைப்பு கோரியவர்கள் எத்தனை பேர் இன்னும் மின் இணைப்பு கிடைக்காமல் இருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ? அவர்களுக்கு உடனடியாகக் கொடுக்க ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்தது போல், இணைப்பு கேட்டுள்ளோர் ஏராளமாக இருக்கிறார்கள். நீண்ட நாட்களாக மட்டுமல்ல, நீண்ட ஆண்டுகளாகக் தேங்கி இருக்கின்றன. ஆகவே, அவைகளை முடித்து விட்டுத்தான் மற்றவர்களுக்குக் கொடுக்கப்படும். இந்த ஆண்டில் பெரும்பாலான இடங்களில்

1975-76-வரையில் பெறப்பட்ட மனுக்கள் அத்தனைக்கும் கொடுத்து விடுவது என்று நிர்மானித்து இருக்கிறோம். அதாவது, 1963-64 முதல் 1975-76 வரையில் உள்ள மனுக் களுக்குக் கொடுக்கப்படும். ஒரு வேளை பண்ருட்டியில் உள்ள விவசாயிகள் 1975-76-க்குப் பிறகு மனு கொடுத்து இருக்கலாம், என்று கருதுகிறேன். முன்னாலே கொடுத்தவர்களுக்கு கொடுத்து விட்டுத்தான் பின்னர் கவனிக்கமுடியும்.

திரு. துரை. முத்துசாமி : தலைவரவர்களே, புதியதாக மின் இணைப்பு கோரி சமிபத்தில்தான் என்னுடைய தொகுதியில் கல்வராயன் மலைப்பகுதியில் மனு கொடுத்து இருக்கிறார்கள். அந்த மனுக்கள் அப்ளிகேஷன் வரிசைப்படி எடுக்க வேண்டும் என்றால் 5-10 ஆண்டுகள் ஆகும். ஆகவே, அவர் களுக்கு தனிச்சலுகை கொடுத்து மின் இணைப்பு கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அத்தகைய உத்தேசம் தற்போது இல்லை.

திரு. கே. பன்னை சேதுராம் : தலைவரவர்களே, கேரள முதலமைச்சர், நம்முடைய தமிழ்நாடு, கருநாடக மின்சாரத் துறை அமைச்சர்கள் ஆகிய மூவரும் சேர்ந்து பெங்களூரில் சமிபத்தில் நடத்திய மாநாட்டில், தமிழகத்திற்கு மின்சாரம் கொடுப்பதற்கான பேச்சுவார்த்தைகள் நடந்து, அதில் ஒப்பந்தங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் கிடைக்கும் அதிக மின்சாரத்தைக்கொண்டு தேங்கிக்கிடக்கின்ற மனுக்களை பூர்த்தி செய்ய அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு அதிக அக்கரை இருக்குமானால் இப்போதே கேள்வியைப் போட்டு, இந்தத் தொடரிலேயே பதிலைப் பெறலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஐயா. தமிழகத்திலே உணவு உற்பத்தியைப் பெருக்குவதிலே 25% வடாற்காடு மாவட்டம். தமிழகத்திலே உள்ள பம்புசெட்டுகளில் 20%-க்கு மேல் வடாற்காடு மாவட்டத்தில் இருக்கிறது. மேலும், மேலும் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமானால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகக் கேள்வி கேளுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : மேலும், மேலும் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமானால் எண்ணிக்கையைக் கணக்கு பார்க்காமல் 1 ஏக்கர் முதல் 5 ஏக்கர் வரையில் நிலம் கைவத்திருக்கும் சிறு விவசாயிகளுக்கு அவ்வாறு உள்ளவர்களில்

2 இலட்சம் மனுக்கள் தேங்கியிருப்பதாகக் கேள்வி—கொடுக்க அரசு முன்வருமா ? வசதி படைத்தவர்களுக்குத்தான் கொடுக்கப் படுவதாகவும், சொல்லப்படுகிறகிறது, ஆகவே, சிறு விவசாயி களுக்கு முன்னுரிமை கொடுக்க அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனையைக் கூட அரசு இந்த முடிவு எடுப்பதற்கு முன் பரிசீலித்தது. ஆனால் சிறு விவசாயிகள் பெருவிவசாயிகள் என்று பிரிக்க அந்த விவசாயிகள் சர்ட்டிபிகேட் வாங்கித் தரவேண்டியிருக்கும் சூழ்நிலை வந்தது. ஆகவேதான் எந்தவிதமான சிரமமும் சிறுவிவசாயிகளுக்கு இருக்கக் கூடாது என்ற வகையில் தேதி வாரியாக மனுக்கள் வரப் பெற்றதை கருத்தில் கொண்டு இணைப்பு வழங்குவதற்கு அரசு முடிவு செய்துள்ளது. இதன் காரணமாக விவசாயிகள் சட்டமன்ற உறுப்பினர்களையோ, அமைச்சர்களையோ, தொந்தரவு செய்ய வேண்டிய நிலை இருக்காது என்ற காரணத்தால் தான் இந்த உத்தரவை அரசு பிறப்பித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த வினா என் 103..

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : *** ***

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, நான் கேட்பது முறையல்ல; இருந்தபோதிலும் செஞ்சி இராமச்சந்திரன் அவர் களுக்கு..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து மன்னிக்க வேண்டும். நீங்கள் கேட்பது சரியல்ல. அவருக்கு இப்போது வாய்ப்பு கொடுக்க முடியாது. நான் பேரவைக்கு ஒரு வேண்டு கோள் விடுக்கிறேன். குறிப்பிட்ட நேரத்திற்குள் வினாக்கள்—விடைகள் நேரத்தை முடித்துக்கொள்ள வேண்டுமானால் உறுப் பினர்கள் என்னோடு ஒத்துழைக்க வேண்டும். இந்த ஒரு கேள்விக்கு மட்டும் ஏறத்தாழ 20 நிமிடங்கள் கொடுத்து விட்டேன். இப்படி ஒவ்வொரு கேள்வியும் போனால் எல்லா வினாக்களையும் குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிக்க முடியாது. எல்லாக் கட்சிக்காரர்களும் இங்கே இருக்கிறார்கள். (திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் குறுக்கீடு) என் மீது குற்றமில்லை. ஒரு கேள்விக்கு இத்தனை நிமிடம் என்று வரையறுத்துக் கொண்டால்தான் முடியும். அதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். சபையின் மரபைக் காப்பாற்ற வேண்டும். (குறுக் கீடு). திரு. செஞ்சி இராமச்சந்திரன் பேசியது அனைத்தையும் நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

*வினா எண் : 103—திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் ஒன்றியப் பகுதியில் உள்ள விவசாயிகளின் மின்சார பம்புசெட்டு களுக்கு மின்இணைப்பு கிடைக்காமல் உள்ளது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) இப்பகுதியில் தற்போதுள்ள 872 கிணறுகளில் ஏற்கனவே 281 கிணறுகளுக்கு மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) மீதமுள்ள கிணறுகளில் 1-7-78 வரை நிலுவையிலுள்ள 255 மனுக்களில் 70 மனுக்கள் நடைமுறையிலும் அனுமதி அளிக்கப்பட்ட திட்டங்களைச் சார்ந்துள்ளன. மீதி 185 மனுக்களுக்கு மின் வாரியத்தின் புதிய கொள்கைப்படி மனுச் செய்துள்ள தேதியின் அடிப் படையில் மட்டும் முன்னுரிமை அளிக்கப்பட்டு மின் இணைப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

காமதேனு சிறப்பங்காடி மூலம் காய்கறி விற்பனை

வினா எண் 104—திரு. எஸ். ஜெ. சாதிக்பாட்சா : மாண்பு மிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னையில் காமதேனு கூட்டுறவு அங்காடி மூலம் வீடுவீடாகச் சென்று காய்கறி விற்பனை செய்யும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறதா ?

(ஆ) மேற்படி திட்டத்தால் வேலை வாய்ப்பு அடைந்தவர்கள் எண்ணிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :—

(அ) இல்லை.

(ஆ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

[1979 பிப்ரவரி 20

தானிப்பாடி கிராம கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம்.

வினா எண் 105—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செங்கம் வட்டம், H.H. 504 என்னுள்ள தானிப்பாடி கிராம கூட்டுறவு விவசாய கடன் சங்கத்தின் பணியாளர் (காரியதரிசி) சங்கத்தின் ரிகார்டுகளுடன் தலைமறைவாய் விட்டார் என்று சம்பந்தபட்ட சங்கத்தின் தலைவர் கொடுத்த புகார் மனுவின் மீது எடுத்த நடவடிக்க என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :

ரிக்கார்டுகளுடன் சங்க காரியதரிசி தலைமறைவாகிவிட்டார் என்று சங்கத் தலைவர் புகார் கொடுக்கவில்லை. சங்கத்திற்கு சேரவேண்டிய ரூ. 600 ஐ கொடுக்கவில்லை என்று மட்டுமே புகார் செய்தார்.

திரு. த. வேணுகோபால் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் சங்கத் தலைவர் புகார் கொடுக்கவில்லை என்று கூறி கையாடல் செய்திருக்கிறார் என்று மட்டும் சொல்லியிருக்கிறார்கள். அப்படி கையாடல் செய்தபோது ரிக்கார்டுகளை எடுத்துக்கொண்டு போய்விட்டார் என்று நானே புகார் கொடுத்திருக்கிறேன். எந்த காரணத்திற்காக கையாடல் செய்தார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கையாடல் செய்திருப்பதாக புகார் கூறியிருக்கிறார்கள். ஆனால் விசாரணை செய்த நேரத்தில், காவல் துறையினர் விசாரணை செய்தபோது யார், யார் அந்த புகார் செய்தார்களோ அவர்கள் வந்து தகவல் சொல்லவில்லை என்பதை இந்த மாமன்றத்திற்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த. வேணுகோபால் : தலைவரவர்களே, தகவல் சொல்லவில்லை என்று அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். காவல் துறையினர் விசாரணை செய்தபோது புகார் கொடுத்தவர்களுக்கு தகவல் கொடுத்திருந்தால் அந்த விசாரணையில் கலந்து கொண்டு இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு விசாரணை நடைபெறுவது பற்றி புகார் கொடுத்தவர்களுக்கு ஏன் தகவல் தெரிவிக்கவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : உறுப்பினர் அவர்களின் தகவல் அடிப்படையில் தக்க நடவடிக்கை எடுக்க முயலுகிறேன்.

1979 பிப்ரவரி 20]

உயர்நிலைப் பள்ளிகளில் ஒழுக்கக் கல்வி கற்பித்தல்.

*வினா எண் 106—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நமது மாநிலத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் ஒழுக்கக் கல்வி கற்பிக்க அரசிடம் திவிர திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) & (ஆ): பள்ளிகளில் அனைத்து வகுப்புகளிலும் வாரத்திற்கு ஒரு பிரிவேளை ஒழுக்கக் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஒழுக்கக் கல்விக்காக தனிப் பாடத்திட்டமும் வகுக்கப்பட்டுள்ளது. ஒழுக்கக் கல்வியின் முக்கியத்துவம் அவ்வப்பொழுது பள்ளிகளுக்கு அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பேருந்து ஓட்டுநர்கள், பேருந்து நடத்துநர்கள் ஆகியோர் அடங்கிய குழுவை அமைத்து, பள்ளிகளில் ஒழுக்கக் கல்வி முறையை அமைக்க அரசு ஆலோசிக்குமா?

(முற்பகல் 9·30)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, ஒழுக்கக் கல்வியைக் கற்பிக்கின்ற பொறுப்பு ஆசிரியர்களிடத்தில் தான் இருக்கிறது.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, ஒழுக்கக் கல்வியைக் கற்பிப்பதற்கு என்று தனிப் பிரிவு ஏற்படுத்தி இருப்பதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். அப்படி என்று சொன்னால் ஒழுக்கம் அற்ற கல்வியும் கற்பிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தான் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். ஒழுக்கக் கல்வி என்று சொல்லும்போது ஒழுக்கமற்ற கல்வியும் இருக்கிறது என்ற எண்ணத்திலே இந்தக் கேள்வி கேட்கப்படவில்லை. வளருகின்ற மாணவர்களுக்கு இத்தகைய ஒழுக்கக் கல்வியைத் தருவது சமூகத்தினுடைய கடமை என்கிற அடிப்படையிலேதான் இந்தக் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை: தலைவரவர்களே, ஒழுக்கக் கல்வி கற்பிக்கப்படுகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஒழுக்கம் என்பதற்கு எடுத்துக்காட்டாக என்ன நடைமுறை கடைபிடிக்கப்படுகிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, சமுதாயத்தில் ஒழுக்கம் என்று எவை எவை ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிறதோ அவைகளைச் சொல்லித் தருவதுதான் இந்த ஒழுக்கக் கல்வி.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, ஒழுக்கக் கல்வி என்ற பெயரால் மூட நம்பிக்கையை வளர்க்கக்கூடிய சில அம்சங்கள் சொல்லிக் கொடுக்கப்படுகிறதே. அவற்றை நீக்கு வதற்கு அரசு உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அரசு மாணவர்களுக்கு ஒழுக்கத்தைதான் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறதே அல்லாமல் மூட நம்பிக்கையை சொல்லிக் கொடுக்க விரும்பவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். லட்சுமிநாராயணன் : தலைவரவர்களே, ஒழுக்கக் கல்வித் தேர்விலே எடுக்கக்கூடிய மார்க்குகள், மாணவர்களுக்கு பிரமோஷன் கொடுக்கப்படும்போது கணக்கில் எடுத்துக் கொள்ளப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அப்படி உத்தேசம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, மாணவர்களுக்கு ஒழுக்கக் கல்வியைக் கற்பிக்கின்ற இந்த அடிப்படையிலே, ஹையர் செகன்டரி பள்ளிகளிலும் செமஸ்டர் முறையை இன்ட்ரட்யூஸ் செய்வதன் மூலமாக ஒழுக்கக் கல்வியைக் கற்பிப் பதற்கு அரசிடம் திட்டம் ஏதாவது இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, மேல்நிலைப் பள்ளிகளில் செமஸ்டர் சிஸ்டம் கொண்டு வருகின்ற ஒரு பிரச்சினை இப்போது இல்லை. ஆனால் அந்த மாணவர் களுக்கும் ஒழுக்கக் கல்வியோடு, சமுதாயப் பொறுப்புகளையும், கடமைகளையும் உணர்த்துகின்ற கல்வியையும் தருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, ஒழுக்கக் கல்வி என்ற பெயரால், கடவுள் நம்பிக்கையைக் கொடுக்கின்ற கல்வி முறைகள் தனியார் பள்ளிகளிலே அமல் நடத்தப்படு கிறதே. இதை அரசு அறியுமா ? எங்களைப் போன்ற நாத்திகக் கருத்துக்களைக் கொண்டவர்களது குழந்தைகளைக் கூட கடவுளை நம்பு என்று கட்டாயப் படுத்தக்கூடிய நிலைமைகள் இருக்கின்றதே. இவ்வாறு இருப்பது சரிதானா என்பதை அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே ஒழுக்கக் கல்வி கற்பிக்கப்படும்போது மதத் தலைவர்க சொல்லிய நல்ல கருத்துக்களைத்தான் உபயோகப்படுத் கிறார்களே தவிர, மதத்தைப் பரப்புகின்ற அடிப்படையிலே அவ்வாறு செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

நீலகிரி மாவட்ட உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு பட்டதாரி ஆசிரியர்கள்.

* வினா என் 107—திரு. கே. உச்சி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீலகிரி மாவட்டத்தில் பட்டதாரி ஆசிரியர்கள் இல்லாத உயர்தர ஆரம்பப் பள்ளிகள் எத்தனை ?

(ஆ) அப்பள்ளிகளில் உடனடியாக பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ;

(அ) 33

(ஆ) உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு புதிதாக பட்டதாரி தலைமை ஆசிரியர் பதவிகளை ஏற்படுத்துவது குறித்து இனி வரும் ஆண்டுகளில் நிதி நிலையில் அனுசரித்து அரசு ஆய்வு செய்யும். அவ்வாறு பதவிகள் ஏற்படுத்தப்பட்டால் நீலகிரி மாவட்டத்திலுள்ள உயர் தொடக்கப்பள்ளிகளுக்கும் உரிய பங்கு கிடைக்கும்.

திருப்பத்தூர் அரசினர் உயர்நிலைப்பள்ளி.

* வினா என் 108—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரிலுள்ள அரசினர் உயர்நிலைப்பள்ளி நிர்வாகத்தை நகராட்சிக்கு மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) எப்போது முதல் இத்திட்டம் அமுல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) நிதி நிலையில் பின் தங்கிய நகராட்சிகளின்றும் அரசு எடுத்துக்கொண்ட 17 நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளில் திருப்பத்தூர் நகராட்சி உயர்நிலைப் பள்ளியும் ஒன்றாகும். அப் பதினேழு உயர்நிலைப் பள்ளிகளையும் அரசே நடத்த முடிவு செய்யப்பட்டு அவ்வாறே ஆணையிடப் பட்டுள்ளது. எனவே, அப்பள்ளிகளில் அரசு நிர்வாகத்தின் கீழ் இயங்கும்.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[1979 பிப்ரவரி 2

ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தமைத்தல்.

*வினா எண் 109—திரு. சின்னசேலம் மா. சுப்ரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள பெரிய ஊராட்சி ஒன்றியங்களில் எத்தனை ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

திருமுட்டம் என்ற ஓர் புதிய ஊராட்சி ஒன்றியம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு மட்டும் அரசின் ஆய்வில் இருந்து வருகிறது.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : தென் ஆற்காடு மாவட்டத்தில் மிகப் பெரிய ஊராட்சி ஒன்றியங்கள் எவ்வளவு இருக்கின்றன ? மங்களூர் ஒன்றியம், நல்லூர் ஒன்றியம் இந்த இரண்டு ஒன்றியங்களையும் பிரித்து மூன்று ஒன்றியங்களாக மாற்றியமைக்கும்படி வேண்டுகோள் அனுப்பப்பட்டிருக்கிறன. அதை மறுபரிசிலனை செய்து அவற்றை அப்படிப் பிரிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன். அதோடு, ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்க என்னென்ன வழிமுறைகள், எந்தெந்த அடிப்படையில் பிரிக்கப்பட்டு வருகின்றன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பொதுவாக பெரிதாக இருக்கிற ஊராட்சி ஒன்றியங்களை நிர்வாக வசதிக்காகப் பிரிக்கிற செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மங்களூர், நல்லூர் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்கிற செயற்குறிப்பு ஊரக வளர்ச்சி இயக்குநரின் ஆய்வில் இருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம் : தமிழ்நாட்டில் பெரிய ஒன்றியமாக இருக்கிற உத்தரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தைப் பிரிப்பதற்காக மக்கள் பலமுறை விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஊராட்சி ஒன்றியத்தை பிரித்தமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; எங்கு விண்ணப்பித்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அரசிடம் அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லை.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம் 58 பஞ்சாயத்துக்களைக் கொண்டது. அதைப் பிரிக்க அரசுக்கு உத்தேசமுண்டா ?

1979 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதுபற்றி அரசுக்கு எந்தக் குறிப்பும் வரவில்லை.

திரு. சி. ராமநாதன் : மங்களூர், நல்லூர் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து மூன்றாவது ஒன்றியமாக பெண்ணாடம் ஒன்றியம் என்று ஏற்படுத்துவதற்கு ப்ரபோசல் அனுப்பப் பட்டிருந்ததே, அது நிறைவேற்றப்படுமா அல்லது நிராகரிக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அது ஊரக வளர்ச்சி இயக்குநரின் ஆய்வில் இருக்கிறது. அரசுக்கு வந்ததற்குப் பிறகு அது ஆயப்படும்.

திரு. த. ஆறுமுகம் : தென் ஆற்காடு மாவட்டத்தில் எவ்வளவு ஒன்றியங்களைப் பிரிக்கும் ஆலோசனை இருக்கிறது ? ஸ்ரீமுஷ்ணம் ஊராட்சி ஒன்றியம் என்று ஏற்படுத்துவதாக சொல்லியிருக்கிறார்களே, வருகிற தேர்தலுக்கு முன் அது ஏற்படுத்தப் படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதுபற்றி ஆய்வில் இருக்கிறது, அது முடிந்த பிறகு தெரிவிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தென் ஆற்காடு மாவட்டம் பற்றிய கேள்வி. திரு. கோவிந்தராசன்.

திரு. சி. கோவிந்தராசன்: தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஒன்றியங்களுக்கு போடப்பட்டுள்ள ஆலோசனைக்குழு நடத்தப் படாமலேயே இருந்து கொண்டிருக்கிறது. அதை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் உத்தேசமுண்டா ? அந்தக் குழு போட்டது மாதிரியே இருக்கிறது, செயல்படவில்லை. அதை நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; மூலக்கேள்வி ஒன்றியங்களைப் பிரிப்பது பற்றிய கேள்வி. உறுப்பினர் இது பற்றி தனிக் கேள்வி போட்டால் அது பற்றி பரிசிலிக்கலாம். குறிப்பாக எந்த ஊராட்சி ஒன்றியத்தில் அக்குழு சரியாகச் செயல்பட வில்லை என்று தெரிவித்தால் அது பற்றி முடிவு செய்யலாம்.

திரு. து. இராமசாமி : ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்கிற நேரத்தில் அது மக்கள் தொகை அடிப்படையில் பிரிக்கப்பட்டு கின்றனவா ? அல்லது அந்த ஒன்றியத்தில் இருக்கிற ஊராட்சி மன்றங்களின் எண்ணிக்கையை வைத்துப் பிரிக்கின்றார்களா என்று அறிய விரும்புகிறேன். அப்படி ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்கிற நேரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அங்கு இல்லாத காரணத்தால் தேர்தலுக்குப் பிறகு அவற்றைப் பிரிப்பது நியாயமாக இருக்கும். ஆகவே, அதுவரை அதை ஒத்தி வைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பொதுவாக மக்கள் தொகை, ஊராட்சி மன்றங்களின் எண்ணிக்கை இவைகளின் அடிப்படையில் பெரிதாக இருக்கிற ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்கிற செயற்குறிப்பு அரசிடம் இப்போது இருக்கிறது. தேர்தலுக்கு வசதியாக இருக்க வேண்டும் என்ற வகையில் தான் பிரிக்கும் உத்தேசமிருக்கிறது.

திரு. மொ. பெரியசாமி : மங்களூர், நல்லூர் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து பெண்ணாடம் என்று புதியதாக ஒரு ஒன்றியம் அமைக்க எவ்வளவு நாட்களுக்குள் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதுபற்றி குறிப்பு அமைச்சருக்கே வரவில்லை, அரசு தலைமைச் செயலகத்திற்கும் வரவில்லை, ஊரக வளர்ச்சி இயக்குநரின் ஆய்வில் இருக்கிறது.

திரு. செ. சிவசாமி : போகளூர் ஊராட்சி ஒன்றியம் 63 பஞ்சாயத்துக்களைக் கொண்டது. ஏற்கனவே அதை பிரித்து விட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்று பிரித்த பிற்பாடு ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு ஏகமனதாக பிரிக்கப்பட்டு, அந்த யூனியனில் உள்ள சில கிராமங்களைத் தனித்தனியாகப் பிரித்து அந்தப் பக்கத்திலிருந்து இந்தப் பக்கம் இந்தப் பக்கத்திலிருந்து அந்தப் பக்கம் என்று போட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அது உண்மையா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : போகளூர் ஊராட்சி ஒன்றியத்தைப் பிரிக்கிற செயற்குறிப்பு இருக்கிறது. அதிலுள்ள சிக்கல்கள் பற்றி எழுதியனுப்பினால் அது பற்றி பரிசீலிக்கலாம்.

*வினா எண். 110—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் ஏலகிரி, ஜவ்வாது மலையில் உள்ள ஊராட்சிகளை ஒன்று சேர்த்து மலைவாழ் மக்களுக்குத் தனி ஒன்றியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

(இ) எப்போது முதல் செயல்படத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) ஆம்

(ஆ) செயற்குறிப்பின்படி புதிய ஒன்றியத்தில் 20 ஊராட்சிகள் இடம் பெறும். இது இன்னும் அரசின் ஆய்வில் உள்ளது.

(இ) இக்கேள்விக்கு இப்போது இடமில்லை.

[முற்பகல் 9-40]

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் 9 ஒன்றியப் பகுதிகளில் இந்த மலைவாழ் மக்கள் வாழும் பகுதி அடங்கியிருக்கிறது. ஆகவே மலைவாழ் மக்களுக்கு என்று போடப்படும் பல திட்டங்களை சரிவர செயல்படுத்த முடியவில்லை. ஆகவே இதைக் கருத்திற்கொண்டு வரவிருக்கின்ற தேர்தலுக்கு முன்பாகவே தனி ஒன்றியமாக அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மலைவாழ் மக்களுக்கு நல்ல முறையில் பல திட்டங்கள் பயன்பட வேண்டும் என்கின்ற எண்ணத்தில் ஜமுனாமருதூர் என்ற இடத்தை தலைமையிடமாக கொண்டு 20 ஊராட்சிகள் அடங்கிய இடத்தையும் சேர்த்து ஒன்றியமாக அமைக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்பு அனுப்பியிருக்கிறார்கள். அரசு அதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. இது பற்றி முடிவு எடுத்து விரைவில் ஒன்றியமாக அமைக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி : முன்பு கல்ராயன் மலைப் பகுதி ஒன்றியமாக இருந்தது. பின்னால் எடுக்கப்பட்டது. மீண்டும் கல்ராயன் மலைப் பகுதியை உள்ளடக்கி ஒன்றியமாக அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ? நடைபெறவிருக்கின்ற தேர்தல் காலத்திற்கு முன்பு இது அமைக்கப்படுமா ? ஆய்வில் இருக்கின்றது என்று சொன்னால், எப்போது முடிவு எடுக்கப்படும். அதன் காலம் என்ன, எதைக் கேட்டாலும் ஆய்வில் இருக்கிறது என்று பதில் சொல்லிவிடுகிறார்கள். ஆய்வில் இருக்கிறது என்று சொன்னால், எத்தனை மாதங்களுக்குள் முடிவு எடுக்கப்படும், மூன்று மாதமா அல்லது ஆறு மாதமா அல்லது அடுத்த தேர்தல் வரும் வரையிலா என்று திட்டவட்டமாக தெரிவிக்க வேண்டுகிறேன். ஆய்வில் இருக்கின்றது என்று இங்கு பதில் சொல்லிவிடுகிறார்கள். ஆனால் நாங்கள் மக்களுக்கு இப்படிப்பட்ட பதிலை சொல்ல முடியவில்லை. ஆகவே திட்டவட்டமாக தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தேர்தலுக்கு முன்பாகவே ஆய்வு செய்யப்பட்டு முடிவு எடுக்கப்பட்டுவிடும். குறிப்பாக நமது நாட்டில் 374 ஒன்றியங்கள் இருக்கின்றன. இன்னும் அதிகமான அளவில் ஒன்றியங்களை அமைக்க வேண்டும் என்று சொல்லும்போது, இதன் எண்ணிக்கை அதிகமாகிறது. மத்திய அரசு 374 ஒன்றியங்கள்தான் இருக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறது. அதிகமாக ஒன்றியங்களை அமைக்கும்போது, நிதிச் செலவும் அதிகமாகிறது. அதையும் கருத்தில் கொண்டு சிறிய சிறிய ஊராட்சிகளை எல்லாம் சேர்த்து எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு ஒன்றியமாக அமைக்க அரசு ஆய்வு செய்து வருகிறது. இதன் அடிப்படையில்தான் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கருத்துரு அரசின் ஆய்வில் இருக்கிறது. இதுபற்றி அரசு விரைவில் முடிவு எடுக்கும்.

[1979 பிப்ரவரி 20

<u>திரு. சொ. ந. பழனிசாமி :</u> தலைவர் அவர்களே, அவநாசி ஒன்றியத்தை பிரிப்பதற்கு ஏதேனும் செயற்குறிப்பு அரசினிடத்தில் உள்ளதா ?

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :</u> இல்லை.

<u>திரு. பெ. சு. திருவேங்கடம் :</u> அரசினுடைய நிதிச் செலவும் அதிகமாகும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். மலைவாழ் மக்களுக்காக பல நல்வாழ்வுத் திட்டங்களுக்காக மத்திய அரசு ஏராளமான திட்டங்களைத் தீட்டி அதற்காக செலவு செய்து வருகிறது. இவ்வித திட்டங்களுக்குத் தரப்படும் நிதியை பயன்படுத்தி இந்த ஒன்றியத்தை தேர்தல் நடத்துவதற்கு முன்பு அமைப்பதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுக்க முன் வருமா ?

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :</u> மலைவாழ் மக்களுக்காக இந்த ஒன்றியத்தை தேர்தல் வருவதற்கு முன்னால் அமைப்பதற்காக, தீவிரமாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> தலைவர் அவர்களே, இந்த மலைவாழ் மக்களுக்காக ஜமுனமருதூரை மையமாகக் கொண்டு புதிதாக ஒன்றியம் அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது அங்கேயிருக்கின்ற பல பகுதிகளில் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாத முறையில் இருக்கின்றன. இவைகள் எல்லாம் உத்தேச ஒன்றியத்தில் வரவிருப்பதாக சொல்லப்படுகிறது. மலைவாழ் மக்களுடைய நலனைக் கருதி, சீக்கிரமாக இந்த ஒன்றியத்தை அமைத்து, ஜமுனமருதூருக்கு இந்த ஊர்களிலிருந்தெல்லாம் போவதற்கு சாலை வசதிகள் செய்து கொடுக்கப்படுமா ? மேலும் இந்த ஒன்றியத்தில் கலச பாக்கம், ஆலங்காயம், செங்கம் போன்ற ஒன்றியங்களிலிருந்து சில பகுதிகள் சேர்க்கப்படும் என்று தெரிகிறது. இவைகளில் முக்கியமாக ஆலங்காயம் ஒன்றியத்தின் தலைநகரமாக ஆலங் காயம் இருக்கிறது. ஆகவே ஆலங்காயத்திலுள்ள ஊர்களை அப்படியே வைத்து விட்டு, பிற இடங்களை எல்லாம் சேர்த்து இந்த ஒன்றியத்தை விரைவில் அமைக்க அரசு முன்வருமா ?

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :</u> அமையப் போகின்ற இந்த புதிய ஒன்றியத்தில், கீழ்க்கண்ட ஒன்றியங்களிலுள்ள 20 ஊராட்சிகள் சேர்க்கப்படும். அந்த ஒன்றியங்களின் பெயர்கள், ஆலங்காயம், திருப்பத்தூர், மாதனூர், அணைக்கட்டு, கணியம் பாடி, போளூர், கலசப்பாக்கம், புதுப்பாளையம், செங்கம்.

<u>திரு. ரா. மார்க்கபந்து :</u> தலைவர் அவர்களே. இது போன்ற ஒரு கேள்வி நான் கேட்டிருந்தேன், அது இப்போது இடம் பெறவில்லை, இருப்பினும் யூனியன்கள் சம்பந்தமாக பல திட்டங்கள் போடப்பட்டிருந்தும் ஒன்றும் செயல்படாமல்

1979 பிப்ரவரி 20]

இருந்து கொண்டிருக்கிறது. சில ஒன்றியங்களில் போடப்பட்ட பல திட்டங்கள் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் எதுவும் நடைபெறாமல் இருக்கிறது. மேலும் புது ஒன்றியங்கள் அமைப் பதில் பொருளாதார சிக்கல் இருப்பதையும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை அடிப்படையாக வைத்து, அதை சாக்காக வைத்துக்கொண்டு, உத்தேசிக்கப்பட்டிருக்கின்ற ஒன்றிய அமைப்பு சம்பந்தமான முடிவுகள் கைவிடப்பட்டு விடுமோ என்ற அச்சம் இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக மலைவாழ் மக்களின் நல்வாழ்வு திட்டம் என்பதை தனியாக திட்டமாக கருதி....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> கேள்வியை சுருக்கமாக போடுங்கள், முன்வரிசையில் இருப்பவர்கள் திறமையாக கேள்விகளை போடக்கூடியவர்கள். தயவு செய்து சுருக்கமாக போடுங்கள்.

<u>திரு. ரா. மார்க்கபந்து :</u> அந்தத் நிலைமையைப்பற்றி எல்லோருக்கும் தெரியும், நான் சொல்ல விரும்புவது, பொருளா தாரத்தை அடிப்படையாக காட்டி, அதை ஒரு சாக்காகக் காட்டி அரசின் உத்தேசம் கைவிடப்பட்டுவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. அதைப் போக்குகின்ற வகையில், அடுத்த தேர்தல் வருவதற்கு முன்பு இந்த ஒன்றியத்தை அமைப்பதற்கு நட வடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>திரு. துரை முத்துசாமி :</u> பாயின்ட் ஆப் ஆர்டர், பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, முன்வரிசையிலே உள்ளவர்கள் முறையாகக் கேள்வியைப் போடுவார்கள் என்றால், மற்றவர்கள் அப்படிப் போட மாட்டார்கள் என்று அர்த்தமா?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நான் அப்படிச் சொல்ல வில்லை. முன்வரிசையிலே கட்சித் தலைவர்கள் அமர்ந்திருக் கிறார்கள். கட்சித் தலைவர்கள் திறமையானவர்கள் என்று சொன்னால், மற்றவர்கள் திறமையற்றவர்கள் என்று அர்த்த மில்லை. அந்த அர்த்தத்திலே நான் சொல்லவில்லை.

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :</u> இந்த ஒன்றியத் தேர்தல்கள் முன்னாலேயே நடப்பதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது.

[1979 பிப்ரவரி 20

கோவையிலிருந்து விரைவுப் பேருந்துகள்.

* வினா எண். 111—திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவையில் இருந்து கள்ளிக்கோட்டை வழியாக கண்ணனூர் வரை துரித பஸ் விடும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமுலுக்கு வரும்?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்):

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர்களே, கோவையிலிருந்து கள்ளிக்கோட்டைக்கு கண்ணனூர் வழியாக பஸ் விடப்படுமா என்று கேட்டிருந்தேன். கோவை நகரத்திலே கேரள மக்கள் கணிசமாக வசிக்கிறார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். அமைச்சர் அவர்களின் பேரவைச் செயலர் அவர்களுக்கும் தெரியும். அப்படி இருக்கும்போது இதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, கள்ளிக்கோட்டைக்கு, கண்ணனூர் வழியாக பஸ் விடும் ஏற்பாட்டை ஏன் செய்யக் கூடாது? செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்) : தலைவர் அவர்களே, இரு மாநிலங்களுக்கும் இடையே பேருந்து போக்குவரத்து நடத்துவதற்கு இரு மாநில அரசுகளின் ஒப்புதல் தரவேண்டும். இந்த அடிப்படையில் இந்தப் போக்குவரத்து வழித் தடத்தைப் பற்றி இன்னும் அரசு எந்தவிதமான முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை. அதோடு, கோவையிலிருந்து கள்ளிக் கோட்டைக்கு 288 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. இதில் 56 கிலோ மீட்டர் தமிழகத்திலும், 232 கிலோ மீட்டர் கேரளத்திலும் அமைந்திருக்கிறது. இதிலே அரசு ஏற்றுக் கொண்டால், அது லாபகரமாக இருக்குமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*வினா எண். 112—திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவையில் இருந்து கொச்சி வழியாக திருவனந்தபுரத்திற்கு துரித பஸ் விடும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமுலுக்கு வரும்?

1979 பிப்ரவரி 20]

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்)

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை,

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் போட்ட கேள்வியிலும் இதே அம்சம் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கோவை நகரத்திலே கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் நிறைய வசிக்கிறார்கள். கோவை நகரம் திருவனந்தபுரம் போன்ற கேரள மாநிலத்தின் பல நகரங்களை இணைப்பதாக இருக்கின்றது. அப்படி இணைக்கக்கூடிய அந்த அடிப்படையில் பஸ் போக்குவரத்தை ஏற்படுத்தியாக வேண்டும். தமிழ் நாட்டு ரோட்டின் எல்லை, கேரளாவின் ரோட்டின் எல்லை என்று வரையறுத்துக் கொண்டு, இந்தப் போக்குவரத்தை நீட்டிக்காமல், உதவியாக இருக்கும் என்ற அடிப்படையை கணக்கில் எடுத்துக் கொண்டு, இந்த திருவனந்தபுரத்திற்கு நேரடியாக கோவையிலிருந்து எர்ணாகுளத்திற்கு பஸ் போக்குவரத்தை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சி மேற்கொண்டாக வேண்டும். இப்போது மேற்கொள்ளவில்லை என்றாலும்கூட, இனிமேலாவது அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ப. கோ. கிட்டு, (அமைச்சரின் பேரவை செயலர்) : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை நல்ல யோசனை, இந்த அரசு அதைப்பற்றி யோசிக்கின்ற நேரத்தில், ஏற்கனவே கோவையிலிருந்து பாலக்காட்டிற்கு சேலம் போக்குவரத்துக் கழகப் பேருந்து சென்று கொண்டிருக்கிறது. அதோடு பாலக்காட்டிலிருந்து திருவனந்தபுரத்திற்கும், மற்றும் கேரளத்திலுள்ள நகரங்களுக்கெல்லாம் கேரள அரசு விரைவுப் பேருந்து, தொகுப் பேருந்து ஓடிக் கொண்டிருக்கிறது. எந்த அளவிற்கு பாலக்காட்டிற்கு தமிழக அரசு பேருந்துகள் சென்றுகொண்டிருக்கின்றன என்பதையும், மேற்கொண்டு நம்முடைய உறுப்பினர் அவர்களின் யோசனையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9-50]

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : அமைச்சச் செயலாளர் அவர்கள் கோவையிலிருந்து பாலக்காட்டுக்குப் பஸ் போகிறது என்று சொன்னார்கள். இல்லையென்று மறுக்கவில்லை. பொள்ளாச்சிக்கும் திருப்பூருக்கும் எவ்வளவு பஸ்கள் ஓடிக் கொண்டிருக்கின்றனவோ அந்த எண்ணிக்கை அளவுக்குக்கூட பாலக்காட்டுக்குப் பஸ்கள் விடப்படுவதில்லை. ஐந்து லட்சம் மக்கள் வாழக்கூடிய கோவை நகரில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட

கேரள மாநிலத்தைச் சேர்ந்த மக்கள் இருக்கிறார்கள். ஆகவே. எல்லை ஓரமாக இருக்கும் பாலக்காட்டுக்கு அதிகமான பஸ்கள் விடுவதற்கு அரசு முன்வருமா? அதே போன்று திருவனந்த புரத்திற்கும் நேரடியாக பஸ் விடுவதற்கு அரசு முன்வருமா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்) : மாண்புமிகு உறுப்பினர் வெங்கிடு அவர்கள் கோரிக்கை பரிசீலிக்கப்படும். திருவனந்தபுரத்தில் நேரடியாக பஸ் விடுவதைப் பொறுத்தவரை திடீரென்று நாம் அதைச் செய்துவிட முடியாது. தமிழக அரசு மாத்திரம் முடிவு செய்யக்கூடிய காரியம் அல்ல அது. தமிழக அரசு, கேரள அரசு ஆக இரண்டு அரசுகளும் ஒப்பந்தம் செய்து கொண்ட பின்னர்தான் பஸ்களைவிட ஏதுவாக இருக்கும். கோவையிலிருந்து திருவனந்தபுரத்திற்கு தூரம் 417 கிலோ மீட்டர் இருக்கிறது. தமிழகத்திலே 40 கிலோ மீட்டர் தான். மீதி 397 கிலோ மீட்டர் தூரம் கேரள மாநிலத்தில் இருக்கிறது. இவ்வளவு நீண்ட தூரத்திற்கு நம்முடைய மாநிலப் போக்குவரத்துக் கழக பஸ்கள் போக கேரள அரசு ஒப்புதல் தருமா என்பது சந்தேகத்திற்குரியது, இரு அரசுகளும் ஒப்பந்தம் செய்து கொண்ட பிறகுதான் இந்த பஸ்களை விடுவது பற்றி யோசிக்க முடியும்.

திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : கோவையிலிருந்து பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை வழியாக பழனிக்கு சேரன் போக்குவரத்துக் கழகம் பஸ் விடுகிறது. பழனியிலிருந்து உடுமலைப் பேட்டைக்கோ, உடுமலைப் பேட்டையிலிருந்து பழனிக்கோ செல்ல முடியாத அளவில் நடுவில் டிக்கட் கொடுக்க மறுப்பதாகச் சொல்லப்படுகிறது. ஏற்கனவே ஏ.பி.டி.சர்விஸ் இருந்தபோது உடுமலைப் பேட்டையிலிருந்து பழனிக்கு தனியாக பஸ் ரூட் இருந்தது. மீண்டும் உடுமலைப் பேட்டையிலிருந்து பழனிக்கு பஸ் விட, தனியான ரூட் ஆக பஸ் விட அரசு முன் வருமா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்) : மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கோரிக்கை இப்போது சரி செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்ற ஒருசில குறைபாடுகள் பல்வேறு வழித் தடங்களில் இருக்கின்றன என்று அரசின் கவனத்திற்கு வந்திருக்கின்றன. அவை பற்றியெல்லாம் பரிசீலனையில் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மரைக்கா கோரையாற்றின் குறுக்கே பாலம்

* வினா எண். 113— திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :— திருத்துறைப்பூண்டி தாலுக்காவில் உள்ள கீழத் தொண்டியக்காடு கிராமத்தையும் மேலத் தொண்டியக் காடு வட்டத்தையும் இணைக்க மரைக்கா கோரையாற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) :— இல்லை.

திரு. பொ. உத்திராபதி : இந்தியாவுக்கும் அந்தமான் தீவுக்கும் இடையில் எப்படி கடல் சூழ்ந்திருக்கிறதோ அது போன்ற நிலையில் அந்தப் பகுதி மக்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். சுதந்திரம் பெற்று 32 ஆண்டு காலமாகிவிட்டது. தொண்டியக்காடு கடலுக்கு அருகாமையில் இருக்கிறது. பின் தங்கிய பகுதி. கீழ்த்தொண்டியக்காட்டிலிருந்து மேல் தொண்டியக்காட்டுக்குப் போக வேண்டுமென்றால் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் நீச்சல் அடித்துக்கொண்டு போகக் கூடிய நிலைமைதான் இருக்கிறது. அமைச்சர்கள் அந்தப் பகுதிக்கு வந்திருக்க மாட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். விளக்கங்களைக் கூறிக் கொண்டிருக்க வேண்டாம்.

திரு. பொ. உத்திராபதி : எம். எல். ஏ. கூட தேர்தல் சமயத்தில் போகிறாரே தவிர அதற்குப் பிறகு போக முடியவில்லை. அதைப் பின்தங்கிய பகுதி என்ற கணக்கில் எடுத்து மரைக்கா கோரையாற்றின் குறுக்கே பாலம் கட்டித்தர அரசு முன்வருமா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்) : மாண்புமிகு உறுப்பினர் சொன்ன இந்தப் பாதையானது நெடுஞ் சாலைத் துறையில் இருக்குமானால் விரைந்து செப்பனிடவும் அவர்கள் கேட்டுக் கொண்டதுபோல் பாலத்தை அமைக்கவும் ஏதுவாக இருக்கும். அவர்கள் குறிப்பிட்டிருக்கும் கீழ்த் தொண்டியக்காடு, மேலத்தொண்டியக்காடு சாலை ஊராட்சி சாலையாக இருந்து கொண்டிருக்கிறது. அதன் குறுக்கே மரைக்கா கோரையாற்றில் பாலம் கட்ட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்கள் கேட்டிருக்கிற அந்தப் பாலத்தை ஊராட்சி சாலையாக இருப்பதை நெடுஞ்சாலைத் துறையில் அரசு ஏற்கும்போதுதான் அந்தப் பாலத்தை அமைக்க ஏதுவாக இருக்கும். இந்தச் சாலையில் 2·4 கிலோ மீட்டர் சாலை சிற்றூர் சாலைகள் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அடுத்து 4 கிலோ மீட்டர் சிற்றூர் சாலைத் திட்டத்தில் மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, தோழர் உத்திராபதி அவர்கள் கேட்ட கேள்வியிலே அந்த நெடுஞ்சாலை மக்களுக்குக் கொடுஞ்சாலையாக இருக்கிறது. துரிதமாக நடவடிக்கை எடுத்து அதிலே பாலம் அமைக்க அரசு முன்வருகிறது என்பதை ஆவலோடு வெளியிடவேண்டுமென்று ஆசையோடு கேட்டுக் கொள்கிறேன்.

[1979 பிப்ரவரி 20

திரு, ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : அதைப்பற்றித் தான் நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அந்தச் சாலை ஊராட்சி சாலை, நெடுஞ்சாலைத் துறையிலே உள்ள சாலையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பாலத்திற்கு ஏறத்தாழ 5 லட்சம் ரூபாய் செலவு ஆகும். அடுத்து, இதரச் சாலைகள் திட்டத்தின் கீழ் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்படுகிறபோது அரசு இந்தச் சாலையைப் பற்றிப் பரிசீலிக்கும். அரசு நடவடிக்கை எடுக்கும் என்று இப்போது நான் உறுதிமொழி கொடுக்கத் தயாராக இல்லை. பரிசீலிக்கப் படும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

Irrigation sources in Pudukkottai district.

* Q. No 114—Thiru N. SUNDARARAJ : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state.

(a) Whether the Government have received any proposal from the Tamil Nadu State Planning Commission during the year 1976-77 for the modernisation of irrigation sources in Pudukkottai district and

(b) if so, the action taken there on?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

அரூரில் ஆற்றுத் தடுப்புச் சுவர்.

* வினா எண். 115—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரூர் நகரத்தில் ஓடும் ஆற்றுக்கு தடுப்பு சுவர் கட்டும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :—இல்லை.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே. அரூர் வாணியாறு என்பது நாளுக்குநாள் அரிக்கப்பட்டு பெரிய அளவிற்கு 25, 30 அடிக்கு பறிக்கப்பட்டு, மணல் அற்று, இன்றைக்கு கல்லும் செட்டுமாக இருக்கிறது. அதன் காரணமாக அங்கே பக்கம் உள்ள கிராமங்களில் கிணறுகளுக்கு நீரூற்று அற்றுப்போகக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே 3 அடிக்கு ஒரு தடுப்புச் சுவர் என்ற முறையிலே (செக் டாம்ஸ்) கட்டிக் கொடுத்து அங்கே நீர் ஊற்று ஆதாரங்களைப் பெருக்குவதற்கு அரசு பரிசீலிக்குமா?

1979 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தடுப்புச் சுவர் கட்டவேண்டுமென்ற கோரிக்கை பாசன வசதியைப் பொறுத்து அல்ல. ஆனால் தடுப்புச் சுவர் ஏற்கெனவே 93 மீட்டர் நீளத்திற்கு இருக்கிறது. அதிலே மேல் பகுதியிலே 100 மீட்டர் நீளத்திற்கும் கீழ்ப்பகுதியிலே 140 மீட்டர் நீளத்திற்கும் 2 லட்சத்து 28 ஆயிரம் ரூபாய் செலவிலே கட்டப்பட்டு இருக்கிறது. இன்னும் தடுப்புச் சுவர் கட்டப்பட வேண்டுமென்றால் அது நகராட்சியின் மூலமாகத்தான் கட்டப்பட வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, நகராட்சி செல்ல வேண்டுமென்று அமைச்சர் குறிப்பிட்டார்கள். அரூர் பகுதியை நான் சொல்லவில்லை. அரூர் வாணியாறு, அந்த ஆறு மலைப் பிரதேசத்தில் இருந்து வருகிற ஆறு. மலை வெள்ள வேகத்தினால் அங்கே இன்றைக்கு ஆற்றில் மணல் இல்லை, கல்லும் செட்டும் தான் இருக்கிறது. நீர்ப்பாசனத்திற்கு அல்ல, ஆற்று நெடுகிலும் மணல் அரிப்பைத் தடுத்து அந்தப் பகுதியிலே கொஞ்சம் ஊற்று நீர்ப் பிடிப்பை ஏற்படுத்த வேண்டும். இல்லையென்றால் நாளுக்கு நாள் அரிப்பு ஏற்பட்டு அந்தப் பகுதியிலே வறட்சியாக ஆகக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும், ஆகவே அரசு அதைப் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையைப் பரிசீலிப்பதற்கு முன்னதாக அது எந்த அளவிற்குப் பாசன வசதிகளைப் பெருக்கும் என்பதையும் விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பயனுள்ள திட்டமாக அது இருக்கும் என்பதையும் பரிசீலித்தற்குப் பின்னாலே விடையளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தழுதாழை ஏரி அமைப்பு

*வினா எண். 116—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரம்பலூர் வட்டத்திலுள்ள தழுதாழை ஏரி அமைப்பதற்கென பெற்ற நிலங்களின் சொந்தக்காரர் களுக்கு ஈட்டுத் தொகை கொடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) இல்லையெனில், இது குறித்து எடுக்கப்பட்ட நட வடிக்கை யாது?

[1979 பிப்ரவரி 20

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :—

(அ) பெரம்பலூர் வட்டத்தில் தழுதாழை கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள தழுதாழை ஏரித் திட்டத்திற்காக 57.41 ஏக்கர்களுக்கு சம்பந்தப்பட்ட நிலச் சொந்தக்காரர்களுக்கு ஈட்டுத்தொகை வழங்க வேண்டியுள்ளது.

(ஆ) இதன் கீழ் நிலங்களுக்கு 1894-ம் ஆண்டு நிலம் எடுப்புச் சட்டத்தின் 4 (1) பிரிவின் கீழ் வரைவு விளம்பரமும், மற்றும் 6, 7 பிரிவுகளின் கீழ் வரைவு உறுதிகளும் தமிழ்நாடு அரசிதழ்களில் பிரசுரித்த பிறகு, தீர்ப்பு விசாரணை (award enquiry) நடத்த உரிய தக்க மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட நிலச் சொந்தக்காரர்களுக்கு ஈட்டுத் தொகை அளிப்பதற்கு விரைவு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, தழுதாழை கிராமத்திலே ஏரி அமைப்பதற்காக 1973 ஆம் ஆண்டிலேயே ஏறத்தாழ 56 ஏக்கர் நிலம் விவசாயிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த விவசாயிகளுக்கு இன்னும் நட்ட ஈட்டுத் தொகை வழங்கப்படாத காரணத்தால் அவர்கள் பலவித இன்னல்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். அப்படி கைப்பற்றப்பட்ட நிலங்களை வைத்துத்தான் அந்த விவசாயிகள் பிழைத்து வந்தார்கள். ஆகவே உடனடியாக அவர்களுக்கு ஈட்டுத் தொகை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு அந்த ஏரி அமைக்கப்படுவதன் மூலமாக எந்தவிதமான தண்ணீரும் வருவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப, குழந்தைவேலு :—பேரவைத் தலைவரவர்களே, சிறிய நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் 2, 25.600 ரூபாய் செலவிலே அங்கே ஏரி கட்டப்பட்டு இன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் மூலமாக, சப்ளை வாய்க்காலின் மூலமாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பாசன வசதியை அதிகரிக்கும் நோக்கோடு இன்று அந்த ஏரி கட்டப்பட்டு, அதன்மூலம் தண்ணீர் சப்ளை கொடுக்கப்பட்டு வருகிறது. மேலும் 57.41 செண்ட்டுக்கு இன்னும் பணம் கொடுக்க, 'அவார்ட் என்கொயரி' நடந்து முடியும் நிலையிலிருக்கிறது, கூடிய சீக்கிரத்தில் நடவடிக்கை எடுத்து மேலும் யார் யாருக்குப் பணம் கொடுக்கப்படவேண்டுமோ அவர்களுக்கெல்லாம் பணம் கொடுக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 பிப்ரவரி 20]

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, வெட்டப்பட்ட வாய்க்காலின் மூலம் தண்ணீர் வர முடியாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படியென்றால் அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அப்படிப்பட்ட புகார் எதுவும் இதுவரையிலே அரசுக்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லக்கூடிய புகார் இருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்து, சப்ளை வாய்க்காலின் மூலம் சரியாகத் தண்ணீர் போகவில்லை என்றால் சரியாகப் போகக்கூடிய நடவடிக்கை கூடிய சீக்கிரம் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 117-ம், 118-ம் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டிருப்பதால் இரண்டு கேள்விகளையும் ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம்.

சென்னை நகருக்குப் பால் விநியோகம்

* வினா எண். 117 திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னை மாநகருக்கு பால் விநியோகம் செய்வதற்கென எவ்வளவு பாலிதீன் பை செலவாகும்?

(ஆ) அதற்காக ஆகும் செலவு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு?

(இ) இந்த நடப்பாண்டில் இதுவரை எவ்வளவு ரூபாய் செலவழிக்கப்பட்டது?

(ஈ) இவை யாரிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

(அ) ஒரு நாளைக்கு சராசரி 1,70,000 பாலிதீன் பைகள் உபயோகப்படுகின்றன.

(ஆ) ஆண்டொன்று ஆகும் செலவு சுமார் ரூபாய் 70 இலட்சம்.

(இ) நடப்பாண்டில் ஏப்ரல் 1978 முதல் ஆகஸ்ட் 15 வரை ஏறத்தாழ ரூ. 26 இலட்சம்.

(ஈ) கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி மூலமாக வாங்கப்படுகிறது.

1. யூனியன் கார்பைடு — பம்பாய்
2. தேவன் பிளாஸ்டிக்ஸ் — சென்னை
3. போலின் இன்டஸ்டிரிஸ் — சென்னை
4. மேடோரா பிளாஸ்டிக்ஸ் — பெங்களூர்
5. புரோகிரெஸ்ஸிவ் பிளாஸ்டிக் — கல்கத்தா
6. மெட்டல் பாக்ஸ் கம்பெனி ஆப் இந்தியா

பால்வளத் தொழிலாளர்களது முறையீடு.

வினா எண். 118 — *திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையில் பால்வளத் தொழிலாளர்கள் தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி அரசுக்கு அண்மையில் விண்ணப்பம் ஏதேனும் தந்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில் அரசு அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) விண்ணப்பம் ஏதும் அரசுக்கு வரவில்லை. ஆனால் அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு பால்வள நிறுவனத்துக்கு வந்துள்ளது.

(ஆ) தமிழ்நாடு பால்வள நிறுவன அண்ணா தொழிலாளர் மற்றும் எழுத்தர்கள் சங்க நிர்வாகிகள் சிலர், பால்வள நிறுவன பணிக் குழு மேலாளரை நேரில் சந்தித்து சில கோரிக்கைகளைச் சமர்ப்பித்தனர். இது குறித்து நிர்வாகமும், சங்க நிர்வாகிகளும் 22-7-78 அன்று பேச்சு வார்த்தை நடத்தினார்கள். தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவரவர்களே, ஒரு நாளைக்கு ஒரு இலட்சத்துக்கு மேல் பாலிதீன் பைகள் செலவாகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதாவது ஒரு நாளைக்கு அவ்வளவு பாலிதீன் பைகளில் பால் அடைக்கப்பட்டு செலவாகிறது என்று சொன்னார்கள். பாட்டிலில் கொடுப்பதைவிட இது செலவு குறைவா? பாட்டிலை வேண்டுமானாலும் மறுபடியும் பயன்படுத்திக்கொள்ளலாம், ஆனால் இந்தப் பைகளை மறுபடி பயன்படுத்த முடியாது. பாட்டிலைப் பயன்படுத்துவது இலாபகரமாக இருக்குமே. எனவே. பால்வள நிறுவனத்தின் நஷ்டத்தை ஈடுகட்ட ஏன் மறுபடியும் பாட்டில்களை உபயோகப்படுத்தக் கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, நாளொன்றுக்கு சென்னை நகரில் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் லிட்டர் பால் விநியோகம் செய்யப்படுகிறது. பாலிதீன் பைகளில் கொடுக்கப்பட்டு வருவது 20 சதவீத அளவில்தான் இப்பொழுது கொடுக்கப்பட்டு வருகிறது, மீதமெல்லாம் பாட்டில்களிலே கொடுக்கிறோம், நேரடியாகவே பணத்தைப்போட்டு அவரவர்களுடைய பாத்திரத்திலே பெற்றுக் கொள்ளும் முறையில் இயந்திரங்களின் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. பைகளின் மூலமாகக் கொடுப்பதில் சில நன்மைகள் இருக்கின்றன என்பதைக் கவனத்தில் கொண்டு அவ்வாறு

செய்யப்படுகிறது. இதனால், பாலில் கலப்படம் செய்வது தவிர்க்கப்பட்டு பால் நேரடியாகக் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. இரண்டாவதாக, பாட்டில்களில் கொடுக்க வேண்டுமென்றால் இயந்திரங்களை நிறுவும் செலவு அதிகமாகிறது, தேவையான இடங்களுக்கு மாற்றவும் செலவு அதிகமாகிறது. ஆகவே, இதுதான் சிறந்த முறையாகக் கருதப்படுகிறது. சென்னை நகரத்திலே உள்ள மக்கள் பாலிதீன் பைகளில் உள்ள பாலையே அதிகமாக வாங்க விரும்புகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர நான் விரும்புகிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பால்வளத் தொழிலாளர்கள் சில கோரிக்கைகளை வலியுறுத்திச் சிலநாட்களுக்கு முன் சில மாதங்களுக்கு முன்- போராடினார்கள். ஆனால் ஐ. பி. சி. யின் கீழ் பல பயங்கரமான செக்ஷன்களின் கீழ் அவர்கள் மீது வழக்குகள் பல போடப்பட்டு கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள். இந்த அவையில் உறுப்பினராக இருக்கின்ற ரகுமான்கான் அவர்கள் வழக்கறிஞர் என்ற முறையில் அவர்களை ஜாமீனில் கொண்டுவர ஏற்பாடு செய்து, வழக்காடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த 500-க்கும் மேற்பட்ட பால் தொழிலாளர்கள் மீதுள்ள வழக்குகள் வாபஸ் பெறப்பட்டு சிறப்பான முடிவிற்குக் கொண்டுவரப்படுமா? சமரசம் ஏற்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, பால்வள நிறுவனத்திலே பணிபுரியக்கூடிய சில தொழிலாளர்கள் முன்னறிவிப்பு இல்லாமல் சட்டவிரோத வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டார்கள் என்ற காரணத்தினால் சிலர்மீது தவிர்க்க முடியாத வகையில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. ஆனால், அவர்கள் வைத்த கோரிக்கைகளை அரசு அனுதாபத்தோடு பரிசீலித்து, 90 சதவீதம் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டதன் விளைவாக அவர்களும் மன நிறைவோடு சென்றிருக்கிறார்கள். வழக்கு மன்றத்திலே வழக்குகள் இருப்பது என்பது வேலை நிறுத்தத்தின்பொழுது சிலர் வன்முறைச் சம்பவங்களிலே ஈடுபட்டதால், நிறுவனத்திற்குச் சொந்தமான பொருள்களுக்கு சேதம் ஏற்பட்டிருக்கின்றன. எனவே, வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் மீது, கிரிமினல் சட்டப்படி வழக்குகள் போடப்பட்டிருக்கின்றனவே தவிர, வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள் என்பதற்காக வழக்கு போடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரெ. வி. சவுந்திரராஜன் : தலைவரவர்களே, பாலிதீன் பைகளில் எந்தெந்த அளவுகளில் பால் சப்ளை செய்யப்படுகிறது? மாநகராட்சிப் பகுதியில்தான் இதுமாதிரி சப்ளை செய்யப்படுகிறது. எங்களுக்கும் அதுமாதிரி சப்ளை செய்ய அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா? மாநகராட்சிப் பகுதியில் மட்டுமல்லாது எல்லா பகுதிகளிலும் பாலிதீன் பைகளில் பால் வழங்க ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்

[1979 பிப்ரவரி 20

மாண்புமிகு திரு.கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்பினால் அவர்களுக்கு பாலிதீன் பையிலேயே பாலை வழங்க எந்தவிதமான இடைப்பாடுமில்லை யென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னையிலே மட்டும் இருந்துவரும் பாலிதீன் பைகளில் பால் கொடுக்கும் இத் திட்டம் விரைவிலே மதுரைக்கும் விரிவுபடுத்தப்பட இருக்கிறது. பிற நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட இருக்கிறது. அப்பொழுது அந்தந்த மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் பாலிதீன் பை களிலே பாலைப் பெற வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, பர்கூர் தொகுதியிலே எலத்துகிரி என்னும் ஒரு கிராமத்திலே மகளிர் பிரிவு பால் சொசைட்டி ஒன்று இருக்கிறது. அதே நேரத்திலே இன்னொரு பால் சொசைட்டியும் இருக்கிறது. மகளிர் பிரிவு பால் சொசைட்டியை ரிஜிஸ்தர் செய்திருக்கிறார்கள். ஆனால், இன்னொரு சொசைட்டியை ரிஜிஸ்தர் செய்யவில்லை. மகளிர் பிரிவு பால் சொசைட்டி, பால் பண்ணைக்குப் பால் வழங்கு வதில்லை. ஆனால், இன்னொரு சொசைட்டி பால் வழங்குகிறது ஆகவே, ரிஜிஸ்தர் செய்யாத அந்த சொசைட்டியை ரிஜிஸ்தர் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, மூலக்கேள்வி பாலிதின் பைகளில் பால் விநியோகிக்கப்படுவதில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் கேட்ட கேள்விக்கும் மூலக்கேள்விக்கும் சம்பந்தம் இல்லை, சம்பந்தம் இல்லாத கேள்விக்கு அமைச்சரிடம் எப்படி தகவல் இருக்கும். மூலக் கேள்வியை ஒட்டியதாக துணைக் கேள்வி இருக்கவேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, மாதவரம் பால் பண்ணையிலேயிருந்து சென்னையிலுள்ள பல டெப்போக்களுக்கு தொழிலாளர்கள் பாலைக் கொண்டு போகிறார்கள். அப்படிப் பாலைக் கொண்டு போகும்போது, டின்னில் பால் சேதாரம் ஆகிறதென்றால், அதற்கான பணம் அத்தொழிலாளர்களின் சம்பளத்தில் பிடிக்கப்படுகிறதா? ஒவ்வொரு மாதமும் எவ்வளவு பால் சேதாரம் அடைந்தது என்ற தகவல் அவர்களுக்குத் தரப்படு கிறதா என்ற விவரங்களைக் கேட்கவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, இது குறித்து விளக்கமாகப் பதில் பெற வேண்டுமானால் மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டு விவரம் பெறு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

1979 பிப்ரவரி 20]

திரு. துரை முத்துசாமி : தலைவரவர்களே, கிராமங்களிலே இருக்கிற பால் நகரங்களுக்கு வந்துவிடுவதால், கிராமங்களில் பால் விலை ஏறிவிட்டது, அது மட்டுமல்லாமல், அங்கே பால் கிடைக்கவில்லையென்று கிராம மக்கள் குறைப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கும் பால் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, கிராமங்களிலேதான் பாலை உற்பத்தி செய்து நகரங்களுக்குக் கொண்டு வருகிறார்கள். உற்பத்தி செய்கிற பாலிலே தங்களது தேவை போக மிச்சத்தைத்தான் கிராம மக்கள் கொடுத்து வருகிறார்கள். எனவே, இதிலே இந்தப் பிரச்னை எழவில்லை யென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் அளிக்கிறபொழுது பால்வள நிறுவனத் தொழிலாளர்கள் கோரிக்கைகள் குறித்து சமரசப் பேச்சு வார்த்தை நடப்பதாகச் சொன்னார்கள். உழைக்கும் மக்களிலேயே, இவர்கள்தான் மிகக் குறைந்த சம்பளத்திலே இருக்கிறார்கள். ஆகவே, அத் தொழிலாளர்களுக்கு சர்க்கார் குறைந்தபட்சச் சம்பளம் நிர்ணயித்து அறிவிக்க முன் வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, பால்வள நிறுவனத்தில் பல வகைகளில் தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் எந்த வேலைக் காகக் குறைந்த சம்பளம் வாங்குகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்னால் அதுபற்றிய பதிலை நான் தெளிவாகச் சொல்ல முடியும். இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் தான் பார்ட் டைம் சேல்ஸ் அசிஸ்டன்ட்கள் (PTSA) பதவியிலிருப்பவர்களுக்கு இரண்டு மடங்கு கூடுதலாக நாம் சம்பளம் கொடுத்து வருகிறோம். காஷுவல் லேபராக பணி யாற்றி வருபவர்களுக்கு ரூ 5லிருந்து ரூ. 5.50க்கு கூடுதலாகக் கொடுக்கும் கோரிக்கையை ஏற்றிருக்கிறோம் என்பதைத் தெரி விக்க விரும்புகிறேன். அதோடு, டைம் ஸ்கேல் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. பல பணியாளர்கள் நிரந்தரமாக்கப்பட்டிருக் கிறார்கள். எனவே, எந்த வகையிலே குறைந்த சம்பளம் வழங்குகிறார்கள் என்று சொல்லமுடியாது. மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டு கவனத்திற்குக் கொண்டு வந்தால் நான் பதில் சொல்வதோடு பிரச்சனைகளைத் தீர்க்கத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 10–10]

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, இந்த ஆவின் பாலை குழந்தைகள் முதல் வயோதிகர்கள் வரையில் அருந்து கிறார்கள்? அப்படிப்பட்ட மக்கள் உபயோகத்திற்காகவும் வழங்க

படுகிற பால் பாட்டல்களில் எலிக்குஞ்சுகள் கரப்பான் பூச்சிகள் போன்றவைகள் காணப்பட்டன என்று பத்திரிக்கைகளில் செய்திகள் வந்து இருக்கின்றன. இப்படி சுகாதார கேடுகளை விளைவிக்கும் வகையில் பால் வழங்கப்படுவதால் பலர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, இப்படி ஏற்பட கவனக்குறைவாக இருந்தவர்கள் யார், அவர்கள் மீது அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, தமிழ் நாடு பால்வள நிறுவனம் வழங்குகிற பாலில் எலிக்குஞ்சோ, கரப்பான் பூச்சியோ வேறு பூச்சிகளோ வருவதற்கு வழி இல்லை. எல்லாமே விஞ்ஞான ரீதியில் இயந்திரத்தின் மூலமாக செய்யப்படுகிறது. அதுவும், அந்த பாலை நிரப்பும் இயந்திரங்களில் இருக்கும் சிறிய துவாரத்தின் வழியாக எலிக்குஞ்சுகள் போவதற்கு வழியில்லை. ஏதோ சில வெளியே இருக்கும் விஷமிகள் சட்டமன்றக் கூட்டம் நடைபெறுகிற நேரம் பார்த்து இப்படிச் செய்கிறார்கள். அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு அப்படி தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கையும் எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் நிச்சயமாகச் சொல்வேன், நாம் வழங்குகிற பாலில் எலிக்குஞ்சோ, கரப்பான் பூச்சியோ வருவதற்கு இடமே இல்லை. விஞ்ஞான ரீதியில் இயந்திரங்கள் மூலமாகத்தான் பாலை பாட்டில்களிலும், பைகளிலும் நிரப்பி வருகிறோம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கக்கூடிய நேரத்தில் குறிப்பிட்ட சில நிறுவனங்களின் பெயர்களைச் சொல்லி, அந்த நிறுவனங்களிடமிருந்து பாலிதீன் பைகள் வாங்குவதாகச் சொன்னார்கள். அந்த நிறுவனங்கள் தவிர வேறு நிறுவனங்கள் அவற்றைத் தயார் செய்வது இல்லையா? அப்படி இருந்தால் டெண்டர் மூலமாக வாங்கப்படுகிறதா? அல்லது டெண்டர் இல்லாமலேயே அந்தக் கம்பெனிகளிடமிருந்து வாங்கப்படுகிறதா? அது அரசாங்க நிறுவனத்தின் மூலம் செய்யப்படுகிறதா? இல்லையென்றால், அரசு நிறுவனம் மூலம் அதை உற்பத்தி செய்ய ஏற்பாடு ஏதாவது செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, பாலிதீன் பைகளில் பால் வழங்கவேண்டும் என்பதற்காக பல்வேறு கம்பெனிகளிடமிருந்து நாம் விண்ணப்பங்களைக் கோரி இருந்தோம், டெண்டர் மூலமாக. 16 கம்பெனிகள் அதிலே பங்கு எடுத்துக்கொண்டன. அதிலே நாம் இப்போது வாங்கியிருப்பது 6 கம்பெனிகள் இடமிருந்துதான். அதிலும் இரண்டு கம்பெனிகள் தமிழ் நாட்டிலே அந்த உற்பத்தியில் ஈடுபட்டு இருக்கின்றன எனவே, டெண்டர் மூலமாகத்தான் அவைகள் வாங்கப்படுகின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டாவதாக, அரசு அதை தயார் செய்ய முடியுமா என்று கேட்டார்கள். நான் ஏற்கனவே

குறிப்பிட்டேன், பாலிதீன் பைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று திண்டுக்கல்லில் கூட்டுறவு முறையில் இயங்கி வந்து இருக்கிறது என்று. அவர்கள் மூலமாக பால் பைகள் செய்து கொடுக்கவேண்டும் என்று உத்தரவு போட்டு இருக்கிறோம். அடுத்த ஆண்டிலிருந்து தமிழகத்தில் உற்பத்தி செய்யக்கூடிய நிறுவனங்களிடமிருந்து முன்னுரிமை கொடுத்து வாங்க இருக்கிறோம். அதிலும் குறிப்பாக அரசு நிறுவனங்களிடமிருந்தும், கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்தும் பெற இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறித் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி

வினா எண். 119 — திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கைத்தறி நெசவாளர்களுக்கு வீட்டு வசதி, தறிக் கொட்டகை அமைப்பது குறித்து திட்டம் வகுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :

(அ) & (ஆ) : கைத்தறி நெசவாளர்களுக்கு நெசவுத்தொழில் செய்வதற்கும் வசிப்பதற்கும் ஏற்றாற்போல் நடப்பு ஆண்டில் 2000 வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் கட்டப்படும் ஒவ்வொரு வீட்டின் பரப்பளவு சுமார் 300 சதுர அடிக்குள்ளும் உத்தேச கட்டிட செலவு ரூ. 5,000க்குள் அடங்கும்.

திரு. துரை முத்துசாமி : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் 2,000 வீடுகள் கட்டியிருப்பதாகச் சொன்னார்கள். அதிலே தென்னாற்காடு மாவட்டத்தில் எத்தனை வீடுகள். எவ்வளவு ரூபாய் திட்டத்தில் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசோடு கடிதப்போக்குவரத்து நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. மத்திய அரசிடமிருந்து ஓரளவு நிதி உதவி இந்தத் திட்டத்திற்கு வேண்டியிருக்கிறது. அவர்கள் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டபிறகு தமிழ் நாட்டில் எந்தெந்த இடங்களில் இந்தத் திட்டம் அமல் படுத்த முடியும் என்பதை அறிவிக்க இயலும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு கட்டிக்கொடுக்கப்படுகிற வீடுகள் எந்த அடிப்படையில் கட்டிக் கொடுக்கப்படுகின்றன? வீடு கட்ட கடன் கொடுக்கப்படுகிறது என்றால் மானியமாக ஏதாவது உண்டா?

[1979 பிப்ரவரி 20

மானியம் கொடுக்கப்படுகிறது என்றால் அது மாநில பொது நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறதா அல்லது வங்கியிலிருந்து கொடுக்கப்படுகிறதா அல்லது கிராம வீடு கட்டும் சங்கங்களிலிருந்து கொடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு வீட்டுக்கும் ரூ. 5,000 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் 3,500 ரூபாயை 'ஹட்கோ' கடனாகக் கொடுக்கிறது. மீதமுள்ள 1,500 ரூபாயை மத்திய அரசு மானியமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இருக்கிறோம். அவர்கள் கடனாகக் கொடுப்பதை ஒப்புக்கொண்டு, பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மத்திய அரசு மானியமாகக் கொடுத்தால் 'ஹட்கோ' நிறுவனம் வழங்கும் 3,500 ரூபாய் கடனுக்கு ஆகின்ற வட்டியை மாநில அரசு மானியமாகக் கொடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. 3,500 ரூபாய் கடனை நெசவாளர்கள் 20 ஆண்டுத் சுலபத் தவணையில் செலுத்த வேண்டியிருக்கும்.

திரு. வி. கோ. சின்னசாமி : தலைவரவர்களே, 2000 வீடுகள் கைத்தறி நெசவாளர்களுக்கு கட்டிக்கொடுப்போம் என்று தெரிவித்தார்கள். என்னுடைய தொகுதியில் அதிகமாக நெசவாளர்கள் இருக்கிறார்கள். எனவே, கிராமப்புறங்களுக்கு முன்னுரிமை கொடுத்து என்னுடைய தொகுதியில் அதிகமாக வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவரவர்களே, மொத்த மதிப்பு ரூ. 5000 என்று கூறியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் முதலில் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினராக இருக்கும் நெசவாளர்களுக்கு மட்டுமே கட்டிக்கொடுப்பதற்கு செயல்படுத்தப்படலாம் என்று நாங்கள் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறோம். எந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் நெசவாளர்களுக்கு வீடு கட்ட மனையும் மேற்கொண்டு மின்சார வசதி, குடிநீர் வசதி, போன்ற வசதிகளையும் செய்துகொடுக்க முன் வருகிறதோ அந்தச் சங்கங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, அரசு வகுத்துள்ள இந்த புதியத் திட்டத்தில் தர்மபுரி மாவட்டம் இணைக்கப்பட்டு இருக்கிறதா? அப்படியானால் அதுபற்றி விவரிக்க இயலுமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் அறிவித்ததைப்போல மத்திய அரசிடமிருந்து அங்கீகாரம் பெற்ற பிறகுதான் எந்தெந்த சங்கங்களின் மூலம் எங்கெங்கு இத்திட்டத்தை அமுலாக்குவது என்பது பரிசீலிக்கப்படும்.

1979 பிப்ரவரி 20]

திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, 300 சதுர அடி, வீடு என்பது மிகக்குறைந்த இடம். நெசவுத் தறி போட்டு, குடும்பம் நடத்த அந்த இடம் போதாது. அதைப் போல 5,000 ரூபாய் என்பதும் மிகக் குறைந்த தொகை. இந்த இரண்டையுமே அதிகப்படுத்த வேண்டும். அதைப்போல இதற்கு முன்னால் கட்டப்பட்ட வீடுகள் பல பழுதாகி இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கேள்வி நேரம். கேள்வியை மட்டும் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : பழுதடைந்த வீடுகளை பழுது பார்க்க முடியாமல் நெசவாளர்கள் கஷ்டப்படுகிறார்கள். அதனால் அவர்கள் வீட்டுக்கு வழங்கிய கடனையும் திருப்பிச் செலுத்த முடியவில்லை. ஆகவே, கடனை ரத்து செய்து, பழுதடைந்த வீடுகளை பழுதுபார்த்துக் கொடுக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட வேண்டுகிறேன்.

மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ள பஞ்சாலைகள்

* வினாஎண் 120 — திரு. திருப்பூர் ஆர். மணிமாறன் : மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 30-6-1977 முதல் மூடப்பட்டிருந்த பஞ்சாலைகளில் திறக்கப்பட்ட பஞ்சாலைகள் எவ்வளவு?

(ஆ) அதன் மூலம் புனர்வாழ்வு பெற்ற தொழிலாளர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:

(அ) 30-6-77 அன்று மூடப்பட்டிருந்த 8 நூற்பாலைகளில் 7 ஆலைகள் திறக்கப்பட்டுவிட்டன.

(ஆ) இதன் மூலம் 1,914 தொழிலாளர்கள் புனர்வாழ்வு பெற்றுள்ளனர்.

திரு. ஆர். மணிமாறன் : தலைவரவர்களே, 7 நூற்பாலைகள் திறக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்கள். மீதமுள்ள ஒரு நூற்பாலையையும் திறக்க சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவரவர்களே, 120 தொழிலாளர்களைக் கொண்ட கோவை பத்மா மில்ஸ் ஒரு கூட்டாண்மை நிறுவனம், 9-11-1976 முதல் மூடப்

[1979 பிப்ரவரி 20

பட்டுள்ளது. பொருளாதார ரீதியில் லாபகரமககச் செயல்பட வாய்ப்பு இல்லை என்ற காரணத்தால் வங்கிகள் கடன் வழங்க வில்லை. மேலும் அது ஒரு கூட்டாலை நிறுவனமாக இருப்பதால் அரசு உத்தரவாதம் வழங்க முன்வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன,

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சனைகள்

(அ) துணைக்கேள்விகள் கேட்க அனுமதி அளிப்பது குறித்து

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். கேள்வி நேரத்தின்போது பல கேள்விகளுக்கு நான் துணைக் கேள்வி கேட்க கையை உயர்த்திக் கொண்டிருந்த போதிலும் தாங்கள் அனுமதிக்கவில்லை. தாங்கள் வேண்டுமென்றே அப்படிச் செய்தீர்கள் என்று நான் சொல்லவில்லை. உங்கள் முன்னால் இருக்கிற மைக் உங்கள் பார்வையிலிருந்து என்னை மறைக்கிறது என்று நினைக்கிறேன். அதனால் நான் கை தூங்கினாலும் உங்கள் பார்வையில் படுவதில்லை. அது மட்டுமல்ல. எங்கள் பார்ட்டியில் கூட ஒரு துணைக் கேள்விக்கு தாங்கள் இடமளிக்க வில்லை. ஆகவே, இனிமேல் அம்மாதிரியான நிலைமை இல்லாமல் தாங்கள் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10–20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பேரவை உறுப்பினர்கள் எனக்கு ஒத்துழைக்க வேண்டும். நான் கேள்வி நேரத்திற்கென்று ஒரு மணி நேரமும் 20 நிமிடமும் எடுத்துக் கொண்டிருக்கிறேன். எப்போதுமே ஒரு மணி நேரத்திலேயே நான் முடித்துவிடுவதில்லை. பலருக்கும் வாய்ப்புத் தரவேண்டும் என்ற அடிப்படையில் நேரத்தை எப்போதுமே நீட்டித்து இருக்கிறேன். இருந்தாலும் சிலருக்கு வாய்ப்புக்கள் வராமல் போகலாம். அப்படித் தவறுவது இயற்கை. நீங்கள் வேண்டு மானால் ஆய்வுக் குழுவிலே எடுத்துச் சொல்லி கேள்வி நேரத்தை இரண்டு மணி நேரம் என்று ஆக்குங்கள். ஆகவே என்னால் முடிந்த வரை எல்லோருக்கும் வாய்ப்பு தந்துகொண்டுதான் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முன் வரிசையிலே உள்ளவர்களாவது கொஞ்சம் திறமையாக சுருக்க மாகக்கேள்வியைக் கேளுங்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 பிப்ரவரி 20]

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, கேள்வி நேரத்தின் போது முன் வரிசையில் உள்ள தலைவர்கள் கொஞ்சம் திறமை யாகக் கேள்வியைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும் என்று சொன்னீர்கள். அப்படியானால் பின்னாலே இருப்பவர்கள் எல்லாம் திறமையற்றவர்களா? அந்த வார்த்தை அவைக் குறிப்பிலே இடம் பெற வேண்டுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்-

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதற்கு விளக்கம் தந்தேன், அதை நீங்கள் பெரிதாக எடுத்துக் கொண்டால் நீக்கிவிடத் தயார். முன் வரிசையிலே உள்ள தலைவர்கள் கொஞ்சம் சுருக்கமாக திறமையாகக் கேள்வியைக் கேளுங்கள் என்று தான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, முன்வரிசையிலே உள்ளவர்கள் திறமையாகக் கேட்க வேண்டும், என்ற அந்தப் பகுதியை நீக்குவது என்பது அவ்வளவு சரியாகாது. முன் வரிசையிலே உள்ளவர்கள் திறமையானவர்கள் என்ற காரணத்தாலேதான் தலைவர்களாக வந்திருக்கிறார்கள். ஆகவே திறமை என்ற வார்த்தை எடுக்கப்படுவது சரியாகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நாங்கள் வேறொரு உறுப்பினருக்கு பதில் சொன்னபோது இந்த வார்த்தை சொல்லப் பட்டது. ஆகவே இதை இப்போது விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதென்பது பொருத்தம் அல்ல. முன்வரிசையிலே உள்ள வர்கள் திறமையாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆகவே அந்த வார்த்தை இருக்கவேண்டுமானால் இருக்கலாம். அது பின் வரிசையில் இருப்பவர்களைப் பாதிக்காது. வேண்டாம் என்றால் விட்டுவிடுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, தாங்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் உங்களுக்கும் எனக்கும் இடையிலே மைக் இருப்பதால் சில வேளைகளில் தங்களால் கவனிக்க முடியாமல் போய் விடுகிறது. இருந்தாலும் எங்களது கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் கூட இன்று கேள்வி கேட்க அனுமதிக்கப்படாதது வருந்தத்தக்கது என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இனிமேல் அவ்வாறு நடக்காமல் பார்த்துக்கொள்கிறேன்.

(ஆ) உலக அமைதிக்குப் பங்கம் ஏற்படுவது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, உலக அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டிருக்கிற ஒரு பயங்கரமான நிலைமை உருவாகி இருக்கிறது. ஆகவே அதைப்பற்றி....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது இன்னொரு நாட்டுப் பிரச்சினை. அதுவும் நம் நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும் உள்ள பிரச்சினை அல்ல. வேறு இரு நாடுகளுக்கிடையே உள்ள பிரச்சினை. அதைப்பற்றி பாராளுமன்றம் பார்த்துக்கொள்ளும்.

* *

திரு. துரை முத்துசாமி : * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது இங்கு எழுப்பப்பட வேண்டிய பிரச்னை அல்ல.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதை குறிப்பேட்டிலிருந்து நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரை முத்துச்சாமி அவர்களின் கேள்வியை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விட உத்தரவிடுகிறேன்.

(இ) சேப்பாக்கம் தொகுதியில் பொதுக்கூட்டம் நடத்த அனுமதிப்பது குறித்து.

திரு. அ. ரகுமான்கான் : பாயிண்ட் ஆப் ஆர்டர். தங்கள் மூலம் இந்த அரசின் கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். சேப்பாக்கம் தொகுதியில் கடந்த பல நாட்கள் ஆக பொதுக்கூட்டங்கள் நடத்த முடியாததொரு சூழ்நிலை இருக்கிறது. காரணம், அரசு ஆணை பிறப்பித்து அதன் காரணமாக தடங்கல் ஏற்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் காவல் நிலயத்தின் அனுமதி வாங்கவேண்டும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிற வாய்ப்பிருக்கிறது. அவர்களிடம் கொடுத்து விளக்கமாகப் பேசலாம், இது ஒழுங்குப் பிரச்சனையின் கீழ் வராது. உங்கள் உணர்வுகளைச் சொல்லிவிட்டீர்கள், அது அப்படியேயிருக்கட்டும்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

கல்லூரி ஆசிரியர்களின் போராட்டம் காரணமாகக் கல்லூரிகள் மூடப் பெற்றிருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''சென்னை, மதுரை, திருச்சி மற்றும் பிற பகுதிகளில் ஏறத்தாழ நூற்று இருபத்தி இரண்டு கல்லூரி ஆசிரியர்கள் கைதாகி இருக்கின்றார்கள். அது தொடர்பாக மாணவர்கள் வெளிநடப்புச் செய்து இருக்கிறார்கள். இந்த மூன்று நகரங்களிலும் ஏறத்தாழ எல்லா கல்லூரிகளும் இழுத்து மூடப்பட்டு இருக்கின்றன. இதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை இன்னும் நீடிக்காமல் இருக்க அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க'' வேண்டுமென்று கேட்டு திரு. கோ. இளங்கோவன், திரு. வி. கே. கோதண்டராமன், திரு. செ. சிவசாமி, திரு. ரா. உமாநாத், திரு. கு. ரமணி, திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. என். வரதராசன், திரு. என். பழனிவேல் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்று சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். திரு. இளங்கோவன்.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானமாகயிருந்தாலும் சரி, கவன ஈர்ப்புத் தீர்மானமாக இருந்தாலும் சரி, வினாவாகயிருந்தாலும் சரி, அமைச்சர் அவர்கள் தருகிற பதிலைப் பார்க்கிறபோது ஏறத்தாழ ஒன்றாகவே அமைகிறது. அதன் விளைவாகத்தான் கல்லூரி ஆசிரியர்களின் போராட்டம் நிறுத்தி வைக்கப்படாமல் இன்று விஸ்வரூபம் எடுத்திருக்கிறது என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நேற்றையதினம் சென்னையைப் பொறுத்தவரையில், 44 ஆசிரியர்களும், மதுரையைப் பொறுத்தவரையில் 27 ஆசிரியர்களும், உத்தமபாளயத்தில் 45 ஆசிரியர்களும், திருச்சியில் 52 ஆசிரியர்களும் கைதாகி இருக்கிறார்கள். மகளிர் ஆசிரியர்கள் இருவரை கைது செய்து உடனடியாக விடுவித்திருக்கிறார்கள். அதேபோல் சென்னையில் கைது செய்த ஆசிரியர்களை மட்டும் விடுதலை செய்திருக்கிறார்கள். ஆனால், மதுரையில் கைது செய்யப்பட்ட ஆசிரியர்களை ஏழு நாட்கள் ரிமாண்ட்டில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டு இருப்பதாக தெரிகிறது. அரசின் நடவடிக்கைகள், சென்னையில் ஒருவகையான நடவடிக்கையாக இருக்கிறது, மதுரையில் ஒரு வகையான நடவடிக்கையாக இருக்கிறது. ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். இன்றும் தொடர்ந்து மறியல் நடைபெறயிருப்பதாகத் தெரிகிறது. உண்ணாவிரதமும் தொடர்ந்து நடந்திருப்பதாகத் தெரிகிறது. ஆசிரியர்கள் தங்கள் கோரிக்கைகளை எடுத்துச் சொல்கிற நேரத்தில் அமைச்சர் அவர்கள் தருகிற விளக்கம் அவர்களுக்கு திருப்தியளிப்பதாக இல்லாத காரணத்தால்தான் போராட்டம் வலுவடைகிற சூழ்

நிலை இருக்கிறது என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நேற்றையதினம் கூட கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்போது ஒரு கேள்வி கேட்டேன். 31-3-77 தேதியில் பணியாற்றிக்கொண்டிருக்கிற கல்லூரி ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு? அவர்களில் நிரந்தரமாக பணியாற்றுகிற ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு? தாற்காலிகமாக பணியாற்றுகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு? அரசுக் கல்லூரிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு? தனியார் கல்லூரிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு? இதன் காரணமாக வேலை இழக்கிற ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு? என்று கேள்வி கேட்டேன், பதில் இல்லை. இருக்கிற கஷ்டம் எல்லாம் தமிழ் நாட்டில் 188 கல்லூரிகள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்களாகவே முடிப்பீர்கள் என்று பார்க்கிறேன். மணியடித்துத்தான் முடிக்க வேண்டும் என்ற நிலை இருந்தால் அது சரியல்ல,

[முற்பகல் 10-30].

திரு. கோ. இளங்கோவன் : தமிழகத்தில் இருக்கின்ற கல்லூரிகளில் அரசு கல்லூரிகள் 51 என்றால் தனியார் கல்லூரிகள் 137 ஆக இருக்கிறது. என்ன ஆணை பிறப்பித்தாலும் அதை தனியார் கல்லூரிகள் யாரும் அனுசரிப்பதில்லை. மதுரை பாத்திமா கல்லூரியில் இரண்டு ஆசிரியர்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள். திருப்பத்தூர் கல்லூரியில் ஒரு ஆசிரியர் நீக்கப்பட்டிருக்கிறார். சிவகாசி, அய்யாசாமி நாடார் ஜானகி அம்மாள் கல்லூரியில் ஒரு ஆசிரியர் நீக்கப்பட்டிருக்கிறார். திருச்சியில் ஒரு கல்லூரியில் ஒரு ஆசிரியர் நீக்கப்பட்டிருக்கிறார். குருநானக் கல்லூரியில் ஒரு ஆசிரியர் நீக்கப்பட்டிருக்கிறார்,........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மொத்தத்தில் இதை சொல்லிவிட்டு ஒத்தி வையுங்கள் என்று கேளுங்கள், விவரங்களுக்குள் போகவேண்டாம். சுருக்கமாக சொல்லுங்கள்.

திரு. கோ. இளங்கோவன் : இப்படி ஏழு பேர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் அமைச்சர் அவர்கள் இங்கு அவர்களுக்கு பணி போகாது, பணி போகாது என்று சொல்லுகிறார்கள். ஆனால், இன்றைக்கு ஆசிரியர்களுடைய போராட்டத்தில் மாணவர்களும் இணைந்திருக்கிறார்கள். இதன் காரணமாக தமிழகத்திலுள்ள எல்லா கல்லூரிகளும் மூடப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. கல்லூரி ஆசிரியர்களின் போராட்டத்தோடு பட்டதாரி ஆசிரியர்கள், இணைவார்களோ, மற்ற ஏனைய ஆசிரியர்களும் இணைவார்களோ என்று எண்ணக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே இதைப்பற்றி விரிவாக விவாதிக்க அவை நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்றையதினம் கல்லூரிகளில் பணிபுரியக் கூடிய பட்டதாரி ஆசிரியர்கள் அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை பெறுவது என்பது மட்டுமல்ல, வேலைக்கு உத்தரவாதம் இல்லாத ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. அந்த வேலைக்கு உத்திரவாதம் அளிக்கவேண்டும் என்கின்ற அடிப்படையில், இவைகளை கோரி இன்றைக்கு அவர்கள் போராட்டத்தில் குதித்து இருக்கிறார்கள். அவர்கள் திடீரென்று போராட்டத்தில் இறங்கவில்லை. சென்ற ஆண்டிலிருந்து எழுத்து மூலமாக எழுதியிருக்கிறார்கள். நேரடியாக பேசியிருக்கிறார்கள். மேலும் அரசு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத ஒரு சூழ்நிலையில் இன்றைக்கு அவர்கள் போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள். கனம் மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள், அதை தீர்த்து வைக்கவேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள்தான் என்றாலும், அதற்கு பொருளாதாரம் இடம் தரவில்லை என்றாலும், முதலமைச்சர் இடம் தரவில்லையோ என்னவோ தெரியவில்லை, அது வேறு பிரச்னை என்றாலும் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில் அமைச்சர் அவர்கள் பதில் கூறியிருக்கிறார்கள். இந்தப் போராட்டத்தை கைவிடுங்கள், நான் பேசுகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அது சரியல்ல, குறிப்பாக இன்ன தேதியில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தயார், நீங்கள் போராட்டத்தை கைவிட்டு விட்டு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வாருங்கள் என்கின்ற அளவுக்கு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்களேயானால் அவர்களும் வருவதற்கு தயாராக இருக்கிறார்கள். ஆகவே போராட்டத்தில் அவர்கள் இறங்கியிருப்பது தவறு அல்ல. அவர்களுக்கு அரசு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாததுதான் தவறு. ஆகவே அரசின் பக்கத்தில் தவறு இருக்கிறது என்பதை உணர்ந்து, அந்த தவறை ஏற்றுக்கொண்டு, அதை நிறைவேற்றிக்கொடுப்பதற்கு தயார் என்கின்ற முறையில், உடனடியாக அமைச்சர் அவர்கள் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றிக்கொடுப்பதற்கு, குறிப்பாக இன்ன தேதியில் பேச்சு வார்த்தை நடத்தி சுமுகமாக இந்தப் பிரச்னையை தீர்த்து வைக்க அரசு முன்வரும் என்று அறிவித்திருப்பார்களேயானால், அவர்கள் இந்தப் போராட்டத்தை கைவிட்டுவிட்டு, பேச்சுவார்த்தைக்கு வர தயாராக இருப்பார்கள் என்பதால், இதைப்பற்றி விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்கின்ற அடிப்படையில், நமக்கு முன்னால் இருக்கக்கூடிய நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று தாழ்மையாக கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

*திரு. செ. சிவசாமி : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, பட்டதாரி ஆசிரியர்கள் இன்றைக்கு ஸ்டிரைக் செய்து கொண்டிருக்கிறார்கள். நீண்ட காலமாக அவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. அவர்களுடைய நியாயமான

கோரிக்கைகளை அரசு ஏற்றுக்கொண்டு அவற்றை தீர்த்து வைக்கிறோம் என்று உத்தரவாதம் கொடுத்தும், வேலையிழப்பை தடுக்கின்ற காரியத்தில் சரியான நடவடிக்கை எடுக்காததின் காரணமாக அவர்கள் இன்றைக்கு வேலை நிறுத்தம் செய்ய ஆரம்பித்து இருக்கிறார்கள். அவர்கள் இன்றைக்கு கேட்பது, வேலை பாதுகாப்பு இருக்கவேண்டும். நேரடியாக சம்பளம் பட்டுவாடா செய்யவேண்டும், 12-வது வகுப்பை கல்லூரிகளில் புகுத்தப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை முக்கியமாக வைத்திருக்கிறார்கள், நேற்று நடந்தது, 400-க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பெண் ஆசிரியர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மதுரையில் போலீஸ் பல பேராசிரியர்களையும் கைது செய்து இருக்கிறது. இன்றைக்கு நிலைமை என்னவென்றால், நாட்டிலுள்ள மாணவர் சங்கங்களும் இவர்களுடைய போராட்டத்திற்கு ஆதரவாக ஸ்டிரைக் செய்வதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் எங்களுடைய ஆதரவை தருவோம் என்று இன்றைக்கு ராணிமேரி கல்லூரி, நந்தனம் கல்லூரி போன்ற அரசு கல்லூரிகள் எல்லாம் ஆதரவு கொடுக்க முன் வந்திருக்கிறது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து சுருக்கமாக பேசுங்கள்.

திரு. செ. சிவசாமி : கந்தசாமி நாயுடு கல்லூரி, டாக்டர் அம்பேத்கார் கல்லூரி போன்ற பல கல்லூரிகள் மூடப்பட்டிருக்கின்றன. இதைப்போல மதுரை, இராமநாதபுரம் போன்ற ஜில்லாக்களிலும் கல்லூரிகள் மூடப்பட்டிருக்கின்றன. தலைமைச் செயலகத்திற்கு 1,500 ஆசிரியர்கள் ஊர்வலமாக வந்து, தங்கள் கோரிக்கையைச் சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். மதுரையிலே 52 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்படிக் காலவரம்பின்றி........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து விளக்கத்திற்குப்போக வேண்டாம்.

திரு. செ. சிவசாமி : ஆகவே, தமிழ்நாட்டிலே உள்ள உயர்நிலைப்பள்ளிகளைக் காப்பதற்காகவும், அவர்களுடைய குறைகளைப் போக்குவதற்கும், இப்போதுள்ள பதட்ட நிலைமையைப் பற்றி விவாதிப்பதற்காகவும், இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு ஆசிரியர்களோடு பேச்சு வார்த்தைகள் நடத்திய அடிப்படையிலே சில உடன்பாடுகள் ஏற்பட்டன. அந்த உடன்பாடுகளின்மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால், அதில் வேகம் இல்லை, விரைவாக

நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சில இடங்களிலே குறைபாடுகள் ஏற்பட்டன. இந்தக் காரணங்களைக் காட்டி, கல்லூரி ஆசிரியர்கள் நேற்றையதினம் வேலை நிறுத்தம், மறியல் ஆகியவற்றில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

மறியலிலே ஈடுபட்ட ஆசிரியப் பெருமக்கள் சென்னையிலே 44 பேர்களும், திருச்சியிலே 52 பேர்களும், மதுரையிலே 28 பேர்களும், உத்தமபாளையத்திலே 45 பேர்களும் கைதாகியிருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் விடுதலை செய்யுமாறு உத்தரவிடப்பட்டது. ஆனால், இதில் மதுரையிலே 28 பேர்கள் விடுதலையாகி, வெளியே செல்ல மறுத்து அவர்கள் போலீஸ் காவலிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். இன்றையதினம் அந்தப் போராட்டத்திலே ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற ஆசிரியப் பெருமக்கள், அந்தப் போராட்டத்தை விரிவுபடுத்தவும், அதிலே கலந்துகொள்ள விரும்பாத ஆசிரியர்களை அதிலே கலந்துகொள்ளும்படி தூண்டுவதற்காகவும், மாணவர்களை அதிலே ஈடுபடுமாறு செய்வதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்கிற செய்தி வந்து கொண்டிருக்கின்ற காரணத்தால், மேலும் நிலைமை மோசமாகாத வண்ணம், சீர்கெடாத வண்ணம் கல்லூரிகள் மூடப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு அரசு கொடுத்திருக்கிற பாதுகாப்பு, பணி பாதுகாப்பு உத்தரவையும் மீறி அமுல்படுத்த மறுத்த நிறுவனங்களின் மீது உரிய நடவடிக்கைகளை இந்த அரசு நிச்சயம் எடுக்கும். இப்போதுகூட பேராசிரியர் அவர்கள் குருநானக் கல்லூரியிலே அவர்கள் தந்திருக்கிற உத்தரவின் நகலைத் தந்திருக்கிறார்கள். இந்த உத்தரவை போட்டிருக்கிறார்கள். ஒரு சில நிறுவனங்கள் ஏற்று நடத்த மறுக்கும்போது, அப்படி அரசு நடவடிக்கை எடுக்கின்றபோது, ஆசிரிய பெருமக்கள் அரசோடு ஒத்துழைக்க வேண்டுமே தவிர, அதற்கு மாறாக இத்தகைய போராட்டத்தை நடத்துவது என்பது, இந்த அரசு செய்யும் முயற்சிக்கு பின்புறமாக இருந்து தாக்குவதுபோல் இருக்கின்றது என்பதை மட்டும் நான் மிகுந்த வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களோடு கலந்து பேசி, பேச்சு வார்த்தைகள் நடத்துவதிலே என்றைக்கும் நான் மறுத்ததில்லை. ஆனால் வேலை நிறுத்தத்தை கைவிட வேண்டுமென்று சொல்வதை, அப்படிச் சொல்கின்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர்களும் புரிந்துகொள்ளவேண்டும் இப்படிப் போராட்டம் நடத்துவது அவர்களுக்குத் தொடர்பான பிரச்னையாக இருந்தால் பரவாயில்லை. இதிலே வித்தியாசம் இருக்கிறது. இதிலே மாணவர்கள் இருக்கிறார்கள். மாணவர்கள் இளம் வயதானவர்கள். உணர்ச்சி வசப்படக் கூடியவர்கள். ஆகவே, அவர்கள் பாதிக்கப் படக்கூடாது. அவர்கள் இதிலே பங்குகொண்டு, நிலைமை நம் கையைவிட்டுப் போய், பின்னால் வருந்தப்படக்கூடிய அளவிற்கு நிலைமை போகக்கூடாது என்பதற்காக வேலை நிறுத்தத்தை கைவிடுங்கள் என்று நாங்கள் வேண்டிக் கேட்டுக் கொண்டோம்;

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

இதை உறுப்பினர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புறேன். ஆகவே, இந்த சமுதாயப் பொறுப்பு எல்லோருக்கும் இருக்கின்றது என்பதை உணர்ந்து செயல் படுவார்கள் என்று நம்புகிறேன். இது தீர்க்க முடியாத பிரச்னை அல்ல. இன்னும் சொல்லப்போனால், பிரச்னை தீர்ந்துவிட்டது, அதைச் சரியான முறையிலே அமுல்படுத்தவில்லை என்கிற குற்றச் சாட்டைத்தான் சொல்கிறார்கள். நாம் இன்றைக்கு பணி பாது காப்பு தருகின்ற வகையில், பல்கலைக்கழகத்தோடு சேர்ந்து பல திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கிறோம், இன்னும் மாலை நேரங்களில் வகுப்புகள் நடத்துதல், பிற்பட்ட வகுப்பினருக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் தனிப் பயிற்சிகள் அளித்தல், வேறு வேலைகளிலே அதாவது மாணவர்கள் தொடர்பான என். எஸ். எஸ். போன்றவைகளில் ஆசிரியர்களை ஈடுபடுத்துவதன் மூலமாகவும், அதிகப்படியான ஆசிரியர்களை மேல் படிப்புக்கு அனுப்புவதன் மூலமாகவும் அவர்களுக்கெல்லாம் பணிபாதுகாப்பு பெறுவதற்கான வழிவகைகளை அமைத்துக் கொண்டிருக் கிறோம்.

[முற்பகல் 10.40]

செமிஸ்டர் சிஸ்டத்தை விரிவுபடுத்த மேலும் வாய்ப்பு இருக் கிறது. இதிலே அச்சப்படத் தேவையில்லை. நிச்சயமாகப் பணிப் பாதுகாப்பு தரப்படும். ஆகவே இருக்கிற சூழ்நிலையை நன்கு உணர்ந்து படித்த ஆசிரியப் பெருமக்கள் இந்த நிலைமைகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்து தங்களுடைய போராட்டத் திட்டத்தைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அவர் களுடன் பேசுவதற்கு எப்போதும் தயார் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி.கே. கோதண்டராமன் : இது பற்றி ஒன்றிரண்டு கேள்விகள் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 42–வது விதியின்கீழ் கொண்டு வரப்படும் தீர்மானத்தின்மீது அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்குப் பிறகு கேள்விகள் கேட்க முடியாது.

திரு. வி. கே. கோதண்டராமன் : ** **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் பேசியது முழுவதும் அவைக் குறிப்பி லிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்ற காரணத்தால் ஒத்திவைப்புத் தீர்மானத் திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(4) அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் மற்றும் கண்டனத் தீர்மானங்கள் மீது விவாதம்—(தொடர்ச்சி).

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவர் அவர்களே,
கடந்த ஆறு மாத காலமாக தொழிற்சங்க இயக்கமும், தமிழ்
நாட்டு தொழிலாளர் வர்க்கமும், தொழிற்சங்க உரிமைகளுக்காக,
வேலை நிறுத்த உரிமைகளுக்காக, வாழ்க்கைத் தரம் உயர்
வதற்காக போலீஸ் அடக்குமுறைகளை எதிர்த்து, குண்டாயி
சத்துக்கு எதிராக, அரசாங்கத்தை எதிர்த்து, முதலாளிகளை
எதிர்த்து வீரமாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். தொழி
லாளர்கள் கொள்கை விஷயமாக இந்த அரசு மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சி அரசு போகும் அளவுக்கு போகும் என்று
நாங்கள் முழுக்க முழுக்க எதிர்பார்க்கவில்லை என்றாலும்,
மேற்கு வங்கம் போன்று, திரிபுரா போன்று முழுக்க முழுக்க
எங்களுடன் வருவார்கள் என்று எதிர்பார்க்காவிட்டாலும்
தொழிலாளர்கள் விஷயத்தில் ஒரு மிதமான கொள்கையை எதிர்
பார்த்தோம், ஒரு லிபரல் பாலிசியை எதிர்பார்த்தோம். கடந்த
20 மாதங்களாக, குறிப்பாக கடந்த 6 மாதங்களில் எங்கள்
நம்பிக்கை பொய்த்துவிட்டது. தொழிலாளர் விரோதக் கொள்
கையை அவையின்முன் ஃபோகஸ் பண்ண வேண்டும். மக்கள்
முன் இதைக் கூண்டில் ஏற்றவும் இந்தக் கண்டனத் தீர்மானத்
தைக் கொண்டு வந்திருக்கிறேன். அரசாங்கம் தொழிலாளர்
விரோதக் கொள்கையை நடைமுறையில் கைவிட வேண்டும்.
நடைமுறையில் என்பதை எம்ஃபசைஸ் பண்ணிச் சொல்ல விரும்பு
கிறேன். டிக்ளரேஷன்கள் அவசியமில்லை, நடைமுறைப்படுத்த
வேண்டும். அப்படி சரியான முறையில் புதிய கொள்கையை நடை
முறைப்படுத்த அரசு முன்வருமானால் இந்தத் தீர்மானத்தின்
பிரதான நோக்கம் நிறைவேறிவிடும் என்று நம்புகிறேன்.

இந்தத் தொழிலாளர் விரோதக் கொள்கை அரசு பொறுப்
பேற்ற போது உருவாகவில்லை. ஆரம்பத்தில் பாரபட்சமற்ற
முறையில் சில பிரச்சினைகளைத் தீர்த்து வைத்திருக்கிறார்கள்.
ஆனால் அப்போதே தொழிலாளர்களுக்கு விரோதமாக சில
விதைகள் விதைக்கப்பட்டன. காலப் போக்கில் அவை செடியாக
வளர்ந்திருக்கின்றன. வேலை நிறுத்தங்களில் அரசு அணுகுமுறை
என்ன என்று பார்க்க வேண்டும். வேலை நிறுத்தங்கள் சமூக
பொருளாதார நிலை காரணமாக ஏற்படுகின்றன. சமூக
பொருளாதார நிலைகளில் மாநில அரசுக்குக் கண்ட்ரோல் இல்லை
என்பதை ஏற்றுக்கொள்ள விரும்புகிறேன். சமூக பொருளாதார
நிலைமைகளின் ஸ்ட்ரிங்ஸ் மத்திய அரசாங்கத்தின் கையில்தான்
இருக்கிறது. ஆகவே, அந்த சமூக பொருளாதார நிலைமைகள்
தான் வேலை நிறுத்தங்களுக்குக் காரணம் என்று சொல்லுவேன்.
சுரண்டல் இருக்கும்வரை நிச்சயமாக வேலை நிறுத்தங்கள்
இருக்கத்தான் செய்யும். லண்டனில் ஸ்ட்ரைக் நடந்தது. தெருக்
களில் கார்பேஜ்கள் குவிந்துவிட்டன. அங்கே தி. மு. க. வோ,

[திரு. ரா. உமாநாத்] [1979 பிப்ரவரி 20

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியோ கிடையாது. மேற்கு ஜெர்மனியில் 40,000 ஸ்டீல் ஒர்க்கர்ஸ் வேலை நிறுத்தம் செய்தார்கள். அங்கே அவர்களைத் தூண்டிவிட திராவிட முன்னேற்றக் கழகமோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியோ, ஜனதாக் கட்சியோ மற்ற கட்சிகளோ கிடையாது.

இந்திய நாட்டின் எல்லாப் பகுதிகளிலேயும் இன்றைக்கு வேலை நிறுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. தமிழகமும் இந்தியாவின் ஒரு பகுதி என்பதை நம்முடைய முதலமைச்சரோ அல்லது இந்த அரசாங்கமோ மறந்துவிடக் கூடாது. வேலை நிறுத்தம் விஷயத்தில் விதிவிலக்காக தமிழகம் இருக்க முடியாது. எங்கள் கட்சி ஆட்சி நடத்துகிற மேற்கு வங்காளத்திலே ஸ்ட்ரைக் விதிவிலக்கு இல்லை. ஜூட் ஒர்க்கர்ஸ் இரண்டரை லட்சம் தொழிலாளர்கள் இன்றைக்கு அங்கே வேலை நிறுத்தம் செய்கிறார்கள். இன்றைக்கு அங்கே போலீஸை வித்ட்ரா பண்ணியாகிவிட்டது. சர்க்கார் எங்களுடைய கட்சியினுடையது தான், எங்களைக் கவிழ்ப்பதற்கே நாங்கள் வேலை நிறுத்தத்தைத் தூண்டிவிடுவோமா? சிந்தித்துப் பார்க்கவேண்டும். It is for a just cause, just right. This is a general phenomenon. Against labour movement என்ற முறையிலே பார்க்கக்கூடாது. பர்ஸட் பாலிசி We must learn to live with the strikes. வேலை நிறுத்தங்களுடன் சகவாழ்வு வாழ நாம் கற்றுக்கொள்ள வேண்டும். வேலை நிறுத்தங்கள் ஏற்படுமானால் முன்னதாகவே தலையிட்டு சமரஸம் செய்து அவைகளைத் தவிர்ப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். எந்த விதமான சப்ஜக்டிவ் ரீயாக்ஷனும் இல்லாமல், டி. எம். கே. யூனியனா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு யூனியனா என்றெல்லாம் பாக்கிற அந்த விவகாரம் வேண்டாம். சப்ஜக்டிவ் பிரச்சினையாக பார்க்காமல் தவிர்க்க முயற்சி எடுக்கவேண்டும். அப்படி தவிர்க்க முடியாத நிலையில் வேலை நிறுத்தம் நடந்தால் போலீஸ் தலையிடக் கூடாது. The Government must be strict on that question. அந்த நேரத்திலே கூட்டங்களைத் தடை செய்யக் கூடாது. பொய் கேஸ்களைப் போடக்கூடாது என்று ஸ்ட்ரிக்ட்டாக இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுக்கவேண்டும். குண்டர்களை எப்படியும் வளைத்துப் போட வேண்டும், கருங்காலிகளுக்கு போலீஸ் பாதுகாப்பு கொடுக்கக் கூடாது. அந்த நேரத்திலே புதிய தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தக் கூடாது. வேலை நிறுத்தத்தின் போது இடையிலே லேபர் டிபார்ட்மெண்ட் முயற்சி செய்து தீர்த்து வைக்கவேண்டும். இதுதான் கொள்கை. ஆனால் நம்முடைய தமிழக அரசு என்ன செய்தது? ஆரம்பத்திலே சில வேலை நிறுத்தங்களைத் தீர்த்தார்கள். ஆனால் ஒன்றைத் தீர்த்தால் இன்னொன்று பொதுக்கென்று வருகிறது. இங்கேதான் அரசாங்கத்திற்கு ஆத்திரம் வருகிறது. என்ன இது நாம் ஒன்றைத் தீர்த்தால் இன்னொன்று வருகிறது, ஆத்திரம் வருகிறது, வேலை நிறுத்தங்களைத் தடை செய்யும் சட்டம் வருகிறது, அந்தச் சட்டத்திலே இந்த அரசாங்கத்தினுடைய ஆத்திரம் பளிச்சென்று தெரிகிறது. டி. வி. எஸ்., டி. ஐ. சைக்கிள்ஸ் வேலை நிறுத்தப்

979 பிப்ரவரி 20] [திரு. ரா. உமாநாத்]

பிரச்சினைகளில் 2 குண்டாயிசத் தாக்குதல் ஆகியிருக்கிறது, 2
பையரிங் ஆகியிருக்கிறது. எதிர்க்கட்சியினர் பந்த் டெக்ளேர்
பண்ணியாகிவிட்டது. நிறுத்தமுடியாது என்கிறபோதுதான்
ஆத்திரம் வந்தது 'That is the starting point of attack.' நம்முடைய
முதல்வருக்கு கோபம் வந்தாகிவிட்டது. அவர் பழைய இராமச்
சந்திரன் ஆகிவிட்டார். அவருடைய பாணியிலே சொல்வதானால்
அப்படித்தான் நான் சொல்லவேண்டும். பழைய இராமச்சந்திரன்
ஆகிவிட்டார், நான் சொல்லவில்லை, நான் பழைய இராமச்
சந்திரன் இல்லை என்று அவரே சொல்லியிருக்கிறார், அந்த
முறையிலேதான் நான் சொல்கிறேன். கோபம் வந்துவிட்டது,
ஆத்திரம் வந்துவிட்டது. முதலமைச்சரே சொல்லியிருக்கிறார்,
நான் இந்தப் பதவியில் இருக்கிறபோது என்னை யாரும் ஆத்திர
மூட்டமுடியாது என்று சொன்னார், நல்ல சவால். ஆனால் அவர்
அதிலே தோல்வியடைந்துவிட்டார், அவரை இந்தச் சபையிலே
யாரும் ஆத்திரம் மூட்டமுடியவில்லை, இங்கே வெற்றி பெற்றிருக்
கிறார், ஆனால் தொழிலாளர்கள் விஷயத்தில் ஆத்திரமடைந்து
விட்டார் என்பதுதான் உண்மை. வேலை நிறுத்தத்தை மூன்று
நாட்களிலே முறியடிக்கவேண்டும் என்று முடிவு செய்தார். பந்த்
நடத்தமுடியாத ஏற்பாடுகளைச் செய்தார். தொழிற்சங்கங்கள்
மீதும் எதிர்க்கட்சிக்காரர்கள்மீதும் அடக்குமுறையை கட்டவிழ்த்து
விட்டார்கள். போராட்டங்களை முறியடிக்கவும், தொழிற்
சங்கங்களை நசுக்கவும் பல்வேறு முறைகளை மேற்கொண்டார்கள்.
இந்த பீரியடிலேதான் கோபம் புல் ஸ்டார்ட் ஆகிறது. ஆரம்பத்
திலே தி.மு.க. தொழிற்சங்கத்தை அடக்குவது என்று ஆரம்பித்
தார்கள். யுனைடெட் ஆக்ஷன் என்ற பிரின்சிபிளை டிஸ்ஸால்வ்
பண்ண அரசாங்கம் முயற்சியெடுத்தது. தி.மு.க. தொழிற்சங்கம்
சி.ஐ.டி.யு. தொழிற்சங்கம் ஆகியவைகளை அடக்க முயற்சித்
தார்கள். எங்களை டிஸ்ஸால்வ் பண்ண முயற்சித்தார்கள்,
ஆனால் முடியவில்லை. இதிலே நோ பாலிட்டிக்ஸ், டிரேட்
யூனியன் என்ற முறையிலே எந்தக் கோரிக்கை கொடுத்தாலும்
அதைக் கவனிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. எங்களை
டிஸ்ஸால்வ் பண்ண முடியாத நிலையில் அவர்கள் எங்கள்மீதும்
பயங்கரமாகப் பாய ஆரம்பித்தார்கள். அது தொடர்ந்து நடந்து
கொண்டிருக்கிறது. இப்படி நடக்க விடுவதன் காரணமாக வேலை
நிறுத்தங்கள் என்ன ஆகும்? நான் ஒன்றைச் சொல்ல விரும்பு
கிறேன். முண்டியம்பாக்கம் சர்க்கரை ஆலையில் அந்தத் தொழிற்
சங்கத்தின் காரியதரிசியினுடைய மனைவி, வீட்டில் சில பிரச்சினை
களின் காரணமாக தற்கொலை செய்து செத்துவிட்டார் என்று
சொல்லி இன்றைக்கு தொழிற்சங்கத் தலைவர்கள் அங்கே ஒடிக்
கொண்டு இருக்கிறார்கள்.

(முற்பகல் 10·50)

Social problems will arise and human problems will arise. இதை மனத்திலே வைத்துக்கொண்டு ஆத்திரப்பட்டுப் பயன் இல்லை.

சிம்கோ மீட்டர் போராட்டத்துடன் அரசாங்கத்தின் அணுகும் முறை சரியான உதாரணம். அதைப்பற்றி விவரங்கள் கூறியுள்ளேன். ஏற்கனவே சொல்லியாகிவிட்டது. அதை உடைப்பது என்பது முதலாளியின் முடிவு. அதற்கு ஈட்டி முனையாக தொழிலாளர் நல அமைச்சர் அமைந்தார் என்று சொல்வதற்குத் தயங்க மாட்டேன். அவர்கள் திருச்சிக்கு வந்தபொழுது ரொம்பக் கோபமாக சர்க்யூட் ஹவுசில், யார் இருக்கிறார்கள் என்று கூடக் கவனிக்காமல் ஐ. என். டி. யூ. சி.யைச் சேர்ந்த மொய்னுதீன் விசுவநாதனுக்குப் போன் செய்ய நாம் பேசி வைத்த 200 ரூபாய் அட்வான்ஸை டிக்லேர் செய்யச் சொல்லுங்கள், ஒரு பகுதியினர் வேலைக்கு வருவார்கள், இப்படி உடைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று அவர்கள் பேசினார்கள்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> பேரவைத் தலைவரவர்களே, நான் திருச்சிக்குச் சென்றபொழுது திரு. உமாநாத் அவர்களையும், திரு. ரங்கராஜன் அவர்களையும் தான் கண்டேனே தவிர, இரண்டு நாட்களுக்கு முன் சர்க்கரை ஆலைப் பிரச்னை வந்தபொழுது மொய்னுதீனைக் கண்டேனே தவிர, அதற்குமுன் கண்டதில்லை என்று உறுதியாகச் சொல்கிறேன். அவரிடம் இதைப்பற்றிப் பேசியதும் இல்லை.

<u>திரு. ரா. உமாநாத் :</u> அவர் மறுத்துக்கொண்டுதான் இருப்பார். சீஃப் மினிஸ்டரின் இன்ஸ்டரக்ஷனின் பேரிலே சர்க்யூட் ஹவுசுக்கு வந்தார்கள். பேட்டைவாய்த்தலை சம்பந்தமாக. அப்பொழுது இப்படிச் சொல்லியிருக்கிறார்கள். அப்பொழுதுகூட தொழிலாளர் நல அமைச்சரவர்கள் இப்படிச் சொல்கிறார் ஜாக்கிரதையாக இருங்கள் என்று சொல்லக்கூடிய நிலைமை இருந்தது. எனவே, அவர்கள் அப்படிப் பேசினார்கள்.

97-வது நாள் நான் முதலமைச்சரைக் கடைசி தடவையாக அணுகுகிறேன். கடிதம் எழுதினேன். அவர் அமைச்சரையும் என்னையும் வைத்து, தொழிலாளிகளின் ஊதிய நிலைமையை மாற்றி அமைக்க சமரச ஏற்பாடு செய்யவும் என்றார். சரி என்றார் அமைச்சர். ஐந்து இலட்சம் ரூபாய் ஒதுக்க வைக்கிறேன் என்றார். ஐந்து இலட்சம் ரூபாய் ஒரு ஆண்டுக்குச் செலவு செய்ய வைக்கிறேன். மாதத்திற்கு 45,000 ரூபாய், 50,000 ரூபாய் செலவு செய்ய வைக்கிறேன் என்று சொன்னார், 4 ரூபாய், $4\frac{1}{2}$ ரூபாய் என்பதை இனிமேல் ஒத்துக்கொள்ளமுடியாது என்றார். 1981-வரையில் காத்து நிற்க முடியாது என்று சொன்னார். முதலாளி விசுவநாதன் சென்னைக்கு வந்தார். அவ்வளவுதான். அமைச்சர் நேர் தலைகீழாகப் பல்டி அடித்தார். பல்டி என்பது பார்லிமென்ட்ரி வார்த்தை என்றுதான் நான் கருதுகிறேன். 102 பேர்களை உடனடியாக பர்மனென்ட் செய்வதாகவும், 6 மாதங்கள் கழித்து இன்னொரு 100 பேரையும் பர்மனென்ட் செய்வதன் மூலம் 76 ரூபாய் தலையொன்றுக்கு உயர்வு கிடைக்கும். அவ்வளவுதான். பாக்கியிருப்பவர்கள் $4\frac{1}{2}$ ரூபாய் இருக்கிறதே அது என்ன என்று கேட்டால் $4\frac{1}{2}$ ரூபாய்தான்

என்றார். சட்டம் குறுக்கே நிற்கிறது, மாற்ற முடியாது என்றார். வேதாளம் மீண்டும் முருங்கமரம் ஏறிவிட்டது. இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது, முதலாளி கூறுவது இருக்கட்டும், டிஃபென்சிலிருந்து ஆர்டர் வர வேண்டும். இப்பொழுது ஆர்டர் போதாது என்று சொல்கிறார். ஏன் ஆர்டர் இல்லையா? சிலோனிலிருந்து சிம்கோ மீட்டர் பற்றி டாக்டர் வேல் முருகன் என்பவர் அனுகிப் பேசினார், அதற்கு மேனேஜிங் டைரக்டர் சொல்கிறார், We have orders up to 1981. 1981 ஆம் ஆண்டு வரை என் கையில் ஆர்டர் நிறைய இருக்கிறது என்று சொல்லி நிராகரித்துவிட்டார். ஆனால் ஒரு தொழிலாளர் நல அமைச்சர் சொல்கிறார் ஆர்டர்ஸ் இல்லை என்று. Actually he is speaking for the employer. அவர் கோபித்துக்கொள்வார். பரவாயில்லை. அதையெல்லாம் பேஸ் பண்ணித்தான் சொல்கிறேன். நான் சிரித்துக்கொண்டுதான் பேசினேன்.

இந்த முதலாளிக்கு நிதிநிலைமை சரியில்லை என்கிறார் அமைச்சர். பம்பாயில் ஒரு பினாமி கம்பெனியை வைத்துக் கொண்டு இந்த முதலாளி விசுவநாதன் அந்த ப்ரொடக்ஷன் சேல்ஸ் ஏஜன்சியாக இருக்கிறார். எலக்ட்ரிசிட்டி போர்டு டைரக்டாக அனுப்புகிறார்கள். அதிலே பினாமியாகச் செய்கிறார்கள். அதிலே அவருக்குப் பங்கு உண்டு. சேல்ஸ் கமிஷன் என்ற பெயரிலே ரூ. 10 இலட்சம் போன வருஷம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எதற்காக? இங்கே அடித்த கொள்ளை போதாது என்று அங்கே கொண்டு போய், அவருக்கு பார்ட்னர்ஷிப் இருக்கிற கம்பெனிக்கு கொண்டு போய், அதிலே கொஞ்சம் கொள்ளை அடிக்க. அந்த ரூ. 10 இலட்சத்திலே ரூ. 6 இலட்சம் பங்கை எடுத்து, ஒர்க்கர்ஸுக்குக் கொடுத்தால் இந்த ஒர்க்கர்ஸ் பிராபிளத்தை தீர்க்க முடியும், ஆனால் அமைச்சர் சொல்கிறார், முதலாளி சொல்வது இருக்கட்டும்.........

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> ஒரே ஒரு முறை இன்டரப்ஷன். பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தப் பிரச்னையில் முழுக்க, முழுக்க, ஆதி முதல் அந்தம் வரை-நேற்று வரை-நடந்தது முதல்வருக்குத் தெரியும். எனவே அவர் பதில் சொல்லும்போது சொல்லிவிடுவார்கள். ஒன்றை இந்த அவைக்கு நான் சொல்லிவிட கடமைப்பட்டிருக்கிறேன். 17—4—1978 அன்று சிம்கோ மீட்டரிலிருந்த ஒரே தொழிற்சங்கமான......

<u>திரு. ரா. உமாநாத் :</u> ஐ எம் சாரி, கதை போல் சொன்னால், ஆரம்பம் முதல் சொல்வது என்றால், எனக்கு நேரம் இல்லை. ஒரே ஒரு கருத்து என்றால்........

Hon. Thiru S. RAGHAVANANDAM : I will not interrupt another time. This is the last time. Kindly permit me, In a democracy we have got opportunity. I will finish in a few minutes sharp.

ஒன்றே ஒன்றுதான். 17—4—1978-ல் ஒரு ஒப்பந்தம் நடந்தது. அந்த ஒப்பந்தம் தொழில் தகராறு சட்டம் 12(3)-ல் நடந்தது. அப்பொழுது ஒரே சங்கம்தான். அதற்குப் பின்னால் ஆரம்பிக்கப்பட்ட சி. ஐ. டி. யூ. சங்கம் அந்த ஒப்பந்தம் நடத்தப் படுகிறதா பார்ப்போம் என்று சொன்னதால் அதை ஒட்டிய பிரச்னைகள் இப்பொழுது பேசப்படுகின்றன என்பதை மட்டும் நான் இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. ரா. உமாநாத்: அவர் சொன்ன பாய்ன்டுகளை எல்லாம் முதலாளி 'எக்ஸ்பிரஸ்' பத்திரிகையிலே அட்வர்டைஸ் மென்ட் கொடுத்திருக்கிறார். அதிலேயே வந்திருக்கிறது. மறுபடியும் நான் சொன்னது ஊர்ஜிதம் ஆகிறது. அவ்வளவுதான்.

இதைவிட முக்கியமான ஒன்று. பெங்களூரிலே ஒரு கம்பெனி இருக்கிறது. எலெக்ட்ரானிக்ஸ கம்பெனி. அவர்களுடைய ப்ராடக்ட்ஸை 'சிம்கோ மீட்டர்ஸிலே' உள்ள லேபரைக் கொண்டு உற்பத்தி செய்து, இங்கே செலவு செய்து, பெங்களூர் கம்பெனி லேபிள் போட்டு, பொருளை அங்கே அனுப்புவதால் இலாபம் பூரா பெங்களூர் கம்பெனிக்கு. இங்கே இருந்து செலவுசெய்து அங்கே அனுப்புகிறார்கள். Why? அந்த பெங்களூர் கம்பெனி யினுடைய சேர்மன், விஸ்வநாதனுடைய சொந்த பிரதர். ஆகவே, தன்னுடைய செலவிலேயே ப்ரட்யூஸ் பண்ணி, அந்தக் கம்பெனியினுடைய லேபிலைப் போட்டு, அங்கே கொண்டு போகிறார்கள். ஓர்க்கர் ரூ. 4½ அநியாயம் என்று சொன்னால் சட்டமாம். என்ன சட்டம்? ரூ. 6½ விவசாயத் தொழிலாளிக்கு, ரூ 5½ பீடி சுற்றுபவனுக்கு என்று கூலி கொடுக்கிறோம். ஆனால், இங்கு எஸ். எஸ். எல். சி. படித்தவனுக்கு ரூ. 4½. ஐ. டி. ஐ. படித்த பையனுக்கு ரூ. 4½, (குறுக்கீடு) விவசாயிக்குக் கொடுத்தது போதவில்லையென்று சொல்கிறார்கள். அரசே இன்டரிம் ரிலீஃப் 50 பைசா கொடுத்திருக்கிறது. இறுதி நிர்ணயம் பிறகு வரும். இந்தக் கம்பெனியில் மெக்கானிக்கல் சூப்பர்வைசர்—பெத்த பேரு— என்று இருக்கிறார். கூலி ரூ. 4½ மூர்மார்க்கட்டா? எதையெடுத்தா லும் ரூ. 1 என்று சொல்ல. இப்படி வைத்திருக்கிற கம்பெனி முத லாளி அதை மாற்ற மாட்டேன் என்று சொல்வதால், அதை மாற்று வதற்குக் குறுக்கே ஒரு சட்டம் நின்றால், அந்தச் சட்டத்தைத் தகர்த்திருக்க வேண்டுமே தவிர, அந்தச் சட்டம் குறுக்கே நிற்கிறதே என்று சொல்ல அமைச்சர் வேண்டுமா? அதைச் சொல்வதற்கு முதலாளி இருக்கிறாரே, அதைச் சொல்வதற்கு முதலாளியின் லீகல் அட்வைசர் இருக்கிறாரே. அதைச் சொல்ல அமைச்சர் தேவையில்லை. ஆகவே, அப்படிப்பட்ட அநியாயமான பொசிஷன். அப்படிப்பட்ட கொள்ளை அடிக்கும் முதலாளிக்கு வக்காலத்து வாங்குகிறார் தொழிலாளர் அமைச்சர்.

அடுத்து, 'லேட்டஸ்ட்' மிரட்டல். ரூ.4½ கூலியை உயர்த் தினால் ஏன் உயர்த்தினாய் என்று சர்க்கார், முதலாளி மீது கேஸ் போட வேண்டியிருக்குமாம். ஏனென்றால், 12 (3) அக்ரி மென்ட் மீறப்படுகிறதாம். அதனால், சர்க்கார், முதலாளி மீது

கேஸ் போடவேண்டியிருக்கும், ஏன் கூலியைக் கூட்டிக்கொடுத்தாய் என்று, என்கிறார்கள். ஐ.என்.டி.யு.சி. கூடுதல் கூலி கொடுக் காதே என கோர்ட்டில் ஸ்டே போடுவார்களாம்.

நான் கேட்கிறேன், பம்பாயிலே 3 ஆண்டுகளுக்கு முன்னாலே ஒரு போனஸ் பிரச்னை காரணமாக, ஓர்க்கர்ஸ் ஸ்டிரைக் வந்தது. அதாவது போனஸ் கொடுக்க முதலாளிகள் மறுத்தார் கள். உடனே, ஓர்க்கர்ஸ் ஸ்டிரைக் செய்தார்கள். பிறகு முதலாளிகள், 12(3) செட்டில்மென்டை மீறி போனஸ் கொடுத் தார்கள். பம்பாய் சர்க்கார் அங்கே இருக்கிற முதலாளிகளை ப்ராசிக்யூட் பண்ணினார்களா? அப்பொழுது அங்கு காங்கிரஸ் சர்க்கார்தான். அந்தச் சர்க்கார் எப்படி 12 (3) செட்டில் மென்டை மீறலாம் என்று ப்ராசிக்யூஷன் கொள்கையையா கடைபிடித்தது? ஆனால், இந்தக் காலத்திலே, கூலியைக் கூட்டிக் கொடுத்தால், நான் ப்ராசிக்யூட் செய்வேன் என்று சர்க்கார் நோட்டீஸ் கொடுத்தால் என்ன அர்த்தம்?

[முற்பகல் 11·00]

பம்பாயில் கூட கொடுத்தார்கள், 12 (3) அக்ரிமென்ட் இருக்கிற போது, ஐ. என். டி. யு. சி. கோர்ட்டுக்குப் போய் ஸ்டே வாங்கினார்களா? 4½ ரூபாய்க்கு மேல் கூலியை உயர்த்துகிறேன் என்று முதலாளி சொல்கிறபோது வேண்டாம் என்றுசொன்னால், ஐ. என். டி. யு. சி. பொதுநலனுக்கு என்ன ஆகும் என்று அந்தத் தலைவர் ராமானுஜத்திற்குத் தெரியும். அவர்கள் இதை அனு மதிக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, தென்னை மரத்தில் தேள் கொட்டினால் பனை மரத்தில் விஷம் (குறுக்கீடு) ஆம் வீங்குதாம். விஸ்வநாதன் கொள்கையில் கை வைத்தால் இந்த அரசுக்கு ஏன் வயிற்று வலி. நம்முடைய அமைச்சர் ராகவானந்தத்திற்கு ஏன் வயிற்றுக்கடுப்பு. (குறுக்கீடு)

It is very good. Let me make it clear.

சீப் மினிஸடர் கொடுத்த அஷ்யூரன்ஸ் 12 (3) இருந்தாலும் இல்லாவிட்டாலும் அந்த ஓர்க்கர்சின் டிமான்ட்டை வைத்துக் கொண்டு டிசைட் செய்து நியாயம் வழங்கவேண்டும் என்று அஷ்யூரன்ஸ் அமுல்படுத்தவேண்டும். எம்பிளாயர் மறுத்தால் எம்பிளாயீசுக்கு உதவி கொடுத்து போலீஸ் ப்ரொடக்ஷன் வாபஸ் வாங்க வேண்டும். ஒரு 100 கோடி ப்ராஜக்ட்டை அரசாங்கம் விஸ்வநாதனிடம் என்டிரஸ்ட் செய்வதற்கு யோசனை வைத்து இருக்கிறது. அந்தப்ராஜெக்டை அரசாங்கம் நிச்சயமாக அவருக்குத் தரமாட்டேன் என்று சொல்லவேண்டும். என்னைப் பொறுத்தவரையில் தெளிவாகச் சொல்கிறேன். நாங்கள் கடைசி வரையில் விடமாட்டோம். போராட்டம் நடத்துவோம்.

We will not tolerate it. we will take it to the end. Come what may. திருச்சியில் இன்று எல்லாக் கட்சிகளும் சேர்ந்து எல்லாக் கட்சி யூனியன்களும் சேர்ந்து ஒரு அர்த்தால் நடத்துகிறார்கள் அதற்கு ஆதரவு நல்ல வகையில் இருக்கிறது என்றும், அது

வெற்றிகரமாக இருக்கிறது என்றும் பஸ்கள் ஓடவில்லை என்றும் எங்களுக்குத் தகவல் வந்து இருக்கிறது. ஆகவே, நான் சொல்ல விரும்புவது வி வில் பைட் டு தி லாஸ்ட்.

அடுத்து, டால்மியாபுரத்தில் ஒரு மினி சிமெண்ட் பாக்டரி. லேபர் லீடர்சும், சில தொழிற்சங்க பிரதிநிதிகளும், மத்திய அரசு அதிகாரியும், தொழிலாளி பிரதிநிதிகளும் பேசி சில சலுகைகளுக்காக 18 (1) ஒப்பந்தத்தின் அடிப்படையில் டெர்ம்ஸ் ஆப் அக்ரிமெண்ட் ஒப்பந்தம் போடலாம் என்றார்கள். ஆனால் அவர்கள் என்ன சொல்லிவிட்டுச் சென்றார்கள் என்றால், நீங்கள் டிராப்ட் செய்து முடியுங்கள். நாங்கள் நாளைக்கு வருகிறோம் என்று போய்விட்டார்கள், போன மறுநாள் அவர்கள் சொல்கிறார்கள், நான் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடமாட்டேன் இன்டிவிஜுவலாக போடவேண்டும் என்று பேக்-அவுட் ஆகிறார். ஒப்புக்கொண்ட காண்டிராக்ட் படி நடக்க அவர்கள் தயாராக இல்லை. அந்த தொழிலாளிகள் உடனே ஸ்ட்ரைக் செய்தார்கள். உடனே சென்னைக்கு கன்சீலியேஷனுக்கு கூப்பிடுகிறார்கள். அதாவது அதுவரையில் அந்த லாபர் டிபார்ட்மெண்ட் சரியாக ப்ரொசீட் பண்ணிக்கொண்டு இருக்கிறது. பிறகு தந்தி வருகிறது. கன்சிலியேஷன் கான்சல் என்று சொல்கிறார்கள், ஏன் இப்படி நடந்தது என்பது எனக்குத் தெரியவில்லை, அப்புறம் விசாரித்ததில் தெரியவந்தது. ஆளும் கட்சி உறுப்பினர் அங்கே வந்து அந்த ஸ்ட்ரைக்கை உடைத்ததாகவும், 4 பேர் டிஸ்மிஸ் செய்யப்பட்டார்கள் என்றும் கேள்விப்பட்டோம். ஆகவே நான் சொல்ல விரும்புவது ஆளும் கட்சி எம்·எல்.ஏ. மூலம் ஸ்ட்ரைக் உடைத்தார்கள், அதனால் பேச்சு வார்த்தை தடுக்கப்பட்டது.

The Department is being used to break a strike to help their own partymen என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (ஒரு உறுப்பினர் எழுந்தார்) நான் யார் என்று பெயரைச் குறிப்பிட்டுச் சொல்லவில்லை அது உங்களுக்கு என்று நீங்கள் எடுத்துக் கொள்வீர்கள் என்று எனக்குத் தெரியாது. நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், நான் கமிஷனருக்குக் கடிதம் எழுதினேன். ஏன் இந்த மாதிரி கன்சிலியேஷனைக் கேன்சல் செய்தீர்கள் எனக்கு கிளாரிபிகேஷன் கொடுத்தால் நல்லது என்று அதற்கு அவர்பதில் எழுதினார், ''இப்பொழுது அமைதியான சூழ்நிலை ஏற்பட்டு இருப்பதால் சந்தோஷப்படுவீர்கள் என்று நம்புகிறேன்'' என்று சொன்னார். ஆனால் ஏன் கன்சிலியேஷன் கேன்சல் செய்யப்பட்டது என்பதற்கு பதில் வரவில்லை. நான் மறுபடியும் எழுதினேன்-ஸ்ட்ரைக் உடைக்கப்பட்டது, 4 பேர் டிஸ்மிஸ் செய்யப்பட்டார்கள். நான் எப்படி சந்தோஷப்படமுடியும், ஆகவே, கன்சிலியேஷன் ஏன் கேன்சல் செய்தீர்கள் என்று மறுபடியும் கேட்டேன். அவர் பதில் என்னவென்றால், ''எம்· எல்.ஏ. என்ற முறையிலும் தொழிற்சங்கத் தலைவர் என்ற முறையிலும் எனக்கு உங்கள் மீது பெரும் மரியாதை உண்டு. ஆனால் நீங்கள் கிளாரிபிகேஷன் வேண்டியுள்ளது, முறையுமல்ல,

நியாயமுமல்ல எனக் கருதுகிறேன்'' இந்த ரிப்ளை எனக்கு ஆங்கிலத்தில் வந்தது. அதனுடைய தமிழாக்கத்தை நான் இங்கே படித்தேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நான் பிறகல் பொதிசனை சொல்லிவிடுகிறேன்.

திரு. ரா. உமாநாத்: நான் முடித்து விடுகிறேன். பின்னர் நீங்கள் சொல்லலாம். ஆகவே, லேபர் கமிஷனர் கருத்துப்படி நான் கன்சிலியேஷன் நிறுத்தியது ஏன் என்று விளக்கம் கேட்பது நியாயம் அல்ல, முறை அல்ல. நான் அவரை குற்றஞ்சொல்லவில்லை. அம்பு எய்தவன் இருக்க, அம்புமேல் நோகக் கூடாது. கமிஷனர் அம்புதான். பாவம். ஆகவே, அவரைச்சொல்லி என்ன பிரயோஜனம்? மேலிருந்து உத்தரவு வந்தது, அவர் ரத்து செய்தார். இப்படி பல சம்பவங்களைச் சொல்ல முடியும். ஆனால் நேரம் இல்லை. இது ஒரு 'பாட்டர்ன்',

டி.வி.எஸ். நிறுவனத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது முதல்வர் ஒரு தகவல் சொன்னார். ஆனால் அதன்படி நடக்கவில்லை. தலையிட்டு ஒப்பந்தம் செய்யவில்லை; முதலாளியைப் பகிரங்கமாகக் கண்டிக்கவில்லை. ஆனால் முதல்வர் சொன்னார். தலையிடவில்லையா? பகிரங்கமாகக் கண்டிக்கவில்லையா? கோர்ட்டுக்கு அனுப்பி வைக்கவில்லையா? என்று சொன்னார். அவர் அப்படி செய்தார். மறுக்கவில்லை. ஆனால் அதே நேரத்தில் டி.வி.எஸ். குரூப் தொழிலாளர்களின் போராட்டத்தை உடைக்க முதலாளிக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அத்தனையும் செய்தார். அத்தனை உதவிகளையும் இந்த சர்க்கார் செய்தது என்பது முக்கியமான பிரச்சனை. அப்படிச் செய்தால் எந்த முதலாளி பயப்படுவான்? எப்படி பிரச்சனை தீர்க்கப்படும்? எல்லாம் முன்னுக்கு பின் முரண்பாடு.

தொழிலாளர்கள் மீது பொய் கேஸ் போட்டார்கள். கம்பெனிகாரர்களுக்கு பாதுகாப்பு கொடுத்தார்கள். சிவகுமார் குத்திக் கொல்லப்பட்டார். பலர் படுகாயமடைந்து, ஆபத்தான நிலையில் இருந்தார்கள். போன சட்டசபையில் அதைப்பற்றி பேசினேன். முதலமைச்சர் அறைக்கு போய் சொன்னேன். ரிக்கார்டை காண்பித்தேன். ஆனால் இன்றுவரையில் கேஸ் போடவில்லை. போலீசிடம் சொன்னேன். எஸ்.பி.யை பார்த்துச் சொன்னேன். இருந்தபோதிலும் இதுவரையில் கேஸ் போடவில்லை. வாயில் கூட்டங்களுக்கு தடை போட்டார்கள். போராட்டங்களை உடைக்க இவ்வளவு வசதிகளைச் செய்து கொடுத்தால் அந்த முதலாளிக்கு எப்படி பயம் இருக்கும். இவ்வளவு வசதிகளையும் செய்து கொடுத்து விட்டு கண்டிக்கிறேன் என்று சொன்னால் அவனுக்கு அதனால் என்ன வந்துவிடப் போகிறது?

முதலமைச்சரிடம் பேசும்போது சொன்னார். நாங்கள் தலையிட்டு ஒப்பந்தத்திற்கு ஏற்பாடு செய்யலாம் என்றால் சட்டம் அதற்கு குறுக்கே நிற்கிறது என்று சொன்னார்கள். எங்களோடு பேசும்போது என்னென்ன வழிமுறைகளைப் பின்பற்றப் போகிறோம் என்ற 'கைடு லைன்ஸ்' பற்றிச் சொன்னார்கள். அதற்குப் பின்னாலே என்ன செய்தீர்கள்? நாங்கள் கேட்டோம். அப்போது முதலமைச்சர் சொன்னார், இது அக்கார்டு தான், அக்ரிமெண்ட் அல்ல என்று. அக்கார்டு தான். ஒப்புக்கொள்கிறேன். ஒர்க்லோடை குறைக்க வேண்டும் என்று சொன்னோம். சஸ்பென்ஸ் செய்யும் போது பைல்களை சீஃப் மினிஸ்டருக்கு அனுப்பவேண்டும் இதுபோன்ற பல்வேறு அம்சங்கள் அதன் சரத்துக்கள். ஆனால் நடந்தது என்ன? அக்கார்டுபடி எதுவும் நடக்கவில்லை, ஏராளமானவர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டார்கள். அப்படிச் செய்ய என்ன நிர்ப்பந்தம் ஏற்பட்டதோ தெரியவில்லை.

சிம்சன் தகராறு நடந்தது. மாநிலம் பூராவும் நாங்கள் எதிர்த்தோம். அப்போது டி.எம்.கே. சர்க்கார் இப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறவர் அப்போது முதலமைச்சர். நாங்கள் கடுமையாக எதிர்த்தோம். கடைசியில் அது செட்டில்மெண்ட் ஆகிவிட்டது. அதிலும் ஒரு அக்கார்டு இருந்தது. சப்சிஸ்டன்ஸ் அலவன்சை முதலாளி நிறுத்தினார். உடனே சர்க்காரிடம் சொன்னோம். அக்கார்டை முதலாளி மீறினார் என்று சொன்னோம். அப்போதும் அக்கார்டுதா ; அக்கிரிமென்ட் அல்ல. சப்ஸிஸ்டன்ஸ் அலவன்சை உடனே கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள்; மாறி பேசாமல் முதலாளி கொடுத்தார். இன்றைக்கும் அதே அக்கார்டு தான். அந்த அக்கார்டு மீறப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது அக்ரிமென்ட் இல்லையே என்று இப்போதிருக்கிற முதலமைச்சர் சொல்கிறார். அப்படிச் சொன்னால் முதலாளி என்ன நினைப்பான்? நமக்குப் பக்கபலமாக மேலே ஆள் இருக்கிறது என்றுதானே நினைப்பான்? அப்படியானால் பிரச்சனை பெரிதாகுமே தவிர தீருவதற்கு என்ன வழி?

லேபர் மினிஸ்டர் போன சட்டசபைக் கூட்டத்தில் ஒரு கேள்விக்கு பதில் சொன்னார். டி.வி.எஸ். விவகாரம் இன்னும் வரவில்லை; வந்து விட்டால் மள மள மளவென்று ஆக்ஷன் எடுப்பேன் என்று சொன்னார். என்ன நடந்தது? ஹூக்காஸ் தகராறு. 23-10-78ல் தகராறு. கமிட்டி போட்டார்கள், ரிப்போர்ட் கேட்டார்கள். அரசுக்கு ரிப்போர்ட் வந்து விட்டது. இன்று வரையில் நோ ஆக்ஷன். என்ன செய்தார்? தெரியாது. ரிப்போர்ட்டை வாங்கி கையில் வைத்துக்கொண்டு 'கும்' என்று உட்கார்ந்து விட்டார்கள்.

இன்னொன்று. ஹூக்காஸ் லாக்கவுட். 18-1ல் ரெய்ஸ் செய்கிறோம். 9-3ல் ரிக்கார்டுகளை பரிசிலனை செய்தார்கள். பிறகு ஃபெய்ல்யூர் ரிப்போர்ட் அனுப்பப்பட்டுவிட்டது. 3½ மாதமாகியும் இதுவரையில் சர்க்கார் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

[முற்பகல் 11·10]

அடுத்து 1-3-78. கிளேட்டன் கம்பெனி லாக் அவுட் பற்றி அரசாங்கத்திற்கு ஒரு ரிப்போர்ட் வருகிறது. கோர்ட்டிலே எந்த முடிவும் செய்யப்படாமல் இருக்கிறது. இப்படி இருந்தால் தொழிலாளர்களுக்கு எப்படி பாதுகாப்பு கொடுக்க முடியும்?

சாதாரண சங்கம் அமைக்கும் உரிமையே பாதிக்கப்படுகிறது. நான் பேக்ட்ஸ் வைத்துக்கொண்டுதான் பேசுகிறேன்,

அடுத்து தேவகிரி எஸ்டேட் இருக்கிறது. அங்கே எந்த தொழில் சட்டமும் அமுல்படுத்தப்படவில்லை. அங்கிருந்த அனைத்துத் தொழிலாளர்களும் டிஸ்மிஸ் செய்யப்பட்டார்கள்.

The entire strength of the estate has been displaced.

புதிய வொர்க்கர்ஸைக் கொண்டு வந்தார்கள். அவர்களுக்குப் போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப்படுகிறது. யூனியனை உடைப்பதற்கு போலீஸ் ப்ரட்டக்ஷன் கொடுக்கப்படுகிறது. அது லேட்டஸ்ட் சங்கம். சமீபத்தில்தான் அது சி.அய்.டி.யு-வுடன் இணைக்கப்பட்டது. ஜூன்லே ஒரு ஒப்பந்தம் ஆகியிருக்கிறது. தொழிலாளர்களுக்கு எக்ஸ்பேன்ஷன் அலவன்ஸ் கொடுக்கப்பட வேண்டும் என்று ஒரு க்ளாஸ் அதிலே இருக்கிறது. நிர்வாகம் இதிலே என்ன செய்கிறது? அரசாங்கம் என்ன செய்கிறது?

ஜனவரியிலே ஒரு சங்கம் ஏற்பட்டது. ஜனவரியிலேயே இந்தப் பிரச்சினைகள் குறித்து அக்ரிமென்ட் பண்ணி முடித்துவிட்டார்கள். 15 பேர் தான் இருக்கிறார்கள் என்றால், அமைச்சர் கேட்கிறார்களே என்று 1,500 பேர்களின் பெயர்களைக் கொண்ட லிஸ்ட் கூட கொடுக்க முடியும். தட் இஸ் நாட் தி பாயிண்ட்.

HON. THIRU S. RAGHAVANANDAM: He is casting aspersions on me. I want to know whether the Deputy Speaker is going to allow it. I request it must be expunged.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே. வேண்டுமானால் நானே அதை வித்ட்ரா பண்ணிவிடுகிறேன். These are things which must be ignored. Debate is debate. You must be sportive. I will take back that attack. இதையெல்லாம் பெரிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. விஷயத்திலே கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

அடுத்து, சதர்ன் ஸ்விட்ச் கீர் என்ற நிறுவனம் இருக்கிறது. ரீ ஓப்பன் பண்ணுவதற்கு ரெடியாக இருக்கின்றது. எல்லாம் தயார். 7 பேர் கொண்ட கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொழிலாளர் பிரிவினுடைய தலைவர் திரு. பெருமாள் ஒரு கூட்டம் போட்டுப் பேசுகிறார். நீங்கள் வி.பி.சி. தலைமையில் நம்பிக்கை இல்லை என்று எழுதிக் கொடுங்கள் என, எழுதி

கையெழுத்துப் போட்டு தாருங்கள் என்று கேட்கிறார். இப்படி எல்லாம் திரு. பெருமாள் அவர்களால் பேசப்பட்டு கையெழுத்து வாங்கப்படுகிறது. இந்த இடத்திலே நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். தொழிலாளர்களுக்கிடையே இருக்கும் வறுமையைப் பயன்படுத்தி முதலாளிகள் மட்டும் கையெழுத்து வாங்கவில்லை. வறுமையைப் பயன்படுத்தி தொழிலாளர்களிடம் கையெழுத்து வாங்குவதைத் தான் விரும்பவில்லை என்று முதலமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஆனால் இங்கே என்ன நடந்திருக்கிறது? அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக தொழிற் சங்கப் பிரிவே தொழிலாளர்களிடம் கையெழுத்து வாங்குகிறது. இப்படியெல்லாம் இருந்தால் நீங்கள் அவையிலே கொடுக்கும் வாக்குறுதியில் தொழிலாளர்களுக்கு எப்படி நம்பிக்கை ஏற்படும்.

அடுத்து ஆரோஃபுட். அதிலே ஒரு ஸ்ட்ரைக். அந்த ஸ்ட்ரைக் சம்பந்தமாக டி.சி.எல். கன்சிலியேஷனுக்கு வர விரும்புகிறார். அந்தப் பிரச்சினையை ஒருவாறு செட்டில் பண்ணுகிறார்கள். ஆனால் கன்சிலியேஷனுக்கு வர விரும்புகிற டி.சி.எல். அவர்களால் அது முடியவில்லை. இதற்குக் காரணம் என்ன? ஏதோ பிரஸ்ஸர் ஃப்ரம் தி டாப் என்று தான் சொல்லவேண்டும்.

ஆனால் அந்த நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர், இங்குள்ள ரூலிங் பார்ட்டியைச் சேர்ந்த உறுப்பினர், என்ன செய்தார் என்றால் புதியதொழிலாளர்களை ரிக்ரூட் செய்து தொழிற்சாலைக்கு கொண்டு போகிறார், தன் 'இன்ப்ளுயன்ஸ்' முழுவதையும் யூஸ் செய்து. அவர் தலையிடுகிறார். தலைவர் அவர்களின் அனுமதியைப் பெற்றிருக்கிறேன். வேணுகோபால். இது பார்லிமென்ட் கார்ட். கையெழுத்து இருக்கிறது. ஒரு கூட்டத்தை அவசரமாகக் கூட்டுகிறார். ஆரோபுட்டில் நடந்தது. தொழிற்சாலையில் அரசாங்கத்திற்கு களங்கம் ஏற்படுத்தி வரும் தீய சக்திகளை முறியடிப்பதற்கு என்று அஜெண்டாவில் ஒரு ஐட்டம். புதிய ஆள்களைக் கொண்டுபோய் விட்டார்கள். அங்கு வேறு எந்த பாக்டரியும் இல்லை, வேறு ஸ்ட்ரைக் எதுவும் இல்லை. நமக்கிடையே அரசியல் உறவு போகப்போகிறது என்றால் உடனடியாக நாங்கள் தீய சக்திகளாகி விடுவோம். இல்லை என்றால் நல்ல சக்திகள். நான் சீப் மினிஸ்ட்டரிடமே சொல்லியிருக்கிறேன். அரசியலில் உங்களுக்கும் எங்களுக்கும் இடையே 'டிபரன்ஸஸ்' வரலாம், அப்படி வேறுபாடுகள் இருந்தாலும் நீங்கள் சீப் மினிஸ்ட்டர் நான் ஒரு எம்.எல்.ஏ. அல்லது ஒரு சாதாரண பிரஜை என்ற முறையில் ரெப்ரசென்டேஷன் கொண்டுவரும் போது அந்த 'டிபரன்ஸஸ்' அதில் பிரதிபலிக்கக் கூடாது என்று சொன்னேன், அதை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அதே மாதிரி வேலைநிறுத்தங்களை உடைப்பதில் சட்டமில்லாத சட்டத்தின்படி நடவடிக்கைகள் எடுப்பதில் இறங்கியிருக்கிறார்கள். எனக்கு தமிழில் அது சரியாக சொல்ல வராததால் நான் ஆங்கிலத்தில் சொல்கிறேன். Govenment rule, by lawles law. in order to ban a general strike, Bandh, of the working class. 23ம் தேதி பந்த்-ஐத அடக்கி

ஒடுக்கிவிட பலயிடங்களில் ஊர்வலங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. நாகப்பட்டனத்தில் போலீஸ் அனுமதி மறுக்கப்பட்டது. ஏ.எஸ்.பி.யிடம் பெர்மிஷன் கேட்டார்கள் ஊர்வலத்திற்காக. எழுத்துமூலம் பெர்மிஷன் 'ரெப்யூஸ்ட், என்று தெரிவிக்கப்பட்டது. நான் என் ஆபிஸிலிருந்து அவர்களுக்கு போன் செய்தேன். 144 அமுலில் இருக்கிறதா என்று கேட்டேன். இல்லை என்று சொன்னார்கள் அவர்கள். 144 இருந்தால்தானே தடை செய்யமுடியும். 144 போடவில்லை என்றால் எப்படி அனுமதி மறுக்கப்பட்டது என்று கேட்டேன். போலீஸ் ஆக்ட் இருக்கிறது என்று சொன்னார்கள்.

Police Act is regulatory but not prohibitary. அதன்படி தடுப்பதற்கு அதிகாரம் கிடையாது என்றேன். 144 விதித்தால்தான் தடைபடுத்த முடியுமேதவிர போலீஸ் ஆக்ட்படி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்றால் ஊர்வலங்களை முறைப்படுத்த அதிகாரம் இருக்கிறதே தவிர, ஊர்வலம் இந்தத் தெரு வழி போவதற்குப் பதிலாக அந்தத் தெரு வழி போகலாம் என்று சொல்லலாமே தவிர போலீஸ் ஆக்ட் படி பெர்மிஷன் ரெப்யூஸ் செய்ய அதிகாரம் இல்லை என்று சொன்னேன். நாகர்கோவிலில் ஒரு டி.எஸ்.பி. ஒரு தடவை செய்தார்கள். இது ப்ரொஹிபிட்டரி அல்ல, ரெக்கமென்டேட்டரிதானே, தடைசெய்யமுடியாது ரூட்டை தான் மாற்றலாம். 144 போட்டால்தான் தடை செய்ய முடியும் என்று எடுத்துச்சொல்லப்பட்டது. அப்போது அவர் சுடுகாடு வழி ரூட் கொடுத்துவிட்டார்கள். டி. எஸ். பி. யிடம் சொல்லப்பட்டது. சுடுகாடு வழி ரூட் தருகிறீர்களே, யாரும் சாகவில்லை, இப்படி விவகாரம் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்கப்பட்டது, அப்போது டி.எஸ்.பி.யிடம் சொல்லப்பட்டது You have no power to prohibit, என்று ப்ரொஹிபிட் செய்யவேண்டுமென்றால் 144 போட்டால்தான் முடியும்,

That is your responsibility. உங்களுக்கு அந்தப்பவர் கிடையாது.

He said "I do not know law, legal things, and all these procedures. I have to carry out the executive instructions from the top" நிர்வாகம் எனக்கு கட்டளையிடுகிறது. அதைத்தான் நாங்கள் 'காரி அவுட்' செய்யவேண்டும் என்று கூறி அனுமதி மறுக்கப்பட்டது ஊர்வலத்திற்கு.

Without any power the procession was banned. கவர்ன்மென்ட்டுக்கு அதைச் செய்ய பவர் இல்லை.

Government have to act according to law. Its action, its authority to take action arise from several sections of the law. கரூரில் நடந்தது. கரூரில் வேலை நிறுத்தம் 65 நாட்கள் நடந்தது. 66வது நாள் திடீரென்று எஸ்.பி., டி.ஐ.ஜி. வருகிறார்கள். உள்ளே சென்று தொழிலாளர்களை அடித்து நொறுக்குகிறார்கள். அங்கிருந்த தொழிலாளர்களை அடித்து நொறுக்கி வெளியேயிருந்து

[திரு. ரா. உமாநாத்] [1979 பிப்ரவரி 20

[முற்பகல் 11-20]

தொழிலாளர் ஒருவர் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணையும் அடித்து, அவர் சேலை கிழிந்து ஒரு பெரிய ஒரு 'இஷ்யூ' வாக ஆகிவிட்டது.

ஆகவே போலீஸ் என்ன சொல்லுகிறது என்றால், சில தொழி லாளர்கள் உள்ளேவரும் தொழிலாளர்களை தடுத்தார்கள், ஆகவே நாங்கள் தலையிட்டோம் என்று. அப்படியே தடுத்திருந் தாலும் போலீசுக்கு அங்கே என்ன வேலை? இவர்கள் தலை யிடுவதற்கு என்ன அதிகாரம் இருக்கிறது . .

The worshop is governed by Standing Order ஸ்டான்டிங் ஆர்டர் ஒன்று இருக்கிறது. தொழிலாளி ஏதாவது தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டால் மானேஜர் தான் தலையிட வேண்டும். அப்படி தொழிலாளர்களை தடுத்தால் சார்ஜ் ஷீட் கொடுக்கலாம். சஸ்பென்ட் செய்யலாம். அப்படி சஸ்பென்ட் செய்த பிறகு டிரஸ்பாஸ் வழக்கு போடலாம். இப்படியெல்லாம் பல வழிகள் இருக்கின்றன.

Then only the tresspass question arises. Police has no business to enter at that point. அது தான் மானேஜ்மென்ட் செய்யவேண்டும். அப்படித்தான் ஸ்டான்டிங் ஆர்டர் சொல்லுகிறது. ஏதோசட்டம் இருக்கிறது என்று சொல்லிவிட்டு, உள்ளே போய் இருக்கின்ற தொழிலாளியை அடிப்பது. தொழிற் சங்க உரிமைகளை பறிப்பது, தொழிலாளர்களை அடக்குவது The Government is acting under Lawless Law இப்படி தொழிலாள விரோதப் போக்கில் தான் இந்த அரசாங்கம் நடந்து கொண்டிருக்கிறது.

அடுத்தது, லேபர் அட்வைசரி போர்டு என்று ஒன்றிருக்கிறது. கடந்த 1978 மே மாதம் கூடியது. இப்போது எவ்வளவோ தொழிலாளர்கள் விவகாரம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எவ்வளவோ ரெப்ரஸன்டேஷன் செய்யக்கூடிய வாய்ப்பு இருக் கிறது. ஆனால் இது கூடியது கடந்த 1978ம்ஆண்டு மே மாதம். அதற்குப் பின்னால் இதுவரைக்கும் கூடவில்லை. இந்த போர்டின் கழுத்தை நெருக்கி கொன்றாய்விட்டது. தீர்த்து கட்டியாகி விட்டது. இதற்கு பிரதிநிதிகள் யார் நியமிப்பது என்றால் நாங்கள் அல்ல. அமைச்சரே போட்டுக்கொள்வார். சி.ஐ.டி.யு-க்கு ஆள் நியமிக்க வேண்டும் என்றால், நாங்கள் போடவேண்டிய அவசியமில்லை. அமைச்சரே நிர்ணயம் செய்து விடுவார். அமைச்சர் நிர்ணயம் செய்வது நல்லசிவம் அவர்களை. ஐ. என். டி. யு. ஸி- க்கும் அமைச்சர் அவர்களே நிர்ணயித்துக் கொள்வார், இப்படி செய்யப்படுகிறது. இந்த நிலையில் தான் போர்டு இருக் கிறது. அதனால் தான் சொன்னேன். இதை நெருக்கி கொன்றாய் விட்டது என்று.

1979 பிப்ரவரி 20] [திரு. ரா. உமாநாத்]

இன்னொரு கமிட்டி, டிரான்ஸ்போர்ட் ஸ்டிரைக் நடந்த போது, வொர்க்கிங் கிளாஸ-னுடைய கோரிக்கைகளை அரசாங்கத்திற்கு தெரிவிப்பதற்கு என்று ஒரு புதிய கமிட்டி அமைக்கவேண்டும் என்று அப்போது சொல்லப்பட்டது.

The Committee has not seen the light of the day இன்று வரைக்கும் அதன் வெளிச்சத்தைப் பார்க்கவில்லை. ஒரு தடவை கூட இன்னும் இந்தக் கமிட்டியை கூட்டவில்லை. அதேநேரத்தில் வேலை நிறுத்தத்தை உடைப்பதற்கு எத்தனையோ முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இதிலிருந்து பேசிக் கொஸ்டின் வருகிறது. முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்லுவார்கள், நாங்கள் உற்பத்தி பெருக வேண்டும் என்று கருதுகிறோம். அதற்கு வேலைநிறுத்தம் செய்வது தான் உறபத்திக்கு தடையாக இருக் கிறது என்று அவர் நினைக்கிறார். அது உண்மை தானா? இதை சொல்லும்போது, சில சைட்களில் கோபம் வருகிறது. 'நாங்கள் உற்பத்தியை பெருக்க விரும்புகிறோம்' என்று முதல் அமைச்சர் சொல்வதோடு, அதிலிருந்து அவர் ஒரு முடிவுக்கு வந்துவிடுகிறார். ஸ்டிரைக் செய்வது தான் உற்பத்திக்கு தடை யாக இருக்கிறது. அது உண்மை தானா? ஆனால் உண்மை என்ன? முதலாளிகள் விலையை ஏற்றுவதற்காகவும், கிராக்கியை உண்டு பண்ணுவதற்காகவும் உற்பத்தியை குறைக்கிறார்கள். இதை நான் எடுத்துக்காட்ட முடியும். பொருத்தப்பட்ட உற்பத்தி சக்தியை முழுவதும் உபயோகப்படுத்துவதில்லை. மெஷின்கள் இருந்தாலும் அவற்றை முழுவதும் பயன்படுத்து வதில்லை.

சில குறிப்புகளைச் சொல்லுகிறேன். கமர்ஷியல் வெகிக்கல்ஸ் உற்பத்தியில்— பொருத்தப்பட்ட சக்தி 69,000. இதில் உபயோகப் படுத்துவது 40,000, அடுத்து ஸ்டீல் காஸ்டிங்-கை எடுத்துக் கொண்டால், பொருத்தப்பட்ட சக்தி 1·60 லட்சம். ஆனால் இதில் உபயோகப்படுத்துவது 68,000 இப்படி வரிசையாக இருக் கிறது. இதற்கான புத்தகத்திலிருந்து எடுத்து சொல்லிக் கொண்டிருக்கலாம். பொருத்தப்பட்ட சக்தியை உபயோகிப்ப தில்லை. பொருத்தப்பட்ட மெஷின்களை முழு அளவு ஓட்டுவ தில்லை. நல்ல லாபம் வருகிறது என்றிருந்தால் முழுவதும் ஓட்டுவார்கள். லாபம் குறைகிறது, பிரைஸ் குறைகிறது என்று தெரிந்தவுடன் உற்பத்தியை குறைத்துவிடுகிறார்கள். இந்த நிலையில் வேலைநிறுத்தம் என்று வரும்போது, தொழிலாளர்கள் மீது தான் கோபம் வருகிறது. தொழிலாளி மீது வருகின்ற நமது முதலமைச்சர் அவர்களின் கோபம் உற்பத்தியை தடுக்கிற இந்த முதலாளிகள் மீது வருவதில்லை. ஏற்படுத்தப்பட்ட, பொருத்தப் பட்ட இயந்திரங்களை ஓட்டாமல் உற்பத்தியை குறைக்கிற முதலாளிகள் மீது, முதலமைச்சர் அவர்களின் கோபம் குறைந்து 25 சதமாவது வரக்கூடாதா என்று தான் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ரா. உமாநாத்] [1970 பிப்ரவரி 20

அது மட்டுமல்ல. உற்பத்திக் குறைப்பைப்பற்றியும், வொர்க்கர்ஸ் ஸ்டிரைக் பற்றியும் 'இந்தியன் எக்ஸ்பிரஷ், பத்திரிகை எடிட்டோரியலில் எழுதியிருந்தது. 26-4-78 இந்தியன் எக்ஸ்பிரஸ் எடிட்டோரியலில் என்ன எழுதியிருந்தது என்றால் 'உற்பத்திக்கு தடை ஏன் என குறிப்பிடுகிற பொழுது, மின்சாரத் தட்டுப்பாடும் தொழிலாளர் தகராறும் தான் காரண மென்று பெடரேஷன் ஆப் இந்தியன் சேம்பர்ஸ் ஆப் காமர்ஸ் அன்ட் இன்டஸ்ட்ரி கூறுகிறது. உற்பத்தித் தடைக்கும் மந்தத்திற் கும் இது போதிய விளக்கமாகவே கூற முடியாது. உற்பத்தி செய்த பொருள்களுக்கு டிமான்ட் இல்லாமலிருப்பதும் இயந்திரங்கள் புதுப்பிப்பதற்கு தேவையான முதலீடு செய்யாத தால் பழுதடைந்த இயந்திரங்களையே வைத்து உற்பத்தி செய்வது போன்றவை உற்பத்தி குறைப்பிற்கு தொழில் தகராறு-களை விட மிகப் பெரும் காரணங்களாகும். பொருத்தப்பட்ட இயந்திரங்களை முதலாளிகள் முழு அளவு ஓட்டாமலிருப்பதும் உற்பத்திக் குறைப்பிற்கு முக்கிய காரணமாகும்., என்று கூறுகிறது. இது இந்தியன் எக்ஸ்பிரஸ் எடிட்டோரியலில் வெளி வந்திருக்கிறது.

ஆகவே, நான் சொல்வது இந்தக் கோபம் அந்தப் பக்கம் வரவேண்டும். This is a basic phenomenon. 'ஒர்கிங் கிளாஸ்' பாதுகாக்கப்படுகின்றார்களா என்றால் இல்லை. இதிலே உள்ள 'பேசிக் பினாமினா' விற்கு என்ன காரணம் என்பதைப் பார்க்க வேண்டும். சர்க்காரிடம் கடன் வாங்கி, அதிலே மெஷினரி வாங்கி, அதிலே உற்பத்தி பண்ணுவதிலே விளையாடி அவர்கள் உற்பத்தியை தடை செய்கிறார்களே, அப்போது அரசாங்கத்திற்கு கோபம் வருகிறதா? வரவில்லை. அது சரியா? அப்போது ஏன் வரவில்லை? It is not a proper understanding, proper phenomenon.

அவசரகால நிலைமையைப் பற்றி முதல் அமைச்சர் அவர்கள் சொல்வார்கள். அதிலே சில நல்ல அம்சங்கள் இருந்தது, அதனாலே சில நல்லதுகள் நடைபெற்றது என்று. அப்படி இருந்த தால், உற்பத்தி பெருக வசதியாக இருந்ததாகவும், அதனாலே விலைவாசி குறைந்ததாகவும் அடிக்கடி அப்பிரிசியேட் பண்ணிச் சொல்வார்கள். அந்த சமயத்தில் ஸ்டிரைக்குகளும் குறைந்தது என்றால், அப்போது மிசா இருந்தது. That damocles sword was hanging. அப்படியிருந்தும் உற்பத்தி பெருகி, விலைவாசி குறைந்ததா என்றால் இல்லை. உற்பத்தி பெருகிற்று, அதனால் விலைவாசி இறங்கியது என்று நம்புகிறேன் என்று முதலமைச்சர் வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் அந்த மாதிரி இல்லை என்பதைப் பற்றி, ஸ்டேட்ஸ்மென் பத்திரிகையிலே 8-3-77 அன்று" 76 மார்ச்சு முதல் 1977 பிப்ரவரி வரை நாட்டிலே விலைவாசி 15½ சதவீகிதம் உயர்ந்துள்ளதாகவும், பணவீக்கம் வளர்ச்சி விகிதம் 'டபுள் டிஜிட்' டுக்கு மீண்டும் திரும்ப கொண்டு வந்து விட்டது,. என்ற உண்மையை அன்றையதினம் நிதி

1979 பிப்ரவரி 20] [திரு. ரா. உமாநாத்]

அமைச்சராக இருந்த திரு சி. சுப்பிரமணியம் அவர்களே, இந்த எமர்ஜென்சிக்கு ஆக்டிவ் பார்டிசிபெண்டாக பணியாற்றி, அதை 'இம்பிளிமென்ட்' செய்தவரே ஒப்புக்கொண்டிருக்கிறார்.—not so easy not so simple. You cannot have straight formula like that.

எனவே, இப்படி விலைவாசியானது 15½ சதவிகிதம் உயர்ந் துள்ளதையும், அதனால் பணவீக்க வளர்ச்சி விகிதம் 'டபிள் டிஜிட்'க்கு மீண்டும் திரும்ப கொண்டு வந்துவிட்டது என்ற உண்மையையும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆகவே, இந்த மாதிரி முதல் அமைச்சர் நினைக்கிறேன் என்று சொல்வது சரியல்ல.

முதல்வர் அவர்கள் கவர்னர் உரைக்குப் பதில் கூறுகின்ற போது சொன்னார்கள். 'நாங்கள் தொழிலாளிகளைப் பாதுகாக்க நினைக்கும் போது சட்டங்கள் குறுக்கே நிற்கின்றன' என்று. நான் கேட்கிறேன், சட்டம் அனுமதித்த இடத்தில் அரசாங்கம் பாதுகாத்ததா? என்று. அப்படி சட்டம் குறுக்கே நிற்காத இடத்தில் இந்த அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறதா என்பதைக் கேட்க விரும்புகிறேன். அப்படிப்பட்ட இடத்தில் ஜாக்கிரதையாக, விஜிலென்டாக இந்த இலாகாவாவது செயல்பட்டதா? சட்டத்தைக் கரைத்துக் குடித்த நமது தொழி லாளர் நல அமைச்சர் அவர்களாவது, பாதுகாப்பு கொடுப்பதில் அக்கறை காட்டினரா? என்றால் இல்லை. சிவகாசி சுடுகாட்டி லிருந்து 37 குழந்தைகள் இப்போதும் கதறுகின்றன. அவர்களை இந்த அரசு பாதுகாக்கவில்லை. இந்தக் குழந்தைகளின் பிணம் எங்களை இந்த அரசு பாதுகாக்க வில்லை' என ஓலமிடுவது நம் காதிலே கேட்கின்றது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 28,000 குழந்தைகள் வேலை செய்கிறார்கள். இதில் 40லிருந்து 45 சதவிகிதம் தீப்பெட்டித் தொழிற்சாலையில் பணியாற்றுகிறார்கள். ஒரு ஆண் குழந்தை என்றால், மூன்று பெண் குழந்தைகள் என்று சொல்லப்படுகிறது. இவர்களின் குறைந்தபட்ச வயது 5 லிருந்து 6. இவர்களுக்குக்கூலி 50 பைசாவிலிருந்து ரூ.2 வரை கொடுக்கப்படுகின்றது, ஒரு நாளைக்கு. இப்படி இவர்கள் சுரண்டப்படுகிறார்கள். இதற்காக 1976லே ஹர்பான் சிங் கமிட்டி என்று ஒன்று அமைக்கப்பட்டு, அந்த அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டு விட்டது. ஆனால் அது இதுவரையில் வெளிவரவில்லை. ஆனால், எனக்கு வந்துவிட்டது. நாட்டு மக்களுக்கு நல்லது வரக்கூடிய எந்த விஷயமும் என் கைக்கு வந்துவிடும். ஆனால், அதை இன்னும் அமுலுக்கு கொண்டு வரவில்லை. அதிலே ஹர்பான்ஸ்சிங் என்ன சொல்கிறார் என்று பார்த்தால், இந்தத் தொழிற்சாலைகளுக்கான பஸ்கள் விடியற்காலை 3 மணிக்கு வந்து இந்தக் குழந்தைகளை அழைத்து செல்கிறார்கள். அப்படியென்றால், இதைப்பற்றி நாம் சற்று யோசித்துப் பார்த்தால் just imagine படிப்படியாக நமகுக்

இரத்தக் கண்ணீர் வருகிறது. 3 மணிக்கு குழந்தைகள் அழைத்துச் செல்லப்படுவதென்றால், அவர்களை விடியற்காலை 2½ மணிக்கே எழுப்பி, பஸ் வந்து நிற்கிறது, போங்கள் என்று சொன்னால், அந்த தூங்குகின்ற வேளையில் குழந்தைகள் தள்ளாடி, தள்ளாடிக் கொண்டு போகக்கூடிய நிலைமையைப் பற்றிச் சற்றுச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். திரும்புவது எப்போது என்று பார்த்தால், இரவு 7 மணிக்குத் தான். இது பயங்கரமான சுரண்டல். இந்தச் சுரண்டல் இருந்து கொண்டிருக்கிறது. அங்கே இந்தச் சட்டத்தை உபயோகப்படுத்தவில்லை; பிரயோகிக்கவில்லை. இதைத் தவிர, அந்தக் குழந்தைகள் அந்த பஸ்களிலே அழைத்துச் செல்லப்படும் போது அமுக்கப்படுகிறார்கள், அப்படி அமுக்கப்பட்டு தொழிற்சாலைக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

அதனால் எந்த நேரத்திலும் விபத்து ஏற்படலாம் என்றெல்லாம் அந்த ரிப்போர்டிலே சொல்லப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 11-30]

அந்த ரிப்போர்ட்டுக்குப் பிறகுதான் லெவல் கிராசிங்கில் ஆக்சிடென்ட் நடந்து 2 குழந்தைகள் இறந்துவிட்டன. இப்போது 37 குழந்தைகள் செத்திருக்கிறார்கள். ஹர்பான்ஸ்சிங் எச்சரிக்கிறார். அரசாங்கத்தின் சட்டம் எங்கே போயிற்று? பாக்டரி இன்ஸ்பெக்டர்கள் என்ன செய்கிறார்கள்? பாக்டரிஸ் ஆக்டையும், எம்ப்ளாய்மென்ட் ஆப் சில்ட்ரன் ஆக்டையும் முதலாளிகள் மீறினால் அவர்களுக்குப் பெயரளவுக்குத்தான் தண்டனை. லைசன்சை ரத்து செய்யவேண்டுமென்று சொன்னால் அதற்கு அதிகாரம் இல்லை. ஹர்பான்ஸ்சிங் 57 கன்க்ளுஷன்களை, சிபாரிசுகளைச் செய்திருக்கிறார்கள். அந்த ரிப்போர்ட் எங்கே இருக்கிறது? 20 மாத காலமாக அரசாங்கம் என்ன செய்கிறது? சிம்கோ தொழிலாளர்களுக்கு ரூ. 4.50 கூலி உயர்த்த வேண்டுமென்று சொன்னால் சட்டம் குறுக்கே நிற்கிறது என்கிறார்கள். அந்தச் சட்டத்தை நோண்டி நோண்டி எடுத்துக் காட்ட முன்வருகிறார்கள். ஆனால் அதே சமயத்தில் குழந்தைகள் உயிரைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக கொடுக்கப்பட்ட ரிப்போர்ட் அரசாங்கத்தின் பீரோவில் இருக்கிறது. அங்கே போக முடியவில்லையா? இந்தச் சர்க்காரில் எங்கு வேலை நிறுத்தங்களை உடைக்கலாம். மாற்றுச் சங்கங்களை உடைக்கலாம். முதலாளிகளைக் காப்பாற்றலாம் என்பதற்குத்தான் நேரம் இருக்கிறது. குழந்தைகள் உயிரைக் காப்பாற்றக்கூடிய ரிப்போர்ட்டைத் தேடிக் கண்டுபிடிக்க, தோண்டிக் கண்டு பிடிக்க ஏன் முன்வரவில்லை? அதற்கு இந்த அரசுக்கு எங்கே நேரம் இருக்கிறது?

இதை நோண்டி எடுக்காததற்கு இன்னொரு காரணம்-டைம்ஸ் ப்ஆ இந்தியா 30-1-79-ல் காரணத்தை தோண்டியிருக்கிறது. ',இந்த ரிப்போர்ட் இன்னும் வெளிச்சத்தைப் பார்க்கவில்லை.

இந்த ரிப்போர்ட்டை கவர்னர் சுகாதியா மூலம் வேட்டுவைக்க மிகுந்த அரசியல் செல்வாக்கு படைத்த நாடார் வகுப்பினரால் (அதாவது முதலாளிகளை அவ்வாறு குறிப்பிடுகிறது) முடிந்தது. பின்தங்கிய ராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகாசியிலும் சுற்றுப்புறத்திலும் குவிந்திருக்கும் தீப்பெட்டி, பட்டாசு, அச்சகத் தொழில்களை நாடார் வகுப்பைச் சேர்ந்தவர்கள் கன்ட்ரோல் செய்கிறார்கள்'' என்று கூறியிருக்கிறது. இப்படி இருக்க இந்த அரசின் பார்வை அங்கு போகுமா? ஆகவே லேபர் அமைச்சரகம் போராடும் தொழிலாளியைப் பார்த்தால் முறைக்கிறது, சுரண்டும் முதலாளியைப் பார்த்தால் புதிய பெண்ணைப் போல குளு மிளு என்று நாணிக்கோணி நிற்கிறது. I demand that report be placed on the table of the House and immmediate action taken அந்த அறிக்கையை அரசாங்கம் தோண்டி எடுத்துப் பார்த்து அரசாங்கத்தின் முடிவு என்ன என்பதை அவை முன் வைக்க வேண்டும்.

அரசாங்கத்தின் தொழில் இலாகா எவ்வளவு மெத்தனமாக அல்லது அலட்சியமாக செயல்படுகிறது என்று பார்க்க வேண்டும். ஒன்றிரண்டை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மத்திய அரசின் எலெக்ட்ரானிக்ஸ் கமிஷனும் தமிழ்நாடு அரசின் தொழில் இலாக்காவும் ஒரு கூட்டுக் குழு அமைத்து ஒரு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். அது ஏகமனதான அறிக்கை. அதிலே, சென்னையில் ஒரு எலக்ட்ரானிக்ஸ் தொழிற்சாலை அமைக்க சிபார்சு செய்யப்பட்டுள்ளது. கேரளாவில் கெல்ட்ரான் தொழிற்சாலையும் பாரத் எலக்ட்ரானிக்சும் உற்பத்தி செய்யாத பொருளை சென்னையில் உற்பத்தி செய்ய திட்டம். ஐ.ஐ.டி., எம்.ஐ.டி.யின் ஆராய்ச்சிக் கூடங்களை புதிய பாக்டரி உபயோகப்படுத்தலாம். அருமையான திட்டம். தமிழ்நாடு அரசுக்கு அறிக்கை அளிக்கப்பட்டது 1977-ம் ஆண்டு. எலக்ட்ரானிக்ஸ் கமிஷன் அதிகாரிகள் டில்லியிலுள்ள திரு. ராஜாராம் அவர்களிடம் அடிக்கடி வற்புறுத்திக் கொண்டே இருக்கிறார்கள். தொழில் மயமாக்குவோம் என்கிறீர்கள். ஆனால் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தவில்லையே. அந்த அறிக்கையை இந்த அவையின் மேஜை மேல் வைக்கவேண்டும்.

பேட்டைவாய்த்தலை பாக்டரி மூடப்பட்டது. இரண்டு லட்சம் டன் அளவுக்கு கரும்பு பயிரிடுகிற 10,000 விவசாயிகள் இன்று தெருவில் நிற்கிறார்கள். ஆயிரம் தொழிலாளர்கள் தெருவில் நிற்கிறார்கள். சில தமிழக எம்.பி.-க்கள் உடனே மத்திய சர்க்காருக்கு இதைப் பற்றி ரெப்ரசன்ட் செய்தது. நீங்கள் அந்தத் தொழிற்சாலையை எடுத்துக் கொள்கிறீர்களா அல்லது நாங்கள் எடுத்துக் கொள்ளட்டுமா என்று மத்திய அரசு ஒரு வார காலத்திற்குள் கடிதம் எழுதிற்று. அதற்கு நீண்ட நாட்கள் நம்முடைய அரசாங்கம் பதில் அனுப்பவில்லை. அதற்குப் பிறகு மறுபடியும் அந்த எம்.பி.-க்கள் மத்திய அரசில் ரெப்ரசன்ட்

பண்ணினார்கள். மத்திய அரசு 10 நாட்களுக்குள் நீங்கள் எடுத்துக் கொள்ளவில்லையென்றால் மத்திய அரசு அதை எடுத்துக் கொள்ளும் என்று சொன்னார்கள். மாநில சர்க்கார் பின்னால் எடுத்துக்கொண்டார்கள்.

அடுத்து, வயலன்ஸ்—அடிக்கடி வன்முறையைக் கண்டித்து வருகிறார்கள். குறிப்பாக ஸ்ட்ரைக் என்றால் வன்முறையின் பேரால் கண்டனம் வரும். வன்முறைகளைப் பற்றி இந்த அரசின் அணுகும் முறை என்ன?

அது நீண்ட பயணம் செய்திருக்கக் கூடியது. முதலில் குண்டர்களுக்கு எதிராகப் பிரகடனம் செய்தார்கள். அதற்குப் பிறகு குண்டர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் இருந்து விட்டார்கள். அடுத்து முதலாளிகளின் குண்டர்கள் போராடும் தொழிலாளியின் சதையில் கத்தியை இறக்க போலீஸ் பாதுகாப்பு அளித்தனர். அடுத்து குண்டர்களுக்கு எதிராக நேர்மையான அதிகாரி நடவடிக்கை எடுத்தால் அந்த அதிகாரி பேரில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும், இறுதியில் ஆளுங்கட்சியே ஆயுதம் தாங்கிய குண்டர் படையைத் திரட்டியுள்ளார்கள். அது மாணவர்களைத் தாக்கியது. அதுதான் என்.ஜி.ஓக்களைத் தாக்கியது. அதற்கு வெண்ணிறப்படையோ என்னவோ பெயர் சொல்லுகிறார்கள். 23 ஆம் தேதி டிரான்ஸ்போர்ட் தொழிலாளிகளைத் தாக்கியது. பந்த் அன்று மக்களையும் கடைக்காரர்களையும், தொழிலாளிகளையும் தாக்கியது. நான் அவை முன்னவரைக் கேட்கிறேன், அவர் இல்லாவிட்டாலும் முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். என் வீடு தாக்கப்பட்டபோது இங்கே பேசும் ஆவேசத்தில் 'தொழிலாளிகள் பார்த்துக்கொள்வார்கள்' என்று பேசியதை அவர்கள் ஆட்சேபித்தார்கள். அவர்கள் சொல்லும் போது அதை மைல்டாக சொன்னார்கள், 'என்போன்றவர்கள் பேசினால் அது வன்முறையைத் தூண்டுவதாக ஆகாதா' என்ற பொருளில் கேட்டார். நான் ஒரு சிறிய கட்சி, நானே தொழிலாளிகள் பார்த்துக் கொள்வார்கள் என்று பேசினால், அதனாலே ஆபத்து என்றால் அளவுக்கடந்த செல்வாக்குப் படைத்த முதல்வர் அவர்களே, அரசு அதிகாரம் படைத்த முதல்வர் அவர்கள் 'மக்கள் பார்த்துக் கொள்வார்கள்' என்று பேசுவது பயங்கரமான பூதாகாரமான வன்முறையைத் தூண்டுவது ஆகாதா? (கையொலி) ஜால்ரா தட்டுங்கள், அப்போது அவர்கள் தட்டினார்கள், இப்போது இவர்கள் தட்டுகிறார்கள், இரண்டு கட்சிகளுக்கும் பொதுவாக இன்டி பென்டண்ட்டாக எங்கள் கட்சி அப்படிப்பட்ட பொசிஷனிலே இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்கிறீர்கள். இப்படிப் பட்ட தூண்டுதல்தான் அட்மாஸ்பியர்தான் சுடுகாட்டுக்குப் போகும் பிணத்தையே தாக்க வைத்தது, வாய்க்கரிசியையே மரியாதையின்றி சிதற வைத்தது, சட்டியை உடைக்க வைத்தது. அரசாங்கமே வன்முறை அட்மாஸ்பியரை உண்டாக்கினால் எதிர்க் கட்சித் தலைவர்களுக்கும் ஊழியர்களுக்கும் ஆபத்துதான்.

கொலைகளும்கொலை முயற்சிகளும் ஆளும்கட்சித் தலைவர்கள் சொல்லிச் செய்வதல்ல, நான் அவர்களைச் சொல்லவில்லை, ஆனால் யாரைக் கொன்றாலும் தான் தப்பிக்க முடியும் என்ற எண்ணம் வளராவிட்டால் சி.டி.சி. விசுவநாதன் கொலை நடக்கத் தான்செய்யு , முருகையன் கொலை நடக்கத்தான் செய்யும், எதிர்க்கட்சித் தலைவர் மீது கொலை முயற்சி நடக்கத்தான் செய்யும். இங்கு நான் ஆளும் கட்சிக்கு ஒன்று கூற விரும்பு கிறேன். கொலை செய்யும் முயற்சியைப்பற்றிக் கிண்டலும் கேலியுமாகப் பேசுவதை நிறுத்த வேண்டும். உளி வீசியது பற்றிச் சொல்லும்போது உளியா புலியா என்று கேட்டார்கள், லைப்புக்கு த்ரட் வருகிறபோது அது தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். லேட்டஸ்ட்டாக என்னுடைய வீடு தாக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் முசிறிபுத்தன் அவர்களும் திருச்சியிலே 2,3-வது வார்டிலே அவர்களுடைய நண்பர்களும் பொதுக்கூட்டத்திலே பேசும்போது கேலியாகப் பேசியிருக்கிறார்கள். திருமதி உமாநாத் அவர்கள் சொல்வது உண்மை இல்லை, அன்றைக்கு அவர்கள் சினிமாவுக்கு போயிருக்கிறார்கள், சினிமாவுக்கு போய்விட்டு வந்த ஒரு பொம்பளையை இரவு 9 மணிக்கு இரண்டு தி.மு.க.காரர்கள் துரத்தியிருக்கிறார்கள், அப்போது அந்த வீட்டிற்குள் நுழைந்திருக்கிறார்கள். அப்போது சோடா பாட்டில் வீசப்பட்டு இருக்கிறது, அதுதான் அங்கே கிடந்திருக்கிறது, திருமதி உமாநாத் அவர்கள் 2 மணிக்குத்தான் வீட்டிற்குத் திரும்பி யிருக்கிறார்கள். வீட்டிலே இருந்தபோது தாக்குதல் நடந்ததாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், 9 மணிக்கு அது நடந்த போது பக்கத்து வீட்டுக்காரரிடம் சொல்ல வேண்டியதுதானே, சொல்லாமல் எஸ்.பி.யிடம் சொல்லியிருக்கிறாரே ஏன், அவர் என்ன சொந்தக்காரரா என்றெல்லாம் கேலியாக பேசியிருக்கிறார். This attitude by the Ruling Party men will encourage further talk on opposition leaders என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசாங்கத்திடம் ''take them serious'' என்றுச் சொல்லிக் கொள்கிறேன். உங்கள் கட்சி ஊழியர்களை இந்த மாதிரி விஷயத்திலே கிண்டலாகப் பேச விடக்கூடாது. அருமை சி.என்.ஏ. அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது தோழர் இராமமூர்த்தி தஞ்சைக்குப் போனார். அப்போது பயங்கரமான லேன்ட்லார்ட்ஸ் வன்முறை இருக்கிறது என்று சொன்னார்கள்.

[முற்பகல் 11-40]

மெட்ராஸுக்கு வந்து ஸ்டேட்மென்ட் விட்டார். கீழ் வெண்மணி ஏரியாவில் இந்த மாதிரி சீரியஸாக நிலைமை இருக்கிறது என்று சொன்னார். அப்பொழுது ஐ.ஜி.யாக இருந்த திரு. மகாதேவன் சொன்னார். "What Mr. Ramamurthi said is a issue of lies'' பச்சைப்பொய்யை இராமமூர்த்தி சொல்கிறார் என்று சொன்னார். அவர் சொல்லி ஒரு வாரத்திற்குப் பிறகு 44

அரிசனப் பெண்கள் கொளுத்தப்பட்டார்கள். எனவே இந்த மாதிரி விஷயங்களை சீரியஸாக எடுக்காவிட்டால், 'It will encourage further murders and other things''

வெங்கடாசலம் கொலை செய்யப்பட்டபொழுது முதல்வரவர்கள், இது தமிழக போலீசின் திறனுக்கு ஒரு சோதனை என்று தெரிவித்தார்கள். அந்தச் சோதனையில் போலீஸ் தோல்வி அடைந்தது. முதலமைச்சரவர்கள் ஒரு விஷயத்தைச் சொன்னார்கள், போலீஸ் படையை ஹியூமனைஸ் பண்ண வேண்டுமென்ற சவாலை ஏற்றுக்கொண்டுதான் போலீஸ் இலாக்காவை வைத்துள்ளேன் என்று சொன்னார்கள். அந்தச் சவாலை நிறைவேற்றுவதில் முதல்வர் தோல்வி அடைந்துள்ளார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். போலீஸ் புருட்டாலிட்டி அதிகரித்துள்ளது. லாக்கப்-அப் கொலைகள் அதிகரித்துள்ளன. பழனி, சென்னை, நடுக்காவேரி, மாதவரம் என்று வரிசையாக நடந்து கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம், நாகையிலே ஒரு போலீஸ் சப் இன்ஸ்பெக்டர், இன்வெஸ்டிகேஷன் என்ற பெயரால் நான் தமாஷுக்காகச் சொல்லவில்லை, நடந்ததைச் சொல்கிறேன், நான் பொய் சொல்ல மாட்டேன் என்று சொன்னாராம். பொய் சொல்லியிருந்தால் நாக்கை அறுத்துக் கொள்கிறேன் என்று சொன்னாராம். உடனே போலீஸ் கான்ஸ்டபிளிடம் பிளேடைக் கொடுத்து நாக்கை அறுக்கச் சொன்னாராம். உடனே அவன் பயந்து விட்டான். 'அறுடா' என்று சொன்னவுடன், அவன் அறுத்து விட்டான். ஆனால் நல்ல வேளையாகத் துண்டாகவில்லை. There is a big cut நான் முதலமைச்சரிடத்தில் கூடச் சொன்னேன். This brutality is increasing. அங்கேயிருந்து வருகிறது விஷயம், தன் கீழ் இருக்கும் உத்தியோகஸ்தர்கள், கான்ஸ்டபிள்கள் ப்ருட்டலாக இருக்க வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள். Top officials of the Police Department want their subordinates to be brutal. நான் எதை வைத்துச் சொல்கிறேன் என்றால், ஒட்டேரி கள்ளச் சாராய மோதலின்பொழுது, அங்கே வீடுகளில் புகுந்து பல அப்பாவிப் பெண்களை போலீஸ் அடித்தார்கள், தலைமயிரைப் பிடித்திழுத்து ரோட்டிலே போட்டார்கள். இதைப்பற்றி முதலமைச்சரிடத்தில் சொல்லியிருக்கிறேன். ஜனநாயக மாதர் சங்கத்தின் சார்பாக மைதிலி சிவராமன் அவர்கள் பரமகுருவிடம் கம்ப்ளெயின்ட் கொடுத்தார்கள். அதற்கு அவர் என்ன சொன்னார் தெரியுமா? தலைவரவர்களே, அதைக் கேட்டால் நீங்களே ஆச்சரியப்படுவீர்கள். "By giving such complaints you are making my policemen eunuchs." I am quoting the exact words from Mr. Paramaguru. இப்படிப்பட்ட புகார்களைக் கொடுப்பதன்மூலம் என் போலீஸ்காரர்களை நீங்கள் அலியாக ஆக்குகிறீர்கள் என்று சொல்லியிருக்கிறார். அதாவது, ஆணும் அல்ல, பெண்ணும் அல்ல, அலியாக என்று "Eunuchs" (he did not say as "coward") என்று சொல்லியிருக்கிறார். அந்த

அதிகாரியின் கான்செப்ட் என்ன? குடும்பப் பெண்களைக் கற்பழிக்க விட்டால்தான் பரமகுருவின் போலீஸ் படையின் ஆண்மை நிலைக்குமா? இல்லையென்றால் அலியாக ஆகிவிடுமா? தலைமயிரைப்பிடித்து இழுக்க விட்டால்தான் போலீஸ்காரரின் வீரியம் பாதுகாக்கப்படுமா? இல்லையென்றால் அலியாகிவிடுமா? அவர் என்ன கோயில் மாடுகளையா வளர்க்கிறார் அல்லது ஸ்டட் புல்லை வளர்க்கிறாரா? இந்த கான்செப்ட்டுடைய அதிகாரிகளை வைத்துக்கொண்டு நீங்கள் போலீஸை ஹியூமனைஸ் பண்ண நினைந்தால் அது நடக்காது, நடக்கவும் இல்லை.

கடைசியாக ஒரு விஷயத்தைக் சொல்லி முடித்துவிடுகிறேன். ஆசிரியர்கள் விஷயம். நேற்று அமைச்சரவர்கள் சொன்னார்கள், அவர்கள் போராட்டம் பற்றித் தகவல் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். It went on record. (மணியடிக்கப்பெற்றது) Just two minutes only. ஆனால் உண்மை என்ன? Joint Action Committee 9ஆம் தேதி நடந்தது. 10ஆம் தேதி மினிஸ்டருக்கு அந்த விஷயத்தை அனுப்பினார்கள். 16ஆம் தேதி எஜுகேஷன் செக்ரடரி பிரபாகர் அவர்களிடம் சார்ட்டர் ஆஃப் டிமான்டைக் கொடுத்தார்கள். ஸ்ட்ரைக்கைப்பற்றித் தெரிவித்தார்கள். தீர்மானத்தை டைரக்டர் ஆஃப் காலேஜியேட் எஜுகேஷனுக்கு அனுப்பினார்கள். இவ்வளவும் செய்தபிறகு ஒரு துளிகூட சொல்லாமல் நடத்துகிறார்கள் என்று சொல்வது சரியல்ல. அம்மாதிரி அமைச்சரவர்கள் சொல்வது சரியல்ல. மாற்று வேலை கொடுப்பது பற்றி சஜஷன் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். அவர்கள் ஏன் சஜஷன் கொடுக்கவேண்டும்? 10 பிளஸ் 2 கொண்டுவந்தபொழுது இந்த ஆசிரியர்களைக் கேட்டுக்கொண்டா கொண்டு வந்தீர்கள்? நீங்களாகவே தானே கொண்டு வந்தீர்கள். அதனால் விளைவுகள் ஏற்படும்பொழுது அவர்கள் சஜஷன் கொடுக்க வேண்டுமென்றால் என்ன அர்த்தம்?

அவர்கள் சஜஷனும் கொடுத்தார்கள். MUTA Conference பழனியிலே நடந்தது. சஜஷன் கொடுத்தார்கள். ஊட்டியிலே காலேஜ் டீச்சர்ஸ் கான்ஃபரன்ஸ் நடந்தது, இராஜா முகமது அவர்களும், எஜுகேஷன் பார்லிமென்டரி செகரட்டரியும் அதில் இருந்தார்கள். அப்பொழுதும் கொடுத்தார்கள். அங்கேயும் கொடுத்தார்கள். ஆகவே கொடுக்கவில்லையென்று சொல்லக் கூடாது. ஆகவே நோட்டீஸ் சர்வ் பண்ணியிருக்கிறார்கள். பி.யூ.சி. வகுப்புகளை எடுப்பதால், சர்ப்ளஸ் என்ற முறையிலே இல்லையென்று அரசாங்கத்தின் சார்பிலே சொல்கிறார்கள். நீங்கள் பேச்சுவார்த்தை நடத்துகிறபொழுதே ஆசிரியர்கள் வேலை நீக்கம் செய்யப்படுகிறார்கள். நான் ஒரு உதாரணம் கூற விரும்புகிறேன், குரு நானக் கல்லூரியில் விடப்பட்ட அஃபிஷியல் நோட்டீஸ்.

Notice is hereby given to the following Members of the staff that their services will not be required due to want of work load consequent on shedding of P.U...... பி.யூ.வைக் கழித்துக் கட்டுவதனால்

வேலைப் பளு குறைகிறது, நீங்கள் சர்பிளஸ் ஆகிறீர்கள். ஆகவே நிறுத்துகிறோம் என்று நிறுத்துகிறார்கள். அதனால்தான் இவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள், நீங்கள் ஆத்திரப்பட்டு என்ன பிரயோஜனம்? ஆகவே, போராட்டம் வாபஸ் வாங்கினால் தான் பேச்சு என்ற நிலை வேண்டாம். இதுவரை அந்த மாதிரி பொசிஷன் இருந்தது. இனி அது வேண்டாம். Let us not have subjectivism என்று சொல்லி, நான் கொண்டு வந்திருக்கிற சென்ஷூர் மோஷன்மீது இந்த அளவில் பேசி அமர்கிறேன்.

திரு. கு. வடிவேல்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் பேசும்பொழுது என்னுடைய தொகுதியினுடைய பிரச்னையைப்பற்றி சொன்னார்கள். எல்.ஜி. நிறுவனத்திலே இரண்டு மாதமாகத் தொழிலாளர் போராட்டம் நடந்து வந்தது. என்ன காரணத்தாலோ 2 மாதங்களாகத் தனியார் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தினார்கள். அங்கு பஸ்களை பாடி கட்ட வைத்திருந்தார்கள். அப்பொழுது. தனியார், பஸ்களை, போலீஸ் அனுமதியோடு, வெளியே எடுத்தார்கள். தொழிலாளர்கள் பெண் போலீசார் சட்டையைப் பிடித்து கிழித்த பிறகுதான், ஒழுங்கு நடவடிக்கைகள் எடுத்தார்களே தவிர, போலீஸ் டிரெஸ்பாஸ் செய்யவில்லையென்பதை அவருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்களும் மாண்புமிகு உமாநாத் அவர்களும் மாண்புமிகு ஜேம்ஸ் அவர்களும் முன்மொழிந்திருக்கிற தீர்மானங்களை வழிமொழிந்தும் நான் முன்மொழிந்திருக்கிற தீர்மானத்தை மேலும் வலுவாக்கவும் ஆழப்படுத்தவும் என்னுடைய சில கருத்துக்களை இங்கே சமர்ப்பித்துக் கொள்கிறேன். சிறுபான்மை சமுதாயத்தைப்பற்றி இந்த அரசாங்கம் கடைபிடித்து வருகின்ற கொள்கைகள் இந்த அவையால் நிராகரிக்கப்படவேண்டுமென்று கொடுக்கப்பட்டிருக்கிற தீர்மானம் ஏதோ அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவோ அல்லது அரசியல் விரோதத்தின் காரணமாகவோ கொடுக்கப்பட்ட தீர்மானம் என்று இங்கே யாரும் அவ்வாறு கருதி விடக்கூடாது. இந்த நாட்டில் நடைபெற்றிருக்கிற சம்பவங்கள், துர்பாக்கியமான சம்பவங்கள், மைனாரிட்டி சமுதாயங்கள் இந்த மாநிலத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக அனுபவித்து வருகிற கஷ்டமான அனுபவங்கள், அந்த அனுபவங்களையெல்லாம், அந்த உண்மைகளையெல்லாம் தெரிந்து, அறிந்து, கேட்டு, கண்டு, கசிந்து, கனிந்து இந்தக் கண்டன தீர்மானத்தை நான் கொடுத்திருக்கிறேனே தவிர, காரணம் இல்லாமல் கொடுக்கப்பட்ட தீர்மானமாக யாரும் கருதி விடக்கூடாது. மைனாரிட்டி சமுதாயங்கள் இன்றைக்கு எந்த அளவில் எல்லாம் பாதிக்கப்பட்டு வருகின்றன என்பதை

பத்திரிகையின் வாயிலாக இந்த நாடு நன்றாக அறிந்திருக்கிறது. நான் இந்த அரசின் மீது சுமத்துகின்ற குற்றச்சாட்டு அரசமைப்புச் சட்டத்தினுடைய விதி 25-லேயிருந்து விதி 30 வரையிலே தரப்பட்டிருக்கிற உரிமைகள், மைனாரிட்டி சமுதாயத்திற்கு அளிக்கப்பட்டிருக்கிற உரிமைகளையெல்லாம் தகர்த்தெறியும் வகையில் அந்த உரிமைகளை அமைதியான சூழ்நிலையில், சமரசமான சூழ்நிலையில், சாத்விகமான சூழ்நிலையில், இந்த மைனாரிட்டி சமூகத்தினர் பெற்று அனுபவிக்க முடியாத காலகட்டத்தையும் சூழ்நிலையையும் இந்த அரசு அனுமதித்திருக்கிற காரணத்தாலே மைனாரிட்டி சமுதாயங்கள், அரசியல் சட்டத்திலே 25-லேயிருந்து 30 வரை தரப்பட்டிருக்கிற உரிமைகளைப் பெற முடியாமலும் அந்த உரிமைகளை இழந்து இன்றைக்குத் தவித்துக்கொண்டிருக்கிற நிலைமையிலும், இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கிறது என்ற காரணத்தினால் இந்த அரசு மைனாரிட்டி சமுதாய மக்களின் நம்பிக்கைகளை மேலும் தங்க வைத்துக்கொள்ள தன்னுடைய தகுதிகளை முழுமையாக இழந்திருக்கிற காரணத்தினால், இந்தக் கண்டனத் தீர்மானத்தை நான் இன்றைக்கு முன்மொழிகிறேன்.

[முற்பகல் 11-50]

ஒரு மைனாரிட்டி சமுதாயம் என்று சொன்னால், அதற்கு எண்ணிக்கை மட்டுமல்ல, அதற்கு என்று சில தனித்தன்மைகளும் உண்டு. அந்த தனித்தன்மையின் அடிப்படையில் அது மைனாரிட்டி சமுதாயம் என்றும் அதற்கு மாறுபட்ட நிலையிலிருக்கும் சமுதாயம் பெரும்பான்மை சமுதாயம் என்றும் குறிப்பிடப் படுகிறது. ஜனநாயகத்தில், ஜனநாயகம் என்பதே பெரும்பான்மையின் ஆட்சியும், சிறுபான்மையின் மாட்சியும். அது அரசியல் ரீதியாக பெரும்பான்மை இருந்தால் பெரும்பான்மை ஆட்சி. அரசியல் ரீதியாக சிறுபான்மை இருந்தால் சிறுபான்மை மாட்சியை பெரும்பான்மை ஆட்சி காப்பாற்றவேண்டும். அதே மாதிரி ஒரு பொருளாதாரத் துறையில், கல்வித் துறையில், மொழி அடிப்படையில், மார்க்க அடிப்படையில், சிறுபான்மையாக இருப்பவர்கள், அந்தச் சிறுபான்மையாக இருப்பவர்களின் அபிலாஷைகளை, அவர்களுடைய தனித்தன்மையைக் காப்பாற்றும் வகையில் எந்த அரசு செயல்படுகிறதோ அந்த அரசுதான் ஜனநாயக ரீதியில் அமைக்கப்பட்ட அரசாகும். ஒரு ஜனநாயகத்தில் சிறுபான்மையினுடைய கோரிக்கைகள் உதாசீனப் படுத்தப்படுமானால் பெரும்பான்மை இருக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக சிறுபான்மையினரை அலட்சியப்படுத்துவார்களானால் அது உண்மையான ஜனநாயகம் அல்ல என்று இராஜ்ய சபையில் பேசும்போது அறிஞர் அண்ணா அவர்கள் அன்றைக்குக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அண்ணா அவர்கள் பெயரால் நாங்கள் ஆண்டு கொண்டு இருக்கிறோம் என்ற கட்சி அண்ணா அவர்கள் சொல்லியபடி அந்தப் பெரும்பான்மை ஆட்சி சிறு

பான்மை மாட்சியைக் காப்பாற்றவும், அவர்கள் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற நிலை இவைகளுக்கெல்லாம் மாறாக, அந்த நிலைக்கு மதிப்புத் தராமல் சிறுபான்மையினரை அடக்கும் முறையிலும், சிறுபான்மையினரின் அமைதியைப் போக்கும் சூழ்நிலையிலும், அந்த அமைதி சூழ்நிலையைக் காப்பாற்ற தவறிய நிலையிலும் இந்த அரசு சிறுபான்மையினரின் நம்பிக்கையை மேலும் காப்பாற்றிக்கொள்வதற்கும் தக்க வைத்துக்கொள்வதற்கும் அதே நேரத்தில் ஜனநாயக முறையில் ஆட்சி செய்வதற்கும், இந்த ஆட்சி தகுதியை இழந்து விட்டு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு 28 பாராளுமன்ற உறுப்பினர்கள்-முஸ்லிம் லீக்கைச் சேர்ந்தவர்கள் ஒரு அறிக்கையை இந்த நாட்டிற்கு விட்டார்கள்.

மிகவும் பயங்கரமான, நாம் எல்லாம் படித்துப் பார்த்து, வேதனை தரக் கூடிய ஒன்றாக அந்த அறிக்கை இருந்தது. ஏனென்றால், இந்த நாட்டில் பல்வேறு இடங்களில் வகுப்புக் கலவரங்கள் அதுவும் வடபுலத்தில் வழக்கமாக நடந்து கொண்டு இருக்கின்றன என்று பத்திரிக்கை வாயிலாக பல்லாண்டுகளாக நாம் அறிந்து வரும் உண்மை-நடைபெற்று வருகின்றன. ஆனால் அந்த நேரத்தில் எல்லாம் கூட தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு வகுப்பு சௌஜன்யத்திற்கு ஒரு நிலையான இடமாக இருந்து வந்து இருக்கிறது. பல்வேறு வகுப்புகள் அமைதியாகவும் சகோதரத்துவ உணர்வுகளோடும் வாழ்ந்து வருகின்றன என்பது நாடறிந்த ஒரு சிறப்பு அம்சமாகும். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகாலமாக நம்முடைய வரலாற்றுப்புகழ் மிக்க முதலமைச்சர் மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு இந்த நிலை நீடிக்கிறதா என்றால் நான் மிகுந்த வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன், அது நீடிக்கவில்லை என்று இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல, பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் 28 பேர் ஒரு அறிக்கை தயார் செய்து குடியரசுத் தலைவருக்கும், மாண்புமிகு தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்களுக்கும் சமர்ப்பித்து இருக்கிறார்கள். அதிலும் வகுப்புக் கலவரங்கள் மிகத் தீவிரமாக நடைபெற்று சிறுபான்மை சமுதாயம் மிகுந்த அடக்குமுறையால் பாதிக்கப்பட்டும் உள்ள மாநிலங்கள் மூன்று என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்த 3 மாநிலங்கள், உத்திரப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், தமிழகம். சுதந்திரம் வந்த காலத்தில் இருந்து எந்தக் காலத்திலும் தமிழகத்தில் வகுப்பு சௌஜன்யம் மிக அழகாக இருந்தது. அந்தச் சிறப்பான நல்ல பெயர் இப்போது போய் விட்டது. வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்டு இருக்கும் மூன்று மாநிலங்களின் பெயரைக் குறிப்பிடுகையில் தமிழ் நாடும் சேர்க்கப்பட்டு இருக்கிறது. அந்த அளவிற்குத் தமிழ் நாட்டுச்

சிறுபான்மை சமுதாயம், குறிப்பாக முஸ்லிம் சமுதாயம் பாதிக்கப்பட்டு இருக்கிறது. இது மிகப் பெரிய வேதனைக்குரிய நிலையாகும். இந்த மாதிரியான ஒரு அபகீர்த்தியை, அவப்பெயரை தமிழகத்திற்குக் கொண்டு வந்த பெருமை வரலாற்றில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்திற்கு உண்டு என்பதை யாரும் மறந்து விடக்கூடாது என்பதை மட்டும் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பணிவான கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

ஒரு நாட்டிலே உடுக்க உடை இருக்கலாம்; உண்ண உணவு இருக்கலாம்; வேலைகள் செய்வதற்கு வேலைகள் கிடைக்கலாம். ஆனால் அதே நேரத்தில் ஒரு சிறுபான்மை சமுதாயத்திற்கு அமைதி கெடாத சூழ்நிலை இருக்கிறது என்றும் இருக்க வேண்டும். பாதுகாப்பு இருக்கிறது என்ற உணர்வு சிறுபான்மை சமுதாயத்திற்கு இருக்கவேண்டும். அந்த உணர்வு இல்லாத ஒரு நிலைமை இந்த நாட்டில் நீடித்துக்கொண்டிருக்குமானால் அதை ஒரு அரசு பார்த்துக் கொண்டிருக்குமானால் அது வேதனைக்குரிய ஒன்று, கண்டனத்திற்குரிய ஒன்று. அதை உடனடியாக அகற்றவேண்டும். அதை அகற்ற முடியாவிட்டால் இந்த ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்றவர்கள் அகன்றுவிட வேண்டும். அந்த வகையிலேதான் இந்தக் கண்டனத் தீர்மானத்தை நான் கொண்டு வந்திருக்கிறேன்.

கடந்த 15 மாத காலத்தில் தமிழகத்தில் நடைபெற்றிருக்கிற வகுப்புக் கலவரங்களைப் பார்த்தால் மிகப்பெருமளவுக்கு நடந்திருக்கிறது. போலீஸ் துறையிலே இருக்கும் குறிப்பேடுகளைப் பார்த்தால் நன்றாகப் புரிந்துகொள்ள முடியும். எவ்வளவு வகுப்புக் கலவரங்கள் நடைபெற்றிருக்கின்றன என்று கணக்கு தெளிவாகத் தெரியும். இங்கே பல பெரியோர்கள் எல்லாம் முதலமைச்சர்களாக இருந்திருக்கிறார்கள். ஆந்திர கேசரி டி. பிரகாசம் முதலமைச்சராக இருந்திருக்கிறார். ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் முதலமைச்சராக இருந்திருக்கிறார். குமாரசாமி இராஜா முதலமைச்சராக இருந்திருக்கிறார். சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் முதலமைச்சராக இருந்திருக்கிறார். அவர்களுடைய ஆட்சியிலே எல்லாம் சிறுபான்மையோர் எப்படி எல்லாம் காக்கப்பட்டார்கள். அப்போது அவர்கள் எப்படி எப்படி எல்லாம் பேசினார்கள், எப்படி எப்படி எல்லாம் நடந்துகொண்டார்கள் என்பது குறிப்பேடுகளில் இருக்கிறது. பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் இந்த மாநிலத்திலே முதலமைச்சராக இருந்தார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். பக்தவத்சலம் அவர்கள் இங்கே முதலமைச்சராக இருந்து ஆட்சி செலுத்தியிருக்கிறார்கள். கலைஞர் அவர்கள் 7 ஆண்டு காலம் முதலமைச்சராக இருந்து ஆட்சி நடத்தியிருக்கிறார்கள். அத்தனை பேர்களும் முதலமைச்சராக இருந்து இந்த நீண்ட 30 ஆண்டு காலத்தில் எத்தனை வகுப்புக் கலவரங்கள் நடை

பெற்றன? அப்படி நடைபெற்ற நேரங்களில் முதலமைச்சராக இருந்தவர்கள் எப்படி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? எப்படி சமரசம் ஏற்படுத்தினார்கள் என்று பார்க்கும்போது, இந்த 15 மாதகாலத்தில் எம்.ஜி.ஆர். ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு எவ்வளவு பயங்கரமான வகுப்புக் கலவரங்கள் நடைபெற்று இருக்கின்றன என்பதையும் பார்க்கும்போது எவ்வளவு மோசமான ஒரு நிலைமையில் சிறுபான்மையோர் இருக்கிறார்கள் என்பது நன்கு தெரியும். சிறுபான்மையோருக்கு எம். ஜி. ஆர். ஆட்சியில் பாதுகாப்பு இல்லை. அவர்கள் நாள்தோறும் நசுக்கப்படுகிறார்கள். முதலமைச்சர் அதற்கு என்ன ஆறுதல் சொல்லியிருக்கிறார்? சட்டப்படி என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்? இதை எண்ணிப் பார்க்கும்போது உண்மையிலே வேதனைப்படுவதைத் தவிர வேறு வழியில்லை. இந்தப் பிரச்சனை மிகப்பெரும் பிரச்சனையாக இன்றைக்கு இந்த நாட்டிலே இருந்துகொண்டிருக்கிறது. நடந்து இருக்கும் பிரச்சனைகளைப் பார்க்கும்போது ஆட்சியிலே இருப்பவர்கள் மறைமுகமாக அதற்கு ஆதரவாக இருக்கிறார்களோ என்று மக்கள் சந்தேகப்படுகிறார்கள். அந்தச் சந்தேகத்தை முதலமைச்சர் நீக்க வேண்டும். நீங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகு நடைபெற்ற வகுப்புக் கலவரங்கள் சிலவற்றைக் கூறுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

சென்னையில் வியாசர்பாடியில் சிறுபான்மையோர் தாக்கப்பட்டார்கள். கோவை மாவட்டத்தில் தாளவாடி. அது ஒரு சிறு கிராமம். அங்கே இருக்கின்ற முஸ்லீம்கள் ஏழைகள், கூலி வேலை செய்பவர்கள், குடிசைகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறவர்கள். அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். முகவை மாவட்டத்திலே பேரையூர். அது முதுகளத்தூரில் இருக்கும் ஒரு சிறு கிராமம். அங்கே முஸ்லீம்கள் தாக்கப்படுகின்றார்கள்; முஸ்லீம்களுடைய வீடுகள் தகர்க்கப்படுகின்றன; சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன. தென்னாற்காடு மாவட்டத்திலே மானியமாடு அது ஒரு குக்கிராமம். அங்கே இருக்கிற முஸ்லீம்கள் அடித்து நொறுக்கப்படுகிறார்கள்; அவர்களுடைய பயிர் பச்சைகள் எல்லாம் எரிக்கப்படுகின்றன. நெல்லை மாவட்டத்திலே ஏர்வாடி, 3, 4 மாதங்களாக அங்கே கலவரம் நடந்து கொண்டிருக்கிறது. வடாற்காடு மாவட்டத்திலே பேரணாம்பட்டு. அங்கே முஸ்லீம்கள் அடித்து நொறுக்கப்படுகிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் தக்கலை. அண்மையிலேதான் தக்கலையில் வகுப்புக்கலவரம் நடந்தது.

இப்படிப் பல்வேறு சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. இவைகளை எல்லாம் பேசித்தான் தீர்க்க முடியுமா? பேசினால் தான் நீதி கிடைக்குமா? என்பதைச் சிந்திக்கவேண்டும். பேச வேண்டியவைகளைப் பேசலாம். ஆனால் சிலவற்றை பொது நலனைக் கருதி, வெளிப்படையாகப் பேசாமல் பிரச்சனைக்குத்

தீர்வு காணவேண்டியிருக்கிறது. வெளிப்படையாகப் பேசாமலேயே தீர்வு காண வேண்டிய பல பிரச்சனைகளை இந்த மன்றத்திலே பேச வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கியவர் முதலமைச்சர்தான் என்பதைப் பணிவோடு அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன், இவைகள் வகுப்புக் கலவரங்கள்.

அடுத்து நான் சொல்லப்போவது சில படுகொலைகள் பற்றி. அதற்கு வேறு பல காரணங்கள், அதில் சிறுபான்மையோர் சமுதாயம் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். பழனியில் நடந்த சம்பவம். இப்ராகிம் கொலை செய்யப்பட்டார். அது விசாரணையில் இருக்கிறது, ஆதனால் அதன் உள்ளே செல்ல விரும்பவில்லை. விசாரணை நடக்கட்டும்; என்ன நடைபெற்றது என்பது வெளியே வரட்டும்; அது இந்த நாட்டுக்குத் தெரியட்டும்.

தாய்க் குலத்தை. தாய்க் குலத்தின் மானத்தைக் காக்க நான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருக்கிறேன் என்று நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அடிக்கடி கூறுகிறார்கள். ஆனால் ஜீனத் உன்னிசா பேகம் போலீஸ் ஸ்டேஷனில் ** மானபங்கப்படுத்தப் பட்டார்.

** ** **

[நண்பகல் 12—00]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது அவர்களே சொன்னார்கள் அது விசாரணையில் இருக்கிறது என்று. ஆகவே அதன் உள்ளே போக விரும்பவில்லை என்று அவரே சொல்லிவிட்டு என்னென்ன தகவல்களை இங்கே பேசக்கூடாதோ அவற்றை இங்கே பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை உங்களது கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. லத்திப்: தலைவரவர்களே, திரு. இப்ராகிம் என்பவர் பற்றிய பிரச்சினை தான் வழக்கு மன்றத்திலே இருப்பதாகச் சொன்னேன். அந்தப் பிரச்சினைக்குள் போக விரும்பவில்லை. ஆனால், ஒரு பெண் மானபங்கப்படுத்தப்பட்ட விஷயத்தைத்தான் சொல்ல விரும்புகிறேன். இந்த விஷயம் முதல்வருக்குத் தெரியவேண்டும் என்பதற்காகத்தான் சொன்னேனே அன்றி வேறல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெண்களின் மானம் காக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். இந்த மாதிரி செயல்கள் இனிமேலாவது நடைபெறாமல் இருக்கவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அடுத்து அம்மாபட்டினம் என்ற ஊர் புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கி தாலுக்காவில் இருக்கிறது. இது நம்முடைய மாண்புமிகு துணைத்தலைவரவர்களுக்கும் தெரியும்,

* * *

திரு. கூத்தகுடி. ச. சண்முகம்: தலைவரவர்களே * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * *

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, இதனை முதல் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகச் சொல்கிறேன் ....

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இதனை இதுபற்றி நீங்களே சொல்லிவிட்டீர்கள், ஆகவே இதனை குறிப்பேட்டில் ஏறுவதற்கு தாங்கள் அனுமதிக்கப் போகிறீர்களா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * *

திரு. எம். ஏ. லத்தீப் : * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * *

திரு. க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் துணைத்தலைவராக இருக்கும்போது தலைவராக மட்டும் இருக்கமுடியுமே தவிர தொகுதி உறுப்பினராகவும் இடையில் பேசுவது என்பது தலைவராக இருந்து ஆற்றுகிற கடமைக்கு இடையூறாக அமையும். அடுத்து, தவறான செய்திகளை உறுப்பினர்கள் சொல்லவே கூடாது என்று—— அவர்கள் சொன்னது தவறு என்று தெரியுமானாலும் அப்படிச் சொல்லவே கூடாது என்று சொல்வது பாராளுமன்ற நடைமுறைக்கு உகந்ததல்ல, ஒருவேளை அது தவறாக இருந்தாலும் அதை மறுக்கலாமே தவிர பேசுகிறபோதே அந்தப் பேச்சையே பேச வேண்டாம் என்று சொல்லவேண்டிய அவசியமில்லை. பொதுவான முறையில் இப்படியும் ஒரு கருத்து இருக்கலாம் என்ற முறையில் அதை அனுமதிப்பதும் அதற்கு தேவையான மறுப்பை ஆளும் கட்சி சார்பில் மற்றவர்கள் தெரிவிக்கலாமே தவிர இப்போதே அதை நிறுத்துவது என்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு வழக்கில் சம்பந்தப்பட்டவர் நீதிபதியாகவும் இருக்க முடியாது சிவில், கிரிமினல் சட்டப்படி. அதை முதலிலேயே நான் சொல்லியிருக்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைப்படி நீக்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பழனி சம்பவம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் இங்கே எடுத்துரைத்தார்கள். இப்ராகிம் கொலை செய்யப்பட்டது பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அதே நேரத்திலே இப்ராகிமின் அனைவியார் ஜீனத் உன்னிஸா பேகம் அவர்களைப் பற்றியும் திரு. லத்தீப் அவர்கள் எடுத்துச் சொல்லி ஒரு கருத்தை இங்கே ஆணித்தரமாக எடுத்து வைத்து பேசிய நேரத்தில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் குறுக்கிட்டுச் சொன்னார்கள். ஆனால் துணைத் தலைவர் அவர்கள் அதற்கு இதுவரை தீர்ப்புக் கூறவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் பேசிய அந்த வாசகம் இங்கே இடம் பெறலாமா என்பதையும் அப்படி இடம் பெற்று பத்திரிகையில் வெளிவந்தால் அது பெண்ணமைக்கும் அதே நேரத்தில் சிறுபான்மை வகுப்பாரைச் சேர்ந்தவர்களுக்கு எவ்வளவு அவலத்தை ஏற்படுத்தும் என்பதைப்பற்றியும் நினைவு கூர்ந்து சொல்ல வேண்டும். அந்த நேரத்தில் அந்தச் சம்பவத்தைப் பொறுத்த வரையில் நானும் நமது மாண்புமிகு இராஜா முகமது அவர்களும் அந்த இடத்திற்கு, அவர்கள் வாழ்ந்த இடத்திற்கு சென்றிருந்தோம். அவர்கள் எங்களிடம் தெரிவிக்கிற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் சொன்னது போல் எங்களிடத்தில் சொல்லவில்லை என்பதையும் நான் பணிவன்போடு எடுத்துக்கூற விரும்புகிறேன். மேலும் ஒரு வழக்கு பெண்டிங்கில் இருக்கும் போது சப் ஜூடிஸ் ஆகிவிடக் கூடாது என்பதையும் கவனித்துக் கருத்துக்களைச் சொல்லவேண்டும். திரு. லத்தீப் அவர்கள் என்னை விட சிறந்த வழக்கறிஞர். ஹைக்கோர்ட்டில் கூட வழக்காடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு நன்கு தெரியும். ஒரு வழக்கு ரெஜிஸ்டர் செய்யப்பட்டுவிட்டாலே, எப். ஐ. ஆர் போட்டுவிட்டால் it is pending before a Court of Law. பெண்டிங்கில் இருக்கும் போது அந்த வழக்கு பற்றி பேசுவது சரியாகயிருக்காது. ஆகவே அந்த வாசகங்களை எடுத்து விடுமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் இது [illegible] என்று சொன்னார்கள். அதே நேரத்தில் நான் ஒரு வழக்கறிஞர் என்பதையும் குறிப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் பணிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால், எங்கே சொல்லவேண்டும், சட்டப்படி எங்கே சொல்லக்கூடாது என்று தெரிந்துதான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். [illegible] சொல்லிக் கொண்டே போனால் இந்த அவையில் பேசவே முடியாது. [illegible] இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. நான் பொறுப்புணர்வோடுதான் கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இதை அகற்ற வேண்டும், அதை அகற்ற வேண்டும் என்று சொன்னால் எதைப் பேசுவது என்று தெரிய

வில்லை. பொறுப்புணர்வோடுதான் எங்கு எதைச் சொல்ல வேண்டுமோ அதைச் சொல்லிவருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கூத்தகுடி சண்முகம் அவர்களும் சொன்னார்கள். நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்காகச் சொன்னேனே தவிர வகுப்புக் கலவரம் என்ற பட்டியலில் கொண்டு வந்து சொல்லவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * * * * என்று சொல்வதுபோல் சொல்வது அங்கே பிரச்னைகளை உண்டாக்கும் என்று நான் கருதுவதால் நீங்கள் சொன்னது, திரு. கூத்தகுடி சண்முகம் அவர்கள் சொன்னது, அதைத் தொடர்ந்து நான் சொன்னது எல்லாவற்றையும் குறிப்பேட்டிலிருந்து நீக்கும்படி ஆணையிடுகிறேன்.

அமைச்சர் அவர்கள் எழுப்பிய பிரச்னை குறித்து, திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் அப்போது இருந்தார்கள். சட்டசபைக் குறிப்பைப் பார்த்துவிட்டு அதில் தவறு இருந்தால் பின்னால் தீர்ப்பளிக்கிறேன். அதுவரை இந்தப் பிரச்னை குறித்து பத்திரிகைகளில் வெளியிடவேண்டாம் என்று நிருபர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-10]

திரு. எம். ஏ. லத்திப் : சரி இருக்கட்டும். மைனாரிட்டிகள் பிரச்னை தான் இது. அதுதான் நடந்து கொண்டிருக்கிறது. நன்றி.

அடுத்து, லால்பேட்டை, அங்கு என்ன நடந்தது. அமைச்சர் ஒருவர் போகிறார். பொதுக்கூட்டத்தில் பேசுகிறார். அரசியல் ரீதியாக என்னவெல்லாமோ நடக்கிறது. போலீஸ் பல முஸ்லிம்களைக் கைது செய்கிறது. எப்போது? அமைச்சர் கூட்டத்தில் பேசிவிட்டு போனபின்னால் பலமணி நேரம் கழித்து, இரவில் அவரவர்கள் வீட்டில் படுத்துக் கொண்டிருக்கும்போது, அங்குள்ள முஸ்லீம்களைக் கைது செய்து கொண்டு போகிறார்கள். இதுபற்றி வழக்குக்காக இப்போது கோர்ட்டுக்குப் போய் கொண்டிருக்கிறார்கள். இது எந்த அளவுக்கு ஆக்கப்படுகிறது என்றால், சிறுபான்மை சமூகத்தினரைச் சேர்ந்தவர்கள் இந்த அளவுக்கு நடத்தப்படுகிறார்கள் இவ்வளவு கொடுமைக்கு ஆளாக்கப்படுவது நாட்டுக்கு நல்லது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது போன்று கடையநல்லூரில் ஏதோ நடந்தது. முதலமைச்சர் அவர்கள் கூட சொன்னார்கள். அங்கு போலீஸ்காரர்கள் மசூதிக்குள் நுழைந்து, தொழுகை நடந்துகொண்டிருந்த

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நேரத்தில் உள்ளே நுழைந்து அங்குள்ளவர்களை விரட்டியடித்திருக்கிறார்கள். அன்று இரவு முழுவதும் பூட்ஸ் காலோடு அந்த மசூதிக்குள் இருந்திருக்கிறார்கள். இந்த அளவுக்கு மசூதியில் அணுகவேண்டுமா என்பதைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசனங்களைப்பற்றி சொல்வதாக இருந்தால் இப்போது அரிசனங்களுக்கு பல கொடுமைகள் நடந்துவருகின்றன. விழுப்புரத்தில் நடந்த கலவரம். இதைப்பற்றி விரிவாக நான் பேசவில்லை. இதற்காக போடப்பட்ட கமிஷனின் அறிக்கை இன்னும் வரவில்லை. ஆனால் இதைப்பற்றி நாம் எல்லோரும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நாட்டில் பல இடங்களில் அரிசனங்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள். இப்படிப்பட்ட வன்முறைச் செயல்கள், சமூக விரோதச் செயல்கள் தூண்டி விடப்படுமானால், தாழ்த்தப்பட்ட குடிமகன் சார்ந்திருக்கின்ற சமுதாயம் மேம்பாடு அடைய தடைக்கல்லாக அமைந்துவிடும். அரசு இதைப்பற்றி தீவிரமாக சிந்தித்து கவனித்துப் பார்க்க வேண்டும்.

ராணிப்பேட்டை நிகழ்ச்சிகள். இதையும் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நேற்றைய தினம்கூட அதைப்பற்றி இங்கு எடுத்துச் சொன்னார்கள். ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தில், சுடுகாட்டிற்குச் செல்லுகின்ற வழியில் அரிசனங்கள் தாக்கப்படுகிறார்கள் என்பதைச் சொன்னார்கள். இந்த நிலையை மாற்றுவதற்கு அரசு தீவிர கவனம் செலுத்தவேண்டும்.

அரிசனங்களாக இருப்பவர்கள், கிறிஸ்தவர்களாக மாறுகின்ற போது, பொருளாதார அடிப்படையில் எதையும் பார்க்காமல், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் சலுகைகள் இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே தாழ்த்தப்பட்ட மகன் கிறிஸ்தவராக மாறுவதால், தாழ்த்தப்பட்ட மக்களாகக் கருதப்படமாட்டார்கள் என்று சொல்வது, சமுதாய சத்வேகத்திற்கும் நல்லது அல்ல, ஜனநாயகத்திற்கும் நல்லதல்ல.

அடுத்து ஆங்கிலோ இந்தியர்கள். முன்பு அவர்கள் நல்ல உத்தியோகத்தில் இருந்தார்கள். குறிப்பாக பெரியமேடு பகுதியில் இந்த ஆங்கிலோ இந்தியர்கள் அதிகமாக வாழ்கிறார்கள். நான் அங்கேதான் இருக்கிறேன். நான் இருக்கும் வீடு கூட அவர்கள் வசிக்கும் பகுதியில்தான் இருக்கிறது. அவர்கள் இப்போது எந்தவிதமான வேலையும் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்த நிலையில் யாரும் காப்பாற்றுவாரற்ற நிலையில் இருப்பது நாட்டுக்கு நல்லதல்ல என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, நமது முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட இடங்களில் சென்று பாதிக்கப்பட்டப் மக்களை பார்த்துவந்தார்கள். சிவகாசிக்குச் சென்றார்கள். ஊட்டிக்குச் சென்றார்கள் ராமேசுவரம் சென்றார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில்

சுற்றுப்பயணம் செய்தார்கள். அங்கு பாதிக்கப்பட்டவர்களுக்கெல்லாம் 5000 ரூபாய், 1000 ரூபாய் என்றெல்லாம் வழங்கிவிட்டு வந்தார்கள், இங்கு சென்னையில் 50 கிலோ அரிசி கொடுத்தார்கள். சென்னை நகரத்தில் பாதிக்கப்பட்ட இடங்களை எல்லாம் சுற்றிப்பார்த்தார்கள். அதற்காக மகிழ்ச்சி அடைகிறேன். அதே நேரத்தில் வாணியம்பாடியில் வெள்ளச்சேதம் ஏற்பட்டு மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார்கள். 700 வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. அமைச்சர் சோமசுந்தரம் அவர்கள் இந்த இடத்திற்கு வந்து பார்வையிட்டார்கள். நான் அவர்களை அழைத்துச் சென்றிருந்தேன். பல உதவிகளைச் செய்வதாக சொன்னார்கள். ஆனால் இது வரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, நாட்டில் இப்படிப்பட்ட ஒரு கொடுமை நடந்திருக்கிறது. இதற்காக ஆறுதல் வார்த்தை, அனுதாப வார்த்தை எதையாவது முதலமைச்சர் அவர்கள் சொன்னார்களா என்றால் இல்லை.

பேரணாம்பட்டு கலவரம் பற்றி எல்லோருக்கும் தெரியும். நான் யாரைப்பற்றியும், எந்த சமுதாயத்தினரையும் குற்றஞ்சாட்டுவதற்கு தயாராக இல்லை. ஆனால் இதையொட்டி பேரணாம்பட்டுக்கு யார் யாரெல்லாமோ வருகிறார்கள், ஒரு அம்மையார் உயிரோடு கொளுத்தப்பட்டிருக்கிறார். 300 வீடுகள் கொளுத்தப்பட்டிருக்கின்றன. ஒன்றரை கோடி ரூபாய் அளவுக்கு சிறுபான்மை சமுதாயத்தை சேர்ந்தவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

அங்கே யார் யாரோ வருகிறார்கள். டெல்லியிலே இருந்து ஜும்மா மசூதியின் தலைவர் இமாம் அங்கே பார்க்கவருகிறார். மைனாரிட்டி கமிஷன் தலைவர் அன்சாரி அவர்கள் அங்கே வருகிறார்கள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் அவர்கள் டெல்லியிலே இருந்து வருகிறார்கள். ஆனால், இந்தத் தமிழகத்தின் முதல்வர் அவர்கள் அங்கே வந்து பார்த்தார்களா, என்றால் இல்லை. அன்சாரி அவர்கள்கூட முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்தபோது கேட்டிருக்கிறார்கள், நீங்கள் அங்கே போய்ப் பார்க்கவேண்டுமென்று. அதற்கு முதலமைச்சர் அவர்களும் பதிலளித்திருக்கிறார்கள், அதற்கு மேல் என்ன நடந்தது என்பதைப்பற்றி நான் இந்த அவையிலே சொல்ல விரும்பவில்லை, இதைத் தவிர, இந்த மேலவையிலே முதல்வர் அவர்கள் நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு பேசும்போது நான் பேரணாம்பட்டுக்குச் சென்றிருக்கிறேன்; செல்வேன் என்ற வாக்குறுதியையும் தந்திருக்கிறார்கள். ஆனால் என்ன ஆயிற்று? இன்று வரையில் செல்லவில்லை. இதை நினைத்துப் பார்க்கும்போது இந்த அரசு எவ்வளவு தூரம் மைனாரிட்டி சமுதாயத்தின் மீது அக்கறை காட்டுகிறது என்பதைத் தெரிந்துகொள்ள முடியுமென்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உத்திர பிரதேச மாநிலத்திலே, அலிகாரில் கலவர சம்பவம் நடந்தபோது, இந்த மைனாரிட்டி கமிஷன் ரிப்போர்ட்டு அங்கே சமர்பிக்கப்பட்டபோது, அந்த உத்திரப் பிரதேச முதல்வர் நரேஷ் யாதவ் அவர்கள் அதற்குப் பதில் கொடுத்திருக்கிறார். நமது பாரதப் பிரதமர் அவர்கள் அதற்குப் பதில் கொடுத்திருக்கிறார்கள் அதற்கு விளக்கமும் கொடுத்திருக்கிறார்கள். அந்த முதல்வர் ராம் நரேஷ் யாதவ் அவர்கள் பதில் கொடுத்ததோடு மட்டுமல்லாமல், இந்த அரசு அந்தப் பரிந்துரையையும் ஏற்றுக்கொள்ளும் என்று பதில் கொடுத்திருக்கிறார்கள். அன்சாரி அவர்கள் மிகவும் வருத்தப்பட்டு, இந்த மைனாரிட்டி கமிஷன் ரிப்போர்ட்டிலே சொல்லுகிறார்கள். தமிழக அரசு மட்டும்தான் இதற்கு பதில் கொடுக்காமல் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் உங்களுடைய அறிக்கை வந்து சேர்ந்தது என்ற பதிலைச் சொல்வதற்குகூட தமிழக அரசாங்கம் முன்வரவில்லை என்பதை மிகவும் வருத்தத்தோடு சுட்டிக் காட்டியிருக்கிறார்.

'இந்து' பத்திரிக்கையிலே பிப்ரவரி 15-ஆம் தேதி வந்துள்ள அறிக்கையைப் பார்க்கலாம். "Minority panel wants to publish its findings" தமிழக முதல்வர் அவர்கள் மீது பகிரங்கமாகவே குற்றம்சாட்டியிருக்கிறார்கள். மைனாரிட்டிகளுக்கு விரோதமான இந்த அரசாங்கம் இப்படி அனுப்பப்பட்ட அறிக்கை அவர்களுக்கு வந்து சேர்ந்தது என்பதற்குகூட ஒரு 'அக்னாலெஜ்மென்ட்' கூட அவர்கள் அனுப்பவில்லை என்பதைச் சுட்டிக் காட்டும்போது, இந்த அரசாங்கம் மைனாரிட்டிகளை மதிக்கவில்லை என்பதற்கு இதைவிட என்ன ஆதாரம் இருக்க முடியும் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். முதல் அமைச்சர் அவர்களைச் சாட வேண்டுமென்பதற்காக இதை நான் சொல்லவில்லை. அவர்கள் சிந்தனையைத் தூண்ட வேண்டுமென்பதற்காகத்தான். எனவே, இதை முதல் அமைச்சர் அவர்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு இந்த வகுப்புக் கலவரங்கள் நடைபெறுவதை எப்படித் தடுக்க வேண்டுமென்பதற்கு பல்வேறு காரணங்கள், பல்வேறு வழிவகைகள் சொல்லியிருக்கிறார்கள். நான் அதைத் தான் அன்றைக்குகூட சொன்னேன். அப்படிச் சொன்னதும் முதல் அமைச்சர் அவர்களுக்கு கோபம் வந்தது. நான் மைனாரிட்டி முஸ்லிம்கள் சார்பிலே [illegible] வந்திருக்கிறேன். மைனாரிட்டியைப் பற்றிப் பேசுகிறேன் என்று [illegible], மற்றவர்கள் மீது அக்கறை இல்லை என்பதல்ல. இங்கே [illegible] பல கொடுத்திருக்கிறார்கள். [illegible] பிரச்னை பற்றியும், சட்டம் ஒழுங்கு பற்றியும், மைனாரிட்டி சமுதாயத்தினர் பற்றியும் கொடுத்திருக்கிறார்கள். [illegible] யென்றால், இது [illegible] ஒவ்வொருவரும் பகிர்ந்து [illegible], ஒவ்வொருவரும் அவருக்குள்ள பொறுப்பைத் தட்டிக் கழிப்பதாகாது. பொறுப்பை

ஒவ்வொருவரும் பகிர்ந்து கொள்கிறார்கள் என்று அர்த்தம்'; அப்படி அல்லாமல், பிறவற்றின் மேல் அவர்களுக்கு 'இண்டரஸ்ட்' இல்லை என்று அர்த்தமல்ல. அந்த அளவிலேதான் இந்த மைனாரிட்டி சமுதாயத்தினரைப் பற்றியதை நான் பிரிந்துக் கொண்டிருக்கிறேன். அதாவது லேபரைப் பகிர்ந்து கொண்டிருக்கிறோம், அவ்வளவுதான். எனவே, முஸ்லிம் லீக் யாருக்கும் விரோதமான கட்சியல்ல.

நான் பேசினால். முதல் அமைச்சர் அவர்கள் இப்படி சிறுபான்மையோர், பெரும் பான்மையோர் என்றெல்லாம் பேசலாமா என்று சொல்வார்கள். அது அவருடைய கருத்து. நான் அவருடைய கருத்திற்கு குறுக்கே நிற்க விரும்பவில்லை. ஆனால், இந்த மைனாரிட்டி சமுதாயத்தினரைப் பற்றி 1965-லே லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் பிரதமராக இருந்தபோது, எல்லா மாநிலங்களுக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பினார்கள். அதிலே, வகுப்புக் கலவரங்களுக்குக் காரணம் முஸ்லிம்களுக்கு போலீஸ் துறையிலே போதிய பிரதிநிதித்துவம் தரப்பட வேண்டும். அவர்களுக்கு அதற்கான யோக்கியதாம்சம் இல்லா விட்டாலும், 'எக்ஸெம்ஷன்' அதாவது விதிவிலக்கு கொடுத்தாவது உதவ வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் ஒரு மாநிலத்திலே 1 சதவிகிதம் என்று இருந்தாலும், 10 சதவிகிதம் அளவுக்கு அவர்களுக்கு இதிலே பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென 1965-லே லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

[பிற்பகல் 12-20]

அதுமட்டுமல்ல, 1944—ம் ஆண்டிலேயே சர் தேஜ் பகதூர் சாப்ருவின் தலைமையில் காங்கிரஸ் கட்சி இருந்தபோது ஒரு கமிட்டியை அமைத்தார்கள். அந்தக் கமிட்டி. சிபாரிசுகளை செய்திருக்கிறது. எல்லா மாநிலங்களையும் காங்கிரஸ் கட்சி அன்றைக்கு வேண்டிக்கொண்டது. முஸ்லிம்களுக்கு குறைந்த பட்சம் 10 சதவிகிதம் போலீஸ் துறையில் வேலை வாய்ப்புக் கொடுக்கவேண்டும், பாரபட்சம் என்பதனால் அல்ல, அந்தச் சமுதாயத்திற்கு ஒரு அமைதி உணர்வு வேண்டும், பாதுகாப்பு உணர்வு வேண்டும் என்று அந்தக் கமிட்டி அன்றைக்கே பரிந்துரை செய்தது.

இந்தப் பிரச்னை பாராளுமன்றத்தில் வந்தபோது நம்முடைய மாண்புமிகு பிரதம அமைச்சர் தேசாய் அவர்கள் மிகத்தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர் சொன்ன கருத்து இந்து பத்திரிகையில் டிசம்பர் 6-ல் வெளியாகியிருக்கிறது—

"The previous Government did not give adequate representation to the minorities on the police forces. I am trying to see that all communities are given adequate representation in all police forces in the country" (The Hindu December 6, 1978) என்று பிரதமர் அவர்கள் சொல்லியிருக்கிறார்.

அதே போல் நம்முடைய இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சொல்லுகிறார்கள்—

"She claimed that during the Congress rule, it was the Government's policy to take a larger number of Muslim personnel in police and other services. Whenever new industries were established, she had specially spoken to the authorities about the need to give preference to the Muslims and weaker sections who might have been dislodged in the process." என்று

இவற்றை இந்த அரசுக்கு நான் எடுத்துக் காட்டுகிறேன். இதை ஏற்றுக்கொள்வதும், மறுப்பதும் உங்கள் உரிமை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பத்திரிகைகளிலிருந்து படிக்க அவற்றைச் சபாநாயகர் அவர்களிடம் காட்டி அனுமதி பெற்றிருக்கிறீர்களா ?

திரு. எம். ஏ. லத்தீப் : ஸ்பீக்கர் பர்மிஷன் வாங்கியிருக்கிறேன், I have obtained the consent of the Hon. Speaker. Moreover, I am not reading anything objectionable. It is a thing which has been published in the newspapers. It is a thing which has been published and it is a public document from which I have read over to House.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எந்தப் பத்திரிகை என்று சொல்லிப் பேசுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : இந்து பத்திரிகை, தேதி எல்லாம் சொல்லியிருக்கிறேன்.

ஆகையால் அரசு இதைக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய யூனியன் பெட்ரோலியம் மினிஸ்டர் மாண்புமிகு பகுகுணா அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக அதை நான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு வைக்கிறேன்—

"Chief Minister should be sacked for repeated communal riots" (The Hindu, Monday, December 4, 1978)

ஒரு மாநிலத்தில் தொடர்ந்து வகுப்புக் கலவரங்கள் நடக்குமானால் அந்த மாநிலத்துடைய முதல்வர் முதலில் டிஸ்மிஸ் செய்யப்பட வேண்டுமென்று மத்திய பெட்ரோலிய அமைச்சர் மாண்புமிகு பகுகுணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது திங்கட்கிழமை, டிசம்பர் 4, 1978 இந்து பத்திரிகையில் வந்திருக்கிறது.

ஆகையால் இந்த உணர்வுகளை எல்லாம் உங்களை '[illegible]' செய்ய வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. நாட்டில் இருப்பவர்களுடைய உணர்வுகளை நீங்கள் தெரிந்து கொள்ள

வேண்டுமென்பதற்காகத்தான் எடுத்துக் கூறுகிறேன். பெரும்பான்மையினருக்கு வாழ்வு சிறுபான்மையினருக்கு இல்லை என்ற நிலை இருப்பதைத் தட்டிக்கேட்க ஆள் இல்லை. வக்கு இல்லை. வகை இல்லை என்று நினைத்துக் கொண்டிருந்தீர்களானால் கடந்த கால சரித்திரத்தை நினைவில் வைத்துக் கொள்வது நல்லது. வகுப்புக் கலவரங்கள் தொடர்ந்து ஒரு மாநிலத்தில் நீடிக்குமானால் அந்த மாநில முதலமைச்சரையே டிஸ்மிஸ் செய்ய வேண்டுமென்ற கருத்து உருவாகியிருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

சிறுபான்மையினருக்காக ஏற்படுத்தப்பட்டிருப்பது வக்ப் என்ற அமைப்பு. வக்ப் என்பது என்ன? ஒரு தார்மிக அடிப்படையில் ஒழுக்கத்தையும், இறை நிதியையும், நல்ல பண்புகளையும், மார்க்க உணர்வுகளையும் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக நல்லோர்களால், தான் பெற்ற இன்பத்தை, வாய்ப்பை, செல்வத்தை எல்லாம் நிரந்தரமாக சமுதாய மேம்பாட்டுக்காகவும் ஒழுக்கத்திற்காகவும் பயன்பட வேண்டுமென்பதற்காக இறைவன் பால் கொடுக்கப்படுகிற சொத்து. இன்றைக்கு என்ன நடந்திருக்கிறது? வக்ப் துறை அமைச்சர் நான் என்னமோ பேசினேன் என்று திரும்பத் திரும்பப் பேசினார். நான் என்ன சொன்னேன்? வக்ப் துறையைச் செம்மைப்படுத்த வேண்டுமென்று சொன்னேன். அதை ஏற்றுக் கொள்வதாகச் சொன்னார்கள். எப்படி செம்மைபடுத்தியிருக்கிறார்கள். வக்ப் துறை தலைவரைப் பற்றி எனக்குத் தெரியாது. பத்திரிகையிலே பல விஷயங்கள் வந்திருக்கின்றன. நான் மற்றவர்களின் குறையைத் தேடிக் கொண்டு அலையக் கூடியவன் அல்ல, குறையுடையவர்களை, *** *** *** ** *** *** என்பதையும் மாண்புமிகு முதலமைச்சர் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

சட்டம் ஒழுங்கைப் பற்றி இங்கே பலவாறு பேசப்பட்டது. தமிழகத்திலே சட்டமன்றத்திலே எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற ஒருவர் பயங்கரமாக பட்டப்பகலிலே தாக்கப்படுகிற முறையிலே அவர் மீது உளி வீசப்படுகிறபோது—உளி வீசியவர் உங்கள் கட்சியைச் சேர்ந்தவரா இல்லையா என்பது பிரச்னையல்ல அப்படிப் பேசியிருந்தால் அரசியல் ரீதியாகப் பதில் கொடுக்கலாம்—ஆனால் அதைக் கிண்டல் செய்கிறபோது அது உளியா, ஒளியா, கிளியா என்றெல்லாம் கேலி பேசினால் சரித்திரம் மாறும். இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறவர்கள் அங்கே உட்காருவார்கள், அங்கே உட்காருகிறவர்கள் இங்கே வந்து உட்காருவார்கள், நாம் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறோம், காலம் என்பது கரணம் போன்று சுழன்று மேலது

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

கீழும், கீழது மேலும் மாறும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். கலைஞர் மீது வீசப்பட்ட உளி— அவர் தனிப்பட்ட மனிதர் என்ற முறையில் அல்ல, மாண்புமிகு முதலமைச்சர் யார், மாண்புமிகு இராமச்சந்திரன் யார், மாண்புமிகு கிருஷ்ணசாமி யார்— கலைஞர் மீது உளி வீசப்படுகிறது என்று சொன்னால் தமிழகமே ஆர்த்தெழாதா? உங்களால் மதிக்கப்பட்ட தலைவர், இன்றைக்கு வேண்டுமானால் மாறுதல்கள் இருக்கலாம்—ஒரு நாளைக்கு அவர்கள் அங்கே வந்து உட்காரலாம். எங்களுக்குத் தெரியும் — அவர் மீது உளி வீசப்படுகிறது என்று சொன்னால் ஏன் அந்த நபர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை, நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள், கலைஞருக்கு ஏதாவது ஏற்பட்டால் தமிழகத்திலே மிகப்பயங்கரமான நிலைமை ஏற்படும். இந்த ஆட்சி தானே தன்னுடைய முடிவைத்தேடும் முயற்சியாகத்தான் இருக்கும், கலைஞருக்கு ஆபத்து ஏற்பட்டால் அது இந்த ஆட்சித் தனக்குத் தானே வைத்துக் கொள்ளும் வேட்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: தாங்கள் பேசிக் கொண்டே வருகிறபோது அமைச்சரவையைப் பற்றியும் அரசைப் பற்றியும் குற்றஞ்சாட்டுவதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் வக்ப் போர்டு தலைவர் பற்றி ஏதோ பத்திரிகையிலே வந்த செய்தி என்று சொல்லி— பத்திரிகை பெயரைக் கூடச் சொல்லவில்லை. அவருடைய சொந்த வாழ்க்கையைத் தனித் தனி வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிட்டீர்கள்.

THIRU M. A. LATHEEF: He is not an ordinary man. He is the Chairman of the Board. The Government cannot be irresponsible. The Minister is responsible. You cannot have a person as Chairman who is not a Muslim....

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: வெளியே இருக்கிற ஒருவரைப் பற்றி இந்தச் சட்ட மன்றத்திலே வந்து பதில் சொல்லக்கூடிய நிலையிலே இல்லாத ஒருவரைப்பற்றிப் பேசக் கூடாது என்பது மரபு அந்த மரபை நாம் பின்பற்றி வந்திருக்கிறோம், வக்ப் போர்டு தலைவர் பற்றி அவருடைய சொந்த வாழ்க்கையைப்பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள்.

வக்ப் போர்ட் சேர்மனைப்பற்றி, அவரது தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி நீங்கள் சொன்னதைச் சபைக் குறிப்பிலேயிருந்தும், பத்திரிகைகளிலும் நீக்கும்படி உத்தரவிடுகிறேன். தொடர்ந்து நீங்கள் பேசுங்கள்.

[பிற்பகல் 12-30]

THIRU M. A. LATHEEF: I object. This is not the way in which the business of the House should be carried on. After all the Minister who is responsible is there on the floor of the House. The person about whom I mentioned is the Chairman of the Board...

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : அமைச்சர் இருந்தாலும் நான் சொல்லக்கூடாது என்பது அல்ல உங்களுக்கு தெரியும் எனக்கும் ரூல்ஸ் பற்றித் தெரியும். நான் சொல்ல முடியாது என்பது அல்ல. நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவை துணைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் லத்திப் அவர்கள் கொஞ்சம் ஆத்திரத்தோடு பேசுகிறார்கள். (குறுக்கீடு) ஆத்திரம் இல்லாமல் இந்தப் பிரச்னையை பார்த்தால் புரியும். வக்ப் வாரியத் தலைவரை, விதிகளுக்கு உட்பட்டுத்தான் நியமித்திருக்கிறோம். யார் யார் வக்ப் வாரிய உறுப்பினர்களாவதற்குத் தகுதி பெற்றிருக்கிறார்கள் என்ற விதியின்படிதான் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் மீது தனிப்பட்ட முறையில் குற்றம் சொல்வதானால் அவருக்குப் பதில் சொல்வதற்கு வாய்ப்பு இல்லை. (குறுக்கீடு) உட்கார்ந்து கொண்டே மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இங்கே பொதுக்கூட்டம் நடக்கவில்லை. (குறுக்கீடு) பொதுக்கூட்டம் மாதிரி ஆகிவிட்டது, அது வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : தயவு செய்து உங்களுக்கிடையே பேசிக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது , உங்கள் அனுமதி பெற்று அவர் பேசுவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் நான் பேசிக்கொண்டிருக்கும் பொழுது நேரடியாகவே உட்கார்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்.

வக்ப் வாரியத் தலைவரை நியமிப்பதற்குப் பரிசீலிக்கப்பட்டு, சட்டப்படிதான் அவர் நியமிக்கப் பட்டிருக்கிறார். அவரது சட்டப்பூர்வமான பணிகளில் ஆதாரப்பூர்வமான குறைபாடுகள் அல்லது குற்றச்சாட்டுகள் இருந்தால் சொல்லலாமே தவிர, ஏதோ நான் கேள்விப்பட்டேன் என்ற முறையிலே அதுவும் இந்த அவையிலே இல்லாத ஒருவரைப்பற்றிப் பேசுவது முறையல்ல என்று சொல்லிக்கொள்கிறேன். அதுவும் குறிப்பேட்டிலேயிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குமேல், பொறுப்புள்ள அமைச்சர் இருக்கிறார் என்றெல்லாம் சொன்னால், வெளியே சமுதாயம் கவனித்துக்கொண்டிருக்கிறது, விவாதம் நடந்து கொண்டுதான் இருக்கிறது என்பதைத் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தங்கள் தீர்ப்பின் மேல் நான் எதுவும் சொல்லவில்லை. விதிகளின்படிதான் நியமிக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். அது தவறான செய்தி என்று சொல்ல விரும்புகிறேன். காரணம், தனிப்பட்ட நபரைப்

பற்றி விமர்சனம் செய்யக்கூடாது என்று அமைச்சரவர்களும் சொன்னார்கள், நீங்களும் சொன்னீர்கள். வக்ப் போர்டு தலைவராக நியமிப்பதற்குச் சில விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளின்படி அவர் இஸ்லாமியராக இருக்க வேண்டும். யார் இஸ்லாமியர் என்பதற்கு மொகமடியன் லாவில் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த விளக்கத்தின்படி பார்த்தால் அந்த அப்பாயிண்ட்மெண்ட் தவறாக இருக்கிறது என்பது தான் லத்திப் சாகிப்பின் வாதம்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : நீங்கள் சொல்வதைப் புரிந்து கொண்டேன். நீங்கள் தயவு செய்து உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது ; தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் ஒரு வழக்கறிஞர் தான். அவர்கள் சொல்கின்ற குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்பது மட்டுமல்ல, அவர் முஸ்லிம் அல்ல என்பதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. அவர் முஸ்லிம் என்ற அடிப்படையில் வக்ப் வாரியத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். நம்மிடத்தில் முகமடியன் லா இருக்கிறது, முல்லா விளக்கம் இருக்கிறது. அவர் கூறிய குற்றச்சாட்டுக்கள் ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுகள். அதை நான் மறுக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : நான் அதை சவாலாகச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : நான் பதில் சொல்லி விடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள், அமைச்சரவர்கள் அதை மறுக்கிறார்கள் அது உண்மையா இல்லையா என்ற பிரச்னைக்கு நான் போகவில்லை. நான் சொல்வது சட்டமன்றத்திலே நீங்கள் பேசும்பொழுது மாண்புமிகு உறுப்பினர் ஆதாரம் இருக்கிறது என்று கருதினால், அவருடைய தனி வாழ்க்கை அவர் வகிக்கும் பதவியை வகிக்கக்கூடாது என்ற அளவிலே பாதித்திருக்கிறது என்று கருதினால் அதைப்பற்றி எழுத்து மூலமாகக் கொடுத்து அனுமதி பெற்று பிறகு அந்தக் குற்றச்சாட்டைப்பற்றி பேச முடியும், எழுப்ப முடியும் என்ற விதியைத்தான் நான் சொல்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : விதி, நல்ல விதி——எங்களுடைய விதி, என்ன செய்வது ? என்ன விதியோ, என்னமோ தெரியவில்லை. எங்களுக்குத் தலைவிதி இருக்கிறது, ஒத்துக்கொள்கிறேன். நீங்கள் சட்டப்படிதான் நியமித்திருக்கிறீர்களா என்று நாங்கள் கேட்கிறோம். நீங்கள் சட்டப்படிதான் நியமித்திருக்கிறேன் என்று சொல்கிறீர்கள். நான் அதில் மாறுபடுகிறேன். இஸ்லாமிய ஷாரியத் சட்டத்திற்கு மாறுபட்டு நீங்கள் நியமித்திருக்கிறீர்கள் என்பது எங்களது வாதம். இல்லை, இல்லை,

ஷாரியத் சட்டத்திற்கு உட்பட்டுத்தான் நியமித்திருக்கிறோம் என்பது உங்களது வாதம். ஆனால், அதற்கு மாறுபட்டு சொல்வது என்னுடைய உரிமை, அதை மறுப்பது உங்களுடைய உரிமை. எங்களுடைய உரிமைப்படி சொல்கிறோம், அதை நாட்டுமக்கள் மறுக்கட்டும், சமுதாய மக்கள் தீர்க்கட்டும். அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை.

அடுத்து நிர்வாகக் குறுக்கீடுகள். மிகப் பயங்கரமான அளவுக்கு குறுக்கீடுகள் ஆரம்பமாகிவிட்டன. கொஞ்சகாலம் தான் இருந்தது, எல்லோரும் அப்பொழுது தூரமாக இருந்தார்கள். ஆனால் இப்பொழுது மிகப் பயங்கரமாக இருக்கிறது. தமிழகத்திலே எந்தக்காலத்திலும் அப்படி குறுக்கீடுகள் இருந்தது கிடையாது. அங்கெங்கெனாதபடி எங்கும் குறுக்கீடுகள் ஆரம்பமாகின்றன. சரி அது இருக்கட்டும், சட்ட மன்ற உறுப்பினர்கள் குறுக்கீடு இருக்கட்டும். சட்டமன்ற உறுப்பினராக இல்லாத, அமைச்சராக இல்லாத மூன்றாவது மனிதர்கள் நிர்வாகத்திலே குறுக்கிட ஆரம்பித்துவிட்டார்கள்.

நான் ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன். தூத்துக்குடியிலே ஸ்பிக் நிறுவனம் இருக்கிறது. அந்த நிறுவனத்தை இந்த அரசு என்றைக்காவது தேசியமயமாக்குமானால், நான் இன்றைக்குச் சொல்லி வைத்துவிடுகிறேன். அதனால்தான், தேசியமயமாக்க வேண்டுமென்ற கட்டாயங்கள் இந்த அரசின்மீது சுமத்தப்படுகின்றன. நான் குற்றச்சாட்டாகச் சொல்கிறேன். அதற்குக் காரணம், அந்த ஸ்பிக் நிறுவனத்திலே ஒரு வருஷத்திற்கு ரூ. 1 கோடிக்குமேல் நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த ஆட்சி ஏற்படுவதற்கு முந்தியே, நெருக்கடி காலத்திலேயே, அவர்கள் அந்த முயற்சியிலே இறங்கினார்கள். பூர்வாங்கமாக என்னென்ன செய்யவேண்டுமோ அதையெல்லாம் செய்தார்கள். அத்தோடு நிறுத்திக்கொள்கிறேன், நான்.

அடுத்து, இங்கே தொழில் துறைச் செயலாளராக இருந்த ஒருவர் மத்திய அரசாங்கத்திற்குப் போயிருக்கிறார். அவர் ஏன் போனார் என்பதற்கு இந்த அரசு—அது நிர்வாக சம்பந்தமான விஷயம். ஏற்கனவே போனவர், இப்பொழுது போயிருக்கிறார், இதெல்லாம் நிர்வாக சம்பந்தமான விஷயம் என்று சொல்லும். அப்படிப்பதில் சொன்னால் நான் அதற்கு பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். ஆகையினால், அவர் போனதிலே மிகப் பெரிய மர்மம் இருக்கிறது. அவர் இங்கேயிருந்து மத்திய அரசுக்குப் போனதிலே மிகப் பெரிய மர்மம் இருக்கிறது. அவர் தானாகப் போகவில்லை, போகவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவர் ஏன் போனார் என்பதை இந்த அரசு விளக்கட்டும். அப்படி விளக்கினால் நான் அதற்குப் பதில் தரத் தயாராக இருக்கிறேன் என்பதை மட்டும் சொல்லிக் கொள்கிறேன்.

தயவு செய்து முதலமைச்சரிடம் கேட்டுக் கொள்கிறேன் உங்களுடைய அமைச்சர்களை எங்கேயாவது கொண்டு போங்கள். உங்களுக்குத் துணையாக அழைத்துக் கொண்டு போங்கள். அமைச்சர்கள் உங்களுக்குத் துணையாக இருக்கட்டும். ஆனால், மூன்றாம் நபர், அவர் எவ்வளவு பெரிய வேண்டியவராக இருந்தாலும் அவர் அரசாங்க அதிகாரிகளைச் சந்தித்து கட்டளையிடக் கூடிய அளவுக்கு நாட்டிலே நிலைமை உருவாகுமானால், அது நாட்டுக்கும் நல்லதல்ல, முதல்வருக்கும் நல்லதல்ல. அதைத் தடுத்து நிறுத்தவேண்டும். அதைத் தடுத்து நிறுத்துவதுதான் அவருக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது என்பதற்காக சொல்கிறேன். மற்றவர்கள் அதைப்பற்றி பேசினால் விவரங்களைத் தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுக்கு ஒதுக்கி இருந்த நேரம் 12.30 வரை, 10 நிமிடம் அதிகமாகி விட்டது. சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : இடையில் குறுக்கீடுகள் இருந்ததால் நேரம் போய்விட்டது. நான் சீக்கிரம் முடித்துக்கொள்கிறேன்.

பெரியார் நூற்றாண்டு விழா கொண்டாடுகிறோம். வரவேற்கிறேன், நாமெல்லாம் வரவேற்கிறோம். நான் நூற்றாண்டிலே சமுதாய சேவை செய்ய வந்த 20 ஆம் தலைவர்களிலே ஒருவர் அவர். அவருக்கு நாம் தலைசிறந்த அஞ்சலி என்ன? அவருடைய தத்துவங்கள் செய்யும் நூற்றாண்டு விழாவிலேயா கொல்லப்பட வேண்டும். அவருடைய எவ்வளவு சிக்கனமானவர்? அவர் பணத்தை அவர் சிக்கனமாகச் செலவழித்து, கல்லூரிகளுக்காகவும், எவ்வளவு மனைகளுக்காகவும் செலவு செய்து மருத்துவ சாதாரணமாக வாழ்ந்த அவர் எவ்வளவு கொண்டாற்றினார். அந்தப் பெரியார் நூற்றாண்டு விழாவிலே சிக்கனமானவர்? ரூபாய் செலவழிக்க வேண்டுமா? முதல்வர் இலட்சக்கணக்கான வருகிறது, அந்த ஊர்வலத்தை முதல்வர் வருகிறார், ஊர்வலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள்திலகம் பார்க்கவேண்டும். பார்க்கவேண்டும். Queen Elizabat அல்ல. மக்கள் பிரதிநிதி பார்க்கவேண்டும். Not the British Mon rch but the representative of the people. முதல்வரைக் கஜோல் பண்ணுவதற்காக இப்படி செய்திருக்கிறார்கள். அவர் நின்று பார்ப்பதற்காக ரூ. 15,000-லே ஸ்டேஜ் போடப்படுகிறது. இங்கேயிருக்கிற அதிகாரிகள்— டெப்யூடி அவர்களிடத்திலே முதலமைச்சர் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் - வெட்டிக் கொண்டு வா, கட்டிக்கொண்டு வா என்று சொன்னால் கட்டிக்கொண்டு வருகிறார்களோ அவர்களிடத்திலே முதலமைச்சர் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். மேடை போடப்பட்டது வேலூரிலே,

[பிற்பகல் 12-10]

ரூ., 15,000 அவர் அங்கு வந்து நின்று போவதற்கு. அவர் வந்தாரா என்றால் இல்லை. யார் வந்தார்கள்? அமைந்திருந்திய

[திரு. எம். ஏ. லத்திப்] [1979 பிப்ரவரி 20

அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் பொதுச்செயலாளர், நடமாடும் பல்கலைக்கழகம் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் வந்தார்கள். புரட்சித் தலைவர் வரவில்லை. புரட்சித் தலைவர் வராத ஒன்றுக்கு மேடை அமைக்க ரூ. 15,000 செலவு, இது தேவைதானா என்று அங்கே மக்கள் பேசிக்கொள்கிறார்கள். சாப்பாட்டுக்கு வழியில்லை, உண்ண உணவில்லை என்று மக்கள் தவித்துக் கொண்டு இருக்கிறபோது, முதலமைச்சர் வந்து நிற்பதற்கு ரூ 15,000 செலவில் ஒரு மேடை அமைக்கவேண்டுமா? அது மட்டுமல்ல, மாவட்டத்தில், ஒவ்வொரு மாவட்டத்திலும் வியாபாரிகளிடமிருந்து பணம் வசூலிக்கப்படுகிறது. பல்வேறு காரணங்களுக்காக. பணம் வசூலிக்கக் கூடாது என்று சொல்கிற முதலமைச்சர் ஏன் இப்படி பலவேறு தலைப்பில் பணம் வசூலிக்க லைசென்சு கொடுக்கிறார் என்று கேட்கிறார்கள். தயவு செய்து இவற்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வேலூரில் பெரியார் விழா நடத்துவதற்கு 30 லட்ச ரூபாய் வசூலித்தார்கள். என்னிடத்தில் ஆதாரம் இருக்கிறது. ஒவ்வொரு துறையிலும், பஞ்சாயத்து யூனியனில் ரூ. 2,000 கொடுக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டு இருக்கிறார்கள். இது வசூலிக்கப்படத் தான் வேண்டுமா?

மாண்புமிகு திரு.ச. இராமச்சந்திரன் ; தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்திப் அவர்கள் பேசும்போது ரூ. 30 லட்சம் வேலூரில் நிதி திரட்டினார்கள், தந்தை பெரியார் விழாவிற்கு, அதற்கான ஆதாரங்கள் இருக்கிறது என்னிடம் என்று குறிப்பிட்டார்கள். இந்த ஆதாரத்தை தயவு செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. க. அரங்கநாதன் : தலைவரவர்களே, வேலூரில் தந்தை பெரியார் விழா நடைபெற்றபோது ரூ. 15,000 செலவில் மேடை போட்டார்கள் என்று சொன்னார்கள். அங்கே மேடை ஒன்றும் போடப்படவில்லை. மண்ணைத்தான் கூட்டி வைத்து இருந்தார்கள் அதற்கு ரூ. 15000 செலவாகவில்லை. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கட்சி மூலமாகவோ, அரசுத் துறை மூலமாகவோ எந்த நிதியையும் வசூலிக்கவில்லை.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, மணல் மேடு என்று சொன்னார்கள். அண்ணா மீது ஆணையாக அதைச் சொல்லமுடியுமா, அதுமணல் மேடு தானா என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்திப் : அவர்கள் மண் மேடு என்று சொன்னார்கள். அப்படியே வைத்துக்கொள்வோம். அரசாங்கக் கணக்கில் ரூ. 15,000 செலவானதாக எழுதப்பட்டு இருக்கிறது. மணல் மேடு கட்ட இவ்வளவு செலவாகுமா? அப்படியானால அதிலே ஏதோ ஊழல் நடந்து இருக்கிறது என்று தெரிகிறது. அதை ஒப்புக்கொண்டதற்கு மகிழ்ச்சி.

1979 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் ஆதாரம் இருப்பதாகச் சொன்னார்கள். அதை தயவு செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU M. A LATHEEF : I comes under the exclusive privilege of the Member. If I want I will give. If I do not want to give I cannot give.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவரவர்களே. இதே மன்றத்தில் இதே போல் ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வந்து விவாதிக்கப்பட்டபோது அன்றையதினம் இதைப்போல் ஆதாரம் இருக்கிறது, நீங்கள் வேண்டுமானால் விசாரணை வையுங்கள், நான் நிரூபிக்கிறேன் என்று சொன்னதற்கு, அப்போது நல்ல சுடச்சுட இன்றையதினம் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற டாக்டர் கலைஞர் அன்றையதினம் முதலமைச்சராக இருந்தபோது பதில் அளித்தது எனக்கு நினைவுக்கு வருகிறது. 'போகிற போக்கில் பொத்தாம் பொதுவில் புழுதிவாரி தூற்றிவிட்டு, ஆதாரம் இருக்கிறது என்று சொல்வதும், கேட்டால் விசாரணை நடத்துங்கள் பார்த்துக்கொள்வோம் என்று சொல்வதும் முறையல்ல' என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதையே நான் இப்போது வலியுறுத்தவிரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய பெயரை இழுத்த காரணத்தால் நான் விளக்கம் அளிக்கவேண்டியவனாக இருக்கிறேன். இங்கே நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வந்தபோது புழுதிவாரி பேசுகிற போக்கில் அன்றையதினம் வீசியர்கள் யார், யார் யார் மீது புழுதி வாரி வீசப்பட்டது, என்கிற நிலைமை எல்லாம் எப்படி இன்று மாறியிருக்கிறது என்பதை மேலே இருந்து சட்டமன்ற நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டு இருப்பவர்கள் நன்றாக உணர்வார்கள். ஆனால் ஆதாரங்களோடு நான் இங்கே வைத்தேனே, அதைப் பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

லத்திப் அவர்கள் 30 லட்சம் ரூபாய் என்று சொன்னது வேண்டுமானால் தொகை அதிகமாக இருக்கலாம். ஆனால் வேலூர் மாவட்டத்தில் பெரியார் விழாவின் பெயரால் கட்டாய வசூல் செய்யப்பட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது.

திரு. எம். ஏ. லத்திப் : அடுத்து, முதலமைச்சரவர்கள் முழுமையான முதலமைச்சராக இருக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய விருப்பம். முழுமையான முதலமைச்சர் என்றால் எப்போதும் அவர் முதலமைச்சராக இருக்க வேண்டுமென்பதில்லை; இருக்கின்ற வரையில் முழுமையாக இருக்க வேண்டுமென்பதுதான் எங்கள் விருப்பம். ஆனால் அவர் சினிமாவில் நடிக்கப் போகிறேன்; அதுதான் என்னுடைய தாய்வீடு என்று

சொல்லிக்கொண்டிருக்கிறார். இது ஒரு சந்தேகத்தை, ஒரு நிரந்தரமற்ற நிலைமையை உருவாக்கியிருக்கிறது. அந்த பேச்சு உண்மைதானா? அப்படியானால் அவர் முதலமைச்சராக இருந்து கொண்டே நடிக்கப்போகிறாரா என்பதைத் தெளிவாக்க வேண்டும்.

இன்னொன்றையும் முதலமைச்சர் சொல்லியிருக்கிறார். எனக்கு இன்கம்டாக்ஸ் அதிகமாக இருக்கிறது. அதை வேறு வழியில் என்னால் செலுத்த முடியாது. சினிமாவில் நடித்து அதிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தைக்கொண்டு இன்கம்டாக்ஸ் கட்டப்போகிறேன் என்று சொல்லியிருக்கிறார்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u> : துணைத் தலைவரவர்களே, முன்பே நான் இதை மறுத்திருக்கிறேன். மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதையே சொல்கிறார்கள். ஏன் என்று தெரியவில்லை.

<u>திரு. எம். ஏ. லத்திப்</u> ; எதை மறுத்திருக்கிறீர்கள்? சினிமாவுக்கு .....

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u> : என்னுடைய வருமான வரியைக் கட்டுவதற்காக முதலமைச்சர் பதவியில் இருந்துகொண்டு நடிக்கப் போகிறேன் என்று சொல்வதை மறுத்திருக்கிறேன்.

<u>திரு. எம். ஏ. லத்திப்</u> : அதை மறுத்திருக்கிறீர்கள். சினிமாவில் நடிக்கப் போகிறேன் என்பதை மறுக்கவில்லை. அப்படியானால் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் விதி 154, கிளாஸ் 1 - அதில் It offends Article 154 (1) of the Constitution which reads thus :

"The executive power of the state shall be vested in the Governor and shall be exercised by him either directly or through officers subordinate to him in accordance with this Constitution." 'Officers' என்று சொன்னால்—

it includes not only the civil servants but primarily the Chief Minister and the members of the Council of Ministers through whom only the Governor can discharge his executive functions. Therefore, the Chief Minister as well as other Ministers are Officers subordinate to the Constitutional head, the Governor. But the real executive power is vested in the Council of Ministers by virtue of article 166 (3) which is as follows:

"The Governor shall make rules for the more convenient transaction of the business of the government of the state, and for the allocation among ministers of the said business...."

இந்த ஆபீசர்ஸ் என்றால் யார் என்பதற்கு விளக்கம் சப் கிளாஸ் 3 விதி 166-லே தெளிவாக இருக்கிறது.

The chief Officer is head of the the Executive which controls all the executive power through whom only the Constitutional Head of the State, I mean the Governor, can exercise his executive power. He just separates his duties or places upon himself the duties which are not to be exercised by the Chief Minister.

அப்படி அவர் வேறு தொழில் செய்ய, இந்த சீஃப் மினிஸ்டர் என்ற தொழிலில் இருந்துகொண்டே, சினிமாவில் நடிக்கப் போனால் சினிமாவில் நடிப்பதை நான் குறை சொல்லவில்லை, அது அவரது விருப்பம், அதுவும், ஒரு தொழில்தான். நான் கூட அட்வகேட்டாக இருக்கிறேன்....

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : நேரமாகி விட்டது. சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

<u>திரு. எம். ஏ. லத்திப்</u> : Just I am concluding. There were lots of interruptions. Otherwise, my health is not also permitting me to speak for a long time. Any way, I do not worry, what I say is this

ஆகையால் நான் முதலமைச்சர் அவர்களைக்கேட்டுக் கொள்வது, இந்த பேச்சுக்கு ஒரு தெளிவான விளக்கத்தைச் சொல்ல வேண்டும். நான் நடிக்கப் போகிறேன் என்றோ அல்லது நடிக்கப் போகவில்லை என்றோ தெளிவாகச் சொல்லிவிட வேண்டும்.

<u>மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன்</u> : மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்திப் அவர்கள் படித்துக் காட்டிய சட்ட விதிகள் முதலமைச்சருக்கு மட்டும்தான் பொருந்துமா அல்லது பிரதம அமைச்சருக்கும் சேர்ந்து பொருந்துமா?

<u>திரு. எம். ஏ. லத்திப்</u> : பிரதம அமைச்சருக்கும் இதே மாதிரி நிலைமைதான். அங்கே பிரசிடெண்ட் என்று வரும்.

[பிற்பகல் 12-50]

இரண்டு பேருக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன். பிரதமர் அவர்களையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்.

"The President will exercise constitutional duties through his subordinates, which means, the Ministers including Prime Minister. As far as the State is concerned, not only Chief Minister, all other Ministers. Not only Prime Minister, but also other Minister. I am not taking sides. I am just explaining the principles of the Constitution and just pleading in the Hon. Chief Minister [illegible] his responsibility and not to talk about going to the film land. It will affect the duties of Chief Minister.

[திரு. எம். ஏ. லத்திப்] [1979 பிப்ரவரி 20

ஆகவே இந்தப் பிரச்சினை பற்றி தெளிவாகச் சொல்ல வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறதேயல்லாமல் வேறல்ல என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

(மணியடிக்கப்பட்டது)

இன்னும் ஓரிரு வார்த்தைகள் கூறி முடித்துவிடுகிறேன். இறுதியாக மைனாரிட்டிகளைப் பற்றி இங்கே சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு மாநிலத்திற்கும் அந்தந்த மாநிலத்திலேயே நிரந்தரமாக ஒரு மைனாரிட்டி கமிஷன் அமைக்கப்படவேண்டும் என்று 1977லேயே சொல்லப்பட்டிருக்கிறது. 1977-ஆம் ஆண்டு ஜனதாக் கட்சியின் தேர்தல் அறிக்கையில் கூட சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் ஆற்றிய பட்ஜெட் உரையிலேயே இந்த வாக்குறுதி அடங்கி இருக்கிறது. ஆகவே தமிழ் நாட்டிற்கும் ஒரு மைனாரிட்டி நியமிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து க்ளாஸ் I சர்விஸிலேயும், க்ளாஸ் II சர்விஸிலேயும் மைனாரிட்டி சமுதாயங்களான முஸ்லிம், கிறிஸ்துவர், ஆங்கிலோ இண்டியன் போன்றவர்களுக்கு தனிப்பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அரசு உத்தியோகங்களிலும், பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மைனாரிட்டிகளுக்கு என்று விகிதாச்சார அடிப்படையில் வாய்ப்புகள் அளிக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முஸ்லிம், கிறிஸ்துவர், ஆங்கிலோ இண்டியன், பார்ஸி போன்ற சிறுபான்மையோருக்கு தனிச்சட்டங்கள் அதாவது பாதுகாப்புச் சட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து முஸ்லிம்கள் கிறிஸ்துவர்கள் போன்ற சிறுபான்மையோர்களுடைய வணிக ஸ்தலங்களுக்கும், உயிருக்கும் பாதுகாப்புத் தரவேண்டும் என்றும் அதற்குரிய வழிமுறைகளை இந்த அரசு கண்டாகவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சமூகவிரோத செயல்களில் ஈடுபடக்கூடிய அமைப்புக்களை அது எந்த சமுதாயத்தைச் சேர்ந்ததாக இருந்தாலும் அவற்றைத் தடை செய்ய இந்த அரசு முன்வரவேண்டும் என்று நான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : சீக்கிரம் முடியுங்கள்.

திரு. எம். ஏ. லத்திப் : இந்தப் பத்திரிகையைப் பாருங்கள். (கையில் ஒரு பத்திரிகையை வைத்துக்கொண்டு பேசினார்) இதை நான் படிக்கப் போவதில்லை. படிக்க விரும்பவில்லை. தயவு

1979 பிப்ரவரி 20] [திரு. எம். ஏ. லத்திப்]

செய்து இதை முதலமைச்சரே பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உங்களிடத்திலே நான் இதைக் கொடுக்கிறேன். (கையில் வைத்திருந்த பத்திரிகையை முதலமைச்சரிடம் கொடுத்தார்) எனக்குப் பேசுவதற்கு நேரத்தை அளித்தமைக்கு உங்களுக்கு நன்றி சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் ஒழுங்குப்பிரச்சினை ஒன்று கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்திப் அவர்கள் பேசும்போது ஜீனத் உன்னிசா பேகம் என்ற பெண் போலீஸ் ஸ்டேஷனிலே வைத்து மானபங்கப்படுத்தப் பட்டிருக்கிறார் என்று குறிப்பிட்டார் * * என்று பேசிய அந்தப் பேச்சை அவைக் குறிப்பில் இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. எம். ஏ. லத்திப் : அப்படியானால் ஒரு சம்பவமே அவைக் குறிப்பில் இல்லாமல் போகப் போகிறதா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஜீனத் உன்னிசா பேகம் என்பவர் போலீஸ் ஸ்டேஷனிலே வைத்து மானபங்கப் படுத்தப்பட்டிருக்கிறார் என்ற அந்தப் பகுதியை மட்டும் வைத்துக்கொண்டு அதைப்பற்றிச் சொல்லப்பட்ட மற்ற விவரங்களை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன். நான் சொன்னதையும் சேர்த்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

* திரு. துரை முத்துசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசின்மீது கொண்டுவரப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதும், கண்டனத் தீர்மானத்தின் மீதும் நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாக சில கருத்துக்களை கூற முன்வந்திருக்கிறேன். இந்த அரசின்மீது கொண்டு வந்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானம் எந்த அடிப்படையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொன்னால், ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டுமக்களுக்கு அளித்த வாக்குறுதி, இந்த நாட்டில் லஞ்ச ஊழலற்ற ஆட்சியை, நிர்வாகத்தில் குறுக்கீடு இல்லாத ஆட்சியை அமைத்து சிவப்பு நாடாவில்லாத ஒரு ஆட்சியை, நல்லதொரு ஆட்சியை அமைத்துத்தருவோம் என்று விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் தொழிலாள மக்களுக்கும் மாணவர்களுக்கும் வாக்குறுதி அளித்து இந்த ஆட்சிப் பொறுப்பினை ஏற்றார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பையேற்று இரண்டாவது பட்ஜெட் வரப்போகிறது. சென்ற சட்டமன்றக் கூட்டத்தொடரில்கூட இந்த அரசு இந்த சட்டமன்றத்தில் கொடுத்த வாக்குறுதிகளைக் கூட நிறைவேற்ற

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

வில்லை. எதிர்கட்சியாக இருக்கும்போது கொடுத்த வாக்குறுதிகளைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஆளும் கட்சியாக இந்த சட்டமன்றத்தில் அமர்ந்த பிறகு மக்கள் மத்தியில் எடுத்துவைக்கப்பட்ட, கூறப்பட்ட கருத்துக்கள்பற்றி' காரியங்கள்பற்றி செவிசாய்க்கவில்லை, அவற்றை நிறைவேற்றவில்லை என்று சொன்னால் எப்படி இந்த அரசின்மீது நம்பிக்கை வைக்கமுடியும் என்ற அளவில்தான் நான் சில கருத்துக்களை இந்த அவைமுன் எடுத்து வைக்கவிரும்புகிறேன். சென்ற சட்டமன்ற கூட்டத் தொடரில் மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், எந்தெந்த ஊர்களில் போக்குவரத்து வசதி இல்லையோ அந்த ஊர்களில் எல்லாம் சாலைகள் போட்டுத் தருவார்களேயானால் சாலை போடுகிறவர்களுக்கு பஸ் பெர்மிட் வழங்கப்படும் என்று வாக்குறுதி தந்தார்கள், அதன் விளைவாக எவ்வளவோ பேர்கள் ரோடுகளை சீரமைத்து ரோடுகள் போட்டதோடு மட்டுமல்லாமல் பஸ்களையும் வாங்கினார்கள். சேலம் மாவட்டத்தில் ஒரு பஸ் வாங்கி ரோடு அமைத்தும் அவர்களுக்கு இன்னும் பஸ் பெர்மிட் வழங்கப்படவில்லையென்று சொன்னால் இந்த அரசை எப்படி நம்புவது என்று கேட்கிறேன்.

அடுத்தபடியாக, நாட்டு மக்கள் அனைவருக்கும் தெரியும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதம் ரூ. 200 அதிகப்படுத்திக் கொடுத்துவிட்டோம் என்றதுபோல் அறிவிப்பு விட்டார்கள். மக்கள் கேட்கிறார்கள், உங்களுக்கு ரூ. 759 சம்பளம் என்று அரசு உயர்த்திவிட்டதாமே என்று. இன்னும் அதைக்கூட அரசாங்கம் கொடுக்கவில்லை. மனைவியோடு செல்வதற்கு ரெயில்வே பாஸ் கொடுப்பதாகச் சொன்னார்கள். அதையும் கூட நிறைவேற்றவில்லை. இப்படி சாதாரண விஷயங்களைக் கூட நிறைவேற்றாத அரசின்மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல் சில சட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். பஸ்களில் செல்பவர்களுக்கு ஆக்ஸிடென்ட் ஆனால் ரூ. 1000 கொடுக்கப்படும் என்று, எங்கள் தொகுதியில் கவரப்பட்டு என்ற ஊரில் ட்ராக்டர் ஆக்ஸிடென்டில் ஒருவர் இறந்துவிட்டார். முதல் அமைச்சர் அவர்களிடம் மனு கொடுக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமும் கொடுக்கப்பட்டது. அங்கிருந்து வந்த பதில் என்னவென்றால் ட்ராக்டர் ஆக்ஸிடென்ட்டுக்கு கிடையாது, பஸ் ஆக்ஸிடென்ட் என்றால்தான் தர முடியும் என்று சட்டம் இருக்கிறது, ஆகவே ட்ராக்டர் ஆக்ஸிடென்ட் ஏற்பட்டவருக்கு அந்தப் பணம் இல்லை என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். சரியாக அதற்கும் மேலாக, கல்ராயன்மலையில் கால்நடை ஆஸ்பத்திரி ஒன்று வேண்டும் என்று கேட்டிருந்தோம். அதற்கு இங்கிருந்து ஒரு அதிகாரியிடம் இருந்து எனக்கு தபால் வருகிறது. நிர்வாகச் சீர்கேடுக்கு இது ஒரு எடுத்துக்காட்டு. அவர் கையெழுத்து இடாமலேயே எனக்கு கடிதத்தை அனுப்பியிருக்

கிறார்கள். [illegible] கையெழுத்து போடாமலேயே எனக்கு கடிதம் வந்திருக்கிறது. அடுத்தபடியாக, கல்ராயன்மலையைப் பொறுத்தவரையில் அது ஒரு ஒன்றியமாக இருந்தது. இடைக் காலத்தில் அது நீக்கப்பட்டது. ஜாகீர்தாரின் அடிமைகளாக இருந்துகொண்டிருந்தார்கள். அங்கு அந்த ஒன்றியத்தை மீண்டும் அமைக்கவேண்டும் என்று மக்கள் நீண்டநாட்களாக கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த குறையும் நீக்கப்படவில்லை. ஆகவே, வர இருக்கிற தேர்தலில் கல்ராயன்மலையிலும் தேர்தல் வைக்க வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கல்ராயன்மலையில் சமீப காலத்தில் மின்சார வசதி அளிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். இங்குள்ள மக்கள் விவசாயம் செய்வதற்காக மின் இணைப்பு கோரி தற்போது அப்ளிகேஷன்ஸ் கொடுத்து வருகிறார்கள். அவர்களுக்கு முறைப்படி கிடைக்கவேண்டுமென்றால் இன்னும் ஐந்து அல்லது பத்தாண்டுகளாகும். ஆகவே, அவர்களுக்கு மின்சாரம் வழங்குவதில் தனிச் சலுகை அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-00]

5. அறிவிப்பு

பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவின்படி, பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டபடி நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

21—2—1979—புதன்—	அமைச்சரவைமீது நம்பிக்கையின்மை தெரிவிக்கும் தீர்மானம் மற்றும் அரசின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானங்கள்மீது விவாதம்.
22—2—1979—வியாழன் 23—2—1979—வெள்ளி 24—2—1979—சனி	சட்ட முன்வடிவுகள் - ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுதல்.
25—2—1979—ஞாயிறு—விடுமுறை	
26—2—1979—திங்கள்—	அமைச்சரவைமீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும் அரசின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானங்களும் விவாதம்—கடைசி நாள்.

நாளை வினாக்கள்—விடைகள் இல்லை.

பேரவை 26—2—1979 அன்று ஒத்தி வைக்கப்பட்டு மீண்டும் 3—3—1979 அன்று கூடும்.

மேலும் 21—2—1979 அன்று பேசுவோர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரம்.

ஜனதா உறுப்பினர்	..15 நிமிடம்
அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்	60 நிமிடம்.
திரு. க. சுப்பு	..15 நிமிடம்
திரு. மு. ஆறுமுகம் (சேலம்)	..15 நிமிடம்
திரு. கே. கந்தசாமி	..15 நிமிடம்
திரு. ஆர். மார்க்கபந்து	..15 நிமிடம்
திரு. எஸ். அழகர்சாமி	..30 நிமிடம்
திரு. என். சங்கரய்யா	..30 நிமிடம்
திரு. ஏ. ஆர். மாரிமுத்து	..30 நிமிடம்

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, உங்களுக்கு சௌகரியமாக இருக்கும் என்பதற்காகச் சொல்லுகிறேன். எனக்குத் தரப்பட்டிருக்கும் 15 நிமிடத்தை எடுத்துவிடுங்கள். என் பெயரை அடித்துவிடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழுவில் எல்லாத் தலைவர்களும் கூடி ஆலோசித்து எடுத்த முடிவுதான் இது. அதைத்தான் நான் அறிவித்தேன்.

(4) அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் மற்றும் கண்டனத் தீர்மானங்களின் மீது விவாதம்— தொடர்ச்சி.

திரு. துரை முத்துசாமி : அடுத்து, மலை ஜாதி மக்கள் மேம்பாட்டு குழு போட்டிருப்பதாக 14—11—78—ல் முதலமைச்சர் அவர்கள் சார்பில் அமைக்கப்பட்டிருப்பதாகவும், நம்முடைய அரிசன நல துறை அமைச்சர் அவர்கள் இதன் உதவித் தலைவராகவும், என் போன்றவர்களை உறுப்பினர்களாக போட்டிருப்பதாகவும் அரசாங்க ஆணை வந்தது. இது இரண்டு மாதத்திற்கு ஒரு முறை கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இப்படி மலை ஜாதியினர் மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக 16—11—78-ல் போடப்பட்ட இந்த குழு இது வரையிலும் கூட்டப்படவில்லை. இனிமேலாவது மலை ஜாதி மக்கள் மீது கருணை காட்டி, அவர்களுக்காக என்னென்ன திட்டங்கள் போடப்படுகிறது என்பதையெல்லாம் தெரிந்து கொள்கின்ற வகையில் அமைக்கப்பட்ட குழு கூட்டப்பட வேண்டும். இதுவரை இக்குழுவைக் கூட்ட முடியவில்லை என்று சொன்னால் இந்த அரசினுடைய நிர்வாகம் எந்த அளவுக்கு சீர்கேடு அடைந்திருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

இந்த அரசு தேர்தல் காலத்தில் முன்பு கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றவில்லை. [illegible] எப்படி நடக்கிறது என்பதற்கு ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். சென்னை மத்திய சிறைச்சாலையில், அப்துல் ஷெரீப் என்ற பெயருடைய, காதர் ஷெரீப் என்ற பெயருடைய இரண்டு பேர்கள் சிறைச்சாலையில் இருந்தார்கள். இதில் அப்துல் ஷெரீப் என்பவர் [illegible] தண்டனை பெற்றவர். காதர் ஷெரீப் என்பவர் [illegible] சேர்ந்தவர். இவர்கள் இரண்டு பேரும் [illegible] சிறையில் காதர் ஷெரீப் இறந்து விட்டார். [illegible] இறந்தவனை அப்துல் ஷெரீப் என்று [illegible] அப்துல் ஷெரீப் வீட்டிற்கு [illegible] அனுப்பிவிட்டார்கள். பிரேத பரிசோதனைக்குப் பின் [illegible] அடக்கம் செய்யப்பட்டது. இது நடந்த 20 நாட்களுக்குப் பிறகு இறந்து விட்டது, அப்துல் அல்ல. காதர் ஷெரீப் தான். தவறுதலாக அப்துல் ஷெரீப் வீட்டிற்கு அனுப்பிவிட்டோம் என்று சிறைச்சாலையில் உள்ளவர்களுக்குத் தெரிந்தது. அப்துல் ஷெரீப் வீட்டில் அப்துல் ஷெரீப் தான் இறந்து விட்டான் என்று நினைத்த உறவினர்களுக்கு தெரிவித்தார், அவர்கள் எல்லாம் அப்துல் ஷெரீப் வீட்டிற்கு வந்திருக்கிறார்கள், இப்படி [illegible] இறந்து விட்டது யார் என்று கூட கண்டுபிடித்து தெரிவிக்கவில்லை என்று சொன்னால் எந்த அளவுக்கு சிறைச்சாலையின் நிர்வாகம் சீர்கெட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், இன்றைய தமிழ்நாடு முதலீட்டுக் கழகத்திற்கு தலைவராக அனந்தகிருஷ்ணன் என்பவரை போட்டிருப்பதாகத் தெரிகிறது. இவர் இந்த முதலீட்டுக் கழகத்திலிருந்து 50 லட்சம் ரூபாய் கடன் பெற்றிருக்கிறார். மத்திய தொழில் முதலீட்டுக் கழகத்திலிருந்து 50 லட்சம் ரூபாய் கடன் பெற்றிருக்கிறார். இப்படி ஒரு கோடி ரூபாய் கடன் பெற்றுக்கொண்டு 'லாக் ரா' இண்டஸ்ட்ரீஸ் என்ற ஒரு தொழிலையும் நடத்தி வருகிறார். இந்த தொழிலாவது நல்லமுறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. மேலும் இவர் வாங்கிய கடனுக்கு இதுவரை ஒரு தவணை கூட பணம் கட்டவில்லை. இப்படிப்பட்டவரை தமிழ்நாடு முதலீட்டுக் கழகத்திற்கு தலைவராகப் போட்டிருப்பதாக கேள்விப்படுகிறேன். இப்படிப்பட்டவரை போட்டால் எப்படி இந்த அரசின் மீது நாம் நம்பிக்கை வைக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், இங்கே நேரம் கொடுப்பதிலேயும் கூட பாரபட்சம் காட்டப்படுகின்றது. காங்கிரஸ் கட்சி நேற்று வெளிநடப்பு செய்தது. அதற்காக [illegible] சொன்னால், நம் தலைவர் அவர்கள் உரையின் மீது நடந்த விவாதத்தின்போது பெரும்பான்மை எதிர்க்கட்சிக்கு காங்கிரஸ் கட்சி இரண்டாவதாக

[திரு. துரை முத்துசாமி] [1979 பிப்ரவரி 20

இருக்கிறது. எங்கள் கட்சியிலே 27 உறுப்பினர்கள் இருக்கிறார்கள், எங்களுக்கு 2 மணி, 42 நிமிட நேரம் என்று வைத்துக் கொண்டாலும் கூட, ஒருவருக்கு 6 நிமிடங்கள் என்றுதான் ஆகிறது. அப்படியாவது 2 மணி நேரம், 42 நிமிடங்கள் எங்களுக்கு ஒதுக்கி இருக்க வேண்டும். அப்படியும் கொடுக்கவில்லை. எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள், எங்கள் கட்சித் தலைவர் உள்பட பேசுவதற்கு கொடுக்கப்பட்டது ஒரே ஒரு மணி நேரம்தான். அந்த வகையிலும் இந்த அரசு அழுகின்ற பிள்ளைக்கு பால் கிடைக்கும் என்ற வகையிலே தான் நடந்து கொண்டிருக்கிறது. எங்களைப் போன்றவர்களிடம் நியாயமாகவும், நேர்மையாகவும் நடந்து கொள்ளவில்லை. எனவே, இந்த நேரம் ஒதுக்குவதிலேகூட பாரபட்சம் காட்டப் படுகிறது, இந்த அரசு அதிலேயும் சரியாக நடந்துகொள்ள வில்லை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பதிலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவாகளே, இந்த அமைச்சர் அவையின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது பேச வேண்டிய உறுப்பினர் அவர்கள், பேரவைத் தலைவரைப் பற்றியும், பேரவைத் தலைவர் நேரம் ஒதுக்கவில்லை என்பதைப் பற்றியும் பேசிக்கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானும் அதைத் தான் சொல்ல விழைந்தேன். தாங்கள் தயவுசெய்து இந்த அரசின்மீது உள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பற்றிப்பேச வேண்டும். நேரம் ஒதுக்குவது என்பது வேறு பிரச்னை. நேரம் ஒதுக்கு வதிலே எனக்கு உரிமை இருக்கிறது. இதிலே பாரபட்சம் காட்டப் படுகிறது என்று பேசவேண்டாம். அது தேவையில்லாத ஒன்று.

திரு. துரை முத்துசாமி : அதற்காகத் தான் நேற்றைய தினம் கூட நாங்கள் வெளிநடப்பு செய்தோம் என்பதை விளக் கினேன். அதே நேரத்தில், இந்த நாட்டிலே சட்டம், ஒழுங்கு சீர்கெட்டு வருகின்றது என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய அறைக்குப் பக்கத்தில், 113–வது அறையிலே உள்ள ஸ்ரீவைகுண்டம் தொகுதியைச் சார்ந்த சுந்தரம் என்ற உறுப்பினர் இருக்கிறார். அவரது அறையிலே 10,000 ரூபாய் பெறுமான தங்கச் சங்கிலி, வாட்ச் போன்ற பொருள்கள் எல்லாம் திருடு போயிருக்கின்றது. அது இன்னும் கண்டுபிடிக்கப் படவில்லை. இப்படி நாட்டிலே நிலைமைகள் இருக்கின்றன.

அதேபோலத்தான், நடு ரோட்டிலே பாரிஸ் கார்னரிலே சுமார் இரவு 7 மணிக்குச் சென்று கொண்டிருந்த ரத்னா என்னும் பெண்மணியின் தங்கச் சங்கிலி அறுக்கப்படுகின்றது. இதுவரையிலும் அதைக் கண்டுபிடிக்கவில்லை. அதேபோல், வேளச்சேரியில் கமலா என்னும் பெண்மணியின் கழுத்திலிருந்து தங்கச் சங்கிலி, தாலி ஆகியவைகளை அறுத்துச் சென்றிருக் கிறார்கள். அதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. இன்றைக்கு

1979 பிப்ரவரி 20] [திரு. துரை முத்துசாமி]

நாட்டிலே சட்டம், ஒழுங்கு எப்படி இருக்கின்றது என்று சொன்னால், இப்படித் திருடுபோன பொருள்கள் மீண்டும் கிடைக்காத நிலைதான் இருக்கின்றது. இதையெல்லாம் கண்டு பிடிக்க முடியாத கையாலாகாத அரசாகத்தான் இருக்கின்றது. எனவே, இந்த அரசின்மீது நம்பிக்கை இல்லை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இதைப்போலவே, மூன்றாவது ஊதியக் கமிஷனிலே எஸ். டி. எம் கோர்டுகளிலே உள்ள முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளுக்கு பதவி உயர்வு கொடுப்பதிலே பாரபட்சம் காட்டப்பட்டிருக்கிறது. இந்த எஸ். டி. எம். – களும், ஆர். டீ. ஓக்களும் சம அந்தஸ்து உள்ளவர்கள். இவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கும்போது, எஸ். டீ. எம். – கள் சப் ஜட்ஜுகளாகவும், ஆர். டீ. ஓ. -க்கள் டீ. ஆர். ஓக்களாகவும் பதவி உயர்வு பெறுகிறார்கள். அப்படி கொடுக்கின்றபோது, இவர்களுடைய சம்பளம் மூன்றாவது ஊதியக் கமிஷனிலே எப்படி போடப்பட்டிருக்கின்றது என்றால், சப் ஜட்ஜுகளுக்கு ரூ. 1000 என்றும், டீ. ஆர். ஓக்களுக்கு ரூ. 1300 – என்றும் உத்தரவிட்டிருக்கிறார்கள். இரண்டு பேர் களும் ஒரே சமநிலையை உடையவர்களாக இருந்தும், இரண்டு வித சம்பளம் போடப்பட்டு, டீ. ஆர். –ஓக்கள் நிலை உயர்த்தப் பட்டிருக்கிறது. இந்த டீ. ஆர். ஓக்களுக்கு பயணப்படி, கார் வசதி எல்லாம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த சப் ஜட்ஜுகளுக்கு வெறும் ரூ. 1000/ ம், வாடகைப் படியும் மட்டும் தான். மற்றபடி எதுவும கொடுக்கவில்லை. எனவே நீதித் துறை யைப் பொறுத்தவரையிலே, அங்கே இருக்கக்கூடியவர்களுக்கு இந்த அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்து கொண்டிருக்கின்றது என்ற ஒரு எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. இந்த எண்ணத்தின் மூலம் நீதித் துறை சரியான முறையில் நடைபெறுமா என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இதைத் தவிர, கர்நாடக அரசிலே சப் ஜட்ஜுகளுக்கு ரூ. 1500 என்றும், டிஸ்டிரிக்ட் செசஷன்ஸ் ஜட்ஜுகளுக்கு ரூ. 2000 என்றும் போட்டிருக்கிறார்கள். தமிழகத்திலே 37 டிஸ்டிரிக்ட் செஷன்ஸ ஜட்ஜுகள் தான் இருக் கிறார்கள். ஆனால் கர்நாடகத்திலே 66 பேர்கள் இருக் கின்றார்கள்.

[பிற்பகல் 1-10]

கர்நாடக மாநிலம் மூன்று கோடி மக்களைக் கொண்டது தான். அங்கே 66 பேர்கள் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ்களாக இருக்கிறார்கள். 1500 ரூபாய் சப் ஜட்ஜ்களுக்கும், 2000 ரூபாய் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் களுக்கும் சம்பளம் கொடுக்கிறார்கள். அந்த அரசுக்கு வருகிற வருமானம் நம்மைவிட 5 கோடி ரூபாய் குறைவு. அவர்களால் வழங்க முடிகிறது. இந்த அரசால் வழங்க முடியவில்லை என்று சொன்னால் இதைக் கையாலாகாத அரசு என்று சொல்லாமல் வேறு என்ன சொல்வது ?

[திரு. துரை முத்துசாமி] [1979 பிப்ரவரி 20

சமீபத்தில் உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமித்திருக்கிறார்கள். பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த வன்னியர்களுக்கு ஒரு இடம் கூடக் கொடுக்கவில்லை என்ற பெரும் குறை அந்தச் சமுதாயத்திற்கு இருக்கிறது. அந்த மக்களும் உங்களை நம்பவில்லை என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டக் கல்லூரியில் 700 பேர்கள் படித்துக் கொண்டிருந்தார்கள். இப்போது 300 பேரே படிக்கக்கூடிய அவல நிலை இருக்கிறது. மாணவர்கள் எண்ணிக்கை குறைக்கப்பட்டிருக்கிறது. வெயிட்டிங் லிஸ்டில் இருந்தவர்கள் பெயரை விட்டு விட்டு அந்த லிஸ்டில் இல்லாதவர்களுக்கு இடம் கொடுத்திருக்கிறார்கள். இது நிர்வாகத்தில் குறுக்கீடு இல்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்து ** **

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : நண்பர் துரை முத்துசாமி அவர்களுக்கு என்மீது என்ன கோபமோ தெரியவில்லை. கோபம் இருந்தால் வெளியில் பார்த்து பேசிக் * கொள்ளலாம். உள்ளே வந்து தவறான தகவல்களைச் சொல்வது முறையாக இருக்காது.

திரு. துரை முத்துசாமி : அவர் மீது ஒன்றும் கோபம் இல்லை ** **

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் சொல்லும்போது 'வெளியிலே பார்த்துக் கொள்ளலாம்' என்று சொன்னதை 'வெளியிலே பேசிக் கொள்ளலாம்' என்று மாற்றிக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : வெளியிலே பார்த்துப் பேசிக் கொள்ளலாம் என்ற அர்த்தத்தில்தான் சொன்னேன். திரு. துரை முத்துசாமி சண்டைக்கு வருபவர் அல்ல, நானும் சண்டைக்கு போகிறவன் அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'வெளியிலே பார்த்துப் பேசிக் கொள்ளலாம்' என்று மாற்றிக் கொள்ளலாம்.

திரு. க. அன்பழகன் : தாங்கள் சொன்னதிலிருந்து ** ** இனியும் பேச வேண்டிய நிலைமை இருக்கிறதா அல்லது ஏற்கனவே தீர்ந்து போய்விட்டதா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கு அந்தச் சந்தேகம் எழத் தேவையில்லை.

திரு. துரை முத்துசாமி : ** **

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1979 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உண்மைக்கு மாறான தகவல்களைத் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். அது சபைக் குறிப்பில் இருப்பது அவ்வளவு பொருத்தமாக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு தடவை அமைச்சர் அவர்கள் அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்ட பிறகு திரு. துரை முத்துசாமி அவர்கள் வேறு பிரச்சினைகளுக்குச் செல்வது தான் சாலச் சிறந்தது.

திரு. துரை முத்துசாமி: சென்ற கூட்டத் தொடரின்போது மதுராந்தகம் தாலுகாவிலே சீக்கனாங்குப்பம் என்ற கிராமத்திலே விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வேலை கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு அரசாங்கம் நிர்ணயித்தபடி கூலி கொடுக்கப்படவில்லை; அதற்காக அவர்கள் போராட்டத்தை நடத்தியும்கூட அந்த மிராசுதாரர்கள் வேலை கொடுக்காததன் காரணமாக அவர்கள் அப்போது சட்டமன்றம் நடந்து கொண்டிருந்தபோது, நடந்தே இங்கே வந்து எங்கள் கட்சித் தலைவர் திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் தலைமையில் முதலமைச்சரைச் சந்தித்துத் தங்கள் குறைகளைச் சொன்னார்கள். வேலைக் கொடுக்கப்படவில்லை; நிர்ணயிக்கப்பட்ட கூலி கொடுக்கப்படவில்லை, சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன, வழக்குகள் போடப்படுகின்றன என்றெல்லாம் சொல்லி வேண்டுகோள் விட்டார்கள். அப்போது முதலமைச்சர் உறுதிமொழியைச் சொல்லி ஒரு வாரத்திற்குள் அவர்களுடைய குறைகளைப் போக்குவதாகச் சொன்னார்கள், ஆனால் அந்த வாக்குறுதி சட்டமன்றத்திலே சொல்லியும் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாமல் இன்னும் 36 பேர்கள் கோர்ட்டிற்கு அலைந்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வழக்குகள் வாபஸ் பெறப்படவில்லை; மிராசுதாரர்கள் அவர்களுக்கு இன்னும் வேலை கொடுக்கவில்லை, அவர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட கூலி வழங்கப்படவில்லை, அதனால் அந்த கிராமத்திலே உள்ள விவசாயிகள் பிழைக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே விவசாயிகளுக்கு இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் பேரவைத் தலைவருக்கு 12 வது விதியின்கீழ் கொடுத்து இருந்ததை 41 ஆம் விதியிலே எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள், ஆனால் அதுவும், இப்போது கிடையாது, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது பேசும் வாய்ப்பு இருப்பதால் அதிலே வாய்ப்புத் தரப்படவில்லை என்று சொல்லிவிட்டார்கள் மூன்று தீர்மானங்களுக்கும் அப்படி பதில் சொல்லிவிட்டார்கள்.

முண்டியம்பாக்கம் சர்க்கரை ஆலை ஒரு மாத காலமாக மூடப்பட்டு இருக்கிற காரணத்தால் அந்த விவசாயிகள் கரும்புகளை வெட்டமுடியாத நிலை இருக்கிறது, வெல்லமும் ஆக்க முடியவில்லை, அதன் காரணமாக விவசாயிகள் மட்டுமல்ல,

அந்தத் தொழிலாளர்களும் வேலை செய்ய முடியவில்லை. அந்த முறையிலே விவசாயிகளும் தொழிலாளர்களும் அவதிப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையிலே தொழிலாளர் களுக்குப் போனஸ் கொடுக்கப்படவில்லை.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்</u>: தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலையிலே வேலை நிறுத்தம் என்று சொன்னார்கள். அதைத் தொழிலாளர்கள் முதலாளிகள் பிரச் சினை என்று கருதாமல் சர்க்கரைக்குக் கரும்பு கொடுக்கக் கூடிய 10 ஆயிரம் 15 ஆயிரம் பேர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற காரணத்தால் சீஸன் இல்லாத நேரத்திலே அதைப்பற்றிப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் அல்லது ஸ்பெஷல் இண்டஸ்ட்ரியல் ட்ரிப்யூனல் வைத்தே தீர்வு காணலாம் என்ற ஆலோசனையை சொல்லியிருக்கிறோம். அதை செயல்படுத்துமாறு தொழிற் சங்கங்களை நீங்கள் வற்புறுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். அது மட்டுமல்லாமல் நானே அந்த தொழிற்சங்க அலுவலகத்திற்குச் சென்று அந்தப் போராட்டத்தை நிறுத்துங்கள் என்றும் கமிஷனர் உங்களை அழைத்துப் பேசுவார் என்றும் சொன்னேன். அப்படியிருந்தும் அவர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். கரும்பு காய்கிறது.

<u>திரு. துரை முத்துசாமி</u>: தலைவர் அவர்களே, முண்டியம் பாக்கம் ஆலைபற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உடனடியாக அந்தத் தொழிலாளர்களுக்கு நல்வாழ்வு காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: திரு. துரை முத்துசாமி அவர்கள் அரிசன நலத்துறை அமைச்சர்பற்றி இரண்டாவது முறையாகப் பேசினார்கள், முதலிலேயே அதைப்பற்றி அவர்கள் கூறிவிட்டு பின்னாலும் கூறுவது அவசியம் இல்லாதது தான், அந்த வார்த்தைகளைச் சபைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்திர விடுகிறேன்.

<u>திரு. துரை முத்துசாமி</u>: அந்த ஆலையிலே வேலை செய் கின்ற தொழிலாளர்களுக்கு போனஸ் தரப்படவில்லை. அதைப் பற்றியும் சுமுகமாகப் பேசி தீர்த்து வைக்க வேண்டும்

அடுத்து ஆம்பூர் சர்க்கரை ஆலையில் 50 விவசாயிகள் கைது செய்யப்பட்டு ஜாமீனிலே வந்து இருக்கிறார்கள். நீங்கள் எந்தக் காரியமாக இருந்தாலும் அதை உங்களோடு ஒருவராக இருந்து பேசி தீர்ப்போம் என்று சொன்னீர்கள், ஆனால் இன்றைக்கு

ஆம்பூரில் 50 பேர்கள் கைது, முண்டியம்பாக்கத்திலே ஆலை மூடல், இப்படி இருந்தால் விவசாயிகளும் தொழிலாளர்களும் எப்படி உங்களை நம்ப முடியும் என்று கேட்க விரும்புகிறேன்.

[பிற்பகல் 1-20]

அடுத்தபடியாக, வீடுகளை அலாட் செய்யும்பொழுது ஒரு வருடைய பெயருக்கு அலாட் செய்கிறார்கள். சென்னையிலே பார்த்தால், ஒருவருடைய பெயரிலே முதலில் இருக்கிறது, பிறகு ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஒருவர் சொன்னால் வேறொருவரின் பெயருக்கு அலாட்மெண்ட் கொடுத்துவிடுகிறார்கள். இதனால் முதலில் இருப்பவர்கள் காலி செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அத்துடன் இல்லாமல் அலாட்மெண்டிற்காகக் கட்டப் பட்ட பணத்தையும் உடனடியாக திருப்பிக் கொடுப்பதில்லை. ஈ.எம்.டி. என்று 250 ரூபாய், 500 ரூபாய் என்று வாங்கு கிறார்கள், அதைத் திருப்பித் தருவதற்கு கிளார்க் இல்லை என்று சொல்கிறார்கள். இந்த அளவிற்கு அந்தத் துறையிலே நிர்வாகச் சீர்கேடுகள் இருக்கின்றன, இப்படித் திறமையில்லாமல் நடத்து கிறார்கள், கையாலாகாமல் இருக்கிறார்கள்.

கல்லூரிகள் அனைத்தும் மூடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. திருச்சியிலே உள்ள அனைத்துக் கல்லூரிகளும் மூடப்பட்டு விட்டன. சென்னையிலும் மாநிலக் கல்லூரி, கந்தசாமி நாயுடு கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி ஆகியனவகள் மூடப்பட்டு விட்டன, இப்படி அனைத்துக் கல்லூரிகளும் மூடப்பட்டு வருகின்றன. இந்த வகையில் மாணவர்கள் உங்களிடத்தில் நம்பிக்கையிழந்து விட்டார்கள், விவசாயிகள் உங்களிடத்தில் நம்பிக்கையிழந்து விட்டார்கள், தொழிலாளர்கள் உங்களிடத்தில் நம்பிக்கையிழந்துவிட்டார்கள். அதற்குமேல் எங்களைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்களின், குறிப்பாக எதிர்க்கட்சி உறுப்பினர் களின் நம்பிக்கையை இழந்து விட்டீர்கள். எப்படியென்றால், பெரும்பான்மை உறுப்பினர்களைத் தங்கள் பக்கம் வைத்திருக் கின்ற அவர்கள் எங்களை எப்படி நடத்துகிறார்கள் என்பதற்கு உதாரணம் சொல்கிறேன். நான் சொல்வதை மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் குற்றச்சாட்டாக எடுத்துக் கொள்ளக் கூடாது. எங்கள் பகுதிக்கு வந்த அவர்கள் காலையிலே சின்ன சேலத்திலும், மாலையிலே ரிஷிவந்தியத்திலும் கலந்துக் கொள்வதாகத் தகவல். பேரவைத் தலைவரவர்கள் சின்ன சேலத்திலே காலையிலே கலந்து கொண்டார்கள். மாலையிலே அரியலூரில் கட்சிக்காரர் வீட்டில் நடந்த காதணி விழாவிலே கலந்து கொண்டார்கள். அதற்குப்பிறகு பெரிய பகண்டைக் காலனியில் மேநீர்த்தொட்டி திறப்பதாக இருந்த மேல் நிலை நீர்த்தேக்கத்தொட்டி திறக்கப்படவில்லை. அதற்குக் காரணம் ஆளுங்கட்சியைச் சேர்ந்த முன்னாள் எம்.பி. ஒருவரின் பெயர் அதில் போடப்படவில்லை, எனவே அவர் இவர் கலந்துக் கொள்ளக் கூடாது என்று சொல்லி, இவர் கலந்துகொள்ளவில்லை என்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; நம்பிக்கையில்லாத் திர்மானத்தின்மீது அவர் பேசிக் கொண்டிருக்கிறார். அதே நேரத்தில் பேரவைத் தலைவரின்மீது நம்பிக்கையில்லாத அளவில் சொல்லிக் கொண்டிருக்கிறார். அவையிலே இதைப் பற்றிப் பிரச்சினைகளைக் கிளப்பியதால் சொல்கிறேன், தாங்கள் சொல்லு கின்ற நிகழ்ச்சியைப்பற்றி என்னுடைய கவனத்திற்கு யாரும் கொண்டுவரவில்லை. என் அனுமதியைக் கேட்கவில்லை. நான் எந்தெந்த நிகழ்ச்சிகளைக் கொடுத்திருந்தேனோ அவைகளில் முறையாகக் கலந்துக் கொண்டு திரும்பியிருக்கிறேன். என்னைக் கேட்காமல் ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் நான் கலந்துக் கொள்ளவில்லை என்பதை எப்படிக் குற்றச்சாட்டாகச் சொல்லிக் கொண்டிருக்க முடியும் ?

திரு. துரை முத்துசாமி : உங்கள்மீது குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. ஆளுங்கட்சி நிர்வாகத்திலே குறுக்கிடவில்லை என்று சொல்லும் ஆளுங்கட்சியினர் முன்னாள் எம்.பி., முன் னாள் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுவும் தவறு. யாரும குறுக்கிட்டு என்னை நிறுத்த முடியாது. என்னுடைய உரிமை களிலே யாரும் குறுக்கே நின்று அதற்குச் செல்லக் கூடாது என்று சொல்ல முடியாது. என்னுடைய நினைவுக்கும் கவனத்திற்கும் கொண்டு வந்து, தேதி வாங்கிய நிகழ்ச்சியில் நிச்சயம் கலந்து கொண்டிருக்கிறேன். அப்படியில்லாத நிகழ்ச்சிகளில் நான் கலந்து கொள்ள இயலாது.

திரு. துரை முத்துசாமி : நான் பேரவைத் தலைவர் மீது குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. நான் எதற்காகச் சொல் கிறேன் என்றால், ஆளுங்கட்சியினர் நிர்வாகத்திலே குறுக்கிட மாட்டார்கள் என்று சொல்லி அதிகாரத்திற்கு வந்திருக் கிறார்கள். ஆனால், பேரவைத் தலைவரவர்கள், இரண்டு மைல்களுக்குப் பக்கத்தில் உள்ள நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விட்டு இங்கே வரவில்லை என்று சொன்னார்கள். நான் கூடச் சொன்னேன், அவர் நல்லவராயிற்றே; நான் கூப்பிட்டபொழுது வந்திருக்கிறாரே என்று சொன்னேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் கட்சி சார்பற்றவர் ஆயிற்றே, என்னைப் போன்றவர்கள் அழைத்த நிகழ்ச்சியில்கூட கலந்து கொண்டாரே என்று சொன் னேன். அந்தப் பகுதியிலுள்ள மக்கள் ஆளுங்கட்சிக்காரர்களின் தலையீட்டின் காரணமாக பேரவைத் தலைவர் வரவில்லை என்று பேசிக் கொண்டார்கள். ஆகவே,, கட்சிக்காரர்களின் குறுக்கீடு அரசாங்கத்தில் இருக்கிறது என்பதற்கு இதை எடுத்துக்காட்டாகச் சொல்கிறேன்.

2-2-79 ஆம் தேதியன்று எங்கள் பகுதியில் முதலமைச்சர் இரண்டு திருமணங்களுக்கு வந்தார்கள். அவர் புரட்சி நடிகராக, கட்சித் தலைவராக வந்தால் நான் கவலைப்படப் போவதில்லை.

ஆனால் அவர்கள் ஒரு முதலமைச்சராக நாலரைக்கோடி மக்களுக்கு முதலமைச்சராக வருகிறார்கள். எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்குக்கூட அவருடைய சுற்றுப்பயண விவரம் அனுப்பப்படவில்லை. நான் முதலமைச்சரைச் சந்திக்க முயற்சித்தேன். அவர் டெல்லிக்குச் சென்றுவிட்டார், எனவே பிரைவேட் செக்ரட்டரியைச் சந்தித்தேன். முதலமைச்சர் வரு கின்றபொழுது கள்ளக்குறிச்சியிலிருந்து எழுத்தனூருக்குச் செல்லும் வழியில் என் தொகுதியாகிய சங்கராபுரம் வழியாகத் தான் வரவேண்டும். எங்கள் பகுதியில் வரவேற்பு கொடுக்க வேண்டும், அங்கே ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் கட்ட விருக்கின்ற கால்நடை ஆஸ்பத்திரிக்குக் கல்நாட்டு விழா செய்ய வேண்டுமென்று கேட்டேன்.

இப்படி நான் சென்றபொழுது முதலமைச்சரை நேரடியாகச் சந்திக்கவில்லை, பிரைவேட் செக்ரட்டரியைத்தான் சந்தித்தேன். ரிஷிவந்தியம் தொகுதி உறுப்பினர் சுந்தரம் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சரவர்களைச் சந்திக்கச் சென்றபொழுது போனிலே தான் பேசினார்கள் என்றால் இது என்ன நியாயம்? சட்டமன்ற உறுப்பினர்கள் கூட, அதிலேயும் குறிப்பாக எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள், சந்திக்கவே முடியவில்லை. ஆளுங்கட்சி உறுப்பினர் கள் எப்படியோ சந்திக்கட்டும், எங்கேயும் சந்திக்கட்டும். எனக்குக் கவலையே கிடையாது. மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள், குறிப் பாக எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள், முதல்வரைச் சந்திக்க முடியவில்லை யென்றால், மக்களது தேவைகளை, குறைகளை, எப்படிச் சொல்வது ? ஃபோனில் பேசினால், வேண்டுமானால் நான் வருகின்ற சுற்றுப்பயணத் திட்டத்தை அனுப்புகிறேன் என்று சொல்கிறார்கள். ஆனால், சொல்கிறார்களே தவிர அனுப்புவதே கிடையாது.

இந்நிலையில் எந்த அளவு அரசுமீது நம்பிக்கை வைக்க முடியும் ? சட்டமன்ற உறுப்பினர் கீழே இருந்து கேட் கிறார். மாடியிலேயிருந்து ஃபோனிலே சொல்கிறார்கள், நான் பார்த்து தபாலில் குறித்து அனுப்புகிறேன் என்று. முதலமைச் சரை நேரில் பார்க்க முடியவில்லை. அவர் ஃபோனில் தான் தொடர்பு கொள்கிறார். தபாலில் தெரிவிக்கிறேன் என்று கூறுபவர், வருகிறேன் அல்லது வரவில்லை என்று கூட தகவல் அனுப்புவதில்லை. பிரைவேட் செக்ரட்டரியிடம்தான் கேட்க முடிகிறது. அவரிடமும் தகவல் இல்லை. முதல்வர் தொழி லாளர் மீது அக்கறைக் கொண்டிருக்கிறார்கள், விவசாயிகள் மீது அக்கறை கொண்டிருக்கிறார்கள், என்று சொல்கிறார்கள். விவ சாயிகள் எங்கள்மீது அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால், எதிர்க்கட்சியை எந்த அளவுக்கு முதல்வர் மதிக்கிறார்கள் என்பதைத்தான்......

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காங்கிரஸ் கட்சி உறுப்பினர் மாண்புமிகு துரை முத்துசாமி அவர்கள் நம்முடைய முதலமைச்சர்

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1979 பிப்ரவரி 20

அவருடைய தொகுதிக்கு வந்தபொழுது தெரிவிக்காமல், சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு அறிவிக்காமல் வந்தார்கள் என்று சொன்னார்கள். அன்றைக்கு, அந்தத் திருமணத்திற்கு அவர்கள் செல்வதாகவே இல்லை. டெல்லியிலே அவர்களுக்கு நிகழ்ச்சி யிருக்கிறது என்ற காரணத்தால், வரவில்லையென்று தெரிவித் தார்கள். முதல் நாள் இரவு டெல்லியிலே நிகழ்ச்சிகள் முடிந்து விட்ட காரணத்தால், உடனே திரும்பிவிட்டார்கள். மறுநாள் காலை 5½ மணிக்கு மணமகன் தொலைபேசியில் பேசியதனால், 6½ மணிக்குத்தான் இங்கிருந்து புறப்பட்டுப் போனார். ஆகவே தான் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தகவல் தர முடியவில்லை யென்ற உண்மையை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. துரை முத்துசாமி : அவர், கடைசி காலத்திலே முடி வெடுக்கட்டும், புறப்பட்டு போகட்டும். ஆனால், வருகிறேன், அல்லது வரவில்லை என்ற செய்தியை சட்டமன்ற உறுப் பினருக்குத் தர வேண்டாமா? அந்த அளவு தகுதி குறைந்து விட்ட அளவில் இருக்கிறோமா நாங்கள். வருகிறேன், அல்லது வரவில்லையென்று கூடவா எங்களுக்குச் சொல்லக் கூடாது?

அதே நேரத்தில் முன்னால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி யின்போது, மாண்புமிகு அன்பழகன் அவர்கள் சுகாதார அமைச் சராக இருந்தார்கள். அப்பொழுது அவர் என்னுடைய செம் பரம்பட்டு ஊராட்சிக்கு வருவதாக இருந்தது. நான் நேரிலே கூடப் பார்க்கவில்லை. 3 நாட்களுக்கு முன்னாலே ஃபோனிலே தொடர்பு கொண்டேன்—அப்பொழுது நான் ஊராட்சிப் பெருந் தலைவராக இருந்தேன். சங்கராபுரத்தில் ஒரு டிஸ்பென்சரி திறக்க வேண்டும், அரசம்பட்டியிலே ஒரு ஒப்பன் ஏர் அரங்கு திறக்க வேண்டுமென்று சொன்னேன். அவர், அப்படியே செய்தார். நேரிலே கூட அவரோடு பழக்கம் இல்லை. அப்ப பட்ட நேரத்திலேகூட அவர்கள் அனுமதி கொடுத்து தன்னுடை சுற்றுப்பயணத்தில் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அப் பொழுதும் காங்கிரஸ் கட்சியிலேதான் இருந்தேன், அப்பொழுது சட்டமன்ற உறுப்பினராகக் கூட இல்லை. அப்படிப் பட்ட நிலை அப்பொழுதிருந்தது. ஆனால் இந்த அரசு எந்த நிலையிலே எங்களை மதித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை வேதனையோடு நான் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்பு கிறேன்.

1—5—1979 லே மே தின விழா நடைபெற்றது மாலை அந்த மே தின விழா நடைபெறும் என்று மக்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் 2-ம் தேதிதான் முதல்வர் அவர்கள்........

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 1—5—1979 மே தின விழா இன்னும் வரவில்லை.

1979 பிப்ரவரி 20]

திரு. துரை முத்துசாமி : சென்ற 1—5—1978 ஆம் தேதி அன்று மே தின விழாவிலே முதலமைச்சர் கலந்து கொள்வதாக இருந்தது. ஆனால் அவர் 2—5—1978 ஆம் தேதிதான் வந்தார் என்று சொல்வது, ரெயில் 24 மணி நேரம் தாமதமாக வந்தது என்று சொல்வதைப்போல் இருக்கிறது. இதைத்தான் ஆளுநர்கூட, முதல்வர் இருக்கும்போது, நிர்வாகத்திலே தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்று ஆட்சித் தலைவர்கள் கூட்டத்திலே சொன்னார்கள். அதற்கு உதாரணமாக முதலமைச்சர் அவர் களே இருந்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும் போது உண்மையிலேயே நாங்கள் எல்லாம் வெட்கப்படுகிறோம், வேதனைப்படுகிறோம். அப்படிப்பட்ட நிலையிலே நான் முதலமைச்சரவர்களைச் சந்திக்கச் செல்வதே இல்லை. இப்படி யெல்லாம் அவமானப்படுவதைவிட பார்க்காமலே தபால் எழுதி விடுவது நல்லது என்று, இதுவரை நான் முதலமைச்சரை சந்திக்கவே இல்லை. காரணம், இப்படியெல்லாம் அவமானப் படுவதாக அனுபவ பூர்வமாகச் சொல்கிறார்கள். ஆளுங்கட்சி யினரும் சொல்கிறார்கள். வெளியே சொல்லமுடியாமல் எங்க ளிடம் தனியாகச் சொல்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் பார்க்கச் செல்வதில்லையென்று கருதுகிறேன். ஆனால், ஆளுங்கட்சியினருங்கூடப் பார்க்க முடிவதில்லை யென்று....

[பிற்பகல் 1—30]

திரு. எம். ஆர். இராதா : தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்களைப் பற்றி மாண்புமிகு துரை முத்துசாமி அவர்கள் பேசுகையில் முதலமைச்சர் அவர்களை சந்திக்க முடியவில்லை என்றும், எங்களை அவமானப்படுத்துகிறார் என்றும் குற்றச் சாட்டைச் சொன்னார். அவர்கள் எதற்காக அப்படி பேசுகிறார் என்பது எனக்குத் தெரியும். ஆனால் முதலமைச்சர் அவர்கள் எத்தனை பேரை தினமும் சந்திக்கிறார் எத்தனை பேரோடு விவாதிக்கிறார், யார் யார் அவர்களோடு தினசரி தொடர்பு கொள்கிறார்கள் என்ற உண்மையெல்லாம் அவர்களுக்குத் தெரிந்து இருந்தும், வேண்டும் என்றே திட்டமிட்டு அவர் யாரை யும் சந்திக்கவில்லை, அதுவும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் களிடமே பேசுவது இல்லை என்று சொல்கிறார்கள். இது நியாயமும் அல்ல. உண்மைக்குப் புறம்பானதும் ஆகும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : நண்பர் இராதா அவர்கள் திரு. துரை முத்துசாமி அவர்கள் எதற்காக அப்படிப் பேசுகிறார் என்பது தெரியும் என்று சொன்னார்கள். அது ஏதோ ஒரு உள் அர்த்தம் கற்பிக்கிற வகையில் இருக்கிறது. அதை அவர்கள் அம்பலப் படுத்தவில்லை என்றால் மறைமுகமாக உள்நோக்கம் கற்பிப்பது போல் ஆகிவிடும். அது அவ்வளவு நல்லதல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியோடு பேரவையின் நேரத்தை நீட்டிக்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> குற்றம் சொல்ல வேண்டும் என்ற நோக்கத்தோடு சொல்கிறார் என்ற அடிப்படையில்தான் திரு. இராதா அவர்கள் சொன்னார்கள்.

<u>திரு. துரை முத்துசாமி :</u> நான் இப்போது சொன்னது அத்தனையும் உண்மை. அவரை சந்திக்கச் சென்ற சுந்தரம், பாலகிருஷ்ணன் ஆகியோருக்கு அவர் இன்டர்வியூ தரவில்லை. நான் இதை நிரூபிக்கத் தயார். முதலமைச்சர் இல்லை என்று மறுக்கட்டும், நான் அதற்குப் பொறுப்பேற்கத் தயார்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:</u> மாண்புமிகு உறுப்பினர் துரை முத்துசாமி அவர்கள் மிகவும் வேகமாகப் பேசுகிறார்கள். பேசி முடிக்கட்டும் குறுக்கிட வேண்டாம் என்று இருந்தேன். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்களை சந்திப்பதில் அவர் சொல்கிற அளவிற்கு சிரமங்கள் இருக்காது, முன்கூட்டியே அவர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, அவர்களைப் பார்க்கவேண்டும் என்று நேரம் குறித்துக் கொண்டால் நிச்சயமாக அந்தச் சங்கடங்கள் ஏற்படாது. உதாரணமாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய அவையில் இருக்கிற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை இன்னொரு நாளைக்கு நீடித்து வைத்துக் கொள்ளலாம் என்று அவரோடு பேசி முடிவெடுக்கத் தொடர்பு கொண்ட நேரத்தில் முக்கியமான ஒருவரோடு முதலமைச்சர் அறையில் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று செய்தி வந்தது. ஆகவே, உறுப்பினர்கள் முன்கூட்டியே தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டால் இந்தத் தொல்லைகள், சிரமங்கள் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. துரை முத்துசாமி :</u> இப்போது முறை எப்படி என்று சொன்னார்கள். எத்தனை நாளைக்கு முன்பு இப்படி செய்து கொள்ளவேண்டும் என்கிற முறையையும் சொல்லி விட்டால், நாட்டுக்கும் தெரியும். இங்கேயிருக்கிற அமைச்சர் அவர்களே சந்திக்க முடியவில்லை என்பது இப்போது நாட்டுக்கும் தெரிந்து விட்டது. திரு. இராதா அவர்கள் ஏதோ சொல்கிறார்கள்......

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> மாண்புமிகு உறுப்பினர் இதை எப்படி வேண்டுமானாலும் திசை திருப்பி விடலாம். ஆனால் முக்கியமான பொறுப்பிலே இருப்பவர்கள் முக்கியமான நிகழ்ச்சிகளிலே கலந்து கொண்டு, முக்கியமான விஷயங்கள் குறித்து பேச வேண்டிய நிலைமை இருக்கிற காரணத்தால் முன்கூட்டியே நேரம் குறிப்பிட்டுக் கொண்டு செல்வதுதான் நல்லது. அது முதலமைச்சரோடு முறையோடு விஷயங்கள் குறித்து பேசுவதற்கும், பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கும் வசதியாக இருக்கும். அந்த முறைதான் உறுப்பினர்களுக்கும் ஏற்றது. முதலமைச்சருக்கும் சாத்தியமானது.

<u>திரு. துரை முத்துசாமி :</u> சட்டமன்ற உறுப்பினர்களை விட யார் முக்கியமானவர் என்று எங்களுக்குத் தெரியவில்லை. அமைச்சர் அவர்கள் எங்களுக்கு எப்படி என்று வழியைச் சொல்லி விட்டால் நல்லது. நான் இதுவரையில் முதலமைச்சரைச் சந்திக்கச் சென்றதே இல்லை. (மணியடிக்கப்பட்டது) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கும் தெரிந்ததுதான். உங்களுக்காகத்தான் சொல்கிறேன். நீங்களாவது எனக்கு வழி சொல்லவேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நீங்கள் ஒரு வழக்கறிஞர். விவரம் தெரிந்தவர். அருமையாகப் பேசுகிறீர்கள். (சிரிப்பு) அருமை என்பதில் பல விளக்கம் உண்டு. பேரவைத் தலைவரை உங்கள் விவாதத்தில் இழுக்கக் கூடாது. அதுதான் உங்களுடைய அருமை. அதைத் தான் நான் சொன்னேன்.

<u>திரு. ர. ஜெபமணி :</u> சபாநாயகர் அவர்களே, வழக்கறிஞர் விவரம் தெரிந்தவர் என்கிறீர்கள். அப்படியானால் மற்றவர்கள் விவரம் தெரியாதவர்களா ?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நான் குறிப்பிட்டு அவர்களை மட்டும் சொன்னேன். அவர் வழக்கறிஞர், விவரம் தெரிந்தவர் என்று சொன்னேன். நீங்கள் ஏன் அதை வேறு மாதிரி எடுத்துக் கொள்கிறீர்கள். அவர் விவரம் தெரிந்தவர் என்றால் மற்றவர்கள் விவரம் தெரியாதவர்கள் என்று எடுத்துக் கொள்வது சரியல்ல.

<u>திரு. துரை முத்துசாமி :</u> நம்முடைய தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றியத் தலைவர்கள் நினைத்த நேரத்தில் மக்களின் கோரிக்கைகளை தெரிவிக்க அவரைப் போய் பார்க்க முடியும். ஆகவே, இப்போதும் சுலபமாக முதலமைச்சரைப் போய் பார்க்க வழிவகை செய்ய முயற்சி எடுக்க வேண்டும். நான் அவர் மீது தப்பு சொல்லவில்லை. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.......

<u>மாண்புமிகு ச. இராமச்சந்திரன் :</u> இப்பொழுதாவது உண்மையை ஒத்துக்கொண்டதற்கு நன்றி. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை தான் பார்க்கப்போய், முடியாமல் போனதாக சொல்லவில்லை.

<u>திரு. துரை முத்துசாமி :</u> நான் போனதாக சொல்லவில்லை. மற்றவர்கள் போயும் பார்க்க முடியாமல் வந்திருக்கிறார்கள். அதற்கு பல ஆதாரங்களையும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நான் இதுவரையில் போனதுமில்லை; போய் பார்க்க வேண்டிய அவசியமும் எனக்கு வரவில்லை.

[திரு. துரை முத்துசாமி] [1979 பிப்ரவரி 20

அடுத்து, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதைப்போல, முதலமைச்சரவர்களைப் பார்க்க வேண்டுமென்றால் எத்தனை நாளைக்கு முன்பே எழுதி கொடுக்க வேண்டும் ? எழுதி கொடுக்க வேண்டுமா அல்லது டெலிபோனிலே கேட்டால் போதுமா ? அந்த விவரம் தெரிந்துவிட்டால் அது இந்த மன்றத்தின் உறுப்பினர் களுக்கும், இந்த நாட்டு மக்களுக்கும் நல்லது. ஏன்? மாண்புமிகு அமைச்சர்களுக்கும் நல்லதுதான். இதைப்பற்றி முதலிலேயே நான் பேச ஆரம்பித்தால் தகராறு வரும் என்று தெரியும்; அதனால் தான் கடைசியாக வைத்துக் கொண்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரமாகி விட்டது, முடித்து விடுங்கள்.

திரு. துரை முத்துசாமி : இப்படிப்பட்ட சீர்கேடுகள் இல்லாமல் மக்களுக்கு எளிதாக காண முடிகின்ற முதலமைச்ச ராக இருக்க வேண்டும். இந்த நாட்டிலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள், நலிவுற்ற மக்கள் எல்லாம் எளிதாக வந்து பார்த்து, தங்கள் குறைகளை எடுத்துச்சொல்லும் அளவுக்கு தன்னை இனிமேலாவது திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே பல குற்றச்சாட்டுகளை எடுத்து வைத்திருக்கிறேன். இன்னும் ஏராளமான குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. குறிப்பாக லஞ்சம், ஊழலைப் பற்றி பேச வேண்டும். அதற்கு நேரமில்லாத காரணத்தால் இந்த அளவு பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(6) அரசினர் தீர்மானம்.

விதி 22-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"சட்டமன்ற பேரவையில் முதல் ஒருமணி நேரம் 'வினாக்கள்-விடைகள்' என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 22-ஐ நாளை அதாவது 21-2-1979 அன்று தளர்த்த வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9·00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1·38 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(7) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும். எதுவுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*34. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 4/1979).

*35. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவிற்கான இணைப்பு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்.4/1979).

*36. 1979 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 5/1979).

*37. 1979 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) திருத்த சட்ட முன்வடிவிற்கான இணைப்பு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.5/1979).

*38. 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 6/1979).

*39. 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவிற்கான இணைப்பு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 6/1979).

*40. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 7/1979).

*41. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவிற்கான இணைப்பு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 7/1979).

---

*19-2-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புதன்கிழமை, 1979 பிப்ரவரி 21.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. தகவல் கோரல்.

திருச்சி சிம்கோ மீட்டர் சம்பந்தமான ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, நேரத்தின் அருமையை நான் உணருகிறேன். இருந்தாலும் திருச்சியிலே நடந்த சம்பவம் தொடர்பாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை எடுத்துக் கொண்டால் நல்லது என்று கருதுகிறேன். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் மிகச் சுருக்கமான நேரத்திலே பேசுவதற்கு தாங்கள் அனுமதித்தால் உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே இந்த அவையிலே டிஸ்அப்ருவல் ஆப் தி லேபர் பாலிசி என்ற ஒரு மோஷன்மீது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே அதன்மீது விரிவாக, விளக்கமாக, நன்றாகப் பேச முடியும் என்ற நோக்கத்தோடும், மேலும் நீங்கள் அனைவரும் எதையும் இப்போது எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று அலுவல் ஆய்வுக் குழுவிலே சொன்ன அறிவுரையின்படியும் நான் முடிவு எடுத்திருக்கிறேன்.

அது மட்டுமல்ல. நீங்கள் கொடுத்த உடனே அரசுத் தரப்பிலே தயாராக இருக்கிறார்களா என்று தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே அதனாலேதான் எடுத்துக்கொள்ளவில்லையே தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, அவையில் விவாதிக்கப்படுகின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்குப் பதில் 26 ஆம் தேதிதான் வர இருக்கிறது என்று அறிகிறேன். ஆனால் திருச்சியிலே நடைபெற்றிருக்கக்கூடிய சம்பவம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அச்சம்பவத்திற்கு ஒரு

விளக்கத்தை முன்னவரவர்கள் அளிப்பார்களேயானால் அது மிக்க வசதியாக இருக்கும். ஆகவே அரசுத் தரப்பிலே தயாராக இருந்தால் அதனை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசுத் தரப்பிலே தயாராக இருந்தால் நான் ஒன்றும் குறுக்கே நிற்கவில்லை.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, எதிர்க்கட்சியிலே எல்லோரும் தயாராக இருக்கிறார்கள், அரசுத் தரப்பிலே தயாராக இல்லை என்று எப்படி....

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, எனக்கு தகுந்த தகவல்கள் இல்லை. வேண்டுமானால் நாளைக்கு தகவல் திரட்டி எதிர்க்கட்சித் தலைவரவர்கள் மகிழ்கிற வகையில் இந்தத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இதிலே மகிழ்ச்சி என்ற பிரச்சினையே இல்லை....

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அதை வேண்டுமானால் மாற்றிக் கொள்ளுங்கள். திருப்தி அளிக்கிற வகையிலே என்று மாற்றிக் கொள்ளுங்கள்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அனைத்துக் கட்சியைச் சேர்ந்த தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அனைத்துக் கட்சி தொழிற்சங்கத்தினரும் சேர்ந்து நடத்திய ஒரு ஹர்த்தால் ஆகும் இது. ஒரு மிகப் பயங்கரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. வேறு விவாதம் நடந்து கொண்டிருக்கும் போது அது எடுத்துக்கொள்ளப்படாது என்று சொன்னால் இந்த அவையிலே என்ன விவாதம் நடந்தாலும் அது எந்தவிதமான பயனும் அளிக்காது என்ற நிலைதான் ஏற்படும். ஆகவே அரசு நினைத்தால் பதில்களைத் திரட்டிக் கொடுத்துவிட முடியும். ஆகவே உடனடியாக இதனை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, அரசுத் தரப்பிலே தயாராக இல்லை என்று சொன்னார்கள். நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று கூடச் சொல்லப்பட்டது. அப்படியானால் சிறையிலே அடைக்கப்பட்ட அனைத்துக் கட்சியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான தொழிலாளர்களையும், தொண்டர்களையும் உடனடியாக விடுவிப்பதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தலைவரவர்களே, நேற்று இந்தச் சம்பவம் பற்றிய செய்தி வந்த உடனேயே நான் இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன். நீங்கள் அலுவல் ஆய்வுக் குழுவில் நேற்று இருந்த சூழ்நிலையில் ஒரு முடிவு எடுத்திருக்கலாம். ஆனால் திருச்சியிலே இப்படிப்பட்ட ஒரு சம்பவம் நடக்கும் என்று எதிர்பார்க்கப்படவில்லை. இது ஒரு முக்கியமான சம்பவம். இதன் உள்ளே போக நான் விரும்பவில்லை. ஆகவே திடீரென்று ஏற்பட்ட சம்பவம், ஆதலால் இதை எடுத்துக் கொள்வது அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவிற்கு விரோதமாக இருக்காது. ஆகவே இந்தமாதிரி சம்பவங்களைப் பற்றி சீக்கிரமாக விவாதிப்பது நல்லது என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். நான் எடுத்துக்கொள்ளத் தயார். ஆனால் அரசுத் தரப்பிலே தயாராக இல்லை என்ற காரணத்தால் எடுத்துக்கொள்ள இயலவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து விவாதிக்கப் படுகிறது. அதோடு தொழிலாளர் சம்பந்தமான கண்டனத் தீர்மானமும் கொண்டு வந்து விவாதிக்கப்படுகிறது. ஆகவே இவற்றிலேயே கலந்து கொண்டு பேசுவதற்குப் போதுமான நேரம் இல்லை என்ற காரணத்தினால் அலுவல் ஆய்வுக் குழுவிலே இன்றைய கேள்வி நேரத்தைக்கூட வேண்டாம் என்று நிறுத்தி வைத்திருக்கிறோம்.

ஆனால் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டார்கள், நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கான பதில் 26-ம் தேதி என்றளவிற்கு வைத்துக்கொண்டிருப்பதால் பிரச்னைக்கு உடனடியாக பதில் கிடைக்க வாய்ப்பில்லையே என்ற கருத்தையும் வெளியிட்டார்கள்....

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அவைத் தலைவர் அவர்களே, பிரச்னையின் முக்கியத்துவத்தையொட்டி—இப்போது நமது தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார்கள். ஒரு மணிக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலக் கருத்தே இதைப்பற்றி விவாதிக்க இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்பதுதான். அப்படி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்திருக்கும்போது மற்ற அலுவல்களை எல்லாம் நடத்தி முடித்து விட்டு பிறகு எதை ஒத்திவைப்பது ? அவையைத்தான் ஒத்திவைக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆகவே தான் குறிப்பிட்டேன். இதிலே பேச வாய்ப்பிருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அல்லது மாண்புமிகு உறுப்பினர்கள் இச்சம்பவங்கள் பற்றிப் பேசலாம். நாளைய தினம் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று அரசின் தரப்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நேற்று காலையில் திருச்சியில் போலீஸின் அடக்குமுறையும் வன்முறைச் சம்பவங்களும் மிகப் பெருமளவிற்கு நடைபெற்று அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இரண்டொருபேர்கள் மருத்துவமனையில் அபாயகரமான கட்டத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வளவு சூழ்நிலையிருந்தும் கூட அரசாங்கத்தின் சார்பில் அக்கறை எடுத்துக் கொண்டு இதுவரை எந்த விசாரணையும் நடத்தாமல், இன்று காலை ஒரு நிலை வந்தால் அதற்குப் பதில் கூற வேண்டுமே என்ற அக்கறையில்லாது அரசாங்கம் இருந்ததைக் கண்டிக்கும் வகையில் நாங்கள் அடையாளபூர்வமாக வெளிநடப்பு செய்கிறோம்.

திரு. மு. அம்பிகாபதி : நாங்களும் வெளிநடப்பு செய்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸிஸ்ட்), ஜனதாக் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

[குறிப்பு ;—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம் ஆகியவை (விவாதம்—தொடர்ச்சி.)

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த அவையிலே அமைச்சரவையின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு இன்றைக்கு மூன்றாவது நாளாக விவாதம் தொடங்கியிருக்கிறது. இந்த நம்பிக்கையின்மைத் தீர்மானத்தை ஐந்து கட்சிகள் கொடுத்திருக்கிறார்கள். இந்த ஐந்து கட்சிகளும் இன்றைக்கு ஒன்றாகச் சேர்ந்து ஆட்சியில் இருக்கக் கூடிய கட்சியை எதிர்க்க ஒரு அணியைத் திரட்டக்கூடிய ஆரம்ப நிலையில் இருக்கிறார்கள் என்பதைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆரம்ப

நேரத்தில் இந்த ஐந்து கட்சிகளும் ஒன்றாக இருந்தார்களா என்று பார்த்தால் இந்த ஐந்து கட்சிகளும் ஒன்றாகயில்லை. இப்போது ஒன்றாகச் சேர்ந்திருக்கிறார்கள். அப்படி எந்தக் காரணத்தினால் இவர்கள் ஒன்று சேர முடிந்தது என்பதை தயவு செய்து ஆட்சியில் இருக்கக் கூடிய கட்சி சிந்திக்க வேண்டும்.

ஒரு நேரத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் முஸ்லிம் லீக்–ம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு தோழமைக் கட்சிகளாக இருந்து வந்தார்கள். தோழமைக் கட்சிகளாக இருந்தவர்கள் உங்களிடம் விரோதத்தை ஏற்படுத்திக் கொண்டு அங்கே போய்ச் சேர்ந்ததற்கான காரணம் என்ன என்பதை நீங்கள் அமைதியாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்தக் காரணத்தைப் பற்றி நீங்கள் சிந்திக்காமல் ஏதோ ஐந்து கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்துவிட்டார்கள், ஏதோ எங்கள் பேரில் விரோதமாக இருக்கிறார்கள் என்று மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் பிரச்னையை அணுகுகின்ற விதத்தில், அதைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளைக் காண்பதில் தவறு நேர்ந்து விடும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். இன்று ஆட்சியில் இருக்கக்கூடிய கட்சி அரசியல்ரீதியாக தன் பலத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும், ஆனால் அதே நேரத்தில் மக்களுடைய ஆதரவையும் பெருக்கிக் கொள்வதற்கான முயற்சியையும் எடுத்துக்கொள்ளவேண்டும். இந்த இரண்டு ஆஸ்பெக்டஸையும் பார்க்க வேண்டும். இன்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு முக்கிய எதிர்க்கட்சியாக இருக்கிற கட்சி எதிரிக் கட்சியாக இருக்கிறது.

[முற்பகல் 9-10]

உங்களுக்கு நேரிடையாக-எதிராக இருப்பது திராவிட முன்னேற்றக் கழகம். இன்றைக்கு அவர்கள் தங்களிடத்தில் ஐந்து கட்சிகளையும் சேர்த்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் கட்சிகளை இணைத்துக் கொள்வதற்கான நிலைமை அவர்களுக்கு எப்படி ஏற்பட்டது என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும், ஆகவே இன்றைக்கு உங்களுடைய நிலையில் பார்க்கிறபோது, உங்களுடைய நிலையைப் பலப்படுத்திக் கொள்வதற்கு ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறீர்களா, அந்தக் கண்ணோட்டத்தில் அரசியல்ரீதியாகப் பார்ப்பதற்கு நீங்கள் தவறியிருக்கிறீர்கள் என்பதுதான் என்னுடைய கருத்து. உங்களை அறியாமலேயே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நல்லதை செய்து கொண்டிருக்கிறீர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த அளவில் எங்களுக்கு எதிர்க்கட்சி. சமீப கால நடவடிக்கைகளை எல்லாம் கவனித்துக் கொண்டு வரும்போது, நிச்சயமாக எங்களுக்கு தோழமை கட்சியாக இருக்க முடியாது. அதுபோல்தான் ஜனதாவும் எங்களுடைய தோழமை கட்சியாக இருக்க முடியாது. மார்க்சிஸ்ட் கட்சியைப் பொறுத்த

அளவில் எங்களை வெகு வேகமாக கடுமையாக எதிர்க்கக்கூடியவர்கள். அவர்களும் எங்களுக்கு தோழமைக் கட்சியாக இருக்க முடியாது. அப்படியிருக்கும்போது, அவர்கள் எல்லாம் இன்றைக்கு ஒன்று சேர்ந்திருப்பதற்கு என்ன காரணம் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்னொரு வகையில் அவர்களுக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், அவர்களுக்குள்ளேயே சண்டை வராத விதத்தில் நீங்கள் சந்தர்ப்பத்தை உண்டுபண்ணி விட்டீர்கள். அவர்களிடம் உள்ளுக்குள்ளேயே சண்டை போட்டுக் கொண்டிருந்தவர்கள் பலரை நீங்கள் சேர்த்துக் கொண்டீர்கள். தெரிந்தோ தெரியாமலோ, நீங்கள் இந்தக் காரியத்தை செய்ததினால் அவர்களுக்கு நீங்கள் நன்மை செய்தவர்களாகி விட்டீர்கள். இல்லையென்றால் அவர்களுக்குள்ளேயே அடித்துக் கொண்டிருப்பார்கள். அதையும் இல்லாமல் செய்து விட்டீர்கள். இல்லையென்றால் இந்தக் கட்சிகளை எல்லாம் ஒன்றாக ஆக்கும் முயற்சியில் கவனம் செலுத்தியிருக்கமுடியாது. உங்களுடைய செயலின் காரணமாக அவர்களுக்கு நிறைய நேரத்தை கொடுத்து விட்டீர்கள். அவர்களுக்கு டைவர்ஷன் இல்லாமல் இருக்கக் கூடிய அளவுக்கு நீங்கள் நேரத்தை கொடுத்துவிட்டதினால் அவர்கள் இப்படிப்பட்ட-எல்லோரையும் சேர்த்துக்கொண்டு இருக்கக்கூடிய பலத்தை ஏற்படுத்தியிருக்கிறீர்கள் என்பது என்னுடைய கருத்து. அதே நேரத்தில் உங்களுடைய கண்ணோட்டம், உங்களுடைய கணிப்பு தவறாக இருக்கிறது என்பது என்னுடைய கருத்து. இதை நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். எல்லாக் கட்சிகளும் போய்விட்டார்கள், உங்களோடு சேர்ந்து உங்களுக்கு ஒத்துழைப்பு தந்து கொண்டு இருப்பது நாங்கள் ஒன்றுதான். நாங்கள் ஒன்றுதான் இப்போது மிச்சமாக இருக்கிறோம்.

இந்த நிலையில் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தளவிலும் நீங்கள் உணர்வுபூர்வமாக எல்லாப் பிரச்னைகளிலும் பார்ப்பதில்லை என்பதைத்தான் பார்த்துக்கொண்டிருக்கிறோம். எங்களுடைய கட்சியில் பெரும்பகுதியாக இருக்கின்றவர்களுக்கு மனக்கசப்பு, மனத்தாங்கல், இப்படிப்பட்ட உணர்வு ஏற்பட்டு இருக்கிறது. எங்களையும் நீங்கள் உணர்வுபூர்வமாக ஆதரிப்பதில்லை என்பதைத்தான் எங்களில் பெரும்பகுதியினர் மனக்கசப்பாகக் கொண்டிருக்கிறார்கள். இந்த மனக்கசப்பைப் போக்கி உணர்வுபூர்வமாக ஆதரிக்கின்ற நிலையில் முயற்சிகளை எடுக்க நீங்கள் முன்வரவேண்டும். இன்றைக்குள்ள நிலையில் காங்கிரசும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் தோழமைக் கட்சிகளாக இருக்க வேண்டும் என்ற மேலிடத்தின் முடிவுக்கேற்ப ஒன்றாகத்தான் இருப்போம். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் இது உணர்வு பூர்வமாக இருக்க வேண்டும் என்பதுதான் எங்கள் விருப்பம். இன்றைக்கு இருக்கின்ற நிலையில் இப்போது சேர்ந்

திருக்கும் இந்த ஐந்து எதிர்க்கட்சிகளும் அரசியல்ரீதியாக ஒன்றாக இருக்குமா என்று இப்போது சொல்ல முடியாது. ஆனால் இன்றைக்குள்ள நிலைமையில் எல்லா நடவடிக்கைகளிலும், குறிப்பாக தொழிற்சங்க நடவடிக்கைகளில் எல்லாம் நாங்கள் எல்லோரும் ஒன்று என்ற வகையில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த நிலை, தேர்தல் காலத்திலும் நீடித்து இருக்குமா என்று இப்போது சொல்ல முடியாது. அந்தக் கணிப்பை இப்போதே சொல்ல முடியாது. அந்த நேரத்தில் மாறுதல் வந்தாலும் வரலாம். அதுவரையில் உங்களுடைய பலத்தை எப்படிப் பெருக்கிக் கொள்வது என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

குறிப்பாகப் பார்க்கும்போது, காங்கிரஸ்காரர்களின் உள் விவகாரங்களில் ஆளும் கட்சிக்காரர்கள் தலையிடுகிறார்கள் என்பதுதான் எங்களில் பெரும்பகுதியினரின் கருத்து, அவர்களின் சங்கடம். அப்படிப்பட்ட சங்கடம் வராமல் நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். இப்போது வேண்டுமானால் இதில் எங்களுக்கு எந்த சம்பந்தமும் இல்லை என்று சொல்லுவீர்கள். ஆனால் உணர்வுபூர்வமாக அப்படியில்லை. நான் எல்லோரிடமும் பேசிக்கொண்டிருக்கிறேன். அவர்களிடம் எல்லாம் இப்படிப்பட்ட உணர்வுதான் இருந்து கொண்டிருக்கிறது. இப்படி தோழமைக் கட்சியாக இருக்கின்ற ஒரு கட்சி பலவீனப்பட்டால் அது உங்களுக்குத்தானே பலவீனம்? உங்களுடைய நண்பனை நீங்கள் பலப்படுத்த வேண்டும். ஆனால் நீங்கள் உங்கள் நண்பனை பலஹீனப்படுத்துகிறீர்கள். அதுதான் சங்கடம். இந்த நிலையிலே உங்கள் நண்பனைப் பலப்படுத்த வேண்டும்.

காங்கிரஸ் கட்சி உங்கள் கட்சியோடு ஒன்று சேர வேண்டும் என்றால், நீங்கள் காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்த வேண்டும்; ஆனால் பலஹீனப்படுத்துகிறீர்கள். அதனால் யாருக்கு லாபம்? அதன்மூலம் யாரை பலஹீனப்படுத்துகிறீர்கள்? உங்களை பலஹீனப்படுத்திக் கொள்கிறீர்கள். அந்தக் கண்ணோட்டத்திலே நீங்கள் இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கின்ற நிலைமை உங்களுக்குத் தெரியும். காங்கிரஸ் கட்சியிலே உள்ள சிலர் திராவிட முன்னேற்றக் கழகத்தோடு சேரப் போகிறார்கள் என்ற அச்சம் உங்களுக்கு வந்திருக்கிறது. அது தப்பு. எப்படி போக முடியும்? தி. மு. க. மதுரையிலே அடித்த அடியை நாங்கள் மறக்க முடியுமா? அப்படியிருக்கும்போது, எப்படி நீங்கள் காங்கிரஸ் கட்சி தி.மு.க.வோடு சேர முயற்சிக்கிறார்கள் என்ற கணிப்பைப் போடுகிறீர்கள்? இது தப்பு. உங்களுடைய போலீஸ் இலாகா, சி. ஐ. டி. சொல்லியிருக்கலாம். இந்திரா அம்மையார் தேர்தலிலே நின்றால் ஜெயித்து விடுவார்கள் என்று சொன்னார்கள். அதேபோல் தி. மு. க.வோடு காங்கிரஸ் கட்சி போட்டி போடும்போது, காங்கிரஸ் கட்சி ஜெயிக்கும் என்று ஒரு பெரிய போலீஸ்

அதிகாரி காமராஜ் அவர்களுக்கு மாலை போட்டார். என்ன ஆயிற்று? எனவே, கணிப்பு உண்மையாக இருக்க முடியாது. அப்படிச் சொல்லியிருக்கலாம். அப்படி போலீசிலே உங்களுக்கு ரிப்போர்ட் கொடுக்கலாம். அதை வைத்துக் கொண்டு, தோற்றத்தை உண்மை என்று நீங்கள் கருதிவிடக் கூடாது. தோற்றம் வேறு, உண்மை வேறு. தோற்றம் எப்படி உண்மையாக இருக்க முடியும்? எனவே, தோற்றத்தை உண்மை என்று நீங்கள் நினைத்தால், அது உங்களையே பலஹீனப்படுத்தி விடும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்
புண் என்று உணரப்படும்." அஃதுஇன்றேல்

அந்தச் சிரங்கு உங்களுக்கு ஏற்பட்டு விட்டது. உண்மை, அந்தச் சிரங்கை ஆபரேஷன் செய்ய வேண்டும். மூடி வைக்கக் கூடாது.

இதிலே உங்களுடைய கணிப்பு சரியாக இருக்க வேண்டும். தவறாக இருந்தால் தவறான பலன்தான், தவறான போக்குதான் ஏற்படும், நல்ல பலனைத் தராது என்பதைச் சொல்லிக கொள்ள ஆசைப்படுகிறேன். இங்கே தி. மு. க. தலைவர் அவர்கள் இருக்கிறார்கள். ரொம்பவும் சாமர்த்தியமாக காரியங்களைச் செய்யக் கூடியவர். பத்திரிகைகளிலே சாமர்த்தியமாகச் செய்திகளைத் தந்து, எங்களை உங்களுடன் சேரமுடியாதபடி முயற்சி செய்வார். உங்கள் பக்கம் போக முடியாதபடி முயற்சிகள் எடுப்பார். எங்களைத் தனிமைப்படுத்த வேண்டுமென்றுதான் முயற்சிப்பார். அரசியல் ரீதியாக அவர்கள் அதைச் செய்வார். அவர்கள் முயற்சிக்கு நீங்கள் பலியாகி விடுகிறீர்கள். எங்களைக் கூப்பிட்டு தி. மு. க. தலைவர் பேசினாலேயே வேலை முடிந்துவிட்டது என்று நினைப்பதே தவறு. (சிரிப்பு) அது உங்களுடைய தவறான நிலை. என்னவோ நடந்துவிட்டது என்கிற அச்ச உணர்வு உங்களுக்கு இருக்கிறது. அது இருக்கக் கூடாது. அந்த அளவிலே உங்களுடைய கணிப்பு தவறு. அந்த அளவிலே உங்களுடைய பல செயல்கள் தவறான வழியில் செல்கின்றது. உங்களுக்கு அது நல்லதல்ல என்பதைச் சுட்டிக் காட்டுவது என் கடமை. தோற்றம் வேறு; உண்மை வேறு. தோற்றமே உண்மையாக இருக்க முடியாது. தோற்றத்தை உண்மை என்று நீங்கள் ஏமாந்து விடுகிறீர்கள்—ஏன் ஏமாந்து விட்டீர்கள். அது தவறு என்பதை நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, அரசியல்ரீதியாகச் செயல்படுகின்றபோது கணிப்பு தவறு. என்ன வருமென்று கணிப்பது அரசியல்ரீதியாக அரசியல் தலைவர்களுக்கு இருக்க வேண்டிய ஒரு தலையாய சக்தி, திறன். அந்தத் திறன் உங்களுக்கு இல்லை. உதாரணமாக சொல்கிறேன். உத்தரப் பிரதேசத்தில் இரண்டு நாட்களுக்கு முன்பு என்ன

நடந்தது? ராம் நரேஷ் யாதவ் முதலமைச்சராக இருந்தார்கள், இன்றைக்கு அவர் தோற்கடிக்கப்பட்டு இருக்கிறார். அவர் கணிப்பு சரியில்லை. தனக்கு பெரும்பான்மை பலம் இருக்கிறது என்று நினைத்ததால், தவறு ஏற்பட்டது. அந்த நிலையில் உங்களுடைய கணிப்பு தவறு. அதைப்போன்ற செயல்களைச் செய்தால் அது தவறாகத்தான் முடியும். கீழே விழுந்து விடுவோம். ஆக, கணிப்பு சுத்தமாக இருக்க வேண்டும். ஒரு மனிதனைப் பார்த்தவுடனேயே அவன் எப்படிப்பட்டவன் என்பதை அறிந்து கொள்ள அரசியல் தலைவர்களுக்கு இருக்கக் கூடிய தலையாய குணாம்சங்கள், பிரதான குணாம்சங்கள் என்ன என்பதை லெனின் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஒரு மனிதனைப் பார்த்தவுடனே, அவன் தகுதி என்ன? லட்சணம் என்ன? என்ன குணாம்சங்கள் என்பதை கணிக்கக்கூடிய சக்தி இருக்க வேண்டுமென்று சொல்கிறார். அது உங்களுக்கு இல்லை. மாரிமுத்துவைக் கண்டவுடனேயே சந்தேகப்படுகின்ற அளவுக்கு பார்க்கிறீர்கள். அந்த அளவில் கணிப்பில் நீங்கள் தவறு செய்கிறீர்கள்.

[முற்பகல் 9-20]

அரசியல்வாதி சரியான முறையில் கணிப்புச் செய்யவேண்டியது பிரதான லட்சணமாகும். அதிலே தவறு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது பிரச்சினைகளில் அணுகுமுறை எப்படி இருக்கிறது? அதிலே தவறு செய்கிறீர்கள். தொழிற்சங்கம் என்பது தொழிலாளர்கள் போராடக் கூடிய அமைப்பு. ஒரு காலத்தில் அது இல்லாமல் இருந்து பெரிய போராட்டங்களை எல்லாம் நடத்தி தொழிற்சங்க அமைப்பு ஏற்பட்டிருக்கிறது. தொழிற்சங்கத் தலைவர்களைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள்? பெரிய வசதியுடன் தொழிற்சங்கத் தலைவர்கள் இருக்கிறார்கள் என்று பேசியிருக்கிறார்கள். அவர்கள் தொழிற்சங்கத் தலைவர்களாக வர எவ்வளவோ தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். தொழிலாளர் நலன்களுக்காகப் போராடி தியாகங்களைச் செய்து வரக்கூடிய தலைவர்கள் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய நிலைமை ஏற்படலாமா? தலைவர்கள் ஓரளவு வசதியாகத்தான் இருக்க வேண்டும். பத்து சங்கங்களுக்குப் போக வேண்டியவர்கள் காரில்தான் போக வேண்டும். பஸ்ஸில் எப்படி அத்தனை இடங்களுக்கும் போக முடியும்? அமைச்சர்களாக இருப்பவர்களுக்கு சில வசதிகள் இருக்கத்தான் வேண்டும். நீங்களும் எங்களைப்போல் எம். எல். ஏ.க்கள் தானே, பஸ்ஸில் வாருங்கள் என்று சொன்னால் அது தவறு. ஆகவே, தொழிற்சங்கத் தலைவர்களுக்கு வசதிகள் இருக்கத்தான் வேண்டும். முதலமைச்சர் அவர்கள் இப்படி

அவர்களைப் பற்றிப் பேசுவதற்கு காரணமாக தொழிற்சங்கத் தலைவர்களின் எதிர்ப்பையும், தொழிலாளர்களின் எதிர்ப்பையுந் தான் பெறுகிறார்.

முதலமைச்சர் அவர்கள் சமுதாயத்தின் கீழ் மட்டத்தில் இருப்பவர்கள் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்; மேலே இருப்பவர்கள் மேலும் ஊதிய உயர்வு கேட்பது சரியா என்ற முறையிலே பேசுகிறார்கள். அவர்களுடைய உணர்வை மதிக்கிறேன், ஆனால் அதே சமயத்தில் இன்றைக்கு இருக்கிற சமூக அமைப்பில் யதார்த்த நிலையைப் புறக்கணித்துவிடக் கூடாது. இன்றைக்கு மனிதன் எவ்வளவு வேண்டுமானாலும் சம்பாதிக்கலாம். சொத்துக்குத்தான் வரம்பே தவிர, வருமானத்திற்கு வரம்பு கிடையாது. ஒவ்வொரு மனிதனும் தன்னைப் பற்றி, தன் குடும்பததைப் பற்றி மனதில் கொண்டு தன் தேவைகளுக்கேற்ற அளவு சம்பாதிக்க வேண்டும், குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும், சமுதாயத்தில் முன்னேற வேண்டும்என்று கருதுகிறான். காந்தியடிகள் மாதிரி எல்லோரும் கீழே உட்கார்ந்திருக்க வேண்டுமென்று எதிர்பார்க்க முடியாது. அந்தந்த நிலையில் இருக்கக் கூடியவர்கள் தங்கள் நிலையை சமுதாயத்தில் உயர்த்திக் கொள்ள விரும்புகிறார்கள். 200 ரூபாய் சம்பாதிக்க முடியாமல் பலர் இருக்கும்போது ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கக் கூடியவர்கள் மேலும் ஊதிய உயர்வு கேட்பதா என்பது யதார்த்த நிலையில் சரியல்ல. அவரவர்கள் இருக்கக்கூடிய ஸ்தாபனங்களின் நிலைமைக்குத் தகுந்தவாறு அதிகச் சம்பளம் பெறவேண்டும் என்று கருதுகிறார்கள். இந்த சமுதாய அமைப்பிலே கீழே இருப்பவர்களுக்கு ஒன்றும் இல்லை என்று சொல்லிக் கொண்டிருப்பது சரியல்ல. இதிலும் உங்கள் அணுகுமுறை தவறு.

விவசாயிகள் கடன்களை ரத்து செய்ய வேண்டும், விளைச்சல் கிடையாது என்று போராடுகிறார்கள். அதைப் பற்றி அரசுத் தரப்பில் கருத்துச் சொல்லவில்லை. பின்னர்தான் அறிவிப்பு வரப் போகிறது. மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்கள் மற்ற அமைச்சர்களோடு கலந்து பேசி முடிவு செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது. பணக்காரர்களின் தூண்டுதல் காரணமாகத் தான் விவசாயிகள் இந்தப் போராட்டத்தை நடத்துகிறார்கள் என்று சொன்னால் அது இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் காணுவதாக அமையாது. இப்போது எந்த வசதி படைத்தவன் சொன்னாலும் கிராமத்திலே யாரும் கேட்க மாட்டார்கள். ஒரு காலத்தில் அந்த நிலைமை இருந்தது. கிராமத்திலுள்ள விவசாயிகளுக்கு பிரச்சினைகள் இருக்கின்றன. அவனால் தனக்கு ஏற்படக்கூடிய சங்கடங்களைத் தீர்த்துக் கொள்ள முடியவில்லை. அரசை வற்புறுத்த வேண்டுமென்ற முறையில் அவர்கள் போராட முன்வருகிறார்கள். இதை யாரோ தூண்டிவிட்டுச் செய்கிற காரியம் என்று கருதிவிடக் கூடாது.

அரசியல் கருத்து வரலாம். இல்லையென்று சொல்லவில்லை. அரசியல்வாதிகள் பேசலாம். இவர்கள் முழுமையாகத் தூண்டிவிட்டார்கள் என்று சொல்ல முடியாது. அந்தக் கீழ் மட்டத்தில் இருக்கிற மக்கள் தங்கள் சங்கடங்களைச் சொல்லுகிறார்களே தவிர அதை யாரோ தூண்டிவிட்டார்கள் என்ற கண்ணோட்டத்தில் பார்த்தால் நிலைமை வேறு விதமாகப் போய் விடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து என்.ஜி.ஓ-க்கள் பிரச்சினை, ஆரம்பத்திலே அணுகுமுறை அவர்களோடு பேசிய முறை சரியில்லை. காரியம் செய்கிறோமோ இல்லையோ அவர்களோடு பேசக்கூடிய முறை வேண்டும். பிரச்சினைகளை அணுகுவது, பிறரோடு பழகுவது இவைகளிலே கருத்தைச் செலுத்த வேண்டும். எனக்கு 25 ஆண்டுக்காலமாக ஒரு நண்பர் இருந்தார், அவர் எனக்காகவே இருப்பதாகச் சொல்லிக் கொண்டு அவ்வளவு நட்பாக இருந்தார், தேர்தல் வந்தது என்று சொன்னால் தட்டியைக் கட்டிக் கொண்டு கிராமம் கிராமமாக சாப்பாடு, தண்ணீர் இல்லாமல் பிரச்சாரம் செய்வார், அப்படிப்பட்ட நண்பர். ஆனால் அவர் இப்போது எதிரியாகிவிட்டார். நான் ஒன்றும் பண்ணவில்லை, அவருடைய தாயார் இறந்துவிட்டாராம், அது எனக்குத் தெரியாது, நான் அந்த ஊருக்குப் போயிருந்தபோது இன்னொருவர் வீட்டிலே ஒருவர் இறந்துவிட்டார் என்பதற்காக அங்கே போய் துக்கம் விசாரித்துவிட்டு வேறு வேலையாக உடனே போய் விட்டேன். ஆனால் அவர் என்ன நினைத்து விட்டார் என்றால் பணக்காரர் வீட்டுக்குப் போய் துக்கம் கேட்கிறார், அவரைப் போன்ற ஏழை வீட்டுக்கு வருவாரா என்று நினைத்துக் கொண்டுவிட்டார். அப்படிப்பட்ட உணர்வுகள் மெல்லிய உணர்வுகள் நன்றாக இருந்த நட்பை பாதிக்கக்கூடிய அளவிற்கு அந்த உணர்வுகளைக் கொஞ்சம் லேசாகத் தட்டி விட்ட உடனே நண்பரை எதிரியாகப் பார்க்கக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. மற்றவர்களோடு பழகுகிற விதத்திலே சிலர் நமக்கு எதிரிகள் ஆகக்கூடிய நிலைமையை ஏற்படுத்தக்கூடாது என்பதை நான் ஆளுங்கட்சியினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் விமர்சிக்கிறேன் என்று சொன்னால் அதை அவர்கள் எவ்வளவு தூரம் டைஜஸ்ட் பண்ணுகிறார்கள் என்று எனக்குத் தெரியாது. சங்கடங்கள் இருக்கலாம். நாங்கள், எதிர்வரிசையிலே இருக்கிறவர்கள், விமரிசிக்கிறபோது அவைகளை நலத்துக்காக என்று எடுத்துக்கொள்ளவேண்டும், ஒரு புதிய போக்கு, ஒரு ரீ திங்கிங் வேண்டுமென்ற முறையிலே நாங்கள் சொல்கிறோம். அப்படிச் சொல்கிறபோது நீங்கள் உங்களைப் பலப்படுத்திக்கொள்ள எதிர்வரிசையிலே உள்ளவர்களுடைய கருத்துக்

களை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் விமரிசனம் செய்வதே தவறு என்ற முடிவுக்கு நீங்கள் வந்துவிடக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கிரஸ் கட்சியும் அண்ணா தி. மு. க.வும் தோழமைக் கட்சிகளாக வரலாம், அது வேறு விஷயம். ஆனால் இரண்டும் தனித்தனிக் கட்சிகள்தான். அண்ணா தி. மு. க. வேறு. காங்கிரஸ் கட்சி வேறு. எல்லாக் கட்சியும் ஒன்றாகிவிடலாம், ஆனால் தனித்தனிக் கட்சிகளாக இருக்கிறபோது, தோழமை கட்சிகளாக இருக்கிறபோது சில கருத்து மாறுபாடுகள் இருந்தால் அவைகளை சுட்டிக் காட்டுவதே தவறு என்று நீங்கள் கருதிவிடக் கூடாது, அதே நேரத்திலே நீங்கள் எடுக்கின்ற நடவடிக்கைகள் அத்தனையையும் காங்கிரஸ் கட்சி ஆதரிக்கும் என்று எதிர்பார்ப்பதும் தவறு. சில தவறுகளைச் சுட்டிக்காட்டத்தான் வேண்டும்.

அண்ணா அவர்கள் இங்கே ஒரு தடவை சொன்னார்கள். எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. பூனை எலியைத் தூக்கிக்கொண்டு போவதற்கும், தன்னுடைய குட்டியைத் தூக்கிக்கொண்டு போவதற்கும் பார்ப்பதற்கு, பார்வைக்கு அது ஒன்றாகத் தெரிந்தாலும்கூட, அது பிடிக்கிற பிடியிலே மாறுபாடு உண்டு என்று சொன்னார்கள்....

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசியதைக் குறிப்பிட்டு அண்ணா அவர்கள் அதைச் சொன்னார்கள், அதைச் சொல்லிவிட்டு, பூனை தன்னுடைய வாயால் கவ்விக்கொண்டு போகிறது ஆனால் அதனுடைய பல் மட்டும் கொஞ்சம் அதிகமாகப் பட்டுவிட்டது என்று சொன்னார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. எஸ். ஜெ. சாதிக் பாட்சா :</u> தற்போது மாண்புமிகு ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் எந்தப் பிடியைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. ஏ. ஆர். மாரிமுத்து :</u> நான் பேசிக் கொண்டு வருவதை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள் எப்படியென்று. இந்த நிலையை நான் சொல்வதற்குக் காரணம், எதிரியைக் கூட தன்வயப்படுத்தக் கூடிய சக்தி உங்களுக்கு இருக்க வேண்டும் என்பதைச் சொல்வதற்குத் தான்.

ஒரு தடவை அண்ணா அவர்கள் சொன்னதை நான் கூற விரும்புகிறேன். ஒரு நிலப் பிரச்சினையிலே சேலத்திலே இருந்த பாரஸ்ட் இலாகாவிலே உள்ள பிரச்சினையைப்பற்றி நான் அப்போது இருந்த விவசாய அமைச்சரைப் பார்த்துச்

சொன்னேன். அப்போது விவசாய அமைச்சராக காலஞ்சென்ற திரு. கோவிந்தசாமி அவர்கள் இருந்தார்கள். அவர்களுக்கும் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் என்ன காரணமோ தெரியவில்லை, அப்போது பிடிக்கவில்லை. ஏதோ வம்பு இருந்தது. அண்ணா அவர்கள் அந்தவிவசாயிகளுக்கு சில காரியங்களைச் செய்ய விரும்பினார்கள், ஆகவே அப்போது இருந்த அமைச்சருக்கு எங்கள் கட்சியைச் சேர்ந்த தோழர்கள் மீது ஒரு காழ்ப்புணர்வு வந்துவிட்டது.

(முற்பகல் 9-30)

ஏதாவது தப்பாகப் பேசியிருக்கலாம். இதை வைத்துக் கொண்டு அண்ணா பேசுகிறார். அவர் விவசாயர் சங்கத் தலைவர். நானும் கூட இருக்கிறேன். அப்பொழுது அவருடைய அணுகுமுறை எப்படியிருந்தது என்பதற்காகச் சொல்கிறேன். அவர் பேசுகிறார், வடிவேலு என்பவர் விவசாயச் சங்கத் தலைவர். அவரைப் பார்த்து, ''என்ன வடிவேலு, ஏன் கோவிந்தசாமியிடம் பேசுகிறாய், அவர் தாங்குவாரா? எவ்வளவு வேண்டுமானாலும் என்னிடம் பேசிக்கொள், அவரிடம் போய்ப்பேசாதே, இனிமேல் என்னைப்பார்த்துப் பேசிக்கொள்'' என்று சொன்னார். இதிலிருந்து அவருடைய அணுகுமுறை எப்படி என்பது தெரிகிறது. பிரச்னையைத் தீர்க்க அவர் எப்படி முயற்சித்தார் என்பதை உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பிரச்னைகள் தன் கையை விட்டு எதிர்க்கட்சிக்கும் போய்விடாமல் பார்த்துக் கொள்வதில் அவர் கவனமாக இருந்தார்.

இங்கே நீங்கள் இரண்டு பேர்களும் அண்ணா வழி, அண்ணா வழி என்று சொல்லி, அண்ணா வழியைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள் ஆனால் சில வேளைகளில் நீங்கள் இரண்டு பேருமே அந்த வழியைப் பின்பற்றவில்லை என்பது என் கருத்து. ஆகவேதான் நான் இதைக் சொல்கிறேன. இதை நீங்கள் கருத்திற்கொள்ள வேண்டும்,

அடுத்து, சமுதாயப் பிரச்னைகளைத் தீர்ப்பதிலே எந்த அளவிற்கு நீங்கள் வெற்றி கண்டிருக்கிறீர்கள்? சென்றமுறை பேசியபொழுதே நான் இதுபற்றிப் பேசினேன். கீழே உள்ள சில மக்களுடைய நிலை உயர்வதற்கு நீங்கள் எதையும் செய்யவில்லை. செய்கிறேன் என்று சொன்னால் மட்டும் போதாது அவர்கள் அதை உணரவும் வேண்டும். இன்றைக்கு இந்த அரசு இந்தக் காரியத்தைச் செய்ததால் எனக்கு ஒரு ரூபாய் வருமானம் கிடைத்தது, மூன்று வேளை சாப்பிடுகிறேன் என்று சொல்ல வேண்டும். அல்லது ஒரு வேளை சாப்பிட்டவன் இரண்டு வேளை சாப்பிடுகிறேன் என்று சொல்லும் நிலைமை உயர வேண்டும். இப்படி அவர்களுக்கு வரும்படியான நிலையைச் செய்திருக்கிறோமா என்று பார்க்க வேண்டும்.

அரசியல் ரீதியாக எதிரிகளைப் பலப்படுத்திக்கொண்டிருக்கிறீர்கள், பொருளாதார ரீதியில் பார்த்தாலும், கீழே உள்ள சாதாரண மக்களை உங்கள் பக்கம் ஈர்ப்பதற்கு நீங்கள் தாமதித்து விட்டீர்கள், அதில் சரியாகக் கவனம் செலுத்தவில்லை என்பது தான் என்னுடைய கருத்து, (குறுக்கீடு) உங்கள்கூட நான் வர மாட்டேன் என்பதை நீங்கள் நிச்சயமாக வைத்துக்கொள்ளுங்கள். அதாவது ஜனதா கட்சியோடு. நீங்களும் எங்களோடு வர மாட்டீர்கள்.

ஆகவே, இப்பொழுது இருக்கும் நிலையில் கீழே உள்ள சாதாரண உழைக்கும் மக்கள், வறுமையிலே வாடும் மக்கள் ஆகியோருக்கு அவர்களுடைய நிலையை உயர்த்துவதற்கு நிறைய காரியங்களை நீங்கள் செய்ய முடியும். அவைகளைச் செய்வதற்கு வாய்ப்பில்லை என்று சொல்ல முடியாது, செய்ய முடியும் எல்லாவற்றையும் சட்டம்போட்டுத்தான் செய்யமுடியும், பணத்தை வைத்துக்கொண்டுதான செய்யமுடியும் என்பது அல்ல. சில சட்டங்களின் மூலம் பணச் செலவு இல்லாமல் கூட அவைகளைச் செய்யமுடியும். ஆனால் அவைகளை நீங்கள் செய்யவில்லை.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அறிவிப்பு ஒன்றைக் கொடுத்தார்கள். 25 சதவீதம் வாரம் கொடுத்தால் போதும் என்று அறிவிப்பு செய்தார்கள். இந்த அறிவிப்பு சரியா, இதனால் என்ன மெட்டீரியல் பெனிஃபிட் வரும் என்று யோசித்துப் பார்த்தால் ஒன்றும் இல்லை என்பது என்னுடைய சொந்தச் கருத்து. இதைப் பற்றி கட்சியில் விவாதிக்கவில்லை. 40 சதவீதத்தை 25 சதவீதமாகச் செய்து விட்டீர்கள். ஆனால் இவன்தான் 5 வருஷமாக வாரமே கொடுக்க வில்லையே. நிலக்காரர்களுக்குக் கிடைக்கவில்லை, அவர்கள் அம்போ என்று இருக்கிறார்கள். இந்த 25 சதவீதத்தையாவது ஒழுங்காகக் கொடுப்பானா, கொடுக்க முடியுமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. முன்பு ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டு அமுலில் கொண்டு வந்து நிறைவேற்றாமல் கைவிடப்பட்டிருக்கிறது. அதை நிறைவேற்றினாலாவது மெட்டீரியல் பெனிஃபிட் கிடைக்கும். குத்தகைக்காரர்களுக்கே நிலத்தைச் சொந்தமாக ஆக்குவது என்ற சட்டம் காலாவதியாகிவிட்டது.

முன்பு ஒரு சட்டம் கொண்டு வந்ததை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்து ரதது செய்துவிட்டார்கள். மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் முதலமைச்சராக இருந்தபொழுது குத்தகை கொடுக்க வேண்டாமென்று ரத்து செய்தார்கள். இப்பொழுது நான்கு வருஷங்களாகப் பாக்கியிருக்கிறது. இப்பொழுது 25 சதவீதம் என்று போட்டால் நிலைமை என்ன என்று பார்த்தால், ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கர் வைத்திருப்பவர்கள் வாய்தாவை, தண்ணீர்த் தீர்வையைக் கடன் வாங்கிக் கட்டிவிட்டு

குத்தகைதாரரிடம் அலைந்து அலைந்து கைக்காசையும் செலவழித்துவிட்டு, குத்தகை வரவில்லை, குத்தகை வசூல் செய்ய முடியவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. ஆகையினால் இதை இன்னும் ஏன் கையில் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? குத்தகைத்தாரர்களை வெளியேற்றக் கூடாது என்று 1952 ஆம் ஆண்டிலே ராஜாஜி காலத்தில் சட்டம் போட்டப்பட்டு விட்டது. இனிமேல் அவர்களை வெளியேற்ற முடியாது. அவர்களிடம் குத்தகை கேட்டு, சண்டை போட்டு, சர்க்காருக்கு வந்து ரத்து செய்து கொடுப்பது என்ற முறை ஏன் இருக்க வேண்டும். ஆகையால் மெட்டீரியலாகக் குத்தகைதாரர்களுக்கும் பெரிய பெனிஃபிட் வரவில்லை. எனவே, நிலச் சொந்தக்காரர்களுக்குக் காம்பன்சேஷன் கொடுத்துவிட்டால் அந்தப் பணத்தை அவர்கள் பேங்கில் போட்டு அதில் வரும் வட்டியை வைத்துக் கொண்டு சாப்பிடுவார்கள், அதைக் கொண்டு 4 மூட்டை நெல்லை வாங்கி வைத்துக் கொண்டு சாப்பிடுவார்கள். எனவே, இதையெல்லாம் பார்க்காமல் அவர்கள் எந்தக் கண்ணோட்டத்தில் இதைச் சொன்னார்கள் என்று தெரியவில்லை. இது உங்கள் சிந்தனையின் தவறு என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்-தலைமை)

அரசியல் தலையீடே கூடாது என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருத்து. அது எல்லோரும் வரவேற்கக் கூடிய ஒன்று. எல்லோரும் வரவேற்ற ஒன்று. ஆனால், ஆரம்ப காலத்தில் இருந்தமாதிரி, முதல் 6 மாதங்கள், 1 வருடம் இருந்த மாதிரி இல்லாமல் இப்பொழுது தலையீடு இருக்கிறது என்று சொல்கிறார்கள். இதையெல்லாம் பார்த்து நீங்கள் திருத்திக் கொள்ளவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இலஞ்சம் போக வேண்டும் என்று பேசப்படுகிறது. இலஞ்சத்தைப் போக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன? என்ன வழிமுறைகளைச் செய்திருக்கிறோம் என்றால் அதிலேயும் ஒன்றுமில்லை. அதிலே கூட பேசிக் கொண்டிருக்கிறோம், ஆனால் செயலில் என்ன இருக்கிறது? இலஞ்சத்தை ஒழிக்க வேண்டுமென்ற உண்மையான எண்ணம் இருக்கிறது. அந்த எண்ணத்தைச் செயலாக்கும் முறை சிந்திக்கப்படவில்லை. ஆகவே, இலஞ்சத்தை ஒழிப்பதற்கு என்ன முறைகளைக் கையாளப் போகிறோம், நடைமுறைப்படுத்த என்ன வழிமுறைகளை செயதிருக்கிறீர்கள் என்றால் ஒன்றும் இல்லை.

இரண்டுப் பிரச்னைகளை மட்டும் சொல்லி என்னுடைய உரையை முடிக்க விரும்புகிறேன். பல தொழிற்சாலைகள் கட்டுபடியாகவில்லை, ஆகவே மூடுகிறோம் என்று சொல்கிறார்கள். குரோம்பேட்டையிலே குரோம் லெதர் பாக்டரி ஒன்று இருக்

கிறது. அதிலே 7 மாதமாக 380 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள், சம்பளம் கிடையாது, வேலையும் கொடுப்ப தில்லை. அத்தொழிலாளர்கள் ரெகுலராக உள்ளே போகிறார்கள் வெளியே வருகிறார்கள். அவர்களுக்குச் சம்பளமும் இல்லை வேலையும் இல்லை. அரசாங்கத்திடம், சொல்லியிருக்கிறார்கள். மனுக்கொடுத்ததாகச் சொல்கிறார்கள். பாங்கிலே கடன் கொடுத் திருக்கிறார்கள், தொழிற்சாலையை இலாபமாக நடத்த முடியும் என்று சொல்கிறார்கள். பாங்குக்காரர்கள், அதைப்பற்றி பரிசீலனை செய்தவர்கள்.........

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே இதுபற்றிக் கடன் கொடுத்த வங்கியே எடுத்து நடத்த வேண்டு மென்று நாம் எழுதியிருக்கிறோம். இப்பொழுது இரண்டு மூன்று தினங்களாக அதைப்பற்றி பேச்சு வார்த்தை நடக்கிறது. தொழிற் சாலையைத் திறப்பதற்கு எல்லா முயற்சிகளையும் இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு ரொம்ப நன்றி. அந்தப் பிரச்னையைத் தீர்த்து தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து போலீஸ் அட்ராசிட்டீஸ், ஒரு மனுவை இன்றைக்குத் தான் கொண்டு வந்து கொடுத்தார்கள். அதிலே இருப்பது என்ன வென்றால், ரொம்ப வயதான அம்மாளை, 50 வயதான அம்மாளை, போலீசார் காயப்படுத்தி, சங்கடப்படுத்தியிருக் கிறார்கள். அது சம்பந்தமாக போதிய விசாரணை இல்லை. அவர்கள் கோழி வியாபாரம் செய்கிறார்கள், நேரிலேயே சொன்னார்கள், அதைத்தான் சொல்கிறேன். போலீஸ் கான்ஸ்ட பிளுக்குக் குறைந்த விலைக்குக் கொடுப்பது வழக்கம். ஒரு தடவை 4, 5 கோழிகள் கேட்டிருக்கிறார், இந்த கான்ஸ்டபிள். 4, 5 கோழிகள் என்னிடம் இல்லையென்று அந்த அம்மாள் சொல்லி யிருக்கிறார். அதுதான் சாக்கு என்று கேஸ் போடச் செய்திருக் கிறார்கள். சுற்றுப்புறத்தில் உள்ளவர்கள் 4, 5 பேர்கள் வந்தார்கள், அந்த அம்மையார் தரப்பில் எந்தத் தவறும் இல்லை யென்று அவர்கள் சொல்கிறார்கள். போலீஸ் சாராயக் கேஸ் போட்டிருக்கிறார்கள். கவர்னரிடம் நேரில் மனு கொடுத்திருக் கிறார்கள், அதை அமைச்சரிடம் கொடுக்கிறேன். இதை பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தமாதிரி போலீஸ் தரப்பில் நடவடிக்கை எடுத்துக்கொண்டு போனால் அது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ரொம்பக் கடுமையான சட்டம் போட்டிருக்கிறார்கள். சாராயத் தடுப்புச் சட்டத்தை எப்படி அமுலாக்க இருக்கிறோம். சட்டத்தை அமுலாக்கும்போது, நிரபராதிகள் தண்டிக்கப்படக்

கூடாது என்பதிலே எப்படி பாதுகாப்பு அளிப்பது என்பது நீங்கள் சிந்திக்க வேண்டும். அந்த வகையில் உங்கள் நடவடிக்கைகள் திருத்த வேண்டுமென்று கூறி முடிக்கிறேன்.

திரு. கே. பன்னை சேதுராம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் களெல்லாம் கொண்டு வந்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து என்னுடைய கருத்துக்களை இந்த மாமன்றத்திலே வைக்கின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன். என்னுடைய கருத்துக்களை இங்கே வைப்பதற்கு முன்னாலே எனக்கு ஒரு சிறிய சந்தேகம் ஏற்படு கிறது. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கக் கூடிய பிரதான எதிர்க்கட்சியான நீங்கள் எங்கள்மீது எப்பொழுது நம்பிக்கை வைத்தீர்கள், இப்பொழுது நம்பிக்கை யில்லை, நம்பிக்கை போய்விட்டது என்று சொல்லி, நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். எங்கள் கழகம் ஆரம்பித்த பொழுது எங்கள் மீது நீங்கள் நம்பிக்கை வைக்கவில்லை. எங்கள் கழகத்தின் மீது நம்பிக்கை வைக்க வில்லை, எங்களுக்கும் கழகத்திற்கும் மக்களுக்கும் ஊடேயிருக்கக் கூடிய தொடர்பிலே நீங்கள் நம்பிக்கை வைக்கவில்லை, திண்டுக்கல் தேர்தல் வந்தபொழுதும் எங்கள்மீது நம்பிக்கை வைக்கவில்லை, பாராளுமன்றத் தேர்தல் நடந்தபொழுதும் எங்கள் மீது நம்பிக்கை வைக்கவில்லை, சட்டமன்றத் தேர்தல் வந்தபொழுதும் எங்கள்மீது நம்பிக்கை வைக்கவில்லை நாங்கள் மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்டு ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபொழுது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், 6 மாதம் எப்பொழுது முடியும் என்பதை எண்ணிக் கொண்டிருந்து விட்டு, 6 மாதம் முடிந்த வுடனே ஒரு நம்பிக்கையில்லாத் திர்மானத்தை இங்கே கொண்டு வந்து பேசினார்கள்,

[முற்பகல் 9.40]

பிறகு மக்களைச் சந்திக்கின்ற வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது. மதுரை மாநகராட்சித் தேர்தலிலே சந்தித்தீர்கள். அப்பொழுதும் நீங்கள் எங்கள் மீது நம்பிக்கை வைக்கவில்லை. மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்து இங்கே அனுப்பினார்கள். மீண்டும் மாநகராட்சித் தேர்தலிலே எங்களை அனுப்பினார்கள். மக்கள் உங்களை வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள்.

நீங்கள் கொண்டு வந்திருக்கின்ற நம்பிக்கை இல்லாத் திர்மானத் திலாவது உங்களுக்கு நம்பிக்கையிருக்கிறதா என்பதை கேட்க ஆசைப்படுகிறேன். நீங்கள், நம்பிக்கையில்லாத் திர்மானத்தைக் கொண்டு வந்தவர்கள். அரிய நல்ல கருத்துக்களை, சத்தான விவாதங்களைப் புதுமையான வாதங்களை, பொலிவான வாதங் களை நீங்கள் எடுத்து வைப்பீர்கள் என்று நாடு எதிர்பார்த்தது.

நாங்களும் எதிர் பார்த்தோம். ஆனால் அப்படிப்பட்ட வாதங்களை, மருத்துவக் கல்லூரியிலே இடத்திற்கு கையூட்டு வாங்கியிருக்கிறார்கள், என்ஜினீயரிங் கல்லூரியிலே இடத்திற்கு கையூட்டு வாங்கியிருக்கிறார்கள், வேளாண்மை கல்லூரியிலே இடங்களுக்கு கையூட்டு பெற்றிருக்கிறார்கள். பஸ் பெர்மிட்டுகளுக்கு கையூட்டு வாங்கியிருக்கிறார்கள், தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு கையூட்டு பெற்றிருக்கிறார்கள், நீதிபதிகள் நியமனம் செய்வதற்கு கையூட்டு பெற்றிருக்கிறார்கள் என்ற சத்தான வாதங்களை இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே கொண்டு வருவீர்கள் என்று இந்த நாட்டு மக்கள் எதிர் பார்த்தார்கள். ஆனால், உங்களால் அப்படிப்பட்ட வாதங்களை கொண்டு வர முடியவில்லை. காரணம்,..........

<u>திரு. மு. கருணாநிதி :</u> தலைவரவர்களே, உறுப்பினர் இப்பொழுதுதான் விவரங்களை கொடுத்திருக்கிறார்கள், நான் பேசும்பொழுது பயன்படுத்துகிறேன்.

<u>திரு. கே. பண்ணை சேதுராம :</u> உங்கள் கட்சி ஆளும் கட்சியாக ஆன பிறகு பேசப்பட்ட வாதங்களை அதிலும் சந்து முனைகளிலே, மேடையிலே பேசப்பட்ட பேச்சுக்களையெல்லாம் இன்றையதினம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு, அலுத்து உளுத்துப்போன சரக்குகளையெல்லாம் இங்கே நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். பேரறிஞர் அண்ணா அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்த நேரத்திலே கூட அண்ணா அவர்கள் சொன்னது ''நீங்கள் அரைத்த மாவையே அரைக்கிறீர்கள்'' என்பதாகும். இப்பொழுதும் தான் நீங்கள் பொதுக் கூட்டங்களிலே பேசிய கருத்துக்களை இந்த மாமன்றத்திலே வைத்து பதிலாக்கினீர்கள். உங்களுக்குப் புதிதாக சரக்குகள் கிடைக்கவில்லை. அரைத்த மாவையே அரைக்கிறீர்கள். அல்லது அரைப்பதற்கு திறன் உங்களுக்கு கிடைக்காமல் போய்விட்டதற்கு காரணம் அரைக்கப்படுகின்ற சக்தியில் ஆளும் கட்சியில்லை என்பதை நீங்கள் புரிந்து கொண்டீர்கள். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் முக்கியமானது, ஆணித்தரமானது இந்த அரசுக்கு நிரந்தரமான கொள்கை எதுவும் இல்லை என்பதேயாகும். சென்ற முறை நடைபெற்ற இந்தச் சட்டமன்றத் தொடர் கூட்டத்தில் ஆளுநர் உரை இடம்பெறவில்லை. ஆளுநர் உரை இடம் பெறவில்லை என்று சொன்னவுடன் எதிர்க்கட்சித் தலைவர்கள், அதிலும் குறிப்பாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் அவர்கள் ஆளுநரைக் காணோம் ஆளுநர் உரையைக் காணோம், எனவே இந்தச் சட்டமன்றத்தின் மதிப்பே கெட்டு விட்டது மரபே போய்விட்டது என்று உரிமைக் குரல் எழுப்பினார்கள். இந்தச் சட்டமன்றக் கூட்டத்திற்கு ஆளுநர் வந்தார். பேருரை ஆற்றினார். அப்பொழுது உரிமைக்குரல் எழுப்பிய எதிர்கட்சித் தலைவர் அவர்கள் உறவுக்கு கை கொடுக்காமல் எங்கே போய்விட்டார்? தன்னுடைய சகாக்களை

யெல்லாம் கூட்டிக் கொண்டு வெளியேறி விட்டார்கள். ** இதுதான் ஒரே குரலா, நிரந்தரமான கொள்கையா? இரட்டை வேடம் போட்டுக்கொண்டு அரசியலிலே பொய்க்கால் குதிரை ஆடுவதுதான் நிரந்தரமான கொள்கையா?

மது விலக்கில் உங்கள் கொள்கை என்ன? ''கொழுந்து விட்டு எரியும் நெருப்பு வளையத்திற்குள் கொளுத்தப்படாத கற்பூரமாக'' எத்தனை நாட்களுக்குத்தான் தமிழ்நாடு தன்னைக் காப்பாற்ற முடியும். . . . .

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> சட்டமன்றத்தை விட்டு ** என்று குறிப்பேட்டில் இருக்க வேண்டாம். வெளியேறி விட்டார்கள் என்று இருக்கட்டும்.

<u>திரு. கே. பண்ணை சேதுராம் :</u> கொழுந்து விட்டு எரியும் நெருப்பு வளையத்திற்குள் கொளுத்தாத கற்பூரமாய் எத்தனை நாளைக்குத்தான் தமிழகம் இருப்பது என்று கேட்டுவிட்டு கள்ளுக் கடைகளையும், சாராயக் கடைகளையும் தமிழகத்திலே திறந்து விட்டார்கள். தமிழகத் தெருக்களிலேயெல்லாம் சாராய வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

மக்களைப் பின்னாலே சந்திக்க முடியவில்லை. உடனே மது விலக்கை மறுபடியும் அமல் நடத்தினார்கள். மது விலக்குக் கொள்கையில் உங்களுடைய நிரந்தரமான கொள்கை எது? அது மட்டுமல்ல தந்தை பெரியார் கொள்கையில் திளைத்தவர்கள், ஸ்ரீரங்கநாதரையும், தில்லை நடராசரையும் பீரங்கி கொண்டு பிளப்பது எந்நாளோ என்று எக்காளமிட்டவர்கள், கும்பகோணம் மகாமகத்திற்கு ரூ. 6 லட்சம் செலவு செய்து தனிப்பாதை போட்டு பத்து நாள் கும்பகோணத்தில் தங்கியிருந்து 15 லட்சம் பக்த கோடிகளை தரிசித்து, மலர் கிரீடம் வைத்து, ஆஸ்திக பூசாரிகளாக மாறியது நிரந்தரக் கொள்கையா? மது விலக்குச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது 10 ஆயிரம் ரூபாய்க்குக் கூட சால்வென்சி இல்லாதவர்களுக்கு எல்லாம் ரூ. 1 லட்சம், ரூ. 2 லட்சம் என்று காண்டிராக்ட் விட்டு விட்டு, அந்தத் தொகையைக் கட்ட முடியாமல் அவர்கள் இருந்த நேரத்தில், நீங்களே கலெக்டர் அலுவலகங்களுக்கும், தாலூகா அலுவலகங்களுக்கும் இங்கே இருந்து போன் செய்து, அந்தத் தொகையை ரைட் ஆப் செய்ய உத்தரவிட்டது எல்லாம் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்கு அறிகுறியா?

நேற்றைய தினம் பேசிய நண்பர்களில் பலர் இங்கே குறிப்பிட்டார்கள். தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவில் கூட தொகை வசூல் செய்யப்பட்டது என்று குறிப்பிட்டார்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க திருத்தப் பெற்றது.

கட்சியின் பெயரால் நிதி திரட்டி, அமைச்சர்களின் அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஒவ்வொரு தொகுதிக்கும் சென்று ஒவ்வொரு எம். எல். ஏ.-க்கும் புதுப்புது அம்பாசிடர் கார், புதுப்புது பங்களா வாங்கிக் கொடுத்து இருக்கிறார்களே அதனால் உங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று சொல்கிறீர்களா?

பெரியார் நூற்றாண்டு விழாவை ஒட்டி பெரியார் பெயரில் ஒரு மாவட்டத்தை உருவாக்குகிற காரணத்தாலே, அப்படி உருவாக்க ஒரு திட்டம் திட்டப்பட்டு இருக்கிற காரணத்தாலே உங்களுக்கு நம்பிக்கையில்லையா? தந்தை பெரியாரின் கனவை நினைவாக்கும் விதத்தில் அவரது எழுத்துச் சீர்திருத்தத்தை உடனடியாக அமலுக்குக் கொண்டு வர திட்டம் தீட்டியது என்கிற காரணத்தால் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா? ஏழை அரிசனங்கள் இறந்து விடுகிற நேரத்தில், மரணம் எய்தும் காலத்தில், கடைசி காரியங்களை செய்வதற்கு ரூ. 50 கூட இல்லாமல், அண்டா, குண்டாவைக் கொண்டு போய் வைக்கும் நிலையைப் போக்கி, அவர்களின் மரணச் செலவிற்காக ரூ. 100 செலவிற்சாக கொடுக்கிறதே இந்த அரசு அதனால் நம்பிக்கை இல்லை என்று சொல்கிறீர்களா?

மத்திய அரசு நெல்லுக்கு ரூ. 75 கொடுத்து வந்தபோதிலும், இந்த அரசு விவசாயிகளின் நலன் கருதி குவின்டால் ஒன்றுக்கு ரூ. 85,90,95 சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக அவர்களுக்குக் கொடுப்பதால் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா? மத்திய அரசு கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 85–க்கு மேல் கொடுக்க முடியாது என்று சொல்லிய பிறகும், இந்த அரசு வேளாண்மைத் துறை மூலமாக டன் ஒன்றுக்கு ரூ. 100 முதல் ரூ. 105 வரை கொடுப்பது என்று உத்தரவிட்டு இருப்பதால் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?

திரு. சி. ஆறுமுகம் : துணைத் தலைவரவர்களே, திரு. பண்ணை சேதுராம் அவர்கள் சர்க்கரை ஆலைகளில் கரும்புக்கு ரூ. 100 கொடுப்பதாகச் சொன்னார்கள். தற்போது ரூ. 85 தான் கொடுக்கிறார்கள். நான் வேண்டுமானால் இதற்கு பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன்.

திரு. ஜே ஜேம்ஸ் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தவறுதலாக ஒரு கருத்தை இங்கே சொன்னார். மத்திய அரசு கரும்புக்கு ரூ. 85–க்கு மேல் கொடுக்க முடியாது என்று சொல்லிய பிறகும், மாநில அரசு கொடுக்கவேண்டும் என்று சொன்னதாகச் சொன்னார்கள். மத்திய அரசு ரூ. 100 கொடுக்கலாம் என்று நிர்ணயித்து இருக்

கிறது. அதற்குக் கூடுதலாகவும், மாநில அரசுகள் கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். வட மாநிலங்களில் ரூ. 130 முதல் ரூ. 150 வரை டன் ஒன்றுக்குக் கொடுக்கிறார்கள். என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, கரும்புக்கு இப்போது இருக்கக்கூடிய விலையைப் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மதுராந்தகம் ஆறுமுகம் இங்கே சொன்னபோது ரூ. 85–க்கு மேலே கொடுக்கவில்லை என்று சொன்னார். அப்படிப்பட்ட நிலை இல்லை கடந்த ஆண்டு கரும்புக்கு விலை 85 என்று ரிகவரி பேசிஸில் ரூ. 85 கொடுத்து வந்தோம். ஆனால் இந்த ஆண்டு மத்திய அரசு ரிகவரி பேசிஸில் ரூ. 100-க்கு மேல் கொடுக்க உத்தரவிட்டு இருக்கிறது. அதன்படிதான் ஒவ்வொரு ஆலையிலும் தற்போது கொடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புவது மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் இன்றும் ரூ. 85 தான் கொடுக்கிறார்கள். நான் அதற்குப் பொறுப்பேற்றுக்கொள்கிறேன்.

திரு. இ. தமிழரசன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். வடாற்காடு மாவட்ட வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் இப்போது .. ..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போது பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்க ஒன்றும் இல்லை. உட்காருங்கள்.

[முற்பகல் 9-50]

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவரவர்களே, இந்த நம்பிக்கையில்லாத திர்மானத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் பேசும்போது குற்றஞ்சாட்டி பேசுகையில், இங்கே சட்டம் ஒழுங்கு, அமைதி கெட்டுவிட்டது என்று சொன்னார்கள். அதற்குக் காரணமாக இரண்டு சம்பவங்களைச் சொன்னார்கள். ஒன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்மீது உளி வீசிய சம்பவம். இன்னொன்று நாகப்பட்டினம் எம். பி. திரு. முருகையன் கொலை செய்யப்பட்ட சம்பவம். இந்த சம்பவங்கள் எல்லாம் நடக்கக் கூடாது என்பதிலே கண்ணும் கருத்துமாக இருப்பவர்கள் ஆளும் கட்சிக்காரர்கள் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவருக்கோ அல்லது எதிர்க்கட்சித் தொண்டனுக்கோ அல்லது ஆளும் கட்சி உறுப்பினருக்கோ இதைப் போன்ற சம்பவங்கள் நேரக் கூடாது என்ற அரசியல் நாகரிகத் தோடு பணியாற்றிக்கொண்டிருக்கிறவர்கள் நாங்கள் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

உளி வீசியவன்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு காவல் துறையினரால் வழக்கு பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றத் திற்குத் தள்ளப்பட்டு, உளி வீசியவன் கைதுசெய்யப்பட்டு இன்றையதினம் அவன் சிறைச்சாலையிலே கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறான் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

ஆனால், அதே நேரத்தில் நான் உங்கள் கவனத்தை திருப்பி இழுத்துச் செல்கிறேன். 1972 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 2-ம் நாள் இந்த சட்டமன்றத்திற்கு ஒரு கரி நாள். இந்த சட்ட மன்றத்தின் ஜனநாயகம் படுகொலை செய்யப்பட்ட நாள். ஜனநாயகத்தின் கழுத்திலே கத்தியை பாய்ச்சி, படுகொலை செய்து, இந்த சட்டமன்றத்தை இரண்டு சட்டமன்றமாக ஆக்கிய நாள்.

அன்றைய தினம் சட்டமன்றம் முடிந்து, எங்கள் புரட்சித் தலைவர்—அவர் மக்கள் தலைவர்—வெளியே சென்றுகொண்டிருந்த போது அமைச்சர் அறையிலிருந்து செருப்புகள் வீசப்பட்டன. புரட்சித் தலைவரோடு நானும் அண்ணன் கே. ஏ. கே. அவர் களும் சென்றோம். அப்போது.. .. ..

திரு. சி. ஆறுமுகம் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர வர்களே, அவர்கள் கூறிய சம்பவத்தை மறுக்க வேண்டிய காரணம் இருப்பதால் குறுக்கிடுகிறேன். அன்றையதினம் செருப்பு வீசப்பட்டது என்பதை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இருந்தாலும், அன்று செருப்பு வீசியவர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் இன்றைக்கு ஆளும் கட்சியில் தான் இருக்கிறார்கள்.

திரு. கே. பண்ணை சேதுராம் : அன்றைக்குச் செருப்பு வீசப்பட்டது. அப்போது நானும் அண்ணன் கே. ஏ. கே. அவர் களும் புரட்சித் தலைவருடன் சென்றோம். எனக்கு ஆத்திரம் தாங்காமல், வீசிய செருப்புகளிலே ஒன்றை எடுத்து, செருப்பு வந்த பக்கம் திருப்பி வீச முயற்சி செய்தேன். உடனே புரட்சித் தலைவரவர்கள் என்னுடைய கரத்தை இழுத்துப் பிடித்து, செருப்பை கீழே போடச் செய்துவிட்டு, காருக்குள்ளே போகச் சொன்னார்கள். உள்ளே போன பிறகு, 'நாம் அடிபடுபவர் களாகத்தான் இருக்க வேண்டுமே தவிர, அடிப்பவர்களாக இருக்கக் கூடாது' என்று புத்தரைப் போல, ஏசுநாதரைப் போல, காந்தியடி களைப்போல சொன்னார்கள். அன்றைய தினம் செருப்புகளை வீசியது யார் என்று எதிர்க்கட்சி நண்பர் சொல்கிறார். அவர்கள்

ஆளும் கட்சியில் இருப்பதாகச் சொல்கிறார். அப்படியானால் அன்றைக்கு செருப்பு வீசியது உண்மை என்பதை அவர்களே ஒப்புக்கொள்கிறார்கள். அவர்மீது நடவடிக்கை எடுக்கபபட்டதா? போலீஸ் அதிகாரிகள் எல்லாம் அங்கே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதற்கு ஒரு விசாரணை உண்டா? ஏதாவது நடவடிக்கை உண்டா? அப்போது சட்டம், ஒழுங்கு, அமைதி சாகவில்லையா? அன்று சட்டமன்றத்தில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் சட்டம், ஒழுங்கு, அமைதி கெடவில்லையா? என்னைப் போன்ற வழக்கறிஞர்கள் செருப்பு வீசியதைக் கண்டித்து மேடை களிலே பேசியபோது தாக்கப்பட்டார்கள்.

நான் மேடையிலே பேசிக் கொண்டிருக்கும்போது திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மேடையில் வந்து மைக்கைப் பிடுங்கி என் மூக்கிலே அடித்து இரத்தம் சட்டையிலும் வேட்டியிலும் ஒழுகியது. அதோடு விடவில்லை. மைக்கைப் பிடுங்கி, என் மார்பிலும் தோளிலும் அடித்தார்கள். அடிபட்ட இடம் 'காய்' காய்த்திருக்கிறது. வேண்டுமானால் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அதைப் பார்க்கலாம். (சட்டையிலுள்ள பொத்தான்களை கழற்றி காட்டினார்.) நானே அந்த அளவுக்கு அன்றைய தினம் தாக்கப்பட்டேன். என்னைப்போன்ற வழக்கறிஞர்கள் பலர் தாக்கப்பட்டார்கள். எனக்கே இந்த நிலை என்றால் சாதாரண தொண்டர்களுக்கு எப்படிப்பட்ட நிலை ஏற்பட்டிருக்கும் என்பதை நீங்கள் பார்த்துக்கொள்ளலாம்.

என்னைத் தாக்கினார்கள், நான் அடிபட்டேன். வழக்கு பதிவு செய்யவில்லை. யார், யார் அடித்தார்கள் என்று பெயர் களைச் சொல்லி, புகார் எழுதிக் கொடுத்தேன். போலீஸ் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்படவில்லை. நான் பெயர் களைச் சொல்லி எழுதிக் கொடுத்த பிறகும் வழக்கு பதிவு செய்யப் படவில்லை என்றால் சாதாரண தொண்டர்களின் புகார்களை யார் கேட்பது? அப்படிப்பட்ட சம்பவங்களை எல்லாம் யாரும் மறந்துவிடக் கூடாது.

முருகையன் கொலையைப்பற்றி பேசும்போது நான் ஒன்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சி. பி. அய். எம். பி. முருகையன் அவர்கள் கொலை செய்யப்பட்டதை இந்த மாநிலத் திலுள்ள எவரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

அந்தக் கொலை பற்றி சி.பி. அய். தலைவர்கள் கூட கொலை நடந்த நேரத்தில் ஆளும் கட்சியைக் குற்றம் சாட்டவில்லை. அவர் அரசியல் காரணத்திற்காகக் கொலை செய்யப்பட்டார் என்று சி. பி. அய். கூறவில்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் அதற்கு அரசியல் வண்ணம் தீட்டி ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு முயற்சி செய்கிறது என்று 20-1-1979 அன்று வெளியிடப்பட்ட பிளிட்ஸ் பத்திரிகை கூறுகிறது.

[திரு. கே. பண்ணை சேதுராம்] [1979 பிப்ரவரி 21

Sometime ago, a CPI M.P., S. G. Murugaiyan was murdered near Nagapattinam, purely because of a personal feud and property dispute. The C. M. rushed to the village and attended the funeral. The CPI itself did not accuse the ruling party, nor claim that the murder was politically motivated. But the DMK promptly accused the MGR Ministry of diabolical attempts to liquidate its political opponents.

திரு. எம். ஜி. ஆர். ஆட்சியைக் கவிழ்ப்பதற்காகவே திராவிட முன்னேற்றக்கழகம் வேண்டுமென்றே இப்படிப்பட்ட ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைச் சொல்கிறது என்று அதிலே பிரசுரிக்கப் பட்டிருக்கிறது.

It is also known that some Janata Ministers close to Karunanidhi have saved him from the consequences of Sarkaria Commission's findings of corruption and misuse of power.

என்று திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி பத்திரிக்கையில் வந்திருக்கிறது. அண்ணா நாளிதழிலா வந்திருக்கிறது? அல்லது தென்னகம் நாளிதழில் வந்திருக்கிறதா? ஆங்கிலப் பத்திரிக்கை பிளிட்ஸ்தானே இதைப் படம் பிடித்துக் காட்டுகிறது. அவர்கள் தானே திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பற்றிச் சொல்லியிருக் கிறார்கள்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா அவர்கள் நாமக்கல்லிலே நடைபெற்ற சிறுசிறு சம்பவங்களைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். ஆனால் நாமக்கல்லிலே நடை பெற்ற பெரிய பெரிய சம்பவங்களைப்பற்றி எல்லாம் இங்கே பேசியிருந்தால் நலமாக இருந்திருக்கும் என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

அடுத்து 1978-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12 ஆம் தேதி சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பெற்ற பொதுக்கணக்குக் குழுவின் ஆறாவது அறிக்கையிலே இருந்து சிலவற்றைப் படித்துக் காட்ட விரும்புகிறேன். ''நாமக்கல்லிலுள்ள கலைஞர் கருணாநிதி அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் தலைமை எழுத்தர் ரூ. 2 இலட்சம் வரை கையாடல் செய்திருப்பதாக அக்கல்லூரியின் முதல்வர் 1973 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் புகார் ஒன்றினை அனுப்பினார்.'' இவ்வாறு அதிலே கூறப்பட்டிருக்கிறது. இவ்வழக்கின் மீது காவல் துறையினர் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. 6 ஆண்டுகள் ஆகியும் இவ்வழக்கில் காவல்துறை புலனாய்வு செய்யவில்லை. இப்படி அவர்கள் காலத்தில் நீண்ட காலமாக நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்திருக்கிறது. அங்கே உள்ள அந்தப் பணியாளர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது. அப்போது நீங்கள் ஆட்சியில் இருந்தும் ஏன் நடவடிக் எடுக்கவில்லை?

1979 பிப்ரவரி 21] [திரு. கே. பண்ணை சேதுராம்]

மேலும் அதிலுள்ள விவரங்களைப் படிக்கிறேன். ''இவ்வழக்கு பற்றிக் காவல் துறையில் புலனாய்வு இன்னும் முடிவடையவில்லை என்று துறை கூறியுள்ளது.'' இவ்வாறு அந்த அறிக்கையிலே குறிப் பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, அவர்கள் ஆட்சியில் நடந்த இந்த காரியத்திற்கு அப்போது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஒசூரிலுள்ள கோழி வளர்ப்பு விரிவாக்க மையத்தில் 1972-ம் ஆண்டு, கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டது. 3184 கோழிகள் காணவில்லை என்பது தெரியவந்தது. அப்போதுள்ள கணக்குகளை இந்தப் பொதுக் கணக்குக் குழு அறிக்கையிலே யிருந்து படிக்கிறேன்.

''1972-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடத்தப்பெற்ற சிறப்பு உள் தணிக்கையில் கையாடல்கள் அல்லது இழப்புகள் கீழ்க்கண்ட வாறு அறுதியிடப்பெற்றன:- காணாமற்போன கோழிகளுக்கான மதிப்பு ரூ. 925.35 பைசா.'' கோழி மட்டும் காணாமல் போக வில்லை. கோழிகளுக்கென உள்ள தீனி மதிப்பையும் குறிப்பிடு கிறேன். அது எவ்வளவென்றால் ரூ. 14,538.17 பைசா. இப்படிக் கணக்குகளை எல்லாம் எழுதி வைத்தவர்களை மேலே இருந்தும் வெளியே இருந்தும் மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக் கிறார்கள். ஆகவே நீங்கள் கொண்டுவந்திருக்கின்ற நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தில் அவர்கள் தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று நிச்சயமாகத் தெரிவிப்பார்கள். எங்கள் பொறுமை யைச் சோதிக்காதீர்கள் என்றும், எங்கள் அடக்கத்தை சோதிக்காதீர்கள் என்றும், எங்கள் பண்பை பரிகாசத்திற்கு உட் படுத்தாதீர்கள் என்றும் கேட்டுக்கொள்கிறேன். யார், யார்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவது? பூனை, எலி மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதா? நரி ஆட்டுக் குட்டி மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதா? பிணம் தின்னும் கழுகுகள் பழம் தின்னும் கிளிகள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதா? ஆகவே யார், யார்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக் கிறார்கள் என்று கேட்டு, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்கிறேன் என்று கூறி அமருகிறேன்.

[முற்பகல் 10-00]

* திரு. சோ. அழகர்சாமி : துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் எதிர்க்கட்சிகள் சார்பில் கொண்டுவரப் பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை, தொழிலாளர் விரோத கொள்கையை கண்டிக்கும் தீர்மானத்தை, மைனாரிட் டிகளுக்கு பாதுகாப்பு இந்த அரசு கொடுக்கவில்லை என்பதற் காகக். கொண்டுவரப்பட்டிருக்கிற, இந்த அரசை எதிர்த்து கொடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தை. இவைகளை ஆதரித்து கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நான் பேச முன்வருகிறேன்,

எனக்கு முன்னால் பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. பண்ணை சேதுராம் அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்தவர்கள், கண்டனத் தீர்மானத்தைக் கொடுத்தவர்கள் இந்த அரசின் மீது எப்போது நம்பிக்கை வைத்தார்கள் என்ற கேள்வியையெழுப்பினார்கள்.

அதோடுகூட, இன்றைய ஆட்சியில் லஞ்சம் வாங்குகிறார்களா, ஊழல்கள்இருக்கின்றனவா, இருந்தால் அவற்றை ஆதாரத்தோடு சொல்லுங்கள் என்று சொன்னார்கள், அதற்கான பல விவரங்களைச் சொல்வதற்கு நீங்கள் அதிக நேரம் அனுமதிக்கமாட்டீர்கள் என்று நினைக்கிறேன். இருந்தாலும் கூட எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள இந்தத் தீர்மானங்களை ஆதரித்து பல விவரங்களையெல்லாம் கூறியிருக்கிறார்கள். இனியும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பல விவரங்களைச் சொல்வார்கள். கடைசியாக ஒன்று சொன்னார்கள். பாராளுமன்ற உறுப்பினர் திரு. முருகையன் கொலை சம்பந்தமாக, அது சம்பந்தமாக கடைசியில் சொல்கிறேன், ஆளுநர் அவர்கள் உரையின்போது எங்கள் கட்சி சார்பில் வாசிக்கப்பட்ட அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. '' திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் உள்ள இந்த ஆட்சி ஆளும் கட்சியினரின் சொந்த நன்மைக்காக இருக்கிறதே தவிர, தமிழ் மக்களுக்காக நடக்கவில்லை. விவசாயிகளை சுட்டுக் கொல்கிறது, தொழிலாளர்களை, மாணவர்களை போலீஸ் மூலமும், குண்டர்கள் மூலமும் தாக்குகின்றது. அரசியல் படுகொலைகள் நிகழ்த்தப்படுகின்றது. குற்றவாளிகள் பாதுகாக்கப்படுகிறார்கள். நிர்வாகத் தலையீடும், லஞ்ச ஊழலும் அதிகரித்து வருகிறது. எனவே இந்த முதலமைச்சரால் தயாரிக்கப்பட்ட உரையை ஆளுநர் படிக்கும் போது அவையிலிருக்க விருப்பமில்லை.'' என்று கூறி வெளியேறினோம். அதற்கான காரணங்களை, பல உண்மைகளைச் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். தமிழகத்திலுள்ள எந்தப் பகுதி மக்களும் இந்த அரசின் மீது நம்பிக்கை வைத்திருக்கவில்லை என்பதை ஆளும் கட்சியைச் சார்ந்த உண்மையான, மனச்சாட்சியுள்ள பல உறுப்பினர்கள் அவர்கள் நேரில் பேசும்போது சொல்வார்கள், அல்லது அவர்கள் மனச்சாட்சி சொல்லும் என்று நினைக்கிறேன். தொழிலாளர்கள் பிரச்னையைப் பொறுத்தவரையில் இந்த அரசாங்கம் எந்த முறையில் நடந்து கொள்கிறது என்பதை மதிப்பிற்குரிய உமாநாத் அவர்கள் நேற்று ஆணித்தரமாக பல விவரங்களோடு எடுத்துச்சொன்னார்கள். அப்போது நமது தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களும் குறுக்கிட்டுப் பதில் சொன்னார்கள். இந்த அரசு முதலாளிகளின் நன்மைக்காக இருக்கிறது என்று குறிப்பிட்ட போது, அப்போது நீங்களும் சபையில் இருந்திருக்கிறீர்கள். தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களைப் பற்றி மட்டும் சொல்லி குற்றம் இல்லை. பாவம் அவர் என்ன செய்வார்!

இந்த அரசாங்கத்தின் கொள்கை, முதல் அமைச்சர் அவர்களின் கொள்கை, முதலாளிகளுக்கு ஆதரவாக, முதலாளிகளுக்கு நன்மை பயக்கவேண்டும் என்ற நோக்கத்திற்காக, தொழிலாளர்களை அடக்கி ஒடுக்குவது மட்டுமல்ல, தொழிற்சங்கத் தலைவர்களை கேவலப்படுத்துவது மட்டுமல்ல, தொழிலாளர்கள் எங்கெங்கே போராட்டங்களில் ஈடுபடுகிறார்களோ அங்கே வெண்படை, போலீஸ், குண்டர்கள் இவர்களை வைத்து தாக்குகிறார்கள். அதற்கு வேண்டிய ஆதாரங்களை அடுக்கடுக்காக வைத்திருக்கிறேன். எங்கள் தலைவர்களான K. T. K, கோபு தாக்கப்பட்டார்கள். கொடுக்கப்பட்டுள்ள நேரத்திற்குள் நான் பல விவரங்களைச் சொல்ல வேண்டியிருப்பதால் முழு விவரங்களுக்குள் போகவில்லை. திரு. உமாநாத் அவர்கள் பல விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆளுநர் உரை விவாதத்தின் போது திரு. அம்பிகாபதி அவர்களும் பல விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். தொழிலாளர்கள் பிரச்னை சம்பந்தப்பட்ட வரையில் இந்த அரசு முதலாளிகளுக்கு ஆதரவாக இருக்கிறது. பஸ் முதலாளிகளிடம் நீங்கள் லஞ்சம் வாங்கியிருக்கிறீர்கள், நீங்கள் லஞ்சம் வாங்கியிருக்கிறீர்கள் என்றால் தனிப்பட்ட முறையில் அல்ல. கட்சிக்காக வாங்கியிருக்கிறீர்கள். தனிப்பட்ட முறையில் வாங்குவதைவிட கட்சி சார்பில், கட்சிக்காக வாங்கும் போது அரசின் கொள்கை நாசமாகிவிடும். கட்சி சார்பில் வாங்கினால் அரசாங்கத்தின் கொள்கை முதலாளிகளுக்கு ஆதரவாகப் போகும். ஆகவே, இந்த அரசு தொழிலாளர்களுக்கு விரோதமாக, முதலாளிகளுக்கு ஆதரவாகச் சென்று விட்டது. நான் அதன் விவரங்களுக்குள் போகவில்லை. விவசாயிகள் பிரச்சினையை எடுத்துக்கொண்டால் இந்த கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு விவசாய உற்பத்தி எப்படியிருக்கிறது ? ஐந்தரை லட்சம் ஏக்கர் குறுவை சாகுபடி. இன்று மூன்றரை லட்சம் ஏக்கராகக் குறைந்திருக்கிறது.

எதனால் உற்பத்தி குறைந்தது? விவசாயிகள் வேண்டாம் என்று இருந்துவிட்டார்களா ? அவர்களுக்கு கட்டுபடியாகவில்லை. விவசாயத்தை தொடர்ந்து செய்ய முடியவில்லை என்று இருந்து விட்டார்கள். நியாயமான விலையை நீங்கள் கொடுக்கவில்லை. கேரளாவில் இதே மாதிரி மாநில அதிகாரங்களை வைத்துக் கொண்டிருப்பவர்கள். 120 ரூபாய் விலை கொடுத்து, 66 ஆயிரம் டன் நெல்லை கொள் முதல் செய்திருக்கிறார்கள். அதனால் தான் உற்பத்தி அங்கு பெருகியிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் இப்போது 3½ லட்சம் ஏக்கர் தான் விவசாயம் செய்யப்பட்டிருக்கிறது என்றும், மொத்தமாக தஞ்சை மாவட்டத்தில் மட்டும் மூன்று லட்சம் டன் விளைச்சல் ஏற்பட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, ஒரு

[திரு. சோ. அழகர்சாமி] [1979 பிப்ரவரி 21

குவின்டாலுக்கு 117 ரூபாய் உற்பத்திச் செலவு ஆகிறது என்று
நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் என்ன விலை
கொடுக்கிறீர்கள்? 85 ரூபாய் கொடுக்கப் போவதாகச் சொன்
னீர்கள். ஆனால் விவசாயிகளுக்குக் கிடைத்தது என்ன? 70
ரூபாய். அப்படியென்றால், 117 ரூபாய் உற்பத்தி செலவு ஒரு
குவிண்டாலுக்கு என்றால், தஞ்சை மாவட்டத்தில் மட்டும்
14 கோடி ரூபாய் அளவுக்கு குருவைச் சாகுபடியில் மட்டும்
ஓராண்டில் விவசாயிகள் நஷ்டமடைந்திருக்கிறார்கள். கூட்டுறவு
வங்கிகளிலிருந்தும் மற்ற வங்கிகளிலிருந்தும் 10 கோடி ரூபாய்
கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும்,
மூன்று லட்சம் ஏக்கரில்தான் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.
இதிலிருந்து கிடைக்கின்ற நெல்லுக்கு சரியான விலை கிடைச்
காததின் காரணமாக விவசாயிகள் நஷ்டமடைந்திருப்பது 14
கோடி ரூபாய். இது ஒரு மாவட்டத்தில் மட்டும். இதனால்
தான் 5½ லட்சம் ஏக்கராக இருந்தது, இன்றைக்கு 3½ லட்சப்
ஏக்கராகக் குறைந்திருக்கிறது. எப்போதும் சர்ப்ளஸாக இருக்கச்
கூடிய தஞ்சை மாவட்டத்தில் இந்த நிலை.

மற்றபடி வட ஆற்காடு, தென்ஆற்காடு, செங்கற்பட்டு
மாவட்டங்களிலும் இதே நிலைமைதான். நமது உற்பத்தியாள
75-லிருந்து 78ஆம் ஆண்டு வரை 57 லட்சட
டன்னாக இருந்தது. 10, 15 லட்சம் டன் மார்க்கட்டுக்கு
வருகிறது, இதில் பத்து லட்சம் டன்னையாவது அரசாங்கம்
கொள்முதல் செய்திருக்கவேண்டாமா? விவசாயிகளை எந்த
விதத்திலாவது பாதுகாக்கவேண்டும் என்ற எண்ணம் இருந்திருந
தால், அரசாங்கமே கொள்முதல் செய்து—கேரள அரசாங்
கத்தைப் போல் நியாயமான விலை கொடுத்து நெல்லை
கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கின்ற நஷ்டத்
தைப் போக்கியிருக்க வேண்டும். அந்த நிலை இல்லை.

ஆகவேதான் விவசாயிகள் பூராவும், இன்றைக்கு அவர்கள்
எந்தக்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள்
போராட்டம் நடத்துகிறார்கள். அவர்கள் போராட்டம் நடத்
தாமல் என்ன செய்வார்கள்? விவசாயம் செய்கின்ற நமது
ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூட இதை ஒத்துக்கொள்வார்கள்.
இதை முதலமைச்சரைப் பார்த்துச் சொல்லக்கூடாதா என்று
கேட்டால், எங்களால் முதலமைச்சரை பார்க்க முடியவில்லை,
நீங்கள் பார்த்துச் சொல்லுங்கள் என்று எங்களிடம் சொல்லு
கிறார்கள். உங்களாலேயே பார்க்க முடியவில்லை என்றால்
நாங்கள் எப்படிப்பார்க்க முடியும்? இதில் முதலமைச்சர்
அவர்களின் அணுகு முறை என்ன? எட்டு பேர்களைச்
சுட்டுக் கொன்றார்? இப்போது கடனை வசூல் செய்ய
திட்டமிட்டிருக்கிறார்கள். வசூல் செய்ய வந்து, ஏலம்
போட வேண்டிய நிலைமை வரும், இதன் மூலம் விவசாயிகள்

1979 பிப்ரவரி 21] [திரு. சோ. அழகர்சாமி]

ஒருவருக்கொருவர் மோதிக் கொள்வார்கள். ஏலம்
போட்டு, ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட்டின் கீழ் வசூல் செய்ய
முற்படும்போது, அவர்களுக்குள்ளே மோதிக்கொள்ள வேண்டிய
நிலை ஏற்படும். எப்படித் தொழிலாளர்களின் போராட்டங்களில்
தொழிலாளர்கள் தாக்கப்படுகிறார்களோ, எப்படி மாணவர்கள்
போராட்டத்தில் வெண்படை என்று சொல்லிக்கொண்டு,
மாணவர்கள் தாக்கப்படுகிறார்களோ, ஆசிரியர்கள் போராட்
டத்தில் மற்றவர்கள் எப்படி வந்து குறுக்கிடுகிறார்களோ?
என். ஜி. ஓ-க்கள் போராட்டத்தில் எப்படி குண்டர்கள் வந்து
தாக்குகிறார்களோ, அதுபோல் விவசாயிகள் போராட்டத்தில்
ஒருவரோடு ஒருவரை மோதவிட்டால், நிச்சயமாக பெரிய
கலகம் ஏற்படும் என்பதை நான் எச்சரிக்க விரும்புகிறேன.

1974 ஆம் வருடத்திலிருந்து தொடர்ந்து, ஒவ்வொரு
தடவையும் விவசாயிகள் கடன் வசூல் சம்பந்தமாக
கடன் ஒத்திவைப்பு சட்டங்கள் வரும்போது, விவசாயி
களுடைய கடனை வசூல் செய்ய முடியாத நிலை
ஏற்படுகிறது. கடனை திருப்பி செலுத்த சக்தியற்றவர்களாக
இருப்பதால், இப்படிப்பட்ட சட்டங்கள் கொண்டு வரவேண்டி
யிருக்கிறது என்றும், கூட்டுறவு கடன்களை வசூல் செய்ய
முடியாத நிலை ஏற்படும் போது, இப்படிப்பட்ட காரணங்
களால் சட்டங்கள் கொண்டு வரப்படுகிறது என்றும் அப்போது
காரண காரியத்தில் சொல்லப்பட்டு, 74, 75, முதல் 77, 78
வரை இந்த ஆண்டுகளில் எல்லாம் சட்டங்கள் கொண்டு
வரப்பட்டு வசூல் ஒத்திவைக்கப்பட்டது. ஆனால் இப்போது
வசூல் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். ஏற்கனவே விவசாயி
களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. விவசாயம் செய்வது என்றால்
இப்போது ஆரம்பத்திலேயே முதல் போட வேண்டியிருக்கிறது.
ஒரு ஏக்கர் பயிர் செய்ய வேண்டுமென்றால், ரசாயன உரங்கள்,
பூச்சிமருந்துகள் இவைகளுக்கெல்லாம் சேர்த்து ஆயிரக்கணக்கான
ரூபாய் அளவுக்கு முதல் போட்டுத் தான் விவசாயம் செய்ய
வேண்டியிருக்கிறது. ஆனால் இப்படி போடப்படுகிற முதலை
விவசாயியால் திரும்ப எடுக்க முடியவில்லை என்ற நிலை
இருக்குமானால், வாங்கிய கடனை எப்படி அவனால் திருப்பி
செலுத்த முடியும்? இந்த நிலைமையை மறந்து விட்டு வசூலில்
இறங்கி விவசாயிகளை ஒருவருகொருவர் மோதவிட்டுப் பார்க்க
லாம் என்ற அளவுக்கு வந்திருப்பது, விவசாயிகளிடையே
பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்

அடுத்து, பருத்தியின் விலை எப்படியிருக்கிறது என்று
பார்த்தால், போதுமான அளவுக்கு கட்டுபடியாகவில்லை.
நூலின் விலை ஏறிக்கொண்டிருக்கிறது. பருத்தி விலை குறைந்து
கொண்டிருக்கிறது. பருத்திவிலை 40 சதவீதம் குறைந்தும்

நூலின் விலை 10 சதவீதம் உயர்ந்தும் உள்ளது. கூட்டுறவு மில்களிலுள்ள நூலை வாங்க வேண்டும் என்று வரும்போது, கூட்டுறவு கைத்தறியாளர்கள் அதை எம்போரியத்தில் தான் வாங்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதற்கு விற்பனை வரியும் தனியாக கொடுக்கவேண்டும். வெளியில் வாங்கினால், மூன்று ரூபாய் குறைவாகக் கிடைக்கும். எம்போரியத்தில் வாங்கும் போது மூன்று ரூபாய் அதிகமாகக் கொடுக்கவேண்டியிருக்கிறது. இதன் காரணமாகத்தான் கைத்தறித் துணி விலையும் அதிகமாக இருக்கிறது. விற்பனையில் சிக்கலும் ஏற்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் நெசவாளிகளுக்கு கூட்டுறவு மில்களிலிருந்தோ, அல்லது அரசாங்க மில்களிலிருந்தோ மலிவான விலைக்கு நூல் கிடைப்பதில்லை. மேலும் நெசவாளர்களுக்கு நியாயமான கூலியும் கிடைப்பதில்லை. இதற்கும் எந்தவிதமான நடவடிக்கையும் இதுவரை எடுக்கப் படவில்லை. எனவே நெசவாளர்களும் இந்த அரசின் மீது தனது நம்பிக்கையை இழந்து விட்டார்கள்.

விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் மின்சாரத்திற்குக் கட்டணம் தொடர்ந்து பல வருடங்களாக வசூல் செய்யவில்லை. இப்போது அதற்காக ஏலம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு, பெரிய கலகம் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது, சிறு விவசாயிகளுக்கு நன்மை செய்யப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நிலைமை என்ன ? ஒருவர் 100 யூனிட் உபயோகித்தால், யூனிட்டு ஒன்றுக்கு 20 பைசா வீதம் கொடுக்கவேண்டியுள்ளது.

[முற்பகல் 10.10]

ஆயிரம் யூனிட்டுக்குமேல் என்றால் 15 பைசா கட்டவேண்டும். இதையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்து ஒரேயடியாக யூனிட்டுக்கு 12 பைசா என்று நிர்ணயித்து விடுங்கள். அதற்குமேல் ஒரு பைசாகூட வேண்டாம். அதற்குமேல் சர்சார்ஜ், மீட்டர் சார்ஜ் என்றெல்லாம் போடாதீர்கள். விவசாயத்துக்கு மின்சாரம் இனாமாக கொடுக்க வேண்டுமென வர்த்தக சபைகூட சொல்லிற்று. காரணம், விவசாயத் தொழில் என்பது ஒரு மிகவும் முக்கியமான அம்சம், தொழில். எனவே, விவசாயிகளுக்கு இந்த மின்சாரத்தை இனாமாகக்கூட கொடுக்கலாம். இன்று தொழில் வளர்ச்சிக்கு உதவுவதுபோல் இந்த விவசாய உற்பத்திக்கு அம்மாதிரி உதவலாம்: இது ஒரு அத்தியாவசியமான தொழிலாக இருக்கிறது. எனவே, இதிலே நஷ்டத்தைப் பார்க்காமல், வேறு மாநிலத்திலே உள்ளதைப் பற்றியும் சொல்லாமல், இந்த மாநிலத்தினுடைய விசேட நிலைமையை கணக்கில் எடுத்துக்கொண்டு, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய 10 லட்சம் கிணறுகள், 7½ லட்சம் பம்பு செட்டுகள் மூலம் தன்னிறைவு அளித்து, இன்றைக்கு தன்னிறைவை உற்பத்திப் பெருக்கத்தின்

மூலம் செய்திருக்கிறது. ஆனால், இப்படித் தன்னிறைவு நிலையை பெறச் செய்த, உற்பத்தியைப் பெருக்கிய இந்தத் தொழிலை நீங்கள் அழிக்கப் பார்க்கிறீர்கள் என்பது தான் எனது குற்றச்சாட்டு.

அடுத்தபடியாக, குத்தகை சாகுபடி சம்பந்தப்பட்ட மட்டில் 75—25 என்று சட்டம் கொண்டு வரப்போவதாக முதலமைச்சர் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். இதைப்பற்றி மாரிமுத்து அவர்கள்கூட அழகாகச் சொன்னார்கள். மொத்தத்திலே எத்தனை பேர்கள் இன்றைக்கு குத்தகை சாகுபடி செய்கிறார்கள் என்று பார்த்தால், 25 லட்சம் பேர்கள் இருக்கும். இதிலே 4½ லட்சம் பேர்கள்தான் பதிவு செய்திருக்கிறார்கள். சாகுபடியாளர் பதிவுக்கு மனு போட்டவர்களை பல இடங்களில் அடித்துத் துரத்தியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, பல அரிசனங்கள் நிலங்களிலே இருந்து வெளியேற்றப்பட்டு, அவர்கள் வீடுகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டிருக்கின்றன.

பெண்ணாகரத்திலே மல்லபுரம் கிராமத்திலே உள்ளவர்கள் அப்படி மனு போட்டிருக்கிறார்கள். என்ன நடந்தது? அங்கே அரிசனங்கள் அடிக்கப்பட்டிருக்கிறார்கள் போலீஸ் அதற்கு உடந்தை. 75—25 என்ற அந்த விவகாரமே பிரயோஜனமில்லை. அவர்களால் வாரம் கொடுக்க முடியவில்லை. சொந்த நிலம் வைத்து உற்பத்தி செய்பவர்களுக்குக் கட்டுப்படியாகவில்லை கடனைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. இப்படி இருக்கும்போது, இந்த 75—25 என்ற வாரம் எப்படி விவசாயிகளால் கொடுக்க முடியும்? [illegible] இருக்கக்கூடாது 10 சதவீதம் என்று வைத்தால் கூட அவர்களால் கொடுக்க முடியாது: கட்டுப்படியாகாது, நியாயமாக, உழுபவனுக்கே, உழுகின்ற சிறு விவசாயிகளுக்கே நிலம் கிடைக்க வேண்டுமென்றால், போலீசை நம்பாமல், அதிகாரிகளை நம்பாமல், ஒரு மக்கள் கமிட்டியை அமைத்து, உண்மையிலேயே சாகுபடி செய்கிறவர்கள் யார் என்பதை கணக்கிட்டு, நிலங்களை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். சிறிய அளவில் நிலங்களை வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு வேண்டுமானால் நஷ்ட ஈடு கொடுங்கள், பல அக்கிரமங்களைச் செய்து, கலவரங்களை ஏற்படுத்தி, இரண்டு பேர்களிடையேயும் போராட்டத்தை ஏற்படுத்த வேண்டாம்.

அடுத்து, ஆசிரியர், மாணவர் பிரச்னை. எங்கு பார்த்தாலும் ஒவ்வொரு கல்லூரிகளிலும் கல்லூரிக்குள் நுழைந்து மாணவர்கள் ஆசிரியர்கள் அடிக்கப்படுகிறார்கள். அதைப்பற்றி குற்றச் சாட்டுக்களை எதிர்க் கட்சியினர் சொன்னார்கள். நீங்கள் அதற்குப் பதில் தந்தீர்களா ? இல்லை. தொடர்ந்து ஆசிரியர்கள் மாணவர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடுகிறார்கள்.

உதாரணமாக, கோவில்பட்டியிலே G.V.N. கல்லூரி 1½ மாதங்களாக மூடப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி யூனிவர்சிடிக்கும், சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும், முதலமைச்சருக்கும் சொல்லி யிருக்கிறேன். ஒன்றும் செய்யப்படவில்லை. அதனால் செமிஸ்டர் முறையில் பரீட்சை அவர்களால் எழுத முடியவில்லை. இதிலே அரசாங்கம் துரித நடவடிக்கைகளை எடுக்கவில்லை. முதலாளிகள் சொல்லிவிட்டால, நீங்கள் தலையிடுகிறீர்கள். இது சரியில்லை இதிலெயெல்லாம் துரித நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டை இந்த அரசாங்கத்தின் மீது நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, ஊராட்சி ஒன்றியங்கள் தேர்தல். ஊராட்சி ஒன்றியங்களிலே ஏன் தேர்தல் வைக்கவில்லை ? 8, 9 யூனியன் களுக்கு சேர்ந்து ஒரு ஸ்பெஷல் ஆபீசரை வைப்பது முறையல்ல அவர்கள் நினைத்தபடி வரியை உயர்த்துகிறார்கள். ரு. 1 என்றிருந்ததை ரு. 2½ யாக வரியை உயர்த்துகிறார்கள். தேர்ந் தெடுக்கப்பட்ட சேர்மன் வரட்டும் ; கவுன்சிலர்கள் வரட்டும். வேண்டுமென்றால் அவர்கள் வரியை உயர்த்தட்டும். ஸ்பெஷல் ஆபீசர் நியமிப்பது என்றால், ஆளும் கட்சி சொல்படி நடப் பார்கள் என்பதற்காக தேர்தல் வைக்காமல் ஸ்பெஷல் ஆபீசர் களையே வைத்திருப்பது முறையல்ல ; சர்வாதிகாரம்தான். அது ஜனநாயகம் அல்ல ; நல்ல நிர்வாகம் அல்ல. அப்படிப்பட்ட சர்வாதிகார எண்ணம் உங்களுக்கு எப்படி வந்தது? எனவே இங்கே சர்வாதிகார ஆட்சி நடக்கிறது என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து வெள்ள நிவாரணம். இதைப்பற்றியும் பல பேர்கள் சொன்னார்கள். 50 கிலோ அரிசி கொடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அதற்காகச் சந்தோஷப்படுகிறேன். அதை ஆதரிக்கிறேன். ஆனால், அது ஒழுங்காக கொடுக்கப்பட்டதா? எல்லா இடங்களில் அப்படி கொடுக்கப்படவில்லை, சென்னை நகரத்திலே, எம். எஸ். முத்து நகர், ஓட்டேரி, சாஸ்திரி நகர் நரசிம்ம நகர் போன்ற இடங்களிலே உள்ளவர்களும் மனு கொடுத்திருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்திருக்கிறார்கள் ; சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களி டத்திலே கொடுத்திருக்கிறார்கள். கலெக்டரிடம் கொடுத்திருக் கிறார்கள். என்னிடத்திலேயும் அந்த மனு இருக்கிறது. அங்கே யெல்லாம் இந்த 50 கிலோ அரிசி, 100 ரூபாய் உதவிப்பணம் கொடுக்கப்படவில்லை. எனவே, இதிலேயும் ஆளும் கட்சி தலையிடு. இதிலேயும் கூட ஊழல் இல்லாமல், நேர்மையாக நடந்து கொள்ளவில்லை. ஊழலும், ஆளும் கட்சியின் தலை யீடும் இருந்திருக்கிறது எல்லாப் பகுதிகளிலும் இது கொடுக்கப் படவில்லை என்ற குற்றச்சாட்டை சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, வேலை இல்லாதவர்களுக்கு வேலை உத்தர வாதம் இருக்கிறதா ? வேலை இல்லாமல் இருப்பவர்கள் 9 லட்சம் பேர் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிந்திருக் கிறார்கள். பதியாதவர்கள், படிக்காதவர்கள் எவ்வளவு லட்சம் பேர் இருப்பார்கள். எப்படி அவர்களுக்கெல்லாம் வேலை கொடுக்கப் போகிறீர்கள் ? கேரளாவிலும், பெங்காலிலும் வேலை இல்லாதவர்களுக்கு மாதம் 50 ரூபாய் கொடுப்பது போல் நீங்கள் ஏன் கொடுக்கக்கூடாது ? உங்களுக்கு அதற்கு அதிகாரம் இல்லையா ? அந்த எண்ணம் உங்களுக்குக் கிடையாது.

நீங்கள் கொடுக்கிற வாக்குறுதிகள் ஏதேனும் நிறைவேற்றப் படுகிறதா ? சிறு விவசாயிகளிடமிருந்து ஜப்தி பண்ணமாட்டோம் என்று சொன்னார்கள், ஆனால் தொடர்ந்து ஜப்தி செய்து கொண்டிருக்கிறார்கள். எங்கள் பகுதியில் ஒரு அரிசன விவசாயி பம்ப் செட் வைத்து மூன்று நான்கு ஏக்கர் நிலம் வைத்திருக் கிறான். அவன் கிணறை ஆழப்படுத்துவதற்காக வாங்கிய கடனுக்காக ஜப்தி நோட்டீஸ் அனுப்பினார்கள். நான் அன்று கூட்டுறவு அமைச்சர் எட்மண்ட் அவர்களிடம் சொன்னேன். அப்போது அதை நிறுத்தி வைத்தார்கள். ஆனால் இப்போது மறுபடியும் ஜப்தி செய்ய வந்துவிட்டார்கள். பணம் கட்ட வில்லை என்றால் நிலம் ஏலத்திற்குக் கொண்டு வரப்படும் என்று சொல்லிவிட்டார்கள். ஏலம் போனால் அதிலே ஆயிரம் ரூபாய் கூட மிஞ்சாது என்ற காரணத்தால் அவன் பக்கத்தில் இருப்பவரை நல்ல வார்த்தை சொல்லி பத்தாயிரம் ரூபாய்க்கு விற்று எட்டாயிரம் ரூபாய் கடனைக் கட்டி மீதியைக் கையில் வைத்து செலவழிந்து போய்விட்டது. பழைய கிணறை ஆழப் படுத்த அவன் கடன் வாங்காமல் இருந்திருந்தால் நிலமாவது மிஞ்சியிருக்கும். அவன் நில அடமான பாங்கில் கடன்வாங்கிய காரணத்தால் அவ்வளவும் க்ளோஸ். 1973 ஆம் ஆண்டில் அவன் வாங்கிய கடன் 5,000 ரூபாய். அதற்கு வட்டி ரூ. 1,507.71: தண்ட வட்டி ரூ. 2,048.20 ; நோட்டீஸ் செலவு ரூ. 46.83 ; ஆக மொத்தம் ரூ. 8,602.74 ஆக, அவனுடைய நிலம் க்ளோஸ்.

சிவகாசி பக்கத்தில் பச்சிளம் குழந்தைகள்— 8 வயது, 6 வயது, 4 வயது— பஸ் உருண்டு பெற்றோர்கள் கண்ணுக்கு முன்னாலேயே இறந்து போயிருக்கிறார்கள். சிறு குழந்தைகள் காலை 3 மணிக்கும் 6 மணிக்கும் அழைத்துச் செல்லப்பட்டிருக் கிறார்கள. காலை 11 மணிக்கு பஸ் உருண்டு விழுந்து அந்தக் குழந்தைகள் இறந்திருக்கிறார்கள். ஆனால் உங்கள் அதிகாரிகள் யாரும் உடன் சென்று கவனிக்கவில்லை. தீய ணைக்கும் படையினர் போகவில்லை. பக்கத்திலுள்ள புதுப் பட்டி என்ற ஊரிலிருந்து போலீஸ்காரர்கள் போன் பண்ணியும் சிவகாசியிலிருந்து எந்தவித உதவியும் வரவில்லை. அதிகாரிகள் எந்தவித உதவியும் செய்யவில்லை. முதலமைச்சர் அவர்கள்

இறந்த நபர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்கள் குடும்பத்திற்கு 5,000 ரூபாய் கொடுப்பதாகச் சொன்னார்கள். முதலாளி ஒவ்வொரு நபருக்கும் கணக்கிட்டு அந்தக் குடும்பத்திற்கு பணம் கொடுத்திருக்கிறார். ஆனால் நீங்கள் ஒரு குடும்பத்தில் 3 பேர் இறந்திருந்தால் ஒரு நபருக்குத்தான் கொடுத்திருக்கிறீர்கள் நடராஜன் மனைவி காளீஸ்வரி இறந்திருக்கிறாள். கணவனுக்கு அந்த உதவித் தொகை கிடைக்கவில்லை. அந்தக் குடும்பத்தில் 3 பேர் செத்து விட்டதால் ஒருவர் வாங்கிக் கொண்டு விட்டதாகச் சொல்லப்பட்டு இவனுக்குக் கொடுக்கப்படவில்லை. அவன் பாலிடால் சாப்பிட்டு சாகப்போகிற நிலையில் ஆஸ்பத்திரியில் இருக்கிறான். அந்த ஃபோட்டோ கூட என்னிடம் இருக்கிறது. (ஃபோட்டோ மின்சாரத் துறை அமைச்சரிடம் கொடுக்கப்பட்டது) குடும்பத்தில் 4 பேர் செத்தால் அவ்வளவு பேருக்கும் 5,000 ரூபாய் வீதம் கொடுப்பதாகச் சொன்ன வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. மூன்று பேர் செத்திருந்தாலும் ஒருவருக்குத்தான் கொடுக்கப்படுகிறது.

அரிசனங்கள் மீது தாக்குதல் எப்படி இருக்கிறது? பெரியார் நூற்றாண்டு விழா கொண்டாட உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? கொண்டாடலாமா? அவர் வைக்கம் வீரர். அரிசனங்கள் கொடுமைப்படுத்தப்படுவதை எதிர்த்து ஆயுள் பூராவும் பாடுபட்டவர். சாதி உணர்வுகளைக் கடுமையாகச் சாடியவர் பல லட்சக்கணக்கான ரூபாயைச் செலவழித்து அவருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடுகிறீர்கள். ஆனால் நாட்டின் நிலைமை என்ன? தஞ்சை மாவட்டத்தில் தட்டிமால்படுகை கிராமத்தில் அரிசனங்கள் மீது தாக்குதல்; செங்கற்பட்டு மாவட்டத்தில் சிக்கனாங்குப்பத்தில் அரிசனங்கள் தாக்கப்படுகிறார்கள். இதுபற்றிப் பல முறை இந்த மன்றத்திலேயே எழுப்பி பேசியிருக்கிறோம். நீலகிரி மாவட்டத்தில் கோத்தகிரிக்குப் பக்கத்திலுள்ள கிராமத்தில் அரிசனங்கள் அடிக்கப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். விழுப்புரத்தில் நடந்தது தெரியும். அதற்கு ஆளும் கட்சி உடந்தை என்று சொல்லப்படுகிறது.

[நண்பகல் 10-20]

அங்கே 12 பேர்கள் செத்தார்களே, ஏதாவது நடவடிக்கை உண்டா? இல்லை. விழுப்புரம் தாலுகாவிலே ஆசியூர் கிராமத்திலே என்ன நடந்தது? அங்கே உள்ள எம். எல். ஏ. யினுடைய தம்பி தான் அங்கே டி.எஸ்.பி. என்று பேசிக் கொள்கிறார்கள். அவர் தான் டி. எஸ். பி. அவர் சொன்னால்தான் நடவடிக்கை எடுப்பார்கள் என்று பேசிக்கொள்கிறார்கள். அவர் இருக்கிறார் என்ற தைரியத்திலேதான் அவர் இருக்கிறார், அடியுங்கள் என்று சொல்லிச் செய்து கொண்டிருக்கிறார்கள். வீடுகள் எரிக்கப்பட்டன. 34 பேர்கள் படுகாயமுற்றுக் கிடக்கிறார்கள்.

அடுத்து சேலம் மாவட்டத்திலே நடுப்பட்டி கிராமத்திலே உள்ளவர்கள் இங்கே வந்து கவர்னரைப் பார்த்தார்கள். நாங்கள் கூடச் சொன்னோம், முதலமைச்சரைப் பாருங்களேன் என்று, அவர்கள் சொன்னார்கள், பார்க்க முடியாது, அவரைப் பார்த்தால் போலீசே எங்களைப் பிடித்துக் கொள்வார்கள் என்று சொல்லி கவர்னரைப் பார்த்துச் சொல்லியிருக்கிறார்கள், கவர்னர் காரில் ஏறுவதற்காக வெளியே வந்தபோது அவர்கள் பார்த்து சொல்லியிருக்கிறார்கள், கவர்னர் 'நான் பார்த்து ஏற்பாடு செய்கிறேன், நீங்கள் போங்கள் என்று சொல்லி 50 ரூபாயைக் கொடுத்து அனுப்பி இருக்கிறார்கள். 300 வருடங்களாக அனுபவித்துக் கொண்டிருந்த கிணறு, சுடுகாடு, அந்தப் பாதை இவைகளில் இப்போது உரிமையில்லையாம். ஆனால் அரிசன நலத்துறை அமைச்சர் இங்கே பதில் சொல்லுகிறார், பட்டா இல்லை என்று சொன்னார், பட்டா இல்லாதது ஒரு பதிலா, எப்படி வேண்டுமானாலும் பட்டா வாங்கிக் கொள்ளலாம்............

<u>மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்</u>: பட்டா இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆகவே திரு. அழகர்சாமி அவர்கள் தவறான தகவலைச் சொல்ல வேண்டாம்.

<u>திரு. சோ. அழகர்சாமி</u>: வேறு யாரோ சொன்ன ஞாபகம். 300 வருடங்களாக அனுபவித்துக் கொண்டு வந்த உரிமையை இன்றைக்கு மறுக்கிறார்கள். ஆளுங்கட்சிக்காரர்கள் ஆதரவு இருந்தால் போலீஸ் என்ன வேண்டுமானாலும் செய்யலாம், செய்யமுடியும் என்ற நினைப்பிலே ஒரு குழந்தையை மயானத்திற்கு தூக்கிக்கொண்டுபோய் இருக்கிறார்கள், தடுத்து நிறுத்தி இருக்கிறார்கள்.

அடுத்து, முகவை மாவட்டத்திலே வெங்கடேசபுரத்திலே மாணப்பட்டியிலே அவர்களுடைய பாதை அடைக்கப்பட்டிருக்கிறது. போலீஸ்காரர்கள் அவர்களை அடித்திருக்கிறார்கள். அடுத்து தஞ்சையிலே ஆண்டுளம்பட்டி என்ற கிராமத்திலே அரிசனங்கள் கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். பெரியார் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகின்ற இந்த நேரத்திலே அரிசனங்கள் எப்படி கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்பதைச் சொல்லி முடியாது. ஆளுங்கட்சிக்காரர்கள் அந்தக் கொடுமைகளுக்கு ஆதரவாக இருப்பதன் காரணமாக அரசாங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கமாட்டேன் என்கிறார்கள். ஆளுங் கட்சிக்காரர்கள் அரிசனங்களின் நலனுக்கு விரோதமாக இருக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டுகிறேன்.

சட்டம் ஒழுங்கு எப்படியிருக்கிறது? முதல் அமைச்சர் சட்டம் ஒழுங்கு சரியாக வேலையைச் செய்யும் என்று சொல்கிறார்கள். ஆனால் என்ன சட்டம் ஒழுங்கு இருக்கிறது? சைதையில் ஒரு எம்.எல்.ஏ.யை கைது செய்துகொண்டுபோன

போது போலீஸ்காரர்கள் முன்னாலேயே அடித்து இருக்கிறார்கள். இப்படி போலீஸ் அதிகாரிகள் ஆளும் கட்சிக்கு ஆதரவாக இருந்துகொண்டு சட்டம் ஒழுங்கை சீர் குலைத்துக் கொண்டிருக்கிறார்கள். எந்த எந்த அதிகாரி எப்படி, எப்படி செய்தார் என்றெல்லாம் விவரங்கள் இருக்கின்றன, ஆனால் நேரம் இல்லை. டி.வி.எஸ். தொழிற்சாலையில் பணிபுரியும் சிவகுமார் என்பவரை போலீஸுக்கு முன்னாலே கையை வெட்டிவிட்டார்கள். ஆனால் நீ ஓடிப்போய்விடு என்று அவரை தப்புவிக்க போலீஸார் உதவி செய்தார்கள். அதுமாதிரி இளஞ்செழியனை அடித்த சம்பவம் இருக்கிறது. எங்கள் கட்சி ஆட்களை எப்படி எப்படி பயமுறுத்துகிறார்கள் என்பதற்கு நான் ஒரே ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். பரமக்குடியிலே அந்த சிவசாமி எம்.எல். ஏ.வும் முத்துசாமியும் குளோஸ் ஆனால்தான் பரமக்குடியே உருப்படும் என்று சொல்லுகிறார்கள். எங்களுடைய கட்சி எம். எல். ஏ. உத்திராபதி அவர்கள் திரு. முருகையன் படுகொலைக்குப் பின்னாலே எப்படி எப்படியெல்லாம் பயமுறுத்தப்படுகிறார் என்பதையெல்லாம் அவரே பேசும்போது சொன்னார். ஆளுங்கட்சியினர் எவ்வாறு கட்சி கண்ணோட்டத்தோடு இருக்கிறார்கள் என்பதற்கு இன்னொரு உதாரணம் சொல்கிறேன். ஆரணி பட்டு கைத்தறி சங்கம்—அந்தத் துறையை திரு. ராஜா முகமது அவர்கள் வைத்துக்கொண்டிருந்தபோது அந்த அமைச்சரே அந்த எம். எல். ஏ. வை ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என்று கேட்டிருக்கிறார். இப்போது அந்தச் சங்கத்தைக் கலைத்துவிட்டார்கள். பெங்களூர், ஹைதராபாத், சென்னை ஆகிய இடங்களிலே கிளைகளைத் திறந்து 15 லட்சம் ரூபாய் வியாபாரம் என்றிருந்ததை 30 லட்ச ரூபாயாக ஆக்கி இருக்கிறார்கள். வியாபாரம் உயர்ந்திருக்கிறது.

இலாபம் மூன்று இலட்சம் கூடியிருக்கிறது. இந்தச் சங்கம் வேறு கட்சிக்காரர் நிர்வாகத்தில் எப்படி இருக்கலாம் என்று கலைத்திருக்கிறார்கள். அந்த போர்டில் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்கள் இரண்டு பேரும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இரண்டு பேரும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவரும் ஆக ஐந்து பேர்கள் இருந்தார்கள். ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர் இல்லாமல் ஒரு போர்டு இருக்கலாமா? அந்த எம். எல். ஏ. பேசும்பொழுது, ஒரு விழாவிலே பேசும்பொழுது, ஸ்பெஷல் ஆபீசர் கலந்து கொண்ட அந்த விழாவிலே, நான் தான் கலைக்கச் சொன்னேன் என்று பேசியிருக்கிறார். கட்சித் தலையீடு எப்படி இருக்கிறது என்பதற்காக இதைச் சொன்னேன். இப்படிக் கலைப்பது என்பதை ஒரு வேலையாக வைத்துக் கொள்ளாதீர்கள். உங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் எலக்ஷனை வைத்துவிட்டுப் போங்கள். அப்படிச் செய்யாமல் கலைத்து விட்டு ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டுக் காரியங்களைச்செய்து கொண்டிருக்காதீர்கள். உடனே தேர்தல் வையுங்

கள், அதில் நீங்கள் வந்தால் வாருங்கள். இல்லாவிட்டால் யார் வருகிறார்களோ அவர்கள் வரட்டும். எனவே இனிமேல் இப்படிக் கலைக்கின்ற வேலையை விட்டு விட வேண்டுமென்று கடுமையாக எச்சரிக்க விரும்புகிறேன்.

அடுத்து, பரமக்குடி பகுதியிலே பாலன் நகரம் என்ற பெயரில், அந்தப் பெயர் உங்களுக்கு அதிகமாகத் தெரிந்திருக்கும். அவருடைய வாழ்நாளிலேயே பாதிநாட்கள்—அதாவது 14 வருஷங்கள் ஜெயிலிலே இருந்தவர், உங்களுக்கு அதிகமாக அந்த நேரத்தில் உதவி செய்தவர், அவர் பெயரில், பரமக்குடியில், மனுப்போட்டு பட்டா பெற்று முறையாக லே-அவுட் போட்டு அதில் குடிசை போட்டிருக்கிறார்கள். பாலன் நகர் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். பாலன் நகர் என்ற பெயர். எம். ஜி. ஆர். பெயரில், நகர் இருக்கலாம், ஆனால் பாலதண்டாயுதம் பெயரில் நகர் இருக்கலாமா? அந்த இடத்தில் அவர்கள் இரண்டு, இரண்டரை வருஷங்களுக்கு முன்பு இடத்தை வாங்கிக் குடிசை போட்டிருக்கிறார்கள். அதில் உள்ள 98 பேர்களில் 42 பேர் அரிசனங்கள். அவர்களை வெளியேற்ற வேண்டுமென்று ரெவின்யூ அமைச்சரவர்கள் சொல்லிவிட்டு வந்திருக்கிறார்கள், பாலன் பெயரில் இருப்பதால். பாலன் பெயரில் இருக்கிறது, அதனால் வெளியேற்ற வேண்டுமென்று அவர் சொல்லவில்லை, வெளியேற்ற வேண்டுமென்று சொல்லி வந்திருக்கிறார்கள். அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது என்று கலெக்டர் சொல்லியிருக்கிறார். பாலன் பெயரில் இருக்கக்கூடாதா? அடுத்த கட்சிக்காரர்கள் பெயரில் எதுவும் இருக்கக்கூடாதா? அவர்கள் புறம்போக்கு நிலத்தில், பட்டா பெற்று, லே—அவுட் போட்டு, பரமக்குடி முனிசிபாலிட்டியிலே அளந்து இடம் கொடுக்கப்பட்ட—சில ஆளும் கட்சியினர் தூண்டுதலால் அதிலிருந்து வெளியேறுவதற்கு நோட்டீஸ் கொடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டை நான் சாட்டுகிறேன். ஆகவே, இந்த மாதிரி அரசாங்க அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வது மட்டுமல்ல, தங்களுக்கு இஷ்டமான காரியத்தைச் செய்யச் சொல்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது) 45 நிமிடங்கள் எங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது நான் 20 நிமிடங்கள் பேசியிருப்பேன் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 35 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். 30 நிமிடங்கள் தான் உங்களுக்கு ஒதுக்கப்பட்டது. சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : பரமக்குடியில் ஒரு தோழர், நிருபர் முத்துசாமி என்பவர், எங்கள் கட்சியைச் சேர்ந்தவர், எம். எல். ஏ. மீது வழக்கு என்று செய்தி போட்டு விட்டாராம், அதற்காக அவரை அடிக்கப் போயிருக்கிறார்கள். அதற்குக் கேஸ் கிடையாது.

சேலம் மாவட்ட C.P.I. செயலாளர் அர்த்தநாரியை கொலை செய்ய முயற்சி பற்றி பெட்டிஷன் முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதன் நகல் என்னிடத்தில் இருக்கிறது அதற்கெல்லாம் நேரம் இல்லை.

தர்மபுரியில் எங்கள் கட்சி மாவட்ட செயலாளர் முத்து என்ற கம்யூனிஸ்ட் செயலர் அவர்கள் கொள்ளையர்களைப் பற்றி நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னபொழுது அவரைப்பிடித்து போலீஸ் ஸ்டேஷனில் கட்டிவைத்து கொடுமைப் படுத்தி அடித்திருக்கிறார்கள், அந்தக் காயம் இன்றைக்கும் இருக்கிறது. இப்படிப்பட்ட கொடுமைகள் நடந்திருக்கின்றன.

கடைசியாக எம். பி. கொலை. எம். பி. கொலை விஷயமாக என்னமோ சொல்கிறார்கள். ஆளுங்கட்சிக்கு இதில் உடந்தை இருக்கிறது. அதனால்தான் உங்கள் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை. ஆகவே சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்று சொல்கிறோம். சரியாக இன்வெஸ்டிகேஷன் செய்யவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் வந்திருந்தார். நாங்கள் போய் இருந்தோம். நடந்த சம்பவம், ரோட்டிற்கும் வீட்டிற்கும் இடையில் 90 அடிதான் இருக்கிறது, 10 நிமிடத்தில் கொலை செய்து விட்டு மறைந்திருந்தால் ஒரு ஆள் செய்திருக்க முடியுமா? இது நீதி விசாரணையில் இருப்பதால் அதிகமாக நான் தலையிட விரும்பவில்லை. 90 அடிக்குள்ளே ஒரு ஆள் போய் 33 இடங்களில் குத்திவிட்டுப் போய் இருக்க முடியுமா? இதை யோசிக்க முடியுமா? மனதில் கைவைத்துச் சொல்ல வேண்டும். ஆளுங்கட்சிக்காரர்கள் இதில் சம்பந்தப்பட்டிருந்தால் நடவடிக்கை எடுங்கள், எந்தக் கட்சிக்காரர்கள் இதில் சம்பந்தப்பட்டிருந்தாலும் நீங்கள் நடவடிக்கை எடுங்கள். உங்கள் கட்சிக்காரர்களாக இருந்தால் நடவடிக்கை எடுக்கக்கூடாதா. யாராக இருந்தாலும், எந்தக் கட்சிக்காரராக இருந்தாலும் அத்தனை பேர்கள் மீதும் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது? ஒரு ஆள் செய்திருக்க முடியுமா? இதில் ஏதோ சதி செய்திருக்கிறார்கள் என்று நான் குற்றச்சாட்டைச் சொல்லுகிறேன். எனவே, சி.பி.ஐ. விசாரித்தால் நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். அது மட்டுமல்லாமல், அவருடைய மனைவியைக் கூப்பிட்டுக் கேட்டிருக்கிறார்களா? பக்கத்தில், முனையில் ஓரத்தில் குடிசையிலிருந்து ஒரு அம்மாள் வெளியே வந்தாராம், அவரைக் கேட்டிருக்கிறீர்களா? அப்படிப்பட்ட விசாரணைகளையெல்லாம் செய்யாமல் அப்படியே ஒரு முடிவுக்கு வந்துவிட்டோம் என்று சொல்லிவிடலாம் என்று நினைத்தால் அது முடியாது. டி.ஐ.ஜி. ஏன் அப்படி அறிக்கை விட வேண்டும்.

[முற்பகல் 10-30]

கடைசியிலே நீங்கள் பதில் சொல்லியாகவேண்டும்? நாங்கள் உண்மையை வெளியே கொண்டுவராமல் விடமாட்டோம் என்று

தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, இது பெரிய கொலை, ஐ.ஜி. ஏன் போகவில்லை, நீங்கள் தடுத்துவிட்டீர்களா? அவர் போனால் உள்ளதைச் சொல்வார் என்ற பயம் வந்து விட்டதா? அவர் ஏன் போகவில்லை? இங்கு டி. ஐ. ஜி. தான் போயிருக்கிறார். ஐ.ஜி. வேறு கொலைகளுக்கெல்லாம் முன்பு போயிருக்கிறார்கள். ஆனால் இங்கு போகவில்லை. ஆகவேதான் எங்களுக்குச் சந்தேகம் இருக்கிறது. சரியான சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்று கேட்கிறோம். சமூக நல விரோதிகளையும், போலீசையும் வைத்து எங்கள் கட்சியை ஒடுக்க வேண்டுமென்று நினைக்கிறீர்கள், அது முடியாது. உங்கள் ஆட்சி நிரந்தரமாக இருக்கும் என்று நினைக்கிறீர்களா? இந்த மாதிரி நீங்கள் நடந்து கொள்ளும் போது, உங்கள் மேல், உங்கள் விசாரணை மேல் எங்களுக்கு நம்பிக்கையில்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் குற்றவாளிகளைச் சரியாகக் கண்டுபிடிக்க மாட்டீர்கள் குற்றவாளிகளை மக்கள் முன் நிறுத்த மாட்டீர்கள் என்று நான் குற்றம் சாட்டுகிறேன்.

அடுத்து, அவசரகால நிலையின்பொழுது பல பேருக்குக் கட்டாய ஓய்வு கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது கூட ஹைகோர்ட் தீர்ப்பு வந்திருக்கிறது, நீக்கியது சரியல்ல என்று. அவசரகால நிலையின்பொழுது நூற்றுக்கணக்கானவர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அவர்களை மீண்டும் எடுக்கப்போகிறோம் என்று முதலமைச்சரவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனால் நிறைவேறியதா? மீண்டும் வேலையில் வைக்க வேண்டுமென்று பல பெட்டிஷன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் என்னவாயிற்று என்றே தெரியவில்லை.

அதே மாதிரி, ஆளுங்கட்சியை ஆதரிப்பவர்கள் தொழில் நடத்தினால், தங்கள் தொழிற்சாலையில் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற நிலையிருக்கிறது. அதற்கு உதாரணம் சொல்ல வேண்டுமானால், சேலத்திலே கஜநாயக்கன்பட்டியில் சண்முகா மில்ஸ் இருக்கிறது. அதனுடைய சொந்தக்காரர் முதலமைச்சருக்கு ரொம்ப வேண்டியவர். அவருக்கு சண்முகா பிலிம்ஸ் என்ற நிறுவனம் இருக்கிறது. அண்ணாமலை மூவிஸ் என்று நிறுவனம் இருக்கிறது. அவர் தன்னுடைய தொழிற்சாலையில் பெண்களை வைத்து மூன்று ஷிப்டுகளிலும் வேலை வாங்குகிறார். ஏ.ஐ.டி.யு.சி. இரண்டுமுறை கண்டுபிடித்து, கட்டிக்காட்டியிருக்கிறார்கள். பெண்களை இரவு நேரத்தில் [illegible] வேலை செய்தால் என்னென்ன அக்கிரமங்கள் நடக்கும்? சின்னபிள்ளைகளை வேலை வாங்கி கொன்று விட்டார்கள் சிவகாசியிலே; இங்கே பெண்களை வேலை வாங்குகிறார்கள். உங்களுக்கு அனுசரணையாக இருந்தால் நடவடிக்கை இல்லையென்ற நிலையிருக்கிறது.

தொழிலாளர்களுக்கு விரோதமாக நீங்கள் நடவடிக்கை எடுக்கிறீர்கள். விவசாயிகளிடம் கடன் வசூலில் கெடுபிடி நடக்கிறது. விவசாயிகள் எதற்காகக் கடன்படுகிறார்கள் என்பதைச் சிந்திக்காமல் நீங்களே ஒத்துக்கொண்ட கொள்கைக்கு விரோதமாக விலையும் கொடுக்காமல், அவர்கள் துன்பப்படுகிற வகையில், நாடு பூராவும் விவசாயிகள் துன்பப்படுகிற நிலையில், சரியான அணுகுமுறை இல்லாமல் இருக்கிறீர்கள். இதனால் மிகப் பெரிய ஆபத்து ஏற்படும். தொழிலாளர்கள் உங்கள் பேரில் நம்பிக்கை இழந்துவிட்டார்கள். விவசாயிகளுக்கு உங்கள் மேல் நம்பிக்கை கிடையாது, ஆசிரியர்கள், மாணவர்கள் அத்தனை பேருக்கும் உங்கள் பேரில் நம்பிக்கை கிடையாது. நேற்றுகூட ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. திருச்சியிலே ஒரு முதலாளியை எதிர்த்து போராட்டம், அர்த்தால். அர்த்தால் என்றால் உங்களுக்கு என்ன? எங்கள் ஆட்சிக்கு எதிராக அர்த்தாலோ, போராட்டமோ, ஆர்பாட்டமோ நடத்தலாமா? குறைகளைத் தெரிவிக்கலாமா என்று அடித்து நொறுக்குகிறீர்கள். அந்த விஷயத்தை இங்கே கொண்டு வந்தால், மேலும் சிக்கலாகப் போகுமே என்று சொல்லி, நீங்கள் நாளை எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்கிறீர்கள். இன்றைக்கு மேலும் சம்பவங்கள் நடந்தால் என்ன ஆவது? உடனே, நீங்கள் தீர்வு சொல்லியிருந்தால் அவர்களுக்கும் உபயோகமாக இருக்கும். உங்களுக்கும் அனுசரணையாக இருக்கும். ஆகவே, உங்கள்கொள்கை எந்தப் பிரச்னையாக இருந்தாலும் உங்களது அணுகு முறை, மக்களுக்கு விரோதமாக, முதலாளிகளு நிலப்பிரபுக்களுக்கு' இந்த மாதிரி ஆதிக்கம் செலுத்தக் கூடியவர்களுக்கு ஆதரவாக, இருக்கிறது. ஆகவே தான் எங்கள் கட்சியின் சார்பிலே உங்கள்மீது அறவே நம்பிக்கையில்லையென்று கூறி முடிக்கிறேன்.

திரு. வ். அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் நான் இல்லாத நேரத்திலே என் மீது ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். ஆரணியில் அப்படிப்பட்ட கைத்தறி சொசைட்டி செயல்பட்டு வருகிறது. அந்த சொசைட்டியில் நான் தலையிட்டு, சூப்பர்சீட் செய்திருப்பதாக அவர்கள் குற்றம் சுமத்தியிருக்கிறார்கள். நான் தலையிடவும் இல்லை, தொழிலாளர்கள்முறையிட்டதன் பேரில் கைத்தறி அமைச்சரிடம் குறைபாடுகளைத் தெரிவித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டேனே தவிர, நான் மேடையிலே, வெளியிலே பேசியதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குற்றம் சுமத்தியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, அது சம்பந்தப்பட்ட மனுக்கள், ரிக்கார்டுகள் என்னிடத்தில் இருக்கின்றன. அந்த சங்கத்தை கலைக்க காரணம் என்ன? அந்த

சங்கத்தின் ஆரம்ப முதலீடு 15 லட்சத்திலிருந்து 30 லட்சத்திற்கு உயர்ந்து இருக்கிறது. கீழ் நோக்கி போகவில்லை, மேல் நோக்கித் தான் போகிறது. நஷ்டத்தில் போகவில்லை, லாபத்தில்தான் போகிறது. ஆகவே 4 இடங்களிலே கிளைகள் ஆரம்பிக்க வேண்டும் என்று முடிவு செய்தார்கள். ஆனால் சொல்கிற காரணம், எங்களை கேட்கவில்லை என்பது.

திரு. எஸ். ஆர். இராதா: சொன்ன குற்றச்சாட்டை உறுப்பினர் மறுக்கிறார்கள்.....

திரு. சோ. அழகர்சாமி: குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றா சொல்கிறேன். நடந்ததை சொல்கிறேன். தலைவரவர்களே, அமைச்சர் அவர்களை நேரிடையாக அந்த நெசவுத் தொழிலாளர்களிடம் பேசும்போது நீங்கள் மாநில சங்கத்தை மட்டும் நம்பியிருக்க வேண்டியது இல்லை. நீங்களாக விற்பனைக்கு வேறு இடங்களை, பிராஞ்சுகளை—திறங்கள் என்று ஊக்கப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் தன்னை கேட்கவில்லை என்ற ஒரு காரணத்தை மட்டும் வைத்துக கொண்டு அந்த சங்கத்தை கலைப்பது என்றால் என்ன அர்த்தம்? அந்த உறுப்பினரைப்பற்றி சொல்லும்போது அவரே பேசியிருக்கிறார். அந்த சங்க ஊழியர்களுக்கு போனஸ் வழங்கும் விழாவிலே' ஸ்பெஷல் ஆபீஸர், தலைமையிலே சட்டமன்ற உறுப்பினரே பேசியிருக்கிறார்—''என்னை கேட்கவில்லை ஆகவே தான் அந்த சங்கத்தை கலைக்க ஏற்பாடு செய்திருக்கிறேன்' என்று போனஸ் வழங்கும் விழாவிலே பேசியிருக்கிறார்.

திரு. வீ. அர்ச்சுனன்: வேண்டுமானால் உரிமைக் குழுவிற்கு அனுப்பட்டும்.

திரு. சோ. அழகர்சாமி: உரிமைக் குழுவிற்கு அனுப்பிவைத்தால் நான் நிரூபித்துக் காட்டுகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நமது அழகர்சாமி அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் அர்ஜுனன் அவர்களைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அர்ஜுனன் அவர்களும் இங்கே அதை நிராகரித்து இருக்கிறார்கள். நம்முடைய மரபு அதை ஏற்றுக்கொள்வதுதான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரண்டுமே ரிக்கார்டில் இருக்கட்டும் உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டாம் குற்றச்சாட்டும் இருக்கட்டும். அவர் சொன்ன பதிலும் இருக்கட்டும்.

The HON. THIRU S. RAMACHANDRAN: When a member denies the allegation, the convention is that we normally take it as accepted.

[முற்பகல் 10-40]

திரு. இ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அழகர்சாமி பேசும்போது சேலம் சண்முகா பிலிம்ஸ் உரிமையாளருக்கு இரண்டு சினிமா தியேட்டர் இரண்டு ஆலைகள் இருப்பதாகச் சொன்னார்கள். அவர் இந்தச் சபைக்கு தெரிவித்து இருப்பது * * ஒரு தவறான தகவல் ஆகும். சண்முகா பிலிம்ஸ்க்கு இரண்டு மில், இரண்டு சினிமா தியேட்டர் இல்லை என்பது உண்மை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ரிக்கார்டில் பொய் என்று இருக்க வேண்டாம். தவறான தகவல் என்று திருத்தவேண்டும்.

திரு. இரா. தாமரைக்கனி: துணைத் தலைவரவர்களே, வலது சாரி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ......

திரு. மு. அம்பிகாபதி: துணைத் தலைவரவர்களே, வலது சாரி கம்யூனிஸ்ட் கட்சி என்று சொல்கிறார். உங்களோடு சேர்ந்து இருந்தால் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி என்று சொல்கிறீர்கள். உங்களை எதிர்த்தால் நாங்கள் வலதுசாரியா?

(கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர். ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் ......

திரு. இரா. தாமரைக்கனி: துணைத் தலைவரவர்களே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அழகர்சாமி அவர்கள் பேசுகிற நேரத்தில் பந்த் நடந்த நேரத்தில் ஆளும் கட்சிக்காரர்கள் வன்முறையில் ஈடுபட்டார்கள் என்று சொன்னார்கள்...

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க திருத்தப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவு செய்து உறுப்பினர் தாமரைக் கனி உட்கார வேண்டும். எதிர்க்கட்சி வரிசையில் உள்ளவர்கள் கருத்துக்களைச் சொல்லும்போது உங்களைப் பற்றி தனிப்பட்ட முறையில் ஏதேனும் சொல்லியிருந்தால், உங்கள் மீது குற்றம் சாட்டி பேசியிருந்தால், அதற்கு எழுந்து பதில் சொல்லலாம். அவர் பேசுகிற அத்தனைக்கும் பதில் சொல்ல அமைச்சர்கள் இருக்கிறார்கள். அல்லது உங்களுக்குப் பேச வாய்ப்பு வரும்போது அதற்கு பதில் சொல்லுங்கள். இப்போது அதற்கு நேரம் இல்லை.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, இந்த மன்றத்தில் உறுப்பினர்களுக்கு கருத்து சொல்ல உரிமை உண்டு. அவர் சொல்கிற கருத்தை மறுத்துச் சொல்லவும் உரிமை உண்டு. ஒரு உறுப்பினர் பேசிக் கொண்டு இருக்கும்போது எல்லோரும் மொத்தமாக சேர்ந்து கொண்டு கிண்டல், கேலிசெய்வது என்று சொன்னால், அந்த நிலையை ஊக்குவித்தால், அதே மாதிரி நாங்களும் நடந்து கொள்வோம்.

(கூச்சல் —குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்களுக்கும் நான் சொல்லிக்கொள்வேன். ஆளும் கட்சி தரப்பிலும் எதிர்க்கட்சித் தரப்பிலும், அமைதியாகத் தான் இருந்தார்கள். நீங்கள் எழுந்து பேசாது இருந்தால் இந்தப் பிரச்னை வந்திருக்காது.

திரு. எம். ஏ. லத்தீப்: ** **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுடைய கருத்து எது வேண்டுமானாலும் இருக்கட்டும். நான் அதைக் கேட்க விரும்பவில்லை.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் ஜில்லாவில் கெஜநாயக்கன்பட்டி. சண்முகா செட்டியாருக்கு, சண்முகா மில்ஸ், அண்ணாமலை மூவீஸ், சண்முகா பிலிம்ஸ், சங்கம் தியேட்டர், சங்கம் பாரடைஸ் போன்றவை சொந்தமாக இருக்கின்றன. இவைகளெல்லாம் இல்லை என்று சொல்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: துணைத் தலைவரவர்களே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அழகர்சாமி அவர்கள் அந்த நூற்பாலையில் இரவு நேரத்தில் பெண்கள் வேலைக்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று குற்றச்சாட்டு சொல்கிறபோது

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அதைக் குறிப்பிட்டு மாத்திரம் சொல்லி இருந்தால் இந்தப் பிரச்னை வந்து இருக்காது. இப்போதும் திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டு இருக்கிறார். அவர்கள் எத்தனை தொழில்களை வேண்டுமானாலும் நடத்திக்கொண்டு இருக்கலாம். சினிமா தொழில் நடத்தலாம், சினிமா கம்பெனி நடத்தலாம், அதிலே தவறு இல்லை. ஆனால் அவர் இரவு நேரத்தில் பெண்களை அமர்த்தி வேலை வாங்குகிறார் என்று சொல்லியிருந்தால் யாரும் அதைப்பற்றி கவலைப்பட்டு இருக்கமாட்டார்கள். அவர் சினிமா தொழில் செய்கிறார் என்று சொல்லி அவர் முதலமைச்சர் அவர்களுக்கு வேண்டியவர் என்று எல்லாம் சொல்லி, தவறான தகவல்களைத் தந்த காரணத்தால் தான் மறுக்கவேண்டியிருக்கிறது. உங்களுக்கு இருக்கின்ற எண்ணங்களை மன்றத்தில் எடுத்துச் சொல்லிக்கொண்டு வருகிறபோது பல கருத்துக்களைச் சேர்த்து சொல்லிக்கொண்டு வருகிறீர்கள். அதை நாங்களும் கேட்டு பொறுத்துக்கொண்டு தான் இருக்கிறோம், ஆகவே, நான் சொல்ல வந்தது குற்றச்சாட்டை நேரடியாகச் சொல்லுங்கள். அப்பொழுது இந்தப் பிரச்னை வந்து இருக்காது. ஆனாலும் சண்முகா பிலிம்சுக்கும் இவர்களுக்கும் சம்பந்தம் இல்லை.

திரு.எஸ்.ஆர். இராதா: மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் இங்கே பேசும்போது பலவற்றைச் சொன்னார்கள். அதைப் பற்றிப் பிரச்சினை இல்லை. ஆனால் ** ** என்று சொல்வது பொருத்தமானதாக இல்லை. அது அவைக் குறிப்யில் பதிவாகியிருக்கிறது. அப்படியிருப்பது நல்லதல்ல. அதை நீக்கிவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவரையே கேட்கிறேன். திரு.லத்தீப், அது இருக்கலாமா, எடுத்து விடலாமா?

THIRU M. A. LATHEEF: I do not mean any disrespect to the Chair. I am making certain comments about the incambents of the Chair. If it is construed as disrespect to the Chair, I am willing that it should be removed.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் சொன்னதை பத்திரிக்கை குறிப்பில் இருந்தும், சபைக்குறிப்பில் இருந்தும் நீக்கி விட உத்தரவிடுகிறேன்.

திரு.மு. கருணாநிதி: தலைவரவர்களே, * * என்று தாங்கள் சொன்னீர்கள். அதையும் சேர்த்து எடுத்து விட்டால் நல்லது.

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: நான் அவர்-* * என்று சொல்லவில்லை. அந்தப் பிரச்னையை நீங்கள் கிளப்பினீர்கள் அதனால் சத்தம் போட்டார்கள் என்று நான் சொன்னேன் நீங்கள் பேசித்தான் அமைதி குலைந்தது என்று நான் சொல்லவில்லை.

திரு. எம். ஏ. லத்தீப்: தாங்கள் அது மாதிரி சொன்னால் நான் ஏற்றுக் கொள்கிறேன். நான் பேசுவதற்கு முன்னே அங்கேயிருந்து குரல் எழுப்பிய காரணத்தால் தான் நான் ஒழுங்குப் பிரச்னை கிளப்பினேன். ஆகவே, நான் பேசிய பிறகு தான் சபையில் அமைதி குலைந்தது என்று தாங்கள் சொன்னது சபைக்குறிப்பில் இருக்கலாமா என்பதைப் பற்றி நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படி நான் சொல்லியிருந்தால் அதை நீக்குவதைப் பற்றி எனக்கு ஆட்சேபனை இல்லை. நான் சொன்னது, நீங்கள் எழுந்து பேசாது இருந்தால் இந்தப் பிரச்னை வந்திருக்காது என்று நான் சொன்னேன்,

திரு. எம். ஏ. லத்தீப்: முதலில் அந்தப் பக்கம் சத்தம் வந்தது. நான் அதற்கு ஒழுங்குப் பிரச்னை எழுப்பினேன். நான் ஒழுங்கு பிரச்னை எழுப்பியதால் தான் சத்தம் வந்தது என்று சொல்வது எனக்கு மிகவும் வருத்தத்தை அளித்தது. அதனால் நான் நான் அந்த வார்த்தைகளை சொல்ல வேண்டிவந்து விட்டது என்று சொல்லிக்கொள்கிறேன்.

* திரு. பொ. விஜயராகவன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, எங்களுடைய கட்சியின் தலைவர் மாண்புமிகு ஜேம்ஸ் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற கண்டனத்தீர்மானத்தையும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக்பாட்சா அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தையும், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. உமாநாத், திரு. லத்தீப் ஆகியோர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற கண்டனத் தீர்மானங்களையும் ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைக் கூற முற்படுகிறேன்.

முதவாவது இந்த அரசின்மீது நான் சாட்டுகின்ற குற்றச்சாட்டு, அந்த அரசு சட்டம், ஒழுங்கை காப்பாற்றத் தவறி விட்டது என்பதாகும். அதற்கு என்னால் பல சான்றுகளைத் தரமுடியும். நாடாளுமன்ற உறுப்பினர் திரு. முருகையன் படுகொலை, எதிர்க்கட்சித் தலைவரை தாக்கியது. திரு. உமாநாத் வீடு தாக்கப்பட்டது ஆகிய பல்வேறு பிரச்சனைகளை இந்த மாமன்றத்தில் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மக்கள் பிரதிநிதிகளுக்கே இந்த நாட்டில், இந்த ஆட்சியில் பாதுகாப்பு இல்லை என்றால் இந்த ஆட்சியில் சாதாரண பொது மக்களுக்கு எப்படி பாதுகாப்பு இருக்கமுடியும் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

சட்டம், ஒழுங்கை காப்பாற்றக்கூடிய போலீஸ் அதிகாரிகள் சில நேரங்களில் வெறும் பார்வையாளர்களாக இருக்கிறார்களே தவிர, இந்த ஆட்சியில் போலீசார் செயலற்றவர்களாக இருக்கிறார்களே தவிர, அதிகாரமற்றவர்களாக இருக்கிறார்களே தவிர, கைகள் கட்டப்பட்டவர்களாக இருக்கிறார்களே தவிர, இந்த அவையிலே நேற்று நண்பர் உமாநாத் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அவர்கள் ஆணும் இல்லாமல் பெண்ணும் இல்லாமல் அலியாக ஆக்கப்பட்டிருக்கிறார்களோ என்ற சந்தேகம் எழுவதற்கு நியாயமான காரியங்கள் பல இருக்கின்றன. போலீசார் சரியாக நடவடிக்கை எடுக்கவில்லை—என்று மக்கள் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினாலும் கூட உரிய நடவடிக்கை எடுக்காமல் இருப்பதுதான் பல்வேறு பிரச்னைகளுக்குக் காரணமாக இருக்கிறது. மக்கள் பிரதிநிதிகளின் உயிருக்குக் கூட பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது.

உதாரணத்திற்கு சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எங்களுடைய ஜனதா கட்சி உறுப்பினர் மரியாதைக்குரிய சுவாமிதாஸ் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் தக்கலை டி.எஸ்.பி. மீதும் தக்கலை சர்க்கிள் இன்ஸ்பெக்டர்மீதும் புகார் கொடுத்து அவர்களால் தன்னுடைய உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எழுத்து மூலமாக புகார் கொடுத்தும் அவர்கள்மீது இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏன் இந்த மவுனம்? ஏன் இந்த தயக்கம்? புகார் கொடுத்த சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய சுவாமிதாஸ் அவர்களை இதுவரையில் கூப்பிட்டு விசாரிக்கவில்லை. அவர்களை விசாரித்திருந்தால் என்ன நடைபெற்றது, ஏன் நடைபெற்றது என்ற உண்மைகள் வெளிவந்திருக்கும். அப்படி இல்லாததால் இதில் முதலமைச்சர் தயக்கம் காட்டுகிறார் என்ற குற்றச்சாட்டைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்திராகாந்தி அவர்கள் பாராளுமன்றத்தால் தண்டிக்கப்பட்டவுடன், அவர்கள் கட்சிக்காரர்கள் இங்கே ஆடிய வெறியாட்டங்களுக்கு கணக்கு உண்டா? அதை தடுக்க இந்த அரசு முன் வந்ததுண்டா? உதாரணமாக பல சான்றுகளை இங்கே என்னால் சுட்டிக்காட்ட முடியும்.

தஞ்சை இரயில் நிலையம் கடந்த டிசம்பர் 19-ம் நாள் இரவு தாக்கப்பட்டது.

திருப்பத்தூர் இரயில் நிலையம் தாக்கப்பட்டு, கருவிகள் நாசமாக்கப்பட்டன.

இரயில் பாதையில் பெரிய கற்களை வைத்து திருத்துறைப்பூண்டியிலிருந்து காரைக்குடி செல்லும் எஞ்சின் தடம் புரளச் செய்யப்பட்டது.

சுவாமிமலை, திருச்சி டிவிஷனிலுள்ள பெருகுமணி, திருநாகேஸ்வரம் ஆகிய இரயில் நிலையங்கள் தாக்கப்பட்டன.

வைகை எக்ஸ்பிரசைக் கவிழ்க்க விருத்தாசலம்-தாழநல்லூருக்கு இடையே இரயில் பாதையில் பாறாங்கல் வைக்கப்பட்டது.

கோயமுத்தூர்-மேட்டுப்பாளைய இரயில் பாதையில் 48 அடி நீளமுள்ள இரயில் பாதை அகற்றப்பட்டது.

சென்னையில் சேத்துப்பட்டு-நுங்கம்பாக்கம் இரயில் நிலைகளுக்கு இடையே வெடிவிபத்து ஏற்படுத்தப்பட்டு அதனால் பல மணி நேரங்களுக்கு இரயில் ஓடவில்லை.

அதிராமபட்டினத்தில் இரயில் பாதையில் பெரும் பாறாங்கல் வைக்கப்பட்டு டீசல் எஞ்சின் தடம் புரண்டது.

வடாற்காட்டிலுள்ள திருப்பத்தூர் தபால் நிலையத்துக்குத் தீ வைப்பு.

மதுரை மொரையில் போஸ்டாபீஸ்மீது தாக்குதல்.

தக்கலை தபால் நிலையத்திற்கு தீ வைப்பு.

இப்படி பல இடங்களில், பல ஊர்களில் நடைபெற்ற வன்முறை வெறியாட்டங்களுக்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை இந்த ஆட்சியில்.

திரு. துரை முத்துசாமி: உறுப்பினர் அவர்கள் பேசுகிறார்களா அல்லது படிக்கிறார்களா?

திரு. பொ. விஜயராகவன்: பிரச்னைகளைச் சொல்லும்போது உண்மை சுடும் என்று சொல்வார்கள். அந்தக் காரணத்தால் அவர்கள் எதையோ சொல்கிறார்கள்.

இப்படி பல்வேறு இடங்களில் ஜனதா கட்சித் தொண்டர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் காந்திய வழியில் நடைபெற்ற சாத்வீகப் போராட்டங்கள் என இந்த அரசு கருதுகின்றதா?

சிவகாசியில் இந்திரா காங்கிரசார் காரில் ஏறிக்கொண்டு மைக் மூலம் கடைகளைச் சாத்தாவிட்டால் சைக்கிள் செயின் அடி கொடுக்கப்படும் எனப் பிரச்சாரம் செய்திருக்கிறார்கள். இதுதான் தலைவர் காமராஜ் அவர்கள் சொல்லித்தந்த பாடமா?

இவைகள் எல்லாம் நடைபெற வேண்டுமானால் இந்த அரசு ஒன்றில் கையாலாகாத அரசாக இருக்கவேண்டும்; ஆண்மையற்ற அரசாக இருக்கவேண்டும். இல்லையேல் இந்த அரசின் ஒத்துழைப்போடு, இந்த அரசின் துணையோடு இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெற்றிருக்க வேண்டும். இவற்றில் எந்த வகையைச் சேர்ந்தது இந்த அரசு என்பதை முதலமைச்சரவர்கள் உணர்த்தினால் நன்றாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10–50]

எல்லாவற்றிருக்கும் சிகரம் வைத்தாற்போல, முத்தாய்ப்பு வைத்தாற்போல குமரி மாவட்டத்தில் வெள்ளிக்கோடு என்னுமிடத்தில் கட்டபொம்மன் பேருந்து தீக்கிரையாக்கப்பட்டு 10 உயிர்கள் பலி கொள்ளப்பட்டனவே, இது என்ன இந்த அரசின் சட்டம், ஒழுங்கு காக்கும் லட்சணமா என்று கேட்கிறேன்.

அடுத்து இன்றைக்கு மாணவர்கள் தங்களை ஆதரிக்கவில்லை என்ற காரணத்தினால் இந்த அரசு திட்டமிட்டு மாணவர்களைப் பழி வாங்குகின்றது. மாணவர்கள் மீது குண்டர்களை இந்த அரசு ஏவிவிட்டு வேடிக்கை பார்க்கின்றது. குண்டர்களை வைத்து மாணவர்களைத் தாக்கச் செய்கிறது இந்த அரசு. இராஜாஜி, பெரியார் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாணவர்கள், தொழிலாளர்கள் ஆகியோர் மீது தொகுக்கப்பட்டுள்ள வழக்குகள் வாபஸ் பெறப்படும் என்று முதல்வர் வாக்குறுதி அளித்தாரே, வாக்குறுதி கொடுத்தாரே அந்த வாக்குறுதி என்ன ஆயிற்று. அந்த வாக்குறுதிகளை வைத்துதான் கைது செய்த மாணவர்களை விடுதலை செய்து அவர்கள் மீது தொடர்ந்த வழக்குகளை வாபஸ் வாங்கு என்று பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் கேட்டார்கள். அந்த மாணவர்களைப் போலீஸார் தாக்கினர். போலீஸார் மட்டுமல்ல. அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும் போதே மாணவர்களை குண்டர்கள் தாக்குகிறார்கள். குண்டர்களை விட்டு மாணவர்களைத் தாக்க அனுமதித்துவிட்டு போலீசார் வேடிக்கை பார்த்து நின்றனர். இது ஏன் என்று கேட்டால் பொது மக்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே நடந்த மோதல் என்று சொல்கிறார்கள். இன்னும் கூட எதற்கெடுத்தாலும் மக்கள் பார்த்துக்கொள்வார்கள் என்ற மிரட்டல் வந்துகொண்டுதான் இருக்கிறது. அடுத்து சென்னை மாநிலக் கல்லூரி மாணவர்கள் நிலைமை என்ன என்பதைப் பார்க்க வேண்டும். ஒரு சில சம்பவம் முடிந்தவிட்ட பிறகு குண்டர்களையும் ரவுடிகளையும் கொண்டு வந்து போலீசார் முன்னிலையிலேயே தாக்குதல் நடத்தச் செய்திருக்கிறார்கள். அப்போதும் போலீசார் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றிருக்கிறார்கள். இதுதான் இந்த மாநிலத்திலே சட்டம், ஒழுங்கு இந்த அரசால் பாதுகாக்கப்படுகின்ற லட்சணமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

அடுத்து பாளையங்கோட்டை சதக்கத்துல்லா அப்பா கல்லூரியைச் சார்ந்த மாணவர் ஒருவரைக் காணவில்லை. கல்லூரிக்கு சென்றவர் திரும்பி வரவில்லை என்று அவருடைய பெற்றோர்கள் புகார் கொடுக்கின்றார்கள். சில காலம் காணவில்லை என்று சொல்லிவிட்டு பிறகு ஒரு எலும்புக் கூட்டைக் கொண்டு வந்து இதுதான் உங்கள் மகன் என்று சொல்கிறார்கள். இது என்ன மர்மமான காரியம் என்று ஒரு அச்ச உணர்வு ஏற்படாதா அப்படி ஏற்படுவது நியாயம் தானே? அந்த மர்மத்தை போக்குவதற்கு, அந்த அச்சத்தைப் போக்குவதற்கு அரசு என்ன விசாரணை நடத்தி இருக்கிறது. இது தான் சட்டம், ஒழுங்கு காப்பாற்றுகின்ற தன்மையா?

அடுத்து சென்னை இராயபுரம் அருகில் உள்ள காசிபுரம் 7-வது தெருவைச் சேர்ந்த கமலவேணி என்கின்ற பெண்மணி 'உறவினரிடம் பணம் வாங்கச் சென்ற என் கணவர் கிருபாகரன் மூன்று மாதமாகியும் வீடு திரும்பவில்லை, என்ன ஆனாரோ தெரியாது' என்று எண்ணூர் போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்திருக்கிறார். அதுபற்றி இதுவரை எந்தத் தகவலும் இல்லை. அதுபற்றி நடவடிக்கை எடுப்பதற்கு இந்த சர்க்கார் எந்தவித கவலையும் கொள்ளவில்லை. புரட்சித் தலைவர் கையில் சட்டமும், ஒழுங்கும் படுகின்ற பாட்டை இந்த நாடு நன்றாக அறிந்துகொண்டுதான் இருக்கிறது. இதையெல்லாம் மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள் இந்த அரசை வீட்டுக்கு போ என்று சொல்கின்ற நாளும் வெகு தூரத்தில் இல்லை என்று எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து இந்த அரசாங்கம் நிர்வாகத்திலே தலையிடுகிறது என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்பாளர்கள் என்றாலே இன்றைக்கு அதிகாரிகள் பயந்து நடுங்குகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. இன்றைக்கு பல இடங்களிலே அந்தக் கட்சியின் அமைப்பாளர்கள் தங்கள் அதிகாரத்தை நடத்திக்கொண்டு வருகிறார்கள். நிர்வாகத்திலே எப்படி தலையிடு நடைபெறுகிறது என்று பல உறுப்பினர்கள் இந்த மன்றத்திலே பேசினார்கள். நான் மிக முக்கியமான ஒரு விஷயத்தை இந்த அவையில் குறிப்பிட விரும்புகிறேன்.

1978-ம் ஆண்டு ஜுலை மாதம் 20-ம் தேதி அன்று தமிழக அரசின் தொழில் துறையின் மூலமாக ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு தேங்காய் மட்டைகள் கொண்டு செலப்படக் கூடாது கேரளாவிற்குக்கொண்டு போகக் கூடாது, என்று சொல்வதைபோல், இந்த உத்தரவிலே கன்னியாகுமரி மாவட்டத்திற்கே கொண்டு போகக் கூடாது என்று சொல்கிறார்கள். நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டம், கேரளாவோடு

இணைந்திருக்கிறது என்று இன்னும் அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. எனக்குப் புரியவில்லை. அந்த உத்தரவு ஏன் போடப்பட்டது. அதன் காரணம் என்ன என்பதையெல்லாம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த உத்தரவு நெல்லை மாவட்டத்திலுள்ள நான்கு தொழிற்சாலைகளின் பாதுகாப்பிற்காக. அதிலும் குறிப்பாக இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய கே.டி.கோசல்ராம் அவர்களின் உறவினர்கள் வைத்திருக்கிற இரண்டு தொழிற்சாலைகளைப் பாதுகாப்பதற்காக, அவர்கள் கடிதம் எழுதினார்கள் என்பதை அடிப்படையாக வைத்துக்கொண்டு இந்த உத்தரவு போடப்பட்டிருக்கிறது. இதற்கு அடிப்படை என்ன? இந்திராக் காங்கிரஸ் கட்சியோடு உறவு கொள்வதற்காக, இந்திரா காங்கிரஸ் கட்சியோடு ஒட்டிக்கொள்ளவேண்டும் என்பதற்காக, அவர்களோடு தோழமை வைத்துக்கொள்ளவேண்டும் என்ற அடிப்படையில்— அவர்கள் நடத்திய வன்முறை, வெறியாட்டங்களுக்கு எல்லாம் துணை போனார்கள் அவர்கள் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு சலுகை அளித்தாவது, அவர்கள் கட்சியில் இருப்பவர்களுக்கு நன்மைகள் அளித்தாவது அவர்களோடு உறவை புதுப்பித்துக் கொள்ளவேண்டும் என்ற அளவில் இந்த அரசு செயல்பட்டு வருகிறது என்ற குற்றச்சாட்டை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அடுத்து, குமரி மாவட்டத்தில் உள்ள 75,000-க்கு மேற்பட்ட, கிராமங்களில் வசித்து வருகிற சாதாரண கயிற்றுத் தொழிலாளர்கள் மீது இந்த அரசுக்கு அக்கறை இல்லை, ஆனால் நெல்லைமாவட்டத்தில் நான்கு தொழிற்சாலைகள் உள்ளன, அவை பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் உறவினர்களுக்கு சொந்தமாக இருப்பதால் அவர்களுக்காக வேண்டி ஒரு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது என்றால் இது நிர்வாகத் தலையீடு இல்லையா? இது தவறு இல்லையா என்று கேட்க விரும்புகிறேன். சொல்லப் போனால், நெல்லை மாவட்டத்திலிருந்து குமரி மாவட்டத்திற்கு தேங்காய் மட்டை கொண்டு போகக்கூடாது என்ற உத்தரவிருக்கிறது. அங்கே தேங்காய் மட்டையை வைத்துக்கொண்டு தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படுகிற தேங்காய் பஞ்சை வைத்துக்கொண்டு குமரிமாவட்டத்தில் கொள்ளை லாபம் வேண்டுமானால் அடிக்கலாம் என்றளவிற்கு இந்த அரசின் செயல் இருக்கிறது என்றால் இது தவறான செயல் இல்லையா? மற்ற மாவட்டங்களிலிருந்து நல்ல விலை கொடுத்து தேங்காய் மட்டை வாங்கி குமரி மாவட்டத்தில் உள்ள கயறு திரிப்பவர்கள் அந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள் காலாகாலமாக. ஆனால் இப்போது அந்தத் தொழில் நசித்து போகக்கூடிய அளவிற்கு ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் இது மாற்றாந்தாய் மனப்பான்மை இல்லையா? குமரி

மாவட்டத்தை இந்த அரசு வேண்டுமென்றே புறக்கணிக்க விரும்புகிறது என்று சொல்ல விரும்புகிறேன். காரணம், அங்கிருந்து வரும் பெரும்பாலான உறுப்பினர்கள் எதிர்கட்சி வரிசையில் இருக்கிறார்கள். கட்சி மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு செயல்படவேண்டிய அரசு ஆளும்கட்சியில் இருப்பவர்களில் குமரி மாவட்டத்திலிருந்து வருபவர்கள் எண்ணிக்கை அதிகமாக இல்லை என்பதால் குமரி மாவட்டத்தை அடியோடு புறக்கணிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

<u>திரு. கே. எம். அப்துல் ரசாக்:</u> பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயராகவன் அவர்கள் பேசும் போது குமரி மாவட்டதிற்கு மட்டும் தேங்காய் கூந்தல் கொண்டு போகக்கூடாது என்று உத்தரவு வந்திருப்பதாகச் சொன்னார்கள். நெல்லை மாவட்டத்தின் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் மூலமாக, தமிழ்நாடு தொழில் உற்பத்திக் கழகத்தின்மூலம் இருக்கிற ஆலைகளுக்கு போதுமான அளவிற்கு மட்டைகள் இல்லாத காரணத்தால் அங்கே ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அந்த மட்டைகளை நெல்லை மாவட்டத்திலிருந்து பிற மாவட்டங்களுக்கு அல்லது அண்டை மாநிலமான கேரளாவிற்கு கொண்டுபோகக்கூடிய அவல சூழ்நிலை ஏற்படும்போது, இங்கே அரசாங்கத்தின் மூலம் கடன் வசதி பெற்ற ஆலைத் தொழிலாளர்களுக்கு அந்தக் கடன்களை திருப்பி அடைக்கமுடியாத நிலை இருப்பதால் அந்த உத்தரவு பிறப்பிக்கப்படவேண்டும் என்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்பதைத் தங்கள் மூலம் அவைக்கு தெரியப்படுத்திக்கொள்கிறேன்,

<u>திரு. பொ. விஜயராகவன்:</u> அப்படியானால் ஒரு விலையை இந்த அரசு நிர்ணயம் செய்யலாமே. ஜி.ஓ.எம்., எஸ். நம்பர் 776 டேட்டட் 27-9-78. இந்த ஜி.ஓ.வில்,

'லெட்டர் ப்ரம் கே.டி. கோசல்ராம், டேட்டட் 7-9-78 என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள்: மற்ற விவரங்கள் இந்த ஜி.ஓ.வில் காணவில்லை. அடுத்தபடியாக, இந்த அரசு நிர்வாகத் திறனற்ற அரசு, நிர்வாகச் சீர்கேட்டிற்கு வித்திடுகிற அரசு என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உதாரணத்திற்கு ஒன்று சொல்லமுடியும், நிர்வாகத் திறன் மிக்க அரசு செய்யக்கூடிய வேலையா என்று இந்த மன்றம் முடிவெடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-00]

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> சுருக்கமாக முடித்து விடுங்கள்.

திரு. பொ. விஜயராகவன்: குறுக்கீடு எல்லாம் இருந்தது. இன்னும் ஐந்து நிமிடங்கள் அனுமதிக்கவேண்டுகிறேன். முடித்து விடுகிறேன்.

ஒரு நிகழ்ச்சியை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழக அரசின் ஒரு நிறுவனமான பிஷரீஸ் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் என்ற ஒரு நிறுவனம் உலக வங்கியிடமிருந்து 120 லட்சம் ரூபாய் கடனாக வாங்கியது. இந்த 120 லட்சம் ரூபாயை இந்த நிறுவனம் ஆக்க பூர்வமான காரியங்களுக்காக செலவழித்திருக்கவேண்டும். அப்படி செலவழித்ததா என்றால் இல்லை. இந்த 120 லட்சத்தையும் ஒரு வங்கியில் பிக்ஸட் டிப்பாஸிட்டில் போட்டு வட்டி வாங்கிக்கொண்டிருக்கிறது. இப்படி பாங்கியில் போட்டு வட்டி வாங்கிகொண்டிருப்பதற்கு ஒரு கார்ப்பரேஷன் தேவையா? அப்படியென்றால் அரசாங்க வருமானத்தை எல்லாம் சேர்த்து ஒரு வங்கியில் பிக்ஸட் டிப்பாசிட்டில் போட்டு வட்டியை வாங்கிக்கொண்டு இருக்கலாமே. ஆகவே இந்த அளவுக்கு ஆக்கப்பணிகளுக்கு பயன்படுத்த முடியாத அளவுக்கு, அதற்கான திட்டம் போட முடியாத அளவுக்கு இந்த சர்க்கார் இயங்கிக் கொண்டிருக்கிறது. இதற்கு மேலும் விவரம் புரிந்தவர்கள் சொல்லுகின்றார்கள். உலக வங்கியிடமிருந்து வாங்கப்படும் கடன் சரியான முறையில் பயன்படுத்தப்படாவிட்டால், அதை வாங்கி வங்கியில் பிக்ஸட் டிப்பாசிட்டில் போட்டு வட்டி வாங்கிக் கொண்டிருந்தால் பிற்காலத்தில் உலக வங்கி தமிழக அரசுக்கு கடன் உதவி செய்வதற்கு தயக்கம் காட்டும், கடன் தருவதற்கு மறுப்பு தெரிவிக்கும் என்று விவரம் அறிந்தவர்கள் சொல்லுகின்றார்கள். ஆகவே இதற்கு அரசின் பதில் என்ன என்பதை தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மதுவிலக்கை கொள்கையைப்பற்றி....

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே 15 நாட்களுக்கு முன்பாக, உலக வங்கியின் ஒரு டீம் வந்து, தமிழக அரசின் சார்பில் செய்யப்படுகின்ற வேலைகளை எல்லாம் பார்வையிட்டு, தமிழக அரசு சிறப்பாக செயல்படுகிறது என்று பாராட்டிவிட்டு சென்றிருக்கிறது. இது எல்லா இதழ்களிலும் வந்திருக்கிறது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. பொ. விஜயராகவன்: இப்படி வங்கியில் பிக்ஸட் டிப்பாசிட்டில் போட்டு வட்டி வாங்கிக்கொண்டிருப்பதையும் பாராட்டி விட்டு சென்றிருக்கிறார்களா என்பது தெரியவில்லை. மதுவிலக்கு கொள்கையைப்பற்றி....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிநே முக்காலுக்கே ஆரம்பித்தீர்கள். குறுக்கீடுகள் எல்லாம் இருந்தது என்பதற்காக ஐந்து நிமிடம் கூடுதலாக கொடுக்கப்பட்டிருக்கிறது. ஐந்து நிமிடத்திற்குள் முடித்துவிடுங்கள்.

திரு. பொ. விஜயராகவன்: மதுவிலக்குக் கொள்கையைப்பற்றி சொல்லும்போது, இந்த அரசு மதுவை ஒழித்ததா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். இன்று சென்னை மாநகரத்தில் சில மாவீரர்கள் அரசாங்கத்தினுடைய - ஆளும் கட்சியினுடைய கருணையை பெற்றிருக்கின்ற காரணத்தால், அரசாங்கத்தோடு இருக்கின்ற தொடர்பை வைத்துக்கொண்டு பல மாவீரர்கள் லட்சக்கணக்கான அளவில் பணத்தை சம்பாதித்துக்கொண்டு, மொத்த வியாபாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை சென்னை மாநகர மக்கள் பேசிக்கொண்டிருக்கின்ற செய்தி இந்த அரசாங்கத்தின் காதுகளில் விழவில்லையா என்று கேட்க ஆசைப்படுகிறேன். இந்த ஆட்சியின் போதுதான் சாராய வியாபாரிகள் கூட்டம் கூட்டமாக வெளியே வந்து சண்டை போட்டுக்கொண்டிருக்கின்ற நிகழ்ச்சி நடைபெறுவது மட்டுமல்ல. நிர்வாக இயந்திரங்களை செயல்படுத்துகின்றவர்களையும் காயப்படுத்துகின்ற அளவில் சாராய வியாபாரிகள் தெருவில் நின்று சண்டை போட்டுக்கொண்டிருப்பது இந்த ஆட்சியில் தான் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நேற்றையதினம், இங்கு முதலமைச்சர் அவர்களை பார்ப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நேரம் தருவதில்லை என்கின்ற விவரம் எடுத்துச்சொல்லப்பட்டது. இந்த நாட்டிலுள்ள மக்கள் பிரதிநிதிகள். தங்கள் பகுதியிலுள்ள குறைகளை எடுத்துச் சொல்லி அதற்கு பரிகாரம் காணவேண்டும் என்ற எண்ணத்தில் முதல்வர்களை பார்க்கவேண்டும் என்று விரும்பி அவருடைய பிரைவேட் செக்ரட்டரியிடமோ அல்லது உதவியாளர்களிடத்திலோ கேட்டால், அதற்காக எழுத்துமூலம் விவரத்தை எழுதிக் கொடுத்தாலும் கூட, பேட்டி காண நேரம் கொடுப்பதில்லை என்கின்ற குற்றச்சாட்டை நான் சொல்ல விரும்புகிறேன். பலமுறை என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்த ஜனதா கட்சியைச் சேர்ந்த எங்கள் தலைவர் ஜேம்ஸ் அவர்கள் உள்பட நான்கு உறுப்பினர்கள் இரண்டு முறைகள் முதலமைச்சர் அவர்களை பேட்டி காண வேண்டும் என்று அவர்களுடைய தனி உதவியாளரிடத்தில் கேட்டு, என்னென்ன பிரச்னைகள் பற்றி பேசவேண்டும் என்பதையும் எழுதிக்கொடுத்தோம். இரண்டு முறை இப்படி கொடுத்தும் அவரைப் பார்ப்பதற்கு அனுமதியில்லை என்கின்ற அளவில் பார்ப்பதற்கு நேரம் ஒதுக்கப்படுவதில்லை. இந்த புகாரை நான் ஒரு குற்றச்சாட்டாக வைக்க விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்களுக்கு ஆயிரம் பிரச்னைகள் இருக்கலாம், நிர்வாகம் சம்பந்தமான பல கஷ்டங்கள் இருக்கலாம், சிக்கல்கள் இருக்கலாம். ஆனால் பொது மக்களுடைய பிரதிநிதிகளை சந்தித்து, நேரிடையாக குறைகளை கேட்டு தெரிந்து கொண்டால் தான், நிலைமையை நன்றாகத் தெரிந்து கொள்ள முடியும். இதற்கு முன்னால் இருந்த முன்னாள் முதலமைச்சர்களிடத்தில் எல்லாம் இப்படியில்லை. பெரும் தலைவர் காமராஜ் அவர்களை பார்க்க

வேண்டுமென்றால் எப்போது வேண்டுமானாலும் பார்க்கலாம், யார் வேண்டுமானாலும் போய் பார்க்கலாம் என்கின்ற சூழ்நிலை இருந்தது.

ஆளுநர் அவர்களைப் பார்க்கவேண்டுமென்றால், யாரும் சென்று பார்க்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆனால் முதல் அமைச்சர் அவர்களைப் பார்க்க முடிவதில்லை. எனவே இந்த வகைகளிலே எல்லாம் நிர்வாகம் சீர்கெட்டிருக்கிறது, சட்டம் ஒழுங்கு சரியான முறையிலே காப்பாற்றப்படவில்லை, எல்லா இடங்களிலும் ஊழல் ஏற்பட்டிருக்கிறது, மதுவிலக்குக் கொள்கை சரியான முறையிலே அமுல் நடத்தப்படவில்லை. அதிலேயும் கட்சிக்காரர்களுக்கு சலுகைகள் காட்டப்படுகின்றது. எனவே இந்த சர்க்கார் மீது நம்பிக்கை இல்லை. அது நன்மதிப்பை இழந்து விட்டது என்ற குற்றச்சாட்டைக் கூறி, இந்தச் சபையிலே கொண்டுவந்துள்ள கண்டனத் தீர்மானங்களையும், நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தையும் என்னுடைய கட்சியின் சார்பாகவும், என் சார்பாகவும் வலியுறுத்தி ஆதரவைத் தெரிவித்துக் கொண்டு, விடை பெறுகிறேன். வணக்கம்.

*திரு. சி. கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசின்மீது கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தையும், கண்டனத் தீர்மானங்களையும் ஆதரித்து மேலும் சில விவரங்களை நான் கூற விரும்புகிறேன். கடந்த இரண்டு நாட்களாக 19, 20 தேதிகளில் தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள சிதம்பரம், காட்டுமன்னார்குடி வட்டங்களில் விவசாயச் சங்கத்தினரும், மார்க்கிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும் பல இடங்களில் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். இதற்கு அடிப்படையான காரணம் என்ன? முன் வந்த புயல், வெள்ளத்தாலும், இப்போது பெய்த வெள்ளம் மழையால் ஏற்பட்ட சேதத்தாலும் இந்த இரண்டு வட்டங்களிலும் விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்டு, மூன்றில் ஒரு பங்கு உற்பத்தி சாவியாகி விட்ட இந்த நிலையிலே அவர்கள் விளைவித்த விளை பொருள்களை, நெல்களை நல்ல விலைக்கு விற்கமுடியாமல், அரசும் கொள்முதல் செய்யாத காரணத்தினால், உயர்ந்தரக நெல்லாகிய ராஜராஜச்சோழன் குவிண்டால் ஒன்று 48 ரூபாய்க்கு விற்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதேபோல் ஐ. ஆர். 20 ரூ. 49-க்கும், பொன்னி ரூ. 52-க்கும் விற்கக்கூடிய ஒரு மோசமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கம் நிர்ணயித்துள்ள ரூ. 85 கூட கிடைக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் நீங்கள் ரூ. 129-க்கு மேல் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு சிபார்சு செய்திருப்பதாக கூறுகிறீர்கள். ஏற்கனவே அரசு அறிவித்த, நிர்ணயித்துள்ள விலைகூட கிடைக்க முடியாத ஒரு நிலைமை இருக்கிறது. எனவே அரசே கொள்முதல் நிலையங்களை ஏற்படுத்த வேண்டுமென்பது தான் அவர்களுடைய கோரிக்கைகளில் ஒன்று.

இன்னொன்று, கெடுபிடி வசூல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பது, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட எல்லா இடங்களிலும், மகசூலிலே கை வைக்காதீர்கள் என்று அதிகாரிகள் நிர்ப்பந்திக்கிறார்கள். ஏற்கனவே ஐந்தாண்டுகளுக்கு முன்னதாக பூச்சிக்கொல்லி மருந்து தெளித்ததற்காக கொடுக்கவேண்டிய அந்த வரியையும், நிலவரி பாக்கியையும் செலுத்திவிட்ட பிறகு தான், வெள்ளாமையிலே கைவைக்கலாம் என்று அதிகாரிகள் நிர்ப்பந்திக்கிறார்கள். பாக்கியைக் கட்டாமல், அறுவடை செய்யக்கூடாது என்றும் பயமுறுத்தப்படுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலைமை அந்த வட்டங்களில் இருக்கிறது. இப்படி பாதிக்கப்பட்ட இந்த பிரதேசத்தில் இவ்வாண்டு பஞ்சாயத்து யூனியன் மேலும் ஒரு பதில் செஸ் வரியைப் போட்டு, ரூ. ஒவ்வொரு ஏக்கருக்கு ரூ. ஒன்றேமுக்காலுக்கு மேல் அதிகமாகப் போட்டிருக்கிறது இதையும் நீக்கவேண்டுமென்று கோரித்தான் இன்றைக்கு அங்கே உண்ணாவிரதம் நடந்து கொண்டிருக்கிறது. முதல்வர் அவர்கள் ஆளுநர் அவர்கள் உரைக்கு பதில் அளிக்கும்போது கூறினார்கள். இந்த மாநிலத்தில் 55 லட்சம் டன் உற்பத்தியாகிறது, அவ்வளவையும் கொள்முதல் செய்ய முடியுமா என்று குறிப்பிட்டார்கள், 55 லட்சம் டன்னையும் கொள்முதல் செய்ய வேண்டுமென்று நான் கூறவில்லை. அது நடைமுறையிலே சாத்தியமென்றும் நான் கருதவில்லை. குறைந்தது 10 லட்சம் டன்கள் 15 லட்சம் டன்களை ஏன் கொள்முதல் செய்யக்கூடாது? அதுவும் குறிப்பாக. இப்படி நெல்களை விளைவிக்கக்கூடிய சிதம்பரம், தஞ்சை, மற்றும் இம்மாநிலத்திலே, இப்படிப்பட்ட பிரச்னைகள் உள்ள இடங்களிலே ஏன் அரசே கொள்முதல் செய்யக்கூடாது என்பதைத் தான் கேட்கிறேன். இப்படிப்பட்ட நிலைமையிலே இன்றைக்கு விவசாயிகள் அவதிப்படுகிறார்கள். அதற்காகத்தான் மார்க்கிஸ்ட் கட்சி தற்போது நடத்தக்கூடிய இந்த உண்ணாவிரதம் கிளர்ச்சி. இதை நிறைவேற்றி வைப்பதிலே, இதற்கான நடவடிக்கைகள் எடுப்பதிலே இந்த அரசு தவறியிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே சென்னைக்குப் பக்கத்தில் குரோம்பேட்டையிலே, ஒரு லெதர் தொழிற்சாலை இருக்கிறது. அதற்கு இரண்டு கோடி ரூபாய் மூலதனம். ஆசியாவிலே இங்கே செய்யக்கூடிய லெதர் புராடெக்ட் பிரசித்தி பெற்றது என்று சொல்லப்படுகிறது. அந்தத் தொழிற்சாலையிலே 700 தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். அமைச்சர் அவர்கள்கூட மாரிமுத்து அவர்கள் பேசும் போது, இதைப்பற்றி பதில் சொன்னதாக கருதுகிறேன். 8 மாத காலமாக அதிலே உற்பத்தி நடைபெறவில்லை. அந்த தொழிற்சாலையில் எந்த தொழில் தகராறும் இல்லை. தொழிலாளர்களால் வேலை நிறுத்தம் கிடையாது.

[திரு. சி. கோவிந்தராசன்] [1979 பிப்ரவரி 21

முதலாளி செய்யக்கூடிய சூழ்நிலையின் காரணமாக அந்தத் தொழிற்சாலை மூடப்படுகிறது 1976-77 ஆம் ஆண்டின் டர்ன்-ஓவர் மட்டும் ஒன்றே முக்கால் கோடி.

[முற்பகல் 11-10]

வெளிநாட்டிற்கு ஏற்றுமதி 1¼ கோடி ரூபாய் அளவு. அவர்கள் சென்ட்ரல் பாங்கிலிருந்து ஒரு கோடி 20 லட்சம் ரூபாய் கடன் வாங்கி 60 லட்சம் ரூபாயை மிஸ் யூஸ் பண்ணியிருப்பதால் பாங்க் மீண்டும் கடன் கொடுக்க மறுப்பதாகச் சொல்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் அந்தத் தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. பேமென்ட் ஆப் வேஜஸ் ஆக்டின் கீழ் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று உத்தரவிட்டிருந்தும் அவர்களுக்கு கடந்த எட்டு மாத காலமாக சம்பளம் கொடுக்கப்படவில்லை. கடந்த எட்டு மாத காலமாக லேபர் டிப்பார்ட்மெண்டும், இண்டஸ்ட்ரீஸ் டிப்பார்ட்மெண்டும் சும்மா இருந்து கொண்டிருக்கிறது. கடந்த எட்டு மாத காலமாக உற்பத்தி கிடையாது, தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கப் படவில்லை. தொழிலாளர்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட சங்கம் இருக்கும்போது அங்கு அன்ஃபேர் லேபர் பிராக்டீஸ் நடைபெறுகிறது. ஏற்கனவே உள்ள அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தோடு நிர்வாகிகள் பேசி முடிவு எடுத்து 8 மாத காலமாக இருக்கின்ற இந்தச் சூழ்நிலையைப் போக்க வேண்டும். உற்பத்தியைப் பற்றி அடிக்கடி பேசுகிற நீங்கள் அந்த தொழிற்சாலையில் உற்பத்தி நடைபெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, 12 (3) செட்டில்மென்ட் இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட் ஆக்டில் மிகப் புனிதமானது என்று சொல்லப்படுகிறது. ஒரு ஃபுல்ஸ்டாப், காமா கூட மாற்ற முடியாதது என்று சொல்லப் படுகிறது. இந்திய குடியரசு சட்டத்தை விட அது புனிதமானது போல் பேசப்படுகிறது 12 (3) செட்டில்மென்ட் எதற்காக? தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் பல்வேறு பிரச்சினைகளில் தகராறு ஏற்பட்டால் சமரசம் செய்து வைத்து அந்த சமரசத்தின் மூலம் தொழில் அமைதியை நிலைநாட்டுவதற்காகத் தான் இப்படிப்பட்ட ஒப்பந்தங்கள் செய்யப்படுகின்றன. அந்தத் தொழிலாளர்கள் ஒப்புக்கொள்கிற முறையில் இந்த செட்டில்மென்ட் செய்யப்படுகிறதா என்றால் இல்லை. 12 (3) செட்டில்மென்ட் குறைந்தபட்சம் இருக்கக்கூடிய தொழிலாளர்களில் 51 சதவிகிதம் பேர் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆனால் இந்தப் பிரிவு மிஸ் யூஸ் செய்யப்படுகிறது. தனக்கு வேண்டிய சங்கங்கள். அல்லது முதலாளிகளாக இருந்தால் அரசு தலையிட்டு 12 (3) செட்டில்மென்ட் துரிதமாகச் செய்கிறது.

1979 பிப்ரவரி 21]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, 12 (3) செட்டில்மென்ட் இம்ப்ளிகேஷனைப் பற்றி இரண்டு மூன்று வரிகளைப் படித்து விடுகிறேன்:—

A settlement arrived at before a conciliation officer should not be invalid on technical grounds. So where a settlement was properly entered into and the workmen were represented by a trade union it will not be open to another trade union to canvass for the invalidation of the settlement on the ground that the workmen were not properly represented.

இதுதான் சட்ட நிலைமை.

திரு. சி. கோவிந்தராசன் : இப்படி அடிக்கடி அவர்கள் குறுக்கிடுவார்கள் என்பது எனக்குத் தெரியும். எனக்கு அவகாசம் கொஞ்சமே கொடுக்கப்பட்டுள்ளது. டெக்னிகலாக இந்தப் பிரச்சினையைப் பார்க்கக்கூடாது. பெருவாரியான தொழிலாளர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்பதன் நோக்கம் என்ன? பெருவாரியான தொழிலாளர்கள் ஏற்றுக் கொண்டால்தான் 12 (3) செட்டில்மென்ட் செய்ய முடியும். இல்லையென்றால் 'பை பார்ட்டி' செட்டில்மென்ட் பண்ணிக் கொள்ளுங்கள். அதாவது 18 (1) செட்டில்மென்ட் பண்ணிக்கொள்ளுங்கள். எதற்காக அரசாங்கம் இது விஷயத்தில் முதலாளிகளுக்கு உடந்தையாக இருக்கவேண்டும். நான் இதுபற்றி அமைச்சர் அவர்களிடமும் தொழிலாளர் நல இலாகா அதிகாரிகளிடமும் பேசியிருக்கிறேன். முதலாளிகள் மெஜாரிட்டி இருக்கிறது என்று கருதினால் அவர்கள் 18 (1) ஒப்பந்தம் செய்துகொள்ளட்டுமே அதற்கு அரசாங்க தொழிலாளர் நல அதிகாரி எதற்காக கையெழுத்திட வேண்டும்? தொழிலாளர் நல இலாகாவில் இருந்து யாரும் போக வேண்டிய அவசியம் இல்லை. அப்படி மெஜாரிட்டி தொழிலாளர் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்கிறார்களா என்பதை சீக்ரெட் பாலெட் மூலமாக நிர்ணயிக்க வேண்டும்.

இல்லையென்றால் எந்த நோக்கத்திற்காக இப்படிப்பட்ட செட்டில்மென்ட் செய்யப்படுகிறதோ அது நிறைவேறுவதில்லை. 12 (3) ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு அதை எதிர்த்து வடலூரில் சேஷசாயி இன்டஸ்ட்ரிசில் வேலை நிறுத்தம். அண்ணா தி. மு. க. சங்கம் உட்பட வேலை நிறுத்தம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இப்போது சிம்கோவிலே நடக்கிறது, பைலேட்டரல் செட்டில் மென்ட் ஆனபிறகும்கூட கள்ளக்குறிச்சி கோவாப்ரேடிவ் சுகர் மில்லிலே கோ-ஸ்லோ நடந்து கொண்டு இருக்கிறது. இவ்வாறு எந்த நோக்கத்திற்காகக் ஒப்பந்தம் ஏற்பட்டதோ அது நிறைவேறவில்லை, இந்த நிலைகளைப் போக்க தொழிலுக்குத் தக்கவாறு

சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும். லேபர் என்பது கன்கரன்ட் லிஸ்டிலே தான் இருக்கிறது, திருத்தங்கள் கொண்டுவர வேண்டும்.

அடுத்து, தனிப்பட்ட முறையிலே தொழிலாளர்களிடத்திலே அண்டர்டேக்கிங் வாங்குவது நடைபெறுகிறது. டி. வி. எஸ். சுந்தரம் கிளேட்டனிலே நடைபெற்றது சங்கங்கள் இருக்கும் போது தொழிலாளர்களிடம் தனியாகக் கையெழுத்து வாங்கும் நிலைமை என் ஆயுட்காலத்திலேயே நான் பார்த்தது கிடையாது என்று முதலமைச்சரே கூறினார். ஆனால் அப்படிக் கூறிக்கொண்டு இருக்கும் போதே அங்கே அது நடந்தது. டி. ஐ. சைக்கிள்லில் பல படியும் இது நடந்தது, அங்கே அங்கீகரிக்கப்பட்ட பதிவு செய்யப் பட்ட சங்கம் இருக்கும்போது அங்கேயும் தனிப்பட்ட முறையிலே தொழிலாளர்களிடத்திலே கையெழுத்து வாங்கக்கூடிய சூழ்நிலை இருந்தது, அது மட்டுமல்ல, அங்கே ஐவர் குழு என்று போடப் பட்டது. எதற்காக ஐவர் குழு? சங்கம் இல்லாத நிலையிலே ஜனநாயக முறையிலே தொழிலாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐவர் குழு பேசித் தீர்க்கவேண்டுமென்பது சட்டத்திலேயே இருக்கிறது. ஆனால் அங்கே பதிவுசெய்யப்பட்ட சங்கம் கிளப்புகிற நியாயமான கோரிக்கைகளை புறக்கணிக்கவும் அந்தக் கோரிக்கை களுக்கு வேட்டுவைப்பதற்காகவும் தான் தனிப்பட்ட முறையிலே தொழிலாளர்களிடத்திலே கையெழுத்து வாங்கப்படுகிறது. அப்படி வாங்குவது சரி அல்ல, சரியல்ல என்று முதலமைச்சரே சொல்கிறார், உணர்கிறார், அதற்கான சட்டத் திருத்தத்தை ஏன் கொண்டுவரக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்</u> : தலைவர் அவர்களே, முதலாளிகள் தனித்தனியாக தொழிலாளர்களிடத்திலே கையெழுத்து வாங்குவதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்றும் அப்படி வாங்கமுடியாதபடி சட்டத்தை திருத்த வேண்டுமென்றும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. சி. கோவிந்தராசன்</u> : நான் நடந்ததைச் சொல் கிறேன். ஏற்கனவே அதற்கு ஊக்கம் அளிக்கப்பட்டது. தொழிற் சங்கச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட தொழில் சங்கம் இருக்கும் போது இவ்வாறு தொழிலாளர்களிடம் கையெழுத்து வாங்குவது சரியல்ல. அந்தச் சட்டத்தைத் திருத்தினால் இப்படிப் பட்ட பிரச்னை இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

அடுத்து, தொழிலாளர் நல இலாகா குறித்து சில வார்த்தை களைச் சொல்ல விரும்புகிறேன், தொழிலாளர்களுடைய நலனைப் பாதுகாப்பதற்குத் தான் அந்த இலாகா இருக்கிறது. ஆனால் சட்டத்தைப் பேசி முதலாளிகளுக்கு வக்காலத்து வாங்கக்கூடிய

இலாகாவாக அது மாறக்கூடாது, முதலாளிகள் அவர்களே தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும், உலகத்திலே உள்ள சட்ட நிபுணர்களைக்கூட கொண்டுவரக்கூடிய அவ்வளவு வசதி களைப் படைத்தவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். ஆனால் தொழிலாளர்களுக்குத் தான் சட்டத்திலே முழுமையான வசதிகள் கிடையாது. இப்படிப்பட்ட நிலையிலே சட்டத்திலே இருக்கிற உடைசல்களை, லூப் ஹோல்ஸ்களைக் காண்பித்து முதலாளி களுக்கு ஆதரவாகச் சட்டம் பேசுவது சரியல்ல.

இந்த அரசுக்கே ஒரு கொள்கை வேண்டும். அவர்கள் கொள்கையைப் பிரகடனம் செய்திருக்கிறார்கள். மேற்கு வங்காளத்தை எடுத்துக் கொண்டால் அந்த அரசு This is Government of labour உழைக்கும் வர்க்கத்தினுடைய அரசு என்று பிரகடனப்படுத்தியிருக்கிறது. அதுபோன்று இங்கேயும் பாட்டாளி வர்க்கத்தினுடைய அரசு என்று பறைசாற்றிக் கொள்கிறீர்கள். ஆனால் பாட்டாளி வர்க்கம் பசிக்கிறது என்று உரிமைக்குரல் எழுப்பினால் வேலை நிறுத்தம் செய்வோம் என்று உரிமைக் குரல் எழுப்பினால் உதைக்க ஆரம்பிக்கிறீர்கள் என்றால் அது நியாயமா? எதற்காக வேலை நிறுத்தம் நடக்கிறது? வேலை நிறுத்தம் பற்றி உங்களுடைய கண்ணோட்டம் கருத்து தவறாக இருக்கிறது, வேலை நிறுத்தத்தை உங்களுடைய வைரியாகக் கருதுகிறீர்கள். வேலை நிறுத்தம் என்பது கடைசி ஆயுதம். லாஸ்ட் வெப்பன், என்ற முறையிலே அதைப்பயன்படுத்தக்கூடிய உரிமை அவர்களுக்கு இருக்கிறது என்பது நம்முடைய அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும், அவர்களே பல வேலை நிறுத்தங்களிலே ஈடுபட்டவர்கள். உதாரணத்திற்கு சொல்கிறேன். தற்சமயம் சிம்ஸனிலே வேலை நிறுத்தம் நோட்டீஸ் கொடுக்கப் பட்டிருக்கிறது. அந்தச் சங்கத்தினுடைய தலைவர் *** *** *** *** *** எத்தனையோ அடைமொழிகள் கூட போட்டுச் சொல்லலாம். அவரே நோட்டீஸ் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. முதலாளியின் செயல் அந்த அளவுக்கு உள்ளது என்பதைத்தான் குறிப்பிடுகிறேன். ஆனால் அது சுமுகமாக முடியவேண்டும், முதலமைச்சர் பேசிக் கொண்டிருக்கிறார் என்று கேள்விப் படுகிறேன். வேலை நிறுத்தங்கள் ஏன் நடக்கின்றன என்பதற்கான காரணங்களைப் பார்க்க வேண்டும்.

[முற்பகல் 11-20]

வேலை நிறுத்தம் என்பது தூண்டி விட்டுவிடுவதில்லை. அதுமட்டுமல்ல. இன்றைக்குக் கல்லூரி ஆசிரியர்கள். எம். ஏ. படித்தவர்கள், பி. எச்டி. பட்டதாரிகள், இன்றைக்குவேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களை யார் தூண்டியது? அவர்களின் வேலை நிறுத்தத்திற்குக் காரணம் என்ன? போலீஸ் இலாக்காவில் இருக்கின்ற மினிஸ்டீரில் ஸ்டாஃப், அவர்களுக்கு

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வேலைப்பளு இருக்கிறது. கான்ஸ்டேபிள்களை ரெக்ரூட் செய்திருக்கிறீர்கள், எஸ். ஐ. களை ரெக்ரூட் செய்திருக்கிறீர்கள், சர்க்கிள் இன்ஸ்பெக்டர்களை ரெக்ரூட் செய்திருக்கிறீர்கள். ஆனால் நிர்வாகத்திலே பணியாற்றும் மினிஸ்டீரியல் ஸ்டாபை அதிகரிக்கவில்லையே. எங்களுக்கு வேலைப்பளு அதிகமாக இருக்கிறதே என்று அவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கிறார்கள், இவர்களை யார் தூண்டினார்கள்? எனவே வேலைநிறுத்தம் என்பது ஒரு கட்சியினரோ, ஒரு குறிப்பிட்ட பகுதியினரோ தூண்டிவிட்டு வருவது கிடையாது. பிரச்னைகள் தோன்றும்பொழுது மக்கள் உந்தித் தள்ளப்பட்டு, வேறு வழியில்லாமல் இதில் ஈடுபடுகிறார்கள். அதைத் தீர்த்து வைக்கின்ற முறையில் உங்களுடைய அணுகுமுறை இருக்க வேண்டுமே தவிர, எப்படி அதை முறியடிப்பது என்ற மனப்பான்மை இருப்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு முற்போக்கான கொள்கை உங்களுக்கு வேண்டும். கடந்த காலத்தில் டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்கள் ஸ்டிரைக் வந்தது. 1975-ல், இன்றைக்கு முதலமைச்சராக இருப்பவர் அன்றைக்கு அந்த வேலைநிறுத்தத்தை ஆதரித்தார்கள், நிதி உதவி தந்தார்கள். இன்றைக்குத் தொழிலாளர் நல அமைச்சராக இருப்பவர் அந்த வேலைநிறுத்தத்தை முன்னின்று பல தலைவர்களோடு சேர்ந்து நடத்தினார்கள். ஒரு நோட்டீஸ்கூட இருக்கிறது. நான் அதை முழுவதும் படிக்கவில்லை. அதில் மாநிலம் தழுவிய போக்குவரத்து வேலைநிறுத்தம், பெரியார் கழகத் தோழர்களே, தருணம் உணர்ந்து சமர்க்களம் புகுவீர், போராட்டக் குழு அறைகூவல் என்று போட்டு கீழே வி. பி. சிந்தன், சி. ஐ. டி. யு., எஸ். இராகவானந்தம், அ. தி. மு. க., என். எம். மணிவர்மா, ஸ்தாபன காங்கிரஸ் என்ற வகையில் போடப்பட்டிருக்கிறது.

அன்றைக்கு அவர்கள் முன்னிருந்து நடத்தினார்கள். அன்றைக்கு அவர்கள் திரு. இராகவானந்தமாக இருந்தார்கள், இன்றைக்கு மாண்புமிகு இராகவானந்தமாக மாறிவிட்ட காரணத்தினால் இன்றைக்கு வேலைநிறுத்தம் என்றால் அவருக்கு வேப்பங்காயாக இருக்கிறது.

சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு பிரச்னை சம்பந்தமாக மூன்றாண்டுகளுக்கு முன் வேலைநிறுத்தம் நடைபெற்றது. 1974 டிசம்பர் மாதத்தில் அந்த வேலை நிறுத்தம் நடந்தது நெல்லிக்குப்பம் பாரி அண்ட் கம்பெனி தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் தொடங்கி நான்கு நாட்கள் தான் ஆயிற்று, உடனே அந்த முதலாளி போட்ட கோரிக்கைகள் அத்தனையும் 'இன் டோட்டோ' ஒத்துக்கொண்டார்கள். வேலை நிறுத்தத்தை வாபஸ் வாங்க வேண்டுமென்ற நிலையில் நான் அதை வலியுறுத்தியபோது அதை வாபஸ் வாங்கக்கூடாது என்று வாதாடியவர்களில் திரு. இராகவானந்தம் அவர்களும் ஒருவர் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, விவாதத்திற்குப் பின்னர் சி. ஐ. டி. யூ. நெல்லிக்குப்பத்தில் வேலைநிறுத்தத்தைத் தொடர வேண்டியதில்லை என்று முடிவு எடுப்பதற்கும் நான் காரணமாக இருந்திருக்கிறேன் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

திரு. சி. கோவிந்தராசன் : இவைகளெல்லாம் அந்த கூட்டு நடவடிக்கை குழுவின் குறிப்பேடுகளில் இருக்கின்றன. அவைகளை நான் இங்கே கொண்டு வரவில்லை. என்ன கருத்தை அன்று கூறினார்கள் என்பதை மறுபடியும் சமயம் வரும்பொழுது கூறுகிறேன். ஆனால் இன்றைக்கு என்ன சொல்கிறார்கள் என்றால் இன்றைக்கு மறுபடியும் மூன்று நான்காண்டுகளுக்குப் பிறகு சர்க்கரை ஆலைத் தொழிலாளர் தங்களுடைய ஊதிய உயர்வுக்காக வேலைநிறுத்தத்தில் ஈடுபடும் பொழுது சொல்கிறார்கள், கரும்பு அறவை நடக்கும் காலத்தில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடக்கூடாது என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் குறிப்பேட்டிலே எடுத்துப் பார்த்தபொழுது * * * * * * என்று வெளியிலே இருப்பவரைப்பற்றிப் பேசியிருக்க வேண்டியதில்லை. அப்படிப் பேசியிருந்தாலும் அந்த வார்த்தைகளை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. சி. கோவிந்தராசன் : நான் அந்த அர்த்தத்திலே சொல்லவில்லை. மிகவும் நிதானமாக தொழிற்சங்கத் தலைவர், அவசரப்படுபவர் அல்ல என்ற அர்த்தத்தில் சொன்னேனே தவிர அவருக்கு இழுக்கு தேடித்தரும் முறையில் சொல்லவில்லை என்பதை இந்தச் சமயத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, அவர்கள் சொல்கிறார்கள், சர்க்கரை ஆலையிலே உற்பத்தி நடைபெறும்பொழுது வேலைநிறுத்தம் செய்யக்கூடாது என்று. அப்படியானால எந்த ஆலையிலும் எந்தத் தொழிற்சாலையிலும் உற்பத்தி நடக்கும் நேரத்தில் வேலை நிறுத்தம் நடக்கக் கூடாது என்றகருத்தில் பேசப்படுகிறது. அதன் விளைவு இன்றைக்கு சர்க்கரை ஆலை அதிபர்கள் இப்பிரச்சினையை உடனடியாக முடிக்கத் தயாராக இல்லை. இப்படி அவர்களுக்கு பச்சை கொடி காட்டப்பட்டதால் இப்படிப்பட்ட நிலைமைகள் நீடித்துக் கொண்டே இருக்கிறது. சர்க்கரை ஆலைத்தொழிலாளர்களுடைய மொத்தச் சம்பளம் மாதம் 353 ரூபாய் நான் எல்லாச் சம்பளமும்சேர்த்து. அமைச்சர் இப்படிக் கூறுவதின் மூலம் வேலைநிறுத்தம் செய்யும் உரிமையையே பறிக்கும் நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அதுமட்டுமல்ல, வேலைநிறுத்தம் என்று சொன்னதுமே கைது செய்து விடுவேன் என்று அமைச்சரவர்கள் மிரட்டுகிறார்கள். எப்பொழுது முதலமைச்சரவர்கள் தன்னுடைய இலாக்காவின் ஒரு பகுதியை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சருக்குக் கொடுத்தார் என்பது தெரியவில்லை. 'நரிக்கு நாட்டாண்மை கொடுத்தால் இடைக்கு இரண்டு ஆடு கேட்கும்' என்று சொல்வார்கள். வேலைநிறுத்தம் என்று சொன்னால் கைது செய்து விடுவாராம். நானும் பல அமைச்சர்களைப் பார்த்திருக்கிறேன், அவர்கள் இவ்வாறு இல்லை. ஆனால், வேலை நிறுத்தம் செய்தால் கைது செய்து விடுவோம் என்ற மிரட்டலை நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் இன்றைக்குச் சொல்லி வருகிறார்கள்.

நான் சின்ன வயதிலேயிருந்து தொழிற்சங்க இயக்கத்திலே இருப்பவன். பல தொழிலாளர் நல அமைச்சர்களைப் பார்த்திருக்கிறேன், ஸ்ரீமான் கிரி, கிருஷ்ணா ராவ், பக்தவத்சலம், ஆர். வெங்கட்ராமன், அண்மையில் திராவிட முன்னேற்றக் கழகத் தொழிலாளர் நல அமைச்சர்கள் என். வி. நடராசன், இராஜாராம் ஆகியோரையெல்லாம் பார்த்தாகிவிட்டது. தொழிலாளராக இருந்து, தொழிற்சங்கத் தலைவராக இருந்து, தொழிலாளர் நல அமைச்சராக வந்துள்ள காரணத்தால்தான் உரிமையோடு மிரட்டுகிறேன் என்று தற்போதைய தொழிலாளர் நல அமைச்சர் சொன்னாலும் சொல்லலாம். தொழிலாளர்களோடு இருந்து தொழிலாளர் நல அமைச்சராக வந்தவர், தொழிலாளர் பிரச்னைகளில் அணுகும் முறை, முதல்வருக்கோ, மற்ற அமைச்சர்களுக்கோ, சரியான வழிமுறைகளைக் கொடுக்கத் தவறியதோடு மட்டுமல்லாமல், தொழிற்சங்க இயக்கத்தைப் புறக்கணிக்கக் கூடிய முறையிலும், அதிலும் குறிப்பாக சி. ஐ. டி. யு. என்று சொன்னால், வேப்பங்காயாகக் கருதக்கூடிய நிலைமையிலும் இருக்கிறார்கள்.

இராணிப்பேட்டையிலே டி. சி. சி. நிறுவனம் இருக்கிறது. ஏற்கனவே அங்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற்சங்கம் இருந்ததால்தான் நான் உதவியாக இருந்தேன். இன்றைக்கு நீங்கள் சி. ஐ. டி. யு. வாக இருக்கிறீர்கள். அப்படியானால் உங்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்கக் கூடாது என்று நிர்வாகத்தினிடம் சொல்வேன், என்று அங்கே பேசியிருக்கிறார், தொழிலாளர் நல அமைச்சர். அந்தப் பிரசங்கத்தைக் கேட்ட தொழிலாளத் தோழர்கள் சொன்னதைப்போலவே, அங்கு கேட்டுக் கொண்டிருந்த வெட்டரினரி டாக்டர் ஒருவரும் என்னிடம் இதைச் சொன்னார்.

நெல்லை மாவட்டத்திலே சர்க்யூட் ஹவுசில் பீடித் தொழிலாளர் சங்க செக்ரட்டரி இராஜாங்கம் அமைச்சரைப் பார்க்கிறார். அமைச்சர், நீ அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவன்

சி. ஐ. டி. யு. விலிருந்து வரும் உன்னிடமிருந்து மகஜரைப் பெறமுடியாது, விளம்பரத்திற்கு யாராவது ஆள் வைத்திருக்கிறாயா என்று கேட்டிருக்கிறார்.

நெல்லிக்குப்பம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளர், அமைச்சரிடம் ஒரு பொது கூட்டத்திற்குத் தேதி கேட்கிறார். கோவிந்தராஜனை அந்தச் சங்கத்திலே இருந்து அகற்றிவிட்டுவந்தால்தான் நான் வருவேன் என்று பதில் வருகிறது, அந்த அளவு தனிப்பட்ட முறையிலேயும் சி. ஐ. டி. யு. என்று சொன்னாலும் அப்படிப்பட்ட குரோத கருத்து மனப்பான்மைக்கு வந்திருக்கக்கூடிய அமைச்சர், பிரச்னைகளை எப்படி முடித்து வைப்பார் என்பதை நீங்களே புரிந்து கொள்ளுங்கள்.

இன்னொரு பிரச்னை, அடிக்கடி சொல்லப்பட்டு வருகிறது. தொழிலாளர் போராட்டம் செய்தால் கிராம விவசாயிகளைப் பாருங்கள், அவர்கள் நாள் பூரா உழைத்தாலும் 4 அணாக் கூட கிடைக்கவில்லை நீங்கள் மேலும் ஊதிய உயர்வு கோருவது நிறைவேறவில்லை என்று ஆர்கனைஸ்ட் செக்டர் போராட்டம் நடத்தினால் விவசாயிகளைக் காட்டுவது, விவசாயிகள் கூலி உயர்வு கேட்டால், வேறு மாதிரி பிச்சைக்காரர்களைக் காட்டுவது; இன்னொரு நேரத்தில் 3,000 தொழிலாளர்கள் போராட்டம் நடத்தும்போது அவர்களைப் பார்த்து, 30 இலட்சம் மக்களைப் பாருங்கள் நீங்கள் பெரிதா அவர்கள் பெரிதா என்று தத்துவம் பேசுவது, இப்படி திசை திருப்பி விடப்படுகிறது. ஆசிரியர்களாக இருந்தாலும், அரசாங்க அலுவலர்களாக இருந்தாலும், மாணவர்களாக இருந்தாலும் அவர்களெல்லாம் பொது மக்களுடைய பகுதி என்பதை இந்த அரசு உணர வேண்டுமென்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்று கான்ட்ராக்ட் லேபர் ரெகுலேஷன் அண்ட் அபாலிஷன் ஆக்ட் என்று ஒன்று இருக்கிறது. இதன் மூலமாக, கான்ட்ராக்ட் ரெகுலேஷன் செய்யப்பட்டு அபாலிஷ் ஆவதற்குப் பதில், எல்லா இடங்களிலும் கான்ட்ராக்ட் புகுத்தப்படுகிறது. ஒரே வேலை செய்யக்கூடிய டிபார்ட்மென்ட் ஒர்க்கருக்கு அதிகச் சம்பளம். கான்ட்ராக்ட் தொழிலாளர்களுக்கு ரூ. 5, ரூ. 4 என்ற வகையில் மின்சாரத் துறையிலும், இப்போது இந்த முறை புகுத்தப்பட்டு கன்ஸ்ட்ரக்ஷன் துறையிலும் கம்பத்தை உண்டு பண்ணுபவர்கள், கம்பத்தை நடுபவர்கள், லைனை இழுப்பவர்கள் இப்படி ஏற்கனவே டிபார்ட்மென்டில் செய்யப்பட்ட அந்த வேலைகள் பூராவும் கான்ட்ராக்டரால் செய்யப்படுகிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கைநெசவுத் தொழிலாளர்கள் இலட்சக்கணக்கில் நமிழகத்திலே இருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பாகச் சட்டம் கிடையாது. விசைத்தறி தொழிலாளருக்கும் பாதுகாப்பு இல்லை விசைத்தறித் தொழிலாளர்களுக்காக ராஜா சுப்பிரமணியம் குழு அமைத்தார்கள். அவர் தன்னுடைய அறிக்கையைக் கொடுத்து விட்டார். ஆனால் அந்த அறிக்கை தூங்கிக் கொண்டிருக்கிறது. ஏந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் தங்களுடைய வீடுகளிலே, குடிசைகளிலே இரவு நேரத்திலே நெய்ய லைட் போட்டிருந்தால் 45 பைசா என்று கட்டணம் வசூலிக்கப் படுகிறது. கைத்தறிக்குப் பாதுகாப்பு கொடுக்கப்படுவதும் கைத்தறி நெசவுத் தொழிலாளருக்கு ஆதரவு கொடுக்கப் படுவதும் இப்படித்தானா என்று நான் கேட்கவிரும்புகிறேன்.

டி. ஐ. சைக்கிள் போராட்டத்திற்கு ஆதரவாக சென்னையில் பொதுவேலை நிறுத்தம் நடந்தபோது ஒரு நாள் பொது விடுமுறை என்று அரசாங்கம் சொன்னது. ஆனால், பல நிறுவனங்கள் இதுவரை அந்த நாளுக்குச் சம்பளம் கொடுக்கவில்லை. கொடு என்று சொல்லக் கூட அரசாங்கம் தயாராக இல்லை.

[முற்பகல் 11–30]

வழக்குகள், தொழில் தகராறுகளில் சமரசம் ஏற்பட்ட பின்னரும் போட்ட வழக்குகள் வாபஸ் வாங்கப்படவில்லை. லெட்சுமி மெஷின் டூல்ஸ் கம்பெனியில் வழக்கு நடைபெற்று தொழிலாளர்கள் வெற்றி பெற்று விட்ட பின்னரும், அந்தத் தொழில் நிறுவனத்திலுள்ள சச்சரவுகள் சுமுகமாக முடிந்து விட்ட பின்னாலும், அரசாங்கம் போட்ட வழக்குகளை - அரசாங்கம்தானே வழக்குப் போடுகிறது - வாபஸ் வாங்கவில்லை. அதேபோன்று மின்சாரத் துறையிலும், ஆரோபுட்டிலும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, சுமுகமான சூழ்நிலை ஏற்பட்ட பின்னரும், அங்குள்ள தொழிலாளர்கள் மேல் போடப்பட்ட வழக்குகள் வாபஸ் வாங்கப்படவில்லை. பல்வேறு இடங்களில் தொழிலாளர்கள் வழக்கை வாதாடித்தான் வெற்றிபெற வேண்டியிருக்கிறது. ஆகவே, நான் சொல்ல விரும்புவது, தொழில் சச்சரவுகளிருக்கும் போது வழக்குகள் என்று போடுகிற போது எந்த வகையில் போடப்படுகிறதோ, அதே போல், அந்தச் சச்சரவுகள் தீர்க்கப்பட்டு சுமுகமான சூழ்நிலைகள் அடைந்த உடனே அவைகள் வாபஸ் பெறப்படவேண்டும். இந்திராகாந்தி வந்தபோது அமைதியாகக் கறுப்புக்கொடி காட்டியவர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர். அதற்கு வழக்குப் போட்டார்கள். அந்த வழக்கு வாபஸ் பெறப்படவில்லை. அதற்குக் காரணம் கூட சொல்ல முடியவில்லை. அப்படி வழக்குகளை வாபஸ் வாங்காமல் எதிர்க்கட்சிக்காரர்களை ஒடுக்குவது என்பது உங்களுடைய நோக்கமாக இருக்கிறது என்கிற குற்றச்சாட்டை நான் சொல்ல விரும்புகிறேன்.

தாம்பரத்தில் பதுக்கலை ஒழிக்க இயக்கம் நடந்தது. கள்ள மார்க்கெட்டை ஒழிக்க போலீசுக்கு ஒத்துழைத்தவர்கள் மீது வழக்கு போடப்பட்டு இருக்கிறது. அதில் சில வழக்கறிஞர்கள் மீது கூட வழக்கு நடைபெறுகிறது. அந்த வழக்கை ஏன் வாபஸ் வாங்கவில்லை.

லாக்அப்பில் மரணம் பற்றி பல்வேறு உறுப்பினர்கள் இங்கு சொன்னார்கள். நானும் மேலும் சில விஷயங்களைச் சொல்ல விழைகிறேன். நெல்லிக்குப்பத்தில் லாக்கப்பில் ஒரு மரணம் ஏற்பட்டது. நான் அட்ஜெர்ன்மென்ட் மோஷன் கொடுத்தேன். அதற்கு விசாரணைக்கமிஷன் எல்லாம் வைக்கப் பட்டது. ஆனால் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்று தெரியவில்லை. அந்த மாதிரி மரணம் நேர்கிறபோது போலீஸ் என்ன செய்கிறது என்றால், பொய் சொல்கிறது. போலீஸ் பாதுகாப்பில் தற்கொலை செய்து கொண்டானாம், எப்படி என்றால், கைதியை அழைத்துச் சென்றபோது, தாகம் எடுக்கிறது, தங்கை வீட்டிற்குச் செல்லவேண்டும் என்று சொன்னானாம், அங்கே சென்றவுடன் அவன் அரளி விதையைச் சாப்பிட்டு, தண்ணீர் குடித்து விட்டான், அதனால் இறந்தான் என்று சொல்கிறார்கள். சாதாரணமாக எங்களைப் போன்ற அரசியல் வாதிகளைக் கைது செய்ய போலீஸ்காரர்கள் வருகிறபோது சட்டையைப் போட்டுக்கொண்டு வருகிறேன் என்று சொன்னால் கூட விடமாட்டேன் என்று சொல்கிறவர்கள் இப்படி கைதியை விடுவார்களா? எனக்கு ஹேன்ட் கப் போட்டார்கள். ஒப்புக்கொண்டார்களா? கேட்டால், சட்டப்படி எம். எல். ஏ. வா, வெற்றிபெற்றார், இன்னும் பதவி ஏற்கவில்லை விலங்கு போட்டது தவறல்ல என்று அன்று வாதிட்டார்கள். பிறகு ஏன் விலங்கு போடவில்லை என்று பொய் சொல்கிறார்கள்? இப்படி போலீஸ் தங்களைக் காத்துக் கொள்ள பொய் சொல்வதையே தொழிலாகக் கொண்டு இருக்கிறது.

திரு. சௌ. வே. வரதராஜன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது காவல் துறை தங்களைக் காத்துக் கொள்ள பொய் சொல்வதையே தொழிலாகக் கொண்டு இருக்கிறார்கள் என்று சொல்கிறார். அது முறையா?

திரு. சி. கோவிந்தராசன் : நான் காவல்துறையைச் சொல்கிறேன். அரசாங்கத்தைச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் சொல்லிய கருத்து, பொய் என்று தாங்கள் சொல்லலாமா என்பதாகும்.

திரு. மு. கருணாநிதி : ஒரு உறுப்பினர் பேசியதைப் பற்றி இன்னொரு உறுப்பினர் மறுத்துப்பேசுகிற போது பொய் என்று சொல்வது தவறு. அது அவைக்குறிப்பில் இருக்கக்கூடாது. ஆனால் பாராளுமன்ற விவாதத்தில் பொய் என்ற வார்த்தையே பயன்படுத்தக்கூடாது என்று சொல்வது கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் பொய் என்ற வார்த்தை உபயோகிப்பதற்கு பதிலாக உண்மைக்குப் புறம்பான என்று சொல்லி பழகிக்கொண்டால் நல்லது.

திரு. சி. கோவிந்தராசன்: அரக்கோணத்திற்கு அருகே மேல்பாக்கம் கிராமத்தில் தகராறு ஏற்பட்டு எத்திராஜ் என்பவரை வீட்டிற்குள் நுழைந்து 18-3-78 அன்று கடத்திக் கொண்டு சென்றுவிட்டார்கள். அன்று முதல் அவர் எங்கே இருக்கிறார் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. அவரை இப்படி கடத்திக்கொண்டு சென்று விட்டார்கள் என்று அவருடைய மனைவி ஜோதி அம்மாள் புகார் கொடுக்க காவல் நிலையம் சென்ற போது இப்படி புகார் கொடுத்தால் கள்ளச்சாராயம் விற்றாய் என்று வழக்குப்போடுவோம் என்று மிரட்டியிருக்கிறார்கள். அந்தக் கடத்தல் பற்றி இன்னும் துப்பு துலக்கவில்லை. அதே மாதிரி இன்னொரு நிகழ்ச்சி. வேலூரில் 18-12-78 அன்று பி. அன்ட் டி டிபார்மென்டில் திருட்டு நடந்து இருக்கிறது. அதைக் கண்டுபிடிப்பதற்காக சென்ற சொக்கலிங்கம் என்ற லைன்மேனை திருடர்கள் பல பேர் சேர்ந்து தாக்கி அந்த இடத்திலேயே அவரைக்கொலைசெய்து இருக்கிறார்கள். அதற்காக தபால் தந்தி ஊழியர்கள் 19-12-78 அன்று ஊர்வலம் நடத்தினார்கள். அவர்கள் எல்லாம் சேர்ந்து டி. ஆர். ஓ-க்கும் காவல் துறைக்கும் மகஜர் கொடுத்தார்கள். இது வரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. யார் மீதும் வழக்கு போடப்படவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் ஒரே ஒரு பிரச்சனையை மட்டும் சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்ள விரும்புகிறேன். அரசினர் மறுபடியும் ஆசிரியர்களை குடும்பக்கட்டுப்பாடு பணிகளுக்கு நிர்ப்பந்திக்கிறார்கள். அப்படிப்பட்ட அவல நிலை தொடரக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர்களின் சுற்றுப்பயணம் இன்னும் பழைய பாணியிலேதான் இருந்து கொண்டிருக்கிறது. அவர்கள் எல்லாம் வரும் போது அவர்களுடைய கட்சிக்காரர்கள்தான் கூடவே இருக்கிறார்கள். அரசின் பிரதிநிதி என்ற முறையில் அமைச்சர்கள் வந்தால் தான் மக்கள் அவர்களிடம் தங்களுடைய குறைகளை முறையிட முடியும். அப்படி வருவதுதான் நியாயம்.

சட்டமன்றக் கூட்டம் நடைபெறும்போது அமைச்சர் எல்லாம் இங்கே இருக்க வேண்டும். உறுப்பினர்கள் எந்தப் பிரச்சனையை எந்த உணர்வோடு குறிப்பிடுகிறார்கள் என்பதை அவர்கள் இங்கே இருந்தால்தான் சரியாகப் புரிந்துகொள்ள முடியும். அவர்கள் சொல்வார்கள், நாங்கள் குறிப்புகளைப் பார்த்து தெரிந்துகொள்வோம் என்று. அப்படிச் சொல்வது சரியல்ல. பிரச்சனைகளைக் குறிப்பிடுகின்ற உறுப்பினர்களின் உணர்வுகளைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் அவர்கள் இங்கே இருந்தால்தான் முடியும். உறுப்பினர்கள் எல்லாம் இங்கே வருவதற்கு ஆஜர் பட்டியல் இருப்பதைப்போல அமைச்சர்களுக்கு இல்லை என்றாலும் கண்டிப்பாக அவர்கள் எல்லாம் இங்கே இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆட்சியில் பொதுமக்களும், தொழிலாளர்களும் நம்பிக்கை இழந்துவிட்டார்கள்; அதற்கான காரணம் என்ன என்பதை எடுத்துச் சொல்வதற்குத்தான் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானமும் கண்டனத் தீர்மானங்களும் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அதை ஆட்சியிலே இருப்பவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இந்தத் தீர்மானங்களினால் இந்த ஆட்சியை அகற்றி விட முடியாது என்பதை எங்களுக்கும் தெரியும்; உங்களுக்கும் தெரியும்; ஆக, உணர்வுகளை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுமே தவிர, தவறுசெய்கின்ற அதிகாரிகளின் கொட்டத்தை அடக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, எதிர்க்கட்சிக்காரர்களை கேலி பேசி, கிண்டல் செய்யக் கூடாது என்று தெரிவித்து, இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தையும் கண்டனத் தீர்மானங்களையும் ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவரவர்களே, இன்று நடைபெறுகின்ற ஆட்சியின்மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தை பல எதிர்க்கட்சித் தலைவர்கள் தந்திருக்கிறார்கள். இந்த நேரத்திலே எதிர்க்கட்சிகளுடைய கடமை என்ன, ஆளுகின்ற அரசாங்கத்தின் கடமை என்ன என்பதைப்பற்றி ஐவர் ஜென்னிங்ஸ் அழகாகச் சொல்லியிருக்கிறார் அதை இரண்டு தரப்பினரும் புரிந்துகொண்டு இங்கே செயல்படுவது சரியாக இருக்கும் என்பதால் அவர் கூறியிருக்கிற ஒரு சிறு பகுதியை இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன்.

....the functions of the opposition is not merely to discredit the Government in the eyes of the floating vote, but also to induce it to modify its policy. The two purposes cannot be separated The Government is as aware as the Opposition that its authorities rests only on the electorate, and that if it wishes to keep its majority it must maintain its electoral support. The effect of

opposition criticism is therefore to maintain a close relation between Government policy and public opinion. The opposition's action is one of enlightened self-interest. In seeking support for itself it compels the Government to maintain its own support. In appealing to public opinion it compels the Government to rest its policy on public opinion..... என்கின்ற கருத்துக்களை எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர்களும் ஆளும் கட்சியிலே இருக்கின்றவர்களும் அவரவருக்குரிய கடமை என்ன, எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதைப் புரிந்துகொண்டு செயலாற்ற வேண்டும். அதன் அடிப்படையிலே ஒருசில கருத்துக்களை நான் சார்ந்திருக்கிற உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மக்களுடைய குறைகளை எடுத்துச்சொல்லி, அவர்களுக்கு நல்ல காரியங்களைச் செய்வதற்காக, அந்த மக்களின் பிரதிநிதிகளாக இங்கே உறுப்பினர்கள் இருக்கிறோம். அந்த வகையிலேதான் மக்களுடைய நலன்களைக் கருதி, அவர்களுடைய நோக்கங்களை எடுத்துச்சொல்லி, அவர்களுக்கு எந்த வகையிலே உதவி செய்யலாம் என்பதை இந்த அவையிலே எடுத்துச் சொல்லி, அதிலே அரசாங்கத்தின் கடமையைச் சுட்டிக்காட்டி, அரசாங்கம் தன்னுடைய கடமையை உணர்ந்துகொள்ளச் செய்வதற்காக ஒவ்வொரு எதிர்க்கட்சிக்காரர்களும் இங்கே இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் எதிர்க்கட்சிக்காரர்கள் சில குற்றச்சாட்டுகளைச் சொல்லும்போது, அது எதிர்க்கட்சிக்காரர்களின் குற்றச்சாட்டு என்று ஆளும் கட்சியினர் எடுத்துக் கொள்ளாமல், அதில் உண்மை இருக்கிறதா, நியாயம் இருக்கிறதா என்று பரிசிலித்துப்பார்த்து, நியாயம் இருந்தால் அதற்கு ஏற்ற பரிகாரம் காணுகின்ற முறையிலே, குறைகளை போக்குகின்ற வகையிலே, இங்கே எதிர்க்கட்சிக்காரர்கள் கொண்டுவந்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-40]

அதே நேரத்தில் எதிர்க் கட்சிகளுக்கென்று இருக்கின்ற ஒரு கடமையும் உண்டு. தவறுகளைச் சுட்டிக்காட்டுகின்றபோது, அது எதிர்க்கட்சியினுடைய கடமை என்கின்ற வகையிலே காழ்ப்புணர்ச்சி ஏதும் இல்லாத வகையிலே அரசாங்கம் இன்ன தவறு செய்திருக்கிறது, இந்தத் தவறுக்கு இந்த முறையிலே அணுகினால் சரியாக இருக்கும் என்று தங்களுடைய கருத்துக்களை அரசாங்கத்திற்கு எடுத்துக்காட்ட வேண்டும். அதுவே எதிர்க் கட்சிகளின் கடமையாக இருக்கவேண்டும் என்று இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்னொன்று இங்கே சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் பேசுகின்றபோது எதிர்க்கட்சிகளை எதிரிக்கட்சிகளாகப் பாவிக்கக்கூடாது என்று சொன்னார்கள். நாம் பழகுகின்ற முறையும், இங்கே எதிர் எதிராக உட்கார்ந்துகொண்டு பேசுகின்ற முறையும் எப்படி இருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். நாம் இங்கே கருத்துக்களைச் சொல்லும்போது கொஞ்சம் காரசாரமாகச் சொல்லக்கூடும். ஆனால், வெளியிலே நாம் பேசுகின்றபோது நாம் பாச உணர்வோடுதான் நடந்து கொள்கிறோம். வெளியிலே நம்மிலே வேற்றுமை உணர்வே தெரிவதில்லை. ஆனால் இங்கே வருகின்றபோது கருத்துக்களைக் கூறுகின்ற வகையில் கொஞ்சம் காரசாரம் இருக்கத்தான் செய்கிறது. நாம் சொல்வது அத்தனையும் மக்களின் நன்மைக்காகத்தான் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். ஆளுகின்ற கட்சியினர் எதிர்க்கட்சியினரை எதிரிகளாகப் பாவிக்கின்ற தன்மை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை என்று கூறிக்கொள்கிறேன். அப்படிப் பாவிப்பதாக என்னால் உணர முடியவில்லை. எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லுகின்ற கருத்துக்களை ஆளும் கட்சிக்காரர்கள் ஏற்றுக்கொண்டு அவைகளைச் செய்து முடிக்கின்ற வகையிலேதான் காரியங்கள் ஆற்றுகிறார்கள். வேண்டுமானால் ஒரு குறை அவர்களிடம் இருக்கிறது என்று சொல்லிக்கொள்ளலாம். அதாவது, அவர்கள் தாங்கள் செய்கின்ற நல்ல காரியங்களை வெளியிலே அதிகம் சொல்லிக்கொள்வதில்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். அப்படிச் சொல்லாததன் காரணத்தாலேயே, எதிர்க்கட்சிக் காரர்கள் தான் இதைச் செய்கிறார்கள், ஆளும் கட்சிக்காரர்கள் அதைச் செய்யவில்லையோ, அரசாங்கம் அதைச் செய்ய வில்லையோ, என்கின்ற எண்ணம் இந்த நாட்டு மக்களுக்கு வந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். ஆகவே இந்த அரசாங்கம் செய்கின்ற காரியத்தை முறைப்படியாக நாட்டுமக்களுக்கு அறிவிப்பதன் மூலமாக ஆளும் கட்சிக்காரர்கள் சரியானதைத்தான் செய்கிறார்கள் என்கிற உணர்வை ஏற்படுத்த வேண்டும்.

அதே நேரத்தில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தவறுகள் சுட்டிக்காட்டப்படுகின்றபோது ஆதாரத்தோடுதான் சொல்லி ஆகவேண்டும். ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுகளை நாம் சொன்னால் வெளியிலே இருக்கின்ற மக்கள் நம்மைப்பற்றி வேறுவிதமாகக் கணக்குப் போட்டுவிடுவார்கள். அதாவது எதிர்க் கட்சி என்று வந்துவிட்டாலே குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டும் என்ற அடிப்படையில் ஆதாரம் இல்லாமல்கூட குற்றச்சாட்டு சொல்கிறார்கள் என்று மக்கள் நினைப்பதற்கு இடம் வைக்கக்கூடாது. அப்படி அதற்கு இடம் வைத்துவிட்டால் பின்னால் எதிர்க்கட்சிக்காரர்களுக்கு மக்களிடத்திலே செல் வாக்கும், நல்லெண்ணமும் மறைவதற்குரிய வாய்ப்புக்கள்

ஏற்பட்டுவிடும். ஆகவே, குற்றச்சாட்டுகளைச் சொல்கிறபோது இந்த விஷயம் இவ்வாறு நடந்திருக்கிறது என்றும், அரசகம்ங்ா இதிலே இன்ன தவறு செய்திருக்கிறது என்றும் இதன் காரணமாக இப்படிப்பட்ட நல்ல காரியங்கள் நடைபெறாமல் போய்விட்டது என்றும் சொல்லலாம். ஆனால் இரண்டு நாட்களாக நான் இந்த விவாதத்திலே கலந்துகொண்டு இங்கே உட்கார்ந்துகொண்டு நடப்பவைகளைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். இங்கே குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் எல்லாம் போலீஸ் நிர்வாகம் சரியாக நடைபெறவில்லை என்பதுதான். அதிகாரிகள் தங்களுடைய கடமையைச் செய்யவில்லை என்று சொல்கிறார்கள். அதன் காரணமாக இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லை என்றும் சொல்கிறார்கள். அதை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். இந்த அரசாங்கத்தை நடத்திச் செல்கிற மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஆளும் கட்சிக் காரர்களாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, போலீஸ் நிர்வாகத்திலே தலையிடக்கூடாது என்று அறிவித்திருக் கிறார்கள். அப்படி அறிவித்ததின் காரணமாக, ஆளும் கட்சிக் காரர்களால் ஒன்றும் செய்யமுடியாது என்ற தைரியத்தை போலீஸ்காரர்கள் மத்தியிலேயும், அதிகாரிகள் மத்தியிலேயும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அப்படி ஏற்படுத்தி இருக்கின்ற காரணத்தால், இப்போது அரசியல் வாதிகளின் தலையீடு என்கின்ற நிலைமை போய் அரசியல்வாதிகளுக்கு எந்தவிதமான மரியாதையும் இல்லாத நிலை வந்துவிடுகிறது. நியாயமான கோரிக்கைகளுக்காக, மக்களுக்காக ஒரு காரியத்திலே அதிகாரிகளை அணுகிச் சொன்னால் கூட, அக்கோரிக்கைகளையும் அரசியல் வாதிகளையும் புறக்கணிக்கின்ற வகையிலே நிலைமைகள் உருவாகிக்கொண்டு வந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளை நாம் ர்வள விடுவோமானால் இந்த ஆட்சியில் இருக்கிறவர்கள் யாருர ஒன்றும் செய்துவிட முடியாது என்ற எண்ண த்திற்கு அவகள்ம் வந்துவிடுவார்களேயானால் அது அதிகாரிகளின் ஆட்சியாக இருக்குமே தவிர இந்த அரசாங்கத்தின் ஆட்சியாக இருக்க முடியாது. அரசு ஒரு உத்தரவு போடுகிறது. அதை நிறைவேற்றுவது அதிகாரிகள் கடமை. அந்தக் கடமையை நிறைவேற்றும்போது அதிகாரிகள் தாங்கள் வைத்ததுதான் சட்டம் என்ற முறையில் சென்றால் பின்னால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு மதிப்பிருக்காது, மரியாதையும் இருக்காது. ஆகையினால். உண்மையான கருத்துக்களை, பொதுமக்களுக்குத் தேவைப்படுகிற பொதுவான கருத்துக்களைச் சொல்லும்போது இந்த அரசின் ஒரு அங்கமாக இருக்கிற அதிகாரிகளும், போலீஸ் நிர்வாகமும் அதை ஏற்றுக் கொள்கிற வகையில் இந்த அரசு சற்றுக் கடுமையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடுமை என்ச்

வார்த்தையை நான் பயன்படுத்தும்போது பொது விவகாரங்கள் என்று வரும்போது எம்.எல்.ஏ.-க்கள் அல்லது மக்கள் பிரதி நிதிகள் தனிப்பட்ட முறையில் சொல்வதை ஏற்கவேண்டாம். ஆனால், ஒரு பகுதிக்கு அல்லது பகுதியினருக்கு என்று ஏற்படுகிற பிரச்னை என்று சொல்லும்போது அதிகாரிகள் வைத்ததுதான் சட்டம் என்ற நிலைமை இருக்குமானால் நாம் இங்கே ஆட்சியில் அமர்ந்திருக்கவேண்டியதில்லை.

எனது குற்றச்சாட்டு, போலீஸ் நிர்வாகம் தன் இஷ்டம் போல் நடந்து கொண்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன். இன்று போலீஸ் யாருக்கு ஆதரவாக இருக்கிறது என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். நான் வழக்கு மன்றங்களில் வாதாடுகிறவன். கிரிமினல் வழக்குகளை நடத்துகிறவன். ஒரு எப்.ஐ.ஆர். என்று சொன்னால் ஒரு குற்றவாளியின் பெயர், தகப்பன் பெயர், அவன் ஊர் போடப் படும். ஆனால், இங்கே ஒரு வழக்கு. அந்த வழக்கிற்குள் நான் நுழையவில்லை. ஆனால், அப்படி உண்மையாக இருக்குமானால் அது அனுமதிக்க முடியாத ஒன்று. கலைஞர் அவர்கள் பற்றி, உளிவீச்சு சம்பவம் பற்றி பேசப்படுகிறது, சொல்கிறார்கள். அப்படிப்பட்ட சம்பவமாக இருக்குமானால் அது கண்டிப்பாக அனுமதிக்க முடியாத ஒன்று. அதற்கு, கட்டாயம் உரிய நடவடிக்கைகள் எடுத்தாகவேண்டும். அதிலேதான் ஒன்று இருக்கிறது. போலீஸ் அதிகாரிகள் வழக்கு மன்றத்தில் எப்.ஐ.ஆர். கொடுத்து செல்கிறார்கள். கைது செய்யப்பட்ட 24 மணி நேரத்திற்குள்ளாக அந்த குற்றவாளி வழக்குமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவேண்டும். எப்.ஐ.ஆர்.-ல் வழக்குகள் பற்றிய விவரங்கள் இருக்கும். ஆனால் இங்கு ஒரு நூதனமான விசித்திரத்தை காண்கிறோம். அதில், ஏ.ஐ.ஏ.டி.எம்.கே. மெம்பர் என்று குறிப்பிடுகிறார்கள் என்று சொன்னால் 24 மணி நேரத்திற்குள்ளாக எவ்வளவு இன்வெஸ்டிகேஷன் முடிந்து விட்டது, எவ்வளவு தூரம் அவர் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் என்று சொல்கிற வகையில் அந்த வழக்குமன்றத்தில் எப்.ஐ.ஆர். உடனடியாக செல்கிறது என்று சொன்னால் யாருக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்பதை மட்டும் நாம் உணர்ந்து கொண்டாக வேண்டும். இப்படி ஆளுகிற அரசாங்கத்திற்கு உண்மை, விசுவாசம் இல்லாத ஒரு போலீஸ் படை இந்த நாட்டில் இருந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொண்டேயாக வேண்டும்.

*திரு. க. அன்பழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு வழக்கறிஞர், ஒரு பகுதியில் இருக்கிற சப்-இன்ஸ்பெக்டர் அல்லது இன்ஸ்பெக்டர் அந்தப் பகுதியில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைப் பற்றிய முதல் விசாரணையில் ஒருவர் இந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்று அறிந்து அதை நீதிமன்றத்துக்கு

முன்னால் பதிவு செய்திருக்கிறார்கள் என்று சொன்னால் அப்படி செய்ததன்மூலம் அவர்கள் இந்த ஆட்சிக்கு எந்தளவிற்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்ற கேள்வியை இன்றையதினம் வழக்கறிஞராகவும் சட்டமன்ற உறுப்பினராகவும் இருக்கிற ஒருவர் எழுப்புகிறார் என்றால் ஆளும்கட்சிக்கு ஆதரவாகத் தான் போலீஸ் இலாகா குற்றச்சாட்டுகளை பதிவுசெய்கிறபோது நடந்துகொள்ளவேண்டும் என்பது அவர்கள் கருத்தா என்று அறிய விரும்புகிறேன்.

<u>திரு. ரா. மார்க்கபந்து :</u> நான் சொல்வதெல்லாம் வழக்கு மன்றத்தில் F.I.R. is not an encyclopaedia என்று சொல்லப் படுகிறது. அதிலே, இந்தக் குற்றத்தைச் செய்கிறவன் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்தான் என்றளவில் சொல்லத்கூடிய அளவிற்குப்போகிறது என்றால் அந்த அளவிற்கு 'வெஸ்டட் இன்டரஸ்ட்' இருக்கிறது என்றுதான் சொல்ல விரும்புகிறேன்.

<u>திரு. க. அன்பழகன்:</u> இது தவறான வாதம். இரண்டாவதாக குற்றச்சாட்டில் இருப்பது பற்றி நீதிமன்றத்தில் அது சரியா தவறா என்று தீர்ப்பளிக்க வேண்டுமே தவிர குற்றச்சாட்டு முதல் தாள், முதன்முதலாக தரப்படுகிற குற்றச்சாட்டு 'என்ஸைக்ளோபீடியா' அல்ல என்பது எல்லோருக்கும் தெரியாததல்ல. அது ஒரு தாள்தான். ஆனால், அந்தத் தாளில் ஒருவரைப் பற்றி எதுவும் தெரிவிக்காமல் போலீஸ் இலாகா இருக்குமானால் அது போலீஸ் இலாகா அல்ல. எதுவும் தெரியாத பொலீஸ் இலாகா எங்கும் இருக்காது. ஓரளவு தெரிந்த விவரத்தை வைத்துக் கொண்டுதான் செய்திருக்கிறார்கள். அந்த ஆதாரத்தை அழிக்கிற ஒரு முயற்சி பின்னால் நடைபெற்றிருக்கிறது. சில அலுவலர் மாற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன. அந்நிலையில் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எந்த முறையில் வாதாடு கிறார்கள், எதற்காக வாதாடுகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்கிறோம். அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-50]

<u>திரு. எம்.ஏ.லத்திப் :</u> பாயின்ட் ஆப் ஆர்டர், சாதாரணமாக எப்.ஐ.ஆர்.-ல் நிகழ்ச்சிகளை குறிப்பிடும்போது, அளிக்கப்பட்ட தகவல்களை எல்லாம் குறிப்பிடுவார்கள். இதில் நிலைமை என்ன? ஒரு அரசியல் கட்சித் தலைவர், சட்டமன்றத்தின் எதிர்கட்சித் தலைவர் தாக்கப்படுகிறார் என்றால், அதற்கு வேறு காரணங்கள் இருக்க முடியாது, அரசியல் காரணங்கள்தான் இருக்கும் என்று நினைத்து, தாக்கியவரிடம் நீங்கள் எந்த கட்சியைச் சேர்ந்தவர் என்று போலீஸார் கேட்க கடமைப் பட்டவர்கள். இந்த நிகழ்ச்சிக்கு அரசியல் பின்னணி இருக்கும் என்று நினைத்து இப்படிபட்ட கேள்விகளை கேட்கும் நிலைமைப்

ஏற்படும். அப்போது அதற்குச் சொல்லப்படும் பதிலை எப்.ஐ.ஆ.ரில் குறிப்பிடுவது வழக்கம். அந்த முறையில்தான் இப்படி எப்.ஐ.ஆ.ரில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது எப்.ஐ.ஆ.ருக்கு முரணானது அல்ல என்பதை நானும் ஒரு வழக்கறிஞர் என்ற முறையில் 'மை லேனர்டு பிரன்ட்' மார்க்கபந்து அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> தலைவர் அவர்களே, திரு. லத்திப் அவர்கள் பேசுகிறபோது, கூறியது, அவர்களை அறியாமலேயே இதைக் கூறியிருப்பார் என்று நினைக்கிறேன். இதற்குக் காரணம் அரசியல் காரணம்தான் என்ற முறையில் சொன்னார்கள். அப்படி சொல்வது இன்வெஸ்டிகேஷனை பாதிக்கக்கூடியதாக இருக்கும். ஆகவே, அவர்கள் சொன்னதை நீக்கிவிடுவதுதான் சரியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இந்த பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவதற்கும் திரு. லத்திப் அவர்களுக்கும் சம்பந்தமே இல்லை. ஒவ்வொரு வழக்கறிஞரும் இது சம்பந்தமாக பேசிக் கொண்டிருந்தால், சபை நடத்துவதற்கே நேரம் இராது. இதற்கெல்லாம் பதில் சொல்ல லத்திப் ஒருவருக்குத்தான் உரிமை இருக்கிறது என்று தயவுசெய்து கருத வேண்டாம்.

<u>திரு. எம். ஏ. லத்திப் :</u> எனக்கு பேசுவதற்கு உரிமை இருக்கிறது,

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நான் அனுமதிக்காமல் உங்களுக்கு பேச உரிமை கிடையாது. தயவுசெய்து உட்காருங்கள். முதலாவதே நீங்கள் எழுப்பிய பாயின்ட் ஆப் ஆர்டரே தேவையில்லை.

(திரு. எம். ஏ. லத்திப் அவர்கள் எழுந்து நின்று கொண்டு பேசிக்கொண்டிருந்தார்.)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இப்படி பேசிக் கொண்டிருப்பதை நான் அனுமதிக்கப்போவதில்லை. தயவு செய்து உட்காருங்கள்.

<u>திரு. எம். ஏ. லத்திப் :</u> ஒரு உறுப்பினர் பேசுவது சரியல்ல என்று வரும்போது, அதை திருத்திச் சொல்ல எல்லா உறுப்பினர்களுக்கும் உரிமை இருக்கிறது. அந்த முறையில்தான் சொன்னேன். இதற்கு அரசியல் காரணம் என்று நான் சொல்லவில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பாதிக்கப்பட்ட கட்சி என்ற முறையில் பேராசிரியர் அவர்கள் விளக்கம் அளித்து விட்டார். உங்களுக்கும் இந்த ஒழுங்குப்பிரச்னைக்கும் சம்பந்தம் இல்லை. தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. எம். ஏ. லத்திப் : பாயின்ட் ஆப் ஆர்டர், இந்த அவையில்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் முதலில் பேசியதே ஒழுங்குப் பிரச்னை அல்ல. தயவு செய்து அமைதியாக உட்காருங்கள்.

திரு. எம். ஏ. லத்திப் : Sir, On a point of order, my right is being infringed.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய நேரத்தை வீணாக்காதீர்கள். நீங்கள் ஆரம்பத்திலேயே எழுப்பிய ஒழுங்குப் பிரச்னையே தேவையில்லை என்று கருதுகிறேன். தயவு செய்து உட்காருங்கள். திரு. மார்க்கபந்து..

திரு. எம். ஏ. லத்திப் : நீங்கள் சொல்வது ஜனநாயகத்திற்கு நல்லதல்ல..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒருவர்தான் எல்லாவற்றுக்கும் பேசவேண்டும் என்று சொல்வதை நான் அனுமதிக்க தயாராக இல்லை. நீங்கள் தயவு செய்து நேரத்தை வீணாக்காமல், சபையை நடத்திச் செல்வதற்கு உதவிச் செய்யுங்கள். நான் அடிக்கடி அனுமதித்து அனுமதித்துதான் இப்படி நீங்கள் நேரத்தை வீணாக்குகிறீர்கள். தயவு செய்து உட்காருங்கள்.

திரு. ரா. மார்க்கபந்து : நான் சொல்லிய கருத்துக் களை உறுப்பினர் அவர்கள் தவறாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் முன்னாலே சொல்லிய படி, இப்படிப்பட்ட சம்பவம் உண்மையாக இருக்குமானால், அது அனுமதிக்க முடியாத ஒன்று. எந்த அரசாங்கமாக இருந்தாலும், கட்டாயமாக அதற்காக நடவடிக்கை எடுத்தாக வேண்டும். ஒரு அரசியல்வாதிக்கு பாதுகாப்பு இல்லாத சூழ்நிலையை நாட்டிலே உருவாக்கி விடுவது என்று சொன்னால், நாட்டிலே இருக்கக்கூடிய ஒரு நல்ல ஆட்சியாக இருக்கமுடியாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், எதிர்க் கட்சியிலே இருக்கின்றவர்கள் ஆகியவர்களுக்கு, ஆபத்து என்று சொல்கிறபோது, அந்த ஆபத்தை அனுமதிப்பது என்பது எந்த அரசுக்கும் உகந்ததாக இருக்க முடியாது என்ற கருத்தைத்தான் சொன்னேன். குற்றச்சாட்டுகள் அத்தனையும் சொல்லும்போது சுற்றிச்சுற்றி போலீஸ் நிர்வாகத்தைப் பற்றித்தான் வந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, நியூ புரொஹிபிஷன் ஆக்டைப் பற்றிச் சொன்னார்கள். மதுவிலக்குச் சட்டமானது தவறாக நடத்தப்படுகிறது, கடுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும்

என்று சொன்னார்கள். இப்போது மதுவிலக்குச் சட்டத்தில் ஆர்டினன்ஸ் மூலமாக கடுமையான புரோவிஷன்களை புகுத்தி யிருக்கிறார்கள். அதனால் அச் சட்டம் கடுமையாக்கப்படுகிறது. குறிப்பாக, சாதாரண மக்கள், நடுத்தர மக்கள், ஏழை வர்க்கத்தினர் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் உள்ளே சென்று பார்க்கின்ற நேரத்தில், இவைகளுக்கெல்லாம் மறைமுகமாக யார் காரணமாக இருக்கிறார்கள் என்றால், அங்கேதான் பிரச்னை வருகிறது. இப்போதிருக்கின்ற போலீஸ் நிர்வாகம் யாருக்கு ஆதரவாக இருக்கிறது? என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எங்கள் பகுதியில், என்னுடைய கிராமத்தில் வந்து சாராயம் காய்ச்சுங்கள் என்று சொல்லக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய கிராமத்திலே மக்கள் சேர்ந்து, மக்கள் கமிட்டி என்று ஒன்று போட்டார்கள். இதைப்பற்றி அந்த மாவட்ட எஸ்.பி.க்கு சொல்லியிருக்கிறேன். இங்கே நான் சட்ட மன்ற உறுப்பினராக வந்திருக்கிறபோது, என் கிராமத்தில் 4,5 பேர்கள் சாராயம் காய்ச்சுகிறார்கள், உடனே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவரிடம் சொன்னேன், அவ்வாறு சொல்லி 4 மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. பின்னால் ஒரு போலீஸ் அதிகாரி வருகிறார். அவரைப் பற்றி நானும், அமைச்சர் இராஜா முகமது அவர்களும் அந்தப் பகுதியிலே செல்லுகின்றபோது, அந்த போலீஸ் அதிகாரியைப் பற்றி அமைச்சர் அவர்களிடத்திலே சொன்னேன். அவரும் அவரது நடவடிக்கைகளைப் பற்றி கண்டித்திருக்கிறார். இதைப் பற்றி நான் எஸ்.பி. அவர்களிடத்தில் சொல்கிறேன். அங்கிருந்து சப்-இன்ஸ்பெக்டரிடம் சொல்கிறேன். இன்று கூட கடந்த ஒரு மாதகாலமாக எனது சொந்த கிராமத்திலே 4,5 பேர்கள் கடைகள் வைத்திருக்கிறார்கள். இதைப்பற்றி பலமுறை சொல்லியும், அந்த மாவட்ட கண்காணிப்பாளர் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. விரிஞ்சிபுரம் சப்-இன்ஸ் பெக்டரும் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த நிலைமையிலே சட்ட மன்ற உறுப்பினர் என்று நான் ஒருவன் அங்கே எதற்காக இருக்க வேண்டும்? அங்கே இந்த நிலைமைகளை உருவாக்கியவர் யார்? நாம் எத்தனை சட்டங்கள் போட்டாலும், மக்கள் நலனுக்காக இயற்றப்படுகிறது. இந்த சட்டங்களை நிறைவேற்றும்போது போலீஸ் நிர்வாகம் இந்த அரசை வேண்டுமென்றே களங்கப்படுத்த வேண்டுமென்று குறிப்பாக, மதுவிலக்குச் சட்டத்தை அமுல் படுத்தாமல், தவறுகள் ஏற்படுவதற்கு காரணமாக இருக்கின்றார்கள். அந்தக் குறைகளை சிந்தித்து போக்கி ஆக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மதுவிலக்குச் சட்டத்திலே இருக்கின்ற குறைகளைப் பற்றி தீவிரமாகவும், முறையாகவும் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். பெரியார் அவர்கள் காலத்திலிருந்து அண்ணா அவர்கள் காலத்திலிருந்து, காமராஜர் அவர்கள்.

காலத்திலிருந்து நாம் பார்க்கிறோம். அமைதியான முறையிலே மக்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு இந்த நாட்டிலே இருக்கின்ற அனைத்துக் கட்சிகளுக்கும் உரிமை இருக்கிறது. இந்த அரசாங்கத்திலே இருக்கின்ற குறைகளை, தவறுகளை முறையாக சுட்டிக்காட்டுவது என்பது ஒரு மரபு. ஆளும் கட்சியிலே இருக்கின்ற தவறை முறையாக எடுத்துச் சொல்லி கறுப்புக் கொடி காட்டுவதும், ஊர்வலம் நடத்துவதும் ஜனநாயகத்திலே மதிக்கப்படுகின்ற ஒன்றாகும். ஆனால், சி.பி.ஐ.-யைச் சார்ந்த கல்யாணசுந்தரம் அவர்களும், இப்போதிருக்கின்ற முதல்வர் அவர்களும், அன்று ஆவடிக்கு சென்றார்கள். இப்போது எதிர்க் கட்சியாக இருக்கின்றவர்கள் அப்போது ஆளும் கட்சிக்காரர்கள். தி.மு.க. ஆளும் கட்சியாக இருந்தது. கறுப்புக் கொடி காட்டினார்கள். அதிலே விந்தையும், வேதனையும் என்னவென்றால், அன்றைக்கு ஆளும்கட்சியாக இருந்தவர்கள் இதனை ஆரம்பித்து வைத்தார்கள்.

[நண்பகல் 12-00]

இந்த நிலைமைகளுக்கு அப்போது இருந்த ஆட்சி சென்றது. பின்னால் நடந்த சம்பவங்கள் என்ன? இந்திரா காந்தியம்மையார் வரும்போது கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். அதிலே பல தாக்குதல்கள் நடைபெற்றன. சென்னையில் கூட கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடந்தது. * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழுவில் கண்டிப்பாக நேரத்தைக் கடைபிடிக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கனவே தாங்கள் 20 நிமிஷம் எடுத்துக்கொண்டீர்கள். தயவு செய்து முடித்து விடுங்கள்.

திரு. ரா. மார்க்கபந்து : ** * * *

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை வழக்கு மன்றத்தில் இருப்பதால் அதைப்பற்றிப் பேச வேண்டாம் என்று கட்டளையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி மட்டும் பேச வேண்டாமென்று சொல்லவில்லை. முடித்துக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடைசியில் பேசிய வாக்கியங்களை எடுத்துவிட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன். * * *

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. ரா. மார்க்கபந்து : இந்தப் போக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, தொழிலாளர் பிரச்சினை என்று சொல்கிற போது தொழிலாளர் நலனுக்குப் பாடுபட வேண்டியவர்களாக அனைவரும் இருக்கிறோம். எந்த அரசாக இருந்தாலும், எந்த எதிர்க்கட்சியாக இருந்தாலும் முதலாளிகளுக்கு ஆதரவாக இருக்கக்கூடாது என்பதில் ஒத்த கருத்து உடையவன். ஆனால் உண்மையில் அங்கே தொழிலாளர்கள் போராட்டம் இல்லை. தொழிலாளர்களுடைய யூனியன்களுக்கு யார் தலைவராக வருவது என்பதில்தான் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் ஏற்கனவே 25 நிமிஷம் எடுத்துக்கொண்டீர்கள். அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவை மீற முடியாது. ஆகையால் தயவு செய்து உட்காருங்கள்.

திரு. ரா. மார்க்கபந்து : ஆகவே, பல்வேறு பிரச்சினைகளைப் பார்க்கிற நேரத்தில் ஆதாரமுள்ள குற்றச்சாட்டுகளைச் சொல்லாது இந்த அரசாங்கத்தின்மீது வெறுமனே புழுதிவாரித் தூற்றுகின்ற காரியத்தைச் செய்வதன் மூலம் எதிர்க்கட்சிகளுக்கு மக்கள் மத்தியில் இருக்கும் செல்வாக்கைக் குறைத்துவிடக் கூடாது. குற்றச்சாட்டுகளைச் சொல்லும்போது ஆதாரத்தோடு சொல்லவேண்டும். அரசு தவறு செய்கிறபோது தவறு என்று சுட்டிக்காட்டுவது நம்முடைய கடமை. ஆகவே, ஆதாரம் எதுவும் இல்லாத நிலையில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. உறைப்பினர் முன்னேற்றக்கட்சி ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் சார்பில் மாண்புமிகு சாதிக் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய பல்வேறு தலைவர்கள் இந்த ஆட்சி மீது எப்படி நம்பிக்கை இல்லையென்ற கருத்துக்களை வெகு சிறப்பாகவும் அதை ஆளுகின்ற தரப்பில் மறுக்காத வகையிலும் கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

குறிப்பாக காங்கிரஸ் கட்சித் தலைவர் மாண்புமிகு மாரிமுத்து அவர்கள் மேலும் எதிர்க்கட்சிகளுக்கு வலு சேர்க்கிற அளவுக்கு ஆளும் கட்சிக்கு சில யோசனைகளைச் சொன்னார்கள். உங்களோடு கூட இருந்தவர்கள் எல்லாம் இப்படி கருணாநிதி பக்கத்தில் போய் சேர்ந்து விடுகிறார்கள். அவர்களை அப்படி விட்டது ஒரு பக்கத்தில் வருத்தமாக இருக்கிறது என்று மன

வருத்தத்தோடு குறிப்பிட்டார்கள். இதுபற்றி ஆளும் கட்சியில் உள்ளவர்கள் ஓரளவு யோசிக்க வேண்டுமென்று நானும் குறிப்பிட விரும்புகிறேன். எங்களோடு அன்று இருந்தவர்கள் கடைசி நேரத்தில்தான் எங்களை விட்டுப் போனார்கள். ஆனால் உங்களோடு இருந்தவர்கள் ஒன்றரை ஆண்டுக்குள்ளாகவே உங்களை விட்டு வெளியே வந்துவிட்டார்கள். அதிலேதான் நீங்கள் யோசிக்க வேண்டும். எங்கள் மீது கோபப்படுவதோ எங்களை கடும் வார்த்தைகளைக்கொண்டு சாடுவதோ சரியல்ல, அது ஆளுங்கட்சியினருக்கு முறையாக இருக்காது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு அத்தனை எதிர்க்கட்சிகளும் சேர்ந்து, நடந்த சட்டமன்றத் தேர்தலிலே நீங்கள் 52 லட்சம் வாக்குகளைப் பெற்றிருக்கிறீர்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னந்தனியாக நின்று 42 லட்சம் வாக்குகளைப் பெற்றிருக்கிறது, இடையிலே 10 லட்சம் வாக்குகள்தான் இருக்கிறது. ஆனால் இன்றைக்கு உங்களோடு இருந்த எதிர்க் கட்சிகள் இந்தப் பக்கம் வந்துவிட்டன. வாதத்திற்காக வைத்துக் கொண்டாலும்கூட அந்த பத்து லட்சம் வாக்குகள் இப்போது இந்தப் பக்கம் வந்துவிட்டதாகத்தான் அர்த்தம். ஆளுங்கட்சி மக்களுடைய நம்பிக்கையை இழந்துவிட்டது என்பதற்கு இதை விட வேறு ஆதாரம், சாட்சியம் வேண்டுமா என்பதை எண்ணிப் பாருங்கள். இன்றைக்கு எதிர்க்கட்சிகள் எல்லாம் இந்தப் பக்கம் வந்துவிட்டால் இங்கே 52 லட்சம் வாக்குகள் வந்துவிட்டன. அந்தப் பக்கம் 42 லட்சம் வாக்குகள்தான் இருக்கின்றன. (சிரிப்பு) இதை நான் சொல்வதிலே நீங்கள் சிரிக்கக் கூடாது. நாங்கள் எதிர்க்கட்சியிலே இருந்துகொண்டு சில யோசனைகளைச் சொல்கிறபோது நீங்கள் ஆளுங்கட்சியிலே இருக்கிறவர்கள் ரொம்ப சின்ன வயதிலே உள்ளவர்கள், அறியாதவர்கள், கேட்டுக் கொள்ளவேண்டுமே தவிர சிரிக்கக்கூடாது....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அப்படியானால் தாங்கள் வயதானவரா, கிழவரா?

<u>திரு. சி. ஆறுமுகம் :</u> பேரவைத் தலைவர் முடிவு செய்ய வேண்டும், இரண்டு பேர்களுக்கும் ஒரே வயது என்று நினைக்கிறேன். கடந்த ஒன்றரை ஆண்டுகாலமாக நடந்த சம்பவங்கள் என்ன என்ன? ஒன்றா, இரண்டா? 6 மாதத்திற்கு முன்னாலேதான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தார்கள், இப்போது கொண்டுவருகிறார்கள் என்று சொன்னார்கள். உண்மைதான் இன்றைக்கு எதிர்க்கட்சிகள் எல்லாம் இந்தப் பக்கம் வந்துவிட்டார்களே, நீங்கள் கோபப்படக் கூடாது. அரசியல்வாதிகளுக்குக் கோபமே வரக்கூடாது. முதலமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள், கோபமே வரக்கூடாது என்று. என்ன இருந்தாலும் எங்களுடைய

மாவட்டத்தைச் சேர்ந்தவர் அவர், செங்கற்பட்டு மாவட்டம, நடந்த கொலைகள், கொள்ளைகள் எத்தனை? என்பதை ஆளுங் கட்சிக்காரர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆனால் இன்றைக்கு ஆளுங்கட்சிக்காரர்கள் என்ன பேசுகிறார்கள் கருணாநிதி ஆட்சிக் காலத்திலே நடக்கவில்லையே என்று கேட்கிறார்கள். நான் வாதத்திற்காக ஒத்துக்கொள்கிறேன். அப்படியானால் நீங்கள் எதற்காக அந்தப் பக்கத்திலே? எங்கள் மீது மக்களிடம் குறைகளைச் சொல்லித்தான் அவர்களிடமிருந்து வாக்குகளைப் பெற்று பதவிக்கு வந்திருக்கிறீர்கள். ஆனால் நாங்கள் செய்த தவறுகளையே நீங்கள் செய்வதற்காகவா வந்தீர்கள்? புட்லூர் தண்டபாணி கொலை வழக்கு, முருகையன் கொலைவழக்கு இப்படி எத்தனை எத்தனை வழக்குகள்? நான் அந்த வழக்குக்குள்ளே போகவில்லை, நானும் வழக்கறிஞர்களோடு பழகியவன்தான். கன்டம்ப்ட் ஆப் கோர்ட் ஆகிவிடும் என்பது எனக்குத் தெரியும். பிரேமா கொலை வழக்கு, இளஞ்செழியன் கொலை வழக்கு, புட்லூர் தண்டபாணி கொலை வழக்கு, முருகையன் கொலை வழக்கு இவைகள் என்ன ஆயிற்று? ஆனால் ஒன்றைக் கற்றுக்கொண்டிருக்கிறீர்கள். முதலமைச்சரும் ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். இன்றைக்கு சட்டமும் அவருடைய கையிலிருந்து கொஞ்சங் கொஞ்சமாக நழுவிக் கொண்டிருக்கிறது.

திரு. மார்க்கபந்து பேசும்பொழுது வருத்தப்பட்டுக் கொண்டார்கள். முன்னாலே கட்சித் தலைவர்கள் சென்றபோது நடந்த சம்பவம்பற்றிச் சொன்னார்கள், வருத்தப்பட வேண்டியதுதான். எதுவாக இருந்தாலும் வருத்தப்பட வேண்டியதுதான். இன்றைக்கு கருணாநிதி உங்களுக்கு கருணாநிதி, ஆனால் எங்கள் கட்சித்தலைவர், அங்கிகாரம் பெற்ற எதிக்கட்சித் தலைவர், அவர் வீட்டின் மேல் கல்லை எறிந்தார்கள், உடனே எங்கள் கட்சிக்காரர்கள் மீது கேஸ் போடுகிறார்கள், ஆனால் அவர் மீதே உளியை வீசுகிறார்கள், ஒரு வருந்தத்தக்க செய்தியாவது விட வேண்டாமா? எதிர்க்கட்சித் தலைவர் இல்லையா? அமைச்சருக்கு என்ன அந்தஸ்தோ அதற்குச் சமமாக அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சித் தலைவருக்கு இருக்கிறது, சட்டப்படி. இங்கே மற்ற உறுப்பினர்கள் கிண்டலாக அதைப்பற்றிப் பேசுகிறார்கள். கிண்டல் பேச ஆரம்பித்தால் அதுதான் உங்களுக்கு வீக்னஸ் இருக்கிறது என்பதற்கு அடையாளம். நான் அரசியலிலே வயது வந்தவன் என்ற முறையிலே சொல்கிறேன், [illegible].....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> தலைவரைப் பார்த்துப் பேசவேண்டும். நண்பர்களே என்று அவர்களைப் பார்த்து அழைக்கிறீர்கள்.

திரு. சி. ஆறுமுகம்: நம்முடைய கலைவாணர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். மனிதனுக்கு ஒன்று வரும் போது இன்னொன்றும் கூட வரும். ஒன்று பணம் வரும், அதோடு கூடவே கர்வமும் வரும். ஆகவே மனிதன் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று. அப்போது உங்களுக்குப் பதவி வந்திருக்கிறது. கூடவே இன்னொன்றும் வந்திருக்கிறது. அது வர ஆரம்பித்து விட்டால் நாங்கள் சொல்லவேண்டியதில்லை, நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதுதான்.

[பிற்பகல் 12—10]

ஊழலைப்பற்றிப் பேசுகிறீர்கள். நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் இங்கே உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள் ஒரு புள்ளி விவரத்தைக் காலையிலே அவர்கள் மறுத்தார்கள். ஏன் உங்கள் மீது நம்பிக்கையில்லை? ஒரு தரப்பா. இரண்டு தரப்பா நம்பிக்கையில்லை என்று சொல்கிறார்கள். ஆசிரியர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் இப்படி ஒருவரையாவது விட்டீர்களா? என்.ஜி.ஓக்களை யார் தூண்டினார்கள்?

ஒரு அறிக்கை வருகிறது. ஸ்ட்ரைக்கா? மக்கள் பார்த்துக் கொள்வார்கள். அந்த வார்த்தையைத்தான் பயன் படுத்துகிறார்கள். அது உங்களுடைய வீக்னஸைத்தான் காட்டுகிறது. கரும்புக்கு நூறு ரூபாய் கொடுப்பதாக இங்கே சொல்கிறோம். திருப்பித் திருப்பிச் சொல்கிறோம். ஆளுங் கட்சியிலேகூடக் கேட்டார்கள். 85 ரூபாய் கொடுக்கிறார்கள். எங்கள் ஊர் சர்க்கரை ஆலையிலே. திருப்பித் திருப்பி அமைச்சர் மறுத்துக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு)

பேரவைத் தலைவர் அவர்களே, மந்திரிகளுக்கு நிறைய நேரம் இருக்கிறது. அப்பொழுது சொல்லட்டும், வேண்டாமென்றா சொல்கிறோம். மதுராந்தகம் சர்க்கரை ஆலைக்கு 75 இலட்சம் ரூபாய் கடன் கேட்டிருக்கிறோம். அமராவதிக்கு 50 இலட்சம் ரூபாய் கொடுக்கிறார்கள். இங்கே போக்குவரத்துத்துறை அமைச்சரவர்களைக் காணோம். அவர்கள் அறியாதவர்கள், சிறு வயதுக்காரர். அவர் சிரித்துக்கொண்டே எதிரிகளைப் பழி வாங்குவதில் கெட்டிக்காரர். அதற்குள் நான் போகவில்லை' போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் இரண்டு இலாக்காக்களை வைத்து கொண்டிருக்கிறார்கள், ஒன்று சாலை, இன்னொன்று பஸ், லாரிகள், கார்கள், டிராக்டர்கள், கலப்பைகள் ஆகியவை சம்பந்தமாக வைத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே சாலைகள் எவ்வாறு இருக்கின்றன என்று அவர்கள் சுற்றிப் பார்க்க வேண்டும். ஆந்திராவையும் பார்க்கவேண்டும். நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் அவர்களுக்கு இதில் அக்கறையில்லை. சென்ற ஆண்டு ஒன்றைக் குறிப்பிட்டார்கள், என்ன தெரியுமா? பேரவைத் தலைவரவர்களே, அசோக் லேலண்டு சரியாக

இல்லை, கெட்டுப் போன வண்டி, அதிகாரிகள் அதை வாங்கக் கூடாது என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, பென்ஸ் வாங்குவதாகக் குறிப்பிட்டார்கள். 35 வருஷங்களாக மோட்டார் தொழிலில் இருக்கின்ற நமக்குத் தெரியவில்லை, மந்திரி நம்மை விடக் கெட்டிக்காரர் என்று நினைத்துக்கொண்டேன். ஆனால் இந்த ஆண்டில் அசோக் லேலண்டிலிருந்து பெறுகிறார்கள். இரண்டு மூன்று மாதங்கள்தான் இடைவெளி. இதற்கு என்ன சொல்வது என்றே புரியவில்லை. இதற்கு என்ன காரணத்தைச் சொல்லியிருக்கிறார்கள்? முதலமைச்சரவர்கள் இதைக் குறித்துக் கொள்ளட்டும். நான் ஒன்றைச் சொல்கிறேன். நான் வழக்கிற்குள் சொல்லவில்லை. ஒரு வழக்கிலே நான் சாட்சி சொல்லிக்கொண்டு வருகிறேன். நான் இதை மிக ஜாக்ரதையாக சொல்கிறேன். மந்திரி மதுராந்தகத்திற்குப் போகிறார் ஜனவரி 16ஆம் தேதி. மந்திரி எல்லா ஊருக்கும் போகட்டும். போக வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. டி.பி.யில் உட்கார்ந்து கொண்டு ஆறுமுகம் என்னென்ன அயோக்கியத்தனம் செய்கிறார் என்று கேட்கிறார். ஒன்றும் இல்லை, ஒன்றும் கிடைத்ததாகத் தெரியவில்லை என்று அங்கே சொல்கிறார்கள். எப்படியாவது அவர்களுக்குக் காரணம் வேண்டும். அவர்களுக்கு இதில் எவ்வளவு அக்கறை இருக்கிறது? இதை நான் எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், நீதித்துறையில் போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் திட்டவட்டமாகத் தலையிடுகிறார்கள் என்பதற்கு வேறு எந்தக் காரணமும் தேவையில்லை. அவருடைய இலாக்கா பெரிய இலாக்கா. அந்த இரண்டு துறைகளையும் விட்டுவிட்டு மதுராந்தகத்திற்கு வருகிறார். அவர் வரட்டும், என் தொகுதிக்கு வரட்டும், விழா நடத்தட்டும். கல்வியமைச்சர், நிதியமைச்சரைக்கூட நான் கேட்டு வைத்துள்ளேன். அந்த விழாவிற்குக்கூட என்னைக் கூப்பிட வில்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, ஆறுமுகம் அவர்கள் அப்பொழுது சிறைச்சாலையில் இருந்ததாக ஞாபகம்.

திரு. சி. ஆறுமுகம்: நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் வரட்டும், இன்றைக்கு விழாக்கள் நிறைய நடக்கின்றன. அவர் போய்க் கலந்துகொள்ளட்டும். இங்கேயுள்ள சட்டமன்ற உறுப்பினர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான். ஒரு கட்சியின் பலத்தால் அரசாங்கத்தை அமைக்கிறார்கள். எனவே நான் முதலமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், முதல்வரவர்களுக்கு இந்த அளவிற்குத் தெரியுமா? மாண்புமிகு முதல்வரவர்கள் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், அவர்களுக்குக் கெட்ட பெயர் மந்திரிகளால் வரக்கூடாது

என்பதில் நான் ரொம்ப அக்கறை உள்ளவனாக இருக்கிறேன். என்னென்ன செய்கிறார்கள்? சேலத்தில் நீதிபதி சமீபத்தில் நியமிக்கப்பட்டார். அப்பொழுது உங்களுக்கு ஒரு வன்னியர் அகப்படவில்லையா? எங்கள் கட்சிக்காரர்கள் கூட வேண்டாம், மார்க்கபந்து அகப்படவில்லையா? அவருடைய ஒரு தொண்டர் அகப்படவில்லையா?

திரு. ரா. மார்க்கபந்து : நான் நீதிபதியாக விருப்பவில்லை, ஆகவே என்னை இழுக்க வேண்டாம்.

திரு. சி. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, சேலத்திலேயிருந்த ஒருவரை சேர்த்து அனுப்பினார்கள் அந்த லிஸ்டிலே. அந்த ஆள்மீது குறை கண்டு பிடிக்க 50 வக்கில்களை வரவழைத்து 500 பெட்டிஷன்கள் கொடுக்க வைத்து, அவன் மீது குற்றம் இல்லை, அவன் தம்பி மீது குற்றம் என்று சொன்னார்கள். மத்திய சர்க்காருக்கும் போய்வந்து விட்டது அந்த ஃபைல். இந்தச் சர்க்கார் தாழ்த்தப்பட்டவர்களுக்கு. பின் தங்கியவர்களுக்கு உதவவில்லை என்பதை பகிரங்கமாகச் சொல்லத் தயாரக இருக்கிறேன். எந்த விசாரணை வேண்டுமானால் வையுங்கள், அங்கு நான் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

என்னுடைய அரசியல் கொள்கைகளை யாரும் அசைக்கவே முடியாது, ஏற்றுக்கொண்ட கொள்கையை அனுபவித்தே தீருவேன், விளைவு எதுவாக இருந்தாலும். அந்த அளவு நடக்கிறார் பொன்னையன். ஆறுமுகம் கேசுக்குப் போகிறானா, உடனே ஆறுமுகத்தைப் பற்றி என்னென்ன பார் என்று பார்க்கச் சொல்கிறார். நேராக வந்து விட்டார், அந்த நிலைமை வேறு. இந்த அளவு, இந்தச் சர்க்கார் நீதித் துறையில் தலையிடுகிறது, தொழிலாளர் துறையிலே தலையிடுகிறது, ஆசிரியர் துறையில் தலையிடுகிறது, என். ஜி. ஓக்கள் துறையில் தலையிடுகிறது, மாணவர்களை அன்றாடம் அடிக்கிறார்கள். இதைவிட என்ன சொல்லவேண்டும்?

ஊழல் என்றால், கையிலே ஆதாரம் இருக்கிறதா என்று கேட்கிறார்கள். இந்தச் சபையிலே ரொம்ப காலமாக கேட்கப்படுகிறது, இந்தச் சபையிலே அப்படி கேட்டவர்கள் எல்லாம் எங்கே இருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆதாரத்தை வைத்துக்கொண்டு சொல்ல வேண்டுமென்றால், உங்களைப் போல் பதில் சொல்ல வேண்டுமென்றால், ஆதாரம் வேண்டுமா? விசாரணை வையுங்கள், என்னென்ன நடந்தன, என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பெற்றன என்று நான் நேரிடையாக அளிக்கத் தயாராக இருக்கிறேன். அப்படியில்லையென்றால். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீங்கள் இடுகின்ற தண்டனையை நா தாங்கிக் கொள்ள தயாராக இருக்கிறேன்,

ஒன்றா, இரண்டா? இப்பொழுது சமீபத்திலே ஒரு காரியத்தைக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆபட்ஸ்பரி மாளிகையை வாங்கப் போகிறார்கள். எதற்காக வாங்கப் போகிறார்களோ? அரசாங்கத்திற்கு இடமே இல்லையா? எவ்வளவோ இடம் இருக்கிறது, வள்ளுவர் கோட்டம் இருக்கிறது. இது எத்தனை இலட்சமோ? யார் பெயரை வைக்கப் போகிறார்கள் என்பதைத் தயவு செய்து எதிர்க்கட்சிக்காரர்களுக்குச் சொல்லவேண்டும்.

இன்னொன்று, போலீஸ் ஸ்டேஷனைப் பற்றி நிறையப் பேசினார்கள். நான் அதிகம் பேச விரும்பவில்லை. எதிர்க்கட்சிக்காரன் கம்ப்ளெய்ன்ட் கொடுத்தால், அவன் மேல் கேஸ். முதலமைச்சரவர்களுக்குத் துணையாக இருக்கும் என்று கருதி ஒன்றைச் சொல்கிறேன். பேரவைத்தலைவர் அவர்களே, சொந்தத்தைப் பற்றி நான் யாரிடத்திலும் சொல்லாத பக்குவத்தைப் பெற்றவன். சட்டத்தைப் பற்றி, போலிசைப் பற்றி மார்க்கபந்து பேசினார், பாவம். அது வேறு விவகாரம். என் கூடப் பிறந்தவன் தாக்கப்பட்டு, இரண்டு மாதமாயிற்று. மருத்துவ மனையிலே இருந்தார். நான் துணியெல்லாம் கொடுத்தேன், இரத்தத்தைத் துடைக்க. என் அண்ணன் அடிபட்டுவிட்டார். நீங்கள் நடவடிக்கை எடுங்கள் என்று சொல்லவில்லை. என்னிடத்திலே வந்து சொன்னதற்கு நான் என்ன சொன்னேன்? செத்துத் தொலையுங்கள், பரவாயில்லை, இது என்னுடைய முடிவான பதில், இந்த அவைத் தலைவர் மூன்றாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார். இந்த மன்ற உறுப்பினர் டி. இராசரத்தினமும் மூன்றாவது முறையாக உறுப்பினராக இருக்கிறார். காலை 8 மணிக்குச் சட்டையைப் போட்டுக் கொண்டு வெளியே வருகிறார். தாக்க வருகிறான், தாக்குகிறான், தாக்கப்பட்டவர் மருத்துவ மனையிலே படுத்திருக்கிறார். பேரவைத் தலைவர் கூடக் குறிப்பிட்டார்கள். எனக்கு அந்தச் சட்டம் தெரியாது. மருத்துவ மனையிலே வந்த பிறகு 326 செக்ஷன் போடுகிறார்கள். அடிபட்ட சட்டமன்ற உறுப்பினர் சென்னைப் பொது மருத்துவ மனையிலே படுத்துக் கொண்டிருக்கிறார். அவர் மீது 32. செக்ஷன். அடித்தவன் வெளியிலே உலவிக் கொண்டிருக்கிறான். யாராக இருக்கட்டும், எந்தக் கட்சியாக இருக்கட்டும், சட்டமன்ற உறுப்பினர், பொது வாழ்க்கையில் ஈடுபடுபவராக இருப்பவர் தாக்கப்பட்டால், உடனே நடவடிக்கை எடுக்க வேண்டாமா? தி. மு. க. வாக இருக்கட்டும், அ. தி. மு. க. வாக இருக்கட்டும். அரசியல் தலைவர்கள் பகிரங்கமாக வெளியே போகவேண்டாமா? உடனே ஆளுங் கட்சியிலே நீங்கள் செய்யவில்லையா என்பார்கள். தாக்கப்படுவதற்காக உங்களுக்கு ஓட்டு போட்டார்கள்

நீதித் துறையிலே இன்றைக்கு என்ன இலட்சணம்? கேஸ் எழுதுகிறான், போலீஸ்கரான். அவனைக் கேட்டால் என்ன சொல்கிறான், எங்களை என்ன செய்யச் சொல்கிறாய்,

என்கிறான். அடிபட்டவனே போய் வழக்கு எழுது என்றால், என் கை கட்டப்பட்டிருக்கிறது என்று சொல்கிறான்.

பேரவைத் தலைவர் அவர்களே. உங்கள் மூலமாக நான் சொல்வது, போலிஸ் இலாகா தன்னந்தனியாக இயங்க வேண்டும், தனிச் சுதந்திரத்தோடு அந்த இலாகா வாழ்ந்தால் ஆளுங் கட்சிக்கும் பாதுகாப்பு இருக்கும், எங்களுக்கும் பாதுகாப்பு இருக்கும். தயவுசெய்து அதை மறந்து விடாதீர்கள், சட்டம் ஒழுங்கு இன்றைக்கு ஆளுங்கட்சி கையிலேயிருந்து போய்விட்டது ....(மணியடிக்கப்பட்டது) எதிர்க் கட்சியினர் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து இன்னும் 5 நிமிடத்திலே முடியுங்கள், அலுவல் ஆய்வுக் குழுவிலே ஏற்பட்ட முடிவு அது.

[பிற்பகல் 12-20]

திரு. சி. ஆறுமுகம்: பேரவைத் தலைவரவர்களே, உங்கள் மத்தியிலே, உங்கள் அனுமதியோடுதான் பேசிக் கொண்டு இருக்கிறேன்.

பிரேமா கொலை வழக்கு எத்தனை மாதம் ஆகிறது? என்ன ஆயிற்று? நம்முடைய போலீஸ் என்ன திறமை இல்லாதவர்களா? தமிழ் நாட்டிலே, அகில இந்தியாவிலேயே மரியாதை மிக்க போலீஸ் தமிழகத்தினுடைய போலீஸ்தான். பிரேமா கொலை வழக்கில் ஏன் நடவடிக்கைகள் எடுக்கவில்லை? பொட்லூர் தண்டபாணி கொலை வழக்கு என்ன ஆயிற்று? உங்கள் கட்சியைச் சேர்ந்தவர், பாவம் அதிகமாகப் பேசக் கூடாது. அது வேறு விவகாரம். கொலை நடந்து இருக்கிறதா? இல்லையா? எவன் செத்தான்? ஸ்ரீ வில்லிபுத்தூர் இளம்செழியன் கொலை—நாமெல்லாம் தாய்குலத்தின் மூலமாகத்தான் இங்கே வந்து பேசிக்கொண்டு இருக்கிறோம். ஒரு சிறிய பையன், 10 12 வயது இருக்கும்.

சரி எல்லாம் போகட்டும், எதிர்க்கட்சித் தலைவர்களை அடிக்க ஆரம்பித்து இருக்கிறார்கள். கதையெல்லாம் கட்டி பாடுகிறார்கள். பாடுங்கள், அது வேறு விஷயம். ஆனால், இந்த நிலை நீடிக்க வேண்டுமா? நாடாளுமன்ற உறுப்பினர் கொலை. நான் அந்த வழக்கை இங்கே பேசவில்லை. வழக்கைப்பற்றி எனக்கும் தெரியும். அவர் எந்தக் கட்சியோ? உடனே தலைவர் அவர்கள் என்ன கம்யூனிஸ்ட் கட்சிக்கு வக்காலத்து வாங்குகிறீர்களா என்று கேட்பார். நான் வக்காலத்து வாங்க விரும்ப

வில்லை. பாதுகாப்பு இல்லை என்ற நிலை இருக்கிறது என்று சொல்கிறேன். இரண்டு தினங்களுக்கு முன்பு கேட்டிருக்கிறார் இன்ஸ்பெக்டரைப்பார்த்து "ஐயா நான் செத்த பிற்பாடுதான் எனக்கு பந்தோபஸ்தா" என்று, ரைட்டிங்கிலும் எழுதி கொடுத்து இருக்கிறார். பஸ்ஸை விட்டு இறங்கிய உடனே—கண்டக்டர் கூட கேட்டிருக்கிறார் ஐயா துணைக்கு வரட்டுமா என்று-வேண்டாம் அருகில்தான் வீடு என்று இறங்கியிருக்கிறார். இறங்கிய உடனே கொலை நடக்கிறது. இந்த நிலையில் பந்தோபஸ்து இருந்தால் பின் எப்படி நாங்கள் சட்டசபைக்குவருகிறது, எப்படி தொகுதிக்குப் போய் சுற்றிப் பார்ப்பது? தொகுதியில் கூட்டம் பேசிவிட்டு திரும்பி வருவது? ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும்தான் சொல்கிறேன்-யாராவது ஆக இருக்கட்டும்-போதுமான பாதுகாப்பு இருக்க வேண்டாமா? இந்த விஷயத்தில் இந்த ஆட்சி மீது நம்பிக்கை இல்லை. கொலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆசிரியர்கள் தாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாணவர்கள் தாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட பின் தங்கிய மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை.

எங்களுடைய ஆட்சியில் இரண்டு மந்திரிகள்-இரண்டும் இரண்டும் நான்கு என்று கொடுத்திருந்தோம்; இப்பொழுது இதற்கு ஒன்றுதான். அது வேறு விவகாரம்-அது நிர்வாக சம்பந்தப்பட்ட விஷயம். ஆனால் மக்கள் பேசமாட்டார்களா? பெரும்பான்மையான வாக்குகளைப் போட்டவர்கள் பேச மாட்டார்களா? யோசித்துப் பாருங்கள் இந்த நிலையை. நீங்கள் பதில் சொல்லக் கூடும்-பின்னாலும் பேசக் கூடும்; ஆறுமுகம் தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்-ஜாதியைப் பற்றிப் பேசலாமா என்று சொல்வார்கள்-ஆனாலும் அவரவர்கள் ஜாதிக்காரர்களை இழுத்து வைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே. தி. மு. கழகம் மட்டும் இல்லை. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், தங்களோடு முழுக்க முழுக்க இருந்த இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் நம்முடைய மாரிமுத்து அனைவரும் சேர்ந்து இங்கே உங்கள் மீது நம்பிக்கை இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே உங்கள் மீது நம்பிக்கை இல்லை என்று தெரிவிக்கிறேன். தமிழகத்தில் இருக்கிற 52 லட்சம் மக்களில் உங்களோடு சேர்ந்தவர்கள் 10 லட்சம் இருந்தாலும் அந்த 52-ல், 42 லட்சம் நம்பிக்கை இல்லை என்று தெரிவிக்கிறார்கள். ஆகவே, உங்கள் மீது நம்பிக்கை இல்லை என்று புள்ளி விவரத்தோடு தெரிவித்துக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவரவர்களே, சட்டப், பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர்களால் கொண்டு வந்து இருக்கக்கூடிய நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன், அவர்கள்

கொண்டு வந்து இருக்கிற இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பற்றி நினைக்கிறபோது ''பனைமரத்தில் தலைகீழாக தொங்கிக் கொண்டிருக்கும் வௌவால் புளியமரத்திலுள்ள புளியம்பழத்தினை நினைத்து சப்புக்கொட்டியதாம்'' என்ற அண்ணாவின் கருத்து நினைவுக்கு வருகிறது.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, காலையில் திருச்சி சம்பவத்தைப் பற்றி நான் 42-வது விதியின் கீழ் ஒரு தீர்மானம் கொடுத்து இருந்தேன். நாளைக்கு எடுத்துக்கொள்வதாகச் சொன்னீர்கள். ஆனால் இப்போது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசுத் தரப்பில் இருந்து பதில் வரவில்லை. அரசுத் தரப்பில் இருந்து பதில் தர நாளைக்கு வாய்ப்பு இருந்தால் எடுத்துக்கொள்கிறேன். இன்றே அரசுத் தரப்பில் தயாராக இருந்தாலும் எடுத்துக்கொள்கிறேன் என்று சொன்னேன். அரசுத் தரப்பில் இருந்து தகவல் வராததால் அதை நான் தள்ளி இருக்கிறேன். அதைப் பற்றி இப்போது எழுந்து பேச வாய்ப்பு இல்லை.

திரு. என். சங்கரய்யா : தாங்கள் அளித்து இருக்கும் பதிலில் அது தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்று இருக்கிறது. அரசுத் தரப்பில் இருந்து பதில் வரவில்லை. ஆகவே எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசுத் தரப்பில் இருந்து பதில் வரவில்லை. ஆகவே நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று கூறிய பிறகுதான் நீங்கள் வெளிநடப்பு செய்தீர்கள். அதற்குப் பின்னாலே பிரச்னைக்கு இடம் இல்லை என்று கருதி தள்ளுபடி செய்திருக்கிறேன். மறுபடி நீங்கள் கொடுத்தால், அது பரிசீலிக்கப்படும்.

டாக்டர் கே. சமரசம் : ''அப்பிலே தோய்த்திட்ட தனை தப்பினால் நம்மையது தப்பாதோ'' என்ற காளமேகப் பாடலின் கருத்துக்கு இரையானவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்துள்ளனர். மக்களின் நம்பிக்கையை இழந்தவர்கள், எதிர்க்கட்சிகளாக ஆக்கப்படுவார்கள். மக்களின் நம்பிக்கையை நன் மதிப்பைப் பெற்ற மக்கள் அரசு மீது அவர்கள் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்து இருக்கிறார்கள். சட்டத்தினைப் பயன்படுத்தி, சட்டம் கொடுமையாக அமுலாக்கப்பட்டதால் சட்டத்தாலேயே அழிந்து போனவர்கள் சட்டப்படி ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்து இருக்கிறார்கள். பொதுவாக தமிழகத்தைப் பொறுத்தவரையில் சமய நெறி, சமுக நெறி, பலமாக இருந்தால் சட்டநெறி செம்மையாக வளருகிறது என்பதை அனைவரும்

உணர்வார்கள். உண்மைகள் ஊமையாக இருக்குமானால் பொய்கள் ஊராளத் துடிக்கும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இது அமைந்து இருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மதுராந்தகம் ஆறுமுகம் அவர்கள் கூட திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது நடந்த பல சம்பவங்களுக்கு அப்ருவராக மாறி சாட்சியம் அளித்துக்கொண்டு இருந்தார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, எதிர்க்கட்சிக்காரர்கள் ஜனநாயகத்தில் ஒரு ஆலோசனைக் குழுவாக இருக்க வேண்டும் என்று ஜனநாயக மரபு எடுத்துக் கூறுகிறது. ''இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன் கெடுப்பாரிலானும் கெடும்' என்று வள்ளுவர் அவர்கள் சொல்லி இருக்கிறார். ஆனால் எந்த நிலையிலே இங்கே எதிர்க்கட்சிகள் இருக்கின்றன என்பதைப் பார்க்கிறபோது, அப்படி அல்ல என்பதை மிகத் தெளிவாக புரிந்து கொள்ளும் வகையில இந்த சட்டசபை நடந்து கொண்டு இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அது மட்டுமல்ல, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து இருக்கும் எதிர்க்கட்சிக்காரர்கள் நடந்த சிலவற்றை எடுத்துச் சொல்லி, அதற்கும் ஆட்சிக்கும் உறவு ஏற்படுத்தி, சில சம்பவங்களை இங்கே சொன்னார்கள்.

தான் பட்டம் பெற, மாணவன் உதயகுமார் உயிர் பறிபோக காரணமானவர்கள், அவன் மாணவன் உதயகுமாரே அல்ல என அறிக்கை விட்டவர்கள், பூலாவாரி சுகுமாரன் கொலை வழக்கை மறைக்க முயன்றவர்கள், முருகையன் கொலை வழக்கில் தேவையான, முறையான, நியாயமான நடவடிக்கைகளை உண்மையாக எடுத்து வரும் அரசு மீது நாட்டில் நடைபெறும் சாவுகளுக்கெல்லாம் அரசியல் சாயம் பூசி ஆதாயம் தேடும் அரசியல் வாதிகள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து இருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. தாழ்த்தப்பட்டவர்களின் சம்பந்தி நான் என்று சொல்பவர்கள் எல்லாம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வயது வரம்பை நிர்ணயிக்க உருவாக்கும் ஆணையில் அவர்களுக்கு விரோதமான முறையில் கையெழுத்திட்டு நிர்மூலமாக்கியவர்கள். தாழ்த்தப்பட்டோர் சதவிகிதம் குறையாமல், கம்யூனல் ஜி.ஓ. பாதிக்காமல், மேட்டுக்குடியினருடன் சேர்ந்து வாழும் புரட்சித் திட்டத்தைக் கொண்டு வந்துள்ள அரசு மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்து இருக்கிறார்கள். இதைப் பார்த்தால், சாத்தான் வேதம் ஓதுகிறது என்ற கருத்து நினைவுக்கு வருகிறது.

[டாக்டர் கே. சமரசம்] [1979 பிப்ரவரி 21

மின் துறை என்று சொல்கிறபோது, சமயநல்லூர் மின் நிலையத்தை ஏலம் விட்டவர்கள், புதிய பல மின் திட்டங்களை உருவாக்கியுள்ள இந்த அரசு மீது நம்பிக்கை இல்லை என்று சொல்கிறார்கள்.

[பிற்பகல் 12-30]

விவசாயிகளுக்கு மின் கட்டணத்தைக் கூட்டியவர்கள் விவசாயத்திற்கு மின் கட்டணத்தைக் குறைந்த ஒரு அரசின் மீது நம்பிக்கை இல்லை என்கிறார்கள்.

1963 ஆம் ஆண்டிலேயிருந்து வரக்கூடிய அந்த நிலநீர் கட்டுப்பாட்டுத் திட்டத்தை வைத்திருந்தவர்கள் அதைப் போக்கிய புரட்சித் தலைவர் ஆட்சி இது-இன்றைய தினம் நிலநீர் கட்டுப்பாட்டுத் திட்டத்தை எடுத்து விட்டதன் மூலம் விவசாயி களுக்கு நல்லதொரு வாழ்வளிக்கக்கூடிய வகையிலே புதிய திட்டத்தை உருவாக்கித் தந்து, அதன் மூலம் இலட்சக்கணக்கான விவசாயிகள் பலன் பெற திட்டமிட்டுக் கொண்டிருக்கிற ஒரு அரசின் மீது இன்றைக்கு நம்பிக்கை இல்லை என்கிறார்கள்.

இங்கே பேசும்போது பலர் சொன்னார்கள். இங்கேயும் சொன்னார்கள், வெளியிலேயும் சொன்னார்கள், முதலமைச்சருக்கு ஃபைல் போவதில்லை, போன ஃபைல் வருவதில்லை, வேகமாக காரியங்கள் முடிக்கப்படுவதில்லை என்று சொன்னார்கள். அது துளிகூட உண்மையல்ல. இன்றையதினம் அகதிகள் மறுவாழ்வு திட்டம் இருக்கிறது. அது டில்லியிலிருந்து பணம் பெறக்கூடிய திட்டம். அதை வைத்து, தமிழ்நாட்டுக்கு வரும் அகதிகளின் முன்னேற்றத்திற்கு பணியாற்றிடும் மிகப் பெரும் திட்டம். டில்லியிலிருந்து பல கோடி ரூபாய்கள் பெற்று. தி. மு. க. ஆட்சி காலம் முழுதுமே செலவிடாத அளவு தொகை பெற்று, இந்த அரசு ஓராண்டில் செலவழித்து, சாதனை புரிந்துள்ளது. இந்த அரசின்மீது நம்பிக்கை இல்லை என்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. அன்றைய கர்நாடக முதல்வராக இருந்த வீரேந்திரபாட்டிலுடன் பேசி, தஞ்சைக்கு தண்ணீர் கொண்டு வரக்கூட முடியாதவர், உறவுக்கு கை கொடுத்த கலைஞர். அவர்கள்தான் இன்றையதினம் கர்நாடக முதல்வருடன் பேசி, தஞ்சைக்கு தண்ணீர் மட்டுமல்ல, பல கோடி ரூபாய் திட்டத்தில் 'ஒகேனக்கல் திட்டத்தையும்' நிறைவேற்ற இடையறாது பாடு படும் புரட்சித் தலைவர் அரசுமீது நம்பிக்கையில்லை என்கிறார்கள்.

தொழில் விரோத கொள்கையினை உருவாக்கி, தொழிற் சாலைகள் பலவற்றை வரிசையாக மூடியவர்கள், பல தொழிற் சாலைகளை திறக்க வழி வகுத்த புரட்சித் தலைவர் அரசுமீது நம்பிக்கை இல்லை என்கிறார்கள்.

1979 பிப்ரவரி 21] [டாக்டர் கே. சமரசம்[

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தொழிலாளர்களின் வேலை இல்லாத் திண்டாட்டம் உருவாகக் காரணமானவர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்த்து வைத்த அரசுமீது நம்பிக்கை இல்லை என்கிறார்கள்.

படித்தவர்கள், படிக்காதவர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தை உருவாக்கியவர்களே வேலை கொடுக்கும் திட்டத்தை உருவாக்கிய அரசுமீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

தொழில் முடக்குவாதம் கொண்ட ஆட்சி நடத்தியவர்கள் தான் மாவட்டந்தோறும் மாவட்ட தொழில் மையங்களை ஏற்படுத்தியுள்ள இந்த அரசுமீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்

அதுமட்டுமல்ல. மாணவர்களை அரசியல் பகடைக்காய்களாக பயன் படுத்தியவர்கள், 'அரசியலில் மாணவர்கள் ஈடுபடக் கூடாது, அரசியல்வாதிகளிடம் மாட்டிக்கொள்ளக்கூடாது, நாடு மொழி இவைகளைக் காக்க அரசு இருக்கிறது. அரசியல்வாதிகள் இருக்கிறார்கள், அரசியல் கட்சிகள் இருக்கின்றன; ஆகவே. மாணவர்கள் தெளிவாக கற்றுணர்ந்து உலகில் சிறப்பான இடம்பிடிக்க உழையுங்கள், உயருங்கள் என்ற ஒரு அரசின்மீது நம்பிக்கையில்லாத் திர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. விலைவாசி உயர்வு. நாட்டில் உற்பத்தி பெருகியும், விலை பெருக வழி வகுத்து, இடைத்தரகர்கள் வாழ, வளர, வழிவகுத்துத் தந்தவர்கள், உற்பத்தி பெருகி, விலை குறைந்து, இடைத்தரகர்களின் கொட்டத்தை அடக்கிய ஒரு ஆட்சியின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, நெல் கொள்முதல் விலையினை கூடுதலாக்க முடியாதவர்கள், டெல்லியோடு போராடி கூடுதல் விலையும் பெற்று, மேலும் கோதுமை கொள்கை அடிப்படையில் நெல்லுக்கும் தரவேண்டுமென்று போராடும் இந்த அரசின்மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, அண்ணா வழியில் அயராது உழைப்போம் என்றார்கள். ஆனால் தங்களுக்கு பிறந்த நாள் விழா நடத்திக் கொண்டிருந்தார்களே தவிர, அந்த அண்ணாவுக்கு ஒரு பிறந்த நாள் விழாவினை, அரசு விழாவாக நடத்தினார்களா என்றால், இல்லை, தாங்கள் பதவி ஏற்ற பிறகு, தமக்கு பிறந்த நாள் விழா கொண்டாட சந்தர்ப்பம், சூழ்நிலை, பதவி எல்லா வற்றையும் பயன்படுத்திக்கொண்டு, தன்னை வளர்த்துக்

கொண்டார்களே, அவர்கள்தான் இன்றைக்கு அண்ணாவின் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடும் புரட்சித் தலைவர் ஆட்சிமீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

கொள்ளையடிப்பதும் கொலை செய்வதும் ஓர் கலை என்று புதிய இலக்கணத்தைக் கண்டவர்கள் கலைஞர்களே தவிர, தொழில் கலைஞர்களை கவனிக்காமல் காற்றிலே பறக்க விட்டவர்கள்தான் உண்மைக் கலைஞர்களின் வாழ்வு ஒளிமயமாக திட்டம் தீட்டி அமுலாக்கும் புரட்சித் தலைவரின் ஆட்சி மீது நம்பிக்கை இல்லை என்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, எந்தக் கலையால் தன் நிலைமாறி, மற்றவர்களால் மதிக்கத்தக்க மனிதர்களானார்களோ அந்தக் கலையையே எள்ளி நகையாடியவர்கள் கலையின் மேம்பாட்டுக்கு வழிவகுத்து, அந்தக் கலை அவனியில் சிறக்க கலைஞர்களுக்கு பாதுகாப்புத்தரும் ஒரு அரசின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. சாதனைப் பட்டியல்-ஏட்டில் சாதனைப் பட்டியலை வெளியிட்டு ஏற்றம் பெறத் துடித்தவர்கள் எல்லாம் இன்றைக்கு நாட்டிலே நல்ல பல திட்டங்களை நடத்திக்காட்டி சாதனை புரிந்து கொண்டிருக்கும் ஒரு அரசின் மீது நம்பிக்கை இல்லை என்று சொல்கிறார்கள்.

அதுமட்டுமல்ல இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். யார் பெற்ற பிள்ளைக்கோ யாரோ முத்தம் கொடுத்து சொந்தம் கொண்டாடுகின்ற கதை என்று கிராமத்திலே ஒரு கதை சொல்வார்கள். அது போல யாரோ கண்டுபிடித்த நெல்லுக்கு கருணா என்றும் பாசிப்பயிருக்கு அஞ்சுகம் என்றும், புல்லுக்கு பத்மா என்றும், தன்னுடைய குடும்பத்தினுடைய பெயர்களையே தங்கள் ஆட்சிக்காலத்தில் சூட்டியவர்களுக்கு, பெற்றவனே பேர் வைக்கட்டும் எனும் பெருமொழிக்கேற்ப, அந்தத்துறையின் காரணப்பெயர்களே இருக்கவேண்டும் எனும் பொது நலக் கருத்தை போதிக்கின்ற அரசின் மீது நம்பிக்கை இல்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாதவரம்பால் பண்ணையின் ஊழலின் மொத்தக் குத்தகைதாரர்களுக்கு தமிழ் நாடு பால்வள நிறுவனம் மூலம், பல இலட்சம் பேர் பலனடையும் திட்டத்தை வகுத்த இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, இந்தி திணிப்பினை எதிர்க்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல், இரு மொழித் திட்டத்தை தீவிரமாக அமுலாக்கவும், இந்தியாவில் வாழும் ஆங்கிலோ இந்தியர்களின் தாய்மொழியான ஆங்கிலத்தையும் இந்திய அரசு தேசிய மொழியாக அங்கீகரிக்கவேண்டும் எனும் திட்டத்தை உருவாக்குவதால், மாநில உறவு- இந்திய உறவு, உலக உறவு, என அத்தனைக்கும் ஏற்புடையதாகவும், அன்னியமொழி என்னும் சொல் அடிபட்டுப் போய் தமிழகத்தின் தனித்தன்மை கெடாமல் திராவிடத்தின் கலாசாரத்திற்கு பங்கம் வராமல் இந்தியாவின் ஒருமைப்பாடு உருக்குலையாமல் உலக மேம்பாட்டை உருவாக்குகின்ற இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லையா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் ; தலைவரவர்களே, தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சமரசம் அவர்களிடத்திலே ஒரு விளக்கத்தைப் பெற விரும்புகிறேன். இந்தித் திணிப்பை எதிர்ப்பதிலே அவருடைய கட்சி உறுதியாக இருக்கிறது என்று சொன்னார்கள்; ஆனால் பாரதத்தின் பிரதமர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள், அதாவது சட்டரீதியாக இந்தி திணிக்கப்படவில்லை என்று சொன்னார். அப்போது ஆமாம், பிரதமர் சொல்வது சரிதான், சட்டரீதியாக இந்தி திணிக்கப்படவில்லை என்று முதல்வர் அவர்கள் கூறினார்களே. அந்தக் கருத்தை மாண்புமிகு உறுப்பினர் ஏற்றுக்கொள்கிறாரா அல்லது இந்தி திணிக்கப்படுகிறது என்று வலியுறுத்துகிறாரா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, திரு, ரகுமான் கான் அவர்கள் இந்தித் திணிப்பின் மீது கொண்டிருக்கின்ற உணர்விலே இம்மியளவும் குறையாதவர்கள்தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்கள் என்பதை மட்டும் இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன். ஆனால் அப்போதைய ஆளும் கட்சிக்காரர்கள் இப்படிப்பட்ட திட்டத்தை உருவாக்கினார்களா என்று கேட்க விரும்புகிறேன். திரு. ரகுமான்கான் அவர்கள் இதைப்பற்றி என்ன விவரங்கள் கேட்டாலும் அதற்கு விளக்கம் சொல்ல இந்த அரசும் நானும் தயாராக இருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

(கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒருவர் பேசிக் கொண்டிருக்கும்போது பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ற வகையிலே மட்டும் குறுக்கே பேசலாம். மாற்றி மாற்றி விவாதம் பண்ணுகின்ற வகையில் யாரும் குறுக்கே எழுந்து பேசவேண்டும் என்று நினைக்கக் கூடாது.

திரு. துரை முத்துசாமி : தலைவரவர்களே, * * * * * * * *

(கூச்சல்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். திரு. துரைமுத்துசாமி அவர்கள் பேசியதை சபைக் குறிப்பிலேயிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. துரை முத்துசாமி : * * * * *

(கூச்சல்)

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய நேரத்தில் நான் பேச வேண்டியிருக்கிறது. ஆகவே பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால் மட்டுமே என்னால் அவர்களுக்குப் பதில் சொல்ல முடியும். பாயின்ட் ஆப் க்ளாரிபிகேஷன் என்று சொன்னால் எனக்கு அதிக நேரத்தை ஒதுக்கித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் துணைத்தலைவரவர்களே, நான் இன்னொரு விவரத்தைச் சொல்ல விரும்புகிறேன். அரசு பணத்திலே மெடிக்கல் ட்ரீட்மெண்டுக்காக மேனாடு சென்றார் * * * ஆனால் ''மெடிக்கல் எக்ஸ்பெண்டிச்சருக்காக'' அரசு அளித்த பணத்தையும் திருப்பிக் கொடுத்தவர் இந்நாள் முதல்வர் வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட புரட்சித் தலைவர்மீது நம்பிக்கையில்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

[பிற்பகல் 12-40]

திரு. க. அன்பழகன் : மருத்துவத்திற்காக மேனாடுகள் சென்ற முன்னாள் முதல் அமைச்சர்கள் எல்லாம் அரசாங்கச் செலவில் சென்றிருக்கிறார்கள். இன்றைய தினம் முதல்அமைச்சர் அவர்கள் அரசாங்கப் பணத்தைப் பெற்றுக்கொண்டு மருத்துவம் செய்யாத காரணத்தால் அதைத் திருப்பிக் கொடுத்து விட்ட முதல் அமைச்சர் அவர்களின் அரசாங்கத்தின்மீது குற்றஞ் சாட்டுகிறார்களே என்று சொல்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட அரசாங்கச் செலவில் மேனாடு சென்று மருத்துவம்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

செய்து கொண்டார்கள். கலைஞர் கருணாநிதி அவர்கள்கூட ஒருவேளை அப்படிச் செய்துகொண்டிருக்கலாம், எனக்குச் சரியாகத் தெரியாது. அப்படிச் செய்து கொண்டாலும் அது ஒரு பெரிய தவறு அல்ல.

(கோஷங்கள் எழுப்பிக்கொண்டு துண்டு அறிக்கைகள் பார்வையாளர்கள் மாடத்திலிருந்து வீசப்பட்டன.)

ஆகவே, முன்னாள் முதல் அமைச்சர்கள் அரசாங்கச் செலவில் மருத்துவத்திற்காக மேனாடு சென்றிருக்கிறார்கள், இப்போதுள்ள முதல்அமைச்சர் அவர்கள் மருத்துவத்திற்காகப் பெற்றுக்கொண்ட பணத்தைத் திருப்பிக்கொடுத்து விட்டார்கள் என்று சொல்வது, பேரறிஞர் அண்ணா அவர்கள் உட்பட குற்றச்சாட்டுக்கு ஆளாகிறவகையில் பேசுவது இந்த அவையின் மரபுக்கு ஏற்றதல்ல. எனவே, அந்தச் சொற்றொடர்கள் இடம் பெறச் செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்,

டாக்டர் கே. சமரசம் : அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. இந்தப் பேரவையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது பேசுகிறபோதும், ஆளுநர் உரை மீதான விவாதத்தில் பேசுகிற போதும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறிய குற்றச்சாட்டுகளுக்கு பதில் சொல்கிறேனே தவிர வேறு அல்ல.

திரு. க. அன்பழகன் : நிதி பெற்றுக்கொண்டுபோன முதல் அமைச்சர் அவர்கள் மருத்துவம் செய்துகொள்ளவில்லை என்று சொல்லித் திருப்பிக்கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். மருத்துவத்திற்கு என்று நிதிபெற்றுச் செல்வதில் முறைகேடு இல்லை. அது முறைகேடு என்று அதற்கு பதில் சொல்வதாக இருந்தால் கேட்டுக்கொள்ளத் தயாராயிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அன்னியச் செலாவணி பெற்றுக்கொண்டு, மருத்துவத்திற்காகப் பெற்றுக் கொண்டு அன்னியச் செலாவணியை பயன்படுத்தி விட்டார்கள் என்ற குற்றச்சாட்டுக்குத்தான் அவர்கள் பதிலளித்தார்கள், அரசாங்கச் செலவில் அமைச்சர்களோ அல்லது முதல் அமைச்சர்களோ அல்லது முன்னாள் முதல் அமைச்சர்களோ மருத்துவம் செய்து கொண்டார்கள் என்ற அடிப்படையில் புரட்சித் தலைவர் அவர்கள் எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை. பேராசிரியர் அவர்கள் பேசுகிறபோது பேரறிஞர் அண்ணா அவர்களை பற்றிக் குறிப்பிட்டார்கள். எனக்கு நினைவு, பேரறிஞர் அண்ணா அவர்களுக்கான செலவைக் கூட நாமெல்லாம் சேர்ந்துஅப்போது கொடுத்துவிட்டோம் என்று நினைவு. ஆனால் அமைச்சர்களோ அல்லது முதல் அமைச்சர்களோ அரசாங்கச் செலவில் மருத்துவத்திற்காகச் செலவு செய்வது தப்பல்ல.

திரு. க. அன்பழகன் : அன்னியச் செலாவணியாக இருந்தாலும் எந்தச் செலாவணியாக இருந்தாலும் அமைச்சர்கள் அல்லது முதல் அமைச்சர்கள் அரசாங்கச் சார்பில் அல்லது அவர்கள் சொந்தச் சார்பில் வெளிநாடுகளுக்குச் சென்று சிகிச்சை செய்யவேண்டிய நிலைமையிருக்குமானால் அப்படி நிதி செலவிடப்பட்டிருக்குமானால் அது முறைகேடானதாகும் என்று வகைப்படுத்திப் பேசுவது இந்த அவையின் மரபுக்கு ஏற்றதல்ல. ஆகவே அந்தச் சொற்றொடர்கள் இந்த அவையில் இடம் பெறலாமா என்பதைத் தாங்களே பார்த்து முடிவு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : குறிப்புகளைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, இங்கு ஏதோ சத்தம் கேட்டது. அது வெறும் கூச்சலா, நோட்டீஸ் வீசப்பட்டது. வீசப்பட்டது நோட்டீஸ் தானா, அல்லது கல்லா என்றும் தெரியவில்லை, என்ன வென்று தெரிவித்தால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; மேலேயிருந்து துண்டுப் பிரசுரத்தை வீசியிருக்கிறார். அவரைக் காவலாளிகள் பிடித்துக் கொண்டு வந்து விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். விசாரித்த பின்னால் விவரத்தைச் தெரிவிக்கிறேன்.

மேலும் திரு. துரை முத்துசாமி அவர்கள் பேசும்போது, தலைவரைப் பற்றிச் சில வார்த்தைகள் சொன்னார்கள், அவைகளைச் சபைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடு கிறேன். உறுப்பினர்களுக்குப் பல கடிதங்கள் வருகின்றன. தந்திகள் வருகின்றன. ஆனால் ஒரு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது. திடீரென்று ஒருவர் எழுந்து எனக்கு இப்படிக் கடிதம் வந்திருக்கிறது. தந்தி வந்திருக்கிறது என்று சொல்லி அதைப்பற்றிப் பேச முயற்சிப்பது சரியல்ல, அப்படி முயற்சிக்கும்போது, அது பற்றிச் பேச அனுமதி மறுக்கும்போது அதற்குச் குற்றஞ்சாட்டுவது சரியல்ல என்பதையும் நினைவு படுத்துகிறேன்.

THIRU M. A. LATHEEF : Mr. Deputy Speaker, Sir, one request to the Deputy Speaker. The rights of raising points of orders and interventions for purposes of clarifications are part and parcel of the Parlimentary Debates. Repartees and life and lustre to the Parliamentary Debates. Therefore, you have got every right to use your discretion. But do not use the direction in such a way as to restrict the domain and rights of the Members so that they may make their own submissions at the appropriate time Please use your direction in that way.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் பேசும்போது, அவர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லுவதும், ஆதாரமற்ற முறையில் அப்படிச் சொல்வதாக இருந்தால், குறிப்பிட்ட உறுப்பினர் அதற்கு மறுப்பு சொல்வதும் மரபாக இருந்து வருகிறது. அந்த விதத்தில் சபையில் ஒரு உறுப்பினர் ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போது, அந்தப் பேச்சையொட்டிய, தொடர்பான பிரச்சினையை எழுப்புவது வழக்கமாக இருந்து வருகிறது. ஆனால் முற்றிலும் மாறுபட்ட ஒன்றைத் திடீரென்று தனக்குத் தந்தி வந்திருக்கிறது என்று சொல்லி, தான் பேச முற்படுவதும் அதற்கு அனுமதி மறுக்கின்ற போது, தனக்கு இருக்கும் உரிமை மறுக்கப்படுகிறது என்று கூறிக்கொண்டிருப்பதும் இந்தச் சபைக்கு ஏற்புடைத்ததாக இல்லை. திரு. லத்திப் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டிக்கும் போது தொடர்பில்லாத பிரச்னையைத் திடீர் என்று கிளப்புவது சரியா ? அதற்கு நீங்கள் வக்காலத்து வாங்குகிறீர்களா ? (குறுக்கீடு) நீங்கள் சிரிப்பதிலிருந்தே உங்களுக்கு இது நன்றாகத் தெரிந்திருக்கிறது. இப்படிப்பட்ட மரபுகளை நாம் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் இதை வலியுறுத்துகிறேனே தவிர, உறுப்பினர்களுடைய உரிமையைப் பறிப்பதற்காக அல்ல. அவ்விதம் செய்யப்பட்டால், திரு. லத்திப் அவர்களை விட ஒரு துளி கூட குறைவில்லாமல் எனக்கு அதில் அக்கறை உண்டு என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், இதற்கு மேலும் விளக்கம் தேவையில்லை. மேலால் பேசக்கூடியவர்களுக்கு நேரத்தைக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

THIRU M. A. LATHEEF : Mr. Deputy Speaker, I do completely agree with the Hon. Finance Minister. He has been a Member for 15 years in Parliament. He would difinitely argue the case for which I am arguing. What I submit is, apart from what Thiru Durai Muthuswamy raised - I am not speaking about Thiru Durai Muthuswamy's intervention—but the other interventions may be allowed.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் யாரையும் 'ரெஸ்ட்ரிக்ட்' செய்யவில்லை. கிளாரிபிகேஷனை உறுப்பினர்கள் சொல்லலாம். அதற்கு பேசுகின்றவர் 'ஈல்டு' செய்யவேண்டும். பேசுகின்ற உறுப்பினர் மற்ற உறுப்பினர்களைப் பற்றி ஏதாவது சொன்னால் அவர் பதில் சொல்லலாம். தன்னிலை விளக்கம் அளிக்கலாம். அதைத் தொடர்ந்து ஒன்றிரண்டு கேள்விகள் கேட்கலாம். பாயிண்ட் ஆப் ஆர்டர் எப்போது கேட்கலாம் என்றால், யாராவது சபை மரபுகளை மீறுவதாக இருந்தால்

பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம். தொடர்பில்லாத விஷயத்தைப் பேசுவதற்காக எப்போது வேண்டுமானாலும் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப எழுந்திருக்கக்கூடாது. அதைத்தான் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். டாக்டர் சமரசம்.

டாக்டர் கே. சமரசம் : மேலும் ஆளும் கட்சி நிர்வாகத்தில் குறுக்கிடுகிறது என்று சொன்னார்கள். ஆனால் நிர்வாகத்தில் குறுக்கிடுவது ஆளும் கட்சி அல்ல என்பது அவர்கள் சொன்ன விளக்கத்திலே இருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். உளி வீச்சு சம்பவம் சம்பந்தமாக போலீஸ் ரிப்போர்ட்டை தயாரித்திருக்கிறது. அதில் ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவர் தாக்கியிருக்கிறார் என்று சொல்லியிருப்பதாகச் சொன்னார்கள். இந்த அரசின் தலையீடு அல்லது ஆளும் கட்சி தலையீடு இருக்குமானால் அல்லது தொகுதி அமைப்பாளருடைய அல்லது எம். எல். ஏ. யுடைய தலையீடு இருக்குமானால் இந்த உளிவீச்சு சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர் அகில இந்திய அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்த ஒருவர் என்ற ஒரு ரிப்போர்ட்டை சப் இன்ஸ்பெக்டர் தயாரிக்க முடியுமா என்பதை அருள் கூர்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட நிலை எதிர்க்கட்சித் தலைவருக்கு ஏற்பட்டிருப்பது சரியல்ல என்று நினைத்து ஒரு பாதுகாவலரை அனுப்பி வைத்தவர் நமது புரட்சித் தலைவர் அவர்கள். எதிர்க்கட்சித் தலைவருக்கு மட்டும் அல்ல, எந்த அரசியல்வாதிகளுக்கும் இது போன்ற நிலைமை வரக்கூடாது என்ற அறிக்கையை விடுத்தார் நமது முதலமைச்சர் அவர்கள். 'பகைவனுக்கும் அருள்வாய் நன்நெஞ்சே' என்று பாரதியார் சொன்னதற்கேற்ப—பாதகமாக இருப்பவர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்று நினைக்கின்றவர் நமது புரட்சித் தலைவர் அவர்கள். அப்படிப்பட்டவரைக் கொண்ட இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லை. என்று சொல்லுகிறார்களே அது நியாயம்தானா ?

[பிற்பகல் 12-50]

அது மட்டுமல்ல. நான் இங்கே இறுதியாக ஒன்றைக் கூற விரும்புகின்றேன். இங்கே எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருகின்ற நேரத்திலே ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவர் சொன்ன அந்தக் கருத்தை நான் அவருக்கே காணிக்கையாக வைக்கிறேன். இந்த 'அன்பகம்' 'அறிவகம்' ஆகிய இரண்டையும் இங்கே நமக்குத் தந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்கள் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. அதே நேரத்தில், இன்றைக்கு அதற்குப் பிறகு 'அண்ணா அறிவாலயத்தை, அமைத்துத் தந்தவர் டாக்டர் கலைஞர் ஆவார்கள்

என்பதையும் யாரும் மறந்துவிட முடியாது. இந்த அறிவாலயத்தை' உருவாக்குவதற்காக ஏறத்தாழ 11½ லட்சம் ரூபாய் ஆனதாக நான் நம்புகிறேன். இன்றைய முதலமைச்சர் அவர்கள் அன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பொருளாளராக இருந்தார். கடைசியாக 5 இலட்சம் ரூபாய்க்குக் கையெழுத்திட்டு, இந்த அமைப்பு முறையை அமைத்தார் என்பதற்கு ஆதாரம் இருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிட முடியாது. ஆனால், இந்த 'அண்ணா அறிவாலயம், ஏற்படுவதற்கு 18 இலட்சம் ரூபாய் ஆனதாக எனக்குக் கிடைத்த தகவல். அப்படிப்பட்ட ஒரு அறக்கட்டளை உருவானதன் காரணமே (குறுக்கீடு) அவர் என்னைச் சந்தேகிக்க மாட்டார் என்று கருதுகிறேன். நான் திராவிட முன்னேற்றக் கழகத்திலே 27 ஆண்டுகளாக இருந்தவன். அது அவருக்கும் தெரியும்; எனக்கும் தெரியும். பேராசிரியர் அவர்களை அழைத்து நான் கூட்டம் நடத்தியவன். அது மட்டுமல்ல நான் அண்ணா அறிவாலய அறக்கட்டளைக்காக, பொது மக்களிடத்திலே இருந்து பணம் வசூல் செய்து கொடுத்தவன்........

திரு. க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பணமெல்லாம் மிகவும் ஜாக்கிரதையாகப் பாங்கியிலே இருக்கிறது. வேண்டுமானால் அதற்கான ரசீதுகளைப் பார்த்துக் கொள்ளலாம். இதை ஆதாரத்தோடு பொதுச் செயலாளர் என்கிற முறையிலே நான் சொல்கிறேன். இருக்க வேண்டிய பணம் சட்டப்படி, முறைப்படி. இருக்கவேண்டிய இடத்திலே இருக்கிறது. இதிலே சந்தேகம் வேண்டாம். அந்தப் பணத்தைப் பயன்படுத்துவதற்கான இடத்தைத் தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

டாக்டர் கே. சமரசம் : இதைப் பற்றிய கருத்துக்களை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இறுதியாகப் பதில் கூறும் போது சில கருத்துக்களைக் கூறுவதாகச் சொன்னார்கள். ஆனால் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல நான் தொடர்கிறேன். இன்றைய தினம் அறக்கட்டளையிலே 18 இலட்சம் ரூபாய் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் இந்த அறக்கட்டளை உருவானதன் நோக்கமே மாணவர்களுக்காக, இல்லாதவர்களுக்காக, ஏழைகளுக்காக......

திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் சமரசம் அவர்கள் இப்படிப் பேசுவார்கள் என்பதை முன்கூட்டியே அறிந்து, அதற்கான விவரங்களைக் கொண்டு வந்திருக்கிறேன். போலீஸ் இலாகா என்னிடமும் இருக்கிறது என்பதை முதல் அமைச்சர் அவர்

களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதனால், இந்தச் செய்தி போலீஸ் மூலமாகக் கிடைத்தது என்று அர்த்தமல்ல. முகக் குறிப்பிலே இருந்தே தெரிந்து கொள்ள முடியும். இதைப் பற்றி அரசாங்கக் கொறடாவிடம் நான் ஏற்கனவே சொல்லி விட்டேன். இப்படிப் பேசுவார்கள் என்பது எனக்கு முன் கூட்டியே தெரியும். தலைவர் அவர்களே, இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் அறக்கட்டளை; கருணாநிதியின் அறக் கட்டளை அல்ல. தி. மு. க. அறக்கட்டளை. நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விடுகிறேன். இன்றைய முதலமைச்சர் பொருளாளராக இருக்கும்போது, செயற் குழுவின் தீர்மானங் களுக்கிணங்க பொருளாளர் என்ற முறையிலே கையெழுத்திட்டு முதலிலே 5 இலட்சம் ரூபாயும், மறுபடியும் 1½ இலட்சம் ரூபாயும் ஆகமொத்தம் 6½ இலட்சம் ரூபாய் தரப்பட்டிருக்கிறது. மதுரை மாவட்ட மாநாட்டிலே 3 லட்சம் ரூபாயும், தஞ்சை மாவட்ட மாநாட்டிலே 1 லட்சம் ரூபாயும், அறக்கட்டளை நன்கொடை வரவு ரூ. 47,427-ம், ஒரு ரூபாய் டிக்கட் அச்சடித்து விற்றதன் மூலம் ரூ. 13,361-ம், வங்கியிலே பிக்சட் டெபாசிட் செய்த தன் மூலம் வட்டி ரூ. 82,183—ம், அங்கிருக்கும் பெட்ரோல் பங்கின் வாடகை மூலம் ரூ. 36,609—ம் ஆக ரூ. 25,22,672 வந்தது. இதிலே செலவு விவரம். அறக்கட்டளைத் திடலில் கொள்முதல் 9 இலட்சம். அந்தச் சொத்து ரிஜிஸ்த்திரேஷன் பத்திரச் செலவு 91 ஆயிரத்து சொச்சம், நன்கொடை டிக்கட் அச்சடித்த செலவு ரூ. 29,160, அறக்கட்டளை திடலை சீர் திருத்தம் செய்ததில் செலவு ரூ. 29,963, நகர்ப்புற நிலவரி பாக்கி ரூ. 60,000-த்து சொச்சம், மாநகராட்சி வரி பாக்கி ரூ. 6,000-த்து சொச்சம். வழக்குச் செலவு ரூ. 8,500/—, காவல்காரர் சம்பளம் ரூ. 6,600, இதைத் தவிர அற ட்டளை நிதியிலிருந்து விழுப்புரம் கலவரத்திற்காக ரூ. 25,00 --, சென் னையிலே புயல் நிவாரணத்திற்காக ரூ. 10,000/-, இலங்கை யிலே ஏற்பட்ட வெள்ள விபத்திற்காக ரூ. 5,00 இப்படி ஆக மொத்தம் ரூ. 40,000. மிச்சம் 11,68,532 ரூபாய் இந்தியன் வங்கியிலே போடப்பட்டது. இப்போது இருப்பு ரூ. 13,32,189. இந்தப் பணம் இப்போது இந்தியன் வங்கியிலே இருக்கிறது. அது மாத்திரம் அல்ல. என்னைப் பற்றிச் சில? கூட்டங்களிலே பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னொன்றும் பேசிக்கொண்டு வருகிறார். கருணாநிதி மறைவுக்குப் பிறகு இது அவருடைய மகனுக்குச் சேர்ந்துவிடும், ஏனென்றால் கருணாநிதிதான் அதற்கு மானேஜிங் டிரஸ்டியாக இருக்கிறார் என்று கூட்டங்களிலே பேசி வருகிறார், என்னுடைய மறைவுக்குப் பிறகு என்ன செய்ய வேண்டுமென்பது பற்றியும் 'கிளாஸ்' இருக்கிறது. —அடுத்து அவர் அதைப் பற்றிப் பேசப் போகிறார்—அதையும் படிக்கிறேன்—

"On the death or ret rement cf the Chairman and the Managing Trustee of the Trust, the surviving irustees including the non-permanent Trustees shall elect by majority vote one amongst them as the Chairman and the Managing Trustee who shall have the same powers as that of the Chairman and the Managing Trustee herein."

நான் மறைந்த பிறகு கூட நாவலர் நெடுஞ்செழியன் இருக் கிறார், பேராசிரியர் அன்பழகன் இருக்கிறார், மன்னை நாராயணசாமி இருக்கிறார், நீல நாராயணன் இருக்கிறார். அதிலே இன்னும் சொல்லப் போனால் நாவலர் பர்மனென்ட் டிரஸ்டி. நான் மறைந்த பிறகு அது குடும்ப வாரிசாக வந்து விட முடியாது. இதிலே உள்ளவர்களில் ஒருவரைத்தான் தேர்ந் தெடுக்க முடியும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, தயவு செய்து பேசுகிற மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது பேச்சுக்களின் மூலம் அவரவர்கள் பொதுக்குழுவில் விவாதிக்க வேண்டியவற்றை இங்கே விவாதிக்கும் நிலைமைக்குப் போகாமல் சட்டசபையாகக் கருதிப் பேசுமாறு பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : எனக்கு ஒரு சந்தேகம். இரண்டு கட்சியினரும் பேசுகிறபோது இரண்டு பேருமே பேசிக் கொண்டு கணக்குக் கேட்டுக் கொடுப்பது போல் பேசுகிறார்களோ என்ற சந்தேகம் இருக்கிறது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, தன்னைப் போலவே பிறர் நிலைமை என்ற நிலையில் மாண்புமிகு கூத்தக்குடி சண்முகனார் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அவர்கள் கட்சியிலே அப்படியெல்லாம் பேசியிருக்கலாம். நாங்கள் அப்படி அல்ல. நாங்கள் ஏதோ கணக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு அவர் கணக்குக் கொடுப்பது போல், திட்டமிட்டுப் பேசிக் கொண்டு பதில் சொல்லுகிற நிலைமை இல்லையென்பதைத் தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : எங்கள் கட்சியைப்பற்றிச் சொன்னதால் கூறுகிறேன் — நாங்கள் கணக்குக் கேட்டு சண்டை பிடித்துக் கொள்ளவில்லை என்பதை முதலமைச்சர் அவர் களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அவர்களுக்கு சரியாக இருக்கிறது. ஏனென்றால் கேட்க அங்கு உரிமை இல்லை.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : எங்கள் கட்சியில் கேட்கக் கூடிய உரிமை எப்போதும் உண்டு. இன்றைக்கும் தொடர்ந்து இருக்கிறது. அவர்கள் கட்சியில் கேட்க முடியாத நிலைமை இருக்கும் காரணத்தால் இன்னும் தேர்தல் நடைபெறவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, அவர் நாட்டின் தேர்தலைச் சொல்லுகிறாரா, கட்சியின் தேர்தலைச் சொல்லுகிறாரா என்று புரியவில்லை. நாங்கள் தேர்தலை நடத்துவது என்றால் மக்களுடைய விருப்பத்திற்கேற்ப தேர்தல் நடக்கும். அதுபோல் ஒரு கட்சித் தேர்தல் இந்திய துணைக் கண்டத்தில் அல்லது தமிழகத்தில் நடக்காது என்று சொல்லிக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : இந்த அறக்கட்டளை பற்றிச் சொல்ல வந்த மையக் கருத்து மாற்றப்படுகின்ற வகையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் நிதியமைச்சர் அவர்கள் கூடத் தலையிட்டுச் சொன்னார்கள் என்பதை வருத்தத்தோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அறக்கட்டளை எப்படி அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும் நேரத்தில்......

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : முன்னவர் சொன்ன கருத்தைத் தாங்கள் அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அமைச்சரவையின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம், கண்டனத் தீர்மானங்கள் சரியானதா இல்லையா என்பதைப் பற்றிக் கருத்துக்கள் சொல்ல வேண்டும், அதற்கு விளக்கங்கள் தரவேண்டும். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் நியாயம் இல்லையென்றால் எந்தக் காரணங்களால் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் நியாயம் இல்லை என்பதை உறுப்பினர் விளக்கவேண்டும். அது போல் கண்டனத் தீர்மானங்கள் கொண்டு வருவதற்கு அடிப்படைக் காரணங்கள் இல்லையென்றால் அதற்கு நியாயமான உதாரணங்கள் சொல்ல வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அந்த வகையில் அவருடைய பேச்சு தொடர அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தப் பிரச்சினையை விட்டு விட்டு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது பேசுங்கள்.

டாக்டர் கே. சமரசம் : பொதுவாக இந்தப் பிரச்சினை இல்லை என்று சொன்னாலும், பொதுவாகவே பினாமி அறக்கட்டளைகளைக் குடும்பச் சொத்தாகப் பாவிக்கக் கூடிய சுயநலத்திற்குப் பயன்படுத்தக்கூடிய அளவில் இருக்கக்கூடிய பல அறக்கட்டளைகளையும் சீர்திருத்தக்கூடிய வகையில் ஒழுங்குபடுத்தக் கூடிய வகையில் புதிய சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 1—00]

அது மட்டுமல்லாமல் இன்றைய தினம் எதிர்க்கட்சியினர் எல்லாம் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பதன் மூலமாக மீண்டும் ஆளுங்கட்சியாக வந்துவிட முடியாது என்பதற்குக் கூட தமிழ்நாடு ஏற்கனவே பல முன்னுதாரணங்களைக் கொடுத்திருக்கிறது. கறந்த பால் மடி புகா; கடைந்த வெண்ணெய் மோர் புகா; உடைந்த சங்கின் ஓசை உயிர் புகா; விரிந்த பூவும் உதிர்ந்த காயும் மீண்டும் மரம் புகா; இறந்து போன மனிதன் இனிப் பிறப்பதில்லை; என்று முன்னோர்கள் கூறியிருக்கிறார்கள். ஆளுங்கட்சியாக ஒரு அரசியல் கட்சியை அரசுக் கட்டிலில் ஏற்றி மக்கள் இறக்கி விட்ட பிறகு மீண்டும் அந்தக் கட்சியை ஆட்சி கட்சியாக வைத்து அலங்கரிக்க இந்த நாட்டு மக்கள் தயாராக இல்லை, இது தான் கடந்த 30 ஆண்டுக்காலமாக அரசியல் வரலாறு இங்கே தீர்மானிக்கப் பட்டிருக்கிற ஒன்று என்பதைத் தெரிவித்துக் கொண்டு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்களின்மீது இந்த நாட்டு மக்களுக்கு நம்பிக்கையில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவர் அவர்களே, ஒரு தன்னிலை விளக்கம் அளிக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் மதுராந்தகம் ஆறுமுகம் அவர்கள் பேசியபோது, நான் மதுராந்தகத்திற்குச் சென்றதாகவும், அங்கே டி. பி. யிலே தங்கியதாகவும், அவருக்கு எதிராக ஒரு வழக்கிலே நீதியிலே தலையிட்டதாகவும் தெரிவித்து அதற்கு ஆதாரம் வைத்திருப்பதாகவும் தெரிவித்திருப்பதாக நான் அறிந்தேன். நான் அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப்பின்னாலே மதுராந்தகம் சென்றதுமில்லை, அங்கே டி. பி. யிலே தங்கியதுமில்லை, அவர்மீது போடப்பட்ட வழக்கு என்ன என்றும் எனக்குத் தெரியாது, ஆகவே மாண்புமிகு உறுப்பினர் கூறியது தவறான தகவல் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1979 பிப்ரவரி 21

திரு. சி. ஆறுமுகம் : என்னுடைய பேச்சின் தொடரில் நான் நம்முடைய போக்குவரத்துக் கழக அமைச்சரை இடையிலே இழுத்து விளையாடிப் பார்த்தேன். அவர் சொன்னதற்கு அவர் பொறுப்பேற்றுக் கொண்டால், நான் சொன்னதற்கு நானும் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நானும் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். நான் மதுராந்தகம் சென்றதுமில்லை, டி. பி. யிலே தங்கியதும் இல்லை, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வழக்கு என்ன என்றே எனக்குத் தெரியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : என் வழக்கிலே அல்ல. ஜனவரி மாதம் 16 ஆம் தேதி காணும் பொங்கல் அன்று மலப்பாளையம் டி. பி. யில் தங்கியிருக்கிறார். ஆறுமுகம் சாட்சி சொல்லப் போகிறான் என்று அதற்கு எதிராக காரியம் செய்திருக்கிறார். இதை நான் எந்த விசாரணை வைத்தாலும் நிரூபிக்கிறேன், அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : குற்றஞ்சாட்டுவதற்கு உறுப்பினர்களுக்கு எப்படி உரிமை இருக்கிறதோ அதைப் போன்று அமைச்சர்களுக்கு அவைகளை மறுப்பதற்கும் உரிமை இருக்கிறது. அங்கே வந்தாரா இல்லையா என்பதைத் தலைவர் சொல்லமுடியாது. வந்தார் என்றும் சொல்லமுடியாது. வரவில்லை என்றும் சொல்ல முடியாது. வரவில்லையென்று அமைச்சர் சொல்கிறார். வந்தார் என்று தாங்கள் சொல்கிறீர்கள். அதைப்பற்றி மேலும் உங்களுக்கு சந்தேகம் இருக்குமானால் எழுத்து மூலமாகக் கொடுங்கள், அதைப் பற்றி விசாரிக்கலாம்.

மாண்புமிகு திரு. சி பொன்னையன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் பேசுகின்றபோது இந்த அரசு பென்ஸ் சேஸிஸ் வாங்க முடிவு செய்ததாகவும் பின்னாலே லேலண்ட் சேஸிஸ் என்று மாற்றிக் கொண்டிருப்பதாகவும் அவர் சொன்னதாக அறிகிறேன். இந்த ஆட்சி பொறுப்பேற்றுக்கொள்வதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னதாக சென்னை மெட்ரோபாலிட்டன் பகுதிக்கு வேர்ல்ட் பாங்க் மூலமாக பென்ஸ் சேஸிஸ் வாங்கலாமென்று முடிவு எடுக்கப்பட்டது. மாவட்டக் கழகங்களுக்கு பென்ஸ் சேஸிஸூம், லேலண்ட் சேஸிஸூம் இரண்டும் வாங்கலாம் என்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கட்சி ஆட்சியில் இருந்தபோது எப்படி வாங்கப்பட்டதோ அந்த முறையிலே தான் வாங்கப் பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 பிப்ரவரி 21]

திரு. சி. ஆறுமுகம் : நான் பதில் சொல்லியாக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் குற்றச் சாட்டுச்சொன்னீர்கள். அமைச்சர் அதை மறுத்துத் தன்னிலை விளக்கம் அளித்துள்ளார்கள். பதில் சொல்லுகிறார்கள். அதற்கு மேல் ஏதாவது இருந்தால் தாங்கள் ரிட்டனாகக் கொடுங்கள். மீண்டும் அதைப்பற்றிப் பேசுவது சரியாக இருக்காது.

திரு. சி. ஆறுமுகம் : அப்படிப்பட்ட மரபு இல்லை. எழுத்து மூலம் கொடுக்கிற மரபு இல்லை. நான் சொன்னதற்கு நான் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன். அவர்களுடைய சவாலை ஏற்றுக் கொள்கிறேன். ஐ வில் டேக் தி சேலஞ்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நானும் ஆதாரத் தோடுதான் பேசுகிறேன். நானும் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் சொன்னதும் பதிவேட்டிலே இருக்கிறது, அமைச்சர் மறுத்ததும் பதிவேட்டிலே இருக்கிறது. இரண்டுமே பதிவேட்டிலே இருக்கட்டும். அத்துடன் அதை விட்டுவிடலாம்.

திரு. எஸ். ஆர். இராதா ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களாக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் அடிப்படையிலே கண்டனத் தீர்மானம் என்ற அடிப்படையிலே இந்த அரசின்மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை சுமத்தியிருக்கின்ற நிலையில் அந்தக் குற்றச்சாட்டுக்களை மறுத்துச் சொல்கின்ற, நிலைமைகளை விளக்குகின்ற ஒரு வாய்ப்புக் கிடைத்தது என்பதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும், கண்டனத் தீர் மானத்தையும் பொறுத்தவரையிலும், குற்றச் சாட்டுக்களைச் சொல்கின்ற உரிமைகள் எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரையிலும் இருக்க வேண்டுமென்பதைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி வற்புறுத்திக் கொண்டிருந்தார்கள். அந்த வகையில் நல்லமுறையில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சொல்லப்பட்டாலும், அதற்கான விளக்கங்களை அரசுத் தரப்பு என்ற வகையில் விளக்கங்களைச் சொல்ல வேண்டிய கடமை அரசுத் தரப்புக்கு இருக்கிறது என்பதையும் நான் ஏற்றுக்கொள்வேன். என்றாலும், ஒருசில உணர்வுகளை, ஒருசில நிலைகளை எடுத்துச் சொல்ல வேண்டுமென்பதற்காக நான் எனக்குத் தரப்பட்டிருக்கின்ற இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

இங்கே பேசிய பல்வேறு உறுப்பினர்கள் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்பதற்கு அடிப்படையாக அதிகமான அளவிற்கு முருகையன் கொலையைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் என்னுடைய மாவட்டத்திலே இருக்கின்ற ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் படுகொலைக்கு ஆளாக்கப்பட்டார் என்ற செய்தியைக் கேட்கின்ற நேரத்தில் நான் எந்த அளவிற்கு வருத்தப்படுகிறேன், வேதனைப்படுகிறேன் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுக் காட்டியாக வேண்டும். முருகையன் அவர்கள் கொலை செய்யப்பட்டார் என்பதில் நிச்சயமாக யாருக்கும் அதிலே உடன்பாடு இருக்கும். ஆதரவாக இருப்பார்கள் என்பதை நிச்சயமாக எந்தக் கட்சிக்காரராக இருந்தாலும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதை மற்றவர்கள் நம்பவேண்டு மென்பதற்காகச் சொல்கிறேன். நான் இங்கே ஒன்றைச் சொல்வேன். இங்கே அடிக்கடிச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். முருகையன் கொலைக்கு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் காரணம் என்ற ஒரு குற்றச்சாட்டை எப்படியாவது சொல்லிச் சொல்லி, அதைப் பல தடவை சொல்கின்ற காரணத்தினால், அதில் ஏதாவது உண்மை இருக்குமோ என்று நினைக்கும் அளவிற்கு ஒரு நிலைமையை உண்டாக்க வேண்டுமென்று பல்வேறு நிலைமைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பேரவைத் தலைவரவர்களே, உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வேன், முருகையன் அவர்கள் நாடாளுமன்றத் தேர்தலிலே நிற்கிற நேரத்தில், தேர்தலுடைய கடைசிநாள், அன்றைக்கு, பிரச்சாரம் முடியும் நேரத்தில், அவருடைய தேர்தல் வெற்றி எப்படியிருக்கும் என்று பயந்துகொண்டிருக்கிற நேரத்தில், அந்தத் தேர்தல் பிரச்சாரத்தின் கடைசி நாள் அன்றைக்கு, எங்களுடைய முதலமைச்சர், புரட்சித் தலைவரவர்கள், தஞ்சையிலே தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பிக்கவேண்டிய நாள், நான் அந்தப் பிரச்சாரத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறேன். ஆனால் எங்களுடைய புரட்சித் தலைவரவர்கள் திடீரென்று மாயவரத்திலே உட்கார்ந்திருந்தவர், தஞ்சையிலே பிரச்சாரத்திற்குச் செல்ல வேண்டியவர், கடைசி நேரத்திலே நாகைக்குச் சென்றார். முருகையனுக்காக, இருக்கின்ற நேரத்திலே நான் பேசவேண்டுமென்று சொல்லிவிட்டு, எங்களுடைய நேரத்தைக் குறைக்கச் சொல்லிவிட்டு, நேராக நாகைக்கு வந்தார்கள். நாங்கள் நாகைக்குச் செல்கிற நேரத்தில், நாகையிலே பல்வேறு இடங்களிலே நாங்களாகச் சென்று ஒலிப்பெருக்கியை வைத்துக் கொண்டு அவர்களுக்கு ஆதரவாகப் பேசி, அவர் எப்படியும் வெற்றிப்பெற வேண்டுமென்று எங்கள் புரட்சித் தலைவரவர்கள் பாடுபட்டவர்கள். அவர் இறந்து விட்டார், அவர் கொலைக்கு ஆளாக்கப்பட்டார் என்ற செய்தி கேட்டதும் கோவையிலேயிருந்து பதறிப் போனவர்கள். அந்த உணர்வுகளைக்கூட இன்றைக்குச் சந்தேகப்படும் அளவிற்கு

அதைத் திசை திருப்ப, அதற்குக் காரணம் சொல்லி, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இதிலே தொடர்பிருக்கிறது என்று சொல்லுகின்ற முயற்சிகளிலே ஈடுபட்டிருக்கின்ற நண்பர்களுக்கு நான் பணிவோடு சொல்லிக் கொள்வேன், முருகையனைப் பொறுத்தவரையில் அவருடைய கடந்த கால வாழ்க்கையில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எந்த வகையிலேயாவது ஒரு தீங்கு செய்தார், எந்த இடத்திலேயாவது ஒரு கிளைக் கழகத்தோடு அவருக்குத் தகராறு இருந்தது அல்லது எந்த இடத்திலாவது ஒரு கொடியை இறக்கினார், யாருக்காவது இடையூறு செய்தார் என்று சொல்ல ஒரு ஆதாரம் கூடக்கிடையாது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்வேன். அப்படியிருக்கின்ற நேரத்தில் நாங்கள் முருகையனைத் தாக்கவேண்டும், முருகையனைக்கொலை செய்ய வேண்டும், முருகையன் இருந்தால் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வளராது என்று நினைக்க வேண்டிய அவசியம் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இல்லை என்பதை நான் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்பதால் சொல்கிறேன். இன்றைக்குத் தஞ்சை மாவட்டத்தில் என்ன நிலைமைகள் தெரியுமா? இந்தப் பிரச்னையை எழுப்பிய காரணத்தால் அங்கே உள்ள பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தொண்டர்களும், ஒரு இடத்தில் பார்த்தால் துரை கோவிந்தராசன் கொலையில் சம்பந்தப்பட்டிருப்பாரோ என்றும் ஒரு இடத்தில் கோவேந்தன் கொலை வழக்கில் சம்பந்தப் பட்டிருப்பாரோ என்றும் சொல்கிறார்கள்.

[பிற்பகல் 1-10]

ஓரிடத்திலே பார்த்தால் இராதாவிற்குக் கொலையில் சம்பந்தம் இருக்கிறது என்கிறார்கள், இப்படி ஊருக்கு ஊர் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிறவர்களை இதிலே சேர்த்து நாங்களும் இதிலே சம்பந்தப்பட்டோம் என்று சொல்ல முயற்சிக்கின்ற முறையை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இன்னொரு சம்பவத்தையும் நான் சொல்லியாக வேண்டும். பாலதண்டாயுதம் அவர்கள் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய காலத்தில் அந்தக் கட்சியினுடைய நல்ல கொள்கையை ஏற்றுக் கொண்டு அதற்குத் துணையாக இருக்க வேண்டுமென்பதற்காக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தீர்மானத்தை நிறைவேற்றி, ரஷ்யாவிலேயிருந்து கல்யாணசுந்தரத்தை வரவழைத்து, இந்தத் தீர்மானத்திற்குத் துணையாக இருக்க வேண்டுமென்று பால தண்டாயுதம் அவர்கள் ஒரு நாள் திடீரென்று விமானவிபத்திலே சாகிறார். அவர் சாகிற நேரத்திலே நான் சொன்னேன். எனக்குச் சந்தேகம் இருக்கிறது என்று சொன்னேன். இன்றைய

முதலமைச்சர், புரட்சித் தலைவரிடத்திலே அன்றைக்குச் சொன்னேன். அந்த ஆகாய விமான விமானி அன்றைய முதலமைச்சராக இருந்த கருணாநிதியைச் சந்தித்திருக்கிறார். அவருக்கும் இவருக்கும் சம்பந்தம் இருக்கிறது என்று சந்தேகப்படுகிற சூழ்நிலையிருக்கிறது என்று சொன்னேன். உடனே, புரட்சித் தலைவர் அவர்கள் அதை வன்மையாகக் கண்டித்தார்கள். இப்படி வேறு விபரீத நிலையிலே சந்தேகத்தோடு வரவேண்டாம், ஆதாரம் இருந்தால் சொல்ல வேண்டும், என்றார். ஆது உண்மைதான் என்று அன்றைய தினம் இன்றைய முதலமைச்சர் சொல்லியிருந்தால், அது ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலை நாட்டிலே யிருந்தது.

<u>திரு. க. அன்பழகன் ;</u> திரு. இராதா அவர்களை எனக்கு ஓரளவு தெரியும். அப்பொழுதே அந்த வேலையை ஆரம்பித்து விட்டாரா என்று நான் அறியவிரும்புகிறேன்.

<u>திரு. எஸ். ஆர். இராதா :</u> நான் பேராசிரியர் அவர்களுக்கு விளக்கம் சொல்வதற்காகச் சொல்கிறேன், நீண்ட நாட்களுக்கு முன்னதாக அந்த வேலையை ஆரம்பித்த காரணத்தாலே இந்த மன்றத்திலே வரமுடியாமல் நிறுத்தப்பட்டிருக்கிறேன். நான் பல நேரங்களில் பேராசிரியருக்குத் துணையாக இருந்திருக்கிறேன் இந்த வேலைக்காக. எனவே சொல்கிறேன், புரட்சித் தலைவர் அவர்கள் அப்படிப்பட்ட கருத்தை, தமிழகத்து மக்களுக்குச் சொல்லி யிருந்தால், யார் நினைத்திருந்தாலும் நிச்சயமாக மாற்றியிருக்க முடியாது. ஆனால், புரட்சித் தலைவர் அவர்கள் பெருந்தன்மை யாகச் சொன்னார்கள், அப்படிப்பட்ட குற்றச் சாட்டுகளைச் சொல்லக் கூடாது என்று சொன்னார்கள். அதனாலே அந்த நிலைமை மாற்றப்பட்டது, விமான விபத்தாக மாறியது. நான் இன்னும் சொல்கிறேன், எத்தனையோ படுகொலைகள் திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்ட காலத்திலே நிகழ்ந்தன. தூத்துக்குடியிலே கே. வி. கே. சாமி கொலைக்கு ஆளாக்கப் பட்டான். அந்தக் கொலை எதனால் நடந்தது என்பது அண்ணாவுக்குத் தெரியும். பேரறிஞர் அண்ணா அவர்கள் நினைத் திருந்தால் யார் மீதாவது குற்றம் சுமத்த வேண்டுமென்று கருதி யிருந்தால், எப்படியாவது திசை திருப்பியிருக்கலாம். கொலை காரனுக்கு உடந்தையாக இருந்தவர்கள் யார், யார் என்பது எனக்குத் தெரியும். ஆனால், அண்ணா அவர்கள் கொலை யினுடைய நிலையினைத் தெரிந்து கொண்டு, நியாயத்தைப் புரிந்து கொண்டு நடந்து கொள்ளவேண்டுமென்பதாலே, அண்ணா அவர்கள் அவ்வளவு சரியாக அன்றைக்கு நடந்து கொண்டார்கள். முருகையன் படுகொலை செய்யப்பட்டதற்காக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வருந்தவில்லை என்று யாராவது சொல்வார்களானால், நான் அவர்களுக்குப் பணிவோடு சொல் கிறேன், இதை அரசியல் பிழைப்புக்குப் பயன்படுத்தலாமே தவிர

அரசியலிலே நேர்மையை வளர்க்க முடியாது. எந்தக் கட்சியிலே இருக்கிறவர்களாக இருந்தாலும், எந்தத் தலைவராக இருந்தாலும் சரி, முருகையனைக் கொலை செய்யலாமா என்று நான் கேட்கிற நேரத்தில், எனது மரியாதைக்கும் மதிப்பிற்கும் உரிய கலைஞர்—எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தாக்கப்பட்டார் என்று கேள்விப் பட்ட உடனே திடுக்குற்றேன் நான். அரசியலிலே எத்தனையோ கருத்து வேறுபாடு உண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்தபொழுதுகூட பல நேரத்திலே அவரை எதிர்த்தவன் நான். என்றாலும், எங்களோடு இருந்து, எங்களது இந்த வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர் என்ற முறையில்— — எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறவர் என்ற முறையில்— அவர் தாக்கப் படுகிறார் என்று சொன்னால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதைக் கடுமையாகக் கண்டிருக்கிறோம். எதிர்க்கிறோம். ஆனால் குறைகளைச் சொல்லவேண்டும் என்பதற்காக உளியை வீசியவன் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவன் என்று சொல்லி, கலைஞருக்கு இந்த ஆட்சியில் பாதுகாப்பு இல்லை என்று சொல்வது சரியல்ல.

<u>திரு. க. அன்பழகன் .</u> மறுக்கவேண்டும் என்பதற்காக அல்ல ஒரு விளக்கம். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது ஒரு குழப்பமான எண்ண ஓட்டத்திற்கு ஆளாகி விடக்கூடாது என்ப தற்காகத் தெரிவிக்க விரும்புகிறேன். எங்கள் கட்சியின் சார்பில் வாதிடுகிறபோது உளியை வீசியவன் அண்ணா திராவிட முன் னேற்றக கழகத்தை சேர்ந்தவன் என்று அது இயற்கையான உண்மையாக இருக்கிறது என்ற காரணத்தால் சொல்கிறார்களே தவிர அகில இந்திய அண்ணா திராவிடக் முன்னேற்றக் கழகம் கட்சி அடிப்படையில் கட்சி நோக்கத்திற்காக அதைத் தூண்டிச்செய்த தாக இந்த இடத்தில் இருக்கும் யாரும் வாதிடவில்லை. தனிப் பட்ட சிலர் அந்தக் கட்சியில் உள்ளவர்கள் செய்து இருக்கலாம் குற்றம் செய்து இருக்கலாம். அதை ஒப்புக்கொள்ளாமல எங்கள் கட்சியில் யாரும் அப்படிச் செய்யமாட்டார்கள் என்று வாதாட நினைத்தால் எல்லாக் கட்சிகளும் அதே முறையில் வாதாட முடியும். அவர் ஒரு கட்சியைச் சேர்ந்தவர் என்ற காரணத்தால் தான் அந்தக் கட்சியைப் பற்றிக் குறிப்பிடுகிறோமே அல்லாமல் அந்தக் கட்சியையே மொத்தமாகக் குறிப்பிட்டுச்சொல்கிறோம் என்று யாரும் கருதவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. எஸ், ஆர். இராதா :</u> பேராசிரியர் அவர்கள் விளக் கத்திற்கு நன்றி. அவர் அளித்தது உள்ளபடியே பாராட்ட வேண்டிய, போற்றவேண்டிய ஒரு விளக்கமாகும். இன்றைக்கு மனம் திறந்து ஒரு மிகப்பெரிய உண்மையைச் சொன்னதற்கு நான் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : நான் புதிதாக மனம் திறக்கவில்லை. நான் மனம் திறந்து நீண்ட நாளாக இப்படித்தான் பேசிக் கொண்டு இருக்கிறேன். ஒரு கட்சியில் ஒருவர் இருவர் யோக்கியராக இல்லாமல் இருக்கலாம், மற்ற 98 பேர் யோக்கியர்களாக இருக்கலாம். ஆகவே, அனைவரையும் சேர்த்துச் சொல்வதாக எடுத்துக்கொள்ளவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, பேராசிரியர் மனம் திறந்து நீண்டநாளாக ஆயிற்று என்று சொன்னதற்கு நன்றி. அவர் அடிக்கடி மனம் திறந்து பேசுகிறார் என்பது எனக்கும் தெரியும். மாண்புமிகு முன்னவர் சார்பிலும் சொல் கிறேன். திறந்த மனம் மூடிவிடக்கூடாது என்பது தான் என்னுடைய கவலை எல்லாம். அவர் சொல்லும்போது ஒரு கட்சியில் இருவர் அயோக்கியர்களாக இருக்கலாம் என்று சொன்னார்கள். அதற்குள்ளே, ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் எழுந்து நின்றார். அப்படி அவர் எழுந்ததற்குக் காரணம் என்னவென்றால், அவர்கள் எங்கள் இயக்கத்தில் இல்லை என்பதைச் சொல்லத்தான். அன்றையதினத்தில் இருந்து அவர் துடித்துக் கொண்டு இருக்கிறார். ஏன் அந்தத் துடிப்பு, உண்மை ஊருக்குத் தெரிய வேண்டும் என்பதுதான். உளி எறிந்தவனை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று ஆக்கி அந்தப் பழியை அந்தக் கட்சி மீது போட எண்ணுகிறார்களே அதைப் போக்கத்தான். அந்தச் சூழ்நிலை வரக்கூடாது என்பது தான் என்னுடைய பணிவான வேண்டுகோள்.

திரு. க. அன்பழகன்: மறுபடியும் நான் தெரிவிக்க விரும்பு கிறேன். குறிப்பிட்ட இடத்தில், யார் உளியை எறிந்தார்கள் என்பது கூட எங்களுக்குத் தெரியாது. எறிந்தவனைப் பிடித் தார்கள். போலீசில் ஒப்படைத்தார்கள், போலீஸ் அவனை மேலும் கேட்டு விசாரித்தபோது அவன் சொன்னது நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவன் என்பதாகும். உளியை வீசிய உடனே அவனைப் பிடித்து அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் என்று சொல்லவில்லை. போலீஸ் விசாரித்த போதுதான் அது தெரியவந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. யா. சை. மு. யூசுப்: இங்கே பேராசிரியர் அவர்கள் ஒரு சில கருத்துக்களைச் சொன்னார்கள். அதற்கு நான் சில விளக்கங்களைச் சொல்ல விரும்புகிறேன்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள். அவர் பேசும்போது பதில் சொல்லிக்கொள்வார்.

திரு. எஸ். ஆர். இராதா : அவர் அந்த விளக்கத்தைச் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே பேசிய திரு. மார்க்கபந்து அவர்கள் அந்த வழக்குக்குள் போக விரும்ப வில்லை என்று சொல்லிவிட்டு அங்கேயிருந்த எஸ். ஐ. அவர்கள் வழக்கைப் பதிவு செய்கிறபோது எப். ஐ. ஆர். போடுவதற்கு முன்பு, அவன் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொன்னதையும் எழுதினார் என்று குறிப்பிட்டார். அவனாகச் சொன்னதா, அல்லது எஸ். ஐ. ஆகப்போட்டாரா?....

திரு. க. அன்பழகன் : எப். ஐ. ஆர். போடுவதற்கு முன்பே எதுவும் தெரிவிக்கவில்லை. கோர்ட்டில் அது பதிவாகியிருக் கிறது.

திரு. எஸ். ஆர். இராதா : நான் விளக்கமாகச் சொல் கிறேன். போலீஸ் அதிகாரிகள் இவ்வளவு வேகமாகச் செய் தார்கள் என்று சொல்வதற்குக் காரணம் எத்தனையோ வழக்கு களில் கட்சிக்காரர்கள் என்று தெரிந்தால் அதைப்பல அதிகாரிகள் கட்சிப் பெயர் தெரியாமலேயே மாற்றி நாட்டின் நிலைமைக் கேற்ப செயல்பட்டது எல்லாம் எனக்குத் தெரியும்.

[பிற்பகல் 1-20]

திரு. க. அன்பழகன் : அப்படியெல்லாம் நடைபெற்றிருக்கு மானால் இப்படி நடைபெற்றிருக்காது என்பது உங்கள் வாதமா?

திரு. எஸ். ஆர். இராதா : நான் நியாயத்தை எப்போதும் ஏற்றுக்கொள்கிறேன். அதைப்போல பேராசிரியர் அவர்களும் நியாயத்தில் நம்பிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நான் கேட்பதெல்லாம், அவ்வளவு வேகமாக அண்ணா தி. மு. க. வாக்கினால் தான் லாபம் என்றால், நாங்கள் உள்ளபடியே சொல்கிறோம், இந்த இயக்கத்தில் இருக்கிற இலட்சக்கணக் கான தொண்டர்களுக்கு கலைஞர் மீது ஏற்பட்ட அனுதாபத்தை மாற்ற முயற்சி....

திரு. மு. கருணாநிதி : நண்பர் இராதா அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். அவர் அண்ணா தி. மு. க. இல்லை என்ற சர்ச்சை ஒரு பக்கம் இருக்கட்டும். ஆனால் அண்ணா தி. மு. க. என்று இருந்தால்தான் என்ன? எங்கள் கட்சியைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்திருக்கிறோம் என்ற பெருமையைத் தேடிக்கொள்ளுங்கள். நியாயத்திற்கு விரோதமாக இருந்ததால் கைது செய்து வழக்குப் போட்டிருக்கிறோம் என்று சொல்வதில் பெருமையே தவிர, எங்கள் கட்சியைச் சேர்ந்தவர் இல்லை என்று சொல்வதில் பயனில்லை.

திரு. எஸ். ஆர். இராதா: நான் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள் கிறேன். நீங்கள் நியாய உணர்வோடு நல்ல கருத்தைச் சொன்னீர்கள். ஆனால் அவரை அண்ணா தி. மு. க. வாக்கினால் என்ன லாபம் கிடைக்கப்போகிறது? குற்றஞ்செய்தவர் அண்ணா தி. மு. க. என்பதற்கு என்ன ஆதாரம்? உண்மை தெரிந்தாக வேண்டும்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, காவல் துறை முதலமைச்சரிடம் இருக்கிறது. அந்தக் காவல் துறையினர் முதல் விசாரணை நடத்தி, எஃப். ஐ. ஆர். பதிவு செய்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, *** *** *** *** மாண்புமிகு உறுப்பினர் இராதா அவர்கள் அவர் யார், எந்தக் கட்சிக்காரர், உண்மை தெரிய வேண்டும் என்று கேட்டதால் இந்த விவரங்களைச் சொல்கிறேன். *** *** முதலிலே பதிவு செய்த எஃப். ஐ. ஆரில் அவர் அண்ணா தி. மு. க. என்று இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : துணைத் தலைவரவர் களே, இந்தப் பிரச்சனையில் பேச ஆரம்பித்து, விளக்கம் என்ற முறையில் வழக்கு இன்வெஸ்டிகேஷனில் இருக்கும்போது 'நான் உள்ளே நுழைய விரும்பவில்லை, உள்ளே நுழைய விரும்ப வில்லை' என்று ஒவ்வொருவரும் சொல்லிவிட்டு, உள்ளே நுழைந்துவிட்டு வெளியே வந்து குட்டை குழப்பும் இந்தப் பிரச்சனைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : அண்ணா தி. மு. க. ஆட்சியிலே அல்லது எம். ஜி. ஆர். ஆட்சியிலே நடைபெற்றது என்று சொல்லும்போது ஒரு குற்றத்தை, எதிர்க்கட்சித் தலைவருக்கு பாதுகாப்பு இல்லை என்று சொல்கிறார்கள். இந்த ஆட்சியிலே நியாயம் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். நான் மரியாதையோடு இந்த மன்றத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய மரியாதைக்குரிய கலைஞர் அவர்கள் முதலமைச்ச ராக இருந்தபோது, எல்லா அதிகாரங்களும் அவர்கள் கையிலே இருக்கும்போது, ஒரு பெரிய வெடிகுண்டு வைத்து, பாலத்தை தகர்த்து, அவரைக் கொலை செய்ய முயற்சி நடைபெற்றது. அவர் எந்தக் கட்சி என்று சொன்னார்கள். அந்தக் கட்சியைப் பற்றிச் சொல்லும்போது பலர் குறுக்கிடுவார்கள், கலைஞர் கையிலே எல்லா அதிகாரங்களும் இருக்கும்போது, அவரே முதலமைச்சர், காவல் துறை அவர் பொறுப்பிலே இருக்கிறது. அவருடைய ஆட்சிக் காலத்திலே அவரைக் கொலை செய்யும் முயற்சி நடந்தது.............

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் பேசுகின்றபோது வேகமாக ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். பொதுவாக விசாரணையில் இருக்கிற வழக்குகளைப் பற்றிக் குறிப்பிடும் பாது ஒரு சம்பிரதாயத்தை இங்கே கடைப்பிடிக்கிறோம். அதில் நடந்த சம்பவத்தை எடுத்துச் சொல்ல நிச்சயமாக எல்லோருக்கும் உரிமை உண்டு. ஆனால் பேராசிரியர் பேசும்போது *** *** *** என்றெல்லாம் சொன்னார்கள். நான் சொல்ல விரும்புவது வழக்கு இன்வெஸ்டிகேஷனில் இருக்கும்போது அதையெல்லாம் இங்கே குறிப்பிடலாமா என்பதுதான்.

திரு. க. அன்பழகன் : வழக்கு விசாரணையில் இருக்கிறது. இல்லை என்று சொல்லவில்லை. முதல் விசாரணையின்போது அந்த வழக்கைப்பற்றி காவல் துறையினர் எப். ஐ. ஆரில் குறிப் பிட்டிருக்கிறார்கள். அந்தக் குறிப்பிலிருப்பதைத்தான் நான் சொல்கிறேன். வேறு எதையும் சொல்லவில்லை. "Accus d Sab stian is a Member of th AIADMK" என்று குறிப்பில் இருக்கிறது. அதை இந்த அவையிலே மறுத்துப் பேசி, எதிர்க்கட்சிக்காரர்கள் வேண்டுமென்றே குற்றஞ்சாட்டுவதைப் போலவும், அதற்கு விளக்கம் தேவை என்று கேட்டதாலும் தான் அதைப்பற்றி இங்கே நான் விளக்க வேண்டிவந்தது. எனவே, என்னுடைய கருத்துக் களை நீக்குவதாக இருந்தால் இதைத் தொடங்குவதற்கு அடிப் படையாக இருந்த கருத்துக்கள் அனைத்தும் நீக்கப்பட வேண்டும். இல்லை என்றால் என்னுடைய கருத்தும் குறிப்பில் இருந்தாக வேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, எஃப். அய். ஆர். என்பது என்சைக்ளோபீடியா அல்ல என்று வழக்கறிஞர்களே சொன்னார்கள். அதிலே ஒரு தகவல் கூட இல்லை என்று நாளைக்கு நிரூபிக்கப்பட்டுவிடக்கூடும். ஆகவே எஃப். அய். ஆர். செய்யப்பட்ட பிறகு, வேண்டுமானால் ரெஸ்பெக்ட்ஸ் ஆப் தி கேஸ் சொல்லலாம். * * * என்று சொல்வது சரியாக இருக்காது என்று கருதுகிறேன்.

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, எஃப். அய். ஆர். போடப்பட்டிருக்கிறதே தவிர, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படவில்லை. ஆகவே சில விஷயங்களைச் சொல்வதற்கே எதிர்க் கட்சிகள் இருக்கின்றன. நடைபெற்ற நிகழ்ச்சியைப்பற்றி ஆளுங் கட்சி கூறுவதை அப்படியே ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும் என்று சொன்னால் எதிர்க்கட்சிகள் இங்கே இருக்கத் தேவை யில்லை என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

[1979 பிப்ரவரி 21

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு மேட்டர் எஃப். அய். ஆர். செய்யப்பட்டுவிட்டாலே அதைப்பற்றி பேசுவது சப்ஜுடிஸ்தான். அவர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்று சொன்னது கூடத் தவறு இல்லை. ஆனால் அதற்குப் பிறகு மற்ற விவரங்களை அதாவது ****** போன்ற தகவல்களை எல்லாம் சொல்வது கூடாது. அதை சபைக் குறிப்பிலேயிருந்து நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்த விசாரணை முறையாக நடைபெறவில்லை, தவறுகள் நிறைய இருக்கின்றன, இது போன்ற விவரங்களைச் சொன்னால் தவறு என்று சொல்லப் படுகிறபோது நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த விசாரணை நடைபெற்றால்

* * * * *

என்று குற்றச்சாட்டு வலுக்கிறது........

(கூச்சல்)

* THE HON. THIRU K. NARAYANASWAMY : On a point of clarification, Mr. Deputy Speaker, Sir.

Sir, I have been watching this debate for some time past. There has been a complaint filed by a certain informent. I forgot his name. On page 2 of the remand report it is there. The complaint has been given for an offence under section 307 of I. P. C. which is cognizable. It forms part of First Information Report. The First Information Report is part of the proceedings taken on file by the Police and investigation starts on that basis. It is only in the course of investigation, the accused is also interrogated. Probably, we do not know, he might have told that he is a Member of the AIADMK, which finds a place in the Remand Report. We do not know about it. That fact may be elicited only from the cross-examiniation of the gentleman who filed the remand report before the court. So, the investigation has started. There is no dispute about it. The moment the accused is interrogated, the moment he receives the complaint, gives the Crime No. so and so, the investigation starts. Therefore what is the position? Now I will quote from the May's Parliamentary Practice. It is quite apparent from the entire discussion that the Charge-sheet is not yet filed. That seems to be apparently obvious. From May's Parliamentary Practice-P. 427-19th edn. I quote:

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1979 பிப்ரவரி 21] [Thiru K. Narayanaswamy]

"Following is the First Report of the Select Committee on Procedure, 1962-63, the House passed a Resolution (23 July 1963) which set out the rule in detail. This Resolution bars references in debate (as well as in Motions and Questions) to matters awaiting or under adjudication in all Courts exercising a criminal jurisdiction, and in Courts martial from the moment, the law is set in motion by a charge being made to the time when verdict and sentence have been announced and again when notice of appeal is given, until the appeal is decided." Therefore, this matter is now practically a matter which is under the exercise of the criminal jurisdiction and therefore, until the sentence is passed when a charge is made, I would respectfully submit that this matter will not be open to any discussion inside the Legislature. I will quote from the May's Parliamentary Practice. I request the Assembly Secretary may pass on the original 19th Edition. I will also refer to this. "...Such matters may be referred to before such date unless it appears to the Chair — Please remember—that there is a real and substantial danger of prejudice to the trial of the case ; the ban again applies when a notice of appeal is given until the judgement is given". Even at th stage of appeal, whenever there is a risk of real and substantial danger of prejudice to the final hearing and disposal of the appeal case, it is really barred from any dicussion. This is my respectful submission to the entire House.

I want to make it clear that I have got the greatest respect for the Leader of the Opposition for whom I have my self appeared in a very very sensational case. I treat him like my own younger brother. Therefore, my personal affection is in no way any the less by reason of my elucidation of the legal aspects of the matter.

[பிற்பகல் 1-30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு பேரவையின் நேரத்தை இன்னும் சிறிதுநேரம் நீட்டிக்கிறேன்.

3. அறிவிப்பு.

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப்பெற்றது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று (21-2-1979) பகல் சுமார் 12—40 மணிக்குப் பார்வையாளர்கள் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை,

* 443-ஆம் பக்கம் பார்க்க.

திரு. வீராசாமி என்பவர் மகன் திரு. சி.வி. சேமன் என்பவ பேரவையுள் வீசியுள்ளார். அவர் தற்போது பேரவைக் காவலரின் காவலில் இருக்கிறார். விசாரணையும் நடந்துகொண்டு இருக் கிறது. அவரது செய்கை அவை உரிமையை மீறிய செயலாகும் இதைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இது குறித்து பேரவை முன்னவர் அவர்கள் தீர்மானம் முன் மொழிவார்.

4. அரசினர் தீர்மானம்

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து நடவடிக்கை

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "இன்று (21-2-1979) பகல் சுமார் 12-40 மணிக்கு சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டு அறிக்கைகளை பேரவைக்குள்ளே வீசி எறிந்து கூச்சல் எழுப்பி உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள சென்னை-12, எண் 146, வெங்கடேசபுரம் தாஸ் நகரில் இருக்கும், திரு. வீராசாமி என்பவர் மகன் திரு. சி. வீ. சேமன் என்று கூறிக் கொள்ளும் நபர், பெரும் குற்றம் புரிந்துள்ளார். அவருடைய இச் செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

அவர் மூன்று நாட்கள் வெறுங்காவல் (ஸிம்பிள் இம்பிரிசன் மென்ட்) தண்டனை அளிக்கப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: அந்தத் துண்டு பிரசுரத்தில் என்ன இருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் அந்தத் துண்டு பிரசுரத்தை அவைக்குள் வீசியது தவறு என்பதால் தீர்மானம் முன்மொழியப்பட்டு, நிறைவேற்றப்பட்டு தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. அதில் என்ன இருக்கிறது என்று தனிப் பட்ட முறையில் தெரிந்துகொள்ள விரும்பினால், என் அறைக்கு வாருங்கள். சொல்கிறேன்.

2. அமைச்சரவையின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம விவாதம்.

திரு. என். சங்கரய்யா : சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மேஸ் பார்லிமென்டரி ப்ராக்டீஸ் பற்றிச் சொன்னார்கள். இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி, பாராளுமன்ற நடை முறைகள் பற்றி சமீபத்தில் பிரிட்டிஷ் ஹவுஸ் ஆப் காமன்ஸ் நடைமுறைகளைப் பின்பற்றவேண்டியதில்லை, நம் பாராளு மன்றம் வகுத்துக்கொண்டிருக்கக்கூடிய மரபுகளைப் பின்பற்றினால் போதும் என்று முடிவு செய்திருக்கிறார்கள். பேராசிரியர் குறிப் பிட்டது போலீஸ் விசாரணை பற்றியது. அது நீதிமன்றத்தின் நடவடிக்கைகளைப் பாதிக்கவில்லை. ஆகவே, ஒரு குறிப்பிட்ட பிரச்னையில் போலீஸ் விசாரணை சரியாக நடைபெறவில்லை என்று புகார் சொல்வது சட்டமன்றத்தில் அனுமதிக்கப்படாத ஒன்றாக ஆகிவிடக் கூடாது. ஆகவே, இன்றுள்ள நிலையில், இப்பிரச்னை பொறுத்து, சரியாக விசாரணை நடத்தப்பட வில்லை. ஏன் அப்படி நடத்தப்படவில்லை என்று இங்கு பேசு வதற்கு உரிமையில்லையென்றால் நீதிக்கே பாதகம் ஏற்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : என்னைப் பொறுத்தவரையில் சொல்ல விரும்புவது, இன்னின்ன வகையில் விசாரணை நடந்திருக்க வேண்டும், இப்படி இப்படி விசாரணை செய்வது தவறு என்று உள்ளே போய் பேசுவது தவறு. சாதாரண மாக முறையாக விசாரிக்கப்படவில்லை என்றெல்லாம் பேசுவதில் எவ்வித தவறும் இல்லை. அது சபையின் மரபுகளுக்கு முரண்பாடு எதுவும் இல்லை.

திரு. க. அன்பழகன் : தங்களது தீர்ப்பில் குறிப்பிடுகின்ற கருத்துக்களை விரும்புகிறவன் நான். ஆனால், என்ன பேச வேண்டும். சட்ட விரோதமாக சபையின் மரபுகளுக்கு முரண்பட்டு பேசக்கூடாது என்று சொல்வதை ஏற்றுக்கொள்கிறவன் நான். காவல்துறையின் விசாரணை நடக்கும்போது சரியாக விசாரணை நடைபெற வேண்டும் என்று நான் சொன்னதற்குக் காரணம, முதலில் காவல்துறை குறிப்பிட்டதை மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிலும் சரியான முறையில் விசாரணை நடைபெறுகின்ற அளவில் அமைந்திட வேண்டும் என்ற கருத்தைத்தான் சொன்னேன். அதே நேரத்தில் ஆளும் கட்சிக்காரர்கள், ஆளும் கட்சியைச் சார்ந்த ஒருவரின் பெயர் சேர்க்கப்பட்டதிலிருந்தே காவல்துறை முறையாகத்தான் விசாரணை நடத்துகிறது என்கின்ற கருத்தை யும் தெரிவித்தார்கள். நான் குறிப்பிட்டது சபைக் குறிப்பில் இடம் பெறக்கூடாது என்ற நிலை வருமானால், அதே காரணத்துக்காக ஆளும் கட்சியினர் சொன்னதும் இடம் பெற்றிருக்கக் கூடாது. ஆகவே, இரண்டு பக்கத்திலும் அது குறித்துப் பேசியவற்றை நீக்க வேண்டும்.

திரு. என். சங்கரய்யா : குறிப்பிட்ட அதிகாரி அல்லது குறிப்பிட்ட போலீஸ் அதிகாரி சரியாக நடந்து கொள்ளவில்லை அல்லது சரியாக விசாரணை செய்யவில்லை என்று சொல்வதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது. அப்படி இல்லை என்று சொன்னால் இந்த நாட்டில் எப்படி நீதி கிடைக்கும்?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நமது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சபையின் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருப்பதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நமது பேராசிரியர் அவர்கள் இந்தப் பிரச்னை குறித்து, தனது பேச்சின் குறிப்பின் பகுதிகள் நீக்கப்படுவதாக இருந்தால், தொடர்ச்சியாக இதன் தொடர்பாக பேசியவர்களின் பேச்சுக்களும் நீக்கவேண்டும், அதுவும் இடம் பெறக் கூடாது என்று வற்புறுத்துகின்றார்கள். என்னுடைய தாழ்மையான கருத்து, திருப்பித் திருப்பி, இந்த அரசின் நியாயமான உணர்வுகளை அருள் கூர்ந்து நம்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவருக்கு ஏற்பட்டது போன்ற சம்பவம் அவருக்கு மட்டுமல்ல. யாருக்கு ஏற்பட்டாலும் மகிழ்ச்சி அளிக்கக்கூடியதல்ல. அது பெருமளவுக்கு வேதனையும் கவலையும் உருவாக்குகிறது. இதுபற்றி முறையான விசாரணை நடக்கும். முறையான தண்டனை குற்றவாளி என்று நிரூபிக்கப் படுமானால்-நிச்சயமாக கிடைக்கும் என்பதை தெரிவிப்பதோடு, இந்தப் பிரச்னைக்கு இத்துடன் முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு முன்னவர் அவர்கள் பேசுகின்ற பொழுது, எதிர்க்கட்சித் தலைவர்பற்றி குறிப்பிடும்போது அது மகிழ்ச்சி அளிக்கக்கூடியதல்ல என்று சொல்லப்படும் வார்த்தைகளை தொடர்புபடுத்திப் பார்த்தால் வேறு பொருள் கொடுக்கக்கூடியதாக அமைந்துவிடும். ஆகவே, மகிழ்ச்சி அளிக்கக் கூடியதல்ல என்று அடிக்கடி சொல்வது அவ்வளவு பொருத்தமுடையதல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அவர் பேராசிரியர். சில திருத்தங்களை சொன்னாலும் அதை ஏற்றுக்கொள்வதால் எந்த நஷ்டமும் வராது. அது மகிழ்ச்சி அளிக்கக்கூடியது என்று சொல்ல வேண்டும் என்று சொல்கிறார் என்று நினைக்கிறேன். இன்னும் தெளிவாக சொல்வதாக இருந்தால், இந்தச் சம்பவம் மனதைத் துளைக்கிறது, வேதனையை உருவாக்குகிறது என்று சொன்னால் நன்றாக இருக்காதா—என்றால் அது அல்ல முக்கியம். எனக்கும்

தமிழ் நன்றாகத் தெரியும். இரண்டு வார்த்தைகள் அல்ல, ஆயிரம் வார்த்தைகளை சொல்லலாம். வார்த்தைகள் அல்ல முக்கியம், மன உணர்வுகளை புரிந்து கொண்டால் போதும். ரிக்கார்டுகளில் இருந்து எந்த வார்த்தைகளை எடுக்கவேண்டுமோ அதை எடுக்கலாம். அதைப்பற்றி எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மதிப்பிற்குரிய இராதா அவர்கள் பேசும்போது, உளிவிச்சு சம்பவம் சம்பந்தமாக கைது செய்யப்பட்டிருப்பவர் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.—வை சேர்ந்தவர் அல்ல என்ற கருத்தைச் சொன்னார்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், எப். ஐ. ஆரில் அனைத்திந்திய அண்ணா தி. மு. க. வைச் சேர்ந்தவர் என்று சொல்லப் பட்டிருக்கிறது என்பதை வைத்துக்கொண்டு தன்னுடைய கருத்தைச் சொன்னார்கள். நான் இவையெல்லாம் சபையில் இடம் பெறக் கூடாது என்று சொல்ல வரவில்லை. ஒரே ஒரு கருத்தை மட்டும் தான் நீக்க வேண்டும் என்று சொல்கிறேன். அதாவது * * * * * என்று சொன்ன வார்த்தைகள் மட்டும் இடம் பெறக் கூடாது என்று சொல்கிறேன். இந்த வார்த்தைகளை மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகின்றேன். மற்றவை எல்லாம் அப்படியே இருக்கலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1–40]

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே..............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசவேண்டுமென்றால் எனக்கு ஆட்சேபணை யில்லை; தாங்கள் 15 நிமிடங்கள் பேசவேண்டுமென்று கேட்டிருக் கிறீர்கள். இப்போது நேரமாகிவிட்டது. 5 நிமிடங்களில் முடித்துக் கொள்வீர்களா?

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவெடுத்தபடி, 3 நாட்களாக நடைபெறுகின்ற இந்த விவாதத்தில், ஆளும் கட்சிக்கு ஒரு மணி நேரம் தர வேண்டுமென்கிற அடிப் படையில், இராதா அவர்கள் 30 நிமிடங்கள் பேச வேண்டும

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க நீக்கப் பெற்றது.

அவர்கள் பேசத் தொடங்கி 5 நிமிடங்களுக்குள்ளாக தலையீடுகளும் குறுக்கீடுகளும் ஏற்பட்டன. எனவே, இனிமேல் நடைமுறையில் விகிதாசார அடிப்படையில் ஒரு மணி நேரம் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. அதனாலே, தாங்கள் 15 நிமிடங்கள் பேசவேண்டுமென்று சொல்கிறீர்களா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, இராதா அவர்களுக்கு நிதி நிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு நல்ல வாய்ப்பு தருவதற்கு நாம் தயாராக இருக்கிறோம். ஆகவே, இதை மனதில் வைத்துக் கொண்டு அவர் தம் பேச்சை இன்னும் தொடர வேண்டுமா என்பதை முடிவெடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கருத்து சொன்னதற்குப் பின்னர், நான் மறுப்பு சொல்ல மாட்டேன். மன்ற உறுப்பினருடைய நிலை அவருக்கு நன்கு தெரியும். பல்வேறு பிரச்னைகளைக் குறித்து நான் சொல்ல வேண்டுமென்று குறிப்பு வைத்திருக்கிறேன். அவர்கள் சொன்னதுபோல் நிதி நிலை அறிக்கை வருகின்ற நேரத்தில் நான் அவைகளையெல்லாம் சொல்லிக் கொள்கிறேன். ஆனால், ஒரு கருத்தை மட்டும் இப்போது நான் சொல்லியாக வேண்டும். இந்தக் கருத்தைச் சொல்லுகிறபோது நிர்வாகத்திலே அதிகமாக குறுக்கிடுகின்றார்கள் என்று சொல்லப்பட்டது. இந்த வாதம் பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலும் அப்படிச் சொல்லப்பட்டது. அப்படிச் சொல்லப்படுகின்ற நேரத்தில் எங்கள் நிலை என்ன? போலீஸ் ஸ்டேஷனுக்கோ, ஆர். டி. ஓ. ஆபீசுக்கோ நாங்கள் போக முடியாத ஒரு நிலை இருக்கிறது. ஆனால், நிர்வாகத்தில் நாங்கள் குறுக்கிடுவதன் காரணமாக அதிகாரிகள் மாற்றப்படுகிறார்கள், பல்வேறு இடங்களில் அதிகாரிகள் பயப்பட ஆரம்பித்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. உண்மை நிலை என்னவென்றால், நாங்கள் அதிகாரிகளிடத்திலே ஏதாவது சொல்ல வேண்டுமென்றால், அதிகாரிகள் எங்களை மதிப்பதாகத் தெரியவில்லை. போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றால், அங்கே அவர்கள் ஒரே வார்த்தை சொல்லிவிடுகிறார்கள்—முதலமைச்சர் ஏற்கனவே சொல்லியிருக்கிறார்கள். அவருக்கு தெரிவித்து விடுவோம் என்று சொல்லுகின்றார்கள். எனவே, அதிகாரிகள் அதை மீறினால், தங்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, மாற்றப்பட்டு விடுவோம் என்ற பயம் வந்துதான் அவர்கள் அவ்வாறு சொல்லுகிறார்கள். ஆனால், எதிர்க் கட்சியிலே இன்றைக்கு இருக்கின்ற நிலைமை

என்ன! ஆளும் கட்சியினர் அதிகாரத்திலே, நிர்வாகத்திலே தலையிடுகிறோம் என்று சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்லுகின்றபோது, ஒரு பழைய வாதம், மிகமிகத் தெளிவான வாதத்தை நான் இந்த நேரத்திலே சொல்ல விரும்புகின்றேன். இந்த ஆட்சியிலே ஒரு அதிகாரி 30 லட்சம் ரூபாய் நோட்டுக்களை ஒரு பாங்கியிலே மாற்றினார்கள். அந்த வங்கியிலே மாற்றப்பட்டதற்கான ஆதாரம் இருக்கிறது. அவர் இன்றைக்கும் இந்த ஆட்சியிலே வேலை செய்து கொண்டிருக்கிறார். 30 லட்சத்தை மாற்றுவதற்காக, அந்த வங்கியிலே உள்ள ஊழியர்களுக்கு அதிக நேரம் வேலை செய்ய இவர் இடம் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான ஆதாரமும் இருக்கிறது. அவர் யார்? யாரிடத்திலே வேலை செய்தார்? அவருக்கு அந்தப் பணம் எப்படி கிடைத்தது? தனியாக அவராகச் சம்பாதித்துக் கொண்டு வந்து கொடுத்தாரா என்பதையெல்லாம் இன்றைக்கு விசாரித்தாக வேண்டும். அவர் இன்றைக்கு இந்த ஆட்சியிலே வேலை செய்து கொண்டிருக்கிறார். நான் பணிவோடு எங்கள் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். எதிர்க் கட்சியினர் எவ்வளவு சொன்னாலும், இனிமேல் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. அப்பேர்ப்பட்ட அதிகாரியை நீங்கள் அடையாளம் காட்டி, அவர் மீது நடவடிக்கை எடுத்தால்தான், அரசியலிலே ஒழுக்கம், அரசியலிலே ஒரு நேர்மை நிச்சயமாக ஏற்படுவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும்.

எதிர்க் கட்சியினர் இன்றைக்கு குற்றச்சாட்டுகளைச் சொல்லுகிறார்கள். என்னுடைய மரியாதைக்குரிய சாதிக் பாட்சா அவர்கள் பேசும்போது, இந்த ஆட்சியிலே ஊழல் நடந்து விட்டதாகப் பேசினார்கள். நான்கூட அவர்களைக் கேட்கிறேன். பழைய ஆட்சியின் அமைச்சர் ஒருவர் லஞ்சம் கேட்டு, அதற்காக அவரே கையெழுத்துப் போட்ட போட்டோ நகல் என்னிடம் இருக்கிறது. நான்கூட அதைக் காட்டிவிட முடியும். அவ்வாறு காட்டுவதால் பிரச்னைகள் தீர்ந்து விடாது. இப்படியெல்லாம் சொல்லி, இந்த ஆட்சியின்மீது களங்கம் கற்பித்து, இந்த ஆட்சிக்கு கெடு விளைவிக்க முடியும் என்று கருதினால், அது தவறான எண்ணம். நண்பர் ஆறுமுகம் அவர்கள் கணக்கு போட்டார்கள். 10 இலட்சத்தை கழித்துவிட்டு 52 இலட்சம் பேரில், 42 இலட்சம் பேர்கள் அவர்கள் பக்கம் போய் விட்டார்கள் என்றார்கள்.

நான் ஒரு புள்ளிவிவரத்தைப் பார்த்தேன். எவ்வளவு பேர் இந்த ஆட்சிக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்று பார்த்தேன். இந்த ஆட்சியின் சாதனை அடிப்படையில் பல பேரை விசாரித்ததில் 3,97,00,627 பேர் இந்த ஆட்சிக்கு ஆதரவாக இன்றைக்கு இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். பாக்கியிருப்பவர்கள் குழந்தைகளும், எதிர்க்கட்சி

யைச் சார்ந்தவர்களும். ஆகவே, இந்த ஆட்சியின்மீது அனைவருக்கும் நம்பிக்கை இருக்கிறது என்று தெரிவித்து, நேரம் இல்லாத காரணத்தால் எனது உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று மீண்டும் நாளை காலை (22-2-1979) 9 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை 1.46 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

96. தொண்டு மனப்பான்மையுடன் நடத்தப்படும் தொழுநோய் நிலையங்களுக்கு விற்கப்பெறும் மருந்து முதலியவற்றிற்கு விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கும் பொருட்டு, 26-12-1978ஆம் தேதியிடப்பெற்ற, வணிகவரிகள்-அறக்கட்டளைகள் துறையின் குறிப்பாணை எண் 38485-II (2) /75-21-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

ஆ, அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்,

எதுவுமில்லை.

12137

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhantha Works Publishing Society (Tinnevelli), Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFASSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Thanjavur District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Thanjavur District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 R. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11. S. M. Jagannathan Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mari Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46-D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B. B. Ganguli Street, Calcutta-17.

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.